# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

473

## தொகுதி - 2

# திருக்குறள்

# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

## தொகுதி – 2

## திருக்குறள்

முதன்மைப் பதிப்பாசிரியர்

தவத்திரு பொன்னம்பல அடிகளார்

விற்பனை உரிமை :

**மணிவாசகர் பதிப்பகம்**

8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,

சென்னை-600108.

முதல் பதிப்பு : செப்டம்பர், 2000
திருவள்ளுவர் ஆண்டு : 2031
உரிமை : திருவண்ணாமலை ஆதீனம்
**விலை : ரூ. 65-00**

பதிப்பாசிரியர் குழு :

தமிழாகரர் தெ. முருகசாமி

நா. சுப்பிரமணியம்

குன்றக்குடி பெரியபெருமாள்

க. கதிரேசன்

மரு. பரமகுரு

செயலர் :


பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்

கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

சிதம்பரம், சென்னை, மதுரை, கோயமுத்தூர், திருச்சி

அச்சிட்டோர் : சக்தி பிராசஸ், சென்னை – 600 081.



தமிழ் மாமுனிவர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
1925 - 1995

தமிழ்மாமுனிவர் அருள்நெறித் தந்தை

# தவத்திரு குன்றக்குடி அடிகளார்

## வாழ்க்கைக் குறிப்புகள்

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 1925 | • தோற்றம் |
| | • பூர்வாசிரமம் : தந்தையார் : திரு. சீனிவாசம் பிள்ளை<br>தாயார் : திருமதி. சொர்ணத்தாச்சி |
| | • பிள்ளைத் திருநாமம் : அரங்கநாதன் |
| | • தோற்றம் பெற்ற ஊர் : தஞ்சை மாவட்டம் திருவாளப்புத்தூர் அருகேயுள்ள நடுத்திட்டுக் கிராமம். |
| 1931 - | • சிதம்பரம் அண்ணாமலை நகரில் வாசம். |
| 1936 | • 'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் நாட்டார், சுவாமி விபுலானந்தர் ஆகியோர் தொடர்பு. |
| 1937-<br>1942 | • தலைமையனார் திரு. கோபாலகிருஷ்ண பிள்ளை வீட்டில் கடியாபட்டியில் வாழ்தல். |
| | • பள்ளியிறுதித் தேர்வு எழுதுதல். |
| | • 1942 விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு. |
| | • 'வினோபா பாவே படிப்பகம்' தொடங்கி நடத்துதல். |
| 1945 | • தருமபுரம் ஆதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் கயிலைக் குருமணி அவர்களிடம் கந்தசாமித் தம்பிரான் என தீட்சாநாமத்துடன் தம்பிரானாதல். |
| | • தருமபுரம் தமிழ்க் கல்லூரியில் பயிலுதல். |
| 1947 -<br>1948 | • சீர்காழிக் கட்டளைத் தம்பிரான் - திருஞான சம்பந்தர் திருமடம் தூய்மைப் பணி; திருமுறை வகுப்பு, விழா நடத்துதல். |
| 1949 | • குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் இளவரசு பட்டம் ஏற்பு. திருநாமம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள். |
| 1951 | • காரைக்குடிக் கம்பன் விழாவில் 'புதரிடைமலர்' என்ற தலைப்பில், அறிஞர்களின் நெஞ்சம் கவர்ந்த சொற்பொழிவு. |
| 1952 | • குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் 45ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளல். |
| | • அருள்நெறித் திருக்கூட்டம் தோற்றம். |

- 'மணிமொழி' என்னும் பெயரில் இயக்கப் பத்திரிகை வெளியிடல்.

1953
- ஆதீனத்தின் அருளாட்சியிலுள்ள பிரான்மலைத் திருக்கோயில் சித்திரைத் திருவிழாவின்போது (சங்க கால வள்ளல் பாரி வாழ்ந்திருந்த மலையில்) வள்ளல் பாரி விழாத் தொடங்குதல்.
- பல்லக்கில் பட்டணப் பிரவேசம் வருதலைத் தவிர்த்தல்.
- இலங்கைப் பயணம் - இரண்டு வாரம் சுற்றுப் பயணம்.

1954
- இராசாசி தலைமையில் தேவகோட்டையில் அருள்நெறித் திருக்கூட்ட மாநாடு.
- திராவிடர் கழகத் தலைவர் பெரியார் சந்திப்பு.
- தாய்லாந்து, இந்தோசீனா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் (3 திங்கள்)

1955
- அருள்நெறித் திருப்பணி மன்றம் தொடங்குதல்.
- 'தமிழ்நாடு' நாளிதழ் தவத்திரு குன்றக்குடி அடிகளார் என்ற பெயரை அறிமுகப்படுத்துதல்.

1956
- அறிஞர் அண்ணா குன்றக்குடி திருமடத்திற்கு வருகை.
- ஆச்சார்ய வினோபா பாவே திருமடத்திற்கு வருகை.

1958
- குன்றக்குடியில் உயர்நிலைப்பள்ளி தொடங்குதல்.

1959
- ஆ. தெக்கூரில் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்துதல்; பாரதப் பிரதமர் நேரு மாநாட்டிற்கு வருகை.

1960
- மத்திய அரசு சேமநலக் குழு உறுப்பினராதல்.

1962
- சீனப்போரின்போது தங்க உருத்திராட்ச மாலையைத் திருவொற்றியூர்க் கூட்டத்தில் ஏலம் விட்டு ரூ. 4000 தருதல்.
- மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலில் திருமுறைத் தமிழ் அருச்சனை தொடங்குதல்.

1965
- இந்தி எதிர்ப்புப் போராட்டம்; அரசு வழக்கு தொடர்தல்.

1966
- தமிழ்நாடு தெய்வீகப் பேரவைத் தோற்றம்.

1967
- திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தோற்றம்.
- திருக்கோயில் கருவறைக்குள் சீலமுடைய அனைவரும் சாதி வேறுபாடின்றி திருமுறை நெறிப்படி - போதொடு நீர் சுமந்தேத்தி வழிபாடு செய்வதெனத் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றுதல்.

1968
- இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு - 'திருக்குறள் உரைக்கோவை' நிகழ்ச்சி தொடக்கவுரை நிகழ்த்தல் - திருக்குறள் இந்திய நாட்டின் தேசிய நூலாக வேண்டுமென்று இம்மாநாட்டில் வலியுறுத்தல்.
- இலங்கைப் பயணம். இரண்டு வாரங்கள், இலங்கை

யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் திருக்கோயில் நுழைவுக்காக உண்ணா நோன்பிருத்தல்.

- கீழவெண்மணித் தீவைப்பு நடந்த இடத்தைப் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறுதல்; புத்தாடை வழங்குதல்.

1969
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி ஏற்பு;
- கலைஞர் மு. கருணாநிதி பாரி விழாவிற்கு வருகை
- கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் விருப்பத்தின் வழி தமிழ்நாடு சட்டமன்ற மேலவை பொறுப்பேற்றல்
- தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறல்.

1970
- சட்டமன்ற மேலவையில் இந்து அறநிலையத் திருத்த மசோதா - சாதி வேறுபாடின்றி அனைவரையும் அர்ச்சகராக நியமனம் செய்தல் பற்றிப் பேசுதல்.

1971
- தமிழ்நாடு சமாதானக் குழுத் தலைவராதல்.
- சோவியத் பயணம்; 22 நாள் சுற்றுப் பயணம்.

1972
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, திருவள்ளுவர் கலைக் கல்லூரியாக உருவாதல்.
- சென்னை, மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயில் திருப்பணிக்குழுத் தலைவராக நியமனம்; வள்ளுவர் கோட்டம் திருப்பணித் தலைவராக நியமனம்.
- குன்றக்குடித் தருமைக் கயிலைக் குருமணி உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய இடத்தில் கட்டடம் கட்டித் திறத்தல்.

1973
- திருக்குறள் பேரவைத் தோற்றம்.
- திருச்சியில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை இரண்டாவது மாநில மாநாடு நடத்துதல்.
- "கோயிலைத் தழுவிய குடிகளும் குடிகளைத் தழுவிய கோயிலும்" என்ற முழக்கம் நாட்டளவில் வைக்கப்பெற்றது.
- குன்றக்குடி கிராமத்தைத் தன்னிறைவுக் கிராமமாக ஆக்கும் திட்டம் உருவானது.

1975
- நாகர்கோவிலில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை மூன்றாவது மாநில மாநாடு நடைபெறல்.
- சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஏ.பி.சி. வீரபாகு சைவசித்தாந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு.

- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- இராமநாதபுரம் இனக் கலவரம் - அமைதிப்பணி.

1982
- குமரி மாவட்டம் மண்டைக்காடு கலவரம் - அமைதிப் பணியாற்றல்.
- மண்டைக்காடு அமைதிப்பணி பற்றிச் சட்ட மன்றத்தில் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். பாராட்டுதல்.
- திருவருட்பேரவை தொடங்குதல்.
- மலேசியா, கொரியா, ஹாங்காங், ஜப்பான், செஞ்சீனா முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம்.
- புளியங்குடி இனக்கலவரம் - அமைதிப்பணி.

1984
- பாரதத் தலைமை அமைச்சர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் குன்றக்குடிக் கிராமத் திட்டக்குழுவின் பணிகளைப் பாராட்டல்.

1985
- நடுவணரசு திட்ட ஆணைக்குழுப் பிரதிநிதிகள் குன்றக்குடி வருகை; கிராம வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட்டுப் பாராட்டுதல்.
- பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் வளர்ச்சிப் பணிக்குத் திட்டக்குழு அமைத்தல்.
- மணிவிழா

1986
- தமிழ்நாடு அரசின் முதல் திருவள்ளுவர் விருது பெறுதல்
- இந்திய அரசு திட்டக்குழு குன்றக்குடித் திட்டப்பணியைப் பாராட்டி "Kundrakudi Pattern" என்று அறிவித்தது.

1989
- இவர் எழுதிய 'ஆலயங்கள் சமுதாய மையங்கள்' என்னும் நூல் தமிழ்நாடு அரசின் முதற்பரிசு பெற்றது.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் (D.Litt) பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

1991
- இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக்குழு, தேசிய விருது வழங்கிச் சிறப்பித்தது.
- இலண்டன், அமெரிக்கா சுற்றுப்பயணம்.
- அரபு நாடுகள் பயணம்.

1993
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' விருது வழங்கிச் சிறப்பித்தது.

1995
- இறைநிலை யடைதல்.



# அடிகளாரின் குறள் பணிகள்

## பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்

தமிழ்மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ்கூறு நல்லுலகில் சமய மறுமலர்ச்சிக்கு வழிகண்டவர். அடிகளார் பூர்வாசிரமத்தில் செட்டிநாட்டில் எங்கள் ஊராகிய இராமச்சந்திரபுரத்தில் உயர்நிலைக் கல்வி பயின்றார்கள். எங்கள் தந்தையார் குங்கிலியம் பழ. சண்முகனார் அவர்களும், அடிகளாரின் அண்ணன் அவர்களும் விநோபா பாவே வாசகசாலையைத் தொடங்கினர். அடிநாள் தொட்டு அடிகளாரை நான் நன்கறிவேன். அடிகளார் திருவண்ணாமலை ஆதீனத்தில் பொறுப்பேற்ற பின்னர் சிறந்த சொற்பொழிவாளராக விளங்கினார்கள். முதன்முதலில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் அடிகளார் அவர்களும் நாங்கள் நடத்திய தமிழர் திருநாள் திருக்குறள் விழாவில் ஒரே மேடையில் பேசினர். அப்பொழுது ஆத்திகமும் நாத்திகமும் ஒரே மேடையில் சந்திக்கின்றன என்ற செய்தியை வியப்புடன் நாளிதழ்கள் வெளியிட்டன.

50, 60களில் அடிகளார் தமிழ்மேடைக்குத் தம் பேச்சால் புதிய வலிமை சேர்த்தார்கள். தமிழகம் முழுவதும் அடிக்கடி பயணம் செய்யும் நான் அடிகளாரின் நூற்றுக்கு மேற்பட்ட பொழிவுகளைச் செவிமடுக்கும் நல்வாய்ப்பைப் பெற்றேன். அடிகளார் நூல் பலவற்றைப் படிக்கும் பேறு பெற்றேன். அப்பொழுதெல்லாம் சிந்தனைகள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்துப் பார்க்க வேண்டும் என்ற வேணவா என்னுள்ளத்தில் முகிழ்த்தது. அது இன்று கைகூடுகிறது.

புகழ்மிக்க அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அடிகளார் அவர்களுக்கு டாக்டர் பட்டம் (D.Litt) வழங்கிய போது அவர்களிடம் வாழ்த்துப்பெற்று, அடிகளார் நூல் வரிசைத் திட்டத்தை விரிவாக விளக்கினேன். “நான் நினைக்கவில்லை. நல்ல திட்டமாக இருக்கிறது. செய்யலாம்” என்று சொல்லி இசைவளித்தார்கள். அடிகளார் எழுதிய 50-க்கு மேற்பட்ட நூல்களையும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களை நேரில் சந்தித்து ஆசிபெற்று நூல்வரிசைத் திட்ட அறிக்கையைப் பணித்தேன். மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்த்தி இசைவு தந்தார்கள். பதிப்புக்குழுவை உருவாக்கினார்கள். கட்டுரைகளை வகைப்படுத்தும் பணி தொடங்கிற்று.

ஒவ்வொரு தொகுதியும் 400 பக்கங்கள் கொண்ட 10 தொகுதிகளாக வெளியிடும் திட்டத்தில் ஏற்கனவே முதல் தொகுதி வெளிவந்துள்ளது. இன்று இரண்டாவது தொகுதி வெளிவருகிறது.

1. **திருக்குறள்**
2. **இலக்கியம்**
3. **சமயம்**
4. **சமுதாயம்**
5. **பொது**

என 5 நிலைகளில் இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மறைமலை அடிகளுக்குப்பின் 1960-90களில் சைவ உலகில் அடிகளார் பெரும்புரட்சி செய்தவர். சைவ சமய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தவர். சமயக்காழ்ப்பின்றி சைவசமயத்தின் கோட்பாடுகளை, தத்துவக் கூறுகளை பொதுமக்களும் உள்ளம் கொள்ளும்படி விளக்கியவர் தமிழ்மாமுனிவர். சைவசமயத்தை நடைமுறைச் சமயமாக்கவும், சீர்திருத்தக் கருத்துக்கள் செயற்படவும் அல்லும் பகலும் அயராது உழைத்து, புதியதொரு விடியலைக் கண்டார்கள். பெரியாரும் போற்றும் வண்ணம் பெருமிதமாக வாழ்ந்தார்கள். தமிழ்நாட்டில் பெரிய சைவத்திரு மடங்கள் 18 இருந்த போதிலும் குன்றக்குடி ஆதீனமே மக்களால் பெரிதும் அறியப்பட்டிருந்தது. தமிழ் மறுமலர்ச்சியின் ஒரு கூறாகிய சமய எழுச்சி, திருமுறை எழுச்சி, திருக்குறள் இயக்கம் முதலியவற்றின் வாயிலாக, எழுச்சி மிக்க புதிய தமிழகத்தை உருவாக்கினார்கள்.

அடிகளார் அவர்களை

**புரட்சித்துறவி**

**சிந்தனையாளர்**

**நூலாசிரியர்**

**பொற்பொழிவாளர்**

**நிறுவனர்**

என ஐந்து நிலைகளில் வைத்து அடிகளாரின் பங்களிப்பை நாம் விளக்கலாம்; மதிப்பீடு செய்யலாம்.

**புரட்சித்துறவி :** தத்துவ தரிசனங்கள் அனைத்தையும் கற்றதோடு மார்க்சியமும் கற்றவர். சமூக இயலில் ஆழங்கால் பட்டவராதலால் தமிழ்ச் சமூக மாற்றத்திற்கு சைவ சமயம் வழியாக எவ்வாறு மேம்பாடு காணலாம் என உழைத்தார். தமிழ்வழிபாடு, ஆட்சிமொழி, பயிற்றுமொழி, இந்திஎதிர்ப்பு முதலிய அனைத்து இயக்கங்களுக்கும் தலைமையேற்று தமிழகத்திற்கு

வழிகாட்டினார். அவருடைய எழுத்திலும், பேச்சிலும், புதுமைகள் பூத்துக் குலுங்கின. திருமடத் தலைவர்கள் பல்லக்கில் பவனிவந்தபோது பட்டி தொட்டிகளுக்கெல்லாம் அடிகளார் சைக்கிளில் சென்று சமயம் பரப்பினார். புரட்சித்துறவி அடிகளாரின் புரட்சிச் சிந்தனைகளை இந்த 10 தொகுதிகளிலும் நாம் காணலாம். நடைமுறைக்கு ஒத்துவராத சமயக் கருத்துக்களைத் துணிவோடு எடுத்துக்காட்டிய சமயப் புரட்சியாளர்.

**சிந்தனையாளர் :** தமிழ்ச் சிந்தனைக்குப் புதுவளம் சேர்த்தவர். திரு.வி.க. நெறியில் சமுதாய நோக்கில் சமயச் சிந்தனைகளை வழங்கியவர். பன்னூற் பயிற்சியும், பேரறிஞரின் நட்பும், தொடர்ந்த மேடைப்பொழிவுகளும், பட்டறிவும் அவருக்குப் பல்வேறு புதிய சிந்தனைகள் தோன்ற வாய்ப்பளித்தன. துறவியாய், தமிழறிந்த சான்றோராய் மட்டுமல்லாமல் மானுடம் மேன்மையுற வேண்டும் என்ற வேணவாவினால் எவர்க்கும் அஞ்சாமல், எதனையும் எதிர்பாராமல் புதிய சிந்தனை விதைகளைத் தூவினார்கள். அவை இன்று பூத்துக் குலுங்குகின்றன. அவரின் சிந்தனைகள் தனி நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

**நூலாசிரியர் :** பல்வேறு காலங்களில் பல்வேறு இதழ்களில் அடிகளார் எழுதிய கட்டுரைகள் நூல்வடிவம் பெற்றுள்ளன. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் அவர் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் அறிஞர் பெருமக்களால் பெரிதும் மதித்துப் போற்றப்படுகின்றன. சிறியனவும், பெரியனவுமாய் 54 நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றில் அடிகளாரின் சிந்தனைத் தெளிவும் விளக்கும் திறமும், விரித்துரைக்கும் வகையும் நூலாசிரியர் இயல்புகளாய் அமைந்துள்ளன. ஒவ்வொரு கட்டுரையிலும் ஒவ்வொரு நூலிலும் சமூகப் பார்வையுடன் கூடிய புதிய சிந்தனை, புதிய செய்தி ஒன்று இருக்கும்.

**சொற்பொழிவாளர் :** 1960-90களில் தலைசிறந்த சொற்பொழிவாளர் ஐவரைச் சுட்டினாலும், மூவரைச் சுட்டினாலும் அடிகளார் பெயர் முதல் வரிசையில் நிற்கும். புதுமைச் சிந்தனையாலும், புரட்சிக் கருத்துக்களாலும் தமிழக இளைஞர்கள் மத்தியில் பாராட்டப் பெற்றவர்.

**நிறுவனர் :** அருள்நெறித் திருக்கூட்டம் : அடிகளார் தொடங்கிய இந்த இயக்கம் தமிழ்ச்சைவ உலகில் புத்தார்வத்தையும், புத்துணர்ச்சியையும், புத்தெழுச்சியையும் உண்டாக்கியது. சிற்றூர்களில், பேரூர்களில் கிளைகள் முகிழ்த்தன. திருமுறைகள் வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றன. ஊர்தோறும், திருக்கோயில் தோறும் உழவாரப்பணி ஊக்குவிக்கப் பெற்றது. நாள்வழிபாடு ஒழுங்கு செய்யப் பெற்றது. வார வழிபாட்டுக்கூட்டம் வளர்ந்தோங்கியது.

**தெய்விகப் பேரவை :** தமிழக அரசின் இந்து அறநிலையத்துறையின் வழி தொடங்கப் பெற்ற இந்த அமைப்பு பேரியக்கமாகப் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தது. சமய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இறைஉணர்வு நாளும் பெருக நல்லதொரு இயக்கமாக வளர்ந்தது.

**திருக்குறள் பேரவை :** தமிழ்மாமுனிவர் தோற்றுவித்த அமைப்புக்களில் இன்றும் இளமை குன்றாது மாநாடுகள் நடத்திவரும் பேரியக்கம் இது. தமிழறிந்தோர் எல்லோரும் திருக்குறள் அறிந்திடுதல் வேண்டும். பள்ளி, கல்லூரிகளில் திருக்குறள் கருத்தரங்கு நடைபெறுதல் வேண்டும். ஆண்டுதோறும் மாநில மாநாடுகள் நடத்துதல், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகத் திருக்குறள் மாநாடு நடத்துதல் முதலியன இதன் செயல்திட்டங்கள்.

திருக்குறளைத் தேசியநூல் எனப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று அடிகளார் எழுப்பிய குரல் இன்று நாடு முழுவதும் ஒலிக்கிறது.

# அணிந்துரை

## முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

உலகில் இன்று இல்லெனினும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களிலெல்லாம் புகழுருவாய் என்றென்றும் நிலைத்திருப்பவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். பூ என்றால் தாமரை, ஊரென்றால் உறையூர் என்றாற்போல, 'அடிகளார்' என்று சொன்னால் சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதி தொடங்கிக் குன்றக்குடி அடிகளார் அவர்களையே குறிப்பதாயுள்ளது. 'வண்ணச் சீரடி மண்மகள் அறிந்திலள்' என்று கண்ணகியை இளங்கோவடிகள் குறிப்பது போல, மடங்களின் தளத்தை விடுத்து மண்ணில் கால் வைத்தறியா ஆதீனத் தலைவர்கள் பலரும் உள்ள இக்காலத்தில் கல்லிலும் முள்ளிலும், காட்டிலும் மேட்டிலும், கழனியிலும் புழுதியிலும் மக்களோடு மக்களாய் ஒன்றிப் பழகியும் மக்கள் நலப்பணிகளாற்றியும் வந்த ஆதீனத் தலைவர் குன்றக்குடி அடிகளார் ஒருவரேயெனில் மிகையன்று.

Leigh Hunt என்பார் எழுதிய ஆங்கிலக் கவிதை ஒன்று 'Abu Ben Adhem, may his tribe increase' எனும் முதலடியுடன் தொடங்குகிறது. ஒரு நாள் இரவில் அபூ பென் ஆதம் தன் அறையினுள் நுழைந்த ஒளிக்கற்றையில் தேவதை ஒன்று தங்கத்தகட்டில் ஏதோ எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்து, 'என்ன எழுதுகிறீர்?' என்று கேட்டான். தேவதை, உலகில் கடவுளை யார் மிகுதியும் பூசை செய்கிறார்களோ அவர்கள் பெயர்கள் எழுதப்பட்டிருப்பதாகக் கூறியது. அப்பட்டியலில் அவன் பெயர் இல்லை. 'மக்களுக்குத் தொண்டு செய்யும் ஒருவன்' எனத் தன்பெயரை இறுதியில் சேர்த்துக் கொள்ளுமாறு அவன் வேண்ட, தேவதையும் அவ்வாறே எழுதிச் சென்றது. மறுநாளும் முன்நாள் போலவே தேவதை தோன்றியது. அதன் கையில் ஓர் ஏடு இருந்தது. அதில் கடவுள் யாரை மிகவும் நேசிக்கிறார் எனும் பெயர்ப் பட்டியல் இருப்பதாகத் தேவதை கூறியது. அபூ பென் ஆதம் தன் பெயர் அப்பட்டியலில் உள்ளதா என்று கேட்டபோது, அவன் பெயரே முதற்பெயராக இருப்பதாகத் தெரிவித்துத் தேவதை மறைந்தது. மக்கள் தொண்டே இறைவனுக்குச் செய்யும் உண்மையான பூசை என்பதை இக்கவிதை விளக்குகிறது.

"உழவன் உழவு செய்யும் இடத்திலே, சாலை அமைக்கத் தொழிலாளி கல்லுடைக்கும் இடத்திலே இறைவன் இருக்கிறான். அவர்களுடன் வெயிலிலும் மழையிலும் காய்கிறான், நனைகிறான். அவன் ஆடையில் தூசி படர்ந்திருக்கிறது. இறைவன் அங்கேயிருக்க, தாளிட்ட அடைபட்ட கோயிலில் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கிறாய்? வெளியே வா! அவன்போல நீயும் புழுதியில் இறங்கு; நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் இறைவனைக் கண்டுகொள்" என்பது இரவீந்திர நாத தாகூரின் கீதாஞ்சலி பாடல் ஒன்றின் கருத்து. மக்களுடன் மக்களாக ஒன்றி உழைப்பதே உண்மையான இறைவழிபாடு என்பது இதன் கருத்து.

"உங்களுடைய பக்தியும் முக்தியும் யாருக்கு வேண்டும்? உங்களுடைய சாத்திரங்கள் என்ன சொல்லுகின்றன என்பது பற்றி யாருக்குக் கவலை? என்னுடைய நாட்டு மக்களை உயர்த்துவதற்காக நான் ஆயிரம் முறை வேண்டுமானாலும் நரகத்துக்குச் செல்லத் தயார்... நான் யாருடைய ஊழியனும் அல்லன். தன் முத்தியைப் பற்றி நினையாது பிறருக்கு உதவிபுரிந்து பணிசெய்பவனுக்கே நான் பணியாள்" என்பது சுவாமி விவேகானந்தர் வாக்கு. மக்களுக்கு உதவுதலே மெய்யான முத்தி என்பதை இது விளக்குகிறது.

ஏசு, தன்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களிடம், "தாழ்ந்த நிலையிலுள்ள என் உடன்பிறந்தார்களாகிய மக்களில் ஒருவருக்கு நீங்கள் எதைக் கொடுக்கிறீர்களோ அதை எனக்கே கொடுக்கிறீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார். அதேபோல அவரால் ஏற்கப்படாதவர்களிடம், "மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள என் உடன்பிறந்தவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். எனின் ஏழைக்குக் காட்டும் அன்பே, இறைவனுக்குச் செலுத்தும் அன்பு என்பது விவிலியக் கருத்தாகிறது.

இத்தகைய கொள்கைகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பே நம் அடிகளார். அவருடைய எழுத்துகள் அனைத்தையும் பல தொகுதிகளாக வெளிக்கொணரும் சீரிய பணியை மணிவாசகர் பதிப்பகம் மேற்கொண்டிருக்கிறது. திருக்குறள் பற்றி அடிகளார் ஆற்றிய உரைகள், அவர் எழுதிய கட்டுரைகள், தனித்தனிக் குறளுக்கு அவர் தந்த விளக்கங்கள் கொண்டதாக இம் முதல் தொகுதி அடிகளாரின் வள்ளுவச் சிந்தனைகளை உள்ளடக்கியிருக்கிறது.

அடிகளார், 'திருக்குறளை அற நூலாக, நீதி நூலாக மட்டும் காண்பதோடு நின்றுவிடக் கூடாது; அதனை வாழ்வியல் நூலாகக் கொண்டு, வள்ளுவர் வழியில் நடந்தால் வையகம் தழைத்தோங்கும்' என வலியுறுத்தி வந்தவர். "திருவள்ளுவர் நெறியில் இந்த வையகம் நடைபோடுமானால் இன்று இந்த உலகத்தை வருத்தும் துன்பங்கள் அனைத்தும் அகலும்; அன்பு வளரும்; அறம் வளரும்; பண்பாடு வளரும்; இந்த உலகம் இடையீடின்றி இயங்கும். இந்த உலகம் அழியாது; என்றும் நிலைபெற்று விளங்கும்'' என வள்ளுவர் வழியில் நடையிடுவதுதான் உலகம் உய்ய வழி என உறுதிபடக் கூறுகிறார்.

''இன்னமும் திருக்குறளுக்கு உரையெழுதிக் கொண்டிருக்கின்றோம்; அல்லது விவாதங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றோம்! ஆனால் திருக்குறள் நெறியை வாழ்வியல் நெறியாக்கச் சமூகம் முயலவில்லை'' என வேதனைப்படுகிறார்.

"திருக்குறளை ஒரு சிறந்த இலக்கியம் என்றே பலர் கருதுகின்றனர். அஃது உண்மையேயானாலும் திருக்குறள் ஓர் இலக்கியம் மட்டுமன்று; திருக்குறள் பல்துறை தழுவிய ஒரு முழு நூல்;- அறிவியல் சார்ந்த நூல். திருக்குறளை இதுவரையில் யாரும் அறிவியல் முறையில் அணுகவில்லை" என அங்கலாய்க்கிறார்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' - இது திருவள்ளுவர் காலத்தின் உயரிய கோட்பாடு. இக்கோட்பாடு உலகில் இடம் பெற்றால்தான் வெள்ளையர், கறுப்பர், தீண்டத்தகாதவர் என்று மனித குலத்தினை ஆட்டிப் படைக்கும் தீமைகள் மாயும். கடவுள் அருச்சனைகளால், ஆராதனைகளால், படையல்களால் திருப்தி செய்யத்தக்கவ ரல்லர் என்ற வள்ளுவத்தின் கொள்கை இடம் பெற்றால்தான் வாழ்க்கையோடியைந்த அறிவியல் சமயம் உலகில் வளரும். வாழ்வாங்கு வாழ்தலே சிறந்த வழிபாடு என்ற வள்ளுவத்தின் சமயநெறி வெற்றி பெற்றால்தான் சமுதாயத்தில் புரோகிதர்கள் உலவமாட்டார்கள்; சமய நிறுவனங்கள் தோன்றா; அவைகளுக்குள் ஆதிக்கப் போட்டிகளும் இரா. வள்ளுவத்தின் சமயம் வெற்றி பெறுமானால் தொண்டு நிறுவனங்கள் எங்கும் தோன்றும்; தொண்டர் குலம் தழைக்கும்; மனித குலமும் தழைக்கும்; எனவே வள்ளுவத்தின் சமயம் உலகப் பொதுச் சமயமாக மலரும் நாளே மனித குலத்திற்குப் பொற்காலம் படைக்கும் நன்னாளாகும்! - அடிகளார் கூறியுள்ள இந் நன்னாள் மலர அவர் கூறியுள்ள கருத்துகள் நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன.

கொடுமை தீர்க்க மாந்த குலம் போராடவும் வேண்டும் எனும் புரட்சிகரச் சிந்தனை கொண்டவராய் அடிகளார் விளங்கினார். சாணக்கியர், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரின் அரசியல் கருத்துகளுடன் வள்ளுவத்தை ஒப்பிட்டு, அவர்களுடைய கருத்துகளைவிட திருக்குறள் நெறி மேம்பட்டிருப்பதை அடிகளார் நன்கு விளக்கியுள்ளார். கார்ல் மார்க்ஸ், 'மூலதனம்' எனும் நூலை எழுதியுள்ளார். அதில் நன்கு தோய்ந்த அடிகளார், "இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தை விரும்புகின்றவர்கள், வள்ளுவத்தையும் மூலதனத்தையும் ஒரு சேரக் கற்றுத் தெளிய வேண்டும். வள்ளுவமும் மார்க்சீயமும் காட்டும் புதியதோர் உலகத்தை அமைக்கும் பணியில் போர்க் குணத்துடன் ஈடுபடவேண்டும். போரிட வேண்டும். சுகவாழ்வுப் போக்கிலிருந்தும் நுகர்பொருள் சந்தைகளிலிருந்தும் வெளியேறி சமூக சிந்தனையைப் பெற்று,

**வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு**
**வாழும் மனிதருக் கெல்லாம்**

என, பாரதியார் கனவை நனவாக்கப் போரிடவேண்டும்" என எழுச்சி கொள்ளச் செய்கிறார்.

குறட் பாக்களுக்கு அடிகளார் தரும் விளக்கங்கள் எளிய நடையில் பொருட் செறிவுடன் விளங்குகின்றன. "செயல்கள் அனைத்திற்கும் சிந்தனையே அடிப்படை. சிந்தனையின் நிலைக்களன் மனம். நாம் செய்யும் செயல்கள் பலவற்றில் தூய்மை காணவேண்டும் என்று தனித் தனியாக முயல்வதைவிட, செயல்கள் அனைத்திற்கும் பொறுப்பாக உள்ள சிந்தனையைத் திருத்தி மனத்தை மாசின்றி வைத்துக் கொள்வது நல்லது; சிறந்தது. இதன் மூலம் நாம் செய்யும் அறங்களும் மிகச் சிறந்து விளங்கும்"- இது 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' என்னும் குறளடிக்கு அடிகளார் தந்துள்ள விளக்கம்.

அடிகளாருடைய எழுத்து நடை தனித்த தன்மையுடையது. எளிய தொடர்கள். எதிரிலிருந்து பேசுவதுபோன்ற உணர்வைத் தோற்றுவிப்பது; பேச்சும் எழுத்தும் ஒன்றுபோலவே அமைந்த பாங்குடையது. சான்றுக்கு ஒரு பகுதி: "உன்னுடன் பழகியவர்கள் உனக்குக் கொலையனைய கொடுந் துன்பங்களைச் செய்யும் பொழுதும் செய்பவர் மீது சினவற்க; பகை கொள்ளற்க; யாதொரு தீமையும் செய்யற்க; அந்த நேரத்தில் அவர் செய்த

ஏதாவது ஒரு நன்மையை நினைத்துக்கொள். அந்த நினைப்பு கொடுமை செய்தார்மாட்டு அன்பைக் காட்டத் தூண்டும்; பகையை மாற்றும்; பண்பாடு வளரும். இத்தகு வாழ்வே மானுடத்தின் சிறந்த வாழ்வு; சால்பு மிகுதியும் உடைய வாழ்வு''.

நகைச் சுவையே பேச்சு என்றுள்ள இக்காலத்தில் அடிகளார் பேச்சில் நகைச்சுவை மிகமிக அருகியே தோன்றும். ஆனாலும் மக்கள் கூட்டத்தின் சிந்தனையைச் சிறிதும் சிதறவிடாது தன்பால் ஈர்த்துத் தேனில் படிந்த வண்டுபோலத் திளைக்கச் செய்யும் திறமை அவருடைய கருத்துச் செறிவான பேச்சுக்குண்டு.

தக்க எடுத்துக்காட்டுகள் வாயிலாக அவர் செய்திகளை விளக்குவது ஒரு தனிப்பாங்கு. ''அன்பு எப்போதும் உலகத்தைத் தழீஇயது. உலகையே உறவாகக் கொண்டது. தேநீர் அருந்துபவர்கள் 'கப்-சாசர்' பார்த்திருப்பீர்கள். கப்பில் தேநீர் சூடாக இருக்கும். சாசரில் ஊற்றினால் சூடு ஆறிவிடும். ஆதலால் ''சூடான தேநீரை சாசரில் ஊற்றிக் குடிப்பது அன்றாடக் காட்சி. சுருங்கியவெல்லாம் துன்புறும்; அழிவுறும். விரிந்த எல்லாம் வளரும்'' - அவருடைய எடுத்துக்காட்டு விளக்கத்திற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

அடிகளாருடைய பேச்சிலும் எழுத்திலும் வரையறைகளாகப் பலவற்றைக் காணமுடியும். சான்றுக்குச் சில:

''அறம் என்பது மனித வாழ்வின் தீமையை அகற்றித் துன்பங்களை விலக்கி இன்பத்தைத் தருவது''.

''நாகரிகம் என்பது உலகை இடையறாது உய்த்து நடத்தும் ஒரு சிறப்புடைய உணர்வு வழிப்பட்ட ஒழுக்கமாகும்''

''துறவு என்பது ஒரு வாழ்க்கை முறை. எந்த ஒன்றின்பாலும் அளவற்ற ஆசை வைப்பின் தீதாக முடியும்''

''ஒருவரின் சாதனையை அனுபவித்த ஒருவர் மகிழ்ந்து, தம் உள்ளம் நெகிழ்ந்து மொழியும் சொற்களே புகழ்''

வறுமை, பசிக்கொடுமை பற்றி நினைக்க நேர்ந்தால் அடிகளாருடைய கண்களில் துன்பக் கண்ணீர் மளமளவென வழியும். உணர்ச்சி வயப்பட்டு அவருடைய பேச்சும் அப்போது கலங்கும். 'அந்த வேளை அந்த ஞானிக்குள்ளும் ஒரு தேம்புதல்' உண்டாகும். வறுமை தீரவில்லையெனில் கடவுள்தான் எதற்கு என்று கூடக் கேட்கிறார். ''கடவுள்

புரோகிதர்களிடத்தில் சிக்கிவிட்டார்; சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் தருவதில்லை. காரணம் பூசாரிக்குப் பணப்பெட்டி நிறையவேண்டும். அவர் வல்லார் பக்கம் சார்ந்து, மாட்டாதாரை ஒதுக்கி, வல்லாரின் செல்வக் குவிப்புக்குக் கடவுளைக் காட்டி நியாயம் கற்பித்துக் கொடுத்து வளர்கின்றார். கடவுள் நம்பிக்கையுடையோரின் நீதிக்குப் புறம்பான இச்செயல்தானே நாத்திகத்தைத் தோற்றுவித்தது? கடவுள் தோன்றிய பிறகு, 'இன்றும் வருவது கொல்லோ?' (வறுமை இன்றும் வருமோ?) என்றால் கடவுள் நெறி எதற்காக?' - கடவுள் பெயரால் ஏய்த்துப் பிழைப்போர் மீது அடிகளார் ஏவுகின்ற வினாக் கணை இது. சமய நிலையங்களே வழிமாறியுள்ள நிலையையும் சாடுகிறார். "இன்று நம்முடைய சமய நிலையங்களில் சூழ்ந்திருக்கின்ற குறைகளில் தலையாயது மடைப்பள்ளியின் ஆட்சியேயாகும். ஐம்புலன்கள் ஆர அருளாரமுதத்தை அனுபவிக்க வேண்டிய திருக்கோயில்களில் பொறிகளுக்குத் தீனிபோடும் சூழ்நிலை' - இது அடிகளாரின் கவலை.

கள்ளங் கபடமற்ற உள்ளம்; தெளிந்த சிந்தனை; கேட்பவர் காதுகளில் சென்று தைக்கும் எடுப்பான குரல், உடல் குலுங்கக் 'கட கட' எனச் சிரிக்கும் இயல்பு. காண வருபவர்க்குக் கையில் பழம் கொடுக்கும் இயல்பு. கூட்டங்களை முடித்துக்கொண்டு திரும்பும்போது இரவில் வழியில் எங்காவது ஒரு மரத்தடியில், கட்டித் தந்த இட்டளிப் பொட்டலத்தைத் தானே விரித்து, உடனிருக்கும் நண்பர்களுக்கும் தந்து தானும் உண்ணும் எளிமையோடியைந்த ஒரு துறவியை குன்றக்குடி அடிகளாரைத் தவிர வேறு எவரையேனும் காண முடியுமா? இல்லை, எண்ணித்தான் பார்க்க முடியுமா? வள்ளுவ நெறி, தந்தை பெரியாரின் தன்மானக் கொள்கை, கார்ல் மார்க்சின் பொருளாதாரச் சிந்தனை ஆகியவற்றின் ஒன்றிணைந்த வார்ப்பாக அடிகளார் திகழ்ந்து வந்தார்.

ஏறு விடாமல்! ஏறு மென்மேல்!....
அறிவை விரிவுசெய் அகண்ட மாக்கு
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!....
உலகம் உண்ணஉண் உடுத்த உடுப்பாய்
புகல்வேன் உடமை மக்களுக்குப் பொது
புவியை நடத்து பொதுவில் நடத்து
வானைப் போல மக்களைத் தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!

எனும் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல், அடிகளாரின் நெஞ்சம் கவர்ந்த பாடல்களில் ஒன்று. புவியைப் பொதுவில் நடத்த வேண்டுமானால் வள்ளுவமே ஆட்சிமுறையாக வேண்டும் என்பதை அடிகளார் அழுத்தந் திருத்தமாகக் கூறிவந்துள்ளார். "குரு நானக்கின் சீக்கிய வேதம் இன்று பாஞ்சாலத்து மக்களை வழி நடத்தும் மறை; அந்தச் சட்டத்திற்கு முரணில்லாமல்தான் இந்திய அரசியல் சட்டம் செயல்பட வேண்டும். இது அவர்கள் பெற்ற வெற்றி. முகமதியர்கள் அத்தகைய வெற்றி பெற்றுள்ளார்கள். கிறித்துவர்களும் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆனால் தமிழ் மக்கள் இழிநிலையில் கற்பித்துக் கூறும் இந்து சட்டத்தின்படிதான் இன்று நடத்தப்பட்டு வருகிறார்கள். வள்ளுவத்தின் வழியில் அல்ல" என வள்ளுவர்வழி நம் ஆட்சிமுறை அமையவேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறுகிறார். இந்நூலில், அவர் கூறியுள்ள கருத்துகள் வள்ளுவ ஆட்சி முறையைத் தோற்றுவிக்கத் துணை செய்யும் எனும் துணிவோடு செயற்படுவோம்!


அடிகளாருடைய அனைத்து எழுத்துக்களையும் ஒரு சேர ஒரே இடத்தில், ஒரே வேளையில் காணும் வகையில் பதிப்பிக்க முன்வந்துள்ள மணிவாசகர் பதிப்பக உரிமையாளர், பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன் அவர்களைத் தமிழுலகு நன்றியுடன் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. மேலை நாட்டுப் பதிப்புகளைப் போல அடிகளாரின் நூல்களை அழகிய கட்டமைப்புடன் பேழையினுள்ளே தொகுதி-1, தொகுதி-2, - எனும் வரிசையில் காணுகின்ற வாய்ப்பினை உருவாக்கியுள்ள திரு. மெய்யப்பன் அவர்களை உளமாரப் போற்றி மகிழ்கிறேன்.

பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்கள் முனைவர் தெ. முருகசாமி, நா. சுப்பிரமணியம், குன்றக்குடி பெரியபெருமாள், மரு. பரமகுரு, க. கதிரேசன் ஆகியோர் நற்பணியாற்றியுள்ளனர். நிறைந்த பாராட்டுகள்.

மணி மாலையின் மற்றொரு மணி - ஒளி பெறுவோம்! நலமடைவோம்!

*அன்புடன்,*

***ச. செல்லப்பன்***



தவத்திரு

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

# முன்னுரை

## தவத்திரு பொன்னம்பல அடிகளார்

அருள்நெறித் தந்தை, தமிழ்மாமுனிவர் இருபதாம் நூற்றாண்டின் அப்பரடிகள், மனிதநேய மாமுனிவர், காவி உடுத்திய கார்ல் மார்க்ஸ் எனப் பலவாறு அழைக்கப்பெற்ற நம் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுதிய பல்வேறு நூல்கள் இன்று தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது. திருக்குறளைப் பற்றிய பல்வேறு சிந்தனைகள் இன்று செறிவாகச் சீர்செய்யப்பட்டு, சிறப்புடன் நமது கரங்களில் தவழ்கின்றது. பேச்சே வாழ்க்கை, வாழ்க்கையே பேச்சு என்று உலக உபதேசியாக மட்டும் இராமல் பேசியதை வாழ்வில் நடைமுறைப்படுத்திச் சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளியில்லாத செயற்கரிய செயல்களை ஆற்றிய அருந்தவ வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

உலக உயிர்கள் நலம்பெற உபதேசித்த அப்பர் அடிகளும், சுவாமி விவேகானந்தர் பெருமானும், வள்ளலார் பெருந்தகையும் எந்த அடைப்புக் குறிகளுக்குள்ளும் தம்மைச் சிறைவைத்துக் கொள்ளவில்லை. மடங்கள் என்ற நிறுவனங்களில் தங்களைச் சிறைவைத்துக் கொள்ளாமல் சுதந்திர வானில் சுடர்விட்டுப் பிரகாசித்தார்கள். பட்டு, பீதாம்பரங்களை அணிந்துகொண்டு பல்லக்கில் பவனிவரும் - காலத்திற்கு ஒவ்வாப் பரம்பரை மரபுகளை மறுதலித்துவிட்டு, தம் கடமைக்குரிய மரபுகளை வழுவாது நிறைவேற்றி, தம் பாதங்கள் நோகப் பாலைவனத்தில் பயணம் செய்து பாமர மனிதனின் வாழ்வை வளப்படுத்தச் சிந்தித்துச் செயலாற்றிய சமய சமுதாய உலகில் முதல் திருமடத்தின் தலைவர் நம் அருள்நெறித் தந்தையேயாவார். சுவாமி விவேகானந்தர் பெருமானும், வள்ளலார் பெருந்தகையும் மடாதிபதிகளாய் இருக்கவில்லை! திருமடத்தின் பொற்கூண்டுக்குள் மரபுகள் எனும் கத்திரிகள்,

சுதந்திரச் சிறகுகளை வெட்டிய பொழுதும் அதையும் தாண்டி, உலக மக்களின் ஆன்ம விடுதலைக்கு வித்திட்டு, வேதம் புதுமை செய்த மடாலயத் தலைவர் தாம் நம் மகாசந்நிதானம்! வளர்ந்து வருகின்ற உலகில் பேச்சும் எழுத்தும் வாழ்க்கை வாணிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொழுது, சமுதாய மாற்றங்களுக்கு விதைக்கின்ற நாற்றங்காலாக அவற்றை மாற்றிக் காட்டினார்கள். உருவமும், கோலமும் அடையாளமும் மட்டும் அல்ல துறவு நெறி! எண்ணும் எண்ணத்தால் நினைக்கும் உள்ளத்தால், வாழும் வாழ்க்கை முறையால் வாழ்வதுதான். உண்மைத் துறவுநெறி என்று துறவிகளிடம் மிக்க கண்டிப்பாக இருந்த திருவள்ளுவப் பெருந்தகையின் குறள்நெறியை, குவலயம் எங்கும் பட்டிதொட்டி எங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டு, குறள்நெறிக்கு இயக்கம் கண்ட முதல் துறவி நம் மகாசந்நிதானமே ஆவார். குறள்நெறி பற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், ஆய்வுச் சிந்தனைகள், வானொலிச் சொற்பொழிவுகள், கருத்தரங்கங்களில் மலர்ந்த மலர்கள்தான் இன்று திருவள்ளுவர் சிந்தனை பற்றிய நூல் தொகுப்பாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.

சீனத்தில் கன்பூஷியஸ், கிரேக்கத்தில் சாக்ரட்டீசு, பிரெஞ்சு தேசத்தில் ரூஸ்ஸோ, சோவியத்தில் மார்க்சியம் புரட்சியை - மாற்றத்தை விளைவித்ததைப் போலத் தமிழ் மண்ணில் தமிழ் நிலத்தில திருவள்ளுவப் பெருமானின் சிந்தனைகள் ஏன் புரட்சியை, மாற்றத்தைத் தோற்றுவிக்கவில்லை? என்ற நியாயமான வினாவினை மகாசந்நிதானம் எழுப்புகின்றார்கள். சிந்தனையைக் கிளறும் இந்த ஆழமான வினாவிற்கு அற்புதமான விடையையும் தருகின்றார்கள். "தமிழ் நிலத்தை, தமிழ் மண்ணை ஆண்ட அரசர்கள் அருளரசர்களாக இருந்தார்கள். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று புறநானூறு பாடும். 'உயிரெலாம் உறைவதோர்

உடம்புமாயினான்' என்று கம்பன் தசரதனைப் பாடுவான்! முடி ஆட்சிக் காலத்தில் மன்னன் உடம்பாகவும் மக்கள் உடம்பை இயக்குகின்ற உயிராகவும் வாழுகின்ற ஆட்சிமுறை இருந்தது. புறாவிற்காகத் தன் தசையை அறுத்த சிபிச் சக்கரவர்த்தியும், கன்றை இழந்த பசுவிற்காகத் தன் மகனைத் தேர்க் காலில் இட்ட மனுநீதிச் சோழனும், அநீதி இழைக்கப்பட்ட அபலைப் பெண்ணிற்காக உயிர்நீத்த பாண்டியன் நெடுஞ்செழியனும், கொழுகொம்பின்றி வாடிய முல்லைக்குத் தேர் ஈந்த பாரி வள்ளலும், தண்தமிழுக்குத் தலைஈந்த குமணவள்ளலும் போன்ற அருளரசர்கள் ஆண்டமையால் உயிர்க்குலம் துன்பத்தைச் சந்திக்கவில்லை! நலம் செய்யாத அரசுகள் சில வாய்த்தபோதிலும் அவை மனிதகுலத்திற்குத் தீங்கு இழைக்கவில்லை. நலம் செய்யாததோடு தீங்கிழைக்கும் அரசுகளை நோக்கித்தான் புரட்சிகள் தோன்றும். இடையிடையே இருள் கவிந்தாலும் வள்ளுவர் வழித்தோன்றியவர்கள் இலக்கிய மாணவர்களாகவே அமைந்துவிட்டோம்! பரிமேலழகர் காலம் முதல் இன்றைய உரையாசிரியர்கள் வரை பாட்டுக்குப் பொருள்வரையும் உரையாசிரியர்களாக வளர்ந்து விட்டோம். திருக்குறள் நெறிக்கு எழுத்தில் உரை கூறுகின்றோம். வாழும் வாழ்க்கையில் உரைசெய்யத் தவறிவிட்டோம்! திருவள்ளுவரை வழிபாட்டுக்குரிய பொருளாக மாற்றி விட்டோம்!'' என்று அருள்நெறித் தந்தை திருக்குறள் வாழ்வியல் நூலாக வெற்றி பெறாமைக்குக் கூறும் விளக்கம் எண்ணி எண்ணிப் போற்றத்தக்கது.

> பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்துவற்றுள் எல்லாம் தலை

என்ற திருக்குறள், கொல்லாமை எனும் அதிகாரத்தில் ஏன் வைக்கப்பட்டுள்ளது? என்ற வினாவினை எழுப்புவார்கள்! ஈகையில் வைக்கப்பட்டிருக்கலாம், ஒப்புரவறிதலில் வைக்கப்பட்டிருக்கலாம், விருந்தோம்பலில் கூறி இருக்கலாம். கத்தி எடுத்துக் கொன்றால் மட்டும் கொலை

என்பதன்று. பெற்ற செல்வத்தைப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்து, பலரையும் பேணி வளர்க்காமல் சோறிட்டு மருந்து முதலியன வழங்கிப் பலரையும் பேணி வளர்த்துப் பாதுகாக்காமல் சாகடித்தலும் கொலைக் குற்றமே என்பதனை உணர்த்தவே இந்தக் குறள் கொல்லாமை அதிகாரத்தில் அமைந்திருக்கின்றது என்ற அரிய விளக்கம் அருமையானது.

**வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்**

என்னும் குறளுக்கு அறிவியல் பார்வையில் தருகின்ற விளக்கம் அற்புதமானது. ஊர் நலம் போற்றுபவனின் விளைநிலம் உரிமையால் தனி மனிதனுடையதாக இருப்பினும் நிலம் பேணப்படுவதில் பொதுவுடைமையாகப் போற்றிப் பேணப்படும். உரிமையாளர் விவசாயம் செய்ய மறந்திருந்தால்கூட ஊரார் அவருக்காக வேளாண்மை செய்து விளைச்சலை வீடு கொண்டுவந்து சேர்ப்பர் என்ற விளக்கம் பாராட்டுக்குரியது.

**அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை**
**பொறுத்தானொ(டு) ஊர்ந்தான் இடை**

என்பதற்கு, சமய ஞானியாய் இருந்துகொண்டு கூறும் விளக்கம் அடிகள் பெருமான் சமய உலகின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட புரட்சித்துறவி என்பதனைப் பறைசாற்றுகின்றது.

மரபு வழிப்பட்ட சமயவாதிகள் வறுமைக்கும் ஏழ்மைக்கும் காரணமான பழியை, பரம்பொருள் மீதும் விதி - ஊழின் மீதும் போட்டுத் தப்பித்துக் கொள்ளும் பொழுது, 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்று வாழ்க்கை வழித்தடத்தில் உரை கூறிய வள்ளல் பெருமான்தாம் நம் அடிகள் பெருந்தகை!

அறிவு என்பது செய்திகளின் தொகுப்பு அல்ல! நூல்களின் இருப்பிடம் அல்ல. கற்றதைத் திரும்ப, கூறியது கூறும் கிளிப்பிள்ளை மொழி அல்ல! துன்ப நீக்கத்திற்குரிய மருந்து! நேற்றையத் துன்பத்தை இன்றைய இன்பமாக

மாற்ற உதவும் கருவிதாம் அறிவு என்ற விளக்கம் புதுமையானது; உலகம் முழுமைக்கும் பொதுமையானது.

வள்ளுவ மருத்துவர் உயிரைத் தேடுகின்றார். வாழ்பவனை எல்லாம் அவர் உயிர் உள்ளவனாக ஏற்றுக் கொள்ளவில்லை. இடுகாட்டில் எரியும் பிணங்கள்! நடுவீட்டில் நடைபோடும் பிணங்கள் என்று கூறுகின்றார். சுவாசிப்பதாலும் இதயம் துடிப்பதாலும் உடல் இயங்குவதாலும் உயிர் இருப்பதாக ஒத்துக் கொள்வதில்லை. இயந்திரங்களும் தான் இயக்கினால் இயங்குகின்றன. கடிகாரமும் பெண்டுலம் அசைந்தால் ஓடுகின்றது. இயந்திர மனிதனும்தான் இன்று இயங்குகின்றான். இதயம் இல்லா மனிதனும் இயங்குகின்றான். எவன் இதயத்தில் அன்பு துடிக்கின்றதோ அவனே உயிர்த் துடிப்புடைய மனிதன் என்று வகைப்படுத்துவது இதுவரை உலகம் எண்ணிப் பாராத சிந்தனை ஆகும்.

நட்பு, காதல், ஒப்புரவில் இன்றைய இருபதாம் நூற்றாண்டின் நிறைவுப் பகுதியில் காணுகின்ற வாழ்க்கைப் போக்கோடு எண்ணிப் புதிய சிந்தனையைத் தந்திருப்பது எண்ணி எண்ணிப் போற்றத்தக்கது.

**குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து**
**மானம் கருதக் கெடும்**

என்ற குறள் நெறிக்கு, பொது வாழ்வில் - பொது நன்மைக்குப் போராடும் பொழுது மான அவமானம் பார்க்கத் தேவை இல்லை என்ற விளக்கம் சிந்திக்கத்தக்கது. இந்தக் குறளுக்கு வாழும் வாழ்க்கையால் உரை சொன்னவர் பேரறிஞர் அண்ணா என்பதைச் சுட்டிக்காட்டி இருப்பது இளைய தலைமுறைக்கு வழிகாட்டுவதாகும்.

வள்ளுவம் கடவுளை நம்புகின்றது. அது ஆணும் அல்ல; பெண்ணும் அல்ல. வள்ளுவம் காட்டும் கடவுளுக்குக் கோபுரங்கள் - கோட்டைகள் இல்லை. வள்ளுவம் காட்டும் கடவுளுக்குக் கணக்கும் இல்லை; வழக்கும் இல்லை; அது

பேரறிவு! தூய்மையான அறிவு! குணங்களின் திரு உரு! இன்பத்தின் திரு உரு! அன்பின் திரு உரு! அறத்தின் திரு உரு! என்ற வரிகள் உண்மையான, போலித்தனம் இல்லாத சமய உலகை அடையாளம் காட்டுகின்றது.

திருக்குறள் ஒரு சமயத்திற்காகத் தோன்றிய நூல் அன்று! அது சமயச் சார்பற்ற நூல். ஆயினும் மனித குலத்தைச் சிந்தனையில் - அறிவியலில் - வாழ்க்கையில் வழிநடத்தும் நூல். திருக்குறள் கொள்கை சமயமாக உருப்பெறுகின்றது. அறிவின் வழிப்படும் பொழுது அன்பு கருக்கொண்டு அருள் உருப்பெறுகின்றது என்ற வைர வரிகள் சமயம் உறைந்துள்ள இடத்தை நமக்கு அடையாளம் காட்டுகின்றது.

முறை செய்து காப்பாற்றும் மன்னவனுக்குச் செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்பும் அறிவுறுத்தும் நல் ஆலோசகர்களும் தேவை என்கிறார். உயிர்க்குலம் துன்புறும் போரை, விரும்பாத போக்கும் எதிர்பாராத தாக்குதலும் எதிரிகளால் ஏற்படலாம். எனவே நல்ல படை பலமும் தேவை என்கிறார்.

ஆண்டவன் வரம் கொடுத்தாலும் பணப் பெட்டியின் மீது பித்துக்கொண்ட பூசாரிப் புரோகிதர்கள் எனும் நந்திகள் சமய வாழ்க்கையைச் சடங்குத் தன்மையுடையதாக மாற்ற வல்லார்க்குச் சாமரம் வீசுகின்றனர்.

'நியாயம் வழங்க வேண்டிய அரசியல், வாய்ப்புடையார் வாயிலில் காத்துக்கிடக்கும் சேவகத் தொழிலாக மாறிவிட்டது. எங்கு நாட்டின் நீதியியலை முறைப்படுத்தி நிர்வகிக்கின்ற அரசு தோன்றவில்லையோ அங்கு அரசை ஆட்டிப்படைக்கின்ற தனியார் நிதிக் குவியல் தோன்றும்' என்ற சிந்தனைக்குரிய வாக்கு நினைவிற்கொள்ளத்தக்கது. திருவள்ளுவ நெறிவழி மனிதகுலத்தை மேம்படுத்துவதற்கு அக வாழ்விலும் புற வாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கக் கூறுகளை ஆழமாகச் சிந்தித்து. அற்புதமாக நமது

மகாசந்நிதானம் தமிழ்ச் சமுதாயத்திடம் ஒப்படைத்துள்ளார்கள். இந்தச் சிந்தனைப் பெட்டகத்தைச் செயலாக்க வேண்டியது நமது கடப்பாடு.

பல குழுக்களாக விரவிக்கிடக்கின்ற தமிழ் இனத்தை ஒருமைப்படுத்த திருவள்ளுவப் பெருமான் முயன்றதைப் போல, பல பொழிவுகளாக விரவிக்கிடந்த கருத்துப் பெட்டகங்களைத் தொகுப்பு நூலாக மாற்றும் முயற்சியில் மணிவாசகர் பதிப்பகம் வெற்றி கண்டுள்ளது. பதிப்புக் கலையில் முத்திரை பதித்த வித்தகர் மெய்யப்பன், இதிலும் முத்திரை பதித்துள்ளார்.

இந்நூல் எழுத்துக் கருக்கொண்ட நாள் முதல் இன்றுவரை அல்லும் பகலும் அயராது உழைத்த பெருமை நம் ஆதீனக் கவிஞர் மரு. பரமகுருவைச் சாரும். பல வகைகளில் இந்நூல் தொகுக்கும் களத்தில் கடமை ஆற்றிய இராமசாமி தமிழ்க் கல்லூரி முதல்வர் தெ. முருகசாமி, பேராசிரியர் நா. சுப்பிரமணியம், ஆதீனப் புலவர் க. கதிரேசன், எழுத்துச்செம்மல் பெரியபெருமாள் போன்றவர்களின் பணிகள் அளப்பரியன; எண்ணி எண்ணிப் போற்றும் கடப்பாட்டுக்குரியன.

இந்நூலுக்கு அரியதொரு அணிந்துரை நல்கிய திரு. சிலம்பொலி செல்லப்பனாருக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இவ்வரிய நூலின் கருத்துக்களை, சிந்தனைப் பெட்டகங்களைச் செயலாக்க மகாசந்நிதானம் திருநாமத்தைச் சிந்தித்துப் பயணம் செய்வோம்!

இந்நூலை வாசிப்பதோடு நிறுத்திவிடாது அருள்நெறித் தந்தையின் சிந்தனைகளைச் செயலாக்குவதே, இந்நூலுக்கு அணிவிக்கின்ற பொன் அணியாகும். அருள் நெறித் தந்தையின் கனவு, நனவாகக் கற்றவழியில் கடமை ஆற்றுவோம்.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | மனம் ஒரு மாளிகை | 27 |
| 2. | வாழ்க்கை விளக்கு | 108 |
| 3. | சிந்தனைச் செல்வம் | 158 |
| 4. | அறவழிகாட்டி | 179 |
| 5. | திருக்குறள் பேசுகிறது | 212 |



*அச்சும் அமைப்பும்*

தமிழவேள் ச. மெய்யப்பன்

மணிவாசகர் பதிப்பகம்

# 1

# மனம் ஒரு மாளிகை

## அன்பு

**வா**ழ்க்கை, உழைப்பு என்ற அச்சில் சுழல்கிறது என்பதே உண்மை. ஆனால், அந்த அச்சுத் தேயாமல் கழன்று ஓடாமல் பாதுகாப்பது அன்பேயாம். அன்பு! அம்மம்மா! அன்பிற்கு எவ்வளவு ஆற்றல்! 'ஆற்றல்மிக்க அன்பு' என்று அருள் நூல் கூறும். 'அன்பே சிவம்' என்பது திருமந்திரம். அன்பு, உயிரின வாழ்க்கைக்கு மூச்சுப் போன்றது. அதனாலன்றோ வள்ளுவம், 'அன்பின் வழியது உயிர் நிலை' என்றது.

உண்மையான ஒரு மனிதனுக்கு உயிர் இருக்கிறதா? இல்லையா? என்பதன் அடையாளம் அவனுடைய நடமாட்டமல்ல. அவன் உண்ணும் உணவின் அளவல்ல; அவனுடைய இனப் பெருக்கமுமல்ல. வீட்டில் சில நடைப் பிணங்கள், இடுகாட்டில் சில பிணங்கள் என்று யாரோ ஒரு பழுத்த மனிதர் சொன்னதைப் போல அன்பில்லாதவர்கள் வாழ்பவர்கள் ஆகார்.

எது அன்பு? எந்த உயிரிடத்தும் காரணம் இல்லாமலேயே பள்ளந்தாழ் உறுபுனல் போலத் தோன்றி வளர்வது அன்பு. தூய அன்பிற்குக் காரணம் கிடையாது. காரிய சாதனை அல்லது நோக்கமும் கிடையாது. காரியங்கள் நிகழும். தாம் வாழும் காரியமன்று. மற்றவர் வாழும் காரியங்கள் நிகழும். உயிர் இயற்கையின் அடிப்படையே, வாழ்வித்து வாழ்தல்தான்! அதுதான் அன்பின் இலக்கணம். இன்றும் இந்த இலக்கணத்திற்கு தாவர இனங்கள், விலங்கினங்கள் மாறுபடாது உயிர் வாழ்கின்றன.

ஆனால், பகுத்தறிவு படைத்த மனிதனோ அன்பிற்குப் போலி முலாம்பூசிப் பொய்மை பெருக்கிப் பகைமை வளர்த்துக் களவும் காவலும் படைத்துச் சிறைச் சாலையைக் கட்டி வாழ்ந்து கொண்டு இருக்கிறான். ஏன்? அன்பின்மையே காரணம். அதனால், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத எலும்பினைப் பெறாத புழுக்களைக் கதிரொளி காயும்; நீதி முறைப்படி பார்த்தால் கதிரவன் குற்றம் சாட்டப்படுவான். புழுவிற்கு எலும்பில்லாதது இயற்கையின் குறை! படைப்பின் விசித்திரம்! ஆதலால், எலும்பு இல்லாத புழுவைக் கதிரவன் காய்தல் நீதியுமன்று; நெறியுமன்று.

ஆனால், வினைப்பயனில் நம்பிக்கை உடையவர்கள், உயிர்க்குப் புழுப் பிறப்புக் கிடைத்தது அதற்கு ஒரு வகையான தண்டனை என்று கூறினாலும் கூறலாம். ஆனால், அப்பரடிகள் வாக்குப்படி பார்த்தால் அது புண்ணியப்பிறவி என்று கூறப்படும். மனிதனிடத்தில் இருக்கும் கெட்ட குணமாகிய ஆங்காரம் புழுவினிடத்தில் இல்லையெனத் தெரிகிறது. புண்ணியத்தின் பயன் என்னவோ? என்பில்லாத புழுவை வெயில் சுடுவதைப் போல அன்பில்லாத மனிதனை அறக் கடவுள் சுடும். இன்று உலகியலில் எலும்பில்லாத மனிதன் என்று கோழையை அழைக்கின்றனர்.

வீரம் இல்லாதவன் மட்டுமா கோழை? அன்பில்லாத மனிதனும் ஒரு கோழைதான்! வீரமாவது இன்னொரு மனிதனிடத்தில் காட்டப்பெறுவது! ஒரு மனிதன் அன்பினைக் காட்ட, அன்பினில் வளரத் தன் அடங்காப் பிடாரித் தனத்தோடு போராட வேண்டும்; தன்னலத்தை எதிர்த்துப் போராட வேண்டும்; ஆர்ப்பரிக்கும் ஆணவத்தை எதிர்த்து அடக்க வேண்டும்; செருக்களத்தில் போராடும் ஒருவர் இந்தக் களத்தில் தோற்று விடுவர். இந்தக் களத்தில் வென்று வாழ்வதே உண்மையான வீரம்! ஈரப்பசை இல்லாத நிலத்தை எளிதில் கண்டுணரலாம். அதுபோலவே அன்பில் லாத மனிதர் வாழும் நிலப் பகுதியையும் எளிதில் கண்டு கொள்ளலாம். ஆங்கு ஏழ்மையிருக்கும்; சண்டை சச்சரவுகள் இருக்கும்.

காவல் நிலையங்கள் ஓயாது தொழிற்படும். ஏன்? சில சமயங்களில் போட்டியில் கடவுளுக்கு விழாக்கூட எடுப்பர். ஆனால், அந்த விழாவில் கடவுள்தான் இருக்கமாட்டார்! அறக்கடவுள் சீரான துலாக்கோல் போன்றவர். இவர் அன்பில்லாதவரைச் சுட்டெரிப்பார் என்று வள்ளுவம் கூறுகிறது.

மனித உலகம் அமைதியாகக் கூடிக் கலந்து சிரித்து மகிழ்ந்துவாழ அன்பே தேவை. அன்புநெறியில் மனித உலகம் வாழும். அதனால் இந்த மண்ணகம் சொர்க்கம் ஆகும். யார்மாட்டும் அன்பு காட்டுவோம்! அன்பு காட்டும் உயர்ந்த சீலத்தில் பகைமையையும் மறப்போம்! வையகம் வாழ அன்பினைப் போற்றி வளர்ப்போம்.

*அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்*
*நண்பென்னும் நாடாச் சிறப்பு.*

*அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு.*

## அறிவு

அறிவு, வாழ்க்கைக்கு இன்றியமையாதது; மனித வாழ்க்கைக்குக் கடவுள் வழங்கிய பரிசுகளில் தலையாயது. ஆனால் இன்று எது அறிவு என்று இனம் தெரிந்து கொள்ளாமலேயே வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. ஏன்? பலரிடத்தில் அறியாமையே அறிவுபோலக் காட்சியளிக்கிறது. அம்மம்ம! தம்மிடமுள்ள அறியாமையையே அறிவு என நம்பி நிலைதடுமாறி நிற்பவர்கள் இன்று ஆயிரம் ஆயிரம் பேர்! அவர்கள் அகந்தை கொண்டவர்களாக நடமாடுகிறார்கள். "ஒண்மை உடையம் யாம் என்னும் செருக்கு" என்று வள்ளுவர் கூறுகிறார்.

பன்றிகளைக் கட்டுத்தறியினின்றும் அவிழ்த்து விட்டால் சந்தனக் குவியல்பால் நாடா. மலக்குவியலை நோக்கியே ஓடும். அதுபோல் அறியாமையையே அறிவென நம்பித் திரிபவர்கள் எதிலும் அறிவை நாடமாட்டார்கள்; ஆபாசங்களையே தேடுவர்.

அதையே விரித்து விரித்து உரைப்பர். ஆனால், தமது அறியாமையை மறைக்க "அறிவு, அறிவு" என்று சொல்லிக் கொள்வர். இஃது அறிவு என்ற பெயரில் உலா வரும் ஒருவகை அறியாமை. வேறுசிலர், சில செய்திகளை அறிந்துகொண்டு அவற்றைக் கிளிப்பிள்ளை போலச் சொல்வர். சொல்லும் செய்திக்கும் அவர்களுக்கும் உணர்வு அடிப்படையில் யாதொரு விதமான தொடர்பும் இராது.

இதுவும் ஒருவகை அறியாமையே. வேறு சிலர், புத்தகங் களை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பர். இவர்கள் ஒருவகை யான அஜீரண வாதிகள். இவர்களுக்கு அறிவினுடைய வாசனையே இருப்பதில்லை. ஆதலால் உணர்வும் இருக்க வழியில்லை. கல்வி, அறிவு பெறுதற்குரிய வாயில்; ஆனால், கல்வியே அறிவல்ல. செய்தி அறிவு பெறுதற்குரிய வாயில்;

செய்தியே அறிவல்ல. கேள்வி அறிவு பெறுவதற்குரிய வாயில்; ஆனால், கேள்வியே அறிவல்ல. சிந்தனை அறிவு பெறுவதற்குரிய வாயில்; ஆனால், சிந்தனையே அறிவல்ல.

அறிவு என்பது நுட்பமானது, திட்பமானது. ஒருவர் அறிவுடையவர் அல்லது அறிவில்லாதவர் என்பதை அவருடைய பேச்சுக்களைக் கொண்டும் அறிய முடியாது. அவர் எழுதும் நூல்களைக் கொண்டும் அறிய முடியாது. அவருடைய வாழ்க்கையே அறிவையும் அறியாமையையும் காட்டும்.

அதாவது, யாதொரு வகையான துன்பத்தையும் தொடர்ந்து அனுபவிக்காதவர்கள் அறிவுடையோர்கள். அதுபோலவே பிறர்க்குத் துன்பம் செய்யாதவர்கள் அறிவுடையோர்கள். இதனை வள்ளுவம் 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்று எடுத்துக் கூறுகிறது. அதாவது, உயிர் களைத் துன்பத்தொடக்கினின்றும் பாதுகாப்பதே அறிவு. இத்தகைய அறிவைப் பெறுதற்குரிய வாயில்களில் முதன்மை யானது சிந்தனை.

அறிவு, புறத்தில் இருந்து மட்டும் பெறக்கூடியதில்லை. ஆன்மாவின் ஆழமான அடிமனம் தொழிற்படுவதன் மூலம் சிந்தனை பிறக்கிறது. அச்சிந்தனை அகத்தே நிகழும் உணர்வுப் போராட்டங்களைத் திறனாய்வு செய்கிறது. சிந்தனையுடையவன் வாழ்க்கையில் நாள்தோறும் புதுமை காணலாம்."பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே!" என்ற சொற்றொடர் சிந்தனையின் செழு மையைக் காட்டவல்லது.

சிந்தனை இயல்பாகத் தொழிற்படாது போனால் சிந்தனையைத் தூண்டித் தொழிற்படுத்த நல்ல நூல்களைக் கற்றலாகிய கல்வி துணைசெய்கிறது. பாத்திரத்தைத் துலக்கல் போல ஆன்மாவைத் துலக்குவது கல்வி. கற்றல், மிக

நுட்பமான ஒரு செயல்முறை, மனப்பாடம் செய்தல் நினைவுக்குப் பயன்படலாம். ஆனால். அது முழுமையான கல்வியாகாது. கற்கும்நூலை, அந்த நூலாசிரியன் உணர்வோடு ஒன்றிக் கற்க வேண்டும்.

எழுதப்பட்டவையெல்லாம் நூல்களாகா. அறியாமையின் மொத்த உருவம் எனத் திகழும் சிலர்கூட நூல்களை எழுதி விடலாம். அவை, மனித உருவில் நடமாடும் பேய்களைப் போல நூல்வடிவில் உலவும் "சைத்தான்கள்." இந்தச் சைத்தான்களைப் பிடித்துக் கொண்ட சிலர், ஆய்வுக்குரிய நூல் எது என்று முடிவு செய்யாமலே தவறான நூல்களை மையமாகக் கொண்டே பேய் பிடித்த மனிதர்களைப் போலப் பேசியும் எழுதியும் வருவர்.

இன்று பகுத்தறிவின் பேரால் பரப்பப்பெற்று வரும் நாத்திகம் இதுவே. கார்ல்மார்க்சும் நாத்திகரே! லெனினும் நாத்திகரே! பழங்காலத்திலிருந்த புத்தர் கடவுள் நம்பிக்கையில்லாதவராதலால் அவரும் நாத்திகரே! ஆனால், அவர்களுடைய நாத்திகம் அறிவின் பாற்பட்டது; திறனாய்வுக்குத் தகுதியுடையது.

அவர்களுடைய நாத்திகத்தால் மனித சமுதாயத்திற்குப் பெரிய கேடு வந்துவிடாது. காரணம் கடவுள் நம்பிக்கையின் பேரால் எத்தகைய நெறிமுறைகளை ஒழுக்கங்களைத் தோற்றுவிக்க முயற்சி செய்யப் பெற்றதோ அதுபோலவே மார்க்சீயம் லெனினியம் ஆகியவையும், ஒரு புதிய நெறிமுறைக் கோட்பாடுகளை வகுத்துக் கொடுக்கின்றன. எப்படிக் கடவுள் நம்பிக்கையுடையவன் மனித உலகத்திற்குக் கேடு செய்யும் ஒழுக்கக்கேடு உள்ளவனாக இருக்க முடியாதோ அது போலவே உயர்ந்த கம்யூனிசக் கொள்கையுடையவனும் மனித உலகத்திற்குக் கேடு செய்யும் ஒழுக்கக் கேடுடையவனாக இருக்க முடியாது.

ஆனால், நம்முடைய நாட்டில் பரப்பப்படும் நாத்திகம் கொச்சைத் தனமானது, நல்லொழுக்கத்திற்கு மாறானது. இவர்களுக்குக் காதல், கற்பு என்பதெல்லாங் கூட வெறும் பேச்சுத்தான். இவர்கள் தேடித் தேடித் தம்முடைய பேச்சுக்கும் எழுத்துக்கும் மோப்பம் பிடிப்பதெல்லாம் பெரும்பாலும் ஒழுக்கங்கெட்டவர்கள் எழுதிய கதைகள் தாம்! தப்பித் தவறி ஒன்றிரண்டு நல்லநூல்கள் இவர்கள் கையில் அகப்பட்டுவிட்டால் கருவாட்டுக்காரி கதை போல் பழக்க வாசனையால் ஆபாசத்தையே காண்கிறார்கள்; அல்லது ஏற்றுகிறார்கள்.

இத்தகைய தவறான நூல்களைக் கற்பதைவிட கல்லாமை கோடி நன்மைதரும். காரணம் ஒரே வகையான அறியாமை மட்டுமே இருக்கும்! முறைபிறழ்ந்த உணர்வுகளும் மயக்கமுமே இருக்கும். நல்ல நூல்கள் கடவுளைப் போல் பாராட்டத்தக்கன. நல்ல நூல்கள் நல்ல நண்பனைப்போல நல்லாற்று நெறிப்படுத்துவன. நல்ல நூல்கள் அகனமர்ந்த காதலியைவிட இன்பமளிப்பன. நல்ல நூல்கள் 'உயிர்க்கு உற்ற மருந்து' என்ற ஒரு மேலை நாட்டுப் பழமொழி உண்டு.

ரஸ்கின் என்னும் ஏடுதேடு காதலர், "நூல்களைக் கற்கும் முயற்சியைவிட கற்பதற்குரிய நூல்களைத் தேர்ந் தெடுக்கும் முயற்சியில் அதிக கவனம் தேவை" என்று வலியுறுத்துகிறார். நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும். நூலாசிரியன் உணர்வோடு ஒன்றித்துக் கற்க வேண்டும். நூலாசிரியன் காலத்திற்கும் கற்போன் காலத் திற்கும் உள்ள இடைவெளியை உய்த்தறிந்து காலத்தின் வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள தேவையை நிறைவு செய்து கொள்ள வேண்டும்.

காலச் சுழலில் சிக்கிய நூலாசிரியன் கூறும் செய்தி களில் உள்ள நல்லனவற்றையே தேர்ந்தெடுக்க வேண்டும்.

தேனெடுக்கும் தேனீ, இதழ்களை எண்ணுவதில்லை; எடுப்பதுமில்லை. மலர்ச்செடியின் கொம்புகளை, காம்பு களை எடுப்பதில்லை. அது போலத்தான் நூலாசிரியன் படைப்புக்களில் நமக்குப் பயன்தரத்தக்க விழுமியவற்றையே ஏற்றுக் கொள்ள வேண்டும்; மற்றவற்றை மறந்து விடுதல் வேண்டும்.

*அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்*
*உள்ளழிக்க லாகா அரண்.*

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு.*

## வாய்மை

**வா**ழ்க்கையென்ற மாளிகைக்கு ஒழுக்கம் ஒளியூட்டு கிறது. அம்மாளிகைக்கு வளத்தை-வனப்பைச் சேர்ப்பது வாய்மையேயாம். நன்னெறியின் அடிப்படை வேறு. செயல்முறை வேறு. நன்னெறியின் அடிப்படை எவ் வுயிர்க்கும் தீங்கு செய்யாமை. அதுமட்டுமன்று, ஏற்புழி இன்பம் சேர்த்தல். இவ்வடிப்படை நியதிக்கு ஏற்றவாறு ஒழுகலாறுகள் அமையவேண்டும். ஒரோவழி ஒழுகலாறு அடிப்படை நன்னெறியோடு மாறுபடலாம். அங்ஙனம், மாறுபடும்பொழுது வழக்கத்தில் வந்த ஒழுகலாற்றுக்குப் பதில் நன்னெறியையே ஏற்றுக் கொள்ளவேண்டும். பகைவன் ஒருவன் துரத்திவர ஒருவன் அடைக்கலமாக வந்து சேர்ந் திருக்கிறான். தன்னிடம் அடைக்கலமாக வந்து ஒளிந்திருப்ப வனை, பொய் சொல்லக்கூடாது என்ற நெறிவழி "இங்கே ஒளிந்திருக்கிறான்" என்று காட்டுவது நெறியாகாது. அது தோற்றத்தில் வாய்மைபோலத் தோன்றினாலும் வாய்மை யன்று.

"வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றும் தீமை இலாத சொலல்" என்பார் வள்ளுவர். யாதொன்றும் தீமையிலாத சொலல் என்ற சொற்றொடர் எண்ணத்தக்கது. சொல்லினால் வரும் தீமைகள் அனைத்தையும் ஒருமுகப் படுத்திக் கூறுகின்றார். சொல் எளிதில் தோன்றுகிறது. ஆனால், நிறைந்த விளைவுகளை உடையது. ஆதலால், எளிதில் சொல்லாது எண்ணிச் சொல்லும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். நாம் சொல்லும் சொல்லால் யாருக்கும் எத்தகைய துன்பமும் வரக்கூடாது. அதுவே வாய்மை.

வாய்மை நிறைந்த சொற்களைச்சொல்லப் பழகுதலே ஓர் அரிய பயிற்சி. ஒருவரிடம் தகுதியில்லாதன கண்டால் அவரைத் தனியே அழைத்துத் தண்ணளி சேர்த்து இன்புறச் சொல்லி அத்தகுதியல்லாதன நீக்குதலே வாய்மை நெறி. மற்றோர் அறியத் தூற்றுவது வாய்மையாகாது. மற்றவருடைய புகழுக்கும் பெருமைக்கும்-உரிமைக்கும் உடைமைக்கும்-உணர்வுக்கும் பாதுகாப்பாக இருக்கும் சொற்களே வாய்மை யுடைய சொற்கள்.

வாய்மையால் வையகத்திலுள்ளோர் நெருங்கி வாழ்வர்; நேசம் காட்டுவர். அகத்தூய்மை வாய்மையினா லேயே பெறமுடியும். அகத்தூய்மையை எடுத்துக் காட்டுவதும் வாய்மையேயாம். வாய்மை வழியின்றி அகத்தூய்மை பெறுதற்கோர் வழியில்லை. பகைவரையும் வாழ்த்தி, மறத் தன்மையில் செய்து முடிப்பதே வாய்மையின் சீலம். பகைவரின் புகழுக்கு இகழ்ச்சி தரும் வகையில் பழி தூற்றுதல் வாய்மை யாகாது.

சொல்முறையில் பொய்போலத் தோன்றுவதும் கூட நன்மை விளைவிக்குமானால், அது வாய்மையேயாம். அன்பும் பாசமும் அகத்தினில் இல்லாது புறத்தே காட்டுதல் பொய். அது வாய்மையன்று. வாய்மை, வாய்வழி விளக்க

முறுவதன்று. நெஞ்சத்தில்—நெஞ்சத்தின் உணர்வில் விளக்கம் பெறுவது. அதுவே, புகழ் மிக்க வாய்மை. அதனாலேயே வாய்மையிற் சிறந்தது பிறிதொன்றுமில்லை என்றார் வள்ளுவர்.

வாய்மை, மனத்தில் தங்கவேண்டும். மனத்தில் வாய்மை கொண்டு வாழ்த்துவோர் வாழ்த்து, வையகத்தை நடத்தும். அச்சொற்கள் மந்திரத்திற் சிறந்த செம்பொருட் சொற்கள். இங்ஙனம், மனத்தில் வாய்மை தேக்கிப் பேசுவோர், தானம் செய்வாரினும், தவம் செய்வாரினும் உயர்ந்தோர். தானம் பிறர் நோக்கிச் செய்யப்பட்டாலும், அதன் நோக்கம், தான் சொர்க்கம் புகவேண்டும் என்பதே.

ஆக, தானத்தின் நோக்கம் தற்சார்புடையது. தவம், முற்றாகத் தற்சார்புடையது; அதனால்தான் போலும், சில ஆண்டுகள் தவம் பயிற்றியோர் உலகியலுக்கு வந்தபோது முரண்பாடுகளின் மொத்த உருவமாயினர். அவர்களால் மற்றவர்களுக்கு விளைந்தது தீங்கே! காரணம், தற்சார்பிலேயே சுழன்ற மனம், பிறர்நலம் எண்ண மறுக்கிறது. ஆனால், வாய்மை பிறருக்குத் தீங்கு செய்யாத நோக்கத்தில் முகிழ்க்கிறது. பிறரை இன்புறுத்தலில் வளர்கிறது. அவ்வழி தானும் வளர்கிறது. இந்த வாய்மை, தவத்தினும் சிறந்தது.

வாய்மை வழி வாழப்பயிலுவோமாக. எவ்வுயிர்க்கும் தீமையிலா அன்பு காட்டுவோமாக! அதுவே, வாய்மையின் ஊற்று! வாய்மை வழியே வள்ளுவர் வழி.

*மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு*
*தானஞ்செய் வாரின் தலை.*

*பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை*
*எல்லா அறமும் தரும்.*

# ஆள்வினை

உலகம், தொழில் வயப்பட்டது. இயற்கை உலகம் ஓயாது தொழிற்படுகிறது. தொழிற்பாட்டில்தான் ஐம்பூதங்கள் இயங்குகின்றன. வளி சுற்றுகிறது. வான் மழை பொழிகிறது; நலம் வளம் கொழிக்கிறது! உலகிற்கு உழைக்கும் உயிரின்றி இயக்கம் இல்லை. உயிரினங்களில் மூத்தவனாகிய மனிதன் மற்ற உயிரினங்களைவிட அதிகமாகவே உழைக்கக் கடமைப் பட்டிருக்கின்றான். ஆனால், நடைமுறையில் அப்படி இல்லை.

நாளைய உணவுக்குச் சேர்த்து வைக்கும் குணத்தி லிருந்து சொத்துடைமை உணர்வு பெருகி உடைமைவர்க்கம் ஏற்பட்டமையின் காரணமாக, உடைமையற்றோர் உழைத் தலும் உடைமையுடையோர் உடைமையற்றோர் உழைப்பி லிருந்து வாழ்தலுமாகிய சூழ்நிலை சமுதாய அமைப்பில் தோன்றிவிட்டது. அதற்குப் பிறகு உழைப்பது உயிரின் இயல்பு என்ற கொள்கை மாறி உழைக்காமலே உண்பது பெருமைக் குரியது என்ற கொள்கை தோன்றிற்று. உடன் உடைமை வர்க்கத்தோடு இயல்பாகத் தழுவிக் கொள்ளும் இயல்புடைய—பிழைப்பு வழிப்பட்ட மதப் புரோகிதர்கள், உழைக்காமல் உண்பது புண்ணியத்தின் பயன் என்றும், உழைப்பது பாபத்தின் பயன் என்றும் உடைமை வர்க்கத் திற்குச் சாதகமாகப் பிரசாரம் செய்தனர்.

அது மட்டுமா? உழைப்பின் பயனை உழைப்பவன் அடைய முடியாதபொழுது அல்லது அடைவதற்குத் தடை யாக உடைமை வர்க்கம் நின்றபொழுது இதே புரோகித வர்க்கம் "அவ்வளவுதான் கொடுத்து வைத்தது; தெய்வம் அனுமதித்த கூலி கிடைத்திருக்கிறது" என்றெல்லாம் பிரச்சாரம் செய்து உபதேசித்து செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்கள் ஆகவும் ஏழைகள் மேலும் ஏழைகள் ஆகவும் செய்தனர். ஆனால், உண்மையான சமயம் இதை ஏற்றுக் கொள்வதில்லை.

உண்மையான மெய்ந்நெறி காட்டிய திருவள்ளுவர் ஆள்வினையை உயிரின் இயல்பான உடைமை என்கிறார். ஆள்வினையுடையாருக்கு அருமையுடையதில்லை. தெய்வம் என்பது மனிதர்களை அவரவர் வினைவழி, வழி நடத்துதல் என்பதேயாகும். ஆனால், மனிதனின் வாழ்க்கையில் தெய்வத்திற்கு எதேச்சாதிகாரமான ஆளுமை இல்லை. அஃதொரு நியதி. நேற்றைய தீவினையை இன்று அறிந்து நினைந்து வருந்தி மாற்றிக் கொண்டு நல்வினை செய்யப் பெறுமானால் தீவினையை வெற்றி காணலாம்.

அதற்குத் தேவை முயற்சியே! நேற்றைய தவற்றை இன்றைய முயற்சியால் திருத்திக் கொள்ளத்தானே வாழ்க்கை! மண் திருத்தப்பெற்று சோலைகளாவதைக் காண்கின்றோம். மனம் திருந்தினால் மாண்புகள் சேராவோ? உடலின் பளபளப்பைவிட உழைப்பின் வடுக்கள் தேவதைகள் கண்டு மகிழும் காணிக்கைகளாகும்.

உழைப்புக்குணம் என்பது நல்ல—வளர்ந்த—ஆரோக்கியமான ஓர் உயிரின் குணமாகும். அதனாலன்றோ பாரதி, "கைவருந்தி உழைப்பவர் தெய்வம்" என்றான். பொதுமையுலகு கண்ட மாமுனிவர் மார்க்ஸ் "உழைக்காதவனுக்கு உண்ணும் உரிமையில்லை" என்று கூறினார். உழைப்பு என்ற அச்சிலேயே உலகம் இயங்குகிறது.

மனிதன் அறிந்து அனுபவிக்கும் அனைத்துப் பொருள்களும் மனித உலகத்தைச் சார்ந்த உழைப்பு வர்க்கத்தின் உழைப்பின் பெருமையைப் பண்பாடிக் கொண்டிருக்கின்றன. வாழ்க்கை வளர, இன்பமுற வாழ அறிவறிந்த ஆள்வினை தேவை. இதுவே வள்ளுவர் ஆணை.

> **அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்**
> **பெருமை முயற்சி தரும்.**
>
> **முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை**
> **இன்மை புகுத்தி விடும்.**
>
> **ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
> **தாழா(து) உஞற்று பவர்.**

# சிந்தனை

சிந்தனை, மனத்தின் தொழில். மனம் ஒன்றைப் பற்றி நின்று அதனையே திரும்ப எண்ணுதல் சிந்தனையாகும். அதனையே என்றால் ஒரே மாதிரியல்ல. ஏன்? எதனால்? எப்படி? என்ற வினாக்களை எழுப்பி அந்த வினாக்களுக்கு விடை காண்பதே சிந்தனைப் பயிற்சி. இன்று சிந்தனை என்பது எளிய சொல். சிந்தனை என்ற சொல்லுக்கு உரிய முழுநிறைப் பொருள் பலருக்குப் புரிவதில்லை.

வரலாற்றுச் சுவட்டில் கலந்து வந்துள்ள தீமைகளைத் தொகுத்துக் கூறுவதைக் கூடச் சிலர் சிந்தனை என்கின்றனர். சிந்தனை என்பது குறையும் நிறையும் அறிந்து அளப்பது; குறையை மறப்பது; நிறையைப் போற்றுவது. நிறையைப் போற்றத் தெரியாத இடத்தில் குறை நீங்காது. அதுபோல் குறை மறக்கப் பெறாத இடத்தில் நிறை தோன்றாது. உலகியல் குறையும் நிறையும் கலந்ததே. குறையை நிறைவாக்குவதே சிந்தனை.

சிந்தனை என்பது வைரத்துக்குள் ஒளிந்து கிடக்கும் ஒளியைக் கடைந்து வெளிக்கொணர்வதைப் போல உயிரிடத்தில் ஒளிந்து கிடக்கும் அறிவாற்றல் திறனை வெளிப்படுத்துவது. இதற்குச் சுயசிந்தனை என்று பெயர். முன்னேயே தோன்றியுள்ள ஒரு கருத்தைத் தொடர்ந்து சிந்தனை தோன்றி அக்கருத்திற்குரிய முழுநிறைப் பொருளை வெளிப்படுத்துவது சுயசிந்தனை.

சிந்தனை வளர்ச்சியின்பாற்பட்டதாக, நிறையினைச் சார்ந்ததாக வளரும்பொழுது, மனித உலகத்திற்குப் புதிய செய்திகள் கிடைக்கின்றன. மனித சமுதாயம் அறிவில், கருத்தில், உணர்வில் முதுமையடைந்து எய்த்துப் போகாமல் ஓயாது உயிர்ப்பளித்துக் கொண்டிருப்பது சிந்தனையேயாகும். ஊற்றுவளம் நின்றாலும் ஆற்றின் நீரோட்டம் தடைப்பட்

டாலும் குட்டைகள் தோன்றும். அதுபோல், சிந்தனையற்ற சமுதாயம் தேக்கநிலை அடைந்துவிடும்.

சங்ககாலத்திலும், காப்பியக் காலத்திலும் தமிழ்ச் சமுதாயத்தில் சிந்தனைத் துடிப்பு இருந்திருக்கிறது. தேவாரக் காலத்திலும் கூடச் சிந்தனைத் துடிப்பு இருந்திருக்கிறது. ஆனால், அச்சிந்தனைக்கு எதிர் சக்திகளாக இருந்தவர்கள் அதாவது, சிந்தனை செய்ய மறுத்தவர்கள் அந்தச் சிந்தனையின் ஆற்றலைச் சிதைத்து விட்டனர். வெளிப்படையாகச் சிதைத்தால் மக்கள் எதிர்ப்பு ஏற்படும் என்று அஞ்சி அச்சிந்தனைக்கு செயலுருவம் கொடுப்பதற்குப் பதிலாக அப்பட்டமான வழிபாட்டுருவம் கொடுத்து விட்டனர்.

ஆக, சிந்தனை செய்து பழகுக. கண்ணாற் காணப் படுகின்ற காட்சியை ஒட்டிச் சிந்தனையைத் தொழிற்படுத்துக. படிக்கும் நூற் கருத்துக்களை விரிவாக்கும் வகையில் சிந்தனையை இயக்குக. செவிகளால் கேட்கும் செய்திகளை, உணர்ச்சி கலக்காமல் முதலில் சிந்தனைப் பட்டறைக்கு அனுப்பித் தூய்மை செய்து அறிவாக்குக. மனிதனுக்குள்ள ஒரே ஒரு சிறந்த இயல்பு சிந்தனைதான். சிந்திக்கத் தெரியாதவன் முழு மனிதனாதல் அரிது.

ஆகவே, சிந்தனையால், சொல்லால், செயலால் எல்லாம் அறங்கள் செய்யுங்கள்.

குறையை அகற்றி நிறை வாழ்வு பெற நாளும் தூய சிந்தனை செய்யுங்கள். தூய சிந்தனையை ஆக்கமாக வளர்த்துக் கொள்வதும், வாழ, வளர வழிகாட்டுவதும் நல்லோர்களின் பண்பு ஆகும்.

'சிந்தனை செய் மனமே' என்னும் இனிய பாடலும் நினைவுகூரத் தக்கது.

இன்பமே எந்நாளும், துன்பமில்லை.

மக்கள் அனைவரும் தூய சிந்தனை வளர்ச்சியும் செயலாற்றும் திறனும் கொண்டவர்களாகச் சிறப்புற வாழ வேண்டும்.

*மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்*
*இனந்தூய்மை தூவா வரும்.*

*அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து*
*இன்சொல னாகப் பெறின்.*

*பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
*அணியல்ல மற்றுப் பிற.*

## மனம்

நினைப்பு என்ற தொழில் இயல்பாக இருவகையானது. ஆனால் உலகியலில் ஒன்றென்றே கூறப்படுகிறது. அதாவது, ஏற்கெனவே தெரிந்த ஒன்றை மறந்து விட்டு, பின் நினைவு கூர்தலையே பெரும்பாலும் நினைவு என்று கூறுவது மரபாக இருந்து வருகிறது. நம்முடைய இலக்கிய உலகத்தின் கருத்தும் மிகுதியும் அதுவே. திருக்குறள் காமத்துப் பாலில்,

*உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்*
*புல்லாள் புலத்தக் கனள்* (1316)

என்று ஒரு குறள் உண்டு. தலைவன், தலைவியைப் பிரிந்திருந்த காலத்தில் நினைத்திருந்ததாகத் தலைவியிடம் கூறுகிறான். தலைவி, நினைத்து நின்ற நேரம் ஒழிந்த எஞ்சிய நேரத்தில் மறந்தீரே என்று கூறி அழுகிறாள். இதன் பொருள் என்ன? மறதியைத் தொடர்ந்து நினைப்பு வருகிறது. "பால் நினைந்தூட்டும் தாயினும்" என்ற மணி மொழிக்கும் இதுவே கருத்து.

ஆனாலும் மனத்தில் மாறாது நிற்கும் இயல்புக்கு நினைவு என்று பொருள் கோடல் தவறன்று. பழகிப் பிரிந்த இருவர் சந்திக்க நேரிடுகின்ற பொழுது "நினைவிருக்கிறதா?" என்று கேட்பதை நாம் அன்றாட வாழ்வில் காண்கின்றோம். நினைவைக் கொல்லும் மறதி, வாழ்க்கையை அழிக்கும் பெரும்பகையாகும். மறதித் தன்மையுடையவர்கள் எநத ஒரு காரியத்தையும் முறையாகச் செய்யமாட்டார்கள். மறதி, காரியங்களைக் கெடுக்கும்; நண்பர்களை இழக்கச் செய்யும். பொருளை இழக்கச் செய்யும். இத்தகைய கொடிய மறதியை அழித்து வெற்றி வாகை சூடுவது நினைவேயாகும். மறதியைப் புறங்காண, நினைவாற்றலை யடைந்து மகிழ என்ன செய்ய வேண்டும்? அதற்குரிய முயற்சி அரிதானது அல்ல; எளிதே!

தான் எண்ணிச் செய்யும் செயல்களில் ஒருமைப் பாட்டுணர்வுடன் ஈடுபட வேண்டும். அடுத்து, எதையும் எவ்வளவு இடர்ப் பாடுகள் இருந்தாலும் குறித்த நேரத்தில் குறித்த முறையில் செய்ய வேண்டும். காலம் தவறிச் செய்யும் கடமைகளும், முறை தவறிச் செய்யும் கடமைகளும், ஆர்வ எழுச்சியுடன்-இலட்சியத் துடிப்புடன் செய்யப் பெறாத கடமைகளும் மறதிக்குத் துணை செய்யும் களன்கள். இதுவரை, தெரிந்த ஒன்றை நினைவிற் கொள்ளவும் அல்லது மறதி வாராதிருக்கவும், வழிவகை கண்டோம்.

மனத்தின் அடுத்த மிக நுட்பமான தொழிற்பாடு எண்ணுதல் என்பதாகும். எண்ணுதல் நினைவிற்கு முந்திய தொழிற்பாடாகும். சிந்தனை, தொடர்ந்துவரும் தொழிற் பாடாகும். எண்ணுதல் என்பது ஒரு குறிப்பிட்ட காரியத்தை அடைய வேண்டும் அல்லது செய்யவேண்டும் என்று அலை வின்றி எண்ணுவதாகும். இன்று நம்மில் பலர், "நினைத்துக் கொண்டுதான் இருந்தேன். தவறி விட்டது; எப்படியோ தவறி விட்டது" என்று பல தடவை சொல்லி அழுகின்றனர்.

எப்படித் தவறிற்று என்பது கேட்டால் மீண்டும் விடை கிடைக்கும். "எப்படியோ தவறி விட்டது" என்பர். ஒரு சிலர், வேலை மிகுதியால் தவறி விட்டது என்பர். இது தவறு. வேலை மிகுதியால் காரியங்கள் தவற முடியாது. வேண்டு மென்றால் ஒத்திப் போடலாம்.

இங்கேயும் ஓர் ஆபத்து உண்டு. ஒத்திப் போடுதல் என்பது வேலை மிகுதியினாலும் உண்டு. சோம்பேறித் தனத்தினாலும் உண்டு. வேலை மிகுதியினால் ஒத்திப் போடுபவர் எண்ணிக்கை மிகக் குறைவு. காரியத்தின் பாலுள்ள அலட்சியப் பார்வையினாலும் சோம்பேறித் தனத்தினாலுமே பலர் ஒத்திப் போடுகின்றனர்.

எண்ணுதல் என்பது வாழ்க்கையின் வெற்றி அனைத்திற்கும், அடிக்கல் போல் அமைவதாகும். எண்ணத்தில் தெளிவும் உறுதியும் இருக்குமானால் காரி யங்கள் தவறா. இன்று பலர் அழுது புலம்புகின்றனர், ஏன்? நினைத்தபடி காரியங்கள் நடக்கவில்லையே என்று எண்ணத் தெரியாதவர்கள்—அதேபொழுது பழிதூற்றும் இயல்பினர் தங்களுடைய காரியக்கேட்டுக்கு அவர் காரணம், இவர் காரணம் என்று பிறர்மேல் பழிதூக்கிப் போடுவர். ஆனால் வள்ளுவர், ஒருவரின் வெற்றிக்கும் தோல்விக்கும் அவரவர் காரணமே தவிர மற்றவர்கள் அமைய முடியாது என்கின்றார். எண்ணியதை யாதொரு குறையுமின்றி எண்ணியபடியே அடையலாம் என்பது வள்ளுவர் கருத்து.

*எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்.*

எண்ணிய எண்ணியாங்கு பெற வேண்டுமென்றால் எண்ணத்தில் திண்மை யிருக்கவேண்டும். இன்று யாருக்குத் தான் எண்ணம் திண்ணியதாக இருக்கிறது. இன்று பலருக்கு நொய்ந்து கிடக்கிறது; சபலங்களால் சலித்துக் கிடக்கிறது;

தன்னயத்தால் தளர்ந்திருக்கிறது; சுகவுணர்வில் சோர்ந்து கிடக்கிறது. ஐயோ, பாவம்!

வயிறு பசிக்காது போனால் அவர்களுக்கு உணவைப் பற்றிக் கூட நாட்டமிருக்காது. இத்தகையோர் வாழ்கிறார்கள், அல்லர்; பிழைப்பை நடத்துகிறார்கள்; மற்றவர்க்கும் சுமை யாக இருக்கின்றனர். ஏன்? எண்ணத்தெரியாத காரணமே! ஏன் எண்ணத்தெரியவில்லை? வாழ்க்கைக்கு நோக்கம் கற்பித்துக் கொள்ளவில்லை. மனத்தை மட்டும் கடமை களைச் சுற்றி எண்ணப் பழக்கி விட்டால் இந்த உலகத்தில் நடவாதது எது?

மனம், மிக்க நுட்பமான ஓர் உறுப்பு, அது நுட்பத்தினும் திட்பமுடையது; காலத்தை—எல்லையைக் கடந்து செல்லும் தன்மையது. உலகத்தில் விரைந்து செல்லும் தன்மையன இரண்டு. ஒன்று மனம்; மற்றொன்று காற்று. இவ்விரண்டும் இன்றி வாழவே முடியாது. இவ்விரண்டும் வாழ்விக்கும் தகுதியும், கெடுக்கும் தகுதியும் உடையன.

மனம், பல்வேறு தொழில்களையுடையது. குறிப்பாக நினைப்பு என்பது மனத்தினுடைய மிகச் சிறந்த தொழில். மனித வாழ்க்கையில் நினைப்பு, பயனுடைய அகத்தொண்டு. நினைத்தல்-தொழில் ஒருவகையானது அல்ல. பல பொருள் தன்மையது. அறிவுப் பெருக்கத்திற்கு, கற்றலும் கேட்டலும் துணை செய்தலைப்போல, நினைத்தலும் துணை செய்யும். அதுமட்டுமல்ல. அறிவு வளர்ச்சிக்குக் கற்றல்—கேட்டலை விட நினைத்தல் மிக்க பயனைத் தருகிறது.

கற்றல்—கேட்டலின் மூலம் பெறும் அறிவு, என்ன இருந்தாலும் கடன் வாங்கிய பிழைப்பே. நினைத்தலின் மூலம் பெறும் அறிவே, உண்மை அறிவு. முன் இரண்டின் வழிப்பட்ட அறிவு, முற்றிலும் முழுமையாகி விடுவதில்லை. நினைத்தலின் மூலம் பெறும் அறிவே முழுமையான

அறிவாகும். கற்றல் கேட்டலின் மூலம் பெற்ற அறிவுக்கு மறதி நேரலாம். நினைப்பில் தோன்றிய அறிவுக்கு மறதியில்லை.

அதுமட்டுமா? கற்றல்-கேட்டலின் வழிப் பெற்ற, அறிவையும் நினைவு உயிர்க்கு நிலையானதாகச் செய்யும். உற்றுழி உதவச் செய்வதும் இந்த நினைவேயாம். சிலர் நிறையப் படித்திருப்பார்கள். அவர்கள் பேசிக் கொண் டிருக்கும் பொழுது திடீரெனத் தடவுவார்கள்-தட்டுத் தடு மாறுவார்கள்; தலையைச் சொறிவார்கள்; உதட்டைக் கடிப் பார்கள்; கையை உதறுவார்கள். தம்மில் எளியார் யாராவது பக்கத்திலிருந்தால் எரிந்து விழுவார்கள். இவ்வளவு அலங்கோலமும் எப்பொழுது? நினைவு கைகொடுக்காத பொழுது!

மேலும் நினைவுப் பண்பு நன்றியோடு தொடர்பு உடையது. அது போலவே சில சமயங்களில் தீமையோடும் தொடர்புடையது. ஏன்? தெளிவாகச் சொன்னால் நினைவு நல்ல வழியில் இயங்கும் பொழுது, நன்றி, பண்பாடு, சான்றாண்மை என்ற நன்னெறிகளில் படர்கிறது. அதுவே நெறியில்லா நெறியில் படருமானால் வன்கண்மை, கயமை ஆகிய புன்னெறிகளில் படர்ந்து தன்னையுடைய மனிதனை இம்மையோடன்றி, எழுமையும் நின்று அழிக்கின்றது.

மனம், வாழ்க்கையின் மையம். ஆம்! உடல் பெரியது தான்; கண்ணுக்குத் தெரியக்கூடியதுதான்; கால்கள் நடக் கின்றன; கைகள் செய்கின்றன; கண்கள் பார்க்கின்றன; வாய் பேசுகிறது. ஆயினும், சுதந்திரமாகவா? அவ்வவற்றின் விருப்பத்தின் அடிப்படையிலா? இல்லை, இல்லை! உள் நின்று இயக்குவது மனமே!

மனம் உயிரின் மிகச் சிறந்த கருவி. ஆனாலும், உயிர், மனத்தை எடுத்துப் பயன்படுத்துவதைப் பொறுத்திருக்கிறது. மனம் உயிரின் நல்வளர்ச்சிக்கும் துணை செய்யலாம்; வீழ்ச்சிக்கும் துணை செய்யலாம்: ‘மனம் போல வாழ்வு’

என்பது அனுபவ வாக்கு. ஏன்? மனம் உடையவனே மனிதன். மனிதன் என்ற சொல்லே மனத்தின் அடிப்படையில் வந்தது என்று அறிஞர் கூறுவர்.

ஒரு மனிதனின் மனம் எப்படி இருக்கிறதோ, அது போல அவன் வாழ்வான். மனத்தில் கறை யிருந்தால் வாழ்க்கையில் கறை இருக்கும்; மனத்தில் கள்ளம் இருந்தால் வாழ்க்கையில் கள்ளம் இருக்கும். மனத்தில் கரவு இருந்தால் வாழ்க்கையில் சூது இருக்கும். மனத்தில் காழ்ப்பு இருந்தால் வாழ்க்கையில் கலகம் இருக்கும்: மனத்தில் ஆத்திரம் இருந்தால் வாழ்க்கையில் அடி, உதை இருக்கும். இதுவே இயற்கையின் நியதி.

ஒரோவழி, மனமும் செயலும் மாறுபடுவதும் உண்டு. அந்த மாறுபாடு தற்காலிகமானதே தவிர நிலையானதன்று. அது நடிப்பு, விளைவு, செயலின் அடிப்படையில் அமையாது, மனத்தின் அடிப்படையிலேயே அமையும். மனம் அன்பினைப் பற்றுமானால் வாழ்க்கை அமைதியைத் தழுவும்! மனம் அமைதியைத் தழுவுமானால் வாழ்க்கை அரவணைப்பில் நிகழும். வாழ்க்கை வளர்வது என்பது ஒருநாளில் திடீரென நிகழக் கூடியதல்ல.

வாழ்க்கையென்ற மாளிகையைப் பல நாள் முயன்று கட்ட வேண்டும். நாள்தோறும் வாழ்க்கையைக் கூட்ட வேண்டும். கூட்ட வேண்டுமென்று குறிப்பிடுவது வசதியை அல்ல. நாள்தோறும் வீட்டைக் கூட்டுவது (பெருக்குவது) என்ற வழக்கு இருக்கிறது. கூட்டுவதன்மூலம் என்ன நிகழ்கிறது? தூய்மையற்ற குப்பை அகற்றப் படுகிறது; தூய்மை சேர்க்கப்படுகிறது; ஒளி ஊட்டப்படுகிறது; இன்ப நலம் இணைக்கப்படுகிறது.

அதுபோலவே வாழ்க்கையில் நாள்தோறும் மனத்தைக் கூட்டுதல் நடைபெற வேண்டும். நேற்றைய வாழ்க்கையின் நடைமுறையில் மனத்தில் சேர்ந்த தூய்மைக் கேடு

அகற்றப்பட வேண்டும். நேற்றுக் கூட்டப்பெற்ற வீட்டில் எப்படி இன்று குப்பை வந்து சேர்ந்ததோ, அதுபோல நம்முடைய வாழ்க்கையிலும் மனத்தில் தீயன சேர்தல் இயல்பு. அவற்றை, நாள் தோறும் அகற்றி நல்லன சேர்த்துக் கொள்ளுதல் நல்ல வண்ணம் வாழுதற்கு அடிப்படையாகும்.

வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய அறங்கள் பலப்பல. அவை ஒவ்வொன்றையும் தனித்தனியே முயன்று அடைதல் எளிதன்று. ஆனால், மனத்தூய்மை என்ற பேரறத்தை நாம் அடைந்து விட்டால் அவ்வழி மற்ற அறங்களும் குண நலன்களும் வாழ்க்கையில் எளிதில் வந்து அமையும்.

ஒரு சின்னஞ்சிறிய புகைவண்டி நிலையத்திற்குச் சென்றால், அங்கிருந்து நாட்டின் பல்வேறு ஊர்களுக்கும் நேரிடையாகப் பயணத்தைத் தொடங்க முடியாது. ஆனால், ஒரு புகைவண்டிச் சந்திப்பு நிலையத்துக்குச் சென்றால் அங்கிருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள ஊர்களுக்கும் பயணம் மேற்கொள்ள இயலும்.

நல்லறங்களின் சந்திப்பு எது? மனத்தூய்மை. மனத் தூய்மை என்ற ஒரு சிறந்த பண்பாட்டின் வழியாகப் பல்வேறு பண்பு நலன்களை நாம் பெற முடியும்.

திருவள்ளுவர், மனத்தூய்மை என்ற கொள்கையில் ஆழமான நம்பிக்கையுடையவர். மனத்தூய்மையில்லாது செய்யப் பெறுகிற அறங்கள் அறங்களல்ல. அவை ஆரவாரத் தன்மையான—வெளிப்பகட்டு என்று திருவள்ளுவர் மறுக்கின்றார்.

சிலர், வீட்டிற்கு வெளியே வெள்ளையடிப்பர். அங்ஙனம் செய்வது வாழ்வதற்காக அல்ல. மற்றவர்கள் மெச்ச வேண்டும் என்பதற்காக! ஆனால், அந்த வீட்டிற் குள்ளே சுவர்களில் ஏராளமான சந்து பொந்துகளும் அவற்றுக்குள்ளே உயிர் குடிக்கும் நச்சுப் பூச்சிகளும் இருக்கும்.

அதுபோல, இன்று பலர் மனத்தில் கறுப்பு வைத்து வேளிவேடம் புனைந்து நாடகமாடுகின்றனர்; நல்லனபோலக் காட்சியளிக்கும் தீயனவற்றைச் செய்கின்றனர். இவை யெல்லாம் எப்படி அறமாக முடியும்?' இதனைத் திருவள்ளுவர்,

> மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
> ஆகுல நீர பிற

என்றார்.

மனிதனுக்கு இயற்கை துணை செய்வதைப் போல வேறு எதுவும் துணை செய்வதில்லை. மனிதன் இயல்பில் குறையுடையவனாக இருக்கிறான். ஆனால், அவனுடைய குறையை நிறை செய்யப் பலப்பல வழிகளை இயற்கை அளித்திருக்கிறது. ஐம்பொறிகள் குறையை நிறைவு செய்யும் வாயில்களேயாம்.

ஆனால், பலர் அறியாமையின் காரணமாக, பொறி களைக் குற்றவழிப்படுத்துகின்றனர்; நிறை அழிகின்றனர். ஐம்பொறிகளும் அறிவின் வாயில்கள். ஒரோ வழி, தொடர்ந்து வாழும் உயிர்க்கு ஏற்படும் களைப்பை மாற்றுவதற்காகக் களிப்பினை நுகரும் வாயில்களாகவும் பொறிகளை இயற்கை அமைத்துத் தந்தது. அது மட்டுமன்று. பொறிகளால் மட்டுமே துய்க்கப்படும் இன்பம் அல்லது களிப்பு செழுமையானது அல்ல.

பொறிகள் வாயிலாகப் புலன்களுக்குச் சென்று துய்க்கும் உணர்வினைத் தரப்படுத்தித் துய்க்கும் பொழுது மகிழ்வு, இன்ப மகிழ்வு ஆகிறது. அத்தகைய மகிழ்வு உயிர்க்கு ஆக்கம் சேர்க்கின்றது. இன்ப அன்பிற்கு வாயிலாக அமைகின்றது. 'ஐம்புலன்கள் ஆர' என்பார் மாணிக்க வாசகர். இத்தகைய துய்ப்பில் உடல் வலிவு பெறுகிறது; வனப்புப் பெறுகிறது. உயிர்க்குரிய குறையை நிறைவு செய்யும்

வாயிலில் முதன்மையானது கல்வி. உடலுறுதிக்கு உணவும், உயிர் உறுதிக்குக் கல்வியும் இன்றியமையாதன.

ரோமாபுரிப் பேரரசன் ஒருவன் தன்னுடைய நூலகத்தின் வாயிலில் "உயிர் மருந்து நிலையம்" என்று பெயர் எழுதி அமைத்தனன். உடலுக்குப் பசி ஒருவகைப் பிணியேயாம். தமிழ் இலக்கிய உலகம் "பசிப்பிணி" என்றே கூறும்.

உடற்பசிக்கு உணவளிப்பவனைப் "பசிப்பிணி மருத்துவன்" என்று புறநானூறு வாழ்த்தும். அதுபோல வாழும் உயிர்க்கு அறிவுப்பசி இருத்தல் வேண்டும். இந்தப் பசிக்குரிய கல்வியை வழங்குபவனை ஆருயிர் மருத்துவன் எனல் மிகையன்று.

திருவள்ளுவர் உயிர்க்கு இன்றியமையாத, கற்றல் கடமையினை உடன்பாட்டிலும் உணர்த்துகின்றார்; எதிர் மறையிலும் எடுத்துக் காட்டுகின்றார். மனிதனுக்குக் கண்ணிற் சிறந்த உறுப்பில்லை. மனிதன் கண்ணினால் பெறும் பயன் ஒன்றல்ல; பலப்பல. மனிதனுடைய அறிவு வாயில்களில் கண்களே தலையாயவை.

கண்கள் தாம் காணும் காட்சியின் மூலம் உயிர்க்கு அறிவைச் சேர்க்கிறது. நூல்களைக் கற்கப் பயன்படும் ஒளி தந்து உயிர்க்கு அறிவைச் சேர்த்துக் கொள்ளத் துணை செய்கிறது. சிறந்த காட்சிகளைக் கண்டு களித்து மகிழத் துணை செய்கிறது. ஏன்? ஒரு மனிதனை இன்னொரு மனிதனோடு அல்லது பால் வேறுபட்ட பிறிதோருயிரோடு அன்பு வழியில் இணைத்து இன்பம் சேர்ப்பதில் கண்தானே முக்கியமான பங்கு வகிக்கிறது!

இத்தகைய அருமையான கண்கள் சிலரிடத்துப் புண்களாக விளங்கிவிடுவதைத் திருவள்ளுவர், இடித்துக் காட்டத் தவறவில்லை. யாருக்கு எப்பொழுது கண்கள் புண்களாகின்றன? கல்லாதான் முகத்தின் கண்கள் புண்கள் என்கிறார். ஏன்?

கண் வழியாக உயிர் எத்தகைய பேறுகளைப் பெற வேண்டுமோ அவைகளைப் பெறாத, அதற்கு மாறான கல்லாதான்கண்கள் துன்பங்களைச் சேர்ப்பதால் புண் என்றார். இது திருவள்ளுவர் கல்வியின் அவசியத்தை எதிர்மறையால் உணர்த்தியதாகும்.

அடுத்து, உடன்பாட்டில் உணர்த்தும் குறள் ஒன்றும் கவனத்திற்குரியது. 'கற்க' என்று ஐயத்திற்கிடமின்றி ஆணை யிடுகின்றார். ஆம்! உண்ணும் பழக்கத்தை மனிதன் மேற் கொண்டிருப்பதைப் போல நாள்தோறும் நல்ல நூல்களைக் கற்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

எத்தகைய நூல்களைக் கற்பது? கற்கும் நூல்கள் இரு வகையின. ஒன்று கற்கும் பயிற்சியைப் பெறக் கற்கும் புத்தகங்கள். இவைகளே பள்ளிகளின்—கல்லூரிகளின் பாடப் புத்தகங்கள்! அடுத்து, உயிர்க்கு நலம் சேர்க்கும் நூல்களைக் கற்றல் பிறிதொரு வகை.

இத்தகைய நூல்கள் மனிதனுக்கு மனிதன் மாறுபடலாம். இயல்பில் மனிதர்க்குச் சில குறைகள் உண்டு. இக்குறைகள் மனிதர்க்கு மனிதர் மாறுபடுவது இயற்கை. ஆதலால், ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உயிர்ச் சார்பான உள்ளத்தின் குற்றங்குறை யறிந்து அக்குற்றங் குறைகளை நிறைவு ஆக்குதற்குரிய நூல்களாகத் தேர்ந்தெடுத்துக் கற்றல் வேண்டும்.

தன்னிடம் உள்ள குற்றங்கள் நீங்குகிறவரையில் கற்க வேண்டும். குற்றங்களினின்று நீங்கி நிறை நல்வாழ்க்கைக்கு வந்த பிறகு, மீண்டும் பழக்க வாசனையால் பழைய வாழ்க்கைக்குப் போகாமல் நிறை நல்வாழ்க்கையில் நிலைத்து நிற்க வேண்டும். இதனைத் திருவள்ளுவர்,

*கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக*

என்று மனித குலம் வாழ்க்கை மாளிகையைக் கட்டுதற்குரிய வழியைக் காட்டுகின்றார்.

*தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறும் அறிவு.*

*தாமின் புறுவது உலகின் புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந் தார்.*

## கல்விக்குரிய நூல்கள்

வாழ்க்கைக்கு உண்ணுதல் அளவுக்குக் கற்றல் இன்றியமையாத கடமை. இல்லை, உண்ணலினும் சிறந்தது கற்றல். உண்ணல் உடலை வளர்க்கிறது; உயிர் வாழ்க்கைக்குத் துணை செய்கிறது. கற்றல் உயிர்க்கு ஊட்டம் தருகிறது; உடல் நலம் பேணுவதற்கும் துணை செய்கிறது. உணவை ஒரோவழி மருந்தென்பாரும் உண்டு.

ஆனால், கல்வி, உயிரின் அறியாமையை நீக்கும் அருமருந்து. சிறந்த நூலகள் தொகுக்கப் பெற்ற நூலகத்திற்கு 'உயிர் மருந்தகம்' என்று ஆன்றோர் வழக்கு உண்டு. ஆதலால், உயிர்க்குறை நீங்கி நிறைநலம் பெற்று வாழ விரும்புவோர் நல்ல நூல்களைத் தேடிக் கற்க வேண்டும்.

நல்ல நூல்கள்...! என்ன இலக்கணம்...? நத்தையிலிருந்து முத்து பிறக்கலாம். சேற்றில் செந்தாமரை தோன்றலாம். ஆனால், நல்ல நூல்கள் நல்ல மனிதர்களிடத்தில்தான் தோன்றும்.

சிந்தனையில், சீலத்தில் சிறந்தவர்களாலேதான் நல்ல நூல்களைத் தோற்றுவிக்க முடியும். நல்ல நூலாசிரியன்

புலமையுடையவன் மட்டுமல்ல; எழுதத் தெரிந்தவன் மட்டுமல்ல. புலன்களில் அழுக்கற்றவனாக இருக்க வேண்டும். இன்று பொறிகளிலேயே அழுக்கைச் சுமந்து திரிபவர் பலர், இலக்கியக் கர்த்தாக்கள் ஆகிவிட்டனர். இந்தக் கொடுமை அவ்வளவு பெரிதல்ல. பொறிகளில் அழுக்கு வெளிப்படையானது.

ஆனால், பொறிகளில் தூய்மை காட்டிப் புலன்களின் அழுக்கைச் சுமந்து நடமாடுவோரை நல்ல இலக்கியப் படைப்பாளர்கள் என்று கூறுவது இழுக்கேயாம். ஆதலால், படித்தற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுக்குமுன் அந்த நூலின் படைப்பாளனைப் பற்றியும் அறிந்துகொள்வது நல்லது. இது பொதுவிதி.

ஆனால், நாற்றமுள்ள நத்தையிலிருந்து முத்துப் பிறக்க வில்லையா? தமது நிலையை இயல்பில் உணர்ந்து கழிவிரக்கம் கொண்டு வளர்ந்து உய்ய வேண்டும் என்ற பேரார்வத்தில் இலக்கியம் செய்யும் சிந்தனையாளர்களும் உண்டு. அவர்களுடைய வாழ்க்கை நமக்குப் படிப்பினை யல்ல. அவர்கள் படைத்த இலக்கியங்களே நமக்குப் படிப்பினை.

உதாரணமாகத் தமிழகத்தில் அருணகிரிநாதரை எடுத்துக்கொள்ளலாம். திருப்புகழ் பாடத் தொடங்கிய அருணகிரிநாதரின் முன்னைய வாழ்க்கை, இரங்கத்தக்க வாழ்க்கையே! ஆனாலும், தமது இரங்கத்தக்க நிலையை அவர் உணர்ந்ததைப் போல வேறு யாரும் உணரவில்லை. இத்தகையோர் படைப்பு, சிறப்பு விதி.

நூல்களைப் படித்தலைவிட, படித்தற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுப்பதிலே வாழ்நாளில் பாதி முடிந்து விடுகிறது என்பார் ரஸ்கின். நூல்களைப் படித்தலும் தேர்ந்தெடுத்தலும் ஒரே வகையா?

நிறைய நூல்களைப் படிக்கும் வழக்கமுடைய பிஃரான்சிஸ் பேக்கன் "பல நூல்கள் படிக்க!" என்றார்; "சில நூல்கள் படித்து மகிழ!" என்றார்! "மிகச் சில நூல்களே படித்துச் சீரணித்துக் கொண்டு வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகத் தக்கன" என்றார்.

திருவள்ளுவர் படித்தற்குரிய நூல்களைப் பொதுவாக வலியுறுத்தவில்லை. அவர் நூலைப் படிக்கும் மனிதனுடைய தகுதிக்கேற்றவாறு—மனநிலைகளுக்கேற்றவாறு நூல்களைத் தேர்ந்தெடுக்கும்படி வழி காட்டுகிறார். அது என்ன வழி? என்பதை அடுத்து ஆராய்வோம்.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

## கற்பதற்குரிய நூல்கள்

நூலாசிரியனாதல் எளிதன்று. பழுத்த மனத்தை உடைய சான்றோர்களே சிறந்த நூலாசிரியராக முடியும். உயர்ந்த நூலாசிரியர்கள் எந்த நாட்டிலும் மலிவான சரக்காக இருக்க முடியாது. எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் எண்ணிக்கையில் வளர்ந்திருப்பது அறிவினுடைய தர வீழ்ச்சியைத்தான் நினைவூட்டும்.

திருக்குறளை எழுதிய திருவள்ளுவரும் நூலாசிரியர், கூளப்பநாயக்கனின் காதல் எழுதியவரும் நூலாசிரியரென்றால், இது என்ன நியாயம்? திருக்குறளும் ஒரு நூல், கூளப்பநாயக்கனின் காதலும் ஒரு நூலென்றால், அங்ஙனம் சொல்பவரின் அறியாமையை என்னென்பது?

ஓதுபவரின் உள்ளத்தை உருக்கி உயர்த்தும் திருவாசகமும் ஒரு நூல். தீமையைக் கண்டிக்கும் பாவனையில் சிருங்கார ரசத்தையும் சேர்ந்து, ஊடே இரண்டு மூன்று பக்திச் சொற்களையும் சேர்த்தாலே அந்த நூல் பக்தி நூலாகி விட முடியுமா? திருவாசகத்துக்குப் பக்கத்தில் அதை வைத்து எண்ணத்தான் செய்யலாமா?

உணவு, உண்பதில் நாவுக்கினியதா, உடலுக்கினியதா, என்று நன்கு ஆராய்ந்து உடலுக்கினிய உணவையே தேர்ந்தெடுக்க வேண்டும். இயலுமாயின் நாவுக்கும் இனியதாக அமைந்து உடலுக்கும் நலம் பயப்பதாயின் அது முழுமையான நல்ல உணவு.

அதுபோல் கற்க இனிய மொழிநடையும், உயிர்க்கு நலஞ் சேர்க்கும் உயர் கருத்துமுடைய நூல்களாக இருப்பன நல்லவையாம். இத்தகைய பெருஞ் சிறப்புப் பொருந்திய நூல்களுள் தலையாயது திருக்குறள். திருக்குறளை உள்ளவாறு கற்போர் உள்ளம் எப்பொழுதும் தரத்தில் உயருமே தவிரத் தாழாது.

திருக்குறளோடு ஒப்ப வைத்தெண்ணப்படும் நூல்கள் வேறு சிலவும் தமிழில் உண்டு. நம்முடைய சைவ நாயன்மார்கள் அருளிச் செய்த திருமுறைகள் தேனினும் இனிய சுவையுடையன. அறியாமை இருளை அகற்றும் அகல் விளக்காகவும், ஞானப் பேரொளியை வழங்கி வாழ்விக்கும் அருமருந்தாகவும் திகழ்வன.

சேக்கிழார் தந்த திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணத்தைப் போன்றதொரு நூல் வேறு எம்மொழியிலும் தோன்றவில்லை. 'புராணம்' என்ற பெயரிருப்பதால் யாரும் அந்த நூலின் சிறப்பினைப் பற்றி ஐயுற வேண்டியதில்லை,

பெரிய புராணத்தில் வருகிற அடியார்கள், தம் வாழ்க்கையில் குறிக்கோள் வைத்துக் கொண்டு போராடியவர்கள். பெரிய புராணம் அன்பின் பிழிவு; தொண்டின் சாறு. நூல்முழுதும் திருவருட் பதிவு நிறைந்திருக்கின்றது.

திருவரங்கத்து அமுதனின் திருவருளில் ஆழக்குளித்த ஆழ்வார்களின் அமுதத் தமிழ் மிக உயரியது. அந்தத் தமிழ் அமரகுலத்துச் சுவையினும் விஞ்சிய சிறப்புடையது. இத்தகைய நூல்களை நாள்தோறும் முறையாகக் கற்பது—திரும்பத் திரும்பக் கற்பது, நினைந்து நினைந்து கற்பது, உணர்வது வாழ்க்கையை உயர்த்தும்.

இதுபோல ஆங்கிலத்தில் ஜேம்ஸ் ஆலன் இயற்றிய வாழ்வியல் நூல்களும், மார்க்கஸ் அரேலியஸ் எழுதிய நாட்குறிப்புகளும் வாழ்க்கையை உயர்த்தும் உயரிய நூல்கள்.

தமிழ் இலக்கியங்களில் சங்க காலத்து இலக்கியங்கள் விழுமியனவே. அவற்றில் அகத்துறை இலக்கியங்கள் இருந் தாலும் அவை மிகவுயர்ந்த அகத்துறை இலக்கியங்கள். காப்பி யங்களில் இளங்கோவடிகளின் சிலம்பு சாலச் சிறப்புடையது. இத்தகைய நூல்களைத் தமிழராய்ப் பிறந்தோர் படிக்காமலும், படித்து உணராமலும், உணர்ந்து செயற்படாமலும் வாழ்ந்து மடிவது வம்பேயாம்—வீணேயாம்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

## வாழ்க்கை என்ற மாளிகை

**வா**ழ்க்கை மிக மிக அருமைப்பாடு உடையது. "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்பது அருள்வாக்கு. உடல்கொண்டு உண்டு, உறங்கி நடமாடுவ தெல்லாம் வாழ்வாகி விடாது. வாழ்க்கை உயிர்ப்புள்ளது; வளர்ச்சி பொருந்தியது. உயிர்ப்பும் வளர்ச்சியும் இல்லாத வாழ்க்கை வசை நிறைந்த வாழ்க்கை.

வாழ்க்கை நிறைந்த அறிவியலின் பாற்பட்டது; நிறைந்த அருளியற் சார்புடையது. வாழ்க்கையின் ஆழத்திற்கும் அகலத்திற்கும் உயர்வுக்கும் எல்லையில்லை. எப்படி இறைவனுடைய அடியும் முடியும் காண முடியாதனவோ, அது போலவே, வாழ்க்கையின் வளர்ச்சிக்கு முடிந்த முடிபு மில்லை; வரையறுக்கப் பட்ட ஒரு நிலையுமில்லை.

உலகில் வளமுள்ள குளம், என்றும் பயன்படும்; தூய்மையாக இருக்கும். அதற்கும் அதனைச் சார்ந்தோருக்கும் என்றும் இன்பம் உண்டு. ஏன்? அது புண்ணியத் தீர்த்த மாகவும் ஆகும். ஆனால், ஊற்று வளமில்லாத குளமாக இருக்குமானால் குட்டை என்று பெயர் மாற்றம் பெறும்; தூய்மை கெடும்; தொல்லை கொடுக்கும். அதனால் அது தூர்த்து மூடப்பெறும்.

அதுபோல மேலும் மேலும் சிந்தனை ஊற்றும், செயல் வளமும் உடையோர் வாழ்க்கை, பயன்பெறும். அத்தகை யோர் வாழ்க்கை, பிறந்த இனத்திற்கும், நாட்டிற்கும், பேசும் மொழிக்கும் நிறைந்த பெருமை சேர்க்கும். ஆனால் சிந்தனை செய்யாமல்—சிந்தனை செய்ய மறுத்து, உண்டு உடுத்து வாழும் விலங்கியல் வாழ்க்கை யுடையோரின் வாழ்க்கை அவர்களுக்கும் துன்பம் தரும்; மற்றையோருக்கும் துன்பம் தரும்.

***சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.***

***எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.***

***அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.***

## மனம் ஒரு மாளிகை

திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள் தமிழினத்தின் தனிமறை; உலகப் பொதுமறை; அறநூல்; முழுதுறழ் அறநூல்; உலகியலை நெறிப்படுத்திக் காட்டிய முறை நூல்; வீடு பற்றி விளக்கம் தந்த இன்பநூல்.

திருக்குறள் சமயச் சார்பற்ற நூல். ஆனாலும் சமய நெறி தழுவிய நூல். சார்பு வேறு; தழுவுதல் வேறு. சார்பு என்பது ஒன்றில் பற்றும், பிறிதொன்றில் காழ்ப்பும் காட்டுவதாகும். அதனாலேயே சார்பின்றி வாழ வேண்டும் என்பதை,

*சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்*
*சார்தரா சார்தரும் நோய்*

என்று குறள் கூறுகிறது. யான், எனது என்ற சார்புகளின் காரணமாக மனிதன் தன்னலச் சுழலில் சிக்குகின்றான். இந்தச் சார்புகளிலிருந்து மனிதன் விடுதலை பெற்றாலேயே பொதுமை தோன்றும்; மனித இனத்தை அரித்து அழிக்கும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்பவனாகிய தீமைகள் அழியும். ‘எல்லோரும் வாழ்க, இனிதே வாழ்க’ என்ற பொதுமை தோன்றும். திருக்குறள் இத்தகைய நெறியினைச் சார்ந்த பெருநூல். ஒப்பற்ற ஒரு நூல்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய பொதுமை நூலைத் தந்த பெருமையை என்னென் போம்! இன்று சிதறிக் கிடக்கும் நாடுகளை—கண்டங்களை விந்தை மிகு விஞ்ஞான உலகம் இணைத்திருக்கிறது. விண்வெளிப் பயணமும், வானொலி நிழற்படக் காட்சியும், தொலைபேசியும் நாடுகளை இணைத்து நெருக்கத்திற் கொண்டு வந்துள்ளன. ஆனால், மனித நெஞ்சங்களை இணைப்பதில், உலகப் பொதுமை காண்பதில், இன்னமும்

மனித சமுதாயம் வெற்றியடையவில்லை. அதனாலன்றோ இன்னமும் உலகத்தை விட்டுப் போர்ப் பதற்றம் நீங்கினபாடில்லை. ஏன்? உலகத்தை விட்டு என்ன? தனி மனிதனை விட்டும் போர் உணர்ச்சி நீங்கினபாடில்லை.

ஒவ்வொரு மனிதனும் யாரோ ஒருவருடன் போராடிக் கொண்டிருக்கிறான். வலிமையற்றவன் கூடத் தனக்குள் முணுமுணுத்து எதிர்ப்பைப் பேசி முடிக்கிறான். பொழுது விடிந்து பொழுது போனால் 'உயர, தாழ' என்று உறுமு கின்றான். இவன் உயர்ந்தால் கவலையில்லை. ஆனால், உயர இருப்பவனைத் தன் நிலைக்கு இறக்கித் தன்னை உயர்த்திக் காட்ட அல்லவோ விரும்புகின்றான்.

இத்தகு வேடிக்கை உலகத்தை இன்று பார்க்கிறோம். திருவள்ளுவர் இந்த விகார உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு விளங்கிய சான்றோர். பொறிகளாலும் புலன்களாலும் சிறந்து விளங்கிய சீலம் நிறைந்தவர். அதனாலன்றோ எந்த ஒரு சார்புப் பற்றுமின்றிப் பொதுமையறம் செய்தார். ஆயினும், அவருடைய நூல் சிறந்த சமயம் தழுவியது.

சமயம் என்பதே பொதுமையான தத்துவம். சார்பு களில் சிக்கிச் சுழன்ற மனிதர்களே சமயம் என்ற உயர்ந்த தத்துவத்தை—வாழ்வியலைச் சார்புகளுக்குள் சிக்க வைத்து, சழக்கு நெறியாக்கி உண்மையான சமயத்திற்குச் சமாதி கட்டி விட்டனர். சமயத் துறையில்-சமய எதிர்ப்பாளர்கள் சமயத்துக்குச் செய்த கேடுகளை விட சமயச் சார்பாளர்கள் செய்த கேடுகள் அளப்பில. அம்மம்ம, நினைத்தாலும் கொடுமை! வரலாறு இவர்களை மன்னிக்காது.

சமயம் என்பது மனிதனை — அவனுடைய பொறிகளை — அவனுடைய புலன்களை நெறிப்படுத்தி-செழுமைப்படுத்திப் பக்குவப்படுத்துவதேயாகும். இதை யார் செய்தால் என்ன? எந்த மொழி செய்தால் என்ன? ஆனால், இன்றோ சமயம் என்பது சாதிச் சழக்குகளுக்கு ஆட்பட்ட

தாகவும், சமுதாயத்தின் மேடு பள்ளங்களைத் தோற்றுவித்துப் பேணிப் பாதுகாப்பதாகவும் விளங்கும் கொடூர நிலையைப் பார்க்கிறோம்.

நந்தமிழ் மக்களோ இறைவனை மன்றில் ஆட வைத்தனர். மன்றம் பொது இடமன்றோ? பொருள் மாயம் செய்வோம் என்று கருதி, பொதுவிலும் ஆட வைத்தனர். இன்று நம்முடைய திருக்கோயில்கள் பொதுவில் விளங்கும் புனிதத் தன்மையை இழந்து கிடக்கின்றன.

திருக்குறள் காட்டும் சமயம், காழ்ப்புகளைக் கடந்த கவினுறு நெறி; மேடு பள்ளங்களைக் கடந்த மேலான நெறி; ஒன்றே குலம் என்ற உத்தம நெறி; தடைகளைக் கடந்த பொது நெறி ; இன்ப நெறி; வையத்துள், வாழ்வாங்கு வாழ வைக்கும் சமயநெறி. இத்தகு பொதுமைச்சமயத்தில் திருக்குறள், உலகில் எந்தச் சமய நூல்களையும் விட மேம்பட்டு விளங்குகிறது.

இறைவனைத் திருவள்ளுவர் வாழ்த்துகிறார். நம்மையும் வாழ்த்தத் தூண்டுகிறார். ஆனால், அவர் இறைவனைக் கண்டு காட்டும் முறை, பொதுமை முறை என்பதை மறுக்க முடியாது.

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு*

என்பதுகுறள். உலகின் எல்லா மொழிகளின் எழுத்துக் களுக்கும் அகர ஒலி நேரிடையாகவோ மறைமுகமாகவோ அடிப்படை ஒலியாக—மூலமுதலாக விளங்குகிறது. அதுபோல, உலகின் எல்லா உயிரினங்களுக்கும் இறைவனே அடிப்படை ஆற்றலாக, ஆதாரமாக விளங்குகிறான் என் பதன்மூலம் உலக உயிர்களின் வழிபாட்டியக்கத்தை, மனிதகுல ஒருமைப்பாட்டியக்கத்தை வாயார வாழ்த்தித் தொடங்கி வைக்கிறார். மனிதகுல ஒருமைப்பாடு பேச்சாலும் எழுத்தாலும் மட்டும் உருவாகி விடுவதன்று; நேர்மை நிறைந்த வாழ்க்கையினாலேயே மனிதகுல ஒருமைப்பாடு

தோன்ற முடியும். நேர்மை என்ற சொல்லை 'நேர்தல்' என்ற மூலச் சொல்லின் ஆக்கமாகக் கருதலாம்; அதாவது ஒருவருடைய உணர்வும் இன்ப நலனும் மனித குலத்தின் உணர்வோடு, இன்ப நலனோடு மாறுபாடு கொள்ளாமலும், தீங்கு பயவாமலும் ஒத்து, நேராக விளங்குதலே நேர்மையாகும்.

இத்தகைய நேர்மை மிக்க வாழ்க்கையே சமய வாழ்க்கையினுடைய அடித்தளமாகும். இதனை, அகர எழுத்தை எடுத்துக் காட்டியதன் மூலம் திருவள்ளுவர் விளக்குகிறார். அகர எழுத்து ஒரு பகுதி வளைந்து கிடந்தாலும், வளைந்த வட்டத்தைத் தாண்டி ஒரு நேர்க்கோட்டில் முடிகிறது. அப்பொழுதே 'அ' முழுதாக அமைகிறது. அதுபோலவே மனிதன் சார்புகளின் காரணமாக வளைந்து கிடக்கும் வாழ்கையினை நேராக்கிக் கொள்ளுதலை அகரத்தை எடுத்துக் காட்டுதலின் மூலம் விளக்குகிறார். சமுதாயப் பொதுநெறிச் சார்பே சமய நெறி என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

இறைவனை, திருவள்ளுவர் ஐயத்திற்கு இடமின்றிச் சார்பற்ற உலகப் பொதுப் பொருளாகத் தெளிவாகக் காட்ட விரும்புகிறார். ஆதலால்,

> வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
> யாண்டும் இடும்பை இல

என்று ஓதுகிறார். இறைவன் வேண்டுதல் இல்லாதவன். அவனுக்கு இன்ன சாதி பிடிக்கும் என்பதும் அவனுக்கு இன்ன மொழி பிடிக்குமென்பதும், அவனுக்கு இன்ன சோறு பிடிக்குமென்பதும், இன்னதைக் கொடுத்தால் இன்னது தருவான் என்பதும் பொய்ம்மை; மனிதர் செய்து வைத்த சூது. அவன் எல்லாவற்றையும் கடந்தவன். வைதாரையும் வாழ வைப்பவன். இதுவே உயர்ந்த சமயம். சமுதாயத்தைத் தழுவி நிற்கும் சமயம். வேண்டுதலும், வேண்டாமையும் உடைய மனிதன் பிரிவினைகளை விரும்புவான்;

வேற்றுமையை விழைவான்; பொல்லாத வேற்றுமைக்குப் போலிக்காரணங்கள் கூறி நியாயம் காட்டுவான். சமயம் எல்லாவித வேற்றுமைகளையும் கடந்தது. மனித உலகத்தின் ஈடேற்றமே சமயத்தின் இலட்சியம். சமயம் சமுதாயப் பொது நெறி.

மலர், மணம் பரப்புவது; மணம் உலக உயிர்களின் பொதுமையான நுகர் பொருள். இறைவன் மலர்மிசை மேவுகின்றான். உலகப் பொதுச்சின்னமாக இன்று விளங்கு வது மலரேயாகும். இறைவன் மலரில் மேவுகின்றான் என்பதன் மூலம் சமுதாயத்தைத் தழுவிய சமய நெறியைக் காட்டுகிறார் வள்ளுவர். புறத்தில் கிடக்கும் மலர் மட்டுமல்ல, வாழும் தகுதி படைத்த மனித இனம் அனைத்திற்கும் நெஞ்சுண்டு. ஆனால் நெஞ்சு நெஞ்சாகவா விளங்குகின்றது. கல்லாக, முள்ளாகக் காடாக மேடாகக் களர் நிலமாகவன்றோ நெஞ்சம் விளங்குகின்றது. நெஞ்சம் மலர ஒத்திருக்க வேண்டும். இதில் அன்பு மணம் கமழ வேண்டும். இன்பத்தேன் பிலிற்ற வேண்டும். கருணைக்கசிவு இருக்க வேண்டும்.

இங்ஙனம், நெஞ்சம் மலர வேண்டுமானால், தனிமை அழிந்து தற்செருக்கு ஒழிந்து, ஆங்கு ஒண்டுக் குடித்தனம் செய்யும் பொல்லாங்குகளைச் சுட்டுப் பொசுக்கி, மலரச் செய்ய வேண்டாமா? மலர் உலகப் பொது; உலகுயிர்கள் அனைத்திற்கும் மணம் தருவது. அதுபோல நெஞ்சமென்ற மலர் மலர்க. அந்தத் தூய மனம் என்ற மாளிகையில், இறைவன் எழுந்தருளுவான் என்ற திருக்குறளின் கருத்து, சமுதாயம் தழுவிய சமய நெறியையே காட்டுகிறது. உலகின் பொது நெறியைத் தோற்றுவிக்கும் சமய நெறியே நெறி. கோயிலுக்கும் குடிசைக்கும் இடையே இருக்கும் தூரத்தைக் குறைப்பதே சமய நெறி. இத்தகைய சமய நெறியே திருவள்ளுவத்தின் சமய நெறி.

*புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்*
*சித்தம் கலங்கித் திகைப்பதேன்?—வித்தகன்*
*தெய்வப் புலவன் திருவள் ளுவன்சொன்ன*
*பொய்யில் மொழியிருக்கும் போது.*

*மக்களுக்கு மாநிலத்தில் வாழ்க்கை வழிகளெல்லாம்*
*சிக்கலறக் காட்டிநலம் செய்நூலாம்—மிக்கபுகழ்ச்*
*செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை நெஞ்சமே*
*சிந்தனை செய்வாய் தினம்.*

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

கடவுள் கண்ணால் காட்டப்படும் அல்லது காணப் படும் பொருள் அல்ல; அது உணர்வுப் பொருள். மனிதனுக்குக் கண்களேதான் சிறந்த உறுப்பு அல்ல; அவனது சிந்தனையே உயர்ந்தது. அந்த உணர்வில் எழும் தூய சிந்தனையாலேயே மனிதன் கடவுளைக் காணமுடியும். இறையுணர்வே இல்லாதவர்கள் எப்படிக் காண முடியும்? எதற்கும் அவன் அருள் வேண்டும்.

கல்லாத பாமரர்களின் குறைமதிக்கு விஞ்ஞானத்தின் மிக நுட்பமான உண்மைகள் புலப்பட மாட்டா. அதனால், விஞ்ஞான உண்மைகள் யாவும் கட்டுக் கதைகள் என்று நாம் பொருள் கொள்ளலாமா? ஆன்மீக உணர்வு கிட்டும் பேறு கிடைத்தால் இறைவன் நமக்கும் உண்மையிலும் உண்மை யாவான்.

கடவுளை வணங்குவது அவனுக்குத் தொண்டு செய்ய அல்ல; மனிதனுக்குத் தொண்டு செய்ய எனக்கு வலிமையைத்தா, என்று கேட்க. மாபாரதத்தில் கர்ணன் கூடக் கண்ணனிடம், "இல்லையென்று இரப்போர்க்கு இல்லையெனா இதயம் தா" என்றுதான் கேட்டான்.

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற் குரு.**

என்று குறள் கூறுகிறது.

## மன மாளிகையில் அறம்

வாழ்க்கையின் மையம் மனமே. சிந்தனைக்குக் களம் மனம். செயல், ஊக்கத்திற்குக் களம் மனம். செயலின் நோக்கமும் மனத்திலேயேயாகும். கைகள் செய்யலாம். கால்கள் நடக்கலாம்; கண்கள் பார்க்கலாம். ஆனாலும் அச்செயல்களின் நோக்கத்தைத் தெளிவாக வெளிக்காட்டா. ஒரோவழி காட்டலாம். ஆயினும் சிந்தனைக்கும் செயலுக்கும் முரண்பாடிருக்கலாம். அப்போது சிந்தனை பயன் தருமா? செயல் பயன் தருமா? ஒருவன் இனிமையாகப் பேசுகிறான். ஆனாலும் நெஞ்சில் கரவு இருக்கிறது. இவற்றில் எது பயன்தரத் தக்கது? இனிய பேச்சன்று. நெஞ்சில் மறைந்து கிடக்கும் கரவே.

சிலர் முயற்சிகள் பல செய்தும் வெற்றி அடைவதில்லை. அத்தகையோர் ஏதாவது சமாதானம் சொல்வர்; கொடுத்து வைக்க வில்லை; போதாத காலம், உலகம் சரியாக இல்லை என்பன போன்ற வேதாந்த மொழிகளை உதிர்ப்பர். ஆனால் உண்மை அதுவன்று. அவர்கள் செயல்பட்டது என்னவோ உண்மை. ஆனால் அச்செயல் பற்றிய எண்ணம் தெளிவாக—உறுதியாக அவர்களுக்கு இல்லை.

மண்ணில் நிற்கும் மரமெல்லாம் புயலில் நிற்பதுண்டோ? மண்ணில் ஆழமாக வேர்விட்டு வளர்ந்த மரமே புயலில் நிற்கும். அதுபோல மனத்தில் தெளிவாக—உறுதியாக எண்ணிச் செய்யும் செயல்களே வெற்றி தரும்.

அறம் செய்தால் போதாது. அறச்சிந்தனை வேண்டும். "அறந்தரு சிந்தையோன்" என்பது இலக்கிய வழக்கு. அறம் எந்த நோக்கத்துடன் செய்யப்படுகிறதோ அந்தப் பயனையே தரும். அறம் புகழ் கருதிச் செய்யப்பெற்றால் புகழைத் தரும்—அறத்தினைத் தாராது; புண்ணியத்தினைத் தாராது; இவ்விரண்டிற்கும் மேலாய இன்ப அன்பினை எப்போதும் தாராது.

இந்த யுகத்தில் அறமும் கூட வணிகமாகியுள்ள கொடுமையைப் பார்க்கிறோம். அறப்பணிகளாகக் கருதப் பெறும் கல்விப்பணி, திருக்கோயிற்பணி ஆகியவை இன்றைக்கு வணிக வடிவத்தைப் பெற்றிருக்கின்றன. இவை இரண்டும் வணிக வடிவத்தைப் பெற்ற பிறகு சமுதாயத்தின் அடித்தளமே புரண்டுவிட்டது. இதனால் அந்நிலையங் களுக்கு வருவாய் வரலாம். வணிகத்தின் நோக்கம் இலாபம் தானே! ஆனால் கல்வியின் பயனாகிய அறிவும் அருளியலின் பயனாகிய ஒப்புரவும் உயர் வீடும் கிடைக்காது. நோக்கம் எதுவோ அதுவே கிடைக்கும்.

ஆதலால் செயலைச் செயலுக்காகவே சிந்தனை செய்து செய்வது சிறந்தமுறை. கல்வி கற்பது அறிவின் ஆக்கத்திற்காகவே என்ற நோக்கம் அமைதல் வேண்டும். அங்ஙனமின்றித் தொழில் பெறும் நோக்கத்தோடு கற்கும் பொழுது அறிவு கிடைப்பதில்லை. ஆனால் தொழில் கிடைக்கும். நட்புப் பாராட்டுவது நட்பிற்கே. அதற்கு நோக்கம் என்றால் நட்பு பயிலுதலே நோக்கம்.

அதற்கு மாறாக நலன்கள் சேர்ப்பதை நாட்டமாகக் கொண்ட நட்பினால் அது தோற்றத்தால் உள்ள நட்பே, அது தொடர்ந்து வளர்வதில்லை; இடையறவு படும். அது மட்டுமன்று, அத்தகையோர் பிரியின் பெரும்பகை கொள்வர். நன்னோக்கமாகக் கொண்ட நட்பே நன்மை தரும். அதனாலன்றோ, உயிர்களை இறைவன் காதலிக்கிறான்; அவற்றுக்குக் கருணை பொழிகின்றான். ஏன்? உயிர்களை ஆட்கொண்டருளுவதுதான் அவனது நோக்கம். கருணை யின் பயன் கடவுளுக்கல்ல. உயிர்களுக்கேயாகும்.

உயிர்களை ஆட்கொண்டருளுவதில் கடவுளுக்குத் தற்சார்பானது எதுவும் இல்லை. 'குறையொன்றும் இல்லாத கூத்து' என்று மணிமொழி பேசும். சுந்தரர் 'பித்தன்' என்பார். அதுபோல் கடவுளைப் பூசனை செய்வோரும், கலந்த

அன்பிற் பூசிப்பதைக் 'கூடும் அன்பினில் கும்பிடலை' நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

அங்ஙனமின்றித் தேவைப் பட்டியலைக் கையில் வைத்துக்கொண்டு கடவுளை வணங்கினால் ஒருகால் தேவைகள் கைகூடலாம். ஆனால் மனத்தின் மாசு அகலாது; மனம் வளராது; திருவருள் கிடைக்காது; ஆக, செயல் பலனைத் தராது. செயலுக்குரிய நோக்கமே பயன் தரும்.

இத்தகைய நியாயமான அறவுணர்வு பழந்தமிழர் வாழ்க்கையில் விளங்கித் தோன்றிற்று. பழந்தமிழர் அறம் செய்தனர். அறத்தை அறத்தின் நோக்கத்துடனேயே செய்தனர். வீடுபேறு கூட அவர்களின் நோக்கமாக இருந்ததில்லை. அன்றைய தமிழக அரசர்களும் இத்தகைய அருளார்ந்த சீலத்தோடுதான் விளங்கினர்.

ஆய்அண்டிரன் ஒரு குறுநில மன்னன்; அறம் செய்யும் இயல்பினன்; அவனை முடமோசியார் அறிந்து பாராட்டுகிறார். இப்பிறப்பில் அறம் செய்தால் மறுமையில் இன்பம் பெறலாம் என்ற எண்ணத்தில் ஆய் அண்டிரன் அறம் செய்வதில்லை. ஆய் அண்டிரனின் வாழ்க்கையில் அறம் வாணிகப் பொருளில்லை. அறமே அவன் செயல், அறமே அவன் நோக்கம்.

> இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
> அறவிலை வணிகன் ஆய்அலன்

என்பது பாடல் அடிகள். இத்தகைய அறச் சிந்தனை நம் மனமாளிகையில் நின்று நிலவுமானால் உலகில் ஒப்புரவு நெறி வளரும். நனி சிறந்த நட்பு கால் கொள்ளும். கல்விக் கூடங்கள் அறிவாலயங்களாகத் திகழும். திருக்கோயில்கள் கடவுட் கோயில்களாகத் திகழும்.

> மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
> ஆகுல நீர பிற.

தி.ii.5.

## உயிர் வாழ்வான்

திருக்குறள் ஒரு சமுதாய ஒழுக்க அமைப்பு நூல். மனிதர்கள் தம்முள் கூடிவாழக் கடமைப்பட்டவர்கள். அதுவே, மனித நாகரிகத்தின் விழுமிய சிறப்பு. 'மனிதன் ஒரு சமூகப் பிராணி' என்றார் ஓர் ஆங்கிலப் பெரும்புலவர். விலங்குகளில் கூட்டு வாழ்க்கை இல்லை. ஒரோவழி, சில விலங்கினங்களிடத்தே கூட்டு வாழ்க்கை முறை இருந்தாலும் கூட அஃது அச்சத்தின் பாற்பட்டதே யொழிய, அன்பின் பாற்பட்டதன்று.

சமுதாயக் கூட்டு வாழ்க்கையை வளர்ப்பதென்பது மிக நுண்ணிய ஆற்றல். தம் இச்சைவழிச் செல்லும் பொறிகளின்மீது தனியரசு செலுத்துவோரே கூட்டுப் பொது வாழ்க்கையைத் திறமையாக நடத்த முடியும். சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்கு உரிய சிறந்த பண்புகளில் ஒன்று ஒப்புரவு அறிதல்.

ஒப்புரவறிதல் அதிகாரத்தில் வரும் குறட்பாக்களுக்கு உரையாசிரியர்கள் பெரும்பாலும் 'இல்லாதவர்களுக்குக் கொடுத்தல்—உதவி செய்தல்' என்ற தன்மையிலேயே பொருள் கண்டுள்ளனர். இல்லாதவர்களுக்குக் கொடுக்கும் பண்பை—இயல்பை ஈகை என்ற தனி அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுகின்றார். ஈகை, ஒப்புரவறிதல் இவ் விரண்டும் ஒன்றுபோலத் தோற்றமளித்தாலும் ஆழமான கருத்து வேறுபாடு உடையன.

ஈகை வழிப்பட்ட சமுதாயத்தில், உடையார்—இல்லார் என்ற வேற்றுமை விரிந்திருக்கும். அவ் வழி புகழ்ச்சியும் இகழ்ச்சியும் தலைதூக்கி நிற்கும். ஒப்புரவறிதலில் உடையார் இல்லார் வேற்றுமையின்றி, உயர்வு தாழ்வு இன்றிக் கொடுத்தல் கடமை எனவும், கொள்ளல் உரிமை எனவும்

கருதும் அடிப்படையிலேயே அந்த அதிகாரம் அமைந் துள்ளது.

*ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்*

என்பது திருக்குறள். இங்கு 'ஒத்தது' என்ற சொல்லுக்கு வழக்கம்போல் பரிமேலழகர் 'உலக நடையினை' என்று எழுதித் தப்பித்துக் கொண்டு விட்டார். அது நிறைவான கருத்தன்று. 'தன்னைப் போல் பிறரை நினை' என்பது ஒரு விழுமிய ஒழுக்கநெறி அருள் வாக்கு.

இன்றையச் சமுதாயத்தில் பலர் தம்மோடு பிறர் ஒத்துவர வேண்டும் என்று விரும்புகிறார்களே தவிர, பிறரோடு தாம் ஒத்துப்போக வேண்டும் என்று கருதவில்லை. பலருக்கு எது ஒத்ததோ அதற்குச் சிலர் இணங்கியே வாழ வேண்டும். அதுவே சமுதாய நியதி—ஒழுக்கம். உணர்ந்து வாழ்பவர்களே வாழ்பவர்கள். அவர்க யிலேயே இன்பமும் அமைதியும் இருக்கும். ம அவர்தம் வாழ்க்கையாற் பயனுண்டு.

இங்ஙனம், ஒத்ததறிந்து ஒழுகத் தெரியாதவர்கள் வாழ்ந்தாலும் நடமாடினாலும் பிணம் என்றே கருத வேண்டும் என்று திருக்குறள் கூறுகிறது. காரணம், பிணத் திற்கு மனித உருவ அமைப்பு இருந்தாலும் உணர்ச்சி யில்லை; உதவும் பண்பில்லை. அதுபோலவே, ஒத்ததறிந்து வாழும் இயல்பில்லாதவர்களுக்கும் அன்பு, சமுதாயம் ஆகிய உணர்ச்சிகள் இல்லை. அவர்களும் உதவ மாட்டார்கள். பிணத்தை நடு வீட்டில் நடுத்தெருவில் பல நாட்கள் வைப்ப தரிது. காரணம் நாற்றமெடுக்கும்; காற்றைக் கெடுக்கும்; சமுதாயத்திற்கு நோய் தரும்.

அதுபோலவே, ஒத்ததறிந்து உதவி வாழ முடியாத மனிதன் நெஞ்சத்தால் நாற்றமெடுத்தவனாவான். பிணம்

போல் நாறுவான். அந்நாற்றத்தைத் தன்னுடைய சொற்களாலும் செயல்களாலும் வெளிப்படுத்துவான். தொல்லை செய்வான். பிணத்தை வீட்டிலிருந்து விரைவாக எடுத்துச் செல்வதுபோல, சமுதாயத்திலிருந்து இந்த மனிதர்களையும் விரைவில் எடுத்தாக வேண்டும்.

ஒத்தது அறிவான் என்று சொன்னமையால் தானே வலிய முயன்று அறிந்து செய்தலையே திருவள்ளுவர் இங்கு குறிப்பிடுகின்றார். இதையே (Volunteer Service) என்று குறிப்பிடுகிறார்கள். குறட்பாவைப் பாருங்கள்.

*ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்.*

## பொருளியல்

திருவள்ளுவர் நடைமுறை வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட கற்பனை உடையவரல்லர். அவருடைய சிந்தனைப் போக்கு வாழ்வியலை ஒட்டியே அமைந்துள்ளது. நடைமுறை உண்மைகளுக்கு அவர் மாறுபட்டவரல்லர். ஆதலால், மனித வாழ்க்கைக்கு மிக மிக இன்றியமையாததாகிய பொருளைப் பற்றிய திருவள்ளுவரின் கருத்து இரண்டுபட்ட தன்று; குழப்பமானதுமன்று; மிகமிகத் தெளிவானது; உயர்வானது.

பொருளின் அடித்தளத்திலேயே தனிமனிதனின் வாழ்க்கையையும் சமுதாயத்தின் வாழ்க்கையையும் காட்டுகின்றார். ஏன்? பழந்தமிழ் மரபும் அதுதானே! மனிதன் அடையக் கூடிய பேறுகள் நான்கு என்பது தமிழ்மறை. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். அவற்றுள் நடுவனவாகிய பொருள் எய்த இருதலையும் எய்தும் என்பது தமிழ் நூல் முடிபு.

அதனாலன்றோ திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்று முப்பால் நூல் செய்தார். வீடு பற்றி அவர்

தனி இயல் அமைக்கவில்லை. காரணம், அறம், பொருள், இன்பம் ஆகியவை மனிதன் முயன்று செய்யக்கூடியவை —பெறக் கூடியவை. ஆனால் வீடு, அறம் பொருள் இன்பத்தை முறையாகச்செய்து அனுபவித்து வெற்றி பெற்றவர்களுக்கு இறைவனால் வழங்கப் பெறுவது. வாழும் மனிதர்க்கே திருவள்ளுவர் நூல் செய்தமையின் காரணமாக, வீடு பற்றிய தனி இயல் அமைக்கவில்லை. எனினும் ஓரோவழி குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளுவர் ஒரு பொருளியல் துறை அறிஞர். பொருளின் தோற்றத்திற்குரிய நிலைக்களனான பாதுகாத்தல், பங்கீடு ஆகியவைபற்றித் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார்: பொருளில்லையானால், உலகியல் இல்லை என்று கூறுகிறார். வறட்சித் தன்மையுடைய மாயாவாதம், பௌத்தம், சமணம் ஆகிய சமயக் கருத்துக்கள் தமிழகத்தில் ஊடுருவத் தொடங்கிய பிறகுதான், தமிழர் வாழ்வியல் கெட்டது; வாணிகம் வீழ்ந்தது. ஆட்சி அந்நியர் கைக்கு மாறியது. இந்த நிலையினை உணர்ந்த தமிழகச் சிவநெறிச் சான்றோர்களாகிய மாணிக்கவாசகர், அப்பரடிகள், சுந்தரர் போன்றோர் பொருளின் மேம்பாட்டினை வலியுறுத்தினர்.

"முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்!" என்பது மாணிக்கவாசகரின் வாக்கு. "ஏரி நிறைந்தனைய செல்வம் கண்டாய்" என்றும், "பொன்னானாய், மணியானாய்" என்றும் அப்பரடிகள் பாடுகின்றார். சுந்தரர் வாழ்க்கைக்கு இறைவன் பொற்காசு வழங்கியதைச் சேக்கிழார் சிந்தை இனிக்கப் பாடுகின்றார்.

பொருள் உலகியல் அச்சு; அதை வைத்தே உலகியல் நடைபெறுகிறது. திருவள்ளுவர் பொருளைப் போற்ற வேண்டும் என்று கூறுகின்றார். பொருளைப் போற்றுதல் என்றால் பொருளைப் பூசித்தல் என்பது பொருளன்று. பொருளைப் பாதுகாத்தல் என்பதுதான் பொருள்.

பாதுகாத்தல் என்றால் செல்வத்தின் பயனாகிய இன்பம் நுகர்தல், ஈத்துவந்து மகிழ்தல் ஆகியன செய்யாமல் பூட்டிவைத்துப் பாதுகாப்பது என்பதும் பொருளன்று. பொதுவாகவே, போற்றுதல் என்ற சொல்லிலேயே வளர்த்தல், பாதுகாத்தல் என்ற இரு கருத்துகளும் அடங்கும்.

"பொருட் செல்வம் போற்றுவார் கண்ணே உள" என்கிறார் திருவள்ளுவர். பொருட் செல்வம் போற்றுதற்கு வேண்டிய முதற்குணம், பொருளின் மதிப்பினை—சிறப்பினை உள்ளவாறு உணர்தல். பொருள் என்றால், அது வளரும் இயல்புடையதேயன்றி, குறையும் இயல்புடையதன்று. பொருட் செல்வத்தை வாழ்க்கை என்ற களத்தில், உழைப்பு என்ற நீரூற்றிச், சிக்கனம் என்ற வேலி கட்டிப் பாதுகாத்தல் வேண்டும். பொருளின் தாய் உழைப்பேயாகும். உழைப்பின்றேல் பொருள் இல்லை. வந்த பொருளைச் சிக்கன முறையில் பாதுகாக்க வேண்டும்.

அதனாலன்றோ அப்பரடிகள், "ஏரி நிறைந்தனைய செல்வம் கண்டாய்" என்றார். ஏரிக்குக் கரைகட்டித் தண்ணீரைக் காப்பது போல், பொருளுக்குச் சிக்கனம் என்ற கரை தேவை. சிக்கனம் என்றால் கஞ்சத்தனம் என்று பொரு ளல்ல—அப்படிப் பொருள் கொள்ளக் கூடாது. ஒரு ரூபாய் செலவில் முடிக்கக்கூடிய காரியத்திற்கு இரண்டு ரூபாய் செலவு செய்வது பொருள் இழப்பிற்குரிய வழியாகும். அத்தகையோரிடத்தில் செல்வம் தங்குவதில்லை. மேலும், பொருள் வருவதற்குரியனவாகக் கிடைத்துள்ள வாய்ப்புகளை இழக்காமல் முறையாகப் பயன்படுத்திப் பொருளீட்ட வேண்டும்.

வாய்ப்புகளை இழப்பதும்கூடப் பொருள் இழப்பே யாகும். அதுபோலவே ஒரு களம்—அதற்குப் பயன்படுத்தக் கூடிய உழைப்பு ஆகியவை மூலம் எவ்வளவு பொருள் ஈட்டவேண்டுமோ, அவ்வளவையும் ஈட்ட வேண்டும்.

அதற்குக் குறைவாக ஈட்டுதலும் பொருள் இழப்பிற்குரிய வழியேயாகும். பொருள் இழப்பு மட்டுமல்ல—அதைத் தொடர்ந்து வருகிற இழப்புக்கள் பல உண்டு. பொருள் இழப்பினைத் தொடர்ந்து சிறப்பிழத்தல், வறுமை, நோய், வாழ்க்கைச்சுமை ஆகியவையும் அவற்றினைத் தொடர்ந்து நரகமும் வரும்.

“பொருளாட்சி போற்றாதார்க் கில்லை” என்பதைத் திருவள்ளுவர் “புலால் மறுத்தல்” என்னும் அதிகாரத்தில் தெளிவாக விளக்கியுள்ளார். இது, பொருளாட்சியின் அவசியத்தை எளிதில் மனங்கொள்ள உணர்த்துவதற்கே யாகும்.

*பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி*
*ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.*

*அன்பொரீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய*
*ஒண்பொருள் கொள்வார் பிறர்.*

## வள்ளுவம் பிறந்ததேன்?

தமிழினம் நிலவுலகத்தை மூடியிருந்த நீர்ப்பரப்பு மறைந்து, கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த இனம். வீரத்தில் மட்டுமல்ல; சிந்தனைத் திறத்திலும், சிந்தனையைச் செப்பும் மொழித் திறத்திலும், இலக்கியப் படைப்பாற்றலிலும், இலக்கியத்தின் பயனாகிய நனிநாகரிகத்திலும் சிறந்து விளங்கிய இனம் தமிழினம்.

இதற்குச் செல்வச் செழிப்பும் இருந்தது. அதனால், காலப்போக்கில் மதோன்மத்தமான வாழ்க்கையை நடத்தத் தொடங்கிவிட்டது. அதனால் தமிழினத்தில் கள்ளும்

காமமும் இடம் பெற்றன! ஐந்திணை ஒழுக்கத்திற்கு மாறாகப் பரத்தையர் ஒழுக்கம் கால்கொண்டது.

ஓரினத்திற்குள் உயர்வு தாழ்வு மனப்பான்மைகள் தலைகாட்டத் தொடங்கின; அவ்வழி பல்குழுத் தோற்றமும், பாழ்செய்யும் உட்பகையும், வேந்தலைக்கும் கொல்குறும்பும் வளரத் தொடங்கின. பொழுது விடிந்து பொழுது போனாற் போலப் பண்பாட்டை வளர்க்கும் சமயநெறிகளும் பலவா யினமையின் காரணமாகச் சமயநெறியாளர்க்கு மாறாகச் சமயக் கணக்கர்கள் தமிழ்ச் சமுதாயத்தில் தோன்றினர்.

அவர்களும் சமுதாயத்தைப் பண்பியல் வழியில்— அமைதி நெறியில் "இவர் தேவர்", "அவர் தேவர்" என்று இரண்டாட்டுகின்ற புன்நெறியை வளர்த்தனர். இங்ஙனம், புகழ் பூத்து வாழ்ந்த தமிழினத்தின் வீழ்ச்சி தலைகாட்டிய பொழுது திருவள்ளுவர் பிறந்தார்.

இருள் கடிந்தெழுகின்ற ஞாயிறெனத் தோன்றினார் திருவள்ளுவர். திருவள்ளுவர் என்று ஞாயிறு கனன்ற கதிரொளியே திருக்குறள். ஓரினத்தை அழிவு வராமல் பகைப்புலத்தில் காக்கும் போர் வீரனை விட வாழ்வியல் நெறியில் நயத்தக்க நாகரிகத்தினைக் கட்டிக் காப்பாற்றிய வள்ளுவர் போற்றுதற்குரியர்; ஏழேழ் பிறப்பும் போற்றுதற் குரியவர்.

வடபுலம் கண்டு ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் வாகை கொண்ட வெற்றியைவிட, செந்தமிழ்ப் பேராசன் திருவள்ளுவர் புகழ் போற்றுதற்குரியது. ஆரியப் படை கடந்த செழியனின் வெற்றி ஒரு பொழுதே பகையைத் தடுத்தது. நாவலர் வள்ளுவர் வெற்றி, ஊழி ஊழிக்காலத் திற்கும் வெற்றி கொண்டது.

நெடுஞ்செழியனின் வெற்றி பகையை மட்டுமே தடுத்தது. பண்பினை வளர்க்கப் பயன்படவில்லை. திருவள்ளுவர் செய்த திருக்குறளோ நந்தமிழ் நெறியினை

நஞ்சனைய நெறியின் கலப்பினின்று தடுத்துக் காப்பாற்றியது. நமது சமுதாயத்தை வாழ்வாங்கு வாழும் நெறியில் வழி நடத்தியதன் மூலம் பண்பியலையும் பேணிக் காத்து வந்திருக்கிறது.

வள்ளுவம் வையகத்தின் வரலாற்றுச் சந்திப்பில் பிறந்தது. வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தப் பிறந்தது; தேங்கிக் கிடந்த சமுதாயத்தில் தெளிவு காணப்பிறந்தது. நூல்கள் பல கற்பதிலும் நுண்ணிய அறிவு ஆற்றலுடையதெனக் காட்டப் பிறந்தது. கல்வி, கற்கின்ற ஆற்றலைப் பொறுத்ததல்ல. கசடு அறுதலிலேயே இருக்கிறது என்று உணர்த்தப் பிறந்தது. மண் வழிப்பட்ட உடைமைகளிலும் உள்ளம் உடைமையே உடைமையென உணர்த்தப் பிறந்தது. ஆனதைக் கதையாக்கிக் கவலையாக்கிச் சாகாமல் தடுக்க—ஆவது காட்டப் பிறந்தது.

நிலத்தில் தூய்மை, உடலில் தூய்மை, நெற்றியில் தூய்மை இவையனைத்தும் கைகள் செய்பவை. இந்தத் தூய்மை பெருகி வளர்ந்தும், பேணும் சமுதாயம் பகையி னின்று விடுதலை பெற்றபாடில்லை. காழ்ப்பின் தோற்றம் காசுகளில்லை. கலகங்களின் தோற்றம் கடவுளிடத்திலில்லை. கொலையுணர்வின் தோற்றம் கொடுவாளிடத்திலில்லை. உருக்குலைக்கும் உட்பகையின் தோற்றம் உடலின்கண் இல்லை. ஆங்கார உணர்வின் தோற்றம் நெற்றியின்கண் இல்லை; ஆங்கு இலங்கும் திருநீற்றின் கண்ணும் இல்லை. பின் எங்கு?

நஞ்சின் நிலைக்களம் மனமேயாம். மனத்துள் கருப்பு வைத்து மாநிலம் முழுவதும் தூய்மை செய்தாலும் பயனில்லை என்று பாங்குறக் காட்டி, மனத்தின்கண் மாசறுக்கப் பிறந்தது வள்ளுவம்.

மனிதன், உருவெளித் தோற்றத்தால் தனிமனிதன்; மக்கட் கணக்கெடுப்பில் தனி மனிதன்; வயிற்றால்—வாயால் தனி மனிதன். ஆயினும் அவன் படைத்திடும் வாழ்க்கை, தனி

மனித வாழ்க்கையன்று—சமுதாய வாழ்க்கை—கூட்டு வாழ்க்கை! அவனிடத்தில் உருவாகித் தோன்றும் உணர்வுகள் உலகம் தந்த உணர்வுகளேயாம்.

ஈண்டு உலகம் என்பது மனித சாதியைப் போல எளிதில் ஒழுக்கங்களைக் கடப்பனவல்ல; முறைகளை மீறுவன அல்ல; நீதிகளை நீப்பன அல்ல. இயற்கை உலகில் மாற்றங்கள் உண்டு. ஆனால், ஏமாற்றங்கள் இல்லை. மனித சாதியிலோ முறைகளை எளிதில் கடந்த சீலத்தின் சிதை வினையும் ஏமாற்றங்களையும் வரலாறுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன; இலக்கியங்கள் எடுத்துக்கூறுகின்றன. கீழே விழுந்து விடாமல் தன்னை அடிக்கடி தூக்கி நிறுத்திக் கொண்ட மனிதசாதி கெட்டதைப் போல மரம் செடிகள் உலகம் கெடவில்லை; கொடிகள் உலகம் கெட வில்லை; விலங்குகள் உலகமும் கெடவில்லை.

ஆனால், மனிதனோ தம்பட்டம் அடித்துக் கொள்ளுகிறான். விலங்குகளுக்கு ஐந்து அறிவாம். இவனுக்கு ஆறாவது அறிவாம். ஐயகோ! மனிதர்களே! வாயும் வார்த்தைகளும் கிடைத்தமையால் ஏன் இப்படி வையகத்தை ஏமாற்றுகிறீர்கள்? எங்கே இருக்கிறது உங்கள் ஆறாம் அறிவு? நுமக்கு அறிவு இருப்பதின் அடையாளம் என்ன? அதற்குப் பதில் ஆரவாரம்தானோ?

விலங்குகளும் துன்பம் அனுபவிக்கின்றன. ஆனால், ஓர் அதிசயம். விலங்குகள் அனுபவிக்கும் துன்பம் பெரும்பாலும் இயற்கை வழியில் வந்த துன்பங்கள். ஒரோவழி அறிவின்மை யின் காரணமாகச் சில அல்லல்களையும் அடைகின்றன. ஆயினும், மனித சாதியைப் போல் செயற்கை இன்பங்களும், செயற்கைத் துன்பங்களும் விலங்கினத்திற்குக் கிடையா.

அறிவிருப்பதைக் காட்டுதற்குரிய அன்பு பிறந்திருக் கிறதா? மேடையில் தான் பிறக்கிறது! வணிகம்தான் நடைபெறுகிறது என்று இடித்துக் கேட்க—

*அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்*
*தந்நோய்போல் போற்றாக் கடை*

என்று வள்ளுவம் பிறந்தது.

வாழ்க்கை என்பது என்ன? ஒன்றரை அடியில் பிறந்து ஆறடிக்கு வளர்ந்து மண்ணுக்கு உரமாகவோ, நிலத்தில் விளைந்தவைகளைத் தின்று திரிந்து கதை முடிக்கவோ, உண்ட உணவின் கொழுப்புகளால் விளைந்த உடலெரிச்சலைக் கூடித் தணித்துக் கொள்ளவோ, இல்லை, இல்லை. மனிதன்—அவனே வையகத்தின் நாயகன்! கடவுளின் சாட்சியாக விளங்க வேண்டியவன்.

மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்தால் வையகம் வளரும்; வானகம் மண்ணுக்கு வரும். அங்ஙனம் வாழ்தல் வாழ்க்கையெனக் காட்ட, "வையத்துள் வாழ்வாங்கு வாழ்க" என்று வள்ளுவம் கூறுகிறது.

மண்ணுக்கு இயற்கையில் உயிர்ப்பாற்றலிருக்கிறது. அந்த உயிர்ப்பாற்றலின்வழி இழுத்தெறியப்படாமல் மேலே உயர ஓங்கி உயர இயற்கை ஆற்றலும் தந்தது. விலங்குகளுக்குக் கால்களும், மரம் செடிகொடிகளுக்கு வேர்களும் கிளைகளும் அந்த நோக்கத்துடனே அமைந்தனவாம். மரம் செடி கொடிகள் மண்ணிடை வேர் பாவிக் கிளைகள் விட்டு அதன் உயிர்ப்பாற்றலின் சக்தியைத் தடுத்து நிறுத்தித் தன்னை இழுத்தெறியும் ஆற்றலுடைய மண்ணையே, தான் நின்று வளரும் களமாக மாற்றி, தான் வளர்வதோடன்றிப் பூத்துக் குலுங்கிக் காய்ப்பதோடன்றி விலங்குகளுக்கும் மனித உலகத்திற்கும் கூட வாழ்வு அளிக்கின்றன.

ஆனால், மனிதனோ, மண்ணின் ஆற்றலால் உடல் மட்டுமின்றி உள்ளத்தையும் பறிகொடுத்துத் தானும் வாழாமல் மற்றவர்களுக்கும் வாழ்வளிக்காமல் பயனின்றி நடமாடுகின்றான். அதனாலேயே வாழ்வாங்கு வாழ்தலைத் தெய்வமாக்கினான்.

வள்ளுவர் காலத்தில் மனிதர் பூசித்தது தெய்வத்தை. பூசிப்பவன் 'சாத்தான்' ஆனால், பூசனையால் வரும் பயனென்ன? தெய்வ மணம் கமழும் இன நலம் உடையவனே தெய்வத்தைப் பூசித்தற்குரியவன். சாத்தானின் இடம் சுடுகாடு.

தெய்வங்களின் இடம் மனித இனம் நடமாடும் மலர்ச்சோலை; திருக்கோயில்கள். ஆதலால், சாத்தானாக விளங்கும் மனிதனைத் தெய்வமாக்கவே வள்ளுவம் பிறந்தது. 'வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வம்' என்று வள்ளுவம் பேசுகிறது.

வள்ளுவம் ஏன் பிறந்தது? என்று இதயத்தில் பட்டதை எழுதியிருக்கின்றோம். வள்ளுவம், பதவுரை பொழிப்புரைக் காகப் பிறக்கவில்லை. மண் செழிக்க மழை பொழிவதுபோல, மனிதகுலம் செழிக்க—மனிதகுல உள்ளங்கள் செழிக்க—உலகு செழிக்க—உயர் கடவுள் சிரித்து மகிழ வள்ளுவம் பிறந்தது!

முடிந்தால்—மனமிருந்தால் வள்ளுவம் பிறந்ததன் பயனையடைய வழி காணுங்கள்! வையகம் சிறக்கும்! அல்லது வழக்கம் போல வாழ்த்துரைகளில் வாணாளை வீணாக்குங்கள்! அது உங்கள் விருப்பம்! வள்ளுவரே, 'ஏவவும் செய்கலான் தான் தேரான்' என்று நொந்து கூறியுள்ள பொழுது நாம்தான் என்ன செய்யமுடியும்?

*சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு.*

*அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்*
*புறத்த புகழும் இல.*

*ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*செல்லும் வாயெல்லாம் செயல்.*

# ஒழுக்கம்

பரந்துபட்ட இந்த வையகத்தை, உயிரினத்தை, மக்கள் தொகுதியை ஒன்றோடொன்று முரணாகாமல்—மோதாமல் வழி நடத்துவது ஒழுக்கமேயாகும். நல்லொழுக்கத்தின் ஊற்று அன்பேயாகும். யாருக்கும் தீமை செய்யாது, எந்த உயிருக்கும் தீமை செய்யாது எவ்வுயிர்க்கும் அன்புகாட்டி, நல்லன செய்தலே நல்லொழுக்கம்.

இத்தகைய நல்லொழுக்கம் தன்னியல்பினதாக—ஆற்றொழுக்காக அமையும்பொழுது உயர்ந்த ஒழுக்கமெனப் போற்றப்பெறுகிறது. ஒழுக்கத்தின் குறிக்கோள் உயிர்களுக்கு அன்பு செய்தல் ஆனாலும், அதன் செயல் முறைகள் விரிந்தது; நுட்ப மானதுங்கூட! உயிரிலும், உணர்விலும், அறிவிலும், புலன்களிலும், பொறிகளிலும் தூய்மையும் துணிவும் கொண்டோரே ஒழுக்கமுடையவராய் வாழ்க்கையில் வெற்றிபெற இயலும். தூய்மையும் துணிவுமே துணை.

நல்லொழுக்க நடைப்பயணத்தில் விழுந்து விழுந்து எழுவோரே ஏராளம். இன்று ஒழுக்கமுடைமை என்ற சொல்லுக்கு நடைமுறையில் பொருள் மிகக் குறுகிய எல்லைக்கு வந்துவிட்டது. பொதுவாக மனிதனிடத்தில் தன்னிலை ஒழுக்கம், பொதுநிலை ஒழுக்கம் அல்லது சமுதாய ஒழுக்கம் என்ற இரண்டுவகை ஒழுக்கம் தேவைப்படும். மனிதர்கள் இவ்விரண்டிலும் ஒருசேர வெற்றிபெற்று விளங்கு வதில்லை.

ஆனால், நம்முடைய நாட்டு அமைப்பில் தன்னிலை ஒழுக்கத்தில் வெற்றி பெற்றோர் எண்ணிக்கை மிகுதி. தன்னிலை ஒழுக்கத்தில் வெற்றிபெற்றுப் பொதுநிலை ஒழுக்கத்தில் வெற்றி பெறாது போனால், கொங்கண முனிவர், இராவணன், சூரபத்மன் ஆகியோர் அடைந்த

நிலைதானே! இவர்கள் உடலிச்சையில் வெற்றி கண்டவர்கள் நிறைந்த தவம் செய்தவர்கள்.

ஆனால், மற்றவர்களை மதிக்கத் தெரியாதவர்கள் மற்றவர்களின் துன்பத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள். யானைகூட சைவம்தான்! அது புலால் உண்பதில்லை. கள் குடிப்பதில்லை. ஆனாலும் அறிந்தறிந்தும் அது பாகனையே கொல்கிறது. இதனால், தன்னிலை ஒழுக்கம் போதாது என்பதல்ல. தன்னிலை ஒழுக்கத்தின் நிறைவு, பொதுநிலை யொழுக்கத்தில்தான் இருக்கிறது என்பதுதான் உண்மை. தன்னிலை ஒழுக்கம், பொதுநிலைவொழுக்கத்திற்கு வழிவகுக் காது போனால், பயனில்லை.

அதுபோலவே, பொதுநிலை ஒழுக்கம் நிலைபெற வேண்டுமானாலும் தன்னிலை ஒழுக்கமும் தேவை. ஒரோ வழி, பொதுநிலை ஒழுக்கத்தில் வளர்ந்திருந்து தன்னிலை ஒழுக்கத்தில் தவறுகள் இருந்தாலும் தரணி தாங்கிக் கொள்ளும். ஆனால் பொதுநிலை ஒழுக்கத்தில் ஏற்படும் புரை, வேறு ஒழுக்கக் கேடுகளுக்குக் காரணமாக அமைகிறது.

திருவள்ளுவர், மனிதனின் தனி வாழ்க்கையிலும் சரி, சமூகப் பொதுநிலை வாழ்க்கையிலும் சரி சிறப்புக்கும் நல்லின்பத்திற்கும் அடிப்படை ஒழுக்கமென்றே கூறுகிறார்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

என்பது குறள்.

உலகியலில் அனைத்துத் துறையிலும் துய்ப்பிற்கு மூலமாய், முதலாய் இருப்பது உயிரே! உயிரில்லையாயின் உடல் தனியே துய்ப்பிற்குத் தகுதியற்றதாகி விடும்; மதிப்பற்ற தாகிவிடும். அஃது ஒரு பிணம். உயிரற்ற உடலால் என்ன பயன்? ஆதலால், வாழ்க்கையின் உண்மை உணர்ந்தோர் உயிரைப் பேணத் துடிப்பதைப்போல உயிர்க்கு உயிராயிருந்து

உயிரைப் பொருளுடையதாகப் புகழுடையதாக ஆக்கும் ஒழுக்கம் உயிரினும் சிறந்தது.

உயிரின் இன்பநெறித் துய்ப்பிற்கும் பெருமைக்கும் ஒழுக்கம் காரணமாக ஆதலால், "உயிரினும் ஓம்பப்படும்" என்றார். ஓம்புதல் என்ற சொல், தொடர்ச்சியாகப் பேணுதல்-பாதுகாத்தல் என்ற பொருள் தரும். ஒழுக்க நெறி நிற்பார்க்கு இழுக்கல் வருவது இயற்கை.

இழுக்கல் வந்துழியும் ஒழுக்கத்தில் தாழாது, இடையறாது இடர்களையும் தாங்கிக்கொண்டு ஒழுக்கத்தைப் பேணுதல் வேண்டும் என்ற குறிப்புத் தோன்ற "ஓம்பப்படும்" என்றார். வாழ்க்கை யென்ற மாளிகைக்கு உண்மையான ஒளியூட்டுவது ஒழுக்கமேயாம்.

## பத்திமை—அருள்

**வா**ய்மை நெறியை முயன்று அடைதல் அரிது. பெற்ற வாய்மையைப் பேணிப் பாதுகாக்கத் துணை செய்வது பக்தி. பத்திமை என்பது முழு நிறை ஞானத்தில் தோன்றும் உணர்வு; உயிரினை இன்ப அன்பில் வளர்க்கும் உணவு. பக்தி, நிறைவில் விளையும் ஆக்கம். பத்திமையால் பழவினைகள் மாறும்.

நேற்றைய துன்பங்கள் துடைத்து எறியப்படும். துன்பத்திற்குரிய காரணங்களும் அகற்றப்படும். நிகழ்கின்ற வினை அனைத்தும் தூய தவமாக அமைந்திருக்கும். ஆதலால் எதிர்வினை இல்லை. இந்நிலையிலேயே "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற முழக்கம் கேட்கிறது. துன்பத்திற்குக் காரணமாய மாசுகளினின்றும் அதாவது அவாக்களினின்றும் அறவே விலகிய புலன்களே பத்திமையில் தோய்ந்த புலன்கள்.

ஆரூரர், தில்லையின் திரு நடனத்தை ஐந்து பேரறிவும் ஒரு நெறியில் நின்று வழிபாடு செய்த நிலையே பத்திமையின் முதிர்ந்த நிலை. பொறிகளும் புலன்களும் அருள் வழியால் தலைவன் வழியில் நிற்கும்போது. ஏது துன்பம்? எரிகின்ற நெருப்பில் குப்பைகள் விழுந்தால் நெருப்பு அணையாது. தூய்மை கெடாது. ஆனால், குப்பை எரியும். குப்பைகள் தூய்மையுறும்.

பத்திமையுடையோர் எங்கும் இறையருளைக் காண்பர்; எதிலும் இறையருளைக் காண்பர்; அவர்களுக்கு விருப்பும் இல்லை. வெறுப்பும் இல்லை, பகைவரும் இல்லை, நண்பரும் இல்லை. மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கித் தண்ணீர் ஓடி வருவதைப் போலப் "பள்ளந்தாழ் உறுபுன லாகத்" திருவருளை நோக்கியே உணரத் தலைப்படுவர். செயல் செய்வர். பத்திமை என்பது செயலற்ற நிலையன்று. செயல் நிறைந்த நிலை.

ஆனாலும் பத்திமையின்பாற்பட்டொழுகுபவர்கள் செய்யும் செயலில் இலாப நோக்கு இல்லை. புகழ் நாட்டமில்லை. உயிர்கள் இன்புறுதலே நாட்டம். பத்திமையிற் பழுத்தவர்கள் வேற்றுமைகளை அகற்றுவர். ஒருமைப் பாட்டை வளர்ப்பர். அதுவே தூய அருள் நெறி.

**வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை யில,**

என்பார் வள்ளுவர். துன்பத்தின் பிறப்பிடமே வேண்டுதல் வேண்டாமை தான். உண்ணுதற்குத் தகுதியில்லாத கிழங்கை உண்ணும் நிலைக்குச் சுவையாக்கித் தருவது அவித்தல் தொழில். கிழங்கு அவித்தல், இட்டலி அவித்தல், இடியாப்பம் அவித்தல் என்ற சொல் வழக்கை அறிக. அதுபோல் தனக்கும் மற்றவர்களுக்கும் சுவையற்றவையாக–ஆனாலும் சுவை யுடையன போல நடிக்கும் பொறிகளை அன்பில் நனைத்து, உணர்வுகளை அவித்தலே பத்திமை நெறி.

ஐம்பொறிகளை அடக்குதல் என்பது பொருந்தா வழக்கு. இயலுவதும் அன்று. ஐம்பொறிகளை, தன்னல வழியில் நாடிச் செல்லும் பொறிகளை மடைமாற்றிப் பத்திமையில்— அருள் வழியில் செலுத்துக என்பார் திருமூலர்.

உண்ணுதல் நாள்தோறும் நடைபெறும் கடமை. உண்ணுதற்காகவே வாழ்தல் விலங்கியல்பு. வாழ்தலுக்காக உண்பது வளர்ந்த நிலை. மற்றவர்களை வாழ்விக்க வாழ்தல் பத்திமையில் பழுத்த அருள்நிலை. மற்றவர்களை வாழ்விப்பதற்குரிய தொண்டு செய்ய உடல்நலம் வேண்டும் என்பதற்காக உண்பது அருள்நிலை. பொருளை இவறிக் கூட்டி எண்ணிச் சேர்ப்பதற்காக ஈட்டுவது அசுர குணம். இரப்பவர்க்கு ஈந்து உதவப் பொருள் வேண்டும் என்று ஈட்டுவது தவம்: அறநெறி முயற்சி.

பொறிகளால் மற்றவர்களுக்குத் துன்பம் தாராமல் அவித்துப் பக்குவப்படுத்திய நிலையே அன்பின் நிலை; இன்ப நிலை. அப்போதே இறைவன் அருள் அவர்கள் வாயிலாக வையத்திற்குக் கிடைக்கிறது. எல்லாச் செல்வத்திலும் மேற்பட்டது அருட்செல்வம்.

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்

என்பது வள்ளுவம்.

அருள் நெறியில் வையகம் வளரும் பொழுது துன்பம் தீரும். என்றும் இன்பம்பெருகும். குறைவிலாது உயிர்கள் வாழும். நீதி நிலவும். விண்ணகத்தை மண்ணகத்தில் காணலாம். அதுவே வள்ளுவர் வழி. அவ்வழியில் சென்று வாழ்க்கையாகிய மாளிகையைக் கட்டுவோம். அந்த மாளிகையில் நானிலத்தார் அனைவரும் ஒரு குலமாகக் கூடிக் கலந்துண்டு மகிழ்வோம்.

தி.II.6.

# செல்வம்

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்" என்பது வள்ளுவர் திருவாக்கு. செல்வங்களில் எல்லாம் சிறந்தது செவி வழியாகக் கேட்கும் கேள்விச் செல்வம். ஏன்? ஏனைச் செல்வங்களை யெல்லாம் பெறுதற்குத் துணையாய அறிவினை வழங்குவதில், கேள்வி துணை செய்வதைப் போலப் பிறிதொன்று துணை செய்வதில்லை. ஏன்? கற்கும் கல்வியின் மூலம் அறிவு பெற நூல்களைக் கற்கின்றோம்.

நூல்களை ஆக்கியோர் எல்லோரும் முழுமையான பட்டறிவுடையோர் என்று கூறுதல் இயலாது. அதோடு நூல்களின் ஆசிரியன் காலமும் வாழ்கின்ற நமது காலமும் மாறுபட்டன. ஆதலால், நூல்கள் நடைமுறை வாழ்க்கைக்கு ஓரளவுதான் துணை செய்யும். ஆனால், கேள்வியோ நமது காலத்திலேயே வாழும் மனிதர் சொல்வது; அதுமட்டுமல்ல. இங்கே சொல்லுபவர் பல நூல்களைக் கற்றவராகவும், அனுபவங்களைப் பெற்றவராகவும் இருப்பார். மேலும், நூலாசிரியன் சொல்லுகிற ஆசிரியன் அளவுக்கு உணர்விற் கலப்பதில்லை. ஆதலால், நூல்கள் கற்கும் முயற்சியிலும் சிறப்புடையதே ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் சொல்வதைக் கேட்பது.

இங்ஙனம், செவிச் செல்வம் உயர்ந்ததாயினும் நூல்களைக் கற்பதால் விளையும் தீங்கைவிடச் செவியினால் விளையும் தீங்கும் அதிகமாகின்றது. நூல்களைக் கற்க முயற்சி தேவை. இந்த முயற்சியை எளிதில் எல்லோரும் பெறுவ தில்லை. ஆனால், செவிகள் எப்போதும் திறந்த நிலையின; கேட்டுக் கொண்டேயிருக்கும் இயல்பின.

அதுபோலவே, நூலாசிரியர்களாக எல்லோரும் ஆகி விடுவதில்லை. மிகச் சிலர்தான் எழுதுகின்றனர். ஆனால், வாய் படைத்தவர்களெல்லாம் சொல்லுகின்றனர். எதைச் சொல்லுகின்றோம் என்று எண்ணிக்கூடப் பார்த்துச் சொல்லும் தகுதி யில்லாதவர்கள், இன்று சொல்லுகின்றனர்.

நூலிலே விளையும் குற்றங்களை விடச் சொல்லிலே விளையும் குற்றங்கள் மிகுதி. வள்ளுவர் சொல்லிலே தோன்றும் குற்றங்களை, வகுத்தும் விரித்தும் கூறியுள்ளார்.

அதாவது, பயனில சொல், நயனில சொல், இன்னா கூறல், புறங்கூறல், பொய்மை, தீச்சொல் என்றெல்லாம் சொல்லில்வரும் குற்றங்களை எடுத்துக்காட்டியுள்ளார். வாய் படைத்தவர்கள் உண்ணலாம்; அது அவர்களின் ஏகபோக உரிமை. அந்த உரிமையில் நாம் யாரும் தலையிடத் தயாராயில்லை. ஆனால், வாய் படைத்தவரெல்லாம் சொல்லத் தொடங்கினால், அது மற்றவர்க்கு அல்லவா வேதனையாகிறது.

இன்று 'வதந்தி' என்ற ஒரு புதுவகைச் சொல் சமுதாயத்தை எவ்வளவு அலைக்கழித்து வருகிறது! அது போலவே, அரசியலின் பேரால் நடைபெறும் மேடைகளில் இன்று வார்த்தைகளா வழங்கப்பெறுகின்றன! இல்லை, இல்லை வசையேதான்! ஆதலால், செவிச்செல்வம் உயர்ந் ததும் கூட! ஆனால் அதை அடைவது எளிதன்று. அதனால் தான் வள்ளுவம் "எனைத்தானும் நல்லவை கேட்க!" என்றது.

இன்று நிறைவான செவிச்செல்வம் மிகுதியும் கிடைப்ப தில்லை. ஒன்றைச் சொல்லும் தகுதி, நிறைந்த பட்டறிவுடை யோருக்கேயுண்டு. ஆனால், இன்று நம் நாட்டில் ஒரு புதுவிதமான விவாதம் தொடங்கியுள்ளது. அது என்ன? சொல்லுகிறவருடைய சிந்தனையும் செயலும் ஒத்திருக்க வேண்டுமென்பது. இந்தக் கொள்கை, கொள்கை யளவில் தவறில்லை; அல்லது மனிதனின் பரிணாம வளர்ச்சி என்பதை மையமாகக் கொண்டு எண்ணும்பொழுது இக்கொள்கை நடைமுறைக்கு இசைந்ததன்று.

ஏரித்தண்ணீரில் வீழ்ந்து தவிக்கும் ஒருவன், கரையில் நிற்பவனை 'ஏரி ஆழமானது; வீழ்ந்து விடாதே!" என்று எச்சரிப்பதில் என்ன தவறு? ஒன்றில் வீழ்ந்து தத்தளிப்பவர் தானே மற்றவர்களை விழாதே என்று எச்சரிக்க முடியும்.

அதுபோலவே வாழ்க்கையில் தவறுகள் செய்தவர்களும், தவறுகளை நினைந்து வருந்துபவர்களும், தவறுகளிலிருந்து மீளப் போராடிக் கொண்டிருப்பவர்களும் மற்றவர்களைத் தவறு செய்யாதே என்று கூறுவது தவறு அன்று. ஆயினும், சொல்பவர் முழுமையான அனுபவ முதிர்ச்சியுடைய வராகவும், கேட்போரிடம் கங்குகரையற்ற பரிவு உடையவ ராகவும் இருத்தல் வேண்டும்.

ஆதலால், செவி கேட்பதற்குரியது; கேட்பதன் மூலம் நிறைந்த ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்குரியது. ஆனால், செவிச் செல்வத்தைத் தேர்ந்து கேட்க வேண்டும்! தெளிந்து கைக்கொள்ள வேண்டும். இயல்பான வடிகட்டிகள் செவிகளுக்கு இல்லாததால், நாம் நம்முடைய பகுத்தறிவை வடிகட்டியாகப் பயன்படுத்திக்கொள்ளாமல், செவியிற் கேட்பதைச் செயலுக்குக் கொண்டுவரக் கூடாது: பகுத்தறி வோடு தொடர்பில்லாத செவிவழிச் சொற்கள், உணர்ச்சி களையே தூண்டும். இவை அறிவுக்கும் பயன்படா. ஆள்வினைக்கும் துணை செய்யா; வாழ்க்கைக்கும் உதவா.

ஆதலால், செவியினை முறையாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வது அவசியம். வாய்ப்பிருந்து நல்ல செவிச் செல்வம் கிடைக்குமானால், கோடை மழை பெய்ததைப் போல ஆன்மா செழிக்கும். அதனால்தானே, ஆன்றோர் காலந்தொட்டு உணர்வைத் தரும் தகுதியில் நூலினும் மிகவும் சிறந்தவர் அதனை விளக்கிச் சொல்லும் ஆசிரியனே என்பதைச் சமய மரபில் தோன்றிய ஆலமர் செல்வனிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. செவிச்செல்வம் கொள்வோம்! தேர்ந்து கொள்வோம்! தெளிந்து செயற்படுவோம்!

*செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்*
*செல்வத்துள் எல்லாம் தலை.*

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு.*

## திருக்குறள் தேசீய நூல்

உயிர்க்குலம் எண்ணில; அளப்பில; கணக்கில் வந்துள்ள உயிர்க்குலம் ஒரு பகுதியே! பெயர் பெற்று வழக்கில் வந்துள்ள உயிர்க்குலமும் ஒரு பகுதியே! நம்முடைய கவனத்தைக் கடந்து-பெயர்களைக் கடந்து வாழும் உயிர்க்குலம் பலப் பல. உயிர்க்குலத்தின் எண்ணிக்கை பல நூறாயிரமாக இருப்பினும் அவற்றுள் விஞ்சிய பெருமை மனித உயிருக்கே உண்டு. மானிட உயிர் விலைமதிப்பற்றது.

பலநூறு ஆண்டுகளின் வளர்ச்சியில்—முதிர்ச்சியில் முகிழ்த்ததே மானிட உயிர். மற்றைய உயிர்த்தொகுதிகள் வெற்றிக்கு ஆட்படுபவை. மானிட உயிர் வெற்றிகளை ஆளுபவை. "மானுடம் வென்றதம்மா!" என்பான் கம்பன். மானிட உயிரின் அருமை நோக்கித்தானே "மனிதப் பிறவியும் வேண்டுவதே" என்றார் அப்பரடிகள். இயல்பில் மானிட சாதி உயர்வுடையதே.

ஆயினும்; உயர்வுக்குரிய காரணங்கள் முற்றப் பொருந்தாவிடின் "மானிட அமைப்பில் விலங்குகள்" என்று இலக்கியம் ஏசும்; சான்றோர் பழிப்பர்! மானிட சாதியின் உயர்வுக்கு அடிப்படை அது அறிவுள்ளது என்பதுதான்! மனம் உள்ளது. இல்லை. இருக்கும் மனம் இயங்குவது; உணர்வுடையது. இந்தச் சிறப்பியல்புகள் சிறப்பாக அமையாது போனால் மானிட சாதியிலும் விலங்கியல் உணர்ச்சிகளின் வெளிப்பாடுகள் காரணமாக வேற்றுமைகள் கால் கொள்கின்றன. அவ்வழி பகை கால்கொள்கின்றது; கலகங்கள் தோன்றுகின்றன போர்கள் மூளுகின்றன. வளம்-வறுமை வேறுபாடுகளின் காரணமாகப் பொதுமை மறைகிறது.

இந்தக் குறைகள் நீங்க மனிதனைச் சிந்திக்கப் பழக்க வேண்டும். அவனுடைய அறிவுப் புலனை இயக்குதல் வேண்டும். மனத்தின் இயக்கத்தை வெளிப்படுத்துவது உணர்வே. உணர்வின் மையம் கருத்துக்களே! கருத்துக்களைப் பெறும் வாயில் கற்றலும் கேட்டலுமாம். கற்ற-கேட்ட நற்செய்திகளின் வழி வாழ்க்கையை இயக்கும்பொழுது அறிவு தோன்றுகிறது. அறிவு மற்றவர்களோடு பழகும்பொழுது ஒழுக்கமாக உருப்பெறுகிறது.

இத்தகைய மானிட சாதியின் ஒழுக்கம் சிறப்புற அமைய வேண்டும். மனித குலத்தில் பொது ஒழுக்கம் சிறக்குமாயின் ஒருலகம் தானே தோன்றும். இன்று "ஒருலகம்" என்பது வாய்ப்பேச்சே! "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்பது மேடையோடு சரி! "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்!" இந்த முழக்கம் பஜனை மடங்களிலேயே கேட்கிறது. ஆனால், பஜனை முடிவில் மரியாதை யாருக்கு? என்ற சண்டை நீங்கினபாடில்லை. சுண்டல் விநியோகச் சிக்கல்கள் தீர்ந்தபாடில்லை. அன்பிற் பிறந்த மதங்கள் ஆதிக்க உணர்வுடையவர்களின் கையில் சிக்கி மதச்சண்டைகள் மலிந்து வருகின்றன.

பாபத்தை நீக்க—புண்ணியத்தை வழங்கத் தோன்றிய பிரார்த்தனைக் கூடங்கள் பணம் பேரம் பேசும் வணிக நிலையங்களாக உருமாறிவிட்டன. இவ்வளவுக்கும் காரணம் மனிதமனம் தடம்புரண்டதுதான்! தடம் மாறியதற்குக் காரணம் தகுதியல்லாத போதனைகள்; எல்லைவயப்பட்ட சிறுமைச் சிந்தனைகள்! மனித உலகம் மேம்பாடடைய மனம் திருந்த வேண்டும். மனம் திருந்த மருந்து நற்கருத்தேயாம். நச்சுத் தன்மையான கருத்துக்கள் எழுத்தில், பேச்சில் அகற்றப்பெற வேண்டும். உயர்ந்த கருத்துகள் ஊட்டப் பெறுதல் வேண்டும்.

உயர் கருத்துகளே மானிட சாதியின் புகழுக்கு ஊற்று. இத்தகைய உயர் கருத்துகள் உலக மொழிகளில் உள்ளன; சமயச் சாத்திரங்களில் உள்ளன. ஆயினும் முழுமையான நலக்கருத்துகளே நமக்குத் தேவை. காலத்தின் விளைவாகச் சில உயர்ந்த கருத்துக்களோடு களையும் கலந்திருக்கும். களை நீக்குதல் கற்றறிந்தார் கடன். எந்த விலை கொடுத்தும் மனிதகுல ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற வேண்டும். ஒருமைப்பாட்டுக்குரியதான கருத்துக்களையே வற்புறுத்த வேண்டும்; விளக்க வேண்டும்; எழுத வேண்டும்! பேச வேண்டும்.

ஆனால் ஒரு தற்காப்பு விதியும் தேவை. புலிக்கும் பூனைக்கு மிடையில் ஒருமைப்பாடு நிலவத்தான் வேண்டும். ஆனால் புலி, புலியாகவே பூனையை எடுத்துச் சாப்பிடும் பட்சத்தில், பழக்கத்தில் இருக்கும் வரையில் பூனையிடம் போய், புலியிடம் நேசமாக இரு என்று பேசுவது நெறியும் அன்று; முறையும் அன்று.

அதுபோலத்தான் ஆண்டான்-அடிமை; உடையார்-இல்லாதார், உயர்ந்தார்-தாழ்ந்தார் என்ற வேறுபாடுகளைச் சகித்துக் கொள்கின்ற ஒருமைப்பாடு. உபதேசம் நீதிக்குத் துணை செய்யாது. ஆதலால், மனிதகுல ஒருமைப்பாட்டுத் தத்துவம் மிகமிக உயர்ந்தது. அதை நோக்கித்தான் உலக அறிஞர்கள் கருத்துக்களைத் தீட்டினர். சமய ஞானியர் சித்தாந்தங்களைக் கண்டனர். ஆயினும், வேற்றுமைகளே வளர்ந்து வந்துள்ளன. எல்லைகளே பெருகியுள்ளன. இதயங்கள் சுருங்கி வந்துள்ளன.

இன்று சுருங்கிக் காட்சியளிக்கும் மனித இதயத்தை விரிவடையச் செய்ய - வேற்றுமைகளைக் குறைக்க-வேற்றுமைகளைக் கடந்த ஒருமைப்பாட்டைக் காண-ஒருமைப்பாடுடைய ஒருலகம் காண முயற்சி செய்ய

வேண்டும். அந்த வழியை நமக்குக் காட்டும் கருத்து எது? அக்கருத்தினை வழங்கும் நூல் எது? அது உலகப் பொது மறையான திருக்குறள் ஒன்றே.

*யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
*சாந்துணையுங் கல்லாத வாறு.*

*உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
*அனைத்தே புலவர் தொழில்.*

## நாட்டு வெறி உண்டாக்காத இலக்கியம்

இந்த உலகம் விரிந்தது; பரந்தது. கட்புலனுக்கு வந்துள்ள உலகமே நமக்குத் தோன்றுகிறது. கட்புலனுக்கு வராத உலகமும் உண்டு. இந்த விரிந்த உலகம் உயிரினங்கள் வளர்ந்து வாழவே. இயற்கையின் மாறுபாடுகளால் உலகம் பிரிக்கப் பட்டிருக்கிறது. உலகத்தை இயற்கையில் பிரித்திருப்பது வேலியல்ல; இயற்கையின் சின்னங்களே!

ஆழமான கடல்கள்! உயரமான மலைகள்! இவைகளே இன்று உலகத்தைப் பிரித்துக் காட்டும் எல்லைகள்! இவையும் நிலையான எல்லைக்கோடுகளல்ல. இன்று கடலாக இருப்பவை ஒரு காலத்தில் மலையாகவும், இன்று மலையாக இருக்குமிடங்கள் ஒரு காலத்தில் கடற் பகுதியாகவும் இருந்துள்ளன. ஊழி மாற்றங்கள் உலகத்திற்கு உருமாற்றங்கள் தந்துள்ளன. அதனால், உலகம் முழுவதும் ஒருநாடே என்ற சிறந்த உணர்வு தோன்ற வேண்டும்.

தகுதி வாய்ந்த மனிதர்கள் என்றும் எல்லைகளைக் கடந்தே வாழ்ந்து வந்துள்ளனர். எல்லைகள் சிறுமைத் தனமுடையன. எல்லைகளைக் கடந்து அன்பு பாராட்டுதல் உயரிய பண்பு. மனித சமுதாயத்தின் தொடக்க காலத்தில் நாடு, எல்லை நிர்ணயிப்புப் போராட்டங்கள் இருந்ததில்லை.

மக்கள் சுதந்திரமாக வாழ்ந்தனர். உலகின் பரப்பளவு அதிகமாக இருந்ததாலும், இயற்கைத் தடைகள் இருந்ததாலும் உறவுகள் வளராமல் இருந்திருக்கலாம்; ஆனாலும் பகையில்லை. அதற்கு மாறாக எனது நாடு, உனது நாடு என்று நாட்டுப் பற்றுக்களை வளர்ப்பது நன்றன்று. இந்தக் குறுகிய நாட்டுப் பற்றுக்களின் காரணமாகவே ஒருநாடு இன்னொரு நாட்டோடு மோதுகிறது. நாட்டுக்கும் நாட்டுக்கும் இடையே சண்டைகள்! ஒரே சமயத்தைச் சார்ந்த இரண்டு நாட்டில் வாழும் மதத்தலைவர்கள் தத்தம் நாடு வெற்றி பெற வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கும் வேடிக்கையை ஐரோப்பிய வரலாற்றில் பார்க்கின்றோம்.

இந்திய மொழி இலக்கியங்களில்கூட மன்னர் வழி நாட்டுச் சண்டைகள் ஏராளம்! புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலை முதலிய நூல்கள் இத்தகைய சண்டை களைத்தானே வருணிக்கின்றன! உலகு தோன்றிய நாள் தொட்டு நாளதுவரை நாட்டுப்பற்றின் காரணமாகவும், ஆக்கிரமிப்புக்களின் காரணமாகவும் நடைபெற்று வந்துள்ள போர்கள் பலப்பல. மனித சக்தியில் ஒரு கணிசமான விழுக்காடு நேற்றும் போரிலேயே கழிந்திருக்கிறது; இன்றும் கழிந்து வருகிறது; போரில் செலவழிந்த-செலவழிந்து கொண்டிருக்கிற மனித சக்தியை மனித குலத்தின் ஆக்கத் திற்குப் பயன்படுத்தியிருந்தால் இந்த உலகைவிட்டு வறுமையை அறவே அகற்றியிருக்க முடியும். ஆனால் அந்த உயர்ந்த எண்ணம் உலகில் இன்னும் உருப்பெறவில்லை.

வாழப்பிறந்த உயிர்களையும் வாழும் உலகத்தையும் அழிப்பது நாட்டுப்பற்றாகாது. குறுகிய எல்லைக்குட்பட்ட நாட்டின் சிறப்பை எடுத்துக்கூறி,அதில் உணர்வை வளர்த்து நாட்டுப்பற்றை உண்டாக்கிப் பிற நாட்டாரோடு போராடத் தூண்டும் தன்மையனவாக அமைந்துள்ள இலக்கியங்கள் நாட்டு இலக்கியங்களாக-உலக இலக்கியங்களாகத் திகழும் தன்மையுடையனவாகா.

திருவள்ளுவர் காலத்திற்கு முன்பும், அவர் காலத்திலும் குறுகிய நாட்டுப்பற்று வளர்ந்து மனித உலகத்தை அழித்துக் கொண்டிருந்தது. ஆனால், திருவள்ளுவர் இந்த நாட்டுப் பற்றைக் கடந்து சிந்தித்தார். அவரது சிந்தனை உலகம் தழீஇயது. திருவள்ளுவர் நாடு பற்றிய பல குறட்பாக்கள் இயற்றி உள்ளார். எந்த நாட்டைப் பற்றி? தமிழ் நாட்டைப் பற்றியல்ல; "நேமம் நாட்"டைப் பற்றியுமல்ல. திருவள்ளுவர் காட்டும் நாடு, மக்கள் வாழும் நாடு.

வள்ளுவர் கூறும் நாட்டிலக்கணம்-எல்லைகளின் இலக்கணமல்ல. திருவள்ளுவர் நாட்டு எல்லைகளுக்கு உட்பட்டுத் தவிக்கும் மனிதனை எல்லைகளைக் கடந்து வளர்க்க ஆசைப்பட்டார். நாடு, எந்த நாடாக இருந்தாலென்ன? ஊர் எதுவாக இருந்தாலென்ன? அந்தந்த நாட்டையும் தான் பிறந்து வளர்ந்த நாட்டைப் போலவே உறவாலும் உணர்வாலும் ஆக்கிக் கொள்ள வேண்டும். அங்ஙனம் வாழக் கற்றுக் கொள்ளுதலே கல்வி என்றார்.

யாதானும் நாடாமால்

என்பது திருக்குறள். நாட்டுப்பற்று என்ற பெயரில் குறுகிய எல்லைப்பற்றை உண்டாக்கவில்லை. குறுகிய நாட்டுப்பற்றை அல்லது வெறியை உண்டாக்கத்தக்க வகையில் திருவள்ளுவர் ஒரு சொல்லைக்கூடப் பெய்யவில்லை, எந்த ஒரு மலையையும் கடலையும் ஆற்றையும் எடுத்துக்காட்டுக்குக் கூட அவர் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. திருவள்ளுவரின் நாடு இது அன்று; அது அன்று. மானிடசாதி வாழும் உலகமனைத்தும் அவருடைய நாடேயாகும்.

அப்படியானால், படை, அரண் ஆகியன பற்றி வள்ளுவர் கூறியுள்ளாரே என்று கேட்கலாம். அவை நாட்டெல்லையின் விரிவாக்கத்தை நோக்கமாகக் கொண்டு கூறியவையல்ல. அவை தற்காப்பு முயற்சி குறித்தனவே. நீதி,

மனிதகுலம் முழுவதுக்கும் உரிமையாகிற வரையில் நீதியை, நீதியிடமிருந்து காப்பாற்ற வேண்டியிருக்கிறது. காப்பாற்றும் முயற்சிக்கே வள்ளுவர், படை என குறிப்பிட்டுள்ளார்.

உலக இலக்கியங்களிலேயே நாட்டு வெறியை உண்டாக்காத இலக்கியம் திருக்குறள் ஒன்றே. மார்க்ஸ் மாமுனிவரும் குறுகிய எல்லைக்கோடுகளைக் கண்டிக்கிறார். பொதுவுடைமைத் தத்துவத்தின் இலக்கே சர்வதேசீயம்தான். இந்த இழையோட்டம் பழைய இலக்கியங்கள் சிலவற்றில் இல்லாமல் இல்லை. இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டு களுக்கு முன்பு தோன்றிய புறநானூற்றுப் புலவன் கணியன் பூங்குன்றன் ".யாதும் ஊரே யாவரும் கேளிர்!" என்று ஒலித்தது பாராட்டுதலுக்குரியது. ஆனால், அந்தத் தத்துவம் முழுமையடையவில்லை.

சேக்கிழாரும் கூட அற்புத நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் பொழுது "உலகம் உய்ய" என்று கூறியுள்ளார். ஆயினும் தொண்டை நாட்டைச் சேக்கிழார் பாராட்டுவதைப் பார்த்தால் தொண்டை நாட்டுப்பற்றே தோன்றும். அது அவர் காலத்தின் சூழ்நிலை.

ஆனால், திருக்குறள் படித்தால் நாட்டுப்பற்று வளரும். வள்ளுவர் காட்டும் நாடு எது? எல்லைகளில் சிக்கிச் சீரழியும் நிலப் பரப்புக்களை வள்ளுவர் நாடு என்று கருதவில்லை. மக்கள்வாழும் நிலமனைத்தும் வள்ளுவர்து நாடே. ஆதலால் குறுகிய எல்லைக் கோட்டுப் பற்றுக்களை அகற்றும் திருவள்ளுவரது திருக்குறளே தேசிய நூலாக இருப்பதற்குத் தகுதியுடையது.

*கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*

*தாமின் புறுவது உலகின் புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந் தார்.*

# மொழி வெறி உண்டாக்காத இலக்கியம்

நாட்டுப்பற்றை அடுத்துத் தோன்றுவது மொழிப் பற்று. மனித குலத்திற்கு மொழி இன்றியமையாதது. மொழித் தோற்றத்திற்குப் பிறகுதான் மனித உலகம் வளர்ந்திருக்கிறது. மொழித்தோற்றத்திற்குப் பிறகு, மொழிகளால் மனித குலம் பெற்றிருக்கும் கொடைகள் பலப்பல. ஒரு மனிதன், இன்னொரு மனிதனைப் புரிந்து கொள்ள மொழியே துணை செய்கிறது. மொழி வழிதான் காதல் சிறக்கிறது; நட்பு நனி வளர்கிறது: பக்தி மலர்கிறது; நாகரிகம் தோன்றுகிறது; பண்பாடு செழிக்கிறது.

மனிதன் பேசத் தொடங்கிய மொழியால் இவ்வளவு பயனைப் பெற்றிருந்தாலும் மொழி, உலக வரலாற்றில் மாறுபாடுகள் வளர்வதற்கும் துணையாய் இருந்திருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை. ஆனால் அது மொழியின் குறையன்று. மொழிப்பற்று மனிதனுக்கு விழிபோல இன்றியமையாதது; உயிரினும் இனியது. ஆயினும் ஒருமொழி எல்லையில் சிந்தனையைச் சிறைப்படுத்துதலும், அயல் மொழியை வெறுத்தலும் ஆகாது. மொழி வேறுபாடுகள் கால எல்லைகளின் மாறுபாட்டாலும், நில எல்லைகளின் தொலைவாலும் தோன்றியவையே! மொழி வேறுபாடு இயற்கையன்று. அதாவது முடிந்தால் மாற்ற முடியாததன்று. மொழிகள் தம்முள் மாறுபட்டாலும் உயர் தத்துவங்கள் மாறுபடுவதில்லை; 'ஆதலால் 'எனது மொழி', 'உனது மொழி' என்ற சண்டை-மனித குலத்திற்குத் தீமையையே தரும். ஒருமொழி எல்லைக்குள் சிறைப்படுத்திக் கொண்டு, சிந்தனையில் வறட்சியடைதல், வளர்ச்சிக்குத் துணை செய்யாது. மொழியில் உயர்வு, தாழ்வு பாராட்டுதலும், இன்ன மொழியில்தான் கடவுளை வணங்க லாம் என்பதும் மனித குலத்தின் ஒருமைப்பாட்டுக்கு

முரணானவை. வேற்றுமைப்படுத்தும் நெறியும், ஒருமைப் பாட்டுக்குத் துணை செய்யாது. உயர்வு தாழ்வு பாராட்டுதல், அவ்வழி இகழ்தல், அல்லது ஏற்றுதல் ஒருமைப்பாட்டுக்குத் துணை செய்யாது.

**ஒரு மனிதன் மிகச் சிறந்த பண்பாளனாக, நாகரிகமுடையவனாக வளர்ந்து வாழ விரும்பினால், குறைந்தது ஐந்து மொழிகளையாவது படிக்க வேண்டும்.** வீட்டுச் சாளரங் களைச் சாத்தி விட்டால் காற்றோட்டமில்லை. அறை வெப்பத்தன்மையடையும். அதுபோல பிறமொழிச் சாளரங் களை அடைத்து விட்டால்-மனிதன் மிகச் சின்ன மனிதனாக மாறிவிடுவான். அவனை அற்பப் புத்திகளே ஆட்டிப் படைக்கும். இன்றைய தமிழன் மிகச் சிறந்த தமிழனாக வளர-நான்கு மொழிகளையாவது கற்க வேண்டும். அவனுடைய தாய்மொழியாகிய தமிழ், தமிழோடு உயர் கலைகளில் இணைந்து வளர்ந்துள்ள சமஸ்கிருதம். இந்தி யர்கள் பலரோடு பேச இந்தி, அறிவியற் கலைகள் கற்க ஆங்கிலம். பழந்தமிழ்ப் பண்பாட்டோடு ஒத்த, கலை நாகரிக முடைய கிரேக்க மொழி ஆகியன கற்றால், வாழ்வில் புத்துணர்வு தோன்றும். தாய்மொழிப் பணியில் முழுமையாக ஈடுபட்டவர்கள் பிற மொழிகள் பயின்றாலும், தாய் மொழியை மறக்க மாட்டார்கள். மாறாகத் தாய்மொழி அறிவில் முறுகிவளர்வர்.

அதுபோலவே இந்தியாவின் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவரானாலும், தமிழைக் கற்காமல் ஒரு முழு இந்தியனாக உருப்பெற முடியாது. இங்ஙனம் பல மொழிகள் பயிற்சியும், பன்மொழிக் கருத்துக்கள் வெளிவரும் உணர்வும் தான் வாழ்வியலை வளர்க்கும். மொழிவழி வெறுப்பு சிந்தனையைத் தடுக்கும். அறிவுக்கு எல்லை கட்டும்: அருளுணர்வைத் தடுக்கும்; ஒருமைப்பாட்டுக்கு இடையூறாக முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும். இதனை நன்கு உணர்ந்த

திருவள்ளுவர்-தம் நூல் முழுவதும் மொழியின் பெயரைக் குறிப்பிடவில்லை.

திருவள்ளுவரின் மொழி-தமிழ்தான் என்பதற்குச் சான்று ஏது? திருவள்ளுவர் எந்த ஒரு மொழியையும் எடுத்துக் கூறவில்லை. ஆனால் அவர் பல நூல்களின் கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதற்கு நிறையச் சான்றுகள் உண்டு.

*பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்று ளெல்லாம் தலை*

என்ற திருக்குறளும்,

*உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து*
*அலகையா வைக்கப் படும்*

என்ற திருக்குறளும் எண்ணத்தக்கன. பரந்த தேசியத் தன்மைக்கு, மொழிப்பற்று தடையாக இருக்கக் கூடாது. திருக்குறள் எந்த ஒரு மொழிப்பற்றையும் வளர்க்கவில்லை. ஆதலால் "திருக்குறள் ஒரு தேசிய நூலாதற்குரிய" தகுதி முழுதும் பெற்றிருக்கிறது.

## இனவெறி உண்டாக்காத இலக்கியம்

இயற்கையின் அடிப்படையிலும், மெய்ந் நெறியின் அடிப்படையிலும், மனிதகுலம் ஒன்றேயாம். மனித குலத்திற்கு இடையேயுள்ள வேறுபாடுகள் மாறுபாடுகளாகா. முரண்பாடுகளும் இல்லை. அவை இயற்கையில் அமைந்த தவிர்க்க முடியாத வேறுபாடுகளேயாம். மனித குலத்தை நாட்டு அடிப்படையிலோ, நெறி நிற்கும் சமய அடிப்படை யிலோ வேற்றுமைப் படுத்துதல் தவறு.

திருவள்ளுவர், நாடு, மொழிகளைக் கடந்த சிந்தனையாளராக விளங்குவது போலவே இனங்களைக்

கடந்தவராகவும் விளங்குகிறார். திருவள்ளுவர் எந்த ஒரு இனத்தையும் உயர்த்தியும் பேசவில்லை; இழித்தும் கூறவில்லை. அதுமட்டுமின்றி உயிர்க் குலம் அனைத்திற்கும் ஒத்த உரிமை இருக்க வேண்டுமென்று ஐயத்திற்கு இடமின்றிக் கூறுகின்றார். உயிர்க்குலம் பிறப்பளவிற் பெறத்தக்க அடிப்படை உரிமைகளாகிய வாழும் உரிமை, கல்வி உரிமை, தொழில் செய்யும் உரிமை இவற்றில் எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்பது ஆகியன திருவள்ளுவர் கருத்து.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

என்பது திருக்குறள்.

திருவள்ளுவர் தம் நூலில் இனம், குலம், குடி என்று குறிப்பிட்டுப் பேசுவது உண்மை. இவைகளுக்குச் சில சிறப்பியல்புகளும் திருவள்ளுவர் தந்துள்ளார். ஆனால், இனம் என்ற சொல், திருக்குறளில் காட்டும் பொருள் வேறு. இன்று உலக வழக்கில் இனம் என்ற சொல் பெற்றிருக்கும் பொருள் வேறு. திருக்குறளில் இனம் என்ற சொல், ஒருவர் விரும்பி நலங்கருதி நாடிக் கொள்ளும் நட்பினைக் குறிக்கிறது.

ஆனால் இன்று உலக வழக்கில் இனம் என்ற சொல், பெரும்பாலும் மொழியின் அடிப்படையில் வழங்கப் பெறுகிறது. சிறு பகுதி சமய அடிப்படையிலும் வழங்கப் பெறுகிறது; சில இடங்களில் அகந்தையின் காரணமாக நிற அடிப்படையிலும், இனம் பிரித்துச் சுட்டப்படுகிறது. இங்ஙனம் குறிக்கப்பெறும் இனங்கள் திருக்குறளுக்கு உடன் பாடுடையன அல்ல. திருவள்ளுவர் நட்பு நெறியில் நல்லினத்தைச் சிறப்பிக்கின்றார். நட்பு நெறியில் இனம் என்று சொல்லப் பட்டாலும் அஃது ஒரு கூட்டத்தைக் குறிக்காது. ஒருவர் அல்லது இருவரையே குறிக்கும். நண்பர்கள் பலராதல் இயல்பன்று. நட்பினர் பலராதல் நலம் தராது. மாறாகத் தீமை தரும். நட்பியலில் சார்ந்தவரை இனம்

என்றது, பழகுவார் உடன் நின்று ஒத்துப் பழகி உயர்வினை வழங்கும் பாங்கினாலேயாகும்.

ஓர் எழுத்துக்கு இனமாகும் எழுத்து, பொருளைச் சிறப்பிக்கும்; செவிச் சுவையைக் கூட்டும். ஒரு சுவையுடைய பொருளுக்கு இனமாகும். மற்றொரு சுவைப்பொருள் பொருளின் சுவையை மேலும் கூட்டும். அதாவது, பாலுக்குத் தேன் இனம். அதுபோல ஒருவர் மற்றொருவருடன் கொள்ளும் நட்பு அவரை உயர்த்தும் வகையதாக அமைய வேண்டும். தாழ்த்துவதாக அமையின் அது தீது; அது சிற்றினம் என்று கூறித் திருவள்ளுவர் விலக்குவார்.

இங்கு, இனம் என்ற சொல், பண்பின் வழிப்பட்ட மனிதனைக் குறிக்கிறது என்பது தெளிவு. அது போலவே திருவள்ளுவர் குலம், குடி என்ற சொற்களையும் கையாளு கிறார். வடமொழி வழக்கில் நால்வகை வருணம் பேசப் பெறுகிறது. அதாவது பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர். இந்த நால்வகை வருணமும் கூடக் கூர்ந்து நோக்கின் பிறப்பின் அடிப்படையில் அல்ல; தொழிலின் அடிப்படையிலேயேயாகும்.

தொழிலின் அடிப்படையில் சிறப்புத் தன்மை எல்லோ ருக்கும் அமையாது என்பதை 'சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்' என்று திருவள்ளுவர் உடன்படுகிறார். ஆனால், தமிழ் வழக்கில் குலம் திரிந்ததைப்போல, இங்கும் நால்வகை வருணத்தின் பொருள் திரிந்து விட்டது. இன்று நால்வகை வருணம் பிறப்பின் அடிப்படையிலேயே வற்புறுத்தப்படுகின்றது. பண்டு, ஒரு வருணத்திலிருந்து இன்னொரு வருணத்திற்கு முறையாக வளர்ந்து உயர்த்திக் கொள்ளும் உரிமை இருந்தது. இன்று அந்த உரிமை மறுக்கப்படுகிறது.

வடமொழி வழக்கில் வசிஷ்டரும், தமிழ் வழக்கில் திருநாளைப்போவாரும் முறையாக வளர்ந்து உயர் வருணத்தை எய்தினர். அதை அன்றைய சமூகம் ஏற்றுக் கொண்டது. வசிஷ்டர் காலத்தில் எளிதாக இருந்த ஒன்று, திருநாளைப் போவார் காலத்தில் கடுமையாக இருந்தது என்பதை உய்த்துணர முடிகிறது. ஆனாலும், திருநாளைப் போவார் காலத்தில் உரிமைகள் முற்றாக மறுக்கப்பட வில்லை என்பது உண்மை.

திருவள்ளுவர் காலத்தில் குலம், குடி என்ற சொற்களுக் கிருந்த பொருள் வேறு. மாணிக்கவாசகர், அப்பரடிகள் காலத்தில் குலம் என்ற சொல்லுக்குரிய பொருள் திரிந்து போயிற்று. அப்பரடிகள் காலத்தில் குலம் என்ற சொல் பிறப்பின்வழி சாதியைக் குறிப்பதாக அமைந்து விட்டது. அதனால் அப்பரடிகள்,

சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?

என்று கேட்கிறார். மாணிக்கவாசகரும்,

சாதி, குலம் பிறப்பென்னும் சுழிப்
பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை

என்று குறிப்பிடுகின்றார். இங்குக் குலம் என்பது உயர் பொருளில் கையாளப்பெறவில்லை. திருவள்ளுவர் காலத்தில் குலம் என்ற சொல் குறிப்பிட்ட பண்பின் வழிக் கூடி வாழும் சிலரைக் குறித்தது. குலத்தின் இலக்கணமாகத் திருவள்ளுவர் கூறுவது நற்பண்புகளேயாம். பிறப்பை யாண்டும் குறிப்பிட வில்லை. குலம் என்பது ஓரிடத்தில் தொகுதியாக ஒரு நெறியில் கூடி வாழும் சிலரைக் குறிப்பதாகும். இந்தக் குல அமைப்பு, வேறுபாடுகளைத் தோற்றுவிக்காது உயர்வின் பாலே உய்த்துச் செலுத்தும்.

இதனாலேயே கம்பர்,

*குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிகட்கெல்லாம்*

என்றார். கம்பரின் கருத்து, அவர் சிந்தனைச் செழுமையே தவிர அவர் காலத்து நடைமுறை அதுவன்று.

திருவள்ளுவர் அடுத்துக் கையாளும் சொல், குடி என்பது. இதுவும் பண்பின் வழிப்பட்ட சொல்லேயாம். ஒரு தலைமுறையைக் குறிக்கும் சொல்லைத்தான் குடி என்று குறிப்பிடுகின்றார். ஒருவனுடைய வழிவழித் தலைமுறை, குடி என்று குறிப்பிடப்பெறும். மூதாதை என்று திருவாசகம் குறிப்பிடும். ஆக திருவள்ளுவர், மனிதகுலத்தை வேற்றுமைப் படுத்தும் இன, சாதி, வகுப்பு வேறுபாடுகளை ஊக்கு விக்கவில்லை. பரந்த தேசீய உணர்ச்சியை வளர்ப்பதற்குரிய விழுமிய நூல் திருக்குறளேயாம்.

திருக்குறள் காட்டும் குலம், திருக்குறள் காட்டும் குடி, திருக்குறள் காட்டும் இனம் ஆகியன நாட்டு வழிப்பட்டதல்ல. பிறப்பின் வழிப்பட்டதல்ல; பண்பாட்டின் வழி. வட துருவத்தில் வாழும் மனிதன், தென் துருவத்தில் வாழும் மனிதன் ஒருவனை இனமாகக் கொள்ளலாம். கொள்ள வேண்டும். இதுவே திருக்குறட் கருத்து.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாடு, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து மனிதர் எங்குப் பிறந்தாலும், ஒத்த உரிமையுடையவர்கள் என்று முழங்கிய திருக்குறள்,

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்,"*

என்று கூறியது. இந்நெறி வையகத்தில் வளர்க! ஒருமைப் பாட்டுக்குரிய ஒரு தனி நூல் திருக்குறளேயாகும்.

# தேசீயத் தன்மையுடைய நூல்

உயர்ந்த ஒருமைப்பாட்டை அளிக்கும் கருத்துகள் உலகில் எல்லா மொழிகளிலும் உண்டு. ஆயினும், வேற்றுமை என்பதை மறந்தும்கூடக் காட்டாது இனம், மொழி, சமயம் ஆகிய வேறுபாடுகளைக்கடந்து பொது நிலையில் தோன்றிய நூல், மக்களாகப் பிறந்தோர் பேசும் வேறு எம்மொழியிலும் இல்லை. தமிழில் உள்ள திருக்குறள்தான் அத்தகைய சிறப்புடைய நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய திருவள்ளுவர் மனிதகுல ஒருமைப்பாட்டுக்குரிய மிகச்சிறந்த நூலை இயற்றித் தந்தார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனித குலத்தில் நாட்டுச் சண்டைகள், மொழிச் சண்டைகள். சமயச் சண்டைகள், இனச் சண்டைகள் மலிந்திருந்த காலம். நாட்டுப்பற்றைப் பெரிதுபடுத்தி ஒருநாடு பிறிதொரு நாட்டோடு மோதி அழிப்பதை வீரம் என்று பாராட்டிச் சண்டைகளில் வெற்றி பெறுவதற்காகக் கடவுளைக்கூடப் பிரார்த்தனை செய்தனர். அந்த மாதிரியான காலச் சூழ்நிலையில் திருக்குறள் தோன்றியது தமிழகத்தின் ஒருமைப் பாட்டுணர்வுக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

தமிழகம் பழங்காலந்தொட்டே ஒருமையுணர்வைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்", "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்", "எல்லா உலகமும் ஆனாய் நீயே", "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற சொற் றொடர்கள், காலத்திற்குக் காலம் மனிதகுல ஒருமைப் பாட்டைத்,தமிழகம் வற்புறுத்தியமைக்கு எடுத்துக் காட்டுகள். இங்ஙனம் மிகச் சிறந்த ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள் தமிழகத்தில் தோன்றினாலும், தமிழகத்தில் ஒருமைப்பாடு வளரவில்லை யென்பது என்னவோ உண்மை.

கார்லைல் என்ற அறிஞன், "ஒரு நாட்டு மக்களை இணைக்கக்கூடிய ஆற்றல் மிக்க ஒரு தேசீய இலக்கியம் இருக்க வேண்டும்" என்று கூறுகின்றான். பாரதம் விடுதலை பெற்றிருக்கிறது. பாரதம் விடுதலை பெறும் பொழுதே நாடும் துண்டாடப்பட்டுவிட்டது. இயற்கையாக இருந்த ஒருநாடு சமயத்தின் காரணமாகத் துண்டாடப்பட்டுவிட்டது. இஃது என்றும் நீங்காத வேதனை. நாடு துண்டாடப்பட்டு விடுதலை பெற்ற பிறகும் எஞ்சியுள்ள நாட்டில் இன்னமும் உணர்வு பூர்வமான ஒருமைப்பாடு வளரவில்லை.

திரும்பத் திரும்ப ஜாதி, இன, மொழிக்கலவரங்கள் தலைதூக்குகின்றன. இந்திய நாட்டு மக்களிடம் வலிமைமிக்க ஒருமைப்பாடு தோன்றினால்தான் இந்தியாவின் விடுதலைக்குப் பாதுகாப்பு. பல்வேறு வேற்றுமைகளுடைய மக்களை ஒருநாட்டு மக்களாக்கக் கூடிய ஆற்றல் எந்த இலக்கியத்திற்கு இருக்கிறது? பாரத நாட்டில் எல்லா மாநிலங்களிலும் பரவியுள்ள காதைகள் இராமாயணமும், மகாபாரதமுமாம். இந்திய மொழிகள் எல்லாவற்றிலுமே இந்தக் காதைகள் இருக்கின்றன. இந்தக் காதைகள் தோன்றிய காலத்தில் அவை மக்களிடத்திற் சில பண்பாடுகளைத் தோற்றுவித்தன. இன்றைக்கும்கூடச் சில இன்றியமையாத சிறந்த மனித இயல்புகளைப் பெற இந்த நூல்களின் பயிற்சி துணை செய்யும்.

மகாபாரதம் வியாசமுனிவரால் செய்யப்பெற்றது. மூலம் வடமொழியிலுள்ள கதை. ஆனால், இந்திய மொழிகள் அனைத்திலும் பாரதம் உண்டு. தமிழில் பெருந்தேவனார் பாடிய பாரதமும், வில்லிப்புத்தூராழ்வார் பாரதமும், நல்லாப்பிள்ளை பாரதமும் ஆக மூன்றுண்டு. பின்னால் பாரதி, பாரதத்தின் ஒரு பகுதியைப் "பாஞ்சாலி சபதம்" என்று பாடியுள்ளான். தமிழகக் கிராமங்கள் முழுவதிலும் பாரதக் கதைக்குச் செல்வாக்கு உண்டு.

சாதாரணமாகக் கிராமங்களில் பாரதக் கதையை ஆண்களும் பெண்களும் கூடி இரவு முழுதும் கேட்பர். பாரதம் படித்தால் மழை பொழியும் என்ற நம்பிக்கை இன்றும் நிலவுகிறது. ஒரு மொழியில் தோன்றிய காவியம் மொழியால், வாழ்க்கை முறைால் மாறுபட்ட பிறிதொரு இனத்தில் செல்வாக்குப் பெறுவதென்பது சிறப்புத்தான். அந்த வகையில் மகாபாரதம் சிறந்த காவியம் என்பதில் கருத்து வேறுபாடில்லை.

ஆயினும் மகாபாரதம் ஒரு குடும்பத் தகராறில் பிறந்த காவியம்; சொத்துச் சண்டையில் பிறந்த காவியம். சொத்துக்களுக்காகப் பங்காளிகள் யுத்தம் செய்து கொள்ளும் கொடிய காட்சியைக் காவியத்தில் பார்க்க முடிகிறது. காவியத்தின் நாயகனே சூதாடுகிறான். பெருமைப்படுத்தப் பட வேண்டிய பெண்மை இழிவுப்படுத்தப்படும் அளவுக்கு வளர்ந்த சின்னத்தனம் காவியத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால், மகாபாரதக் காவியம் ஓரளவு வளர்ந்த- பக்குவப் பட்ட மக்களிடத்தில்தான் பயனைத்தர முடியும். அதோடு, மகாபாரதம் தனிமனித ஒழுகலாற்றுச் சிறப்புக்களை எடுத்துக் கூறுவதிலேயே சிறப்புற்று விளங்குகிறது. ஒருமைப்பாட்டுக்கு மகாபாரதம் பயன்படுவது ஓரளவே.

இராமகாதை மிகச் சிறந்த காவியம். தமிழில் கம்பன் மிக அற்புதமாக அக்காவியத்தைப் படைத்திருக்கிறான். இனிய நெறிகளை இலக்கியச் சுவையுடன் படைப்பதில் கம்பன் வெற்றி பெற்றுள்ளான். இராமகாதையும் ஓர் அரச குடும்பத்தின் காதையே. மாற்றாந்தாயின் கொடுமையால் கதை வளர்கிறது. இராமகாதையிலும் அண்ணன் தம்பிகளில் யாருக்கு அரசுரிமை என்ற பதவி மோதலே. ஆனால், இராமன் உரிமையின் பெயரால் மோதாமல் தம்பிக்கு விட்டுக் கொடுத்துத் தான் காட்டுக்குப் போய் விடுகின்றான். இராமனின் பண்பாடு, தியாகம் மிகமிக உயர்ந்தது.

மக்களாட்சி முறை நிலவும் நாட்டில் தேர்தல் வெற்றி, தோல்விகள் நெடிய காழ்ப்புக்கும் பகைக்கும் வித்திடுகின்றன. இராமனின் பண்பு நாடு முழுதும் கால் கொள்ளுமானால் அமைதியான தேர்தல் அரசியலில் நடைபெறும். இராம காதையில் ஒருமைப்பாட்டுக்குள்ள வித்துகள் நிறைய உண்டு.

அயோத்தியில் அரசகுடும்பத்தில் பிறந்த அண்ணல் இராமனுக்கு வானரகுலத்துச் சுக்கிரீவனும், அரக்கர் குலத்து வீடணனும், வேடுவர் குலத்துக் குகனும் உடன்பிறந்தார்களா கின்றனர். இஃது இனங்களைக் கடந்த ஒருமைப்பாடுதானே! ஆயினும், நாடு, பெண் தொடர்பான சண்டைகள், அவ்வழிப்பட்ட கொலைகள் மலிந்த காவியம். ஆதலால், இராமகாதை ஒருமைப்பாட்டுக்கு நூற்றுக்கு நூறு என்ற அளவில் துணை செய்ய இயலாது. இராமாயணம், பாரதம் என்ற நாட்டளவில் பயிலப்படும் இவ்விரண்டு காதைகளே ஒருமைப்பாட்டை வளர்க்க இயலாதென்றால் அந்த இடத்தில் வேறு எந்த நூலை வைத்து எண்ணுவது?

ஒருமைப்பாட்டை வளர்க்கும் தேசியத் தன்மையுடைய நூல் வேற்றுமைகளை-சண்டைகளை விளக்காத நூலாக இருக்க வேண்டும். பொதுவான அறங்களைக் காட்ட வேண்டும். எல்லா மொழிவழி இனத்திற்கும், அந்த நூல் கூறும் அறநெறி ஏற்புடையதாக இருக்கவேண்டும். எல்லோரும் படித்தற்கு எளிதாகவும் இருக்க வேண்டும். அது விதித்தன செய்ய வழிகாட்டும் நூலாகவும் இருக்கவேண்டும். செய்யத் தகாதனவற்றை விலக்க வழி காட்ட வேண்டும். இந்த வகையில் மனித குலத்தை ஒருமைப்பாடுடையதாக-வளர்க்கத்தக்கதாக அமைந்துள்ள ஒரே நூல் திருக்குறளே யாகும்.

*புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாம் கிழமை தரும்.*

*நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்*
*பண்புடை யாளர் தொடர்பு.*

# திருக்குறளில் சமவுடைமை

மனித உலகம் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் ஓடி விட்டன. மனித உலகத்தின் சென்ற கால வரலாறு சிந்தனைக் குரியது. மனித குலம், தோன்றிய காலத்தில் நாகரிகமாக வாழ்ந்திருக்க முடியாது. ஆனாலும் சுதந்திரம் நிச்சயமாக இருந்திருக்கும். மனித குலம் வளர, வளர உடைமை, உணர்வுகள், புறஇயல் நாகரிக உணர்வுகள் ஆகியவை வளர்ந் துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆனாலும் அதே பொழுது அவனுடைய வாழ்க்கை யில், அவன் அனுபவித்து வந்த சுதந்திரம் மெதுவாகக் குறைந்து வந்திருக்கிறது. அவன் சுதந்திரப் பறவையாக அச்சமின்றித் திரிந்து வாழ்ந்தது போய், ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு அச்சப்படும் சூழ்நிலை உருவா யிற்று. இந்தப் பலவீனத்தால் தோன்றியவைதான் பேரரசுகள்.

மனிதனின் வாழ்க்கையில் இயல்பிலேயே சுதந்திர உணர்வு ஊற்றெடுத்துக் கிடக்கிறது. இயற்கையின் காரண மாகவோ, சூழ்நிலையின் காரணமாகவோ உள்ளுணர்வை இயக்கி, ஒளியூட்டிக் கொள்ளப் பலர் தவறுவதினாலோ, சிலர் ஆள்கின்றவர்களாகவும், பலர் ஆளப்படுகின்றவர் களாகவும் சமுதாயத்தில் உருவாகி விடுகிறார்கள்.

காலத்தின் நியதி இங்ஙனம் படைத்தாலும், ஆளுகிற வர்கள், ஆளப்படுகிறவர்களுடைய நலத்தில் அக்கறை காட்டாமல், ஆளத் தொடங்கியபோது, அடிமை வாழ்க்கை முறை தோன்றியது. மனித குலத்தில், அடிமை வாழ்க்கை முறை தோன்றியதுதான், நாகரிக வீழ்ச்சியின் கடைசி எல்லை. அந்தக் கடைசி எல்லை வரையில் மனித உலகம் அறிந்தோ, அறியாமலோ சென்று விட்டது.

ஆனால் மனித குலம் தனது வீழ்ச்சியைத் தெரிந்து கொண்டு தெளிவு பெற்று, அடிமைத் தளையை அகற்றிடத்

துடித்தது. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இந்த ஆர்வம் தலையெடுக்காது போனாலும், ஐரோப்பிய நாடுகளில் சர்வாதிகாரத் தன்மையுடைய முடியாட்சியை எதிர்த்துப் புரட்சிகள் தோன்றின. புரட்சி என்பது வெளி உலகத்தில் தோன்றக் கூடியதன்று. எந்த மனித சாதி விடுதலையை அடைந்து அனுபவிக்க விரும்புகிறதோ, அந்த மனித சாதியில், அக நிலையிலேயே விடுதலை ஆர்வம் 'கொழுந்து' விட்டு எரிய வேண்டும். மாமேதை இலெனின் புரட்சி உருவாகும் விதத்தை அடியிற் காணுமாறு விளக்குகிறார்.

"கோழி முட்டை ஓட்டுக்குள் உயிர்க் கரு இருக்கிறது. அது வளர்ந்து வரும்போது அதனுடைய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் முட்டையின் ஓடு தடையாக இருக்கிறது. முட்டைக்குள் இருக்கும் குஞ்சு தன்னுடைய வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் ஓட்டை முட்டி முட்டி உடைக்கிறது. முட்டை ஓடு உடைகிறது. குஞ்சு வெளியே வருகிறது"

"அதுபோல மனிதன் வளர்ந்துவருகிறான். அல்லது மனிதகுலம் வளர்ந்து வருகிறது. தன்னுடைய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் சக்திகளை எதிர்த்துப் போராடுகிறான் – எதிர்த்துப் போராடும் மனப்பான்மையைப் பெறுகிறான் – புரட்சி தோன்றுகிறது; மனித உலகம் இயற்கை அளித்த சுதந்திரத்தை ஆழ்ந்து அனுபவிக்கிறது."

இங்ஙனம் மனித உலகம் செய்த புரட்சிகளில் நினைவில் நிலைத்து நிற்கும் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சியாகும். இது 1789ல் நடந்தது. **சர். வால்டேர் ரூசோ** இந்தப் புரட்சியை அறிவுக் கருவில் வைத்து வளர்த்துத் தந்தவர். 'சமுதாய ஒப்பந்தம்' என்ற அருமையான அரசியல் நூலைத் தந்ததும் ரூசோவே. மனித உலகம் முழுவதற்கும், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற தத்துவங்களையும்– மந்திரங்களையும் தந்தது பிரெஞ்சுப் புரட்சியே. பிரெஞ்சுப்

புரட்சிக்குப் பிறகுதான், உலகமெங்கும் விடுதலை முழக்கம் கேட்டது.

மக்கள் அரசியல் விடுதலை பெற்றாலும், வேறு விதமான சமூக ஆதிக்கங்கள் இருக்கவே செய்தன. அதாவது, பொருளாதார ஆதிக்கங்கள், மத, சமூக, ரீதியான கட்டுப்பாடுகளின் வழி மேலாதிக்கம் செய்து வந்தன. சமூகப் பொருளாதார ஆதிக்கத்தையும், மனித குலம் தாங்கிக் கொள்ளத் தயாராக இல்லை.

சமூகப் பொருளாதார ஆதிக்கங்களை எதிர்த்துக் கார்ஸ் மார்க்ஸ், மிக அருமையான ஒரு மனித இயல் விஞ்ஞான நூலை "மூலதனம்" என்ற பெயரில் தந்தார். கார்ல் மார்க்ஸ் தந்த 'மூலதனத் தத்துவத்தின்' அடிப்படையில் இலெனின் 1917-இல் சோவியத் புரட்சியைச் செய்து வெற்றி பெற்று ஏற்றத் தாழ்வற்ற-ஒப்பற்ற சமுதாயத்தை அமைத்தார். சோவியத்துப் புரட்சிக்குப் பிறகு உலக சமூகத்திற்குச் சோஷலிசம் என்ற ஒரு சமூகக் கொள்கை கிடைத்தது.

இன்றைக்கு இந்திய நாட்டில் சோஷலிசம் என்ற சித்தாந்தத்தை அனைத்து அரசியல் கட்சிகளும் பேசுகின்றன.

1955-ஆம் ஆண்டிலிருந்து இந்திய அரசியல் உலகில் சோஷலிசம் என்ற தத்துவத்தைப் பற்றிப் பேசாத அரசியல் தலைவர்கள் இல்லை; மேடையில்லை. ஆனாலும் சோஷ லிசத்தைப் பற்றித் தெளிவான கருத்து நமக்குக் கிடைக்க வில்லை. மேலும் நமது தமிழ்ச் சமுதாயம் வழி வழி வளர்த்து வந்துள்ள வாழ்வியல் மரபிற்கு இந்தச் சோஷலிசத் தத்துவம் இசைவு உடையதுதானா? இல்லையா? என்பதை ஆராய் வோம்.

திருவள்ளுவர் இயற்றித் தந்த திருக்குறள் இலக்கிய வடிவில் அமைந்தது. ஆனால் அது ஒரு இலக்கியம் மட்டு மன்று; அது ஒரு அரசியல், பொருளாதார, சமூக அறிவியல் நூல். இற்றைக்கு 2000ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர்

திருவள்ளுவர். காலத்தால் திருவள்ளுவர்க்கு மிகப் பிந்தியவர்களே ரூசோவும், கார்ல் மார்க்சும். ஆனாலும் திருவள்ளுவரின் அரசியல் சமுதாய பொருளாதாரச் சிந்தனைகள் மிக முற்போக்கானவை. கார்ல்மார்க்சீயச் சிந்தனைக் கருக்களைத் திருக்குறளில் காணலாம்.

இந்த நூற்றாண்டில் மனித குலத்தின் தேவை சோஷலிச சமுதாய அமைப்பு. தமிழர்கள், காரல் மார்க்சீயச் சிந்தனைக்கு எதிராகச் சிந்திக்காது போனாலும் தங்களுடைய சமுதாய அமைப்பு, திருவள்ளுவர் வழியதாக அமைய வேண்டும் என்றே விரும்புவார்கள். அதுவே இயற்கை.

## திருக்குறளை வாழ்க்கையில் பயில்க

திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள், உலகப் பொது மறை. மிகச் சிறந்த சமயநூல்; அறிவிற்கும் அனுபவத் திற்கும் உரிய சமயநூல். நம்பிக்கைக்கும் நல்லெண்ணத் திற்கும் உரிய ஒப்பற்ற நூல். கல்லாடர் கூறியதுபோல் “சமயக் கணக்கர் மதிவழிச்” செல்லாது, அதேபொழுது சமயத் தெளிவினைத் தரும் தெள்ளுதமிழ்ப் பொதுமறையாகத் திகழ்கின்றது.

திருக்குறள், கடவுள் நம்பிக்கையை ஒத்துக்கொள்கிறது; ஒரு கடவுளை ஒத்துக் கொள்கிறது. அந்தக் கடவுளை நிறைகுணங்களின் உருவமாகவே படைத்துக் காட்டுகிறது: ஆயினும், உயிர்க்குப் பற்றுக் கோடாகத் திகழவேண்டும் என்ற அடிப்படையில் திருவடியைக் காட்டுகிறது. இறைவன்றன் திருவடியைப் பேசுதல்-பற்றுதல் அருள் முதிர்ந்த உயர் நிலையாகும்.

திருக்குறளுக்கு உயிர் உண்டு என்ற கொள்கை உடன்பாடு. இந்த உயிர் ஒன்றல்ல, பலப்பல என்பதைப் பன்மை விகுதியிட்டுக் குறிப்பிட்டதனாலேயே அறிய

முடிகிறது. அதோடு, உயிர் இயல்பிலேயே அறியாமை உடையது என்பதும், உயிர் முயன்று அறிவினைப் பெற்று உயர முடியும் என்பதும், திருக்குறள் கொள்கை. உயிர்க்கு அறியாமையின் சார்பும், அச்சார்பினின்று விலக அவை செய்யும் அறிவு முயற்சியும், இம்முயற்சியில் அவை ஈடுபடும் பொழுது உருவாகும் வினைச் சார்புகளும், வினைச்சார்பு நீங்கிய பின், பெறுகின்ற விண்ணிற்குயர்ந்த தூய இன்பத் தையும் திருக்குறள் தெளிவாகப் பேசுகிறது. ஆதலால், திருக்குறள் உயிர்—இறை—தளை என்ற மூன்றும், என்றும் உள் பொருள் என்று நம்பும் தத்துவச் சமய நூலாகும்.

திருக்குறள் ஒரு பொதுமறை. ஆங்குப் பிறப்பினால் உருவாகக்கூடிய சாதி வேறுபாடுகள் இல்லை. "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்" எனினும், செயல்களாலும் குணங்களாலும் வேறுபாடுகள் இருந்தாலும், அவ்வேறுபாடு களைக் காட்டிக் கொள்ளக் கூடாது என்னும் பொருள்படச் "சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்றும் அறிவுறுத்துகின்றது.

திருக்குறள் ஒருகுலநெறி உணர்த்தும ஒருநூல்; வையத்து வாழும் இயல்பினைக் காட்டி வாழ்வாங்கு வாழச் செய்து வானுறையும் தெய்வத்துள் சேர்த்து, வானோர்க்கும் உயர்ந்த உலகம் அடையும் வழிகாட்டும் அருள்நூல். திருக்குறள் பயிற்சி, தெளிந்த அறிவைத் தரும். திருக்குறட் சார்பு சஞ்சலம் கெடுக்கும். திருக்குறள், பிறப்பின் அருமை காட்டி, பிறப்பின் பயன் கூட்டும் பேரற நூல். திருக்குறள் ஒழுக்கம், உயர்வு நலஞ்சான்ற ஒழுக்கமாகும். அஃதோர் அருளியலைக் காட்டும் மாமறை. திருக்குறளை வாழ்க்கையில் ஏற்று ஒழுகுதல், இன்ப அன்பினைத் தரும்; இறையருளில் சேர்க்கும். அனைவரும் திருக்குறள் பயில்க! திருக்குறள் நடையை வாழ்க்கையில் பயில்க!

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

# 2

# வாழ்க்கை விளக்கு

## என்ன செய்தோம்?

திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழாக் கொண்டாடுவதில் வழக்கம் போலத் தமிழகம் ஈடுபட்டிருக்கிறது. இந்த உலகிலேயே சடங்குகள் செய்து வாளா இருத்தலில் சமர்த்தர்கள் தமிழர்களேயாம். சிலைகள் எழுப்பியும் சின்னங்கள் காட்டியும் வழிபாடுகள் செய்தும் (வழிப்படுதல் அன்று) வாளா உறங்கும் உரிமை தமிழினத்தின் தனி உரிமையோ?

திருவள்ளுவர் பிறந்து ஈராயிரம் ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இந்த ஈராயிரம் ஆண்டுகளில் தமிழகத்தில் நிகழ்ந்ததென்ன? திருவள்ளுவர் தீதெனக்காட்டி விலக்கிய தீய ஒழுக்கத்திலிருந்து நாம் விடுதலை பெற்றிருக்கிறோமா? நன்று இதுவெனத் தேர்ந்து காட்டிய ஒழுக்க நெறிகளில் நிலை பெற்றிருக்கிறோமா?' திருக்குறளை ஈன்றெடுத்த தமிழினம் இன்று எந்தத் துறையில் விழுமிய சிறப்பினைப் பெற்று விளங்குகிறது? ஒரு பயனுமின்றி இரண்டாயிரம் ஆண்டுகளை உருட்டி விட்டோமே என்ற மகிழ்ச்சிக்கு விழாவா?

அல்லது திருக்குறளுக்கு விழாவா? விழாவெடுப்பதனாலேயே ஒரு நூல் சிறந்து விடுவதில்லை. விழாவெடுப்பவர்களின் தரத்தைப் பொறுத்தே விழாவுக்குச் சிறப்பு. திருவள்ளுவருக்கு நாம் என்ன கைம்மாறு செய்துள்ளோம்? அவருக்கு நன்றி யுடையவர்களாகவாவது இருந்திருக்கிறோமா?

இன்றைக்கு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத் தெட்டு ஆண்டுகட்கு முன்பு ஏசு பிறந்தார். ஏசுவைப் பின்பற்றிய மக்கள், ஏசுவையே கண்கண்ட தெய்வமெனப் போற்றும் - போற்றிப் பின்பற்றி ஒழுகும் ஒரு பெருங் கூட்டத்தை நாடு, மொழி, இனம், சமயம் கடந்து உருவாக்கியுள்ளனர். அவர்தம் பெயரால் மக்கள் சமுதாயத் தின் விழுமம் துடைக்கும் பணிமனைகள் பாரினில் பலப் பலவுண்டு. ஆனால் நாம் வள்ளுவருக்கு என்ன செய்தோம்?

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்,' என்றார் திருவள்ளுவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த இனிய உயிரொருமைப் பாட்டு நெறியினை எடுத்துக் காட்டி னார் திருவள்ளுவர். இன்றளவும், தமிழர்களிடையே உள்ள சாதிப் பிரிவினைகள் போகவில்லை. எல்லா உயிர்களும் பிறப்பொக்கும் என்று பேசும் திருக்குறளைப் பாராட்டும் நாட்டில் இனவழிப்பட்ட ஒருமைப் பாட்டைக்கூட இந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் காண முடியவில்லை. கவிஞன் இக்பால், இஸ்லாமிய சமுதாயத்தில் ஏற்படுத்திய மாறுதலைக் கூட திருவள்ளுவரால் தமிழினத்தில் செய்ய முடியவில்லை.

இன்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு கார்ல் மார்க்ஸ் தோன்றினார். பொருளாதார ஏற்றத் தாழ்வற்ற ஓர் ஒப்பற்ற சமுதாயத்தைக் காண 'மூலதனம்' என்ற அரிய நூலைச் செய்து தந்தார். கார்ல் மார்க்ஸுக்குக் கிடைத்த லெனின், ஸ்டாலின் ஆகிய சீடர்கள் உலகின் மக்கள் தொகையில் ஐந்திலொரு பகுதி மக்களைக் கார்ல்மார்க்ஸ் மாமுனிவரைக் கட்டுப்பாடாகப் பின்பற்றி. ஒழுகும்

மக்களாக ஆக்கியிருக்கிறார்கள். மற்ற பல நாடுகளிலும் அதனுடைய ஒளி வீச்சு இருக்கிறது. சோவியத் யூனியனில் ஏழைகளும் பிச்சைக்காரர்களும் இல்லாத நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். நம்முடைய திருவள்ளுவருந்தான் 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகி யற்றியான்' என்று நெஞ்சு துடிக்கக் கூறினார். இது கார்ல் மார்க்ஸுக்கும் முந்திய கருத்து. பிச்சையெடுக்கச் செய்யும் சமுதாயத்தை எதிர்த்தது மட்டுமின்றி அரசனையும் கடவுளையும் எதிர்த்துத் திருவள்ளுவர் முழங்கினார். ஈராயிரம் ஆண்டுகள் கழித்தும் இந்த நாட்டின் நிலை என்ன? பிச்சையெடுக்கிறவர்களின் எண்ணிக்கையாவது குறைந்திருக் கிறதா? குறைந்தபாடில்லை. பிச்சையெடுக்கக்கூடிய சூழ் நிலையை மாற்றாமல் பிச்சையெடுப்பவர்களைத் தடை செய்யும் சட்டத்தையல்லவோ செய்து சாதனை செய்திருக் கிறோம். திருவள்ளுவருக்கும் திருக்குறளுக்கும் நாம் என்ன தான் செய்திருக்கிறோம் என்பதைச் சிந்தனை செய்யுங்கள்.

சென்றது போகட்டும். இனிமேலாவது திருக்குறள் தமிழினத்தின் வாழ்க்கை நூலாக விளங்கும் நிலை உருவாக வேண்டும்.

## வள்ளுவரும்—லெனினும்

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் திருவள்ளுவர் தோன்றினார். அவர் திருக் குறளை இயற்றித் தந்தார். தமிழக மக்கள் போதிய நல்லூழ் இன்மையின் காரணமாகத் திருக்குறளை ஓர் இலக்கியமாக மட்டுமே கருதி, பதவுரை-பொழிப்புரை கண்டு அமைந்து விட்டனர். ஆனால், திருக்குறள் மனிதவியல் விஞ்ஞான மாகும். அது வரலாறு காட்டும் வான் விளக்கு; அலை

மோதும் மனித உணர்வுகளை ஒழுங்கு செய்யும் ஒப்பற்ற உணர்வு நூல்; வேற்றுமைகளைக் கடந்து மனிதகுல ஒருமைப் பாட்டை உணர்த்தும் நூல்;' மண்ணகத்தை விண்ணகமாக்கும் உயர்ந்த தத்துவங்களடங்கிய விந்தை நூல்; புதுமையும் பொதுமையும் பொலிவுற்றிருக்கும் பொது நூல்! வேறுபாடுகளற்ற ஒப்பற்ற பொதுமைச் சமுதாயம் காண்பதற்குரிய கருப்பொருள்கள் வள்ளுவத்தில் கால்கொண்டு கிடக்கின்றன. திருக்குறளில் கால்கொண்டு கிடக்கின்ற பொதுமைக் கருத்துக்களுக்கு கார்ல் மார்க்ஸ் மாமுனிவர் உரை விளக்கம் செய்தாரோ என்று கருதினாலும் தவறில்லை. கார்ல் மார்க்ஸ் மாமுனிவரின் மூதறிவிற் பிறந்த மூலதனத்திற்கு வாழ்க்கையில் விளக்கம் காண விளாதிமிர் இலியட் லெனின் முயன்றார். கார்ல்மார்க்ஸ் செய்த தவத்தை வள்ளுவன் செய்யவில்லையோ? இல்லை, இல்லை! வள்ளுவன் உயர்த்திப் பிடித்த ஒளிவிளக்கை வள்ளுவனே அஞ்சிய அவன் இனச் சார்பு மூடி மறைத்துவிட்டது! ஆனாலும், உலகப் பேரொளியாகப் பிறந்த குறள், உலகில் வழங்கும் தகுதி பெற்றது; அத்தகுதியைப் பெற்று வருகிறது; இனியும் பெற்று விளங்கும்.

வள்ளுவம் போன்ற நூல்களுக்கு நிகண்டுகள்வழிப் பொருள் காண்பது ஓரளவு வரவேற்கத் தக்கதே யாயினும், அது போதாது. வள்ளுவன் பொழுது போக்கிற்காக அதனைச் செய்தானா? அல்லது காவியம் செய்தானா?. அவன் படைத்த காமத்துப் பாலில்கூட இரண்டு உயிர்களின் உணர்வுகளை உளவியல் அடிப்படையிலல்லவா இணைக் கின்றான்! குறைகளை நீக்குகின்றான்; குணங்களைக் காட்டு கின்றான்; இன்புறுத்துகின்றான்! வாழ்வாங்கு வாழ்வது என்று சொன்னானே, அதற்குரிய நெறிகளையும் முறை களையும் அவனே காட்டுகின்றான். ஆயினும், இதுகாறும் நாம் கண்டு சுவைத்தது கவிதைச் சுவையையே. செவிப்

புலனுக்குச் சுவையாக மட்டுமா செய்தான்? உயிர்ச் சுவையும், உணர்வுச் சுவையும் கூட்டிப் பாடிய கவிஞனின் ஆற்றல் என்னே! என்னே!!

கார்ல்மார்க்ஸ் மாமுனிவன் செய்த மூலதன நூலுக்கு விளக்கம் கொடுத்து, வையகத்தில் விளங்கிடச் செய்த பெருமை லெனினுக்கே உண்டு. லெனின், ஒரு சிந்தனை யாளன்; வாழ்க்கைப் பட்டறையில் புடம் போட்ட சுடர்த்தங்கம். அவன் கற்பனையில் வாழ்ந்ததில்லை. அறிவு, அனுபவம் ஆகிய இரண்டினை மையமாகக் கொண்டே அவன் தத்துவங்கள் தோன்றின. லெனின், மனிதாபிமானத் தின் உச்ச நிலையில் உணர்வு பூர்வமாகவும், அறிவு பூர்வ மாகவும் வளர்த்த மேதை; அப்படியே வாழ்ந்து காட்டியவன்– வாழத் தூண்டியவன். மனிதாபிமானம் என்பது உலகின் எல்லா மொழி இலக்கியங்களிலும், சிறப்பாகப் பக்தி இலக்கியங்களிலும் பரக்கப் பேசப்படுகின்றது. லெனினுக்கு முன்பே இங்ஙனம் பேசிய மொழிகள் உண்டு. ஆயினும்; அவை உணர்ச்சிகளையே வெளிப்படுத்தின – அழுது தீர்த்தன. அந்த உணர்ச்சிகளுக்குச் செயல் உருவத்தை அந்த இலக்கியங்களைப் பாராட்டியவர்கள் கொடுக்கத் தவறி விட்டார்கள். வெறும் உணர்ச்சி அல்லது அழுகை, வாழ் வித்து விடுமா என்ன? ‘அறிவினா லாகுவதுண்டோ? பிறிதின் நோய்– தந்நோய்போல் போற்றாக்கடை’ என்றான் வள்ளுவன். ‘அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்’ என்றும், ‘ஈசனுக்கன்பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார்’ என்றும் கூறினார் திருமூலர். இவைகளையெல்லாம்விட மனிதாபிமானத்தின் உச்சக்கட்ட வெளியீடாக ‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’ என்று உருகி உருகி வெளியிட்டார் வள்ளல் இராமலிங்க அடிகள். இந்த உணர்வு வெளியீடுகள் என்ன பயனைத் தந்தன? சமுதாயத்தில் என்ன மாறுதல்களை உண்டாக்கியிருக்

கின்றன? என்று ஆராய்ந்தால் வெட்கப்பட வேண்டி யிருக்கிறது. இந்த உணர்வுகளின் வெளியீடுகள் செயற்படாததோடு மட்டுமின்றி, இந்த உணர்வு வெளியீடு களை-தமக்கே உரியனவாக-தம்முடைய வர்க்கத்திற்கே உரிமையுடையன வென்று பாடியும் பரப்பியும் வர முயலுகின்றவர்களைப் பார்த்தால் நமக்கு வேதனை ஏற்படு கின்றது! இந்த மனிதாபிமான உணர்வுகளைச் சராசரி அளவு கூடப் பெறாத ஏகபோக வர்க்கத்தினர் (திருக்கோயில்கள் திருமடங்கள் தொடங்கிச் செல்வந்தர்கள் ஈறாக) எடுத்துக் கொண்டிருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது! லெனினோ, தன்னுடைய மனிதாபிமானத்தை உணர்வாக மட்டுமின்றிச் செயற்படுத்தி மனித சமுதாயத்தின் வரலாற்றில் ஒரு திருப்பத்தையே உண்டாக்கியிருக்கிறான். அவனுக்கு முன்பு அன்பைப் பற்றிப் பேசியவர்கள் உண்டு. ஆனால் லெனினோ, அன்பிற்கு ஓர் உயிர்ப்புடைய ஒரு வடிவத்தை வாழ்க்கையில் ஏற்படுத்தி இனம் கண்டு காட்டினான். துன்பமேயில்லாத இன்ப உலகத்தைப் பற்றி-நிலப் பிரபுத்துவத்தின் மடியில் தவழ்ந்து கவிஞர்கள், கற்பனை உறக்கத்தில் பாடியதுண்டு. சொர்க்கலோகக் கற்பனையின் தோன்றிய புராணங்களும் உண்டு. ஆனால் வாழப் பிறந்த மனிதன் மட்டும் அவற்றைக் கண்டதேயில்லை. அதிலும், பலரைத் தம் உழைப்புத் திறனால் வாழ்விக்கும் உழைப்பாளர் வர்க்கம் அன்பின் சுவையை - வாழ்க்கையின் சுவையை முற்றிலும்-முழுதுமாக அனுபவித்துச் சுவையைக் கண்டதேயில்லை. லெனின் கற்பனை உலகின் சுவையை வாழ்க்கையில் எல்லோரும் சுவைக்கக் காட்டிய மேதை.

தாம் இன்புறுவதை மற்றவர்களும் இன்புற வேண்டும் என்று விரும்புவது அறிஞர் கடமை. இது மனித இன ஒழுக்கத்தின் அடிப்படை நியதி. இதனையே திருவள்ளுவர்,

*தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந் தார்*

என்று கூறுகிறார். இந்தத் திருக்குறளுக்கு உரையாக லெனின் வாழ்க்கை அமைந்திருக்கிறது.

தாக்கிஸ்தான் விவசாயி ஒருவர் லெனினைப் பார்க்கச் சென்றார். அதுபோது தாக்கிஸ்தானைச் சேர்ந்த கைவினையிற் சிறந்த தொழிலாளர்கள் செய்த சில பொருட்களை லெனினுக்குப் பரிசிலாகக் கொண்டு சென்றார். லெனின் அவர்களின் கைவினைத் திறனைப் பாராட்டினார். ஆனாலும், அந்தப் பரிசுப் பொருட்களை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு லெனின் சொன்ன ஒரே காரணம்; "இந்தப் பொருள்களின் அழகை எல்லோரும் பார்த்துப் பாராட்ட வேண்டும்" என்பதேயாகும்.

(``It would be unfair for me admire them alone" Every-body should have a chance to admire them; send them to a museum.)

எல்லா அழகையும் தாமே அனுபவிக்க வேண்டுமென்றது அறிவெனக் காட்டும் அறியாமையை லெனின் தம் வாழ்க்கையின் மூலமாகவே கடிகின்றார். அறிவு என்பது ஓரிடத்திற்கோ, ஓரினத்திற்கோ, ஒரு மனிதனுக்கோ மட்டும் சொந்தமில்லை. அறிவு, எல்லா மனிதர்களிடத்தும் உண்டு. ஆயினும், வளர்ச்சியடையாமலும், முழு நலம் பெறாமலும், தொய்வுகள் உடையதாக இருக்கக் கூடும். ஒரு சிறந்த அறிஞன் என்பவன் மற்றவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்ற மனோபாவத்தில் மற்றவர்களை முட்டாளாக்கி, அவ் வழி தன்னையும் முட்டாளாக்கிக் கொள்ளக் கூடாது. மற்றவர்களிடத்திலிருந்தும் சிறந்த செய்திகளைக் கேட்க முடியும் என்ற நம்பிக்கையுடன் செவிமடுக்க வேண்டும். இன்றுதான் வளர்ந்தவர்களாகத் தம்மைக் கருதுபவர்கள்

செவிமடுக்க மறுக்கிறார்களே! வாய்ப்பூட்டுப் போடு கிறார்களே! திருவள்ளுவர்,

*எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்*
*நுண்பொருள் காண்ப தறிவு*

என்றார்.

ஆலைப் பெண் தொழிலாளர் தங்கியிருந்த ஒரு விடுதிக்கு லெனின் சென்றிருந்தார். அப்பொழுது தொழி லாளர்கள் லெனினிடம் பல செய்திகளைச் சொல்லு கிறார்கள். அவ்வளவையும் லெனின் மிகக் கவனத்துடன், அறிவு வேட்கையுடன் கேட்கின்றார். உலகு முழுதும் அவரிடத்திலிருந்து அறிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, அவர் மற்றவர்களிடமிருந்து அறிவைத் தாகத்துடன் எதிர்பார்ப்பதைப் பெருமைக்குப் பெருமை என்றுதான் சொல்லவேண்டும். இதனை, 'ஒசிவானிக்கோ' என்ற பெண் தொழிலாளி சிறப்பித்துப் பாராட்டுகின்றாள்.

``The man from whom the whole world learnt the truth, himself learnt from the people."

என்பது அவள் கூறியது.

தாமரைக் குளத்தின் தண்ணீர் அளவு உயர்ந்தால் தாமரையும் உயரும். அப்பொழுதும் தாமரை தண்ணீர் அளவுக்கு உயர்வதே இயல்பு. அதுபோல, சமூதாயத்தின் வாழ்க்கைத்தரம் உயர உயரத்தான் தனி மனிதனின் வாழ்க்கைத் தரமும் உயரவேண்டும். அப்படியல்லாமல் தனி மனிதனின் வாழ்க்கைத் தரம் மிக உயர்ந்து, சமுதாயத்தின் வாழ்க்கைத் தரம் அதலபாதாளத்தில் கிடக்குமாயின் அஃது ஒழுக்கங்கெட்ட வாழ்க்கை. அதுமட்டுமன்று. மேலும் மேலும் ஒழுக்கத்தைச் சீர்குலையச் செய்து மனித சமுதாயத்தை ஆழ்ந்த துயரத்தில் அழுத்துவதாக அமையும். லெனின் இந்தத் தத்துவத்தைச் சிந்தனையில் இந்த உலகத்திற்கு உணர்த்தி

னார். அதைவிடச் சிறப்பாகத் தமது வாழ்க்கையின் மூலம் உணர்த்தினார். லெனினுடைய வீட்டுப் பாதுகாப்புத் தொண்டின் ஈடுபட்டிருந்த ஒரு பெண் தொழிலாளியின் உணர்ச்சிக் கொப்பளிப்பும் அதற்கு லெனின் சொன்ன சமாதானமும் நினைந்து நினைந்து நெஞ்சு நெகிழத்தக்க செய்திகளாகும்.

ஒரு நாட் காலை லெனினுடைய உடுப்பைப் பெண் தொழிலாளி தூய்மை செய்து கொண்டிருந்தார். அது கிழிந்தும், ஒட்டுகள் போட்டும் இருந்தது. அந்தப் பெண் தொழிலாளி தன்னுடைய உணர்ச்சியை அடக்கமாட்டாமல் 'நாடு முழுதும் நிர்வாகம் செய்யும் லெனினுக்குத் தனக்கொரு நல்ல உடுப்பு வாங்கிக் கொள்ள முடியவில்லையே' என்று வாய் விட்டுச் சொல்லி முணுமுணுத்தாள். தற்செயலாக அந்த இடத்திற்கு வந்த லெனின் காதில் இந்த முணுமுணுப்பு விழுந்தது. அவர் இதைக் கேட்டு ஒரு வெடிச்சிரிப்பே சிரித்தார். "பரவாயில்லை, பரவாயில்லை" என்று இரண்டு தடவைகள் கூறி, மிகவும் பிரியத்துடன் அந்தப் பெண் தொண்டரின் தோள்களைத் தட்டி, "நாம் எப்பொழுது செல்வத்தில் வளருகிறோமோ அப்பொழுது நானே எனக்கொரு நல்ல உடுப்பை வாங்கிக் கொள்வேன். அப்பொழுது உனக்குக் கொஞ்சம் தொல்லையும் குறையும்" என்று கூறினார். இந்த உரை, நம்மைக் கவர்ச்சிப்பதைவிட அடக்கமான-ஆழமான மனித சமுதாயத்தைத் தழுவிய லெனினின் சீலத்தை - உயர் மேம்பாட்டை நமக்கு உணர்த்து கிறது.

லெனின் தத்துவ இயல் அறிஞன்; சிறந்த சிந்தனை யாளன்; செயல் வல்லன்; வையத்து வேறுபாடுகளை அகற்ற வந்த விடிவெள்ளி; அவன் புகழ் நமக்கு ஒளி நிறைந்த வழிகாட்டி, அவன் வழி நடை பயிலுவோமாக! வையகத்தை வாழ்வித்து வாழ்வோமாக! மகிழ்வித்து மகிழ்வோமாக!

# வள்ளுவத்தில் அறிவியல்

திருவள்ளுவர் இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவர். ஆயினும் அன்றே வாழ்வியலின் இயல்பை - உயிரியலின் உணர்வை - உயிரினத்தின் தன்மையை நுண்மாண் நுழைபுலமையுடன் ஆராய்ந்து ஈடு இணையற்ற பரிசாகத் திருக்குறளை எழுதி உலகத்திற்குத் தந்தார். உயிர் அறிவுத் தன்மை யுடையது; உணரும் இயல்பினது; அனுபவ ஆர்வமுடையது; இயல்பில் குறையுடையது; முயற்சியில் முழுநிறை பெறவல்லது; துணையும் தோழமையும் பெற்று உயரவல்லது என்றெல்லாம் அறிந்து கூறும் பெருமை திருக்குறளுக்கு உரியது.

உடல் எப்படியும் கருவியே. இக் கருவியை இயக்கும் நாயகம் உயிரேயாம். உடலாகிய கருவிக்கும் உணவு உண்டு. நாயகமாகிய உயிருக்கும் உணவு உண்டு. உடலுக்கு ஐம்பூதங்களிடையில் ஐம் பூதங்களின் கூட்டால் விளைந்த உணவே உணவு. உயிருக்கோ, உயிரினத்தின் சிந்தனையில் தோன்றும் கல்வியும் கேள்வியுமே உணவு. கல்வியால், கேள்வியால் மனிதன் குறை நீங்கி நிறை பெற்று வளர்கிறான். இந்த உண்மையை எவருக்கும் புரியும் வகையில் முதலில் எடுத்துணர்த்திய பெருமை திருக்குறளுக்கே உண்டு.

*செவிக்குண வில்லாத போழ்து சிறிது*
*வயிற்றுக்கும் ஈயப் படும்.*

என்பது குறள்.

ஐம்பூத விளைவு உணவு. அது மிகினும் குறையினும் நோய் செய்யும். ஏன்? உணவாக மட்டுமின்றி ஐம்பூதத் தன்மையிலேயே கூட மிகினும் குறையினும் நோயேயாம். நிலம், நம்மிடத்தில் மட்டுமல்ல, மற்றவரிடத்தில் பகையையும் விளைவிக்கும் தன்மையுடையது. கல்வியும் கேள்வியும்

குறைந்தாலும் பெற்ற அளவுக்குப் பயனுண்டு. மிகுதிப்படின் நோயில்லை; வளர்ச்சியே!

வள்ளுவர் மனிதனின் இன்றியமையாத் தேவை அறிவுடைமையே என்றார். அறிவை முதனிலைப்படுத்தி முன்னிறுத்தியது போல், திருவள்ளுவர் வேறு எதனையும் முன்னிறுத்தவில்லை.

*அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்*
*என்னுடைய ரேனும் இலர்*

என்று கூறுகிறார். அறிவின்றி வேறு எவை எவை பெற்றிருந் தாலும் அவற்றால் பயனில்லை என்கிறார். 'என்னுடைய ரேனும்' என்ற சொற்றொடரில் சிக்காது எஞ்சியது ஒன்றுமில்லை. திருவள்ளுவர் அறிவுபற்றிக் கூறும் கருத்து அறிவியலுக்கு ஒத்தது. பலர், பல நூற்கள் கற்ற புலமையை அல்லது செய்திகள் அறிந்து கொண்டமையை-அவற்றை எடுத்துச் சொல்லும் திறனையெல்லாம் அறிவு என்று கருதிக் கொண்டிருக்கின்றனர். திருக்குறள், கற்பதையும் கேட் பதையும் அறிவு பெறுதற்குரிய வாயிலாகக் கருதுகிறதே தவிர, அவை தம்மையே அறிவு என்று கருதவில்லை. உணவு செரிக்கப்பெற்றுச் செங்குருதியாக மாறி உடலுக்கு வலிமை யாதல் போல், கல்வியும் கேள்வியும் வாழ்க்கைப் பட்டறையில் சோதனை செய்யப் பெற்று அனுபவத்திற் குரியனவாகி உயிர்க்குரிய குணமாகவும், சீலமாகவும், அல்லது ஒழுக்கமாகவும் அது வடிவம் கொள்ளும் பொழுதே அறிவு என்ற நிலையை அடைகிறது. மனிதனை - மனித உலகத்தைத் துன்பத்திலிருந்து விடுதலை செய்யப் பயன்படுவதே அறிவாகும். இந்த உண்மையை நாடும் நானிலமும் மறந்து, கற்றவர்கள் வறுமை உடையவர்களாகத் தானிருப்பார்கள் என்று கதையே கட்டிவிட்டன. அறிவு,

துன்பத்தை மாற்றாது போனால் அறிவு அறிவேயன்று. இதனை,

> *அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்*
> *உள்ளழிக்க லாகா அரண்*

என்று கூறுகிறது.

அறிவு, மேலும் மேலும் வளரத்தக்கது என்பதும் வள்ளுவர் முடிவு. அறிவுக்கு என்றும் ஒரு முடிவில்லை. "அறிதோ றறியாமை" என்பது வள்ளுவத்தின் வாய்மொழி. இந்தத் திருக்குறளைப் புரிந்து கொண்டு நாம் நம்முடைய அறிவைப் பெருக்கி வளர முயன்றிருப்போமானால் நம்மைப் பீடித்திருக்கின்ற வறுமையிலிருந்து விடுபட்டிருப்போம். நாம்தாம் 'வறுமைக்கே காரணம் நாமல்ல, நமக்கு அப்பாற் பட்டுக் கருணை வடிவமாக இருக்கின்ற கடவுளே' என்ற முடிவுக்கு வந்தவர்கள் ஆயிற்றே! இவ்வுலகின் வேறு எந்த இனமும் கடவுளுக்கு இவ்வளவு பெரிய களங்கத்தை உண்டாக்கவில்லை. இந்த முறையில் அறிவைப் பெருக்கி வளர்ந்திருந்தால் நாமும் மற்ற நாடுகளைப்போல் வளர்ந் திருப்போம்.

இந்த நூற்றாண்டு, அறிவியல் நூற்றாண்டு. அமெரிக்கக் குடி மகன், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியங்களில் பேசப் பெற்ற நிலாவுலகைத் தீண்டியிருக்கிறான். தமிழனோ தமிழ் அறிவியல் மொழியாக வளருமா? வளராதா? என்ற ஐயப்பாட்டில் இன்னும் கிடந்து குழம்புகிறான்! வேறு சிலர் அன்று "ஆண்டவனுக்கு வட மொழியே உரியது" என்று சொன்னதைப் போல அறிவியலுக்கு ஆங்கிலமே உரியதென்று வாதாடுகின்றனர். கூர்ந்து ஆராயின் அது அறிவியல் நாட்டத்தின் விளைவல்ல என்பதும், ஆங்கிலம் படித்த வர்க்கத்தினரின் பாதுகாப்புப் பணியேயாகும் என்பதும் விளங்கும். அறிவியலுக்கு இனம் ஏது? எல்லை ஏது? மொழித்தடைதான் ஏது? ஒரு மனிதன்

இயல்பாக எந்த மொழியில் சிந்திக்கின்றானோ அதுவே அறிவியல் மொழி. துறைதோறும் ஆய்வு செய்யவும், மேலும் மேலும் சிந்தனை பெருகி வளரவும் தாய்மொழியே துணை. அறிவைத் திருவள்ளுவர் "ஊறும் அறிவு" என்றார். சுய சிந்தனையின் பாற்பட்ட அறிவே செழுமையான அறிவு. ஊற்றுக்கால் வறட்சியடைவதில்லை; வரத்து நீரை வாங்கித் தேக்கித் தரும் குட்டை, வரவு நின்றால் வறட்சிப்படும். பிறமொழி அறிவு, வரத்து நீர் வாங்கித் தரும் குட்டையே யாகும். சுய சிந்தனையைத் தூண்டி வளர்க்கும் தாய் மொழியறிவு ஊறும் அறிவாகும். இந்த உண்மையை நாடறிந்து, நல்லறிவு வளர்த்துப் பயனடையும் நாளே தமிழகத்தின் நன்னாள்.

## ஒரு குறளும் - ஒருமைப்பாடும்

சுதந்திர பாரதத்திற்கு ஒருமைப்பாடு இன்றியமை யாதது என்பது எல்லாரும் ஏற்றுக்கொண்ட முடிபு. புரட்சிக் கவிஞன் பாரதி, பாரதநாட்டின் சுதந்திரத்தை ஆங்கிலே யர்கள் பறித்து எடுத்துக் கொண்டதாகக் கூறவில்லை. அதற்கு மாறாகச் சுதந்திரம் கெட்டுப்போய்விட்டது என்று குறிப்பிடு கிறான். 'விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பாரததேசம்' என்றே பாடுகின்றான். சுதந்திரம் தவறிக் கெட்டுப்போனதற்குரிய அடிப்படைக் காரணம், பாரத நாட்டு மக்களிடையே நிலவிய வேற்றுமைகளேயாம். பாரத நாட்டு மக்களிடையே ஒத்த உரிமையுணர்வு இல்லாது போய் பல நூற்றாண்டுகள் ஆயின. சாதி, இனம், மொழி சமயம் ஆகிய வேறுபாடுகளால் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாகப் பிறந்திருந்தும் பற்றும் பாசமுமின்றிக் காழ்ப்பொடு கூடிய கலகம் விளைவித்துக் கொண்டனர். இதன் பயனாக நம்முடைய பேரரசுகள் வீழ்ந்தன. இந்த வேற்றுமையுணர்ச்சி களை இலக்கியத்துறையிலும் சரி சமயத்துறையிலும் சரி,

எதிர்த்துப் புரட்சி செய்த சான்றோர்கள் இமயம் முதல் குமரி வரையிலும்-பரந்து கிடக்கும் பாரதப் பூமியில் பலர் தோன்றினார்கள். ஆயினும் நிறைய பயன் கிடைக்கவில்லை. பயன் விளையாமைக்குக் காரணம் சிந்தை வேறு, செயல் வேறுபட்ட வாழ்க்கையேயாம்.

ஒருமைப்பாடு என்பது ஒரு மிகச் சிறந்த பண்பாடு. ஒருமைப்பாடு என்பது ஒரு கலை; ஒரு நோன்பு. அகத்தில் ஒத்த உரிமையினராகி எல்லோரும் இன்புற்று வாழ வகை செய்வது ஒருமைப்பாடு. ஒருமைப்பாட்டுணர்வு மெல்ல மெல்ல வளர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு விழுமிய பண்பாகும். உலகியற்கையில் - இறை நலப்படைப்பில் ஒருமைப்பாடே அதிகம். அங்கு மோதுதலில்லை. அந்தரத்தில் தொங்கும் அண்ட சராசரங்களும் கூட ஒன்றோடொன்று மோதாமல் இயங்குகிற அமைப்பில் வியத்தகு ஒருமைப் பாட்டினைப் பார்க்கிறோம். வெளித்தோற்றத்தில் முரண் பாடுகள் காணப்பட்டாலும் ஒருமைப்பாடே மிகுதியும் மேம் பட்டு விளங்குகிறது. வேற்றுமைகளுக்குள்ளும் ஒற்றுமை-ஒருமை காண்பது பாரதப் பண்பு. இந்தப் பண்பின் வழியாகப் பாரிலுள்ளோரைப் பகையின்றி வாழச் செய்ய லாம்.

ஒற்றுமையும் ஒருமைப்பாட்டுணர்வும் ஒன்றல்ல. ஒற்றுமை என்பது தற்காலிகமான கூட்டுச்சேர்க்கை. அது தற்காலிகமானதாகவும் இருக்கலாம்; நிர்ப்பந்தத்தின் காரணமாகவும் இருக்கலாம். ஒற்றுமையை விட ஒருமைப் பாடு மிகமிக உயர்ந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகுக்கு ஒரு நூல் செய்த திருவள்ளுவன் ஒருமைப் பாட்டையே உயர்த்திப் பார்க்கிறான். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது அவன் வாக்கு.

**ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்**
**விற்றுக்கோள் தக்க துடைத்து**

என்றான். மானிட இனத்தின் சிறப்புமிக்க இயல்பு ஒழுக்க முடைமை. திருவள்ளுவர் ஒழுக்க நெறியில் பலவற்றைப் பகுத்துக் கூறினாராயினும் 'உலகத்தோடொட்ட ஒழுகல்' மிகச் சிறந்த ஒழுக்கமென வரையறுத்து வலியுறுத்திக் கூறுகின்றார்.

இன்றையச் சூழ்நிலையில் நமது பாரதநாட்டுக்கு ஒருமைப்பாடு மிகவும் தேவைப்படுகிறது. நாள்தோறும் செய்திதாள்களைப் புரட்டினால் கந்தல் துணியைப் பார்ப்பது போன்ற ஓர் உணர்ச்சி நமக்கு ஏற்படுகின்றது. அதாவது, இன, வகுப்புக் கலவரச் செய்திகளையும், அரசியல் காரணமாக ஏற்படும் குழுக்களின் பகைமையுணர்ச்சியால் விளைந்த மோதல்களையும் செய்தித்தாள்களில் நிறையப் படிக்கிறோம். இந்தச் செய்திகளைப் படிக்கின்ற ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் வெட்கித் தலைகுனிய வேண்டிய வனாக இருக்கிறான். தென்னகத்தில் தாய்மொழிப் பற்று இயற்கையாகவே உண்டு. ஆனால், நாட்டின் ஒருமைப் பாட்டை, தாய்மொழியுணர்ச்சிக்குப் பின் தள்ள முடியாது. அதுபோலவே நாலைந்து மொழிகளுக்கு மேலாகப் பேசப் பெறும் நாட்டில், ஒரு மொழியின் மூலம் ஒருமைப் பாட்டை உண்டாக்க முடியாது. அதுபோலவே ஆட்சி முறைச் சட்டங்களாலும் ஒருமைப்பாட்டை உருவாக்கி விட முடியாது.

ஒருமைப்பாடு என்பது உணர்வின்பாற் பட்டது. அஃதொரு கலை; ஒரு தவம். ஒருமைப்பாட்டுணர்வினைப் பயிலுதல் எளிதன்று. ஒருமைப்பாட்டைச் சிந்தனை, கல்வி, வாழும் இயல்பு ஆகிய வழிவகைகளாலேயே காண முடியும். அதனாலன்றோ 'ஒரு நாட்டு மக்களை ஒத்த உரிமை யுணர்வுடன் இணைக்க, ஒரு சிறந்த தேசீய இலக்கியம் இருக்கவேண்டும்' என்று கார்லைல் கூறினான்.

பாரத நாடு விடுதலை பெற்றுப் பல ஆண்டுகளாயின. பாரத நாட்டின் தனி-பொது அரசியல் வாழ்க்கை விரிந்த மக்களாட்சி அடிப்படையில் அமைந்துள்ளது. எந்த ஒருவருடைய அல்லது எந்தவோர் இனத்தினுடைய அடிப்படை உரிமைகளுக்கும் பாதுகாப்பு உண்டு. ஆயினும் பாரதநாட்டில் பொது நலனுக்கு இடையூறு செய்கின்ற தனி நலன்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கனவல்ல. ஒருவருடைய நலன் பலருடைய நலன்களுக்குக் கேடு விளைவிப்பதாயின் அது நலனேயன்று; தீமையேயாம். நன்மை, நன்மையைத் தோற்று விக்குமே தவிரத் தீமையைத் தோற்றுவிக்க முடியாது. ஆதலால் உயர்ந்த கல்வி - மற்றும் மாறுபாடுகளைக் காட்டாத கல்வி - மூலமே ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும். ஆதலால்தான், தேசிய இலக்கியம் வேண்டுமென்று கார்லைல் கூறுகிறார்.

பாரத நாட்டு இலக்கியங்களில் பெரும்பான்மை யானவை மொழி, இன, சமயச் சார்புடையனவேயாம். இவைகளின் சார்பில்லாத இலக்கியங்கள் அருமை. இஃது உலகியற்கை. இன்று உலகின் நெருக்கம் வளர்ந்திருப்பதன் காரணத்தினாலும், போர்க்கருவிகளின் ஆற்றல் பெருகி வளர்ந்திருப்பதன் காரணத்தினாலும் ஒருமைப்பாடு இன்றி யமையாத் தேவையாகிறது. பாரதநாட்டு இலக்கியங்களில் திருக்குறள் ஈடு இணையற்றது. இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே இனம், மொழி, சமயச் சார்பின்றி மனித உலகத்தின் நல்வாழ்க்கையை மையமாக வைத்துச் செய்யப் பெற்ற சிறந்த நூல் திருக்குறள். திருக்குறள் எடுத்துக்கூறும் ஒழுக்க நெறிகள் கற்பனையில் தோன்றியவையல்ல. அதீத மானவைகளுமல்ல.

சாதாரணமாக ஒரு சராசரி மனிதன் நடை முறைப் படுத்தக்கூடிய வாழ்க்கை முறைகளையே ஒழுக்கமென்று கூறியுள்ளார். சமுதாயத்தின் பல்வேறு தரப்பினருக்கும் ஏற்ற ஒழுக்கங்களை எடுத்துக் கூறியுள்ளார். புலால் உண்ணாமை

என்ற ஒன்றைத் தவிர, மற்ற எந்த ஒழுக்க நெறிகளையும் யாரும் மறுக்க மாட்டார்கள். புலால் உண்ணாமையும் கூட குறையாகக் கூறினால் துறவறவியலிலேயே இருக்கிறது. ஆதலால் இல்வாழ்வோர் புலால் உண்ணுதலைத் தவிர்க்க வேண்டும் என்ற அவசியமில்லை என்று வரையறுத்தால் அதற்கும் மறுப்பில்லை.

மனித சமூகத்தினைச் சார்ந்த ஒழுக்க நெறிகளைப் பேணி வளர்த்துப் பாதுகாக்க வேண்டும். இதுவே திருவள்ளுவரின் இலட்சியம். இந்த ஒரே நோக்கத்தோடு செய்யப்பெற்ற நூல் திருக்குறள். திருக்குறள் 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' என்று வரையறுத்துக் கூறுவதால், 'ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்' என்று கூறினமையால் சமூக ஒழுக்க நெறியை எடுத்துக்காட்டுகிறது. ஒழுக்கங்களில் உயர்ந்த ஒழுக்கமாகிய ஒப்புரவினால், பொருளியல் ஏற்றத் தாழ்வுகளை மாற்ற முடியும். பொருளியல் ஏற்றத்தாழ்வு குறைந்து சமநிலைச் சமுதாயம் அமைந்தால் சமுதாயமும் ஒன்றுபடும்; ஒழுக்க நிலையும் உயரும்; இன்பமும் பெருகும்.

திருவள்ளுவர் கல்வியை ஒருமைப்பாட்டுக் கல்வி யாகவே கருதுகிறார். ஒருமையுணர்வினைத் தராத கல்வியை–அறிவைத் திருவள்ளுவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்**

என்றும்,

**எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு**

என்றும் கூறியிருப்பது அறியத்தக்கது. எல்லா நாடுகளையும், எல்லா ஊர்களையும் தமதென ஏற்றுத் தழுவி வாழுதலுக்கே கல்வி தேவையென்று கருதுகின்றார். இதனை,

*யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
*சாந்துணையும் கல்லாத வாறு*

என்ற குறளால் அறிக.

ஆதலால், பாரத நாட்டு ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்றால் அதற்கு உடனடியான தேவை பாரத நாட்டு இலக்கியம் - அதாவது தேசீய இலக்கியம்! நிலம், சாதி, சமயம், இனம், மொழி ஆகிய எந்தச் சார்பினையும் சாராது, மானிட சமுதாயத்தின் மேம் பாட்டினைக் கருதியே செய்யப் பெற்ற நூலை, உடனடியாகப் பாரத நாட்டு இலக்கியமாக அறிவிக்க வேண்டும். இமயம் முதல் குமரி வரை வாழும் அனைத்து மக்களின் சிந்தனைக் கும் வாழ்க்கைக்கும் அடிப்படைச் சுருதியாகத் திருக்குறள் அமையவேண்டும். அது போழ்து பாரத ஒருமைப்பாடு உருவாகும்; பாரத சமுதாயமும் வாழும்.

## வாழ்விக்க வந்த வள்ளுவம்

### முன்னுரை

தமிழ் காலத்தால் மூத்த மொழி; கருத்தாலும் மூத்த மொழி. தமிழினம் தொன்மைப் பழமை நலம் சான்ற இனம்; வையத்துள் வாழ்வாங்கு வாழ வகையும் வழியும் கண்ட இனம்; வளம்பல படைத்த இனம்; வளத்துடன் வாழும் உயிர்க்கும் இலக்கணம் செய்த இனம். நிலவுலகங்கள் நெருங்கி வாரா முன்னம் நெஞ்சங்கள் நெருங்கிவர நெறி கண்ட இனம்; இருளகற்றி இன்பம் பெருக்கும் இனி நெறிகளைக் கண்ட இனம்; பாரையும் பரத்தினையு இணைக்கும் இன்புறு காதல் நெறிகள் கண்ட இனட இறையும் முறையும் கண்டு இனிது வழி நடத்திய இனப் துன்பத்திற்கு மருந்தாக இன்பத்திற்கு ஊற்றாக அமைவா

பொருள் நெறிகண்ட புதுமைச் சமுதாயம்; பொதுமைச் சமுதாயம்.

திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவர். திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய நூல். திருக்குறள் போன்ற ஒரு முழுதுறழ் அறநூலைத் தரத் தகுதி யுடையதாக வாழ்ந்த இனம் தமிழினம். அறிவுக்கும், அனுபவத்திற்கும், நெறிவழி உணர்விற்கும் வழி வழித் தொடர்பு அதாவது பாரம்பரியம் உண்டு என்ற கருத்து வரலாற்றாசிரியர் உலகத்துக்கு உடன்பட்டதேயாம். திருக்குறள் தோன்றிய காலத்தில், தோன்றிய சமுதாய இலக்கி யங்களை ஒரு கண்ணோட்டம் செலுத்திப் பார்த்தால் கிரேக்க நாட்டு நாகரிகம் ஒன்றே அண்மித்து வருகிறது. திருக்குறளுக்கு எவ்வளவு பெருமையுண்டோ அதைப்போல நூறு மடங்கு பெருமை அதன் ஆசிரியருக்கு உண்டு. அத்தகைய பெருமைசான்ற நூலாசிரியனை ஈன்று புறந்தந்து வளர்த்த பெற்றோருக்கும், அளவற்ற பெருமையுண்டு. ஆனாலும் தமிழர்தம் சீலமும் சிறப்பும் தாங்கப் பொறாதார் திருவள்ளுவர் வரலாறு பற்றிய தவறான கதைகளைக் கட்டி விட்டிருக்கின்றனர். ஐயகோ, என்னே அறியாமை! தமிழர்தம் அறிவு நுட்பத் திறனும், ஒழுக்கச் சார்பு ஆர்வமும் வேறு எந்த இனத்திற்கும் இல்லை. ஆயினும், போற்றி வளர்க்கும் திறன் இன்மையின் காரணமாகப், பலபொழுது இந்த இயல்புகள் ஒளிபெற்று விளங்குவதில்லை. இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பு தமிழினம் புகழ்பெற்று வாழ்ந்த இனம். அந்தப் புகழ்மிக்க இனமே தமிழர்தம் தனிமறையும் உலகத்தின் பொதுமறையுமாகிய திருக்குறளைத் திருவள்ளுவர் வாயி லாகத் தந்தது.

திருக்குறள் கவிதை நூல்; காவியம்; பண்பு நலம் காட்டும் காப்பியம்; இனிய நூல்; எளிய நூல்; காலத்தை வென்று நிற்கும் திருநூல்; அறநூல்; முழுதுறழ் அறநூல்; காதல் நூல்; கடவுள் நூல்; வாழ்விக்கும் மறை; வையகத்தை

இணைக்கும் பெருநூல்; புதுமையும் பொதுமையும் தழுவிய மறைநூல்; இருளகற்றும் அறிவு விளக்கு; இன்பம் பெருக்கும் பொருள் நூல்; கடல்களை, காடுகளை மலைகளைக் கடந்து உலகந் தழீஇ நிற்கும் ஒருமறை.

## அறிவு நெறி

வாழ்க்கை யென்பது கட்டி முடிக்கப் பெற்ற மாளிகை யன்று. அல்லது அதிட்ட தேவதையோ, ஆண்டவனோ மட்டும் கட்டி முடிப்பதும் அன்று. நமது வாழ்க்கை செம்மையுற அமையத் திட்டம் தீட்டும் பொறுப்பும் நம்முடையதே. நிறைவேற்றும் பொறுப்பும் நம்முடையதே. வயிற்றுக்குச் சோறு யாரும் இடலாம். ஆனால், நம்முடைய மன உணர்வின் உடன்பாடும் உறுதியுமில்லாமல் நம்மை யாரும் வளர்த்துவிட முடியாது. நமது வளர்ச்சி முன்னேற் றத்தின் மையம் நாமேயாம். இந்த இயற்கை நியதியை உணரா தார் ஏராளம்! இங்ஙனம் கூறுவதால் இறைவன் பங்கு என்ன என்ற கேள்வி பிறக்கலாம். இறைவன் நமது வாழ்க்கையின் ஆசிரியன்; தலைவன். அதிலொன்றும் மறுப்பில்லை. ஆசிரியர் கற்றுத்தான் தரமுடியுமேயன்றித் தேர்வு எழுதித் தருவாரோ? தலைவன் வழிநடத்துவானேயன்றித் தூக்கிச் சுமந்து போவானோ? அப்படியே தூக்கிச் சுமந்தால் உயிர் சவலையாய்ப் போகாதோ? மாணிக்கவாசகரும் "சவலை யாய்ப் போனால் சிரியாரோ?" என்று பேசுகின்றார். ஆதலால் திருவள்ளுவர் திருக்குறள் செய்ததின் தலையாய நோக்கம் ஒவ்வொருவருக்கும் அவர்தம் வாழ்க்கை மாளிகையைக் கட்டி முடிக்கக் கற்றுக் கொடுப்பதேயாம். மாளிகை என்பது ஒரு கல்லால் கட்டப் பெறுவதா? ஒரு பொருளால் கட்டப்பெறுவதா? இல்லை, ஒருவரால்தான் கட்டப் பெறுவதா? பல நூறு கோடி செங்கற்கள் மாளிகை கட்டத் தேவை. அதுபோல, வாழ்க்கையென்ற மாளிகையைக் கட்ட, பலப்பல நற்சிந்தனைகளும் குணங்களும் தேவை.

அடுக்கப்பெறும் கற்களுக்கிடையே இசைவும் உறுதியும் தேவை. இதனைத் தருவது கலவைச் சாந்து. அதுபோல, நற் சிந்தனைகளை, நற்குணங்களை வாழ்க்கையோடு இசைவித்து உறுதிப்படுத்தச் செயலும் அனுபவமும் தேவை. ஒரு மாளிகை கட்டி முடிக்கப் பலர் உதவி தேவை என்பது போல ஒரு வாழ்க்கையென்னும் மாளிகையைக் கட்டி முடிக்க நல்ல இனச் சேர்க்கையும், நட்பும் தேவை. திருவள்ளுவர் இவ்வள வையும் தம்முடைய அருமை நூல் மூலம் வழங்குகின்றார். வாழ்க்கையின் அடித்தளமும், மூல முதலும் அறிவேயாகும். அறிவு, மனிதனின் மிகப் பெரிய சொத்து. அதனால் திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று ஐயத்திற்கிடமின்றிக் கூறுகின்றார். இங்ஙனம் தெளிவாகக் கூறியதோடு மட்டுமன்றி எதிர் முகத்தானும் மற்று 'என்னுடையரேனும் இலர்' என்று கூறி, அந்நிலையை உறுதிப் படுத்துகின்றார். திருவள்ளுவர் கல்வி வேறு, அறிவு வேறு என்று உணர்த்துகின்றார். இன்று நம்மிடையில் கற்றவர்கள் ஏராளம்! கற்ற மூடர்களும் ஏராளம்! கல்வி, அறிவு பெறுதற் குரிய சாதனமே யொழிய அதுவே அறிவன்று. கல்வியால், கேள்வியால், சிந்தனையால் அறிவு வளர வேண்டும். அதனால், 'கல்வி', 'கேள்வி' என்ற அதிகாரங்களைப் போலவே 'அறிவுடைமை' என்று தனித்து ஒரு அதிகாரமும் வைத்தார். அறிவு, வாழ்வதற்காக மட்டுமன்று. எல்லாருந் தான் வாழ்ந்து விடுகிறார்கள். நாயும் நரியும் வாழ வில்லையா? காக்கையும் கழுகும் வாழவில்லையா? அது போல மனித வடிவத்தில் விலங்கினும் கேவலமாக வாழ் பவர்கள் பலர் உண்டு. அதை வாழ்க்கை யென்று சொல்வதை விட 'வயிறு வளர்ப்பு' என்றே சொல்லலாம். வாழ்க்கை நெடிய உயர்ந்த இலட்சியம் உடையது. அதில் இந்த உலகியலும் ஒரு பகுதி. உண்ணலும், உடுத்தலும், உறவினை நாடுதலும் வாழ்க்கையின் மிகச் சிறிய ஒரு பகுதியேயாம். அதுவும் வாழ்க்கையின் நெடிய பயணம் சுமையாகத்

தோன்றி, எய்ப்பும் களைப்பும் ஏற்படாமல் இருப்பதற்கே யாம். அறிவு, ஆற்றலுக்கெல்லாம் மேம்பட்ட ஆற்றல். அறிவு, தலை சிறந்த அரண். அறிவு பிணிக்கு மருந்து; வளர்ச்சிக்கு மழை. அறிவு, நாழிகைக்கு நாழிகை வளர்வது; துன்பங்களைத் துவைப்பது; இருளுக்கு ஒளி; உணர்வுக்கு ஊட்டம்; வரலாற்றுக்கு வடிவம் கொடுப்பது. அறிவுடைய மனிதன் எல்லையினும், துன்பம் வராது. அப்படியே வந்தாலும் அவன் அறிவினால் அதனை வெல்லுவான். அறிவு, கடந்த காலத்தைக் கவலையாக்கி அழிவதினின்றும் தடுத்து, இனி எதிர்காலத்தில் ஆவது பற்றி ஆராயத்தூண்டும். இதனை 'அறிவுடையார் ஆவதறிவார்' என்று கூறுகிறது குறள்.

## ஆள்வினை

மனிதன் ஆளப் பிறந்தவன்; தம்மினும் மெலியரை ஆள அன்று; காணியை, பூமியைக் கண்காணம் செய்து ஆள அன்று. இங்கு ஆளுமை என்பது திறன். சிலர், பலரை ஆளத் துடிப்பார்கள். ஆனால் அவர்களையே அவர்கள் ஆண்டு கொள்ள முடியாது. என்னே, கொடுமை! அச்சு முறிந்த வண்டியில் பாரம் ஏற்றிச் செலுத்த முடியுமோ? அதுபோலத் தன்னாட்சித் திறனற்றவர்கள் எப்படிச் சமுதாய வாழ்க்கையை நடத்த முடியும்? அறிவினை அடுத்த தேவை ஆள்வினை யென்பது வள்ளுவம். சிலர் அல்லற்படுவர்; அழுவர்; கொஞ்சம் மூர்க்க உணர்ச்சி இருக்குமானால், மற்றவர்மீது ஆத்திரமும் படுவர்; அணுகிக் கேட்டால் 'காணி இல்லை; காசு இல்லை; கருவிகள் இல்லை' என்று இன்னும் என்னென்னவோ சொல்வர். திருவள்ளுவர் இந்த சமாதானங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. ஆள்வினையின்றி அவல வாழ்க்கை வாழ்ந்து அழுதுச் சாவ தோடன்றி, மற்றவர் மீது பழியைச் சுமத்தும் மனிதனைப் பார்த்து, "மனிதனே, பழியை நீ மற்றவர் மீது சுமத்தாதே! பரமன் மீது சுமத்தாதே! பக்கத்தில் இருப்பவர் மீது

சுமத்தாதே! பழி உன்னிடத்திலேயாம்!” என்று இடித்துச் சுட்டிக் காட்டுகிறார்.

> பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
> ஆள்வினை யின்மை பழி

என்பது குறள்.

தெய்வமே நம்முடைய காரியத்தைச் சாதித்துக் கொடுக்கத் தவறிவிட்டாலும், அல்லது தெய்வத்தால் முடியாது போனாலும் நாம் முயன்றால் முடிக்க முடியும் என்பது வள்ளுவத்தின் முடிபு. இன்று நமக்கெங்கே அந்தக் கருத்து? நம்மில் பலர் முடிச்சுப் போடுவதில் இருக்கிறார்களே தவிர, முடிப்பதிலா இருக்கிறார்கள்? ஊழ் உள்ள தொன்றேயாம். அதிலொன்றும் பொய்யில்லை. ஆனாலும், அது நம்மிடத்தில் இன்றைக்கு வகிக்கின்ற பதவியிருக்கிறதே அதுதான் ஆபத்து. ஊழ் நம்முடைய ஆண்டானன்று; மாற்ற முடியாததுமன்று. மேலும், மாற்றக் கூடியது மட்டுமின்றி, மிகச் சுலபமாக மாற்றக்கூடியதாகும். புறக்கருவிகள் தேவை யில்லாமலே மாற்றலாம். வேண்டியது சிந்திக்கும் திறன்; தெளிவான புத்தி; சபலமற்ற உள்ளம்; உடம்பை வருத்தி உழைப்பதற்கேற்ற மனப்பக்குவம். இவையிருந்தால் ஊழை ஓடஓட விரட்டலாம். வாழ்வாங்கு வாழலாம். மனிதனின் மனப்போக்கை நிர்ணயம் செய்து திசை திருப்பிவிடுவது சுவை நுகர்வுப் புலன்களேயாம். இன்று பலர் சோற்றுச் சுவையன்றி வேற்றுச் சுவையறியார். தூங்கித் தூங்கிக் கழிக்கும் மடியின் சுவையின்றி மாற்றுச் சுவையறியார். உடல் வியர்வை சிந்துவதில்லை. அதன் பயன், பின்னே இரத்தம் கக்குகிறது. இன்பம் விழையாது இடும்பை இயல்பென்று எண்ணி முயல்பவனே உலகத்தின் தனியுடைமையாகிறான். மண்ணொடு தொடர்பு கொள்ளாத வித்து முளைக்குமோ? நீரொடும் நெருப்போடும் தொடர்பு கொள்ளாத பொருள் வேகுமோ? உடலொடு சாராத உணவு வலிமை தருமோ?

அதுபோல ஆள்வினையொடு தொடர்புபடாத வாழ்க்கை பயன் தராதது மட்டுமின்றிப் பயனை அழிக்கும்; பழியும் சேர்க்கும். ஒரு தலைமுறைக்கன்று ஏழேழ் தலைமுறைக்கும் ஆள்வினையற்றவன் துறவியாக வேண்டும். நாம் இங்குக் குறிப்பிடுவது இன்றையத் துறவிகளையன்று. விழைவும், வேண்டுவனவும் இல்லாத துறவே துறவு. இன்றோ விழைவிலும் விருப்பத்திலும் நாட்டிலுள்ளோர்க்கும், துறவி களுக்கு மிடையே போட்டி வைத்தால் துறவிகளே வெற்றி பெறுவர். இவர் தம்மையும் திருவள்ளுவர் கண்டிக்கின்றார். 'துவரத் துறவாதார் துறவு உப்புக்கும் காடிக்கும் கூற்று.' துவரத் துறவாத துறவின் காரணமாகவே நம்முடைய நாட்டில் துறவி வடிவத்தில் பிச்சைக்காரர்கள் தோன்றினர். மேலும், அதனால்தானே துறவு அமைப்பில் நிலப்பிரபுத்வ அமைப்பைப் பின்னணியாகக் கொண்ட நிறுவனங்கள் தோன்றின. ஆதலால், ஆள்வினை போற்றுதல் தலையாய கடமை. ஆள்வினையற்றோர் உண்ணுதற்கும் உரிமை யற்றோர். அப்படியே உண்டால், அதனை 'உண்ணல்' என்ற சொல்லுக்குப்பதில் 'தீனி தின்பது' என்றே கூறலாம். மீண்டும் மீண்டும் வள்ளுவர் ஆணை மறவன்மின்! ஆள்வினை போற்றுமின்!

## பொருள்

இன்று – இன்று மட்டுமன்று, என்றுமே – வாழ்க்கை யென்ற நடைப்பயணத்திற்குப் பொருள் இன்றியமையாத ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. மனித வரலாற்றில் தொடர்ந்து பாத்திரம் வகித்து வருவது இந்தப் பொருளே யாம். மனிதனின் படைப்பே பொருள். ஆனாலும் ஆச்சரியம், அந்தப் பொருள் அவனுக்கே எஜமானனாகி விடுகிறது! மகன் தந்தைக்குத் தந்தையாகி விடுவதில்லை. ஆனால், பொருளுக்கு மட்டும் இது விதி விலக்கு. பொருள் என்பது, பல பொருளைத் தருகின்ற ஒரு சொல். ஆனால், இன்று

யாருக்கும் பொருள் என்றவுடன் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" என்ற திருவாசக அடிகள் நினைவுக்கு வருவதில்லை. "பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனும்" என்ற செந்தமிழ்க் குமரகுருபரர் கூறிய பொருளும் யாருக்கும் நினைவு வருவதில்லை. பொருள் என்றால் நுகர்ந்து அனுபவிக்கக் கூடிய பொருள்களின் நினைவும் யாருக்கும் வருவதில்லை. "யாஅம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமுமல்ல" என்ற பரிபாடல் அடிகளை எண்ணுங்கள். இந்தப் பொருளுணர்வை யெல்லாம் ஆழப்போட்டுப் புதைத்து விட்டு அந்தக் கல்லறையில் இயல்பிலே மதிப்பில்லாத - செயற்கை மதிப்பைப் பெற்ற காகித நோட்டுக் கற்றைகள் ஆட்சி செய் கின்றன. இந்த இழிதகைமையால் இன்று நம்முடைய நாடு வறுமையடைந்திருக்கிறது. திருவள்ளுவர் பொருளியல் துறையில் மிகச் சிறந்த கருத்துக்களைக் கூறினார். இன்று வளர்த்து வந்துள்ள பொருளியல் தத்துவங்களோடு ஈடு கொடுத்து நிற்கக் கூடிய பொருளியல் சித்தாந்தங்களைத் திருக்குறள் பேசுகிறது. பொருள் என்றால் உயிர் வாழ்க்கை யின் உலகியல் பயணத்திற்குத் துணைநிற்கும் பருவுடலுக்கு, ஆற்றல் தரத்தக்க எரிபொருள்களாகிய உணவுப் பொருள் களேயாம். அருளியல் உலகில் உயிர் உணர்வுக்கு ஆற்றல் தரத்தக்க இறைவனே பொருள். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உயிர் வாழ்விற்குத் தேவையான உண்பொருள் களைத் தானே முயன்று உற்பத்தி செய்து கொள்ளவேண்டும். இதுவே நாணயமான - சுதந்திரமான வாழ்க்கை. அப்படி முடியாதவர்கள் இவற்றை உற்பத்தி செய்யக்கூடியவர்களின் நல்வாழ்வுக்குரியனவற்றையாவது செய்து, அதை ஈடுகட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இதையேதான் அண்ணல் காந்தியடிகள் "சுய தேவை பூர்த்தி" என்றார். இப்பொழுதும் பலருக்குத் தேவை பூர்த்தியாகிறது. ஆனால் எப்படிப் பூர்த்தியாக வேண்டுமோ அப்படியன்று. உறிஞ்சுதல்,

சுரண்டுதல், முதலிய வழிகளின் மூலம் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறார்கள். பொருள், உற்பத்தி செய்யக் கூடியதே தவிர, "பண்ண"க் கூடியதன்று. பொருள் சேர்ந்தால் மட்டும் போதாது. சேரக்கூடிய வகையில் சேரவேண்டும். இதனைப் பழியஞ்சிப் பொருளீட்ட வேண்டுமென்கிறது குறள். பொருள்களையும் பலரும் ஒரேவகையில் திரட்ட முயன்றால் அப்பொழுதும் பொருட் பற்றாக்குறை ஏற்படும். பொருள் வருதற்குரிய வழிகளும் விரிந்தனவாகவும், பரந்தன வாகவும் இருக்க வேண்டும். அடுத்த வீட்டு மனிதன் எந்தத் தொழில் செய்து பணம் திரட்டுகிறானோ, அதே தொழிலில் அவனுக்குப் பங்காளியாகி அவன் தொழிலைக் கெடுக்கக் கூடாது. பொருள் வருதற்குரிய புதுப்புது வழிகளைக் காணுதல் வேண்டும். பொருளை ஈட்டவேண்டும். ஈட்டி னால் மட்டும் போதாது. பொருட் செல்வத்தைப் போற்றி வளர்க்கவேண்டும். 'பொருட்செல்வம் போற்றுவார்கண் உண்டு' என்பது குறள். இங்குப் போற்றுதல் என்பது மற்றவர் களுக்கு வழங்காமலும் துய்க்காமலும் காப்பது என்று பொரு ளன்று. இவறிக் கூட்டிச் சேர்ப்பது காப்பதாகாது. ஒரு பொருள் தன்னுடைய துய்த்தலுக்கும் வழங்குதலுக்கும் கூட ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியை அடையவேண்டும். அந்தப் பொருள் வற்றாது வளந்தரக்கூடிய இயல்பை அடைய வேண்டும். அப்பொழுதுதான் இயற்கை இன்னல்கள் விளைந் துழியும் இடர்ப்பாடின்றி வாழமுடியும். பொருள் வர வர, அது வளமான முதலாக வளம்பெற வொட்டாமல் சில்லறை யாகவே அழித்தால் பொருள் அழியும் என்பது ஒரு சிறந்த பொருளியல் கருத்து. அடுத்து, பொருளாதாரத் தத்துவத்தில் பொருள் விநியோகம் மிகவும் முக்கியமானதாகும். இன்று நம்முடைய நாட்டில் இந்த விநியோகம் சீராக இல்லை என்பது பலருடைய கருத்து. தனிமனிதன் அளவிலும் சரி சமுதாய அளவிலும் சரி, திட்டமிடப் பெற்ற - ஒழுங்கு படுத்தப்பெற்ற பொருட்பங்கீடு வேண்டும். ஒரு மனிதன்

தன்னுடைய வருவாயில் தன்னுடைய பொறுப்புக்கள் கடமைகள் அனைத்துக்கும் ஏற்றவாறு பங்கிட்டுக் கொள்வது அவசியம். அதிலும் தனிமனிதன் தன்னுடைய வருவாயில் ஒருபங்கைச் சமுதாயத்திற்கென்று ஒதுக்கவேண்டும். அந்தச் சமுதாய நிதி; சமுதாய அளவில் பரவலாகப் பலருக்குப் பயனுறத்தக்க வகையில் பயன்படுத்தப் பெற வேண்டும்.

இதனை,

*இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு*

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

## அன்பு நெறி

கடவுளை இந்த உலகத்தில் காணோம். கடவுள் காண முடியாத பொருளா? வெற்றுக் கண்ணாடியில் முகம் தெரியுமோ? அதுபோல வெற்று மனிதர்கள் கடவுளைக் காணமுடியுமா? வடிவத்தில் தேங்காய். ஆனால் உள்ளீடில்லை. அதற்கு 'வெறும்பாடைக்காய்' என்று பெயர். காயில் மட்டுமா வெறும்பாடை? மனிதரிலும் 'வெறும் பாடைகள்' உண்டு. காயில் வெறும்பாடைக்காய் அடுப்பெரிக்கவும், ஆக்கவும் எரிபொருளாகப் பயன்படும். வெற்று மனிதரோ எரிபொருளாகக் கூடப் பயன்படமாட்டார்கள். அவர்களை எரிக்கவே வேண்டியதிருக்கிறது. ஆருயிர்க்கு அழிவற்ற உடலோடு இயைபு ஏற்பட்டதே அன்பு கொண்டு ஒழுகவே யாம். மனிதனுக்கு உயிர் உண்டு; உயிர்சார்ந்துலவும் உடலுமுண்டு. இவற்றிற்கு மேலாக உயிர்த்தன்மையும் உண்டு. ஆனால் இன்று பலருக்கு உடல்மட்டுமே தெரிகிறது; உடல் தேவைகளையே தேடி அலைகின்றனர்; உயிரை மறந்தே விட்டார்கள். உயிரையே மறந்த பிறகு உயிர்த்தன்மை இருக்குமா என்ன? ஒருமனிதனுக்கு உயிர் இருக்கிறதா இல்லையா என்பதற்கு அளவுகோல் அவன் உண்டு திரிந்து

நடமாடுவதன்று. அன்பு காட்டி வாழும் பண்பில்தான் அவனது உயிர்நிலை இருக்கிறது. இதனை,

> அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
> என்புதோல் போர்த்த உடம்பு

என்று குறள் பேசுகிறது.

உலகத்தில் தனிமனிதனுக் காயினும் சரி, சமுதாயத்திற் காயினும் சரி வளம்பல பெற்று இனிதே வாழ அன்பே அடிப்படை. மனித உலகத்தைப் பகையிலிருந்து விலக்கிப் பண்பு தழீஇய சமுதாயமாக மாற்றுகிற சக்தி அன்புக்கே உண்டு. ஏன்? மண்ணுக்கும் விண்ணுக்கும் இணைப்பூட்டும் ஆற்றல் அன்புக்கு உண்டு. அன்பு மனிதனை விலங்கியல் தன்மையிலிருந்து விடுதலை செய்கிறது. முழு மனிதனாக்கு கிறது; தெய்வமாக்குகிறது. திருவள்ளுவர் காட்டும் அன்பு அறத்திற்கு மட்டும் சார்புடையதன்று; மறத்திற்கும் துணை யாகும். வள்ளுவம் காட்டும் அன்பு நெறி இன்றைய உலகத்திற்கு மிகவும் அவசியமான தேவை. இந்த அன்பு நெறி தழைப்பதாக.

## ஒழுக்க நெறி

யாரொருவருக்கும் இடையூறு இன்றி வாழும் நெறியே ஒழுக்க நெறியாகும். இதனையே திருக்குறள் 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்று கூறுகிறது. விலங்கிலிருந்து மனிதர் களைப் பிரித்து உயர்த்திக் காட்டுவது ஒழுக்கச் சார்பே யாகும். ஒழுக்கம் உள்ளத்தினைச் சார்ந்து அவ்வழி உடற் சார்பிலும் மேம்பட்டு விளக்கம் காட்டுவது. கைகளால் திருடாமல் மட்டும் இருந்தால் போதாது. ஊர்காவல் படையின்கண் உள்ள அச்சத்தினால், கையால் திருடாமலிருக்கலாம். ஆனால், உண்மையான ஒழுக்கம் என்பது எது என்பதனை, 'உள்ளத்தால் உள்ளலும் தீதே' என்று குறள் கூறுகிறது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய

உரிமைகளுக்கும் இன்பத்திற்கும் மட்டும் பாதுகாப்பாளனாக இருக்கக் கூடாது. தன்னுரிமையில் நாட்டம் காட்டுவது விலங்கினங்களிடத்திலும் உண்டு. ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுடைய உரிமைக்கும் நலனுக்கும் இன்பத்திற்கும் பாதுகாப்பாளனாகவும், உத்தரவாதம் தருபவனாகவும் இருக்க வேண்டும். இன்று ஏது அந்த நிலைமை? பாது காப்பாளனாக இருக்க முடியாது போனாலும் உபத்திரவம் தராமல் இருந்தால் போதுமானது என்று கருத வேண்டிய திருக்கிறது. இதனை.

*ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்*
*இழிந்த பிறப்பாய் விடும்*

என்று கூறுகிறது திருக்குறள். இன்று இலக்கியம் சமயம் சட்டம் இத்தனைக்கும் 'பேப்பே' சொல்லிவிட்டுத் தப்பித்துக் கொண்டு சாமர்த்தியமாக வாழ்வதைத் தானே விரும்பு கிறோம். இந்த நிலைமாறி, தற்சார்பான ஒழுக்க இயல்பு களுடன் சமுதாயத்தைச் சார்ந்த பொது ஒழுக்க நெறி யினோடும் நாளும் வளர்ந்து விளங்குவதாக.

## ஒருமை நெறி

உலகம் ஒன்று. உலகிடை வாழும் மனித குலமும் ஒன்று. உலகு தழுவிய உறவு நெறியைக் கண்ட பெருமை தமிழுக்கு உண்டு. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பது புறநானூறு. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது திருமந்திரம். மனிதகுல ஒருமைப் பாட்டு நெறியை, ஆன்ம நேய ஒருமைப்பாடு என்று கூறுவர் இராமலிங்க அடிகள். இன்பத்தமிழின் இணையற்ற இலட்சியம் மனிதகுல ஒருமைப்பாடு. ஆனால் அந்த மொழி பேசும் மக்களிடத் திலேயும் கூட இன ஒருமைப்பாடு இல்லாமல் பல்வேறு சாதிகளாகப் பிரிந்து ஆதிக்க வர்க்கத்தின் கீழ் அடிமைப் படுகிறார்கள். இந்திய நாட்டின் பாதுகாப்பு இந்திய ஒருமைப் பாட்டிலேதான் தங்கியிருக்கிறது. இந்திய நாட்டின்

ஒருமைப்பாட்டினை, ஒரு வலிமை பெற்ற அரசினால் மட்டும் காப்பாற்ற முடியாது. அல்லது இந்தி மொழியை எல்லோரும் ஏற்றுக்கொள்ளச் செய்வதனாலும் ஒருமைப் பாடு உருவாக முடியாது. ஒருமைப்பாடு என்பது ஒழுக்கச் சார்புடையது; உள்ளச் சார்புடையது; சிந்தனை மலர்ந்து விளங்க வேண்டியது. இதுவே உண்மையான ஒருமைப்பாடு. இத்தகைய ஒருமைப்பாட்டை உருவாக்கச் சட்டங்கள் மொழிகளை விட, சிந்தனையும்; சித்தனையைச் சார்ந்த செம்மையான வாழ்க்கையுமே துணை செய்ய முடியும். மனவிகாரத்துக்கும் வேறு பாட்டுக்கும் வித்திடுகின்ற எந்தக் கருத்துகளையும் மக்கள் எண்ணக்கூட சந்தர்ப்பம் வழங்கக் கூடாது; கேட்க வாய்ப்பளிக்கக் கூடாது. மனமாறுபாடுகளும் பகையும் மக்கள் மன்றத்தின் முன் கால்கொள இடங் கொடுக்கக் கூடாது. இத்தகு சீரிய ஒருமைப்பாட்டினை-சிறந்த ஒரு இலக்கியத்தை மக்களைப் பயிலச் செய்து அவ்வழி வாழ வழிநடத்துதலின் மூலமே முடியும். இன்று நம்மிடையில் விளங்கும் இலக்கியங்கள் எல்லாவற்றையும் விட ஒருமைப் பாட்டை உருவாக்கும் இலக்கியமாகத் திகழ்வது திருக்குறள் ஒன்றேயாம். திருக்குறளில் நாடு உண்டு. ஆனாலும் நாடொடு மோதும் நாடு இல்லை. நல்ல நாட்டுக்கு இலக்கணம் உண்டு. திருக்குறளில் தென்றல் தவழும் பொதிகையைக் காணோம். இமயப் பனிவரையையும் காணோம். தண்ணார்ந்த நெஞ் சுடைய இளங்கோவடிகளும், “காவிரி போற்றுதும்” என்றார். ஆனால், திருவள்ளுவர் எந்தவொரு ஆற்றையும் பாடினா ரில்லை; திருக்குறளில் சாதிகளில்லை. அதற்கேற்ற உயர்வு தாழ்வுகளில்லை. செல்வத்தால் அமையும் எந்தவித ஏற்றத் தாழ்வுகளையும் வள்ளுவர் எந்த நியாயமும் காட்டி ஒப்புறுதி வழங்கவில்லை. மாறாக “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்” என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உழவர் பெருங்குடி மக்களுக்கு உரிமை கொடுத்த நூல். நஞ்சுண்டு அமையும் நயத்தக்க நாகரிகத்தை நற்றமிழில் வடித்துத் தந்த ஒப்பற்ற சமாதான நூல். திருக்குறள் நெறி பரவினால்

மனப்பகை ஒடுங்கும். போர் முனை அருள் முனையாகும். இந்த மண்ணகம் விண்ணகம் ஆகும்; உலகின் மனித குல ஒருமை உறுதியாகும்.

## அருள் நெறி

திருக்குறள் எல்லாச் சமயங்களும் ஏற்றுப் போற்றக் கூடிய பொதுமறையாக விளங்குகிறது. கடவுளை நம்பாத உலகாயதவாதிகள் உட்பட திருக்குறளை நம்புகிறார்கள். உயர்ந்த சமய நெறியின் இயல்பு, எல்லோரும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருப்பதுதானே! வேறுபாடுகளைக் காட்டிக் காழ்ப்பையும் கலகத்தையும் உருவாக்குகிற ஒன்று, நிறைவான-சிறந்த சமயமாக இருக்க முடியாது. திருக்குறள் காட்டும் சமயம் வேறுபாடுகளைக் கடந்த சமயம். தத்துவ சீலங்களால் உயர்ந்து காட்டுதல் என்பது வேறு; தாக்கித் தாழ்த்தி உயர்தல் என்பது வேறு. திருக்குறள் சமய நெறி மிகவுயர்ந்த சமய நெறி. திருக்குறளை மையமாகக் கொண்ட சமய இயக்கமொன்றைத் தொடங்கியிருந்தால் உலகப் பொதுச் சமயம் தோன்றியிருக்கும். கடந்த காலத்தில் அதைச் செய்யத் தவறியது, பொதுவாக உலகத்துக்கும் சிறப்பாகத் தமிழகத்திற்கும் இழப்பேயாம். இனி எதிர் காலத்திலாவது திருக்குறள் சமய இயக்கம் தோன்ற முயலுவோமாக.

## முடிப்புரை

திருக்குறள் வாழ்க்கை நூல். அது ஒரு தனிமனிதனை அறிவூட்டி, உணர்வூட்டி, ஆள்வினை கூட்டி, அன்பில் தோய்த்து, வேண்டுவன தந்து, ஒழுக்க நெறியில் செலுத்தி, அருள் நெறியில் நிற்கச் செய்து வளர்த்து வாழ்விக்கிறது. திருக்குறள் மனித சமுதாயத்தை இறைநெறியில் நிறுத்தி, முறைமையில் முறைப்படுத்தி, நடுவு நிலைமையில் நடை பயிலச் செய்து, உயர்நெறியாம் ஒப்புரவில் ஒழுகச் செய்து- கடலுக்குப் புயலும், புயலுக்குக் கடலும் போல- தனி மனிதனோடு உறவு கொண்டு வளர்த்துத் தன்னையும் வளர்க் கிறது.

திருக்குறள் பாட நூலன்று. இன்றைய சூழ்நிலையில் பாடப் புத்தகங்களுக்குரிய பார்வை திருக்குறளைச் சாரக் கூடாது. இன்றைய சூழ்நிலையில் வேலை என்பதன் பின்னுள்ள சுமை உணர்ச்சி திருக்குறளைச் சாரக் கூடாது. திருக்குறள் கற்பது, உணர்வது, நாள்தோறும் உயிர் வாழ்க்கை யிலுள்ள விருப்பத்தைப் போலச் செய்ய வேண்டிய ஒன்றாக இடம் பெறவேண்டும். நாளுக்கு நாள் நம்மைத் திருக்குறள் வளர்த்துப் புதுமைப்படுத்த வேண்டும். வீடுகள் தோறும் திருக்குறள் பயிற்சி. வீதிகள் தோறும் திருக்குறள் வினைகள் வளரவேண்டும். குறைந்தது நூறாண்டுகளாவது மனிதன் வாழலாம். முறையாக வாழ்ந்தால் வாழ முடியும். சராசரி பதினொரு வயதுக்குள் கற்கவும் கேட்கவும் தெளிவாக உணரவும் கூடிய பருவம் வரலாம். பதினொரு வயதில் திருக்குறளைக் கற்க, கற்று நெறி நிற்க முயன்றால் பதினெட்டு வயதுக்குள்ளாகச் சீலமும் நெறியும் நிறைந்த மனிதனாகத் தன்னை வளர்த்துக் கொள்ள முடியும். வாழ்க்கைக்கு ஒரு மனிதனை நெறியும் நிறைவும் உடையவனாக வளர்க்க, இனிறியமையாது ஏற்று ஒழுகத் தக்க நெறிகளாக-அடிப்படை ஒழுக்க நெறிகளாக ஐம்பத்து நான்கு நெறிகளைக் காட்டு கிறது வள்ளுவம். அவற்றினும் அடிப்படை ஒழுக்க நெறி களுக்கும் நிலைக்களனாக-அடி நிலமாக உள்ளன மூன்று என்று கூறுகிறது. அவை முறையே அறிவுடைமை, ஆள்வினை யுடைமை, அன்புடைமை ஆகியனவாகும். இந்நெறிகளை ஏழாண்டுக் காலம் முயன்று கற்று, வருந்தி வழக்கப் படுத்திக் கொண்டால் வாழ்நாள் முழுதும் இன்பத்தோடு வாழலாம். பலரை வாழ்வித்தும் வாழலாம். ஏழேழு பிறப்புக்கும் வாழலாம்; எல்லாம் வல்ல இறைவனுக்கும் விருந்தாக அமையலாம். முயலுவோமாக! திருக்குறள் சாதனை நூல். திருவள்ளுவருக்குக் கைம்மாறு நம்முடைய வாழ்க்கைச் சாதனையே யாம். வாழ்க வள்ளுவம்! வளர்க வள்ளவ நெறி! வையகம் இன்புறுக.

# கல்வி உலகத்திற்கு...

மனிதன் மனித வடிவத்திலேயே பிறக்கிறான்; ஆனால் பின்னே மனிதனாக வளர்கிறான். மனிதனை முழு நிறை மனிதனாக்குவதில் கல்வியே முக்கியமான இடத்தை வகிக்கிறது. கல்வி மனிதனுக்குக் காற்றைப்போல இன்றியமையாதது. உடல், உயிர்க் கூட்டுக்குக் காற்றே களம். உயிர், ஒழுக்கத்திற் சிறக்க கல்வியே களம்.

கல்வி என்பது உயிரிடத்தில் ஒளிந்து கிடக்கும் அறிவை, ஆற்றலை வெளிப்படுத்துவதாகும்; அந்த அறிவிலும், ஆற்றலிலும் இயற்கையில் காணப்பெறும் குறைகளை நீக்கி நிறைவு செய்வதுமாகும். கல்வி மனிதனை அறிவுடையவனாக்கி, ஆற்றல் உடையவனாக்கி, ஒழுக்க நெறியில் உயர்ந்தவனாக்கி முழு மனிதனாக்கும் ஆற்றல் உடையது. அத்தகைய சாதனைகளைச் செய்யும் ஒன்றுகே கல்வி என்று பெயர். இன்றோ, கல்வி இத்தகைய நலன்கள் செறிந்ததாக இல்லை. இன்றையக் கல்வி சில செய்திகளைத் தெரிந்த கொள்ளவே பயன்படுகிறது; அல்லது மூளையில் சிலவற்றை ஏற்றித் திணித்துச் சந்தர்ப்பம் வரும்பொழுது பெருமையாக ஒப்பித்துக் காட்டப் பயன்படுகிறது. இன்றையக் கல்வி அறிவுப் புலனுக்கு ஆற்றல் தருவதாக இல்லை. கல்வியின் பயனாகிய அறிவு, நம்முடைய சமுதாயத்தில் வளரவில்லை. நிறையப் படித்த பலரைக் காண்கிறோம். ஆனால் அவர்களிடத்தில் அறிவு என்பது சிறிதளவேனும் இல்லை என்பது வெளிப்படை.

கல்வி பற்றித் திருக்குறள் தெளிவுறப் பேசுகிறது.

*கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக*

என்ற திருக்குறள் கல்வியின் தத்துவத்தை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. ஆனால் இந்தத் திருக்குறளுக்கு ஏற்றவாறு நம்முடைய சிந்தனைப் போக்கு வளரவில்லை. கல்வி கற்பதற்குப் பயனுடைய நூல்கள் தேவை. சிறந்த நூல்கள் உயிர்க்கு மருந்தாகவும் உணவாகவும் பயன்படும். நூல்கள் உயிர்க்கு மருந்து என்று குறிப்பிடுவது ஆன்றோர் வழக்கு. கோணல் நீக்கி நேர் நிறுத்துவது நல்ல நூல் என்பது தமிழ்க் கருத்து. நம்முடைய மனக் குற்றங்களை நீக்குதற்குரிய நூல்களாகத் தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும். அந்தக் குற்றங்கள் நீங்குகின்ற வரையில் கற்கவேண்டும். இந்த அடிப்படையில் நூல்களைப் பொறுக்கி எடுக்கும் பண்பு வளரவில்லை. மாறாக, உள்ள நோயினைப் பெருக்கிச் சீரழிக்கும் நூல்களே மலிந்து கிடைக்கின்றன. அவற்றை வாங்கிப், பழகின சுவைப் புலனுக்குத் தீனி தந்து மாறுபட்டு நின்று வஞ்சனை செய்யும் வஞ்சப் புலனைந்துக்கும் இரை போட்டு அழியத் துணைசெய்யும் நூல்களின் பெருக்கமும் நினைத்தால் நெஞ்சம் நடுக்கமுறுகிறது! அம்மம்ம, கொடுமை!

பயில்வதைவிட பயில்தற்குரிய நூலைத் தேர்ந்தெடுப்ப திலேயே அதிக கவனம் தேவை. அதிலேயே வாழ்க்கையின் வெற்றி அமைந்து கிடைக்கிறது. நூலாசிரியனாதல் அருமை யில் ஆகக்கூடிய முயற்சி. நூலைவிட, நூலாசிரியன் உயர்ந்து விளங்க வேண்டும். சிந்தையில் சிறந்த தெளிவை, வாழ்க்கை என்ற ஏட்டில் சாதனை என்ற எழுதுகோலால் உணர்வு என்ற மையில் நனைத்து எழுதுபவனாக இருக்கவேண்டும். இதற்குப் பிறகே புற வெளிப்பாடாகிய நூல் தோன்ற வேண்டும். இங்ஙனம் தோன்றும் நூல்கள் மக்கட் சமுதாயத் திற்கு ஏணியெனவும் தோணியெனவும் பயன்படும். ஆதலால் "கற்க கசடறக் கற்பவை" என்ற வள்ளுவத்தின் ஆணை மீற முடியாத ஒன்று.

கல்வி, தொடர்ந்து பயிலத்தக்க ஒன்று. அதற்குக் கால எல்லை கிடையாது. இப்பொழுதோ பலர் படித்து முடித்து விட்டதாகவே கூறுகிறார்கள். மனிதன் சாகிற வரையில் கற்கவேண்டும். இந்த அடிப்படையில்தான் "சாந்துணையும் கற்கவேண்டும்" என்று வள்ளுவம் ஆணையிடுகிறது. இன்று நம்முடைய தமிழக அரசு கல்வியில் போதிய ஆர்வம் காட்டுவது பாராட்டத்தக்கதேயாகும். ஆனாலும் கல்வியின் தரம் உயர-மக்கள் மன்றத்தில் அறிவு வீச்சு ஏற்பட-மேலும் பல பணிகளைச் செய்ய வேண்டும். இன்றைய ஆரம்பக் கல்வி, அறிவுக்கிளர்ச்சி செய்யத் தக்கதாக இல்லை என்பது பெரிய உண்மை. ஆரம்ப ஆசிரியர்களை மிகக் குறைந்த தரமுடையவர்களாகப் பார்த்து எடுக்கிறோம். சிந்திக்கும் திறன் பெற்ற வயது வந்தவர்களுக்குச் சிறந்த ஆசிரியர் களையும், சிந்திக்கும் திறனையே கற்றுத் தரவேண்டிய அறியாப் பருவத்தினருக்குத் தரங்குறைந்த ஆசிரியர்களையும் வழங்கும் முறை நன்றன்று. குழந்தைப் பருவத்தில் வண்ணமும் வடிவமும் பெறாது பசுமையென நிற்கும் உள்ளத்தோடு பழகி, சிந்திக்கக் கற்றுக் கொடுத்து, சிந்திக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி வண்ணமும் வடிவமும் கொடுக்கக் கூடிய கைதேர்ந்த பேராசிரியர்கள் தேவை. அப்பொழுது தான் உறங்கிக் கிடக்கும் அறிவொளி வெளிப்படும்.

கல்விக்கூடங்களுக்கு மிகச்சிறந்த நூலகங்கள் தேவை. நூலகத்திற் பயிலுதலையும், பாடத்திட்டத்தோடு சேர்க்க வேண்டும். எல்லாப் பள்ளிகளிலும் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இருக்க வேண்டும். அறிவியல் துறையில் போதிய அறிவைப் பெற ஓயாது உழைக்க வேண்டும்.

எல்லாப் பள்ளிகளும் கல்லூரிகளும் தங்கிப் படிக்கும் வகையினதாகவே அமையவேண்டும். வளமற்றோர் அரசுப் பொறுப்பிலும், வளமுடையோர் சொந்தப் பொறுப்பிலும்

தங்கிப் பயிலவேண்டும். இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பல பள்ளிகள் அமைவதைவிட மையப்படுத்திய- எண்ணிக்கைக்கு உட்பட்ட பள்ளிகளே நலம் தருவன. எண்ணிக்கையில் பள்ளி அதிகமாகும் போது, போதுமான மாணவர்கள் இல்லாமல், வீண் செலவும், சில்லரைச் செலவுகளும் அதிகமாகின்றன. பள்ளிகளை மையப்படுத்தி எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும்பொழுது, வீண் செலவைத் தவிர்க்க முடியும். அதோடு நூலகம், அறிவியற்கூடம் ஆகியவைகளைச் சிறந்த முறையில் மையப்படுத்துவதில் வேறொரு சிறந்த பயனும் உண்டு. அதாவது தற்போதைய பள்ளி அமைப்பு முறையில் மாணவர்கள் தங்களை யொத்த திறனுடைய மாணவரிடத்திலேயே பழக முடிகிறது. பள்ளிகளை மையப்படுத்தும் பொழுது வேறு பிற பகுதி மாணவர்களிடமும் பழகும் வாய்ப்பு ஏற்படுவதால், கொண்டும், கொடுத்தும் அறிவு-ஆற்றல்களைப் பரிமாறிக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

பொதுவாக நம்முடைய நாடு இரண்டு தலைமுறைகளுக்கு மேலாக அரசியலடிமைப்பட்டுக் கிடந்த நாடாகும். ஒரு நாடு அரசியல் அடிமைப்படுவதற்கு ஏதுவாக வேண்டுமானால் அதற்கு முன்பே பலநூறு ஆண்டுகள் அறிவிலும் ஆற்றலிலும் அது முடங்கி முடப்பட்டுப் போயிருந்தால்தான், அரசியல் அடிமைத்தனம் உருவாகும். இந்த வகையில் ஆழச் சிந்தித்தால் நம்முடைய நாடு, கடந்த பல நூற்றாண்டுகளாகச் சிந்தனையிலும், செயலிலும் முடக்குவாதம் கொண்டு அழிந்து இருப்பது தெரியவரும். திருவள்ளுவர். திருநாவுக்கரசர் போன்ற சிறந்த மருத்துவர்களாலும் இந்த முடக்கு வாதத்தை அடக்க முடியவில்லையே என்ற உண்மையை அறியும் பொழுது நமக்கு இரக்கமே மேலிடுகிறது. ஆதலால் கல்வி உலகத்தில் மிகவும் விழிப்புடனும் தீவிர உணர்ச்சியுடனும் அணுகினாலேயே இந்தத் தலைமுறையிலாவது

வரலாற்றை மாற்ற முடியும். பொதுவாகக் கல்வியில் இன்று சுவைத்திறன் ஊட்டம் தரக்கூடிய சக்தி நம்முடைய கல்வி உலகுக்கு இன்னும் வரவில்லை என்பது என்னவோ உண்மை. கல்வி, சுவையுடையதாக மாறி, அறிவு ஆக்கத்தினைத் தந்து நம்மைப் பிடித்துள்ள மூடப் பழக்க வழக்கங்களும் துன்பமும் தொலைந்து, வலிவும் எழுச்சியும், ஏற்றமும், ஆள்வினையும், ஆக்கமும், அன்பும், அறனும் நிறைந்த சிறந்ததொரு வாழ்க்கை உருவாக வேண்டும். இதைச் சாதிக்க முடியுமா என்பது இன்றைய கல்வி உலகத்திற்கு ஓர் அறைகூவல்.

# திருக்குறள் ஒழுக்கம்

## தமிழின் சிறப்பு

தமிழ் காலத்தால் மூத்தது; கருத்தாலும் மூத்தது. தமிழ் வாழ்க்கையோடு இயைந்து வளர்ந்த மொழி. வாழக்கையை வளர்த்த மொழி. தமிழினம் உலகின் வரலாற்றுக் காலந் தொட்டே சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து வந்திருக்கிறது. தமிழினத்தின் கருத்துக்கள் நம்பிக்கை, நல்வாழ்க்கை இவை களுக்கு இயைபுற அமைந்தன. வரட்சித் தன்மையுடைய கற்பனைகளோ, இசைவான நடைமுறைகளுக்கு அப்பாற் பட்டவைகளோ, தன்னிச்சையான மனப்போக்குகளின் படைப்புக்களோ தமிழில் இல்லை.

தமிழ், மொழியாக மட்டும் வளரவில்லை. நாகரிகம், பண்பாடு, சமயம் ஆகியவற்றையும் தழுவி வளர்ந்திருக்கிறது. தமிழ், வாழ்க்கையை ஏனோ தானோவென்று கணிக்க வில்லை. வாழ்க்கையை வாழ்க்கையாகவே பார்க்கிறது. ஏன்? “வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்” தமிழ்தந்த பாடம். இன்றா? நேற்றா? இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பேயாம். உலகமொழி என்று பாராட்டப்படுகின்ற ஆங்கிலத்திலும், அம்மொழி பேசும் மக்களின் வாழ்க்கைக்கு இலக்கணமில்லை. இந்திய நாட்டின் இணைப்பு மொழியாகச்

செயற்கைக் கோலம் தாங்கும் இந்தியிலும் வாழ்க்கைக்கு இலக்கணமில்லை. ஏன்? இந்திய நாட்டின் சமயத்திற்குரிய மொழி என்றும், பாசம் ஒன்றின் காரணமாகவே சிலரால் பாராட்டப்பெறும் சமஸ்கிருதத்தில் கூட வாழ்க்கைக்கென்று முறையான இலக்கணமில்லை. தமிழில் எழுத்து, சொல், பொருள் என்ற அமைப்பில் இலக்கணத்தை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் இயற்றித் தந்துள்ளார். தமிழிலக்கிய வழக்கில் பொருள் என்றால் பயன் என்றே கொள்ளப் பெறும். மொழியின் பயன் நல் வாழ்க்கையேயாம். ஆதலால் தொல்காப்பியர் பொருளதி காரத்தில் தனி மனிதன், வாழ்க்கைத் துணையுடன் கூடிவாழும் மனையற வாழ்க்கைக்குரிய நெறிமுறைகளை அகத்திணை இயலிலும், அவனே சமுதாயத்துடன் தொடர்பு கொண்டு வாழ்வதற்குரிய நெறிமுறைகளைப் புறத்திணை இயலிலும் இலக்கணமாக வகுத்துச் செய்துள்ளார். இத்தகு சிறப்புடை மரபில் உலகுபுகழ் திருக்குறள் தோன்றிற்று.

## திருக்குறளின் சிறப்பு

திருக்குறள் பயில்தொறும் இன்பந்தரும் நூல். ஒரு முழுதுறழ் அறநூல். இனிய தமிழ், எளிய நடை, மனம் கொளத்தக்க குறுகிய அளவு. இருபொருள் படாத தெளிந்த நடை. ஐயத்தின் நீங்கிய துணிபு. இனம், மொழி, மதம் சார்பற்ற தன்மை. காலவெள்ளத்தில் அழியாத நீதி. ஓரின ஒழுக்கம் பேசாமல் உலக ஒழுக்கம் பேசிய ஒட்பம். வீட்டையும், நாட்டையும் பிணைத்த பெட்பு. இருவகைக் காதலையும் எடுத்துக் காட்டிய இனிய சால்பு. குற்றங் காட்டுதல்—குற்றம் கடிதல், நன்றின்பால் உய்த்தல் ஆகியன நிகழ்த்தும் ஆற்றல். இப்படி எத்தனை எத்தனையோ சிறப்புக்கள். விரிப்பில் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்.

## திருக்குறள் வளர்க்கும் முறை

தனிமனிதன், குடும்பம், சமூகம், சமுதாயம், உலகு என்ற முறைவைப்பை வரலாற்றுப் போக்கு காட்டுகிறது.

இந்த முறைவைப்பின் பல்வேறு படிகளில் உள்ள பாத்திரங்களை முறைப்படி வளர்த்து, ஒன்றுக்கும் பிறிதொன் றுக்கும் இடையில் தொய்வில்லாமல், ஒன்று பிறிதொன்றின் நலனுக்கு இடையூறு இல்லாமல் வளர்த்து, வழி நடத்தும் பெருமை திருக்குறளுக்கே உரியது. திருக்குறள் தனிமனிதனை நம்புகிறது; முற்றிலும் முழுவதும் நம்புகிறது. அவனே மனித சமுதாயத்தை வரலாற்றை இடையீடின்றி எழுதும் பாத்திரம் என்றும் நம்புகிறது. அவனை அகத்தாலும் புறத்தாலும் வளர்த்து உறுதிப்படுத்த—நிலைநிறுத்த திருவள்ளுவர் முயற்சிக்கின்றார்.

சிற்பிக்குச் சிலை வடிப்பதே நோக்கம். உழவனுக்குக் காடுகளைக் கழனியாக்குவதே நோக்கம். திருவள்ளுவருக்கு மனிதனை, மனித சமுதாயத்தை வளர்ப்பதே நோக்கம். திருக்குறளில் இலக்கிய இன்பம் உண்டு; கவிதை நலமுண்டு; எதுகை மோனைகள் ஏராளம்; அணியின்பங்கள் ஆயிரமாயிரம். எனினும் இவையனைத்தும் மனிதனை முழுமைப் படுத்துகின்ற குறிக்கோளுக்குத் துணையே தவிர அவையே மேம்பட்டு விளங்கவில்லை. மனிதனை வளர்க்கும் நோக்கமே திருக்குறளில் நிறைவுற்று வெளிப்பட்டுக் காட்சி அளிக்கிறது. தனிமனிதனைத் தன்நிலைஒழுக்கத்தில் ஈடுபடுத்தி, வளர்த்து, துணையுடன் கூட்டி, அவ்வழி உலகுடன் இணைத்து, அவ்வழி இறை யின்பத்துடன் இணைத்துப் புகழ் உண்டாக்குகிறது.

## உயிர்க்குறுதி

தமிழ்மரபு, உயிர் உண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இன்று வரையில் பிறமொழி இலக்கியங்கள் உயிரைப் பற்றித் தெளிவாக விளக்க முடியாமல் அல்லற் படுகின்றன. திருக்குறள் உயிர் உண்மையை ஒத்துக் கொள்கிறது. உயிர், தோற்றமும், அழிவும் இல்லாத நிலை யான ஒன்று என்பது திருக்குறள் முடிபு. இதனை "மன்உயிர்"

என்னும் சொல்லாட்சியால் உணரலாம். இதனை மேலும் அரண் செய்ய எழுபிறப்பு உண்மை துணை செய்கிறது. அது துன்பத் தொடக்கிலிருந்து விடுதலைபெற்று நல்லின்ப வாழ்க்கை பெறுதற்குரியதென்று காட்டுகிறது. உயிர் அறிவுப் பொருள் என்றும் நம்புகிறது. ஆனால் அது இயல்பான அறிவன்று. உயிர், அறிவு பெற்று விளங்குவதற்குரிய பொருள். அறிவே உயிர்க்கு முதல்துணை என்பது திருக்குறள் முடிபு. அதனால் **"அறிவுடையார் எல்லாம் உடையார்"** என்று பேசுகிறது. இந்த அறிவினைப் பெறுதற்குரிய வழிவகைகளையும் ஐயத்திற் கிடமின்றி அறிவுறுத்தலோடு ஆணையாகவும் கூறுகிறது.

> கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக

என்பது குறள். இத் திருக்குறள் திறனாய்வுக்குரிய நிறைந்த செய்திகளைக் கொண்டது. உடல் நலமில்லார் மருத்துவரிடம் காட்டுவர். மருத்துவர் உடலினைச் சோதனை செய்து உடலில் நலம் விளைவித்தற்குரிய இன்னின்ன உயிர்ச் சத்துக்கள் இல்லை என்று எடுத்துக் கூறுவர். நலம்பெற விரும்புவோர் தம் உடலில் இல்லாத உயிர்ச் சத்துக்களைப் பெறுதற்குரிய உணவுப் பொருள்களையும் மருந்துகளையும் தேடி உண்பர்; நலம் பெறும்வரை உண்பர். அதுபோல ஒவ்வொருவருக்கும் இயல்பாகவே சில உயிர்க்குறைகள் (குணக்குறைகள்) உண்டு. இந்த உயிர்க்குறைகளை இன்னவை எனத் தெளிந்து அக்குறைகளை நீக்கி நலந்தரக்கூடிய நல்ல நூல்களைக் கற்கவேண்டும். அக்குற்றங்கள் நீங்கி நலம் பெறும்வரை கற்க வேண்டும். இக்கருத்தினைக் "கசடறக் கற்பவை" என்ற சொற்களின் மூலம் விளக்குகின்றார்.

மனிதன் புறத்துறுப்பால் காணப்படுபவன் மட்டு மல்லன். புறத்துறுப்பால் மட்டும் மக்கள்போல் தோற்றம் அளிப்பவர்களை **'மக்களே போல்வர்'** என்று கிண்டலும்

கேலியும் செய்கிறது. இந்த இரு சொற்களில் திருவள்ளுவர் வெளிப்படுத்தும் வேதனை கலந்த போலிமனிதனை விமர்சனம் செய்யும் உணர்வு, **வால்டேர், இங்கர்சால்** போன்றவர்களின் உணர்வைவிட விஞ்சி நிற்கிறது என்பதை மறுக்கமுடியாது.

**"புறத்துறுப்பெல்லாம் எவன் செய்யும்?"** என்பது திருக்குறளின் வினா. புறத்துறுப்புக்களைப் பொருளுக்கு உரியனவாகவும் புகழுக்குரியனவாகவும் ஆக்குதல் அகத்தியல் வளமையேயாம். உடல் வளத்திற்கு அடிப்படை உணவு, செரித்தல், வலிமை ஆதல்; அகத்தியல் வளத்திற்கு அடிப்படைக் கருத்து, அநுபவம், ஒழுக்கமுமாம்.

## அன்புடைமை

அறிவைத் திருவள்ளுவர் கருவியாகவே கருதுகிறார். **"அறிவு அற்றங் காக்கும் கருவி"** என்பது குறள். அறிவின் உயிர்ப்பும் பயனும் அன்பேயாகும்.

*அறிவினா லாகுவ துண்டோ பிறிதின்நோய்*
*தந்நோய்போல் போற்றாக் கடை*

என்பது குறள். திருவள்ளுவர் உயிரை எல்லாவற்றிலும் சிறந்ததாகக் கருதுகிறார். "உயிரினும்" என்று குறிப்பிடுவதே இதற்குச் சான்று. இந்த உயிர் தங்கியிருந்து இயங்குவது உடலிலேயாம். இதனை "உடம்பொடுயிரிடை நட்பு" என்று கூறும். ஆயினும் உயிர் அமைப்பாலும் தோற்றத்தாலும் உடம்பிடைத் தங்கி இருந்தாலும் அன்பினில் உயிர் நிலையைப் பொருத்திக் கொள்ளுமாறு வள்ளுவம் வழி நடத்துகிறது. உடலிடை மட்டும் உயிர் தங்கிக்கிடக்க வாழ்தல் விலங்கியல் வாழ்க்கை. அன்பினில், குறிக்கோளில், சால்பில் உயிரை நிறுத்தி வாழ்தல் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையாகும்.

அரசியல் நீதியில் உயிரை நிறுத்தி வாழ்ந்த பாண்டியன் நெடுஞ்செழியனும், தெய்வக் கற்பின் உயிரை நிறுத்தி வாழ்ந்த பாண்டிமாதேவியும், இன்பநட்பில் உயிரை நிறுத்தி வாழ்ந்த பிசிராந்தையாரும் கொடையில் உயிரை நிறுத்தி வாழ்ந்த குமணனும், தமிழின நாகரிகத்தின் காப்பில் உயிரை நிறுத்தி வாழ்ந்த அப்பரடிகளும் எண்ணத் தக்கவர்கள். ஆதலால் உயிருடைமைக்கும் இன்மைக்கும் அடையாளம் உண்ணலும் ஓடித்திரிதலும் அன்று.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்
என்புதோல் போர்த்த உடம்பு

என்பது திருக்குறள். எலும்பு போர்த்த உடம்பு யாதொன் றிற்கும் பயன்படாது. அதுமட்டுமின்றி நாற்றத்தால் மற்ற வர்க்கும் கேடு செய்யும். ஏன் தோற்றத்தாலேயே கண்டாரை வெருட்டும். அதுபோல அன்பில்லாத மனிதர்களால் அவர்களுக்கும் மனித உலகத்திற்கும் பயனில்லை. பயனில் லாததோடன்றித் தீமையும் விளைக்கும்.

## உடைமையியல்

இன்றைய மனித சமுதாயத்தில் உடைமை உணர்வு மிகுதியும் மேலோங்கி நிற்கிறது. அதாவது நிலம், பொன், பொருள் ஆகியவைகளைத் தனிமனிதர்கள் தத்தம் உடைமை யாக்கிக் கொள்ளப் போரிடுகின்றனர். வெற்றி பெற்ற பின்பு, உழைப்பின் வழி வாழாமல் உடைமைகளையே சார்ந்து வாழத் தலைப்படுகின்றனர். மனிதனுக்கு ஏவல் செய்ய வேண்டியன உடைமைகள். ஆனால் உடைமைகளுக்கே மனிதர்கள் அடிமைகளாகி விடுகின்றனர். இங்ஙனம் மனித குலத்தின் ஆற்றலை, பண்பை அரித்து அழிக்கும் உடைமைகள் மீது சான்றோர்களுக்கு வெறுப்பு ஏற்படுவது இயற்கை. இந்தவகையில் காரல்மாக்ஸ் மாமுனிவரின் சிந்தனை ஏற்றுக் கொள்ளத்தக்கது; பாராட்டத் தக்கது. அவர்

"உழைக்காதவனுக்கு உண்ணவும் உரிமை இல்லை" என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றார். ஆனால் இதே கருத்தினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருக்குறள் கூறியது என்று எண்ணி மகிழ்வாரில்லை.

*உடைய ரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்*
*உடையது உடையரோ மற்று.*

*உள்ள முடைமை உடைமை பொருளுடைமை*
*நில்லாது நீங்கி விடும்.*

என்பன போன்ற திருக்குறள்கள் புதுமையும் புரட்சியும் நிறைந்த கருத்துக்களைத் தாங்கி நிற்கின்றன.

## பொருளியல்

உலகியல், பொருளியல் வலையில் பின்னப் பெற்றுச் சுற்றிச் சுழன்று வருகிறது. உலகியலே பொருளியல். ஏன்? பொருளியலே உலகியலும்கூட. **"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை"** என்று பிறிதொரு கருத்துக்கு இட மின்றித் தெளிவாகத் திருக்குறள் பேசுகிறது. ஆனால் எது பொருள் என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. இன்றைய சூழலில் பலர் பொருள் என்றால் நேரிடையாகத் துய்த்து நுகர்வதற்குப் பயன்படாமல் நாணயமாக, பொன்னாக, மணியாக இருப்பனவற்றையே பொருள் என்று கருதுகின்றனர். துய்த்து நுகர்வதற்குரியவை அல்லாதவை எங்ஙனம் பொருளாக முடியும்? பொருள் என்பது துய்த்தற் குரியவைகளையே. **"யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல"** என்ற பரிபாடல் அடி பொன்னையும் பொருளையும் பிரித்து உணர்த்துவது உணரத் தக்கது. தீ ஏதாவது ஒரு பொருளைப் பற்றுக் கோடாகக் கொண்டே இயங்குகிறது. அதுபோல உயிர் யாதானும் ஓர் உடம்பினைப் பற்றுக் கோடாகக் கொண்டே இயங்கும். உடலினுக்கு எரிபொருள்களாக உணவு முதலிய பண்டங்கள் தேவை. அஃதின்றேல் உடலியக்கம் ஒடுங்கும்.

அதுபோலப் "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்று தெளிவாகத் திருக்குறள் எடுத்துக் கூறுகிறது. இப் பொருள் களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுவதாலும், கால வெள்ளத்தில் அழியாமல் பொருள்களின் மதிப்பைத் தாங்கித், திரும்ப அப்பொருள்களைப் பெறுதற்குக் கருவியாக இருப்பதாலும் உபசார வழக்கில் பொன்னையும் பொரு ளெனப் போற்றினார்கள்.

இத்தகு வாழ்க்கைக்குப் பயன்படும் பொருளியலைப் பற்றித் திருக்குறள் தெளிவான கருத்தை மேற்கொண்டிருக் கிறது. இன்றைய பொருளியல் சாத்திரங்கள் பக்கம் பக்கமாக விரித்துரைக்கும் பொருளியல் சித்தாந்தங்களைத் திருக்குறள் மிக எளிமையாக நான்கைந்து சீர்களில் விளக்குவதில் வெற்றி பெற்று நிற்கிறது.

*இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு*

இந்த ஒரு திருக்குறள் பொருளியல் தத்துவத்தின் சிறந்த விளக்கமாக அமைந்திருக்கிறது. உலகம் வளர்ந்து கொண்டிருக்கிறது. மனித எண்ணிக்கையால் மட்டுமன்று, தேவைகளின் பட்டியல்களும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. வளரும் தேவைகளை ஒரு வழித்துறையில் முற்றிலும் அடைய முடியாது. ஆதலால் தேவைகளை நிறைவு செய்துகொள் வதற்காகப் புதிய புதிய பொருள் நுட்பத்திற்குரிய புதிய வழிகளைக் காணவேண்டும். இதனை "இயற்றலும்" என்ற சொல் மூலம் காட்டுகிறார் திருவள்ளுவர். அதாவது திட்டமிட்டுத் தொழில்புரட்சிகளைச் செய்து புதிய வருவாய்த் துறைகளைக் காணுதல் என்பதாகும். இயற்றலைத் தொடர்ந்து ஈட்டுதல், பின்பொருள் சிறு திவலைகளாகச் சிதறிக் கிடக்குமாயின், அங்ஙனம் சிதறிக்கிடக்கும் பொருள் மீண்டும் பொருள் உற்பத்திக்குப் பயன்படும் ஆற்றலை, தகுதியை இழந்து விடுகிறது. ஆதலால் ஈட்டப் படுகின்ற

பொருள்கள் மூலதனமாக வளர்ச்சியடைகின்ற வரையில் காக்கப் பெறுதல் வேண்டும். பின் முறையான பங்கீடு அல்லது விநியோக முறை வேண்டும். இன்றைய நம்முடைய பொருளாதாரத்தில், உள்ள சிக்கல் பெரும்பாலும் முறை யான பங்கீடு இன்மையேயாகும். இவ்வளவு தெளிவாகப் பொருளியலைக் கண்டுணர்த்திய திருக்குறளில் பெருமைக் கீடுண்டோ!

## சமுதாய உறவு

திருக்குறள் தனி மனிதனைச் சமுதாயப் பொது மனிதனாக வளர்ப்பதில் நிறைய அக்கறை காட்டுகிறது. அவனுடைய சமுதாய உறவுகளை வளர்ப்பதிலும் பக்குவப் படுத்துவதிலும் திருக்குறள் முழுக்கவனம் செலுத்துகிறது. தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இருக்க வேண்டிய நல்லுறவைத் தடுத்துக் கெடுக்கும் தடைகளைப் பற்றியும் தெளிவாக வரையறுத்துக் காட்டுகிறது. இந்த உறவினை வளர்த்துக் கட்டிக் காப்பதற்காகப் பலப்பல குறள்களைத் திருவள்ளுவர் இயற்றியுள்ளார். மற்றவர்களைச் சார்ந்து நலம் செய்து வாழ்வதால், கேடுவருமாயினும் ஏற்றுக்கொள் என்று ஆணையிடுகிறார்.

**ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்**
**விற்றுக்கோள் தக்க துடைத்து**

என்பது திருக்குறள்,

மனித உறவை வளர்ப்பதில் பொறையுடைமைப் பண்பிற்குச் சிறந்த பங்குண்டு. ஆனால், பொறையுடைமை என்பதை இன்று பலர் கருதுகிற பார்வையில் திருவள்ளுவர் கருதவில்லை. கோழைத்தனத்தினாலும் அச்சத்தினாலும் பொறுத்தாற்றுதலுக்குத் திருவள்ளுவர் உடன்படார். பொறையுடைமை என்றே ஓர் அதிகாரம் செய்துள்ளார். அதில் மிகவும் சிறந்த திருக்குறள்,

*அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை என்பது.*

பொறையுடைமைக்கு எடுத்துக் காட்டும் உவமை எண்ணி எண்ணி இன்புறத்தக்கது. மலையையும் உடைத்துக் கல் எடுக்கிறோம். அது பொறுமையாகவே இருக்கிறது. அணைகளும் மாளிகைகளும் கட்டக் கற்களைத் தருகின்றது. நன்னூல் ஆசிரியர் போன்றவர்கள் நிலை தளராத ஆசிரியப் பெருமக்களுக்கு மலையை உவமையாகக் கூறுவர். ஆனால் திருவள்ளுவர் பொறுத்தாற்றும் பண்பிற்கு நிலத்தை எடுத்துக் காட்டாகக் கூறுவானேன்? மலை, உடைப்போரைப் பெரும் பாலும் எதிர்த்துத் தாக்குவதில்லை. ஒரோவழி எதிர்த்துத் தாக்குதலும் உண்டு. அது மட்டுமன்று: அது உடைக்க உடைக்க அழிந்து போகிறது. அதனாலேயே மலையை ஒதுக்கு கிறார் திருவள்ளுவர். நிலம், உழுவோர் தரும் துன்பத்தைத் தன் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டு வளர்கிறது. நிலம் உழ உழ வளம் பெறும். பயன் பெருக்கித்தரும். உழுவோருக்கே தரும். பயன்படும் வகையால் தன் மதிப்பினை உயர்த்திக் கொள்ளும். ஆதலால் உழுபவன் நிலத்தினுடன் உரிமையும் உறவும் கொள்கிறான். அது போலவே பகைவர்கள் துன்பங்கள் தருவார்களானால் அத்துன்பங்களை உரமாக்கிக் கொண்டு வளர்தல் வேண்டும். அப்படி வளர்ந்தால் துன்புறுத்தியவர்களும் உறவும் உரிமையும் கொண்டாடுவர், என்ற மிகச் சிறந்த கருத்து எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

## இறைநிலை

திருவள்ளுவர் கடவுள் நம்பிக்கை உடையவர். திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாடுகிறது. ஆயினும் திருவள்ளுவர், நம்பிக்கைக்கும் நல் வாழ்க்கைக்கும் இசை வில்லாத வெற்றுச் சடங்குகளைச் சார்ந்த சமய நெறிகளில் நம்பிக்கை இல்லாதவர். தூய தெளிவான வாழ்க்கை யோடியைந்த மெய்ந்நெறியில் நம்பிக்கையுடையவர்.

இவருடைய சமயம் உலகியலில் அழுந்துவது மன்று; அப்பாற் பட்டதுமன்று. இவர் வாழ்த்தும் கடவுள், கோலம் குறிகளுக்கு அப்பாற் பட்டவர்; வேண்டுதல் வேண்டாமை இல்லாதவர்; தனக்குவமை இல்லாத தலைவர். இத்தகு தூய "அருள் நெறியே" இந்த நூற்றாண்டிற்கும் ஏன் இனிவரும் நூற்றாண்டு களுக்கும் ஏற்ற நெறியாகும்.

## திருக்குறளும் தமிழ் இனமும்

தமிழினம் முன்னர்க் குறிப்பிட்டது போலக் கடந்த கால வரலாற்றுச் சிறப்புடையதாயினும் இடைக்காலத்தில் அதற்கேற்பட்ட வீழ்ச்சி மறைக்கவோ மறக்கவோ முடியாத ஒன்று. பிறமொழி நுழைவு தமிழின் தூய்மையைக் கெடுத்தது. ஆயினும் சிறந்த தமிழ்ச் சான்றோர்கள் தமிழின் தூய்மையைக் காப்பாற்றி வந்தனர். அயலினத்தாரின் நுழைவால் ஓரினமாக வாழ்ந்த தமிழினம் பலநூறு சாதிகளாகப் பிரிக்கப்பெற்றது. தமிழினத்தையே சார்ந்த ஒரு சாதியினர் பிறிதொரு சாதியினரிடம் ஓரினம் என்ற அடிப்படையை மறந்து காழ்ப்புக் கொண்டனர்; பகை பாராட்டினர். இந்த இன்னாத சூழ்நிலையை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

ஊக்கத்தையும் உழைப்பையும் மையமாகக் கொண்டு வளர்ந்த தமிழினம், நாளையும் கோளையும் அவ்வழிப்பட்ட அதிட்டத்தையும் நம்பத் தலைப்பட்டது, ஊழையும் உப்பக்கம் காணும் கொள்கை கண்ட இனம் "தலைவிதி" என்ற தத்துவத்தின் தாளடியில் சிக்கிச் சீரழிந்தது. உயர்ந்த திருக்குறளைப் பயிலாமல் ஒரு குலத்திற்கொரு நீதி உரைக்கும் நூலையும், நடுவாக நன்றிக்கண் தங்காமல் அநீதிக்கும் நீதிக்கும் சமரசம் செய்துவைக்கும் நெறியல்லா நெறியை நெறியெனக் காட்டிய நூலையும் பயின்று வீழ்ச்சி யுற்றது. இந்த வீழ்ச்சியிலிருந்து தமிழகத்தை எடுத்து நிறுத்த, இந்த நூற்றாண்டில் சிறந்த சான்றோர் அடுத்தடுத்து முயற்சித்து வந்துள்ளனர்—வருகின்றனர்.

புறப்புற இருள்நெறி கடிந்து தமிழ் ஞாயிறு எழுகின்றது. இந்த எழுச்சி, தமிழக வரலாற்றில் முன்னைப் பழமையைப் புதுப்பிக்கும், புதிய புதுமைகளைச் சேர்க்கும்.

## ஓர் உலகம்

இன்று எங்கும் ஓர் உலகம் பற்றியே பேச்சு. இன்று நம்மிடையில் ஓர் உலக அமைப்பாக உலக நாடுகள் பேரவை (ஐ. நா. சபை) தோன்றியிருக்கிறது. இந்த ஓர் உலக அமைப்பு நல்லெண்ணத்துடனேயே தோன்றியிருக்கிறது. அதாவது மனித குலத்தினிடையில் கொண்டும் கொடுத்தும் கூடிக் கலந்து இன்ப அன்புடன் வாழ்கின்ற பண்பாட்டை உருவாக்குவதே இந்தப் பேரவையின் நோக்கம். பேரவை தோன்றிய நோக்கமும் பேரவையின் பயனும் போற்றுதலுக்கு உரியவையேயாம். ஆயினும் இப் பேரவையின் தோற்றத் திற்குக் காரணமான துன்பச் சூழலை வரலாறு மறைக்க முடியாது. இரண்டு உலகப் போர்களின் படிப்பினையாகவே உலக நாடுகளின் பேரவை தோன்றிற்று. உலக நாடுகளின் பேரவைத் தோற்றத்தில் அச்சமும் பங்கு பெற்றிருக்கிறது. அதனால்தான் போலும் அந்தப் பேரவையால் உலகத்தை— மானிடசாதியை முற்றிலும் போர்ப் பயத்திலிருந்து விடுதலை செய்ய இயலவில்லை.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் ஒருலகக் கருத்தைக் கண்டு காட்டினார். இவர்தம் நூலே ஒருலகக் கருத்தை மையயமாகக்கொண்டு விளங்குகிறது. இவர்தம் ஒருலகக் கருத்து, அச்சத்தில் விளைந்ததன்று; அன்பில் விளைந்தது. பெரும்பாலும் நூல்கள் தன் நாடு, தன்மொழி, தன் இனம், தன்சமயம் ஆகியனவற்றைச் சிறப்பித்தே எழுதப்பெறும். ஒரோ வழி தம்முடையதைச் சிறப்பித்தும், மற்றையதை இழித்தும் எழுதப்பெறுவதும் உண்டு. திருக்குறள் இந்தக் குறைகளினின்று முழுதும் நீங்கிய நூல். திருக்குறளில் தமிழ் என்ற சொல் இல்லை. தமிழன் என்ற சொல்லும் இல்லை. பெயர் குறிப்பிட்ட காடு, மலை ஆறு, நாடு ஆகியவை பற்றிய செய்திகளும் இல்லை. எந்தச்

கடவுளின் பெயரும் இல்லை. எந்தச் சமயச் சின்னங்களும் இல்லை. ஆதலால் திருக்குறள் இனச் சார்பற்ற நூலாக, நாடும் எல்லையும் கடந்த நூலாக, மனிதகுலத்தின் பொது நெறி நூலாகத் திகழ்கிறது.

இன்றைய தேவை "மனிதகுல ஒருமைப்பாடு." இதனைச் சமயச் சான்றோர் "ஆன்ம நேய ஒருமைப்பாடு" என்று கூறுவர். இத்தகு ஒருமைப்பாட்டைக் காணுதலும் வளர்த்தலும் அருமையான முயற்சி; ஆயினும் இன்பம் பயக்கும். ஆனால் உண்மையான ஒருமைப்பாட்டைக் காணல் வேண்டும். ஒற்றுமையே ஒருமைப்பாடென மயங்கிவிடுதல் கூடாது. ஒற்றுமை கட்டாயம், தேவை ஆகியவை கருதியும் தோன்றலாம். கலகம் செய்வதற்குச் சக்தியின்மையின் காரணமாகவும் ஒற்றுமை இருக்கலாம். இது நெடிய பயனைத் தராது. ஒருமைப்பாடு என்பது சிந்தனையினால், உணர்வினால், குறிக்கோளால், வாழ்க்கை அமைப்பால் ஒன்று கலந்து இருப்பதாகும். இத்தகு ஒருமைப்பாட்டை அரசுகளால் தோற்றுவிக்க முடியாது. அறநெறியினாலேயே முடியும். அதனாலன்றோ கார்லைல் என்ற பேராசிரியர் **"மக்களை இணைத்துப் பிணைக்க வலிமை பெற்ற ஒரு தேசீய இலக்கியம் வேண்டும்"** என்று குறிப்பிடு கின்றார். **இன்றைய உலகத்தை இணைக்க உலகப் பேரி லக்கியமாகத் திகழ்வது திருக்குறளேயாம். பாரதியும் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"** என்று பாடிப் பரவுகின்றார்.

இந்தியப் பேரரசு இந்திய ஒருமைப்பாட்டைப் பெரிதும் விரும்புகிறது. விரும்பி வற்புறுத்துகிறது. இந்திய ஒருமைப்பாட்டை வலிமை பொருந்திய மத்திய ஆட்சியின் அதிகாரத்திலும் இந்தி மொழியாலும் காணமுடியும் என்று நம்புகிறது. இது வெறும் கானல் நீரே. இந்திய நாட்டின் இணையற்ற தேசிய இலக்கியமாகத் திருக்குறளை ஏற்றுக் கொண்டு, இந்தியநாட்டு மக்கள் அனைவரையும் திருக்குறள் சிந்தனையிலும் திருக்குறள் நெறி வாழ்க்கையிலும் ஈடுபடச்

செய்தால் இந்திய ஒருமைப்பாடு தானே உருவாகும். **இந்திய நாட்டின் தேசிய இலக்கியமாகவும், உலகப்பேரிலக்கியமாகவும் திருக்குறள் விளங்கி அமையும் நாளே, மனித சமுதாயத்தின் இனிய வரலாறு தொடங்கும் நாள்.**

## கடமைகள்

திருக்குறள் இலக்கியமே. ஆயினும் அதன் நோக்கம் இலக்கிய இன்பம் தருவதன்று. வாழ்க்கையில் இருள் நீக்கி இன்புந் தருவதேயாகும். திருக்குறளை மையமாகக் கொண்டு இலக்கியத்திறனாய்வு செய்யலாம். துறைதோறும் இன்பந் தரும். பல நூற்றாண்டுகளுக்குத் திறனாய்வு செய்யலாம். ஆயினும் திருக்குறளை மனித குலச் சிறப்பிற்குரிய ஒழுக்கத் துறைகளில் நடைமுறைப்படுத்தித் திறனாய்வு செய்வதே பாராட்டுதற்குரியது மட்டுமன்று; கடமையுமாகும்.

மனிதராய்ப் பிறந்தோர் அனைவரும் நாள்தோறும் திருக்குறள் கற்றலும் கேட்டலும் கடமையெனக்கொள்ள வேண்டும். தமிழராய்ப் பிறந்தோர் இதனைக் கடமையாக மட்டுமல்லாமல் ஒழுக்கமாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்றைய தமிழக அரசு, திருக்குறளுக்கு உரிய இடத்தை மக்கள் மன்றத்திலும், அரசிலும் அளிக்க ஆர்வத்துடன் முன் வந்திருக்கிறது. இது, நன்றி உணர்வுடன் என்று பாராட்டு தலுக்கு உரியதாகும். இந்த இனிய சூழலை முழுவதும் பயன் படுத்திக்கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பாகும். எங்கும் முத்தமிழ் முழங்கவேண்டும். திருவள்ளுவர் எழுப்பிய திருக்குறள் ஒலி நாற்புறமும் ஒலிக்கச் செய்யவேண்டும். தமிழர் இல்லங்களைத் திருவள்ளுவர் திருவுருவம் அணி செய்ய வேண்டும். தமிழர்தம் நெஞ்சங்களில் திருக்குறள் கருத்துக்கள் தங்கவேண்டும். தமிழனத்தின் வாழ்க்கையில் திருக்குறள் ஒழுக்கநெறி கால்கொண்டு அமையவேண்டும். இந்த உயரிய குறிக்கோளோடு நாம் அனைவரும் இனிய இன்ப உலகத்தைக் காண முயற்சிப் போமாக.

**வாழ்க தமிழ்! வாழ்க வள்ளுவம்!**

# 3

# சிந்தனைச் செல்வம்

## அன்புநெறி

**உ**லகத்தில் சிறந்தது அன்பு. அன்பிற் சிறந்த தவம் இல்லை. ஏன்? அன்பே கடவுள்! அன்பே சிவம்! இத்தகைய உயர்ந்த அன்பு நெறி உலக உயிர்களைத் தழைத்து வளரச் செய்யும் அரிய உணவாகவும், அருமருந்தாகவும் விளங்குகிறது. உயிர், இந்த இனிய உடலோடு இணைந்தது ஏன்? உறவு கொண்டது ஏன்? இந்த வினாவுக்கு வள்ளுவம் விடை கூறுகிறது.

> அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
> என்போடு இயைந்த தொடர்பு

உடல் பாவத்தின் சுமையன்று. உயிரை அன்பினில் ஈடுபடுத்தி வளர்க்கும் கருவி உடல். உயிருக்கு உடல் கிடைக்காது போனால் ஏது காதல்? ஏது நட்பு? ஏது சுற்றம்? ஏது கடவுள் பக்தி? இவ்வளவையும் படைத்துத் துறைதோறும் உயிரை அன்பினில் வளர்த்து அன்பேயாக அமர்ந்து இன்புறத்தானே இந்த வாழ்க்கை!

அதனாலன்றோ, அன்பின் திருவுருவமாக விளங்கிய கண்ணப்பரை, சேக்கிழார் "கும்பிட்ட பயன்" என்று குறிப்பிடுகின்றார். வாழ்க்கையின் உயர் இன்பமாக விளங்கு வதும் அன்பு. அதை அடையும் நெறியாக இருப்பதும் அன்பு. ஆதலால், வையகத்திற்குப் பொருள் அன்பேயாம்! "அன்ப லால் பொருளும் இல்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்பார் அப்பரடிகள்.

அன்பு, எளிய சொல்! ஆனால், அரிய வாழ்க்கை. அன்புடையராக இருத்தல் எளிதன்று. விண்ணுலகும்கூட அன்பை நோக்கி ஏங்கித் தவம் செய்கிறது. அன்பு நெறியை வளர்த்து மானிட சாதிக்கு உரிமையாக்க எத்தனையோ சான்றோர்கள் தம்மையே களப்பலியிட்டும்கூட முயன்றனர். அன்பு நெறி முழுமையான வெற்றியை அடையவில்லை. மானிட சாதி அன்பை வளர்த்துப் பேண சமுதாய அமைப் பையும் அப்பணிக்குத் துணையாகச் சமய நெறிகளையும் பணிக்கு இடையூறு ஏற்படின் தக்காங்கு துணை செய்ய அரசியலையும், அன்புணர்வை இடையறாது வளர்க்க இலக்கியங்களையும் தோற்றுவித்தனர்; படைத்தனர். ஆனால் முடிவு என்ன? கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடிபுகுந்தது போல இந்தப் புனிதமான அன்பு நெறியின் வாயில்களே துன்பியல்களை விளைவித்திருக்கின்றன.

சமயச் சண்டைகள், நாட்டுச் சண்டைகள், மொழிச் சண்டைகள்! உலகத்தில் கானல்நீரைக் கங்கை நீரெனக் கூறுவது போலக் கூறினர். எந்தவொரு பற்றும் வரையறை களைக் கடத்தல் கூடாது. மனித உலகம் என்ற பொது மைக்குத் தடையாகப் பற்றுக்கள் வளர்தல் தீமை! தீவிரப் பற்றாளர்கள் வளர்ப்பது தீமையையே! அன்புடையீர், நினைமின்! மனிதரை மனிதர் வருத்தும் கொடிய கொலைக் கருவிகள் நூற்றாண்டுக்கு நூற்றாண்டு வளர்ந்து வருகின்ற னவா? குறைந்து வருகின்றனவா? எட்டிய தூரத்தில் இருக்கும் மனிதனை அடிக்கும் தன்மையினனாக இருந்த மனிதன், எண்ணிப் பார்க்க முடியாத தொலைவிலுள்ள

மனிதனை, ஏன் இனிமேல் தோன்றக்கூடிய சமுதாயத்தையும் கூட உருக்குலைத்து அழிக்கக்கூடிய அணுக் கருவிகளைக் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான்.

வாழும் மானிட சாதியை மருந்தெனக்காக்கும் அரசியலில் காழ்ப்புணர்ச்சிகள், கொலை வெறிகள்! இவற்றின் விளைவாக இயற்கையன்னையின் கொடைகளாக விளங்கும் காற்றும் தண்ணீரும்கூட கலப்படமாகும் கொடுமை! ஊர்களை, நாடுகளை, கண்டங்களை, அண்டங் களைச் சாலைகள் இணைந்து வெற்றி பெற்று விட்டன.

ஆனால், மனித நெஞ்சங்களை இணைப்பதில் நன்னெறிகள் வெற்றி பெறவில்லை. அதன் காரணமாகப் புறத்தே பொற் குவியல்கள் தோன்றினாலும் அகத்தே அமைதியில்லை. காற்றினும் கடிது செல்லும் விமானத்தில் உலகைச் சுற்றி வந்தாலும் உள்ளத்தில் உறவு நெறிகளைக் காணோம்! அன்பு கூர்ந்து இத்தகு நெறியல்லா வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி இடுமின்! உலக ஒப்புரவு நெறி கொண்டு ஒழுகுமின்!

*அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!*
*விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!*
*அணைத்துக்கொள்! உன்னைச் சங்கம மாக்கு?*
*மானிட சமுத்திரம் நானென்று கூவு!*
*பிரிவில்லை, எங்கும் பேத மில்லை!*
*உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!*
*புகல்வேன் உடைமை மக்களுக்குப் பொது!*
*புவியை நடத்து பொதுவில் நடத்து*

என்று பாவேந்தன் பாரதிதாசன் சொன்ன புதுமையும் பொதுமையும் நிறைந்த நெறியினை நடைமுறைப்படுத்துமின்! அன்பு நெறி தழைக்கும்.

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு.*

# அறிவு வாழ்க்கை!

அறிவுடையார் எல்லாம் உடையார் என்பது வள்ளுவம். அது எப்படி, அறிவுடையார் எல்லாம் உடையவ ராக இருக்கமுடியும்? இன்று படித்த பட்டதாரிகளில் பலர் வேலை வாய்ப்பு இல்லாமலும் வாழ்க்கை வசதிகள் இல்லா மலும் அல்லற்படுகின்றனர்.

ஆதலால், அறிவுடையார் எல்லாம் உடையார் என்பது நடைமுறைக்கு இசைந்த செய்தியா? ஆனால், அறிவு எது என்பதன்பொருளை அறிந்தால் இந்த வினாவைக் கேட்கமாட்டார்கள். கல்வி வேறு; அறிவு வேறு. கல்வியின் வாயிலாக அறிவைப் பெறலாம்; பெறக்கூடும். ஆனாலும் கல்வியே அறிவன்று. அதுமட்டுமன்று.

அறிவு பெறுதலுக்குரிய வாயிலும் கூட, குறுகிய எல்லையுடையதன்று. அது பரந்துபட்டது. வாழ்க்கையை முழுமையாக வாழ முயன்றால் வாழ்க்கையின் படிநிலை களிலேயே அறிவு தோன்றும்; அறிவியல் உண்மைகள் புலப்படும். இது வாழ்வியல் வரலாற்று உண்மை. இன்று பெரும்பாலும் பிழைப்பு நடத்தும் நிலையே மேலோங்கி வருகிறது. வாழ்க்கையை உள்ளார்ந்த அனுபவங்களுடன் சுவைத்து வாழும் வாழ்க்கைக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. வாழ்க்கை எந்திர மயமாகிவிட்டது. அதனால் வாழ்க்கை ஒரு பல்கலைக் கழகம் என்ற அரிய உரை, இன்று வாழ்க்கையில் காட்டப்பெறும் அலட்சியத்தின் காரணமாகவும் கொச்சைத் தனமான ஆசைகளின் காரணமாகவும் அவலப்பட்டு விட்டது. சராசரி, தனிமனித வாழ்க்கையிலிருந்து சமுதாய வாழ்க்கைவரை இந்தக் குறை பரவலாகக் காணப்பெறுகிறது.

வாழ்க்கையில் நாம் ஈட்டும் பொருள்களோ நாம் அடையும் இன்ப துன்பங்களோ நம்மை வளர்த்து விடவும் முடியாது; அழித்துவிடவும் முடியாது. அதனால், இவைகள்

அலட்சியப்படுத்த தக்கனவும் அல்ல. இவைகள் கருவிகள்; வாயில்கள்! இவற்றின் பயனை வாழும் உலகம் எடுத்துக் கொள்ளுதலுக்கே அறிவு என்று பெயர்.

இத்தகு அறிவு முறையாகத் தலைப்படின் துன்பங்கள் தொடர் கதைகளாக முடியாது. என்றோ கேட்ட 'நல்ல தங்காள்' கதையைப் போன்ற நிகழ்ச்சிகள் இன்றும் நடை பெறுகின்றனவென்றால், "நல்ல தங்காள் கதை"யின் கருப் பொருள், நம்முடைய கவனத்திற்கு வரவில்லை. ஆதலால் நல்லதங்காள் கதையின் நிகழ்வுக்குக் காரணமாக அமைந்த சமுதாய அமைப்பை மாற்றும் பணியை, ஒழுக்கத்தை நாம் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. அதனால், நமது நாட்டில் எந்தத் துன்பங்களும் தொடர் கதைகளாக வருவனவே தவிர, சிறு கதைகளாகக் கூட மாறவில்லை. ஏன்? சமுதாயச் சிக்கல்களை; துன்பத்தை நாம் கருதும் மனப்பாங்கில் தவறு இருக்கிறது; அணுகும் முறையில் அறிவுப் பாங்கு இல்லை.

"இப்படித்தான் இருக்கும்" என்ற முடிவிலேயே நமது வாழ்க்கைப் பயணத்தைத் தள்ளிக் கொண்டிருக்கிறோம். ஏன் இப்படித்தான் இருக்கவேண்டும்? இப்படி இருக்கக்கூடாதா? என்ற வளர்ச்சியின் முதல் நிலை வினாவைக்கூடகேட்கும் நிலையில் நாம் வளர்க்கப்படவில்லை; வளர விரும்பவில்லை. சென்றகாலம் என்பதே நிகழ்காலம், எதிர்காலம் என்ற மயக் கத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். அதன் காரணமாக நேற்றைய அறிவு அப்படியே முடம்பட்டுக்கிடக்கிறது.

முடவர்கள் ஓடியாடித் திரிய முடியாமல் உட்கார்ந்த இடத்திலிருந்தே புலம்புவதைப் போலச் சென்றகால அறிவினின்று வளர்ந்து 'அறிதோறும் அறியாமை' என்ற வள்ளுவத்திற்கு இலக்கணம் படைக்க நமக்கு உயிர்த் துடிப் பில்லாததால் சென்றகால அறிவிலேயே முடம்பட்டு அதற்குப் பதவுரை, பொழிப்புரை சொல்லிப் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறோம்.

"அறிவுடையார் ஆவதறிவார்" என்ற வள்ளுவத்தை மறந்துவிட்டோம். அறிவு என்பது எதையும் தேர்ந்து தெளிவதாகும். அறிவுடையோர் கடவுளை நம்புவது, வழி படுவது என்பது பாவங்களைக் கழுவுவதற்காக அல்ல. அல்லது இறைவன் சந்நிதியில் பிச்சைக்காரர்களாகச் சென்று யாசிப்பதற்காக அல்ல. அவர்கள் கடவுளை நம்புவதும், வழிபாடு செய்தும்கூட, பண்ணைப் பணைத்த அறிவினைப் பெறுவதற்குத்தான்! அதனாலன்றோ சமய வாழ்க்கையின் பயனை ஞான வாழ்க்கை என்கின்றனர். ஞானம் என்பது திரிபிலாத பேரறிவு; முறை பிறழ்வில்லாத நிறை அறிவு; மயக்கமில்லாத தெளிவு. அத்தகைய பேரறிவு தோன்றின் உடற்பொறிகள் ஓராயிரம் புதுமையை நோக்கும் திசை தோறும் காணும்! புலன்கள் படைக்கும்! உலகு செழிக்கும்.

இத்தகு ஆற்றல் பெற்றோரே அறிவுடையார். இத்தகைய பேரறிவைப் பெற நல்ல நூல்களை நாள்தோறும் தேர்ந்தெடுத்து முறையாகக் கற்க. கற்ற நூற்கருத்துக்களை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திச் சோதனை செய்க! அந்நெறி நின்று ஒழுகுக! அந்தப் பேரொழுக்கம் அறிவாக, ஞானமாக வளர்ந்து வாழ்க்கையை நிறைவு செய்யும்! எல்லாம் நல்கும்!

## கல்வியின் பயன்!

கடவுள், பேரறிவினன்; பேரறிவாளன்; அது மட்டு மன்று, தூய்மையான அறிவினனும்கூட! அறிவிலும் பலபடிவளர்ச்சிகள். தூய்மையான அறிவு என்பது வளர்ந்த நிலை. அறியாமையும் அவலமும் இல்லாதது தூய்மையான அறிவு. 'அறிவே தெய்வம்' என்று இன்று சிலர் கூறுகின்றனர். அங்ஙனம் கூறுவதில் பெரும்பிழை ஒன்றும் இல்லை! ஆனால், எந்த அறிவு தெய்வம்? இந்த வினாவுக்கு விடை வேண்டாமா?

அறியாமையேகூட சில சமயங்களில் அறிவு என நம்பப்படுகிறது. சில சமயங்களில் அரைகுறை அறிவுகூட ஆர்ப்பாட்டம் செய்கிறது! அறிவு முற்றாக அறியாமையி னின்றும் விடுதலை பெற்றுத் துன்பத் தொடக்கு இல்லாததாக இருக்கவேண்டும். அதுவே தூய்மையான அறிவு. தூய்மையான அறிவு விவகாரம் செய்யாது; அழிக்காது! ஆனால் ஓயாது தொழிற்பட்டுக் கொண் டிருக்கும்! ஏன்? தூய்மையான அறிவுக்குக் குறைகளும் அவ்வழி நேரும் துன்பங்களும் சற்றும் உடன்பட்டு வாரா. ஆதலால், இவைகளை எதிர்த்துத் தூய்மையான அறிவு போராடும். போராடுதல் என்றால் சண்டை போடுதலன்று! உழைப்பு வேள்வியில் ஈடுபடுதல்.

தாள், உழைப்பின் சின்னம். ஆதலால், உழைப்பையே தாள் என்று உருவகப்படுத்திக் கூறுதல் புலனெறி வழக்கம். சில உழைப்புகள் பயன் தரா. பயன் தராதது மட்டுமின்றித் துன்பத்தையும் தரக்கூடும். ஆதலால், உழைத்தால் மட்டும் போதாது. அது நல்ல உழைப்பாக இருக்க வேண்டும். கடவுளின் உழைப்பு நல்ல உழைப்பு. சாதாரண நன்மையல்ல. மிக மிக உயர்ந்த நன்மை. தற்சார்பும் தன்னலமும் இல்லாத உழைப்பு. "தனக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர்" என்னும் புறநானூற்றை அறிக!

கடவுள் தூய்மையான அறிவினன்; நல்லுழைப்பினன். இங்ஙனம் விளங்கும் 'வாலறிவ'னின் நற்றாளைத் தொழுதல் என்பது, அத்தூய அறிவினை எண்ணிச் சிந்தித்தல் மூலம் தூய்மையான அறிவினைப் பெறுதல். நற்றாள் தொழுதல் என்பது, அத்தகைய "உயிர்க்குலம் காக்கும் நல்லுழைப்பினை வழிபாடாக இயற்றுதல்"—என்பது கருத்து.

கற்றல், உயிர் விளக்க முறுதலுக்காக! உயிர் விளக்க முறுதல் என்றால் அறியாமையிலிருந்து விடுதலை பெறுதல். கல்வியின் பயன், அறிவு பெறுதல்; அறியாமை நீங்குதல்;

அறிவு விளக்கமுறுதல்; தூய்மையான அறிவாக மாறுதல்; நல்லுழைப்பில் ஈடுபடுதல், இவையெல்லாம் கற்ற கல்வியின் பயன். வழிபடுதல் என்பது சடங்கு மட்டுமன்று.

வழிபடுதல் என்ற சொல்லுக்கு விளக்கம் வழிப்படுதல் என்பதேயாம்; அதாவது, வழி நிற்றல். ஆதலால், தொடர்ந்து நல்ல நூல்களைக் கற்க வேண்டும். ஓயாது தூய அறிவினனாகிய கடவுளைச் சிந்திக்க வேண்டும். கடவுளைச் சிந்திப்பதன்மூலம் பெறும் தூய்மையை, மானிட உயிர்களுக்கு வழங்க நல்லன நல்கும் உழைப்பை மேற்கொள்ள வேண்டும். உழைப்பு, கடவுளுக்குச் செய்யும் காணிக்கை!

இங்ஙனம் தூய்மையான அறிவு பெற்று வாழ்பவர்கள், நல் உழைப்பின் மூலம் வையகத்திற்கு வாழ்வளிப்ப வர்கள்—போற்றத் தக்கவர்கள்.

"கற்றல் கேட்டலுடை யார்பெரி யோர்கழல்
கையால் தொழுதேத்தப்
பெற்ற மூர்ந்த பிரமாபுர மேவிய பெம்மான்
இவனன்றே"

என்பார் திருஞான சம்பந்தர்.

இன்று, கற்றல் என்பது செப்பமான முறையில் அமைய வில்லை. ஏட்டுப் படிப்பினும் உயர்ந்தது கற்றல். 'கற்றல்' என்ற செயல் முறையிலேயே சிந்தித்தல், உய்த்துணர்தல், கற்பனை செய்தல் ஆகிய கல்வித் தொடர்பான செயல் முறைகள் யாவும் நிகழவேண்டும். இன்று அத்தகைய கல்வி குறைவு! ஞாலத்தில் உயர்ந்தது கேள்வி! ஆனால், எதைக் கேட்பது! கேட்கத் தகாதனவற்றையெல்லாம் கேட்கவேண்டிய தீவினை நம்மை இன்று பிடித்தாட்டுகிறது.

கதவு போடாக் காதுகளுக்கு ஓயாத தொல்லை. நல்லன போலக் கோள் சொல்லி, பகை மூட்டி வயிறு வளர்ப்போர் இன்று பல்கிப் பெருகி விட்டனர். அதனால்

தான் திருவள்ளுவர் "எனைத்தாலும் நல்லவை கேட்க!" என்றார்.

உயிரை வளர்ப்பது நல்ல கல்வி. நல்ல கல்வியின் பயன் தூயஅறிவு. தூய அறிவின் பயன் ஆக்கத்தினை, இன்பத்தினை வழங்கும் நல்லுழைப்பு. இவை இறைவன் நாமத்தைக் கற்றலாலும் அவனுடைய பொருள் சேர் புகழைக் கேட்பதாலும் கிடைக்கும். எங்கும் தூய்மையான அறிவு வளர்வதாக! நாடெங்கும் நல்ல உழைப்பு வேள்வி வளர்வதாக! வையகம் துயர் தீர்வதாக! இதுவே வள்ளுவம் கடவுளை வாழ்த்தும் வாழ்த்து!

> கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின்.

## திருக்குறள் நெறி

திருக்குறள், உலகப் பொதுமறை. மனித குலத்தை மையமாகக் கொண்ட வாழ்வியல் திருமறை. திருக்குறள், பொதுமை நோக்குடையது. திருக்குறள் காட்டும் நெறி, வேற்றுமைகளைக் கடந்த நெறி; ஒருமைப்பாட்டு நெறி.

திருக்குறள் கடவுள் நம்பிக்கை அருமையானது; எளிமையானது. தனக்குவமை இல்லாத ஒருவனே கடவுள். அவன் வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாதவன்; தூய அறிவினன்; அறத்தின் திருவுருவம். திருக்குறள் காட்டும் கடவுள் வழிபாட்டு நெறி, கடவுளைச் சிந்தனை செய்தல், இடைவிடாது நினைத்தல் என்ற அளவினதேயாம்.

திருக்குறள் நெறி காதல் வழி உருவாகும் இல்லற வாழ்க்கையேயாம். இல்லற வாழ்க்கையின் சிறப்பு முழுவதும் இல்லத்துக்குரியவளாகிய பெண்ணாலேயே அமைகிறது.

இல்லற வாழ்க்கையின் சிறப்புடைய பயனை நன்மக்கள் வாயிலாகத்தான் உணர முடியும்.

திருக்குறள், தவம் செய்தலை நோக்கமாக உடையது. துறவு நெறியையும் எடுத்துக் கூறுகிறது. திருக்குறளின் துறவு அருமையில் எளிய ஆற்றல் உடையது. துறவொழுக்கத்தின் தலையாய பண்பு, எதனையும் ஏற்றுத் தாங்கிக் கொள்ளல். எந்த உயிர்க்கும் தீங்கு செய்யாமை. அறிந்த மெய்ப்பொருள் வாயிலாக தவத்தின் ஆற்றலறிந்து ஒழுகுதல்.

உயிர், பதிவுகளுக்குரியது. நினைந்து செயல்படும் அனைத்தும் உயிரில் பதிவுகளாகின்றன. இந்தப் பதிவுகள் மீண்டும் வாழ்க்கைப் போக்கில் மேம்பட்டு வருதலையே ஊழ் என்கிறோம். ஊழ், பழக்கங்களின் பதிவு; வழக்கங்களின் சுவடு. உழுத சால் வழிச்செல்லும் எருதினைப்போல் பழக்கங்களின் வழியே செல்லுவது உயிரின் இயல்பு. ஆனால், ஆழமாகச் சிந்தித்துப் பழைய பதிவுகளை அழித்து, புதிய பதிவுகளை உண்டாக்கலாம். இங்ஙனம் செய்யும் வாழ்க்கையையே அறிவறிந்த ஆள்வினையுடைய வாழ்க்கை என்று குறள் பாராட்டும்.

திருக்குறளின் அரசியல், முறை செய்து காப்பாற்றுவதில் தொடங்கி மெள்ள மெள்ள ஆட்சியாக வளர்கிறது. அரசியல் முழுமையாக வளர்ந்த நிலையில், முறையில் நிறுத்தியும் நிற்காமல் வரம்புகளைக் கடந்து மற்றவர்க்குத் துன்பத்தைத் தரும் அளவுக்குச் செல்லுபவர்களைக் கடிந்து நெறியில் நிறுத்த ஆட்சி உரிமை பெற்றிருக்கிறது.

திருக்குறள், தலைமகளை "வாழ்க்கைத் துணைநலம்" என்று சிறப்பிக்கிறது. குடும்பத்தின் அகத்திணை வாழ்வியலுக்குத் தலைமகள் தலைவியாகவும், புறத்திணை வாழ்வியலுக்குத் தலைமகன் தலைவனாகவும் திருக்குறள் அமைத்துக் காட்டுகிறது. ஆயினும் இல்லத்தின் பொருளாட்சி பெண்ணிடத்திலேயாம். குடும்ப அமைப்பில் சுற்றத்தாரைப்

பேணுதலும், விருந்தினரை உபசரித்தலும் அடங்குகின்றன. ஒரு தலைமகன் பொருள் ஈட்டுவதின் மூலம் அரசுக்கு வரி செலுத்தி, அரசைப் பாதுகாக்கின்றான். தன் குடும்பத்தையும் சுற்றத்தாரையும் பேணிப் பாதுக்காக்கின்றான். திருக்குறள் காட்டும் ஒப்புரவு நெறி கட்டாயம் இல்லாமல் இயல்பான நிலையில் "ஒருவருக்காக எல்லாரும், எல்லாருக்காகவும் ஒருவர்" என்ற சமுதாயப் பொதுமையைப் படிமுறையில் தோற்றுவித்து வாழும் இயல்புடையது. குறள் காட்டும் ஒப்புரவுநெறி உலகப் பொதுநெறி, சமநிலைச் சமுதாயம் அமைக்கத் துணை செய்யும்.

உயிர்க் குலத்தை வாழ்விக்கும் அன்பே குறள்காட்டும் வாழ்வு. அன்புநெறி வாழ்விக்கும்; அறம் இன்பஅன்பினை நல்கும்.

திருக்குறள் நெறி அருமையானது; எளிமையானது. எல்லாருக்கும் ஏற்றது; வாழ்வாங்கு வாழத் துணை செய்வது.

## இறையியல் வாழ்க்கை

**வா**ழப் பிறந்தது மானிட சாதி! மானிடப் பிறப்பின் குறிக்கோள் சாவதன்று; வாழ்வதுதான்! அதுவும் மண்ணகத்தில் வாழ வேண்டும். பெறுவன பெற்று, துய்ப்பன துய்த்து வாழ வேண்டும். அதனால்தானே மறையெனப் போற்றப் பெறும் திருக்குறளில்— வாழ்வாங்கு வாழ வழி காட்டும் நூலில் காமத்துப் பாலும் கூறுகிறார்! அது மட்டுமா? "தாமரைக் கண்ணன் உலகத்து இன்பத்தைவிட காதலின்பம் உயர்ந்தது" என்பது திருக்குறள் கருத்து.

அதனால், தாமரைக் கண்ணன் உலகத்து இன்பத்தைக் கொச்சைப் படுத்துதல் என்பது பொருளன்று! திருக்குறள் தோன்றிய காலச் சூழ்நிலையில் இவ்வுலக வாழ்க்கையை, பொருள் வாழ்க்கையை, காதலின்ப வாழ்க்கையைக்

கொச்சைப்படுத்தும் நெறிகள் தோன்றிப் பரவின. அக் கருத்தைத் திருக்குறள் மறுக்க வேண்டிய காலக் கட்டாயம் இருந்தது.

அதனால் நிலமிசை—நிலத்தின் கண் நெடுநாள் வாழச் சொல்கிறார்; வாழ, வழி காட்டுகிறார்! நிலத்தின்கண் நெடுநாள் வாழ வழி என்ன? கடவுள் நேரிடையாகவே தம்பொறுப்பில் வாழ்விப்பாரா? அல்லது வாழும் உயிர்க்குத் துணையாக நின்று உயிரையே அது செய்யும் முயற்சியினால் வாழச் செய்வாரா?

கடவுள் எப்போதும் நேரிடையாகப் பொறுப்பேற்க மாட்டார். அங்ஙனம் பொறுப்பேற்று உயிர்வளர்ச்சிக்குத் துணை செய்யாது, கடவுள், காரணங்களாக அமைந்து உதவி செய்வாரே தவிர, காரியங்களாக வந்து உதவி செய்ய மாட்டார். உயிருக்கு அறிவும், கற்றலும் உரிமையாதல் மூலமே உயிர் தற்சார்பு நிலையை எய்தும். அப்படியல்லாது கடவுளே தம் பொறுப்பில் காப்பாற்றினால் மையொற்றுத் தாள் போல வாழும். தற்சார்பைப் பெறாது.

ஆதலால் நிலமிசை நெடுநாள் வாழ, நிறை நலம் மிக்க கடவுள் திருவடிகளை இடைவிடாது நினைத்தல்; அவ்வழி இறைவனின் நலன்களைப் பெறுதல்; நின்றொழுகுதல். இதனை "மாணடி சேர்தல்" என்றார்.

சேர்தல் பருப்பொருள் வழி நிகழும் சேர்க்கையன்று! உணர்வு வழி நிகழும் சேர்க்கையேயாம்! அதாவது. நினைத்தல், ஒழுகுதல். ஒருவர் ஒன்றை உரிமையாகப் பெற்றிருக்கும் நிலையை ஒழுகலாறே காட்டும்! அன்பைப் பற்றிக் கற்றல் நிலை வேறு! கேட்டல் நிலைவேறு! சொல்லும் நிலை வேறு! இம்மூன்றிலும் பெருந்திறன் பெற்றோர்கூட அன்புடையராதல் அரிது! அன்புடையராக வாழும் பண்பை, உயிர் உரிமையாக—உடைமையாகப் பெற்ற

பின்னரே அன்புடையராக ஒழுகுவர். ஒழுகுதலே உடைமைகளின் உரிமை நிலையைக்காட்டும்; உணர்த்தும்!

கடவுள்நெறி என்பது, அவர் தாம் மேற்கொண்டொழுகும் ஒழுக்க நெறிகளாலேயே உணரப்படும். கடவுளை நினைந்து அந்நெறி நின்று ஒழுக விரும்பின், கடவுள், விரும்பும் உயிர்கள் மாட்டு விரைந்து உள்நின்று உதவி செய்வான்; காட்டுவான்; வழி நடத்துவான். கடவுள் நம் மனத்தில் எழுந்தருள நெடிய காலம் தேவையில்லை. புற்றாக மரமாக நின்று தவம் செய்ய வேண்டியதில்லை. தேவை, கடவுளைப் பற்றி நினைத்தல் ஒன்றே!

நினைத்தல் என்பது ஆழமான சொல். ஆசைகளால் உந்தப்பெற்றும் துன்ப அலைகளால் எய்ப்புண்டு இரங்கத்தக்க நிலையிலும் கடவுள் நினைவு வருதல்— நினைத்தல் ஆகாது. நீள நினைத்தாலே நினைத்தல்—அசை வில்லாது நினைத்தலே நினைத்தல்—நினைப்பும் மறப்பு மின்றி நினைத்தலே நினைத்தல்—ஒருமையுடன் நினைத்தலே நினைத்தல்—அலையும் மனத்தினாலன்றிச் சிக்கெனப் பிடித்து நிலையாக நினைத்தலே நினைத்தல் நினைத்தல் அருமையான அகநிலைப் பயிற்சி!

உலகியல் வாழ்விலே கூட நட்பு, காதல், பணிக்கள வாழ்க்கையில்கூட நினைக்கும் பயிற்சி இருந்தால் நிறைந்த ஆற்றல் பெறலாம்; கிடைத்த உறவுகளையும் செழிப்பாக வளர்த்துக் கொள்ளலாம்; அபசுரம் இருக்காது. ஆதலால் திருவிழாவுக்குத் திருவிழா கடவுளை வழிபடுதல், நினைத்தல் ஆகாது. நினைப்பற நினைக்க வேண்டும்! அப்படி நினைந்தால் நினைப்பது முன்பா? கடவுள் வந்தருளித் துணை நிற்றல் முன்பா? என்று கண்டு கொள்ள முடியாத கால விரைவில் கடவுள் இதயத்தின்கண் எழுந்தருளி நின்றருளுவான். சாக விரும்பாதீர்! நிலமிசை நெடுநாள் வாழ விரும்புமின்! வாழ்வாங்கு வாழ ஆர்வம் காட்டுமின்!

நிலமிசை நெடுநாள் வாழ்வாங்கு இன்புற்று வாழ வழி என்ன? நிறைநல மிக்க கடவுள் திருவடிகளை நினைப்பற நினைத்தல், நீள நினைத்தல்! அவ்வழி கடவுள் நலன்களைப் பெற்று, உரிமையுடைய உடைமைகளாக்கிக் கொள்ளுதல்; அவ்வழி ஒழுகுதல். இதுவே வள்ளுவம் உணர்த்தும் இறையியல் சார்ந்த வாழ்க்கை!

*மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்.*

*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்றார் நீடுவாழ் வார்.*

## வேண்டுதலும் வேண்டாமையும்

**உ**யிர், இன்பம் துய்த்து வாழவே விரும்புகிறது. ஆனால், நிகழ்வு பெரும்பாலும் இதற்கு மறுதலையாகவே உள்ளது. துன்பங்களே மிகுந்து வருகின்றன. ஏன்? உயிர் ஆசைகளால் அலைப்புறுவது. அப்படியானால், வாழ எண்ணுதல் தவறா? என்று கேட்கத் தோன்றும்! வாழத்தான் வாழ்க்கை! இன்புற்றமர்ந்து வாழத்தான் வாழ்க்கை! வாழ்வாங்கு வாழ்தல் வேறு; ஆசைப்பட்டு அழிதல் வேறு!

ஆசையென்பது முற்றாகச் சார்புடையது! தன்னலமே நாடுவது! மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாதது. ஆசை யுடையவர்கள், மற்றவர்கள் எல்லோரும் தனக்குக் கடமைப் பட்டிருப்பதாக நினைப்பார்கள். ஆனால் அவர்கள் கனவிலும்கூட மற்றவர்களுக்குக் கடமைப்பட்டுருப்பதாக நினைக்கமாட்டார்கள்! இதைத்தானே கென்னடி கூறினார். "நாடு உனக்கு என்ன செய்தது என்று நினைக்க வேண்டாம். நீ, நாட்டுக்கு என்ன செய்தாய் என்று நினைப்பாயாக!"

என்று! இந்த வார்த்தைகள் தோன்றுவதற்குரிய சூழ்நிலை உலகில் அமைந்திருந்தது என்பது கருத்து.

எதிலும் ஆர்வம் காட்டலாம். ஆனால், ஆசை கூடாது. ஆர்வம் வேறு! ஆசை வேறு. ஆசை மிகவும் கொச்சைத் தனமானது. ஆசையுடையவன், எல்லாம் தனக்கே என்பான்! மற்றவர்களை ஒதுக்கியே வாழ்வான்! அல்லது ஒத்துப் போகமாட்டான்; வேற்றுமைகளுக்கும் சண்டைகளுக்கும் காரணமாக அமைவான்! ஆயிரம் "நொண்டிக் காரண"ங் களைக் கூறுவான்! ஆயிரம் நன்மைகள் செய்த ஒருவர், ஒரு நன்மை செய்யத் தவறிவிட்டால் அவன் பொறுக்க மாட்டான்! செருக்கித் திரிவான்! ஆனாலும் நிர்வாணமாகத் திரிவான்.

> ஆசை அறுமின்கள்; ஆசை அறுமின்கள்;
> ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்

என்றார், திருமூலர்.

> அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
> தவாஅப் பிறப்பீனும் வித்து

என்றார் திருவள்ளுவர்.

ஆர்வம் என்பது சிந்தனையின்பாற்பட்டது. வளர்ச்சித் தன்மையுடையது. ஆர்வமுடையவர்கள் கூடியே வாழ்வர். எந்த நிலையிலும் ஒத்துழைத்தலேயே விரும்புவர்; வேற்றுமை பாராட்டமாட்டார்கள். இத்தகு ஆர்வம் இருந்தால் அன்பு இருக்கும். அன்பு, ஆர்வத்தை மேன்மேலும் வளர்க்கும். அன்புக்கும் ஆர்வத்துக்கும் காரணங்கள் கிடையாது, எல்லை களும் கிடையாது. பொதுவாக மனித குலத்தை வருத்தும் துன்பங்களுக்குக் காரணம் வேண்டுதல், வேண்டாமை என்பனவேயாம்.

இன்று, யாண்டும் வேண்டுதலும் உள்ளது; வேண்டா மையும் உள்ளது. நம்முடைய வழிவழிப் பழக்கங்களில்கூட

இந்த வேண்டுதல், வேண்டாமைச் செல்வாக்கு மிக அதிகமாகத் தாக்கிப் பாதித்துள்ளது.

அதனால், வேண்டியவர் வேண்டாதவர் என்ற அணிகளுக்கிடையில் சமுதாயம் சிக்கித் தவித்துச் சீரழிகிறது; துன்பங்கள் பெருகிவிடுகின்றன! ஆதலால், வேண்டும்—வேண்டாமை என்ற குறுகிய—துன்பங்களைத் தரும் எல்லைகளுக்கு இரையாகக்கூடாது. எங்காவது தலைகாட்டினாலும் அன்பினால் ஒத்துழைத்து மாற்றி ஒப்பற்ற ஒரு கூட்டுச் சமுதாயத்தைப் படைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி அடைய வேண்டும். அப்போதுதான் துன்பம் தீரும்! எங்கும் எப்பொழுதும் இன்பம்! பெருகும்!

கடவுள், வேண்டுதல், வேண்டாமை இல்லாதவர். ஆதலால் சாதியமைப்புகள், பணக்காரன்—ஏழை என்ற வேறுபாடு, நாடு, எல்லை முதலிய வேறுபாடுகள் அனைத்தும் மனிதனால்—இல்லை, விலங்குணர்ச்சியுள்ள மனிதனால்—வேண்டும், வேண்டாமை என்ற நச்சுப் பாம்பால் கடிக்கப் பட்ட நச்சு மனிதனால்—படைக்கப் பட்டவையே! இந்த நச்சுப் பாம்பு மானிட சாதியைக்கடித்துப் பல ஆயிரம் ஆண்டுகள் உருண்டோடிவிட்டன! இந்த நஞ்சிலிருந்து மானிட சாதியைக் காப்பாற்றக் கொடுத்த அன்பு, அருள், ஒருமைப்பாடு முதலிய மருந்துகள் எல்லாம் செல்லுபடியாக வில்லை. ஏன்? இந்த மருந்துகளும்கூட சார்ந்ததன் காரண மாக நஞ்சாகி விட்டனபோல் தெரிகிறது.

இன்று, எங்கும் சாதிச் சண்டைகள்! கட்சிச் சண்டைகள்! தெருச் சண்டைகள்! ஊர்ச் சண்டைகள்! நாட்டுச் சண்டைகள்! சமயச் சண்டைகள்! அந்தோ! வாழப் பிறந்த மானிட சாதி 'வேண்டும்', 'வேண்டாமை' என்ற நஞ்சினால் உள்ளீடழிகிறது; உருக்குலைந்து போகிறது!

அளப்பரிய மானிட சக்தி சில்லறைச் சச்சரவுகள், சண்டைகளில் வீணடிக்கப்படுகிறது! கடவுளையும் இந்தக் கொடுமைகளுக்கு மனிதர்கள் சாட்சியாக்கியிருக்கிறனர். அதனால்தான் கடவுள் காணப்படாத பொருளானார்

போலும்! 'வேண்டுதல்', 'வேண்டாமை' என்ற வேற்றுமைகள் கடவுளுக்குக் கிடையாது. 'வேண்டுதல்', 'வேண்டாமை' உள்ள இடத்தில் கடவுள் இருக்கவும் மாட்டார், வரவும் மாட்டார்! துன்பத்தின் பிறப்பிடமே, வேண்டுதல் வேண்டாமையேதான்.

கடவுளை நம்புகிறவர்கள், வழிபடுகிறவர்கள் உண்மையில் வழிபாடு செய்தால் 'வேண்டுதல்', 'வேண்டாமை', என்ற வேறுபாடு அவர்களிடத்தில் இருக்காது; இருக்கக் கூடாது! அப்படியிருக்குமானால் கடவுளை வழிபடும் அவர்கள் வழிபடுவதாக நடிக்கிறார்கள் என்பதே பொருள்.

பத்திமையுடையோர் எங்கும் இறையருளைக் காண்பர்; எதிலும் இறையருளைக் காண்பர்; அவர்களுக்கு விருப்பும் இல்லை, வெறுப்பும் இல்லை, பகைவரும் இல்லை, நண்பரும் இல்லை. மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கித் தண்ணீர் ஓடிவருவதைப் போல, "பள்ளந்தாழ் உறுபுனலாகத்" திருவருளை நோக்கியே உணரத் தலைப்படுவார், செயலாற்றுவர். பத்திமை என்பது செயலற்ற நிலையன்று. செயல் நிறைந்த நிலை.

ஆனாலும், பத்திமையின் பாற்பட்டெழுகுபவர்கள் செய்யும் செயலில் இலாப நோக்கு இல்லை. புகழ் நாட்டமில்லை. உயிர்கள் இன்புறுதலே நாட்டம். பத்திமையிற் பழுத்தவர்கள் வேற்றுமைகளை அகற்றுவர். ஒருமைப் பாட்டை வளர்ப்பர். அதுவே தூய அன்புநெறி, அருள்நெறி.

ஆதலால், வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாத கடவுளை வழிபட்டு, வேண்டுதல், வேண்டாமை என்ற தீய சுழற்சியிலிருந்து விடுபடுக! அப்போது துன்பம் தொலையும்; இன்பம் கிடைக்கும்! உலகம் செழிக்கும்!

**வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

# வறிதே பொருதற்க!

உயிரின் இயல்பு இகலுதல். யாரோடாயினும் எவ்வகையிலாயினும் போராடாது வாழ்தல் உயிருக்கு இயல்பன்று! போர் அல்லது பொருதல் முழுமையாகத் தீதா அல்லது நன்றா என்ற வினாவிற்கு விடைகாணுதல் எளி தன்று. போர், நன்றாதலும் உண்டு; நன்றும் தீதும் போருக் குரிய காரணத்தைப் பொறுத்தவை.

வள்ளுவர் ஒரு வாழ்வியற் கவிஞர். அப்பட்டமான தத்துவமலையில் மோதி, வாழ்க்கை வறிதே கழிவதில் வள்ளுவருக்கு விருப்பமில்லை. அதனாலன்றோ "நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு" என்றும், "பொய்ம்மையும் வாய்மை யிடத்த" என்றும் அவர் அறம் பேசுகின்றார்.

போர்க்குணம், உயிரின் இயற்கைதான்! ஏன்? போர்க்குணம் இல்லாத மனிதன் ஒரு நடைப்பிணமே! ஆனால், போர் யாருடன்? எப்படி? என்பதுதான் கேள்வி! ஒவ்வொரு மனிதனும் அன்றாடம் தன்னுடைய மனத்தோடு கூடப் போராடவேண்டும். அவனை எதிர்த்துப் போரிட்ட அழுக்காற்றினை, அவாவினை, வெகுளியினை ஒடுக்கி வெற்றிகாண வேண்டும்.

உலகியலை முழுதாக உணர்ந்த வள்ளுவர் "அழுக்காறு என ஒருபாவி" என்று கூறுவதன் உண்மை, அறிவுணர்வுடன் வாழ்ந்தவர்களுக்குத் தெரியும்! ஒவ்வொருவருடைய மனமும் பிறிதொன்றைப் பார்த்து அழுக்காற்றில் அலைவதை மறுப்பார் உளரோ? ஒருகால், ஒரு சிலருடைய அழுக்காறு, வெகுளி—இன்னாச்சொல் என்ற அளவிற்கு வளராமல் இருக்கலாம். ஆனால், அழுக்காறு இருப்பது என்பது என்னவோ உண்மை. அழுக்காற்றின் வழிதான் அவா தோன்றுகிறது. பொருள் நுகர்வு வேட்கை, தேவையினால், மட்டும் தோன்றுவதன்று. "அவரை" "இவரைப் பார்த்துத் தான் அல்லது கேட்டுத்தான் அவா தோன்றுகிறது. அவா, எரியும் பெரு நெருப்பினை நிகர்த்தது. அதிலும், குப்பை—

கூளங்களோடு சேர்ந்து எரியுமானால் எளிதில் அணைத்தற் கியலாது.

அதுபோல, அறிவிலும் உணர்விலும் வலிமையற்ற குப்பையனைய மனிதர் அவாவழிப்படின் வெகுளி என்ற எரிவழிப்படுவர். இத்தகையோரின் வெகுளி வெளிப்படின். ஓட்டுக் கேட்பர்; ஒற்றறிய முனைவர்; சிறுமை தூற்றுவர், ஏன்? "ஒரு கை பார்ப்போமே!" என்று முனைந்து நிற்பர். அவ்வழி சிறுமை செய்வர். பெருமைக்கும் சிறுமை செய்வர். ஆதலால், வெகுளிவழிப் பொருதல்—போராடுதல் தீது.

வாழ்க்கையில் வளம்காண விரும்புவோர் தமது பொறிகளோடும், புலன்களோடும் ஓயாது போராடுவர்; புன் னெறியினின்றும் விலகுவர்; நன்னெறியில் நிற்பர்; அறிவறிந்த ஆள்வினையில் ஈடுபடுபவர்; வளம்பல படைப்பர்; வையத்து வாழ்வாங்கு வாழ்வர். அன்னவர், தீயோர் இகலிப் பொருது வந்தாலும் ஒதுங்குவர். அவரொடு பொருத ஒருப்படார். வறிதே பொருதின் வளம்கெடும்; வாழ்க்கை பாழாகும்; இம்மையும் மறுமையும் கெடும்.

வளம்சேர வாழ நினைப்போர் இகல்வரினும் ஏற்றுக் கொள்ளார். வெகுளுதலும், அவ்வழி இகலுதலும் ஆக்கம் தரா; இழப்பையே நல்கும். ஆக்கம் வேண்டின் இகலுதலைத் தவிர்த்திடுக! இகலி வருவோரையும் ஆற்றுதல் செய்க!

விரைந்து வெகுண்டு இகலுதல் பகையைத் தோற்று விக்கும், ஆதலால், வெகுளுதல் தவிர்த்திடுக! பொருந்தா வழி இகலிவருவோரையும் வாழும் இயல்பு அறிந்து பொறுத் தாற்றிடுக! இதுவே வள்ளுவர் காட்டும் வாழும் வழி!

ஒருவர் விரைந்து வெகுளுகின்றார்—இகலிச் சாடு கின்றார் என்றாலே, அவர் விரைந்து கெடுகின்றார் என்பது பொருள். ஒரு பொருள் விண்நோக்கி ஏறும்பொழுது அப் பொருளில் ஆட்டம் மிகுதியாக இருக்காது. அதே பொருள் இறங்கி வரும் பொழுது மிகுதியாக ஆடும்.

அதுபோலக் கேட்டினைத் தழுவிக்கொள்ள நினைப்பவர் வெகுளிகொள்ளுதற்குரிய சூழல் இல்லாத பொழுதும் வெகுளுவர்; இகலிப்பொருதுவர்; உற்றார்—உறவினரோடு கூடப் பொருதுவர்; நல்லவர்களுடன் கூடப் பொருதுவர்; ஏன்! ஒன்றுமறியாத 'அப்பாவி'களுடன் கூடப் பொருதுவர். வெகுளுதற்குரிய காரணங்களைக் கண்டு பிடிப்பவர், இல்லாதுபோனாலும் படைத்திடுவர். அப்போது சிறு செயல்கள் கூடப் பெரிதாகத் தோன்றும். இந்த அடையாளங்கள் என்றைக்கு ஒருவர் வாழ்க்கையில் காணப்படுகின்றனவோ அன்று அவருடைய வாழ்க்கை முற்றுப் புள்ளியை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கிறது என்ற முடிவுக்கு வரலாம்.

இங்ஙனம், வறிதே இகலுகின்றவர் அல்லது உணர்ச்சி வசப்பட்டுத் தம்முடன் முரணி இகலிவருவோரை இகலுபவர் யாராயினும்—அவர்கள் எவ்வளவு பெரிய வளத்தோடு கூடிய வாழ்க்கை வாழ்ந்தாலும் நிச்சயமாக அதனை இழப்பர்

படைவலி யுடையரானாலும் அதனை இழந்து அடிமையாவர். ஏன்? அவர்கள் கடவுளின் கருணையையே பெற்று மாபெரும் சக்திகள் பெற்றவராயினும் அவற்றையும் இழந்து வெறும் மனிதராவர். இதுவே வரலாறுகாட்டும் படிப்பினை! இதிகாசங்கள்—புராணங்கள் உணர்த்தும் உண்மை!

துரியோதனன் வறிதே வெகுண்டு இகலிப் பொருததின் காரணமாக எல்லாவற்றையும் இழந்தான்! துரியோதனன் அகத்தே ஐவரோடு போராடாமல், புறத்தே ஐவரோடு போராடியதால் ஆக்கத்திற்குப் பதிலாக அழிவை அணைத்துக் கொண்டான்.

சூரபதுமன், வலிமையின் மிகுதியால் வெகுண்டு இகலுகின்றான்; ஆற்றலை இழக்கின்றான். அவனைப் பிடித்தாட்டிய பேய், அதிகாரம்! அம்மம்ம! அதிகாரம் படுத்தும்பாடு இவ்வளவா! அவ்வளவா! அஃது உலகத்தில்

அழித்துச் சுவைத்த மனிதர்கள் பலர்! மலையனைய மனிதரைக்கூட அது வீழ்த்தியிருக்கிறது! இந்த அதிகாரப் பேய் பிடித்து ஆட்ட, கொடுத்த தெய்வத்தோடேயே இகலி நின்றான் சூரன்! முடிவு, உங்களுக்குத் தெரிந்ததே!

வையத்துள் வாழ்வாங்கு வாழ நினைந்திடுவோர் வெகுளி தவிர்த்திடுக! இகலுதலைத் தவிர்த்திடுக! காரண மின்றியும் வலிந்து இகலி வருவோரிடமிருந்து ஒதுங்கி வாழ்க! எவ்வகையிலும் இகலுதல் நன்றன்று! பொருதல் புண்ணியம் சேர்க்காது! வெகுளியையும் போர்க்குணத்தையும் அறவே விடமுடியாவிடில், நம்மையே நோக்கிப் போரிடுவோம்! நம்முடைய வாழ்வியல் நோக்கத்தோடு ஒத்துவராது நம்மொடு பொருதுகின்ற பொறிகள்— புலன்களொடு போரிடுவோம்!

அத்தகு பகை மாற்றமுடியாததாயின் அப்பகையின் வலிமையை நிகர்த்த வலிமையைப் பெருக்கி வளர்த்துக் கொள்க! ஒத்த வலிமை ஓர்ந்து கண்டபின் பகை மேற் கொள்க! வெற்றி கிடைக்கும்! வீழ்ந்தாலும் விழுப்புண் கிடைக்கும்! மெலியாராக இருந்து புண்படுதல் பகைவர்க்கு இகழ்ச்சியையும், தமக்குப் புகழ்ச்சியையும் தருவது. பகைவர்க்கும் இகழ்ச்சியைத் தரக்கூடாது. வீரத்தில் விழுப்புண்பட்டுத் தாங்கி இன்னாரை வென்றான் என்ற பெரும்பகைச்சிறப்பைப் பகைவர்க்குத் தருதல், பகை யிலும்—பகைவழிப்பட்ட மரணத்திலும் தரும் கொடை!

எக்காரணத்தைக் கொண்டும் தம்மின் மெலியாரோடு மோதற்க! அஃது அறமன்று, ஆண்மையுமன்று; புகழுமன்று புண்ணியமுமன்று.

**இகல்காணான் ஆக்கம் வருங்கால், அதனை**
**மிகல்காணும் கேடு தரற்கு.**

**இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தகலில்லாத்**
**தாவில் விளக்கம் தரும்.**

# 4

## அறவழி காட்டி

வள்ளுவன் புகழ்பாடி வண்டமிழ் வளர்க்கின்ற இந்தத் தமிழ்க் கூட்டத்தினரிடையே- தமிழ் மதுரை என்று சொல்லுகிறபொழுதே நம்மையுமறியாது நம் உள்ளங்களில் ஒரு மகிழ்ச்சி எழுகிறது. இந்த மதுரையம்பதியின்கண்ணே நீரும் நெருப்புங்கூடத் தமிழ்ச்சுவை யறியும், அறிந்திருந்தது என்று வரலாறு பேசும். இத்தகைய மதுரைம்பதியில் வாழ்ந்து வளர்கின்ற உங்கள் தமிழ்ப்பற்றுக்கு வரையறை சொல்ல முடியாது. 'என்று தமிழ் மதுரை காண்பேம்' என்றுதான் பேசுகிறார் பெரும்புலவர். மாணிக்கவாசகப் பெருந் தகையார் ஆண்டவனை நோக்கி "கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ" என்று பாடுகிறார். இதைச் சொல்லுகிற பொழுது நமது உள்ளம் இனிக்கின்றது.

அறப்பெருஞ் செல்வர் வள்ளுவர் தமிழகத்திலே பிறந்தார் என்ற காரணத்தினால் அவரைத் தமிழர் என்று கூறுகின்றோம்; ஆனால் அவர்நோக்கம், அவர் நூல், அவர் இலட்சியம் அனைத்தும் உலகத்தைச் சார்ந்திருந்தமையால் உலகப்பெரும் புலவராக அவர் காட்சியளிக்கிறார். அதனால் தான் பாரதியார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

வான்புகழ்கொண்ட தமிழ்நாடு" என்று பாராட்டுகிறார். வள்ளுவரின் அருமை மொழிகள் மேற்றிசை நாடுகளில் விரும்பப்படுகின்றன. ஆனால், ஒரு சில இளைஞர்கள், ஒரு சில பெருமக்கள் 'மேல்நாடு முன்னேறுகிறது' என்றும், தமிழகம் மட்டும் இன்னும் பண்டைய நிலையிலிருந்தே வாழ்கிறது என்றும் கூறுகிறார்கள் அல்லவா? எனினுங்கூட, அவர்களுடைய அறிவுத் திறன் எவ்வளவுதான் எட்டிச் சென்றிருந்தாலுங்கூட வள்ளுவரின் வழிஇல்லை என்றுதான் சொல்லவேண்டும். வள்ளுவர் கண்ட, கண்டு வாழ்ந்த நிலை, சமய வாழ்க்கை முறைகளெல்லாம் மேல் நாட்டு அறிஞர் களின் கருத்துக்கு அகப்படவில்லை. அப்படி வாழ்ந்து காட்டவும் அவர்களால் முடியவில்லை. ஆகையால் அந்தப் பெருமையை நாம்பெறத்தான் வேண்டும். இந்த நிலையில் தான் 'செந்தமிழ்நாடெனும் போதினிலே, இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்று பாரதியார் சொல்லியது போல வள்ளுவர் பிறந்தார். அவர் புகழோடு வாழ்ந்து பூரண மனித நிலையில் வாழ்விக்க வேண்டும் என்று விரும்பிய ஞானப் பெருஞ் செல்வர். இந்த நாட்டிலே பிறந்து அருமையான முறையை ஆக்கித் தந்த ஒன்றின் காரணமாகவே இந்தப் பெருமையைப் பெற்று விளங்குகிறார். அந்தக் காரணத்தி னாலே தமிழகத்தின் பெருமை இமயத்துக்கு அப்பாற் சென்று புகழ் தருகிறது என்று சொல்லலாம். அவரை மனங்குளிரப் பாராட்டி மகிழத்தான் வேண்டும்.

இந்த நிலையில் தமிழ் மதுரையைப்பற்றி எப்பொழுதும் ஒரு நினைவு நமக்கு உண்டு. திருவள்ளுவப் பெருந்தகையார் சொல்லுகிறார்,

*புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாங் கிழமை தரும்*

என்று. உணர்ச்சியளவிலே, உள்ளத்தளவிலே எத்தனையோ பெருமக்கள் ஒன்றுபட்டு வாழ்கின்ற காட்சியை இந்த

நாட்டிலே பார்க்கமுடியும். என்றோ ஒரு காலத்தில் தமிழ்த் தாயின் வழியாக வள்ளுவரைப் படிக்கின்ற பேறு கிடைத்தது. அக்காரணத்தினாலே வள்ளுவர் புகழ்பாடுகின்ற பெருமை பெற்றவர்கள் அனைவரைப் பற்றிய நினைவும் எழுவது இயல்புதான்.

திருஞான சம்பந்தப் பெருந்தகையார் வெற்றிக் கொடி நாட்டிய மதுரையம்பதியிலே உலகத்தில் அன்பு நிலவ வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டு திருவள்ளுவர் கழகம் இருந்து பணி செய்கின்றது என்று நாமும் நினைத்துதான் இருந்தோம். எனவே உணர்ச்சியால் பழக்கம் இருந்தது அன்று; இன்று புணர்ச்சியால் பழக்கம் ஏற்பட்டது.

இந்த நிலையில் வள்ளுவரைப்பற்றி எண்ணுகிற பொழுது வள்ளுவர் வாழ்ந்த நிலை என்ன என்று எண்ண வேண்டியிருக்கிறது. அவர் இவ்வளவு அருமையான நூலை யாக்கித்தந்தார் என்று சொன்னால் அவருடைய பெற்றோர் அவர் காலத்திய மக்களது மன நிலை முதலியன எப்படி யிருந்திருக்க வேண்டும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

"வள்ளுவர் ஏதோ ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு எழுத்தாணியால் இந்நூலை எழுதி வைத்தார்" என்று சொல்ல நம் மனம் இசையுமா? வள்ளுவர், வாழ்ந்த காலத்தில்—நூல் செய்த காலத்தில், தமிழகம் வள்ளுவர் கண்டு சொல்லிய முறைப்படி வாழ்க்கை நடத்தியது என்பதை நாம் மறக்கக்கூடாது. தொன்றுதொட்டே அத்தகையதொரு சிறந்த வாழ்க்கை தமிழகத்தில் நிகழ்ந்தமை யினாலேயே திருவள்ளுவர் போன்ற பெருந்தகையார்கள் பிறக்க முடிந்தது.

வள்ளுவர் வழிவந்த பரம்பரை என்று சொல்லுகிற நம்மிடையே இன்று அறிவுக்குறை ஏற்பட்டுவிட்டது. வள்ளுவரைப் பற்றிப் பறை சாற்றுகின்றோம்; அரங்கு கூட்டு கிறோம்; எனினும் பெரும்பாலான மக்களிடத்தில் தமிழ்ப்

பண்பாடு நிறைந்த வாழ்க்கை—அறநெறி வாழ்க்கை அமையப்பெறவில்லை என்பதை நினைந்து வருந்தத்தான் வேண்டியிருக்கிறது. திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் தமிழகம் அறநாடாக அறம் வழங்குகின்ற பூமியாக, அறத்தின் தாயகமாக, பிறருக்கு வழங்குகின்ற பெருந்தகையாளரின் உறைவிடமாக இருந்திருக்க வேண்டும் என்று உறுதியாய்க் கூறலாம். இந்தச் சூழ்நிலையிலே வளர்ந்த வள்ளுவர் தமக்குப்பின்னே வருகிற தமிழ்ச் சமுதாயம் சீற்றம்புரியக் கூடாதே என்ற பெருநோக்கங் கொண்டு பெருநூலை ஆக்கித் தந்தார். ஒவ்வொன்றையும் பத்து முறைகள் திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார். திருக்குறளைப் புகழ்ந்து கூறும் 'திருவள்ளுவ மாலை' என்ற ஒரு நூல் உளது. பதினோ ராண்டுகளாக உங்களிடையே பணிபுரிந்த இக்கழகத்தில் திருவள்ளுவ மாலையைப் பற்றிச் சொல்ல வேண்டுவ தில்லை.

ரெவரண்ட் பெர்சிவல் சொல்லுகிறார், 'வள்ளுவரைப் போல் அழுத்தந்திருத்தமாக அறம் எடுத்துக் கூறியவர்கள் இல்லை; திருக்குறளை ஒப்ப ஒரு நூல் மக்களாகப் பிறந்து வேறு எந்த மொழி பேசுகின்ற மக்களிடத்தும் அமையப் பெறவில்லை" என்று.

ஹீஸ் என்ற ரோமாபுரிக்கவிஞர் இலக்கியத்தைப் பற்றி மதிப்பிடுகின்றார். அக்கவிஞர் "உனது இலக்கியத்தைப் பொது மக்கள் முன்னிலையில் குறைந்தது ஒன்பது ஆண்டு களுக்கு வை; அதற்குப் பிறகும் மக்கள் அதை விரும்புவார் களானால் உனது இலக்கியம், சிரஞ்சீவி இலக்கியம் என்று சொல்" என்கின்றார். ஒன்பது அல்ல; இரண்டாயிரம் ஆண்டுகள், ஏன்? காலத்தையெல்லாம் கடந்த ஒரு நூலாக வேறு எந்த நூலும் இத்துணைக் காலத்துக்கு இருந்தது இல்லை; மொழி பெயர்க்கப்பட முடியாதவளவில் தொண் ணூறு மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்ட ஒரு பெரும் நூலாகத் திருக்குறள் காட்சியளிக்கிறது என்று எண்ணுகிற

பொழுது தமிழன் தலைநிமிர்ந்து நிற்கத்தான் ஆசைப் படுகிறான். எனினும் தமிழ்ப் பெருமக்களுக்கு ஒன்று கூற விரும்புகிறோம்.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தார் என்ற காரணத்தை வைத்துக்கொண்டுமட்டும் 'தமிழ்ப் பெருநூல்' என்ற காரணத்தை வைத்துக்கொண்டு மட்டும் பெருமைப்படடாது, திருவள்ளுவப்பெருந்தகையார் வழிநின்று வாழ ஒரு திருக்கூட்டம் இருக்கிறது என்ற சொல்லைப் பெற்றுப் பெருமைபெற வேண்டும். அதுதான் நாம் வள்ளுவருக்குச் செய்கின்ற கைமாறு-கொடுக்கின்ற காணிக்கை என்பதை நினைவுபடுத்த ஆசைப்படுகிறோம்.

இந்த நிலை நாட்டிலே வளருமானால் துன்பம் இல்லை; வறுமை இல்லை. இதனை உறுதியாய்க் கூறும் நம்பிக்கையும் உண்டு. வள்ளுவர் சொல்கிற அறநெறி வாழ்க்கை இந்த நாட்டில் காட்சியளிக்குமானால் இந்த நாட்டிலிருக்கின்ற இன்னல்களெல்லாம் மாய்ந்து போகும். இன்று பெரும்பான்மையும் நம்மை வருத்துகின்ற ஒன்று உணவுப்பஞ்சம்; உணவுப்பற்றாக்குறை. இந்தப் பற்றாக் குறையின் அடிப்படைட் மழையின்மை. திருவள்ளுவர் உலகத்தைக் கண்டார்; மேகத்தைக் கண்டார்; வானையும் கண்டார்; மலையையும் கண்டார்; நீலத்திரைக் கடலையும் கண்டார். இவற்றையெல்லாம் ஒரு முதற் கடவுள் இயக்கு கிறார் என்று முதல் அதிகாரத்திற் சொல்லுகிறார். அப்படி அனுபவித்து, உலகத்தை உணர்ந்து கொள்ளுகின்ற அறிவு நமக்கு இல்லை. ஆனால் அவர் அதை நன்குணர்ந்து 'வான் துளியின் கண்ணேதான் உலகம் இருக்கிறது' என்று வான் சிறப்பைக் கூறுகிறார். வள்ளுவர் 'வான் சிறப்பு' என்று ஓர், அதிகாரம் பாடும் அளவுக்கு அந்த வான், பெருமை பெற்றிருக்கிறது. வான் துளியின் கண்ணே தான் ஒழுக்கம் நிலைபெற்றிருக்கிறது, நிலைபெற வேண்டும் என்று சொல்லுகிறார். ஒழுக்கம் நிரம்பப் பெற வேண்டும் என்று

சொன்னால், ஒழுக்கம் நிறைந்தவர்களாக மக்கள் வாழ வேண்டும் என்று சொன்னால் வான்துளி வேண்டும் என்று சொல்லுகிறார்.

மக்கள், மக்களாக வாழவேண்டுமானால், அறப் பெருஞ் செல்வராக வாழ வேண்டுமானால், பொய்மை நெறி கடித்து மெய்மைநெறி நின்று வாழ்தல் வேண்டும்: இவ்வாறு வாழ மழைபெய்யுமென்று வள்ளுவர் கூறுகின்றார். அவ்வாறு வாழாததன் காரணத்தால்தான் வான் வறண்டுவிட்டது; பெருவளங் குன்றிவிட்டது; கிணறு குளங்கள் சுருங்கிவிட்டன என்று வள்ளுவர் மறைமுகமாக உணர்த்துகின்றார்.

திருவள்ளுவப் பெருந்தகையார் 'புகழ்' என்ற அதிகாரத்தில்,

> வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
> யாக்கை பொறுத்த நிலம்

என்று கூறுகின்றார். புகழ் இல்லாத உடலைத் தாங்கிக் கொண்டிருக்கிறது இந்தப் பூமி; அப்படித்தாங்கிக் கொண்டிருக்கும் நிலையிருக்குமானால் வளங்குன்றும் என்று சொல்லுகிறார்.

உலகத்திலே வள்ளுவருக்கு, ஏன்? பட்டினத்தடிகளுக் கூடத் தாயன்பு விஞ்சியிருந்தது. மணிவாசகப்பெருமான் "பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்பரிந்து நீ" என்று தான் பாடுகின்றார். அந்த அன்பு நிலைக்கு உவமை காட்டு கிறபொழுது தாய்மை வருகிறது. அதனால்தான் இந்த நாட்டிலே எதையெடுத்தாலும் தாய் தாய் என்று வாய்குளிரப் பாடுகின்றோம். வள்ளுவர் இந்தப் பூமியைத் தாய் என்று சொல்லுகிறார்; எண்ணுகிறார். நாமும், வெள்ளையரும், கருப்பரும், சிவப்பரும் எல்லோருமே இந்த அருமைத் தாயின் புதல்வர்கள்! நாம் அனைவரும் நன்றாக வாழவேண்டும் என்று அவள் ஆசைப்படுகின்றாள். அதன் பெருட்டுப்

பொன்னும் மணியும் அளித்திருக்கின்றாள். இவ்வளவு செய்கின்ற தாய்க்கு ஒரு ஆசை உண்டு.

> வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
> வேண்டாமை வேண்ட வரும்!

இக்குறளில் வேண்டாமை என்ற ஒன்றை எவ்வளவு வேண்டுகிறார்! யாருக்கும் ஆசை உண்டு; முற்றும் துறந்தவர் கட்குக்கூட உண்டு. அதுபோன்று இத்தாய்க்கும் ஓர் ஆசை. சில மாதங்கள் தாங்கி நின்று ஈன்றெடுத்த தாய் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது உண்டியும் உறையுளுந்தான். இதைக் கொடுக் காமற்போனால் ஊரார் தூற்றுவர் எனப் பயந்து நாம் கொடுத்துவிடுவதுண்டு. ஆனால் நில மகளாகிய இத்தாய் ஒன்று விரும்புகிறாள். எல்லா மக்களும் பொய்மை நெறி கடிந்து மெய்மை நெறி நின்று புகழ் பெறவேண்டும் என்று விரும்புகின்றாள். அந்த மகிழ்ச்சியிலே திளைக்கின்றாள். இவ்வாறில்லையானால் வருத்தப்படுகின்றாள். மகிழ்ச்சி யிருந்தால் தானே எதுவும் செய்ய இயலும். இப்பொழுதும் ஆலவாயண்ணல் சோமசுந்தரப் பெருமானைக் கண்ட மகிழ்ச்சியிலே—அரசுபுரிந்த அங்கயற்கண்ணியைக் கண்ட மகிழ்ச்சியிலே ஏதோ சில சொற்களை உங்களிடத்திற் சொல்ல வந்திருக்கின்றோம். இவ்வாறில்லாமல் வருத்த நிலையிருந்தால் பேசத்தான் இயலுமா? அவ்வாறு ஏதேனும் மனத்துயரம் நம்மிடையே கப்பிக்கொள்ளுமானால் நம் செயல்கள் செயற்படுவதில்லை; செயற்பட்டாற்கூட முழுதும் பயன் தருவதில்லை; ஆகவே, இந்த நில மகளாகிய அன்னை வருத்தப்படுகிறாள்; துன்புறுகின்றாள்; அழுகின்றாள். இங்கே கொஞ்சம் மருத்துவத்தைக் கலக்கின்றார் திருவள்ளுவர். ஓயாத கவலையும் வருத்தமுங்கொண்டு துன்புறும் உள்ளம் உள்ள ஒருவனைத் தொட்டுப் பார்த்தால் அவன் உடலில் வெப்பநிலை புலப்படும். அருகில் நின்றால் அவன் விடும் பெருமூச்சுச் சுடுதலை யுணர்வர். இந்த நிலை நிலமகளாம்

அன்னைக்கு ஏற்படுகின்றது. புகழ் படைத்த செல்வர்களாக நம் மக்கள் இல்லையே என்றுவருந்துகின்றாள்; துன்புறு கின்றாள். அவள் விடுகின்ற மூச்சு பெருமூச்சாக—வெப்பக் காற்றாக ஆகிவிட்டது. மேகம் திரண்டு வருகின்ற பொழுது குளிர்ந்த காற்று அதன்மேல் வீசினால் மழைபெய்யும் என்று பள்ளியில் பால பாடத்தில் படிக்கின்றோம். அங்கே குளிர்ந்த காற்றுப் போகமுடியாத நிலையில் எங்ஙனம் மழைபெய்யும்? நிலமகள் தான் வெப்பக் காற்றுவிடுகின்றாளே! இவ்வளவும் எண்ணித்தான் வள்ளுவர் இங்ஙனம் சொல்லியிருப்பார் என எண்ணுகின்றோம்.

‘வசையிலா வண்பயன் குன்றும்’ எனத்தொடங்கும் இந்த அருமையான திருக்குறளை நினைந்து நினைந்து வாழ வேண்டும்.

திருவள்ளுவருக்கு மாளிகை எடுக்கவேண்டுவது இன்றியமையாததொன்று. அதற்கு முன்னே திருவள்ளுவர் கண்ட ஒழுக்க நெறிக்கு, வாழ்க்கை நெறிக்கு, அறநெறிக்கு மக்கள் உள்ளத்தில் அறமாளிகை எடுக்கவேண்டுவது மிக இன்றியமையாததொன்று என்பதை நினைவுபடுத்த வேண்டும். அந்த அக மாளிகை எழுகின்ற காலத்திலே வள்ளுவரின் புற மாளிகையும் தானாக எழுந்துவிடும் என்ற நம்பிக்கை உண்டு.

பாரதியார் பாடலில் ‘அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல்’ என்ற அடிக்குப் பலரும் பலவாறு பொருள் சொல்வர். இது பற்றிச்சிலர் ‘பாரதியார் ஆலயங்கள் கட்டுவதை வெறுத்தார். அவர் கண்டு காட்டிய தருமம் எழுத்தறிவித்தல்தான். அன்ன சத்திரங்களும் வேண்டாம்’ என்று கூறினர். பாரதியார் வெறுப்புணர்ச்சியால் ஆலயங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. நாட்டில் ஆயிரக்கணக்கான ஆலயங்கள் இருப்பினும் மக்களுக்கு அங்குச் சென்று வழிபடும் அறிவு

இல்லை. அதனை நினைந்து வாழ்கின்ற அறிவு இல்லை. எனவே, அடிப்படையான அறிவைக் கொடுத்துவிட்டால் உணர்ந்து வழிபடுவார்கள். அதன் காரணமாக அவர்களே ஆலயங்களை எடுப்பர் என்ற நம்பிக்கையைத்தான் பாரதியார் சொல்லி வைத்தார்.

இதுபோலத் திருவள்ளுவரிடத்தில் பெருமதிப்பை இந்தக் கழகம் ஏற்படுத்தி வருகின்றது. நமது நலத்திற்கென்று நூலாக்கித் தந்த பெரும் புலவருக்கு நாம் கைம்மாறு செய்யவேண்டும் என்ற உணர்ச்சியை இந்த நாட்டு மக்களுக்கு ஊட்டிவிடுவீர்களானால் இவ்வுலகத்தின்கண் திருவள்ளுவருக்கு எங்கும் இல்லாத நிலையில் இரத்தின மாளிகை எடுக்கப்படும் என்ற நம்பிக்கை உண்டு.

திருவள்ளுவரைப்பற்றி அறியாதாரும் உண்டு என்பதை உணர்ந்து முதன்முதலில் குன்றக்குடிக்கு வந்தவுடன் வள்ளுவர்க்கு விழாக் கொண்டாடினோம். சமயா சாரியார்கள் விழாவை நடத்தாது வள்ளுவர் விழா நடத்தி யமைக்குக் காரணம் ஒன்று கூறினோம்; மக்கள் உள்ளத்திலே அடிப்படையான கருத்தை அடைய முடியாத நிலையிலே— அவர்கள் உள்ளத்தைத் தொட்டுப் பார்க்கமுடியாத நிலை யிருக்கிறது. எனவே மக்கள் உள்ளத்தைத் தொட்டுப் பார்க்கின்ற வரைக் கொண்டாடினாற்றான் சமயவாழ்க்கை வளம் பெறும் என்ற நம்பிக்கை உண்டு. இக்காரணத்தால் தான் திருவள்ளுவருக்கு விழா எடுக்கின்றோம். இவ்வாறு அடிப்படைக் கருத்தைப் புகுத்தியவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவருக்கு உயிர்நாடியாக இருப்பது அன்புநிலை என்பதை மறந்துவிடுதல் கூடாது. அடிப்படை யிலே இந்த அன்பு நிலையை உள்ளத்தில் வைத்து வள்ளுவர் மாளிகை கட்டவேண்டும். திருவள்ளுவர் கழகத்தார் செய்கின்ற முதல் தொண்டாக எல்லா மக்களிடத்திலும் திருக்குறள் காட்டுகின்ற அற வாழ்க்கையை யூட்டவேண்டும்.

அதற்கு வள்ளுவர் மாளிகையை இந்நகரில் எடுக்க அருணையாதீனச்சார்பில் ரூபாய் ஆயிரத்தொன்று கொடுக்க முற்படுகின்றோம். இந்தப் பணியை நல்லமுறையில் முன்னின்று தொடங்குகின்றபொழுது நாமும் அன்பர்களும் வந்து இப்பணியை முற்றுவிக்க முற்படுகின்றோம். தமிழோடு மட்டு மன்று—சைவம் வளர்த்த, மதுரை என்று எண்ணுகின்ற பொழுது தமிழ்தான் நினைவுக்கு வருகிறது. தமிழ்ச் சங்கம் இருந்த மதுரை என்றுதான் பாராட்டுகின்றோம். அந்தத் தமிழ்ச் சங்கத்தை இன்று இந்தக்கோவிலில் வைத்து விட்டோம். பிற நாட்டு யாத்திரீகர்கள் இந்நாட்டிற்கு வந்தால் எங்கள் நாட்டிற் பிறந்த வள்ளுவரின் மாளிகை இது என்று காட்ட வேண்டும். மாணிக்கவாசகருடைய அருள் மாளிகையை எழுப்பும் பணியைக் காலத்தில் நிறைவேற்றத் திருவருள் துணைபுரியும் என்று நம்புகின்றோம். இந்த நிலையில் ஒன்றேயொன்று மட்டும் நினைவுபடுத்திப் பின்னே சில செய்திகளைச் சொல்லிப் பேச்சை முடித்துக் கொள்ளுகின்றோம். இந்த ரூபாய் ஆயிரத்தொன்றையும் இப்பொழுதே கழகத் தலைவரிடம் ஒப்படைக்கின்றோம். மாளிகை எழுப்ப நமது பெயரால் அப்படியே பாங்கில் போட்டு விடட்டும்; பின்னர் எடுத்துக்கொள்ளட்டும். பணி நடக்கின்ற காலத்தில் அன்பர்களிடத்திற் சொல்லி வேண்டுவன செய்யத் தயாராக இருக்கின்றோம்.

இனி திருவள்ளுவரின் நூல், வாழ்க்கை நூல் என்று பன்முறையும் சொல்லிவந்தது பற்றி ஒரு சிறிது விளக்குவோம். வள்ளுவர் நல்வாழ்வுக்கு எடுத்துக்காட்டும் அடிப்படையான கருத்துக்கள் இரண்டை நினைவுபடுத்த ஆசைப்படுகின்றோம். அவர் காட்டும் வழியைக் கூர்ந்து நோக்குங்கள். ஒன்று அன்பு; மற்றொன்று தூய்மை. ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளையும் துருவித் துருவிப் படித்துவந்தீர்களானால் அவர் சொல்லும் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்கள் இந்த இரண்டும்தான் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

முதற்கண் அன்பை நோக்குவோம்.

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு

என்கின்றார்.

மனிதனுக்கு உயிர்நிலையாக இருப்பது எது என்பதைத் திருவள்ளுவரைத் தேடிப்போய்க் கண்டுபிடிக்க வேண்டுவதில்லை. இந்த உயிர்நிலையைக் காணுங் கருத்தைத் தேடி எங்கும் அலைதல் வேண்டாம். வாழ்க்கையில் அன்பு இருக்கிறதா என்று பாருங்கள். 'அன்பின் வழிய துயிர்நிலை' என்று உயிர்நிலையின் அடிப்படையைச் சொல்லுகின்ற பொழுது வள்ளுவர் இங்ஙனம் கூறுகின்றார்.

இனித் தூய்மையை நோக்குவோம். வள்ளுவர் சொல்லுகின்றபொழுது சிலவிடங்களில் கடுமையாகச் சொல்லுகிறார். சிலவிடங்களில் எளிமையாகச் சொல்லுகிறார். சிலவிடங்களில் ஆசாரியார் முறையிற் சொல்லுகிறார். தூய்மையில்லாதவர்களை அழுத்தமாகச் சிலவிடங்களில் கண்டிருக்கிறார்.

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற,

என்று இலக்கணம் சொல்லுகிறார். தூய்மைக்கு மாறுபட்டவர்களைக் கண்டபோது வள்ளுவருக்குக் கோபம் கடுமையாகத்தான் வருகிறது. வெகுளாமையைச் சொல்லிவைத்த வள்ளுவர் அதைக் கடைப்பிடித்தார் என்று நாம் நம்பவில்லை. அவருக்கு இருக்கின்ற கோபம் நம்மிடத்திலேகூட இல்லை.

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்

இது கோபமா இல்லையா? கோபம் கொடிது என்று சொல்லுகிற திருவள்ளுவர் கோபப்படுகிறார். துறவிகளைப் பற்றிப் பேசும்பொழுது,

*தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து*
*வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று*

என்கிறார்.

திருவள்ளுவரை முன்னின்று பார்ப்போமாயின் அவர் கோபமுடையவர் என்பது தெரியும். தவமறைந் தல்லவை செய்தல் தமிழகத்தின் பண்பாட்டுக்குப் புறம்பான வாழ்க்கை. அதைப்பார்த்தபோது அவருள்ளம் கொதித்திருக்கிறது. கொதித்த உள்ளத்திலிருந்து அந்தச் சொற்கள் வந்திருக் கின்றன. அறத்திற்கு மாறுபட்டவர்களைக் கண்டபோது ஒறுக்கவேண்டும் என்ற உணர்ச்சி அவருக்கு இருந்தது. அதனாற்றான்,

*மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்*
*பழித்த தொழித்து விடின்*

என்று கூறுகின்றார். இச்சொற்களை யெல்லாம் கோப நிலையில் வள்ளுவர் சொல்லியிருக்கின்றார். இவற்றை யெண்ணுகின்றபொழுது வள்ளுவரின் உயிர்நாடி—அவருடைய அடிப்படை யெண்ணம் வேறொன்றின்கண் இருந்ததென்று சொல்ல முடியாது. அன்பு, அறம், தூய்மை இவை மூன்றும் வாழ்க்கையின் அடிப்படை என்று அவர் கண்டார். இந்த மூன்றில் ஒன்று இல்லாது போனாலும் அது வாழ்க்கையன்று என்பது வள்ளுவர் கருத்து.

*விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்*
*தீமை புரிந்தொழுகு வார்*

என்ற குறளில் உயிரோடிருந்தாலுங்கூட விளிந்தார் கூட்டத்துடன் சேர்க்கத் தக்கவர் என்று பேசுகிறார்.

அதனால்தான் நாம் இதை நினைவுபடுத்த எண்ணினோம். வள்ளுவரைப் பாராட்டுவதோடு மட்டும் இல்லாது வள்ளுவரின் பண்பாட்டிற்குப் பாராட்டு எடுங்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறோம்.

ஆசிரியரைப் பற்றியும் அவர் காலம், சமயம் இவற்றைப் பற்றியும் சண்டை செய்தல் வேண்டாம் என்று சிலவிடங் களில் நாம் நினைவுபடுத்துவது உண்டு. வள்ளுவர்தான் ஆசிரியர் என்று சொல்வதாலன்றோ சண்டை எழுகிறது. திருக்குறளை ஊன்றிப் படிக்கின்றபொழுது எவ்வளவோ தெரிந்து கொள்ளலாம். இப்பொழுது புதிய ஆராய்ச்சி யொன்று வந்திருக்கிறது. அது, திருவள்ளுவர் திருக்குறள் செய்யவில்லை. பெயரில் அவர் ஒருவரை வஞ்சித்தார் என்று முடிவுகட்டி எழுதியிருக்கின்றார். அது ஆங்கிலத்தில் அச்சானதன் காரணத்தால் இந்நாட்டு மக்களிடைக் கிளர்ச்சியைத் தூண்டவில்லை. திருவள்ளுவர் திருக்குறள் செய்யவில்லை என்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட சான்றுகள் இரண்டு. ஒன்று:—

ஆவனவும் ஆகா தனவும் அறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத்–தேவர்
திருவள்ளுவர் தாமும் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம் பூண்டார்

'தேவர்' என்ற புலவர் திருக்குறள் செய்தார். திருவள்ளுவர் என்பவர் அவருடைய மாணாக்கர். தேவர் முதுமை காரணமாகத் தாம் செய்த திருக்குறளைத் திருவள்ளு வரிடங் கொடுத்து மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குக் கொண்டு போகச் சொன்னார். அவரை வஞ்சித்துத் திருவள்ளுவர் மதுரையில் 'திருக்குறள் செய்தவன் நானே' என்று கூறி விட்டார் என்பது.

'வள்ளுவன் என்பான் ஓர் பேதை' என்று ஒரு பாட்டு உண்டு. இந்த அடியையும் அவர் சான்றாக எடுத்துக் கொண்டார். உலகப் பெரு நூலை ஆக்கித்தந்த திருவள்ளுவரை வள்ளுவன் என்று சொல்பவர் பேதை என்று சொல்வது. அவர் இதை 'வள்ளுவன் வஞ்சகன் ஆகையால்தான் பேதை என்று கூறினார்' என்று ஆராய்ச்சி செய்து திருவள்ளுவர் திருக்குறள் செய்யவில்லை என்று முடிவு கட்டி ஆங்கிலத்தில் புத்தகமும் வெளிவந்தவிட்டது. அது எவ்வாறிருந்தால் என்ன? நமக்கு வேண்டுவது திருக்குறள். அதிலே இருக்கிற ஒழுக்கம், 'வள்ளுவன் என்பான் பேதை' என்னும் அடியில் உயர்ந்த கருத்து விளங்குகிறது. கடவுள் நிலையில் அவரை வைத்துப் பேசவேண்டும். யாரேனும், 'வள்ளுவன்' என்று சொல்வாரானால் பேதை. வள்ளுவர் எனச் சொல்லல் வேண்டும். திருவள்ளுவமாலையில் இவ்வாறு சொல்கிறார் ஆசிரியர்.

இதை ஆதாரமாகக் கொண்டு திருவள்ளுவர் ஆராய்ச்சி வந்திருக்கிறது. இதை எழுதியவர் ஒரு பட்டதாரி; B.A., B.L., என்ற பட்டம் பெற்றவர். அது எவ்வாறேனும் ஆகுக. நமக்கு வேண்டுவது திருவள்ளுவர் கண்ட ஒழுக்க நெறி; அறநெறி; அன்பு நெறி; பண்பாடு. உலகம் எங்கிருக்கிறது என்று சொல்கிறார்?

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்

என்கின்றார்.

நம்நாட்டிலே தாய்மார்கள் 'மண்ணோடு மண்ணாப் போக' என்று சொல்வார்கள். வெஃகாமை பேசிய திருவள்ளுவர் பண்பின்றி இந்த நாட்டில் மனிதர் வாழ முடியாது என்ற காரணத்தாலேயே இவ்வாறு கூறியிருக்கிறார். எனவே, வள்ளுவரைப் பாராட்டுகிறோம் என்று சொன்னால் வள்ளுவர் கண்ட பண்பாட்டை நினைவு

படுத்துகின்றோம். அதனால்தான் தமிழகம் வாழமுடியும் தமிழகத்தின் கண்ணே பிறந்துவளர்ந்த நாமும் பெருமை யுடன் வாழமுடியும் என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் நினைவுபடுத்துவதெல்லாம்- கேட்டுக்கொள்வதெல்லாம் 'வள்ளுவரைப் படிக்க வேண்டும்; அதன்படி நடந்துகொள்ள வேண்டும்' என்பதே. திருவள்ளுவர் எத்தனை ஆணிகள் அறைந்துகூறுகிறார் பாருங்கள்!

*கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*

ஒவ்வொரு சொல்லுக்கும் உட்பொருள். திருக்குறள் படிக்கவேண்டிய நூல்; படித்து அனுபவிக்கத் தக்க நூல். பிரான்சிஸ் பேக்கன் என்ற பேராசிரியர் 'ஒருசில நூல்கள் பார்க்கத்தக்கவை. ஒரு சில நூல்கள் படிக்கத்தக்கவை. ஒரு சில நூல்கள் படித்து அனுபவிக்கத்தக்கவை' என்று சொல்லு கிறார். இந்த அருமைகளெல்லாம் நிறைந்துள்ள நூல் ஒன்றி ருக்கிறது என்று சொன்னால் அந்நூல் திருக்குறள். அது பெரும் நூல். அதைப் படித்து அனுபவிக்கவேண்டும். அதன் நெறி நின்று வாழ முயற்சிசெய்ய வேண்டும். என்னுடைய நோக்கம் முழுதும் இதுதான். அந்த நெறியில் நின்று வாழ ஆசைப்படுவோமானால்,

*இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே*
*ஒழுக்க முடையார்வாய்ச் சொல்*

என்பது உணரலாகும். 'அறிவுள்ளவர் வாய்ச்சொல்' என்று கூறவில்லை; 'ஒழுக்கமுள்ளவர் வாய்ச்சொல்தான் உதவும்' என்று கூறுகின்றார். ஆதலால் வள்ளுவர் கண்ட ஒழுக்கநெறி இந்த நாட்டில் வளர வேண்டும். இது வளராத நிலையில் எது வளர்ந்தாலும் பயனில்லை. இந்த வளர்ச்சியில்லாமல் 'தமிழ் மகன்' என்று சொல்லிக் கொள்ளக்கூடக் கொஞ்சம் அச்சமாகத்தானிருக்கிறது.

*நலத்தின்கண் நாரின்மை தோன்றி னவனைக்*
*குலத்தின்கண் ஐயப் படும்.*

ஆகையால் நம்மிடத்தில் குறையிருக்குமானால் தமிழ்க் குலத்திற்கே இழிவு வந்துவிடும். ஆகையால் தமிழ்ப் பண்பாட்டிலே நெறியிலே வாழாதவர்கள் 'தமிழ் மகன்' என்று சொல்லிக் கொள்ளாமலாவது இருக்கட்டும். ஏன்? தமிழ்க் குலத்தின்கண்ணே பலரும் ஐயப்பாடு கொண்டு விடுவார்கள். இவைகளை யெல்லாம் நாம் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும்.

இந்த உலகத்தைப் பார்க்கிற பொழுதெல்லாம் வள்ளுவர் ஒரு ஆராய்ச்சி செய்கிறார். ஒன்றுபோல் தோன்றும் கருத்தை இரண்டொரு விடத்திற் சொல்லுகிறார்.

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு*

என்றும், மற்றொரு இடத்தில்,

*எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு*

என்றும் கூறுகிறார்.

இந்த இரண்டுக்கும் வேற்றுமை இருக்கத் தானே வேண்டும்? இந்தக் குறளின் நோக்கம் வேறு, அந்தக் குறளின் நோக்கம் வேறு. ஆனால் உரையாசிரியர்கள் சிலர் ஒரே பொருள்தான் காட்டுகின்றனர். இதற்குப் பரிமேலழகர் "கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை" என்ற மேற்கோள் காட்டுகிறார். இது அவ்வளவு சிறப்புடைத்துத்தானா என்று கூறல் வேண்டும். 'எத்தன்மைத் தாயினும்' என்ற இடத்தில் "பொருளின் தன்மைப் பாட்டிலே வைத்து இந்த வுலகத்தில் காணுகின்ற, உணர்கின்ற, அனுபவிக்கின்ற பொருள் எது? நிலைத்த இன்பம் தருவது எது? அப்படியில்லாதவை எவை? என்று

அறிந்து முடிவுகட்டுக; நிலைத்த இன்பம் தருகின்ற ஒன்றைப் பற்றிக்கொள்க”வென்று சொல்கிறார். இதில் எத்துணையோ ஆழ்ந்த பொருள் உண்டு. எத்தனை உரையாசிரியர்கள் தோன்றினும் வள்ளுவரை முழுதும் காண இயலாது. வள்ளுவரை யாரும் முடிவுகட்ட முடியாது. திருக்குறள் அறிவுக் கருவூலம். வாழ்க்கையிலே அறிவு பெறாது குழந்தை களாக இருக்கின்றவர்கட்கு இடமே கிடையாது. நாம் இன்னும் வளர்ச்சியடையவேண்டும். சங்கத்தமிழ் முழுவதும் பயின்ற பேரறிஞர்கள் அனைவரும்கூடச் சில விடங்களிலே தவறிவிட்டார்கள் என்று நமக்குத் தோன்றுகிறது. நாம் தவறிவிட்டோம் என்று நமக்குப் பின் வருகின்ற பரம்பரை சொல்லும். தவம் என்ற அதிகாரத்தில் ஒரு குறள்,

> இலர்பல ராகிய காரணம் நோற்பார்
> சிலர்பலர் நோலா தவர்.

இதற்குப் பரிமேலழகர், ‘செல்வம் நல்குரவு என்பன ஈண்டு அறிவினது உண்மையின்மைகளையுங் குறித்து நின்றன’ என்று குறிப்பிடுகின்றார். மணக்குடவர் அறிவின்... என்று முதலில் எழுதுகிறார். செல்வம் என்றும் கல்வி என்றும் சொல்லுகிறார். இதன் கருத்தை நோக்குவோம். செல்வத்தின் கண் உள்ள வெறுப்பால்தானே தவஞ்செய்ய முனை கின்றனர். அவ்வாறு அவர்கள் தவஞ்செய்தால் செல்வம் பெறுவார் என்று சொன்னால் பயனில்லையே. மற்றொன்று: அறிவு என்று கொண்டால் அறிவின் துணைகொண்டு அதை உணர்ந்து தானே தவத்திற்கு நாடிச்செல்லுகிறான். ஆகை யால் அறிவின் முழுத் துணையிருந்துதானே அவன் செல்லு கிறான். ஆகையால் அறிவு என்று சொன்னாலும் அவ்வளவு பொருத்தமாக இல்லை. ஆதலின், இரண்டையுஞ் சொல்ல முடியாது.

நம் இலக்கியத்தை வைத்துப் பேசுகிறபொழுது ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது. எப்பொழுதும் தவஞ்

செய்கின்ற பெரு மக்கள் தமக்காகத் தவஞ் செய்வாரல்லர். “உலகை வாழ்விக்கத் துறந்தவர்க்குத் துப்புரவு வேண்டியே மற்றையவர் தவம் மறந்தார்” என்று வள்ளுவர் குறிப் பிடுதலுங் காண்க. தவஞ்செய்கின்றவர் தம்மைக் குறித்த நினைவில்லாதவர், ஆகையால் தவஞ்செய்ய எண்ணுகின்ற பொழுது தம்மை மறக்கின்ற நிலை வேண்டும். அதனைத் தான் மற்றோரிடத்தில்,

*தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய*
*மன்னுயி ரெல்லாந் தொழும்*

என்ற மேற்கொள் காட்டிச் சொல்லுகின்றார்.

“நாம் ஒழிந்து, சிவமானவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ” என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

கோவில்களில் சீர்திருத்தம் வரவேண்டும் என்று விரும்புகின்றவர்களில் நானும் ஒருவன். கோவிலுக்குப் போகின்ற நம்மிடத்தில் என்ன எண்ணம் இருக்கின்றது? இங்கிருந்து தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் எல்லாம் கொண்டு போகிறோம். ஆண்டவன் எங்கும் நிறைந்தவர். உள்ளுகின்றவர் உள்ளத்தில் எல்லாம் ஒளி விளக்காய்க் காட்சியளிக்கின்றவர். இவ்வாறு நிறைந்து விளங்கும் ஆண்டவன் திருமுன்னர்ச் சென்று ‘நான்தான் அருணாசல தேசிகர், என்னுடைய நக்ஷத்திரம் இது’ எனச்சொல்லி அர்ச்சனை செய்வோமானால் அதைவிட வேறு நிலை யில்லை. அவனருள் வாழவேண்டும்; அவன் திருவடி வாழவேண்டும். ‘ஞாலம் நின்புகழே மிகவேண்டும்’ என்று ஏன் பாடினார்? ஞானசம்பந்தர் ஏன் மதுரை வந்தார்? சமணர்களை வெல்ல வேண்டும் என்பதற்காக வந்தார். சமணர்களைப் புறங்காணவேண்டும். அதற்குத் துணைசெய் என்றல்லவா ஆண்டவனிடம் கேட்கவேண்டும்? ஆனால் அவர் அப்படியொன்றுங் கேட்கவில்லை. ‘ஞாலம் நின்புகழே மிக வேண்டும்’ என்று வேண்டினார். இத்தகைய வழக்காறு

கொண்ட நாட்டில் இன்று நாம் இப்படியெல்லாம் வாழ்கின்றோம். இந்த நிலையால் பிறருக்கு என்ன பயன் என்று பார்க்க வேண்டும். சமய வாழ்க்கை சொல்லுகிறபடி இந்த நினைவு வரவேண்டும். 'தவஞ் செய்கின்ற முனிவர் பெருமக்களாலே நாம் எல்லாப் பயன்களையும் பெறு கின்றோம்' என்ற கருத்தைக் கொள்ளவேண்டும். இவ்வாறு நாம் இக்கருத்துக்குச் சிறிது சுற்றிவர வேண்டும். இவ்வாறு சொல்வதுதான் முறையென்று கருதுகின்றோம். உரையாசிரி யர்கள் உரையைப் புரட்டுவதற்குள் மூலத்தைப்படித்து இக்கருத்தை உணர்ந்து கொள்ளலாம். 'சிலர் பலராகிய காரணம்' என்ற குறளுக்கு வருகின்றோம். 'பலர் சிலரா வதற்குக் காரணம் தவஞ்செய்யு முனிவர் சிலராயிருத்தலே; நோலாதவர் பலராய் இருத்தலே' என்ற கருத்தை விளக்குவது அக்குறள்.

தவஞ்செய்யு முனிவர் பெருமக்கள் அதிகமாக இருந்தால், அவர்கள் எண்ணம் சிந்தனையெல்லாம் சிலராகிய எல்லா மக்களுக்கும் சிறப்புடைய வாழ்வு கிடைக்கச் செய்யும். அப்படியில்லாத காரணத்தினால்தான் இல்லாதவர் பலராகிறார்கள். இப்படிச் சொல்வதற்கு வள்ளுவரே இடந்தருகின்றார். துறந்தார்தான் முதலில் பேணத்தக்கவர் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

இல்லறத்தார் கடமையை வற்புறுத்துகின்றவிடத்தில்,

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை**

என்று போற்றிச் சொல்லியிருக்கிறார். அவர்கள் தவத்தின் காரணமாக, அன்பு நிலையின் காரணமாகத்தான் இங்ஙனம் கூறினார். இத்தகைய முனிவர் எங்கேனும் கன்னி முனையில் இருந்தால் மதுரையில் உள்ளார் யாது செய்ய முடியும்? ஆகையால் மதுரையிலே இரண்டொருவர் இருத்தல் வேண்டும். மற்றவூர்களில் உள்ளவர்கள் என்ன செய்வார்கள்!

ஆகையால் அவர்கள் நாடெங்கும் நிரம்பியிருத்தல் வேண்டும் என்ற கருத்தை வள்ளுவர் எண்ணியிருப்பார் என நம்பு கின்றோம்.

*ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர்யான் வாழு மூரே*

என்ற அடிகளில் 'பலர்' என்ற சொல்லை வைத்துப் புறநானூற்று ஆசிரியர் இடந்தருகின்றார். இதனாலும் துறவியர் பலர் உளராதல் வேண்டும் என்பது பெறப் படுகின்றது.

இந்த நிலைகளிலே யெல்லாம் திருவள்ளுவர் பேரருளைத்தானே தருகின்றார். அறநெறியைக் காட்டு கின்றார். தமிழகத்தின் பெருமையைத் திருக்குறள் காட்டு கின்றது. தமிழகத்தின் பெருமை திருவள்ளுவரின் திருவடியில் தான் இருக்கிறது.

தமிழன் அன்றையத் தமிழனாகவே வாழ்கிறான்; திருவள்ளுவர் கண்ட தமிழனாகவே வாழ்கிறான் என்ற நிலையைத் தமிழகம் பெறவேண்டும். அந்த உணர்ச்சியைப் பெற முயற்சிக்கின்ற காலத்தில் நாம் பெற்றிருக்கும் பெருமை நம்மால் இன்னும் அதிகமாக வளரும் என்ற நம்பிக்கையை உங்களுக்கு நினைவுபடுத்திக்கொண்டு, அந்த உணர்ச்சியைப் பெற முயற்சிக்கின்ற காலத்தில் நாம் பெற்றிருக்கும் பெருமை நம்மால் இன்னும் அதிகமாக வளரும் என்ற நம்பிக்கையை உங்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டு, திருவள்ளுவர் புகழ்பாடி அவர் காட்டிய ஒழுக்க நெறியை, அறநெறியைவிடாது கைப்பிடித்தல் வேண்டும் என்று கூறுகின்றோம்.

**ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்**
**உயிரினு மோம்பப் படும்**

இக்குறள் காண்க.

திருவள்ளுவர் 'உலகத்தைத் துறந்துவிட்டு விரைவில் மடிந்துபோ' என்று சொல்ல ஆசைப்படவில்லை. 'ஒழுக்கம் விழுப்பந்தரலால் உயிரினும் ஓம்பப்படும்' என்று சொல்லு கின்றார். ஆகையால் பொன்னேபோல் போற்றிவாழ அவர் காட்டிய சாதனம் 'உயிரைவிட ஒழுக்கம் சிறந்தது' என்பது தான். இந்த ஒன்றினால் மட்டும் நாம் காட்சியளிக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டு திருவள்ளுவர் கண்ட பண்பாடு, திருவள்ளுவர் கண்ட நாகரிகம், இந்த நாட்டில் நின்று நிலவ திருவள்ளுவரின் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உலகத்தை இயக்கும் ஆலவாயண்ணலின் திரு வருட்டுணையால் விரைவில் இந்நலன்கள் நிரம்பப் பெறுவோம்; திருவள்ளுவர் கண்ட தமிழகத்தைப் பார்ப் போம் என்ற நம்பிக்கையுடன் முடித்துக்கொள்கின்றோம்.

## அன்புடைய பெருமக்களே! தாய்மார்களே!

இரண்டொரு மணி நேரங்கழித்துத் திரும்பவும் கடமை யென்ற காரணத்தை முன்னிட்டு மாத்திரம் ஒரு சில சொற்கள் சொல்ல ஆசைப்படுகின்றோம். தலைவர் முடிப் புரை பெரும்பான்மையும் பேசிய அறிஞர்களின் பேச்சையொட்டித்தான் அமைவது இயற்கை. இந்த நிலையிலே, கல்லூரி மாணவர் என்ற பெருக்கு ஏற்ப, ஔவை துரைசாமி பிள்ளை அவர்களின் புதல்வராக இருப்பினும் கல்லூரி மாணவர் என்ற நிலைக்கு ஏற்ப, சொன்மாரி பெய்தார். தந்தையைப்போல் மகனல்லவா?

கல்லூரி மாணவர், உலகத்திலே வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கத் தோன்றிவிட்டால் அது ஆச்சரியந்தான். வாழ்க்கையின் அடிப்படை சிந்தனைதான். கல்லூரி மாணவன் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கின்ற நிலையில் அவன் என்னவாகிறான்? இதே நிலையில் பேரறிஞனாக

வாழ்ந்து வாழ்க்கையை அமைத்துக்கொள்ளட்டும் என்று வாழ்த்துகிறோம்.

பின்னே பண்டித முத்துச்சாமிப் புலவரவர்கள் பேசினார்கள். திருவள்ளுவர் குறளின் முறை, அமைப்பு முறைகள் சிலவற்றைச் சொன்னார். திருவள்ளுவர் அன்பாகச் சொல்ல வேண்டியவற்றை அன்போடு சொல்வார்; அடித்துச் சொல்லவேண்டியதை அடித்துச் சொல்லி விடுவார். அவர் தாம் கூற எடுத்துக்கொண்ட கொள்கை களைச் சற்றும் பிறழாது வற்புறுத்திக் கூறுகின்ற பண்பு-நலமுடையவர். வள்ளுவரிடத்திற் காணப்படும் அருமை யான பண்பாடு, பெருமையானதாக, உயிர்நாடியாக இருப் பவைகளையெல்லாம் ஓரிடத்திலன்று-இரண்டிடத்திலன்று; மூன்று இடங்களுக்கு அப்பாலுஞ் சொல்வார்.

இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண,
நன்னயஞ் செய்து விடல்

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்,
என்ன பயத்ததோ சால்பு

இப்பண்பாட்டைச் சற்றேறக்குறைய ஐந்து குறள்களுக்குமேல் வற்புறுத்தியிருக்கிறார். இப்படிப் பல்வேறிடங்களில் திரும்பத் திரும்பச் சொல்கிற தன்மையால் வள்ளுவரின் ஈடுபாடு புலப்படுகிறது.

உயிர்க்கு ஊதியம் ஒன்று வள்ளுவர் சொல்கிறார். திருநாவுக்கரசுப் பெருமான் ஒரு ஊதியத்தைச் சொல்கிறார். இரண்டும் சொல்லளவில் வெவ்வேறாகத் தோன்றினும் முடிவில் ஒரே கருத்தில்தான் காட்சியளிக்கும். "ஈதல் இசைபட வாழ்தல் அது வல்ல, தூதியமில்லை யுயிர்க்கு" என்று வள்ளுவர் சொல்கிறார். திருநாவுக்கரசப் பெருந்தகை யார் "தொண்டு அலாது உயிர்க்கு ஊதியமில்லை" என்று

சொல்கிறார். இவ்வாறாக இரண்டு பெருமக்களும் உயிர்க்கு ஊதியம் கூறுகிறார்கள்.

கொடுப்பதற்காகவே பிறந்த நாடு தமிழ்நாடு என்று சொல்வார்கள். “வட வேங்கடம் தென்குமரி, ஆயிடைத் தமிழ் கூறுநல்லுலகம்” எனத் தொல்காப்பியர் கண்ட தமிழகத்தை இன்று காணமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. வருகின்றவர் களையெல்லாம் ‘வாருங்கள், வாருங்கள் காவிரியாற்றுத் தண்ணீர் இருக்கிறது; நல்ல சோறு இருக்கிறது’ என்று வரவழைத்து அள்ளிக்கொடுத்ததன் காரணத்தால் இன்று கூவத்திற்கு இப்பால் ஒதுக்கப்படுகின்ற நிலை வந்துவிட்டது. கொடுப்பதன் காரணமாக வறுமைவரினும் கொள்ளத்தக்கது என வள்ளுவர் சொல்கிறார். கடல்கொண்ட நாட்டுக்குத் தள்ளிவிட்டாலும் போகலாம்; வந்தவனுக்கு இடங் கொடுத்துத் தமிழன் போனான் என்ற பண்பாடு இருக்குமன்றோ? இத்தகைய பண்பாடு தமிழனுக்கே உரியது.

திருவள்ளுவர் புலமைக்கு ஒரு இலக்கணம் கூறுகிறார். ‘நுண் மாண் நுழை புலம்’ என்று சொல்கின்றார். எல்லோரும் உயர்வு தாழ்வு இல்லை என்று சொன்னாலும் நாம் ஒத்துக்கொள்ளவில்லை. திருவள்ளுவர் “பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்” என்று பேசுகிறார்.

அதுபோலக் கொடுக்கின்ற கூட்டத்தையும் மூன்று வகையாகக் காண்கின்றார். அதில் ஒருவகை மக்கட் கூட்டத்தைக் காண்போம். இக்கூட்டத்தைப் பற்றிக் கூறும் போது வள்ளுவர் “ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம், பேரறிவாளன் திரு” என்று குறிப்பிடுகின்றார். ஊருணி நீர் பிறரால் எடுத்துக்கொள்ளப்படாமல் இருந்தால் கெட்டு விடும். ஆனால், பிறர் எடுத்துக்கொண்டிருந்தால், அந்நீர் அடிக்கடி வெளியேற்றப்படுவதன் காரணமாகத் தூய்மைத் தன்மை பெறுதல் இயல்பு. தன் தூய்மையைப் பெற்றுக்

கொள்வதற்காகவே ஊருணி பிறருக்கு நீரையளிக்கிறது. அதுமட்டுமன்று. ஊருணியைத் தோண்டத் தோண்டத் தண்ணீர் வருகிறது. இது ஒரு அடிப்படை. இதுபோல் இன்னது செய்தால் இன்ன பயன் கிடைக்கும் என்று எண்ணிக் கொடுப்போர் அவ்வகையினர் என வள்ளுவர் நினைத்திருக்க வேண்டும்.

இனி அதற்கு அடுத்த வகையினரைக் காண்போம். நடுவூரில் ஒரு பயன் மரம்; பிழைப்பற்றவர்க்கெலாம் பிழைப்புக் கிடைக்கும் என்று மக்கள் தேடி வருகின்ற மதுரை மாநகரிலே, பயன் தரும் மரம் இருக்குமானால் போகலாம். ஆனால் நடுவூர் மரத்திற்குக் கொஞ்சம் ஆபத்து. அவர் தண்ணீர் ஊற்றுவார் என்று இவரும், இவர் தண்ணீர் ஊற்றுவார் என்று அவரும் எண்ணி யாவரும் சும்மா இருந்துவிடுவர். ஆனால் யாவரும் குச்சி ஒடிக்க வந்துவிடுவர்; இத்தகைய மரம் வளர்ந்து காய்த்துப் பயன்படும் நிலையில் நம்முடைய கடமையைச் செய்துவிட வேண்டும் என்று எண்ணுவோர் இவ்வகையினர் என்கின்றார் வள்ளுவர்.

இனி மூன்றாம் வகையினரைத்தான் வள்ளுவர் மனமாரப் பாராட்டுகின்றார்; வாயாரப் பாராட்டுகின்றார்; ‘பெருந்தகையாளர்’ என்று பாராட்டுகின்றார். இதைச் சொல்லும் பொழுது மருந்து நினைவுக்கு வருகிறது. சிலருக்குச் செல்வம் இருக்கும். கொடுக்கமாட்டார்கள்; ஆனால், கொடிறுடைக்கும் கூன்கையர்க்குக் கொடுப் பார்கள். இவ்வாறின்றி எல்லோர்க்கும் பயன் கொடுக்கும் முறையில் கொடுக்குங் கூட்டத்தார்க்கு மருந்து மரத்தை உவமை காட்டுகிறார். அம்மரம் பக்கத்திற் கிடைக்கூடிய மரம்; எளிதாகப் பறிக்கலாம். அவ்வகையில் ‘பக்கத்திலிருந்து பயன் தரும் மருந்து மரம்போல்’ என்கின்றார். வைத்திய முறையில் சில மரங்களுக்கு ஆபத்துண்டு. வைத்தியர், ஒருவரிடத்தில் ‘பட்டையை உரித்துக் க்ஷாயம் வைத்துச் சாப்பிடு’ என்பர்; மற்றொருவரிடத்தில் ‘இலையை

அரைத்துச் சாப்பிடு' என்பர்; இவ்வாறு வேரிலிருந்து பட்டை வரை அனைவர்க்கும் மருந்துசொல்லிவிடுவர். இத்துணை மக்களும் அந்த ஒரே மரத்தை முற்றுகையிடுவர். ஒருவர் வேரை வெட்டுவர்; ஒருவர் பட்டையை வெட்டுவர். இத்தனை பேருக்கும் அசைந்து கொடுக்காது கொடுத்து வாழ்கின்ற மரத்தைப் போன்ற பெருந்தகையாளர் என்று பாராட்டுகிறார்.

*மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
*பெருந்தகை யான்கட் படின்*

என்ற குறள் நயம் காண்க. இவ்வாறு உவமை கூறிய பெருமை திருவள்ளுவர்க்கே உண்டு.

'செல்வத்தின் பயன் ஈதல்' என்ற பண்பாடு தமிழ் நாட்டிற்கே உரியது.

சிலர், ஏதாவது கேட்கின்றபொழுது தங்களிடத்தில் இல்லையே என்று சொல்கிறார்கள். இவ்வாறு சொல்வது கூடப் பிழையாம். இல்லையே என்று சொல்கிறவனிடத்தில் உடல் வலிவு இருக்கும்; அது இருக்கும்போது இல்லையே என்று சொல்லுதல் பிழை. கேட்கின்றவரைச் 'சற்று இருங்கள்' எனச்சொல்லிவிட்டுச் சென்று தேடிச் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும் என்று தமிழ்நாட்டு நாகரிகம் சொல்லு கிறது. 'தனக்கு மிஞ்சித் தானதருமம்' என்பது நம் நாட்டுப் பழமொழி அன்று. அப்படிப்பட்ட நாகரிகத்தில் வாழ்ந்த இந்நாட்டில் இன்னும் இந்தநிலை வளரத்தான் செய்கிறது. இந்த நிலை வளர்ந்து வரும் என்ற நம்பிக்கை உண்டு.

சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், கன் பூஷியஸ் போன்ற மேல்நாட்டு அறிஞர்களிடத்தில் திருவள்ளுவர் கருத்துக்கள் பலவும் காணப்படுகின்றன. இத்தனை அறிஞர்களும் ஒத்துப்போகிற நிலையைப் பார்க்கும்போது திருவள்ளுவரைப் பார்த்துத்தான் இவர்கள்

எல்லோரும் சொன்னார்களோ, அவர்களைப் பார்த்துத் திருவள்ளுவர் சொன்னாரோ என்று எண்ணத் தோன்று கிறது. ஆனால் இலக்கியத்தைப் படிக்கும்போது திருவள்ளுவர் அவர்கட்கெல்லாம் முற்பட்டவர் என்று அறியப்படுகிறது. இதை அறிஞர்கள் முழுவதும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்கள் அறிவுத் துறையிலே, ஆராய்ச்சித் துறையிலே, உணர்ச்சித் துறையிலே வளர்ந்த பிறகு அவர்களுடைய எண்ணம் ஒன்றாக இருக்கிறது. திருவள்ளுவரை வைத்து சாக்ரடீஸ் சொன்னார் என்றும் சாக்ரடீஸை வைத்துத் திருவள்ளுவர் சொன்னார் என்றும் எண்ணவேண்டாம். அந்த உள்ளமும் உயர்வை, உண்மையை எண்ணிற்று. இந்த உள்ளமும் உயர்வை, உண்மையை எண்ணிற்று. அவர் வாழ்ந்த சூழ்நிலை வேறு. இவர் வாழ்ந்த சூழ்நிலை வேறு. எனினும் உணர்ச்சியால் ஒன்றுபடுகிறார்கள். இக்கருத்தினை எத்தனையோ இடங்களில் சிறப்பாகச் சொல்ல ஆசைப்படுவதுண்டு.

இந்த நாட்டிற்கு அடுத்த முறையில் அறத்துறையிலே, பண்பாட்டுத் துறையிலே, பெயர் பெற்ற நாடு கிரேக்க நாடு. அதற்கு அடுத்த நிலையில் சீனா இடம் பெறுகிறது. கன்பூஷியஸ் நூலில் வள்ளுவர் கருத்துக்கள் இடம் பெறு கின்றன. அவரும் வள்ளுவரைப்போல் அறம் என்று சொல்லுகிறார்; அறம் தென்றல் என்று கூறுகிறார். அறம் அல்லாதவற்றை வாடை என்கிறார். தென்றல் உடலுக்கு வளம் தருகிறது; வாடை வருத்துகின்றது, இதையே தான் திருவள்ளுவரும் பேசுகின்றார். அந்த நாட்டுப் பெருமக்கள், அறிஞர்கள் உணர்ச்சியால் நம் திருவள்ளுவர் கண்டவற்றை கண்டிருக்கின்றனர். ஆனால் அது காலத்தால் முற்பட்ட எண்ணமாக இருக்கலாம். எனினும் தமிழ் நாட்டு நாகரிகம்போல் பல நாடுகளிலும் இருந்துதான் வருகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மனிதாகப்

பிறந்த அனைவர்க்கும் வாழத் தகுதி உண்டு என்பதைத் திருவள்ளுவர்,

> எவ்வ துறைவ துலகம் உலகத்தோ,
> டவ்வ துறைவ தறிவு

என்று சொல்கிறார். 'உலகத்தோ, டவ்வ துறைவ தறிவு' என்று சொல்கின்றமையால் உலகத்தையொட்டிச் செல்ல வேண்டும் என்ற நிலையில் தமிழ்ச் சமுதாயம் இருத்தலால் இவ் வுண்மையை ஒப்புக் கொள்ளவேண்டும்.

தமிழ்நாட்டைப்பற்றி இன்னும் உலகம் அறிந்து கொள் ளாமல் குறை கூறுகிறது. ஏன், அண்டையிலுள்ள வடநாடுகூட அறியவில்லை. தபால் தலைகளில் கவிஞர் களின் உருவத்தைப் பொறிப்பதாக வடநாட்டரசாங்கம் அறிவித்திருந்தது. தாகூர், மீரா. போன்றவர் இடம்பெற்றனர். உள்ளத்தை உருக்குகின்ற உயர்ந்த அறங்கூறும் ஞான நூலை ஆக்கித் தந்த மணிவாசகர் இடம் பெறவில்லை. திருவள்ளுவர் இடம்பெறவில்லை. இந்த நிலையில் நாம் விழிப்புட னிருக்கவேண்டும். என்பால் இதைப் பற்றிக் கேட்ட அன்பர்க்கு ஒன்று சொன்னேன். இதுபோல் அவர்கள் செய்து விடுவாராயின் அவைகளை வாங்கி நீங்கள் உங்கட்குப் பிடித்தமான தமிழ் நாட்டுக் கவிஞர் உருவங்களைப் பொறித்துவிடுங்கள் என்றேன். அம்முறையில் கம்பர், மாணிக்கவாசகர், திருவள்ளுவர் போன்றோரின் உருவங் களை அச்சிட்டுப் பயன்படுத்த ஒரு கூட்டம் முன்வந்திருக் கிறது. இதைப்போல் திருவள்ளுவர் கழகச் சார்பில் உள்ள மக்களும் தமிழ்நாட்டுக் கவிஞர் உருவப் படத்தைப் பொறித்து வடநாட்டினர்க்கு அனுப்புதல் வேண்டும். தமிழகத்தில் தோன்றி இலக்கியங்களை ஆக்கித்தந்த பேராசிரியர்களைப்போல், திருவள்ளுரைப்போல் யாரும் இல்லை. திருவள்ளுவர் கூறியதுபோல் அறிவுரையை அழுத்தந் திருத்தமாகக் கூறிய பெரும் புலவர் இல்லை.

இதுபோலவே உருகாதார் உள்ளத்தில் ஒரு புரட்சியை உண்டாக்கிய அருமையான அமுதமொழி திருவாசகம்போல் உள்ளத்தைமாற்றும் உணர்ச்சி வேறு எந்த மொழியிலும் இல்லை. இவ்வாறு பேசும்பொழுது உள்ளம் தன்னையு மறியாமல் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கின்றது. ஆனால் பள்ளியில் படிக்கின்றபொழுதுகூட இந்நாட்டுக் கவிஞர் பெயர் சொல்லப்படுவதில்லை. பாண்டியன் வரலாறு, நெடுஞ்செழியன் வரலாறு இவைகளையெல்லாம் சொல்லிக் கொடுப்படுதில்லை. ஆனால் சிவாஜி வரலாறு இருக்கும் அதைப் படித்துத்தான் தீரவேண்டும். படித்தே தீருவான். சம்பந்தரை அறியமாட்டான். மத்துவாசாரியரைப் பற்றி அறிந்திருப்பான். இந்த நிலை அடியோடு மாறவேண்டும். அந்த உணர்ச்சி நம்மிடையே வளரவேண்டும். அப்படி வளர்ந்தால்தான் நாம் பெரும்பயன் பெறமுடியும். அவர்களும் நம் நாட்டுக் கவிஞர்களை விட்டுவிட்டு அச்சுப்போடத்தான் போகிறார்கள். நாமும் வாங்கத்தான் போகிறோம். ஆனால் அவர்கள் அச்சுப் போடுதற்கு முன்னே நாம் கம்பர், மாணிக்கவாசகர், திருவள்ளுவர் படங்களைப் பொறித்துவிட வேண்டும். இனி இந்த உருவங்களை நாமே பொறித்துவிடவேண்டும் என்கிற உணர்ச்சி ஊட்ட வேண்டும்.

கல்வியைப் பற்றிச் சிறிது சொல்வோம். கல்வியைப் பற்றி எத்தனையோ கருத்து. அவற்றையெல்லாம் விளக்க வேண்டும் என்ற ஆசையில்லை. ஒரு பேரறிஞர், "நீ சொல்லித்தரும் படிப்பு ஒருவனை மகாத்மாவாக்க வேண்டாம், மனிதனாகவாவது ஆக்கட்டும்" என்று சொல்கிறார். அந்த நிலையிலே அத்துணைப் பெரிய சிறந்த மனிதப் பண்புடையவராக வாழச்செய்யவேண்டும் கல்வி. அப்படிச் செய்யாவிட்டால் அன்று திருவள்ளுவர் கண்ட பேய்க்கூட்டந்தான் வாழ்கிறது என்று பொருள். ஏன்? "உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத், தலகையா

வைக்கப்படும்" என்றாரல்லவா? உலகம் அவரைப் பேய்க்கூட்டம் என்று சொல்கிறது. அப்பேய்க் கூட்டத்தை உற்பத்தி செய்யும் நிலையங்களாகப் பள்ளிகள் இருக்கின்றன. அந்த நிலையொழிந்து திருவள்ளுவர் விரும்புகின்ற நிலையில் கல்வி நிலையங்கள் பணி புரியவேண்டும். அப்படிப் பணிசெய்யும்போது திருவள்ளுவர் 'நிலையாமை'யைப் பற்றிக் கூறியதை நினைவுபடுத்தவேண்டும். நிலை யாமையைப்பற்றிச் சொன்னால் அது நஞ்சாயிருக்கிறது என்று சிலர் சொல்கின்றனர். திருவள்ளுவர் என்ன கூறுகின்றார்? "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும், பெருமை யுடைத்திவ்வுலகு" என்று நிலை யாமையை வற்புறுத்துகிறார். திருவள்ளுவர் 'இந்த வுலகில் வாழ்கின்ற நாம் வரையறை உணர்ந்தவர்கள் அல்லேம்' என்று சொல்கிறார். ஆகையால், 'நீ செய்யவேண்டும் என்று எண்ணியதை உடனே செய்' என்கிறார். 'காயமே இது பொய்யடா' என்ற பாட்டைப் பாடவில்லை. செயல் முறையில் ஆற்றுப்படுத்தற்காகவே சொல்கிறார். இந் நிலையில் அப்படிப்பட்ட உணர்ச்சியை யூட்டவேண்டும்.

'தான் நாட்டித் தனாஅது நிறுத்தல்' என்ற நிலை புலவர்க்கு இயல்பாகவே உண்டு. திருவள்ளுவர் கண்ட துறவறம் இல்லறத்திற்குப் பிறகா? முன்னா? இது ஒரு பெரிய வாதம். சில பெரும் பேராசிரியர்களிடத்திற்கூட இந்தச் சர்ச்சை எழுந்திருக்கிறது. பிள்ளையவர்கள் 'இல்லத்திற்குப் பின்' என்று சொல்கிறார்கள். அது பற்றிச் சில கருத்துக்கள் சொல்லவேண்டியிருக்கிறது. திருவள்ளுவர் இல்லறத்திற்குப் பெருமை கொடுத்திருக்கிறாரா என்றால் இல்லறத்தைவிடத் துறவறத்துக்குத்தான் பெருமை கொடுத்திருக்கிறார். கட வுளைப் பேசிய நாவால் உடனே 'நீத்தார் பெருமை' பேசுகிறார். அதோடு மட்டுமன்று. துறவறத்தைப் பற்றிப் பேசும்போதெல்லாம் அழுத்தமாகப் பேசுகிறார். "இருமை வகை தெரிந் தீண்டதும் பூண்டார், பெருமை பிறங்கிற்றுலகு"

என்று. "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும், பிறன் பழிப்பதில்லாயின் நன்று" எனக்கூறி இல்லறத்திற்குத்தான் திருவள்ளுவர் பெருமை கொடுத்தார் என்று இல்லறத்தார் அனைவரும் தெரியாமல் சொல்வர். இதுபோல 'தெய்வத்தா னாகாதெனினும் முயற்சிதன், மெய்வருத்தக் கூலி தரும்" என்றமையால் கடவுள் இல்லையென்று சொல்லிவிட்டார் என்பர் சிலர். பரிமேலழகர் 'அஃதும்' என்ற சொல்லுக்கு 'ஏனைத் துறவறம்' என்று வலிந்து பொருள் காட்டுகிறார். 'அஃதும்' என்பது அந்த இல்லறமும் என்று கொண்டு பெயரளவில் இல்லறம் நல்லதுதான்; அவ்வாழ்க்கை பிறன் பழிப்பதாக இல்லையானால் நன்று என்கிறார். திருஞான சம்பந்தர் காலத்தில் 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்று சொன்னால் போதும். அந்த நிலை அன்று இருந்தது. இன்று அப்படிச் சொன்னாலும் போவதில்லை. இன்றைய நிலையில் 'கோயிலுக்கு உள்ளன்போடு போ' என்று சொல்லவேண்டும்.

இல்லறம் மட்டும் அறம் என்று எண்ணிவிடுதல் கூடாது. அஃதும் என்று சொல்கிறபோது அந்த இல்லறமும் என்று சொல்லவேண்டுமின்றி துறவறத்திற்குச் சென்று நுழைதல் கூடாது. திருவள்ளுவர் 'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம், பழித்த தொழித்து விடின்' என்ற குறளில் 'பிறன் பழிக்க இயலாவண்ணம் துறவறநெறி' நிற்க' என்று கூறியவர் ஈண்டும் அதே கருத்தைக் கூறவே மாட்டார். ஆதலால் இது 'பிறன் பழிக்காவண்ணம் இல்லற நெறி நிற்க' என்ற கருத்தை வற்புறுத்த வந்ததேயாகும்.

திருவள்ளுவர் இல்லறத்தார்க்கு வீட்டின்பம் இல்லை என்று சொல்வார்போல் சொல்கிறார். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும், தெய்வத்துள் வைக்கப்படும்" என்றார். ஈண்டுத் தேவவாழ்க்கைதான் சொல்லப்படுகிறது. துறவு நிலையைச் சொல்லும்போது, "யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த

வுலகம் புகும்" என்றார். இவ்வாறு திருவள்ளுவர் துறவியாக இருந்துதான் சொன்னாரோ என்று எண்ணுவதுண்டு. இவற்றைப் பார்க்கும்பொழுது இல்லறத்தைவிடத் துறவறமே சிறந்ததென்று தெரிகிறது.

இல்லறத்திலிருந்து துறவறத்திற்கு வருபவன் எல்லா வற்றையும் அனுபவித்துத்தானே வரவேண்டும். இவ்வாறு வருவதாயிருந்தால் 'கூடா வொழுக்கம்' என்று சொல் வானேன். திரும்பவும் ஆசை வரலாம். அந்த ஆசைவரினும் அதைக் கூடாவொழுக்கம் என்று சொல்லவேண்டுவதில்லை. அந்தத் தூய்மையோடு நின்றுவந்ததால்தான் அவன் மனம் திருந்தும். ஆகையால்தான் கூடாவொழுக்கம் என்று வற்புறுத்துகிறார். இல்லறத்திற்குப்பின் துறவறம் வேறு எந்த நாட்டில் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் தமிழகத்தில் இல்லறமில்லாமலே துறவறம் உண்டு. இல்லறத்தி லிருந்தும் வந்திருக்கிறார்கள். அதனால்தான் தமிழ் நாட்டுச் சமயநிலையங்களிற் கூடத் திருமணம் ஆகாதவர்களுக்குத் தான் பட்டம் உண்டு. திருவள்ளுவர் முதலில் ஒழுக்கத்திற்கு இடங்கொடுத்தார். இந்நாட்டில் சிலர் துறக்காமல் இருக்கிறார்களே அது எதற்காக என்று கேட்கின்றார்? வேலை செய்கிறவன் உயர்ந்தவனா? வேலைவாங்குகின்றவன் உயர்ந்தவனா? வேலை :வாங்குவோன் தானே உயர்ந்தவன். அதுபோல துறவு உய்ர்ந்ததா? துறக்காமல் இருப்பது உயர்ந்ததா? எனில் துறந்தவர்க்குத் தொண்டு செய்தற்காகவே ஏனையோர் துறக்காமல் இருக்கிறார் என்றால் துறவு பெரிதா? இல்லறம் பெரிதா? யார் பேசினும் திருவள்ளுவர் எதிரில் காட்சியளிக்கின்ற நிலையில் இருக்கிறார். ஆகவே, இரண்டையும் உயர்த்தித் தாழ்த்திமட்டும் சொல்லவில்லை. இல்லறத்தில் நின்று அறத்துடன் வாழ்தல் எளிது. ஆனால் துறவறத்தில் அப்படி வாழ்தல் மிகக் கடினம். இல்லறத்தில் தவறிவிட்டாலும் மன்னித்து விடுவார்கள். ஆனால் துறவறத்தில் தவறிவிட்டால் மன்னிக்கமாட்டார்கள். துறவு

நிலையில் உள்ளவன் கரடு முரடான மலையில் செல் கின்றான். அவன் அங்கிருந்து தவறி விழுந்தால் அவன் கதி அதோகதிதான். "புறங் குன்றி கண்டனையரேனும் அகங் குன்றி, மூக்கிற் கரியாருடைத்து" எனல் காண்க. தவறி விழுந்தாலும்கூட பயனற்ற வாழ்க்கையாக நாட்டிற்கே நலம் பயக்காத வாழ்க்கையாக அமைந்துவிடும் என்ற காரணமாக ஒரு சில அதிகாரத்திற்குப் பின் வைத்தார்.

இல்லறத்தைப் பாராட்ட வள்ளுவருக்கு 'அறம்' என்ற ஒரு சொல் கிடைத்துவிட்டது. 'அறம்' என்ற சொல் பாராட்டப்படுகிறது. ஆனால் துறந்தார் நிலை சொல்லுக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்டது. துறந்தார் நிலையைச் சொல்லச் சொல் கிடைக்கவில்லை. எண்ணம் கிடைக்க வில்லை. ஆகையால்

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று

என்றார். இதனாலும் துறவின் மாட்சி புலனாகும். இருந் தாலுங்கூட பண்டித முத்துசாமிப் புலவர் சொன்னதுபோல் இன்றைக்கும் இந்நாட்டில் துறவு பாராட்டப்படுவதில்லை. ஏன்? அவர்கள் அப்படியில்லை. அதனால்தான் வள்ளுவர் "மழித்தலும்....விடின்" என்றார். மழித்தலும் நீட்டலும் இந்த நாட்டுக்குத் தேவைதான். பழிப்பற்ற வாழ்வை மேற் கொண்டிருந்தால் தேவைதான். ஆகத் திருவள்ளுவர் இரண்டையும் பாராட்டுகிறார். அதனால்தான் ஒரு பேரறிஞர், ``He was not an age but for all time" என்பதாகச் சொன்னார்.

எந்தக் காலத்திற்கும், எந்த நூற்றாண்டிற்கும், பல்வேறு காலத்திற்கும், வருகிற சமுதாயம் அனைத்திற்கும் வேண்டியவர் திருவள்ளுவர் என்பதை நினைவுபடுத்தி அந்த அருமைப் பெரும் புலவரை உள்ளக் கோயிலில் வைத்து

அவர் கண்ட ஒழுக்கம் என்பால் பொருந்துவதாக என்று ஆண்டவனை வாழ்த்தி வாழ்த்தி, திருவள்ளுவர் திருவடியை வாழ்த்தி வாழ்த்தி, திருவள்ளுவர் புகழ் வாழ, திருவள்ளுவர் கண்ட அறம் வளர, உண்மை ஓங்கி மக்கள் அறநெறியில் வாழ்க வாழ்க என்று வாழ்த்துகிறோம். 'சான்றோர் அவையில் பாம்பும் உய்யும்' என்பதைக் கண்கூடாகக் காணும் அளவில் அருமையான சூழ்நிலையிருந்தது. திருவள்ளுவரின் திருக்குறளை அனுபவித்த உங்களுக்குத் தூய இறவாத இன்ப அன்பை நினைத்துக்கொண்டு திருவள்ளுவர் திருவருள் நமக்குத் துணைசெய்வதாகுக என வாழ்த்திப் பல்வேறு இடங்களுக்குச் சென்று சென்று எண்ணுகிற நிலையில் அத்துணைக் கூட்டங்கள் இருத்தல் கண்டு மகிழ்ச்சியைப் புலப்படுத்திக்கொள்கிறோம்.

திருவள்ளுவர் மாளிகை கட்ட எத்தனையோ பெருமக்கள் இருக்கின்றனர். இதை நாம் செய்தால் அவர்களும் செய்வார்கள் என எண்ணித்தான் செய்தோம். உடன் வந்திருக்கும் சைவசித்தாந்தப் புரவலர் அவர்கள் ஏனையோர் எல்லோருமாகச் சேர்ந்து இந்த அருமைப் பணியைச் சங்கத்தமிழ் வளர்ந்த மதுரையில் நிறைவேற்றி விடுவார்கள் என்ற நம்பிக்கையுடன் நிறுத்திக்கொள் கின்றோம்.

# 5

# திருக்குறள் பேசுகிறது

## வழித்துணை

உடலொடு உயிர் ஒன்றி உலவும் காலத்து ஒருங்கு நடைபயிலும் வழிகள் இரண்டு. இரண்டும் இயைந்த வண்ணம் நடை பயில்வதற்கு முன்பாக உயிர் தனது அகத் துறுப்பாகிய மனத்தினால் நடைபயிலும். அஃது ஒரு வழியே. இவ்வழியேதான் உடற் காரியங்கள் நிகழும். சிந்தை செல்லும் வழியே செயல். சிந்தைக்கு அடிச்சுவடு இல்லை; செயலுக்கு உண்டு. திருவள்ளுவர் தமது ஒப்பற்ற உலகப் பொதுமறை யாகிய திருக்குறளின் முன் பாயிரம் ஓதுகிறார். பாயிரத்தில் மனிதரை வழிநடத்தி வாழ்விக்கும் தத்துவங்களை எடுத்துப் பேசுகிறார். கடவுளை உலகத்தின் முதலாக, திருக்குறள் கண்டு காட்டுகிறது. "ஆதிபகவன் முதற்றே உலகு" என்பது நினைந்து நினைந்து மகிழத்தக்கது. இறைவனை உலகம் முதலாகவுடையது. இறைவனே உலகத்தைத் தோற்றுவித்த முதல்வன்; இறைவனே எல்லார்க்கும் முன்னே தோன்றி மூத்த முதல்வன்; இறைவனே முதற்கருவாக நின்று அகத்தும் புறத்தும் விரிந்து கிடக்கின்ற இவ்வுலகத்தை விரிவடையச் செய்தனன். இங்ஙனம் நினைந்து நினைந்து பொருள் கருதி

மகிழத்தக்க நிலையில் அமைந்துள்ளது முதற்குறள். இது மட்டுமா? எல்லா எழுத்துகளிலும் அகரத்தின் ஒலிச்சாயல் உண்டு. அதுபோல எல்லா உயிர்களிடத்திலும் இறைவன் தங்கியிருக்கிறான் என்ற குறிப்பு உணரத்தக்கது.

இறைவன் இங்ஙனம் முதலாக இருந்து உலகத்தைத் தோற்றுவித்த இயக்குவானாயினும், அவன் வேண்டுதல் வேண்டாமை யில்லாதவன் என்று திருக்குறள் பேசுகிறது.

*வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்*
*கியாண்டும் இடும்பை இல*

என்பது திருக்குறள். உயிர்கள் உய்யும் பொருட்டு உலக நடைமுறையினை நிகழ்த்தும் இறைவனுக்கு வேண்டுதல் வேண்டாமை இல்லையென்றால் என்ன பொருள்? இறைவனுக்குத் தன் சார்பான விருப்பு வெறுப்பு இல்லையென்றே பொருள்! எந்தவொரு விருப்போ அல்லது வெறுப்போ தன்னைப் பற்றியதாக இருக்குமானால் நிறைவுடையதல்ல. உயிர்களுக்கு விருப்பும் வெறுப்பும் உண்டு; அவை பெரும்பாலும் அவர்களைச் சுற்றியே வட்டமிடல் உண்டு. அவர்கள் பிறரை - பிறவற்றை நேசித்து விரும்புவதெல்லாம் தன்னுடைய நலத்திற்குக் காரணமாக இருப்பதனாலேயாம். இதுவே உலகியல் பொதுவிதி. ஆனால், இறைவனோ உலகம் உய்தி பெறுவதற்காகவே ஐந்தொழில் நடத்தி வருகின்றான். இறைவனுடைய திருவுள்ளம் உலக உயிர்களைச் சுற்றியே வட்டமிடுகிறது. அகரமாகிய எழுத்து ஒரு சிறு முழு வட்டத்தில் தொடங்குகிறது. பின் அது கீழே வளைந்து வந்து, மீண்டும் மேல்நோக்கி வளைந்து சென்று, பின் அந்த வளைவுகளைக் கடந்து அண்மையில் ஒரு நேர்க் கோட்டில் முடிகிறது. இறைவன் ஒரு முழு வட்டம்; முழு முதல்; குறைவிலா நிறைவு. கோதிலா அமுது; இன்ப அன்பு. ஆயினும் உயிர்களின் நலங்கருதி இரங்கி அவ்வுயிர்கள் செல்லுழித் தானும் வளைந்து சென்று, உயிர்களை அண்மித்து நின்று அறிவித்து, துணையாய் நின்று துறக்கச்

செய்து, கீழ்மை நிலைமையிலிருந்து பைய மேல்நிலைக்குக் கொண்டு வந்து, பின்பு வாழ்வெனும் மையலாகிய சுழலி லிருந்து நேரான இன்ப அன்பு நிலைக்குக் கொண்டு வந்து அருளுவதை 'அ' என்ற எழுத்தை எடுத்துக் காட்டியதன் மூலம் உய்த்துணரலாம். இறைவனுக்குத் தனது நாட்ட மில்லை. உயிர்கள் மீதே நாட்டம். அஃது பற்றற்ற நாட்டம். ஆதலால், இறைவன் பெருநெருப்பு. நெருப்பு மாசினை நீக்கும். ஆனால் நெருப்பு மாசுபடாது. அதுபோல இறைவன் குற்றங்கள் பலவுடைய உயிர்களோடு ஒன்றாவான்; உடனாவான்; உடன் பயிலுவான். ஆயினும் மாசுபட மாட்டான். இங்ஙனம் விருப்பும் வெறுப்புமற்ற இறைவனை வாழ்த்தி வணங்குதலின் மூலம் உயிர்களும் அத்தன்மைய வாகித் துன்பத்தினின்றும் விடுதலை பெறும்.

இறைவன் மனமெனும் மலரில் பொருந்தி அமர்வான். ஆனால், பலருக்கு மனம் மலராக இல்லையே! மனத்தை மணம் பரப்பும் மலராக மலர்வித்துக் கொள்வதே வாழ்க்கை யின் முயற்சி. இந்த முயற்சியே கடவுளை நாடும் வாழ்க்கை. இங்ஙனம், திருவள்ளுவர் கருத்தால் உய்த்துணரும் கடவுளைக் காட்டியவர். உணர மறுப்பார்க்குப் புறச்சான் றாலும், உணர்த்துவான் வேண்டி மழையின் விழுமிய சிறப்பை எடுத்தோதுகின்றார். இளங்கோவடிகளும், 'மாமழை போற்றுதும்' என்று போற்றிப் பரவுவார். இயற்கை, இறை வனைப் படித்துணரும் பெரிய சுவடி என்பர் நல்லறிஞர். இறைவனே பெருமழை பெய்விக்கின்றான்; பெய்து காக்கின் றான் என்பதைத் திருஞானசம்பந்தர் 'பெய்தவன் பெருமழை உலகம் உய்யச் செய்தவன்' என்று பாடியுள்ளார். பெருமா னிடம் பிரியாதிருந்து அருள் செய்யும் அன்னையின் அரு ளென்னப் பொழிகின்றது மழையென்று வாழ்த்துகிறது திருவாசகம். ஆதலால், இறைவனின் அருளிச் செயற் பாடுகளில் வான்மழையே விழுமியது. இம்மழையும் இறை வனைப் போலவே விருப்பு வெறுப்பு இன்மையும், மாறு பாடும் முரண்பாடுமின்றி எங்கணும் பெய்து நலன்

விளைவிப்பதும் உய்த்துணரத்தக்கது. அமிழ்தம் உண்டால் மகிழலாம். நீடு வாழலாம்; அதுபோல மழை வாழ்விக்கும். ஆயினும் மழை பெய்யும்பொழுது, காத்திருந்து ஏற்று வாங்கிக்கொண்டு முழுதும் பயன்படுத்துவோருக்கே மழை வாழ்வளிக்கும். அதுபோல இறைவனின் தண்ணருள் பொழியும். ஆயினும் தண்ணருளை அனுபவித்து இன்புற உயிர்கள் இறைவன் திருவடிகளைத் தொழுதலும், புகழ்தலும், விரும்பிச்சேர்தலும் அவன் நெறியாகிய அருள்நெறி நிற்றலும் அவசியம் என்பதை உணர்த்த வான்மழையை எடுத்துக் காட்டாகக் கொண்டார்.

உயிர்கள் வாழ்வில் பயிலுதல் உய்தற் பொருட்டேயாம். வாழ்வியலுக்கு நுகரும் பொருள்கள் தேவை. அவையின்றி உலகியல் இல்லை. உலகியல் செழுமையாக இல்லையானால் உயிர்கள் ஒழுக்க நெறிகளைச் சார்ந்து வாழ முடியாது. ஒழுங்கு, ஒழுகு, ஒழுகுதல், ஒழுக்கம் என்ற சொல் வளர்ச்சி கருதற்பாலது. இரண்டு கரைகளைத் தொட்டுக்கொண்டு, ஆனால் தொடும் கரைகளைச் சேதப்படுத்தாமல் செவ்விய தாக இடையறாது விழும் வீழ்ச்சியை நீர்வீழ்ச்சி என்கின் றோம். அதுபோல வாழ்வியல் மனிதர்கள் உலகத்தோடு ஒட்டி ஒழுகி உலகத்திற்கு இடையூறு செய்யாமல் நலம் விளைத்தலும்-நலம் பெறுதலும் ஒழுக்கமாகும். இந்த ஒழுக்கம் உலகியலில் நிலைபெற வேண்டுமாயின் பொருள் வளம் செழித்திருந்தால்தான் முடியும். வறுமை நிறைந்த வாழ்க்கையில் மனித உலகம் ஒழுக்க நெறியைக் கடைப் பிடித்தல் அருமையிலும் அருமையேயாம். வானின்று மழை; மழையின் பயனால் மண் மேல் வளம். வளத்தின் பயனாக ஒழுக்கத்திற் சிறந்த வாழ்க்கை என்றே திருவள்ளுவர் நம்புகிறார். இதனை,

*நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்*
*வானின் றமையா தொழுக்கு*

என்றார். நீர் என்பதை நீர்மையென்று விரித்தும் பொருள் கொள்ளலாம். நீர்மையென்றாலும் ஒழுக்கமென்று பொரு

ளாகும். உலகத்திற்கு ஒழுக்கம் இன்றியமையாதது. உலகு ஒழுக்கத்தால் உண்டு. இதனை "உண்டாலம்ம இவ்வுலகம்" என்ற புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது. ஆதலால் உலகு ஒழுக்கத்தால் நடைபெறும். ஒழுக்கம் வான்மழையால் தோன்றும் என்பதறிக.

கடவுளை, ஒழுக்கத்தைத் தாமே உய்த்துணர்வோர் மிகச் சிலரேயாம். தாமே உணர முடியாதவர்களை அவ் வழியிற் செலுத்துவோர் அந்தணர். அந்தணர் என்போர் குலத்தினாலோ, கோலத்தினாலோ, ஓதும் வேதங்களி னாலோ, எண்ணும் மந்திரத்தினாலோ அல்லர். கொண் டொழுகும் செந்தண்மையினாலேயாவர். செந்தண்மை எப்பொழுது தோன்றும்? பொறிகளை அவித்த பிறகே தோன்றும். நெல்லை அவித்தால் நுகர்தற்குச் சற்றே தகுதி பெற்ற அரிசியாகிறது. அரிசியை மீண்டும் அவித்தால் நுகர்தற்கு மிகுதியும் தகுதியாகிற சோறாகிறது. சோற்றோடு சுவை சேர்ந்தால் முழுதும் நுகர்தற்குத் தகுதியாகிறது. அதுபோல "பொறிவாயில் ஐந்தவித்தல்" முதல் வேக்காடு. புலன்களை அவித்தல் இரண்டாம் வேக்காடு. இங்ஙனம் பக்குவம் பெறும் உயிர்கள் திருவருளின்பத்தோடு கூடும் போது அந்தண்மை பெறுகின்றன. அவர்களே வாழ்ந்த வர்கள்; வாழ்பவர்கள். மற்றவர்களெல்லாரும் வாழாது வாழ் வோரே. இங்ஙனம் வாழ்பவர்கள் கடவுளை, அவர்தம் அருளின் மாட்சியை, வாழ்க்கையின் சிறப்பை உலகினர்க்குப் பொதுவாக அறிவுரைகள் மூலமும்-சிறப்பாகத் தம் வாழ்க்கையின் மூலமும் காட்டுபவர்கள். பொறிகளையும் புலன்களையும் அழிப்பது வாழ்க்கையின் தத்துவம் அல்ல. அவற்றின் இயல்பு துய்த்தலும் நுகர்தலுமாகும். அவற்றின் இயல்புக்கு மாறாகச் செலுத்த வேண்டுமென்ற அவசியமு மில்லை! உயிர்கள் தீயதைத் துய்த்துத் தீமை விளைவித்துக் கொள்ளாமல் நல்லதைத் துய்த்து நலம்பெறட்டும் என்பதே இறைவன் திருவுள்ளம். நலத்திலும்கூட குறைநிறை கலந்த

நலமுண்டு. குறையும் நிறையும் கலந்த நலம் அழிவிலின்பத்தைத் தரமுடியாது. முழுநிறை நலமே அழிவிலின்பத்தைத் தரமுடியும்; ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்ப அன்பினைத் தரமுடியும். சோறு உண்டபொழுது பசியைத் தணிப்பது உண்மை. ஆயினும் அது அடியோடு பசியை மாற்றி மீண்டும் பசி தோன்றாமல் இருக்கச் செய்வதில்லை. அதுபோலவே உலகியல் இன்பங்கள் மீண்டும் மீண்டும் பசியை உண்டாக்குவன. திருவருள், இன்பப் பசியை மாற்றுவதோடு துன்பத்தின் தொடர்பையும் மாற்றும். இவ்வுயர்ந்த நெறியிலே நின்று கண்டு, கேட்டு, உண்டு, தேக்கெறிந்து வாழ்க்கையை வென்றவர்களே நீத்தார். அவர்கள் கடவுளைத் தம்மிடத்தே எழுந்தருளச் செய்து கொண்டவர்கள். அவர்கள் அருளிச் செய்யும் மொழிகள் மறைமொழிகள். இறைவன் அவர்களை இடமாகக் கொண்டு ஆடல் பல புரிகின்றான். அவர்கள் நெஞ்சத்தே நின்று உணர்த்தி உலகுக்கு உணர்த்த வைக்கின்றான். "எனதுரை தனதுரையாகக் கொண்டு நீறணிந்து ஏறுகந்து ஏறிய நிமலா" என்று திருமுறை பேசும். இவர்களே, நெறியல்லா நெறிதனை நெறியென நினைந்து வழி தவறி வாழ்க்கையில் இடறி வீழ்ந்து இன்ப துன்பச் சுழல்களில் சிக்கிச் சுழலும் உலகினருக்கு வழித்துணையாவர். இத்தகையோரே ஞானாசிரியர்கள்; ஞானாசிரியர்கள் தாயிற் சிறந்த பரிவுடையோர். தாதியிற் சிறந்த கனிவுடையோர்; நோய் நீக்குவர்; உயிர்க்கும் புகழ் சேர்ப்பர். இத்தகையோரே ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்; நிறைமொழி மாந்தர்; குணமென்னும் குன்றேறி நின்றோராவர்; சித்தத்தால் சிவமேயாவர். இவர்தம் காட்சியும் கனிவிற் சிறந்த சொல்லும் உயிர்க்கு உறுதுணையாக நின்று உறுதி பயப்பனவாகும். இவர்கள் சொல்லுவதே அறம். அறம் புலமையில் தோன்றுவது அன்று. புலன்கள் பழுத்த சான்றோரிடத்தே தோன்றுவது. அறம் ஆரவாரத்தில் தோன்றுவது அன்று; அடக்கத்தில் தோன்றுவது. அறம் மாடமாளிகையில்

தோன்றுவது அன்று. யான் எனது என்பனவற்றின் மரணத்தில் தோன்றுவது. இத்தகு அறமே இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் எழுமையிலும் வாழ்விக்கும். அறம் எம்பெருமானின் இருப்பிடம்; பரமசிவத்தின் ஊர்தி எருது. பரமசிவம் உயர்த்திப் பிடிக்கும் கொள்கைக் கொடி எருதுக் கொடி; பரமசிவம் எழுந்தருளியுள்ள திருக்கோயிலின் முன்றுறைக் காவல் எருதேயாகும்.

எம்பெருமானுக்கும் எருதுக்கும் என்ன இயைபு? எருது உழைப்பின் சின்னம்! பற்றற்ற உழைப்பின் வடிவு! தருமையும் சுமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருந்து அருளும் குருஞான சம்பந்தர் "எருதுக்குத் தனதிச்சை உண்டோ" என்றார். அறத்தின் சின்னமே எருது என்று திருமுறை. பேசுகிறது.

எருதின் உழைப்பு ஓயாத உழைப்பு; பற்றற்ற உழைப்பு; உழைப்பின் பயன் உலகத்திற்கே! தான் துய்க்கும் சிலவாகிய வைக்கோலும் உலகோரால் உண்ண முடியாதது. அதனைத் தின்பதும் தன்னல நாட்டமின்றி மீண்டும் உழைத்துக் கொடுப்பதற்கு வலிமை கருதியேயாம். இத்தகு வாழ்க்கை யியல்புடையோர் நெஞ்சத்தில், இறைவன் எழுந்தருளி யிருப்பான் என்பதே தத்துவம்; இதுவே அறநெறி.

அறத்தின் விளைநிலம் மனமேயாம். ஓங்கி உயர்ந்த கோயில் மதிற்சுவர்களில் செடிகள் முளைக்கின்றன. அதனை வெட்டி அப்புறப்படுத்துதல் சிறந்த திருத்தொண்டு என்று திருநாவுக்கரசர் செய்து காட்டினார். இன்று சிலர் இதனைச் செய்கின்றனர். பலர் செய்வதில்லை. செய்யும் சிலரும் முறை யாகச் செய்வதில்லை. மதிற்சுவரில் முளைத்திருக்கும் செடியை மேலாக வெட்டிவிடுவர். கட்புலனுக்குச் செடிகள் தெரியா. ஆயினும் மதிற்சுவரின் இடுக்குகளில் உள்ள வேர் முன்னிலும் ஊக்கமாக உருத்துப் பருத்து வளரும். அதுபோல

பொறிகளாலாய பழக்க வழக்கங்களைச் சிலர் தூய்மை செய்வர். ஆயினும் புலன்களைப் பக்குவப்படுத்தார்.

சாந்தலிங்க அடிகள் பெருமான் 'வேரினை வெட்டாமல் காட்டினை அழிக்கமுடியாது. அதுபோல ஐம்புலப்பகையை வெல்லாமல் பொறிகளை வெல்ல முடியாது" என்பர். சங்க நூலும், "புலனழுக்கற்ற அந்தணாளன்" என்று பேசும். பாசத்தினை வேரோடு பிடுங்க வேண்டும் என்பதனை, "பாசப் பழிமுதல் பறிப்பார்" என்று சேக்கிழார் கூறுவர். இந்த இயல்பு மனத்தூய்மையினாலேயே முடியும். உடலியக்கத்துக்குக் குருதியும், உயிரியக்கத்திற்கு உணர்வும் அடிப்படை. உடலும், உயிரும் ஒருங்கிணைந்து செயற்படும் போது குருதியில் உணர்வு கலந்து செயற் படுகிறது. குருதிக்குத் தனியே இயல்பில்லை. குருதியோடு கலந்த உணர்வைப் பொருத்ததே இயல்பு. உணர்வுத் தோற்றத்தின் மையமாக இருக்கின்ற மனத்தூய்மையே அறத்திற்கு அடிப்படை இதனைத் திருக்குறள்,

> ***மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்***
> ***ஆகுல நீர பிற***

என்று பேசுகிறது. மனத் தூய்மையே அறம். இஃதின்றி இயற்றும் அறங்கள் அறமாகா. அஃது வாணிகமேயாகும். வாணிகத்திலும் ஊதியம் தரும் வாணிகமன்று; இழப்பினைத் தரும் வாணிகம் என்பர் ஆரவாரத் தன்மையுடையவரை அறநெறியில் வழி நடத்துகின்ற சான்றோர். வாய்ப்புக் கிடைத்துழியெல்லாம் முடிந்த வகையிலெல்லாம் ஓயாது அறத்தினைச் செய்யச் சொல்கிறது குறள். அறம் செய்தற்கு காலம், இடம், பொருள் ஆகிய சூழல்கள் அமையவேண்டு மென்று காத்திருக்கவேண்டியதில்லை. அப்படியென்று பருமனான ஒரு சூழலுமில்லை. பலகற்கள் அதனோடே பல சிறு கற்கள் ஆகிய எல்லாமே சேர்ந்து ஓர் ஒப்பற்ற

மாளிகையாக எழுதல்போல, அறமும் சிலவாகவும், பலவாகவும் பெருகி வளர்ந்து முழுமையாகிறது. இதனை,

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்

என்று திருக்குறள் விளக்குகிறது. இத்திருக்குறளில் "ஓவாதே" என்ற சொல் உணரத்தக்க ஒரு சொல். உலகத்தின் இயக்கம் ஓயாது இயங்குகிறது. அதனாலன்றோ உயிர்கள் வாழ முடிகிறது! உலகம் என்ற பேரடுப்பில் இறைவனாகிய சமையற்காரன் ஓயாது ஒழியாது சமைத்துச் சுவை குன்றாத – சுவை பழுத்த காய்களை, கனிகளைத் தரும் அற்புதத்தை நினைமின்! ஆதலால் ஓயாது அறம் செய்க! எப்பொழுதும் செய்க! புலன்களால் செய்க! பொறிகளால் செய்க! இதுவே வாழ்க்கை முறை!

ஜான் வெல்ஸிலி என்ற அறிஞன்,

"உன்னால் முடிந்த எல்லா நன்மைகளையும் செய்.
உன்னால் முடிந்த எல்லா முறைகளிலும் செய்.
உன்னால் முடிந்த எல்லா வழிகளிலும் செய்.
உன்னால் முடிந்த எல்லா இடங்களிலும் செய்.
உன்னால் முடிந்த எல்லாக் காலங்களிலும் செய்.
உன்னால் எவ்வளவு காலம் செய்ய முடியுமோ
அவ்வளவு காலம் செய்"

என்று கூறினான். இதனையேதான் சுருக்கமாக "ஒல்லும் வகையால்" என்றும், "செல்லும் வாய், எல்லாம்" என்றும், வள்ளுவம் கூறுகிறது. கடவுளை நினைந்து அவனது அருளாகிய மழையில் அகமும் புறமும் நனைந்து அவனருள் பெற்றோர் வழிநின்று, அவருணர்த்தும் அறம் பயிற்றுதல் – வாழ்க்கை நெறி என்று வள்ளுவம் காட்டும் நெறியில் நின்று அந்நெறியையே வாழ்வின் வழித்துணையாய்க் கொண்டு வாழ்வோம்.

# அருட் செல்வம்

வித்து முளையாகிறது; முளை செடியாகிறது; செடி மரமாகிறது; மரம் பூக்கிறது; பூ காயாகிறது; காய் கனியாகிறது. இது போன்றே மனித வாழ்க்கையும் வளர்ந்து கனியாகும் வரையில் பல்வேறு பொருட்களின் தொடர்பும், உறவும் தேவை. கனிந்த பிறகு எந்த ஒன்றன் தொடர்பும் கனிக்குத் தேவையில்லை. கனி நிலைக்கு முன்பு சுவையிலும் தர வேறுபாடுகள் உண்டு. கனி நிலையில் சுவை வேறுபாடில்லை. நிறை நலமிக்க சுவையுடையதாகிறது. இறைவனை, "பழத் திடைச் சுவையொப்பாய்" என்று அப்பரடிகள் பாராட்டு கிறார்.

"அது பழச்சுவையென" என்று மணிமொழி பேசுகிறது. அருள் பழுத்த பழச்சுவையென மறைகள் போற்றும். திருக்குறள், கருவுயிர்த்த நாள் முதல் தனி மனிதனைத் தொடர்ந்து வளர்த்து, அவனை அன்பு நெறி பயில, குடும்பத்தில் சேர்ப்பித்து, அன்புநெறியில் பயிற்றுவித்துப் பின் மேலதாகிய அருளியல் வாழ்க்கைக்கு உயர்த்துகிறது. உலகில் மனிதர்களுக்குச் செல்வங்கள் பலப்பல வேண்டும். ஆயினும் அருட்செல்வமே தலையாய செல்வம்.

**அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள**

என்று குறள் கூறுகிறது.

"செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" என்றும் குறள் கூறுகிறதே என்ற வினா எழலாம். ஞானாசிரியன் செவி வழியாக உபதேசித்தருளிய திருமந்திரச் செல்வத்தால் அருட் செல்வம் விளைவதால், உபசார வழக்கமாகச் செவிச் செல்வத்தைச் சிறப்பித்தார். அன்பின் முதிர்ச்சியில் அருள்

தோன்றுகிறது. "அருளென்னும் அன்பீன்குழவி" என்று குறள் கூறுகிறது.

உடலுயிர் வாழ்க்கை இடையீடின்றி நடைபெறப் பொருள் தேவை. அதாவது, உயிர் ஊர்ந்து செல்லும் உடலாகிய எந்திரத்திற்கு எரிபொருளாக, காருக்கு பெட்ரோல் போல, துய்க்கும் பொருள்களாகிய காய்களும், கனிகளும் தேவை. அதுபோல உயிர்க்கு அருள் தேவை.

*அருளில்லார்க் கவ்வுலக மில்லை; பொருளில்லார்க்கு*
*இவ்வுலகும் இல்லாகி யாங்கு*

என்று குறள் கூறுகிறது. அருள், அன்பின் முதிர்ச்சியில் தோன்றுகிறது. எந்த மொழியிலும் எந்தச் சமயத்திலும் அருள் நெறியே நெறியென உணர்த்தப்படுகிறது. உலகியலில் இருள் சூழ்ந்த நிலை துன்பத்தைத் தருகிறது. இருள் நிலையில் மேடும் பள்ளமும் தெரிவதில்லை. பழுதையும் பாம்பும் தெரிவ தில்லை. எங்கும் செறிந்த இருள். இந்நிலையில் இருள் கடிந்து எழுகின்றது ஞாயிறு. ஞாயிறு எழுந்தவுடன் இருள் அகலு கிறது. உயிர்களுக்கு ஆன்ற அறிவும் ஆள்வினையும் தோன்று கின்றன. அதுபோலவே, அருட்சார்பு அற்றவர்கள் மனத்தில் இருட்செறிவால் நன்மையும் தீமையும் தெரிவ தில்லை. அருளியலில் ஈடுபட்டவுடன் அறியாமை அகலுகிறது; மயக்கம் தெளிகிறது. தெளிவு பிறக்கிறது; தெளிவினுள் சிவம் பிறக்கிறது. அருள் தன்மையால் செடிகளையும் மரங் களையும்- பேணுபவன் - விலங்குகளைப் பேணுபவன் - பக்கத்தில் வாழும் மனிதர்களைப் பேணுபவன் - தன்னையும் பாதுகாத்துக் கொள்கிறான். ஆதலால், அல்லல் அவனை அணுகுவதில்லை. அவன் தன்னுயிர்க்கு அஞ்ச வேண்டிய தில்லை. எல்லார்க்கும் தன்னுயிர் அருமையானதே. அதனாலன்றோ, அப்பர் அடிகளும் 'என்னினும் இனியன்' என்று இறைவனைக் குறிப்பிட்டார். ஆனால், பலர்

தன்னுயிரைக் காதலிப்பர். தன் உயிர் நலன் கருதிப் பிற உயிர்களுக்குக் கேடு சூழ்வர். அந்தோ, அறியாமை!

உயிர் வாழ்க்கை இயல்பிலேயே தனித்ததல்ல. அஃதொரு கூட்டு வாழ்க்கை. கூட்டு வாழ்க்கையில் துன்பம் ஒருவருக்கு மட்டும் வருமாறென்ன? உயிர் வானின்றிழியும் நீர்த் துளியைப் போல்வது. நீரும் வளியும் சார்ந்த சார்பின் காரணமாக வண்ணமும், சுவையும், மணமும் பெறுதல் இயற்கை. அதுபோல, உயிரும் சார்பின் வழி, இயல்புகளைப் பெறும்.

உயிர் யாதொன்றையும் சாராமல் இருக்க முடியாது. ஆதலால், உயிர் தனது சார்பிற்குரியனவாகிய பிற உயிர் களையும் அருள்நலம் செறிந்தவையாகத் தான் காணுந் தொறும் துய்க்குந்தொறும் துய்ப்பதற்கேற்றவாறு அருள்நலச் செறிவுடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

வீட்டினுள் வெப்பம் தாக்காதிருக்க வீட்டிற்கு வெளியில் ஒரு தாழ்வாரம் தேவை. அப்போது வெளியில் உலவும் வெப்பக் காற்று தாழ்வாரத் தண்ணிழலில் குளிர்ந்து வீட்டிற்குள் இருப்பவரைத் தண்ணென்ற தன்மையினால் வாழ்விக்கும். அதுபோல உயிருக்குத் தம்மொடு தொடர் புடைய பிறவுயிர்களின் அருளார்ந்த சூழலே வாழ்விக்கும்.

தெருக்கோடியிலுள்ள வீடு தீப்பற்றி எரிந்தால், அந் நெருப்பினை மற்ற வீடுகளுக்குப் பரவாமல் அணைப்பதே எல்லாருக்கும் பாதுகாப்பு. அங்ஙனம் செய்யாமல் எவனாவது ஒருவன் தன் வீட்டின்மீது மட்டும் தண்ணீர் அள்ளி ஊற்றுவானானால் யாது பயன்? ஊற்றிய முயற்சியும் பாழாகி, அவனும் அவன் வீடும் அழிவது திண்ணம்.

ஆதலால், எவன் ஒருவன் தன்னுயிர்க்குத் துன்பம் வரக்கூடாதென்று கருதித் தன்னுயிரைக் காதலிக்கின்றானோ, அவன் செய்ய வேண்டியது தன்னுயிர்க்காதலல்ல; மன்னுயிர்க் காதலேயாம்.

செடி கொடிகளை அன்பு காட்டி வளர்த்தால் உயிர் வாழ்க்கைக்குரிய காய்களும், கனிகளும் கிடைக்கும். குடம் குடமாகப் பால் கொடுக்கும் பசுவினுக்கு அன்பு காட்டினால் உயிர் வாழ்க்கைக்குரிய பாலமுதம் கிடைக்கும். உயிர்க்கு இன்றியமையாத தேவையான இன்பக் கிளுகிளுப்பாகிய மகிழ்ச்சியை மற்ற மனிதர்களிடத்தில் காட்டும் இனிய முகத்தாலும், கூறும் இனிய சொற்களாலும் திரும்பப் பெறலாம். ஆதலால் தன்னுயிரைக் காதலிப்பவன் செய்யக் கூடிய அறிவுடைய செயல், அருள் உள்ளம் கொண்டு பிற உயிர்களைப் பேணுதலேயாகும்.

*மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க் கில்லென்ப*
*தன்னுயிர் அஞ்சும் வினை*

என்று திருக்குறள் ஓதுகிறது.

இயல்பாகவே உலகியல், அருள் என்ற அச்சிலே சுழன்று நடைபெறுகிறது. "ஒன்று எல்லாவற்றுக்காகவும், எல்லாம் ஒன்றுக்காகவும்" என்ற உயரிய தத்துவமே உலகியல் தத்துவம். விண்ணினின்றிழியும் நீர்த்துளி! காய்கதிர்ச் செல்வனின் கதிரொளி! தண்நிலவு! இலையால், மலரால், காயால், கனியால் வாழ்விக்கும் தாவர இனங்கள்! என்னே அருட்காட்சி! அருளின் மாட்சி! எங்கும் அருட்கூத்து! இன்பக் கூத்து! ஆனந்தக் களிப்பு! இதனை உணர்ந்தவர்கள் அருள் நாட்டம் கொள்வர்; அல்லவை செய்யார்.

இன்புறுத்தும் இயல்பில்லாதவர்க்குத் துன்புறுத்த உரிமை ஏது? ஆக்கும் திறனற்றோர் அழிக்கலாமோ? துன்புறுத்துபவர் துன்பத்திற்கு ஆட்படுவர்; நல்வினை இழப்பர்; கொடுவினை மேற்கொள்வர்.

நெருப்புப் பற்றி எரிகின்ற உடையினால் மானத்தை மறைத்தல் முடியுமோ? நஞ்சினால் செய்த பாவை நயப்புறும் இன்பம் தருமோ? நுனி மரத்தில் ஏறி, அடி மரத்தை

வெட்டுதல் வாழும் வழியோ? அதுபோல உயிர்களுக்கு அல்லல் செய்தார் வாழுதல் அரிது என்று திருக்குறள் பேசுகிறது.

*பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி*
*அல்லவை செய்தொழுகு வார்*

என்பது குறள்.

ஈண்டுப் பொருள் என்பது வாழ்க்கையின் பயன் என்ற பொருளில் உய்த்துணர்வது அதிகப் பயனைத் தரும். மாணிக்கவாசகர் தமது பாட்டின் பொருள் இறைவனே என்றார். வாழ்க்கையின் பயன் இறையருள் பெறுதலேயாம். இதனை அப்பர் "வைத்த பொருள் நமக்கு ஆம்" என்று அருளிச் செய்துள்ளார். வாழ்க்கையின் குறிக்கோளும் பயனு மாகிய அருளை, அருள்வழிப் பெறுதலையே "கொண்டும் கொடுத்தும் பெறுதல்" என்று திருமுறை கூறும்.

அருளை மறந்து, தீமையும் செய்து ஒழுகுதல் அந்தோ பரிதாபம்! குளிக்கப் போனவன் குளிப்பதை மறந்து அங்குள்ள சேற்றைப் பூசிக்கொண்டதைப் போல இருக்கிறது. அதனாலன்றோ, சங்கச் சான்றோர் "நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்" என்று அறிவுறுத்தினர்! இளங்கோவடிகளும் "அல்லவை கடிமின்" என்று ஓதினார்.

அருள் உணர்விற் சிறந்து வாழ்வோருக்கு அல்லல் இல்லை. இதற்குச் சான்று, இந்த உலகில் ஏராளம் உண்டு. மணமிக்க மலர்களைத் தரும் செடிகளைப் பலர் விரும்பி வளர்க்கின்றனர். அன்றி அழிப்பார் யார்? இனிய காய்களைக் கனிகளைத் தரும் மரங்களை வெட்டியழிப்பார் யார்? ஒருவருமில்லை. அப்படியே யாராவது இருந்தாலும் உலகம் அவர்களை மானிடராக ஒத்துக் கொள்வதில்லை. அவர்களை உலகம் கீழான கயவர்கள் என்று ஒதுக்குகிறது.

அதுபோலவே, அருள் உணர்வு உடையவர்கள் வாழ்வார்கள்; வாழ்விக்கப் பெறுவார்கள். காரணம், அவர்கள் வாழ்வில் ஞாலம் வாழ்கிறது.

அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி

என்பது குறள். நினைத்தொறும் இன்பம் தரும் திருக்குறள் இது.

வாழ்க்கையின் அகத்திலும் புறத்திலும் அருளாட்சி உடையோர் அல்லற்பட மாட்டார்கள். அவர்களை அவலம் அடையாது; இஃது உண்மை. முக்காலும் உண்மையென்று திருவள்ளுவர் சாதிக்கின்றார். இந்த உண்மைக்குத் திருவள்ளுவர் காட்டும் சாட்சி எது? காற்று வழங்கும் இந்தப் பெரிய உலகம் சாட்சி என்கிறார்.

இந்த உலகத்தில் வலிமையுடையார் - வலிமையற்றோர் அனுபவத்தின் இடையூறாக நிலத்தை அடைத்து எடுத்துக் கொள்ளுதல் உண்டு. தண்ணீரை அணைகட்டித் தேக்கித் தடுப்பது உண்டு. கதிரொளியையும் - தண்நிலவையும் தடை செய்ய அடைத்துச் சிறைப்படுத்தல் உண்டு. பார்த்திருக் கிறோம்; கேட்டிருக்கிறோம். ஆனால், காற்றை யாரும் அப்படித் தடை செய்ய முடியாது.

காற்று, வேலிகளுக்கும் சுவர்களுக்கும் அப்பாற்பட்டது. ஆண்டான் - அடிமை வேறுபாடுகளைக் கடந்தது. எல்லா ருக்கும் காற்று; எப்பொழுதும் காற்று! தேடிப் பெறுவதன்று; வலிய வந்து துணை செய்கிறது. முயற்சி செய்து காற்றுக் குடிப்பதில்லை. இயல்பில் நிகழ்கிறது. இதற்குக் காற்று வழங்கும் நிலவுலகம் சாட்சி. மனிதர்களின் கொடிய கரங்கள் இன்னமும் காற்றைத் தடை செய்யவில்லை. களங்கப்படுத்தவு மில்லை. அதுபோல, அருளாள்வார் வாழ்வித்து வாழ்வர்;

மகிழ்வித்து மகிழ்வர். அருளாட்சிக்கு ஊனாட்சித் தன்மை குறைய வேண்டும்.

"பூந்துருத்தி பூந்துருத்தி யென்பீராகில், பொல்லாப் புலால் துருத்தி போக்கலாமே" என்பது அப்பர்வாக்கு. "ஊன் பொதி சுவர்" என்பது ஆன்றோர் வாக்கு. "ஊனினைப் பெருக்கி உள்ளொளி இழந்தேனே" என்பது ஆரூரர் வாக்கு. இதனால் ஊனுடலின் தன்மையை - பயனைக் குறைத்து மதிப்பிட்டதாகக் கருதக்கூடாது. ஊனுடல், உயிர் நலத்துக் கேற்றவாறு அமைய வேண்டும்.

உடல் பெருத்தால் உயிரின் ஆற்றல் முழுதும் ஊனுடலுக்கு இரை தேடுவதிலேயே கழியும். அதிலும் பயன்படும் ஊனுடல் பகுதிக்கு மட்டுமின்றி வெற்றுச் சதைகளுக்கு இரைதேடிப் போட்டு எய்த்துச் சாகவேண்டிய அவசியம் ஏற்படும். உயிர்க்குத் தேவையான ஊனுடல் போற்றுதற்கு எளிய சைவ உணவு போதுமானது.

எளிய சைவ உணவு - அதாவது காய்களும் கனிகளும் ஊனுடலை வளர்க்கப் பயன்படுவதோடன்றி நல்லுணர் விற்கும் துணை செய்கிறது. கதறக் கதறக் கழுத்தை அறுத்து இரத்தம் சொட்ட இரக்கமின்றிப் புலாலைச் சுவைத்து உண்பவன் எங்ஙனம் அருளாட்சியுடையவனாக இருக்க முடியும்? என்று வினவுகிறார் திருவள்ளுவர்.

*தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்*

என்பது திருவள்ளுவர் வினா.

மனிதன் சுவைத்துத் தின்ற ஊனை, அதற்காக ஊனுடலினின்றும் பிரித்த உயிரைத் திருப்பித்தர முடியாது. இங்ஙனம் திருப்பித் தரமுடியாத நிலையிலுள்ள ஆற்றல் அற்ற மனிதன் உயிர் பிரித்து ஊனைத் தின்பது பாவம். அவனை நரகம் ஏற்றுக் கொள்ளும். எப்படி அவன் தின்ற ஊனைத்

திருப்பித் தரமுடியாதோ, அதுபோல நரகமும் அவனைத் திருப்பிவிடாது என்பதனை,

*உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண*
*அண்ணாத்தல் செய்யா தளறு*

என்பர் திருவள்ளுவர். அதாவது மீளா நரகத்தில் ஆள்வர். அதனாலன்றோ இளங்கோவடிகளும் "ஊனூண் துறமின், உயிர்க்கொலை நீங்குமின்" என்றார். சிலர், தாம் கொல்ல மாட்டார்கள்; கடையில் விற்கும் புலாலை வாங்கி உண்பர். இவர்கள் கருத்து கொன்றவனுக்கே பாவம். தமக்கு இல்லை என்பதாகும். பாபம், காரியம் காரணம் இரண்டையும் பற்றிப் படரும். கொலை செய்பவன் ஏன் செய்கிறான்? புலால் உண்பவரின் விருப்பத்தை அறிந்தே கொல்லுகிறான். புலால் உண்பவர் இல்லையானால், கொல்பவரும் இல்லை. இன்னும் தெளிவாகச் சொன்னால்; புலால் உண்பவர்களே புலாலுண்ணும் குற்றத்தைச் செய்வதோடன்றிப் பிறரைத் தம்முடைய புலால் இச்சையின்மூலம் கொலைக்குற்றம் செய்யத்தூண்டுகின்றனர். கொலை செய்பவரைவிடக் கொலைக்குத் தூண்டுபவரே கொடியர் என்று திருக்குறள் வன்மையாக எடுத்துக் கூறுகிறது.

*தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்*
*விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில்*

என்பது திருக்குறள்.

இறைவனை நினைந்து ஆயிரம் வேள்விகள் செய்வதை விட ஒன்றன் உயிரைச் செகுத்து உண்ணாமை மேலாய அறம் என்று வள்ளுவம் போதிக்கிறது.

*அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று*

என்பது திருக்குறள்.

பிறிதோரிடத்தும் "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்று வலியுறுத்துகிறது. தாயுமான அடிகளும், "கொல்லா விரதம் குவலயத்தில் ஓங்குக" என்று கூறினார். வள்ளல் இராமலிங்க அடிகள் வாடிய பயிரின் வாட்டமெல்லாம் கண்டு வாடினார். உயிர் பழக்கத்தின் வழிப்பட்டது. அது சில பொழுது துன்பத்தைப் பார்த்துப் பழகிவிட்டால் அதற்குத் துன்பத்தின் கொடுமை வழக்கமாகிவிடும். இங்ஙனம் வழக்கப் பட்டோர் சிலர் பிறர் துன்பத்திலேயே மகிழ்வதையும் வாழ்வதையும் பார்க்கிறோம்.

"ஈசனுக்கு அன்பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார்" என்பது திருமந்திரம். ஆதலால் உயிர்த்துன்பம் கருதிப் புலால் உண்ணலைத் தவிர்த்திடுக! சுவையினால் மட்டுமின்றிப் பயனாலும் சிறந்த காய்களைக் கனிகளை உண்க.

காய்களும் கனிகளும் நமக்கு உணவின் பயனைத் தருவதோடன்றி அருளாட்சிக்கும் அரண் செய்கிறது. எல்லா உயிர்களும் ஈசன் தங்கியிருக்கும் திருவுடல் ஆதலால் அனைத்துயிர் போற்றும் தவம் மேற்கொள்க!

உயிர்களின் நலம் பேணுதலே சிறந்த வழிபாடு. அதுவே அருளின் மாட்சியும் ஆட்சியுமாகும். திருக்குறளின் அருள் நெறி போற்றுமின்! பேணுமின்!

## மனக் கட்டுப்பாடு

**தா**யுமான அடிகள், "எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் யானெனும் அகந்தைதான் எள்ளளவும் மாறவில்லை" என்று இரங்குகிறார்கள். "மனம் அடங்கக் கற்றிலேன்" என்று அருளாசிரியர் புலம்புகிறார். உலகின் எல்லாப் பயிற்சிகளையும்விட மனத்தையடக்கும் பயிற்சியே சிறந்தது. உயிர் வாழ்க்கையின் பயன், "அதனை மேலானதாக மாற்றுவதே"யாகும். இதனை "இது அதுவாதல்" என்பர்.

இரும்பை உருக்கினால் அது எஃகு ஆகும். அதுபோலப் புன்புலால் வாழ்க்கையை அருளுணர்வு கொண்டு உருக்கினால் அது தவமாகும். நிலம் உழுதலின் மூலம் நெகிழ்கிறது. அவ்வழி பயனுடையதாகிறது. தங்கத்தை உருக்கினால் ஒளியுடையதாகிறது; அணிகலன் செய்யப் படுகின்றது. இரும்பை உருக்கினால் எஃகு ஆகிறது; உறுதிப்படுகிறது. உறுதியைத் தருகிறது. நெகிழ்ச்சியும் உருக்கமும் உறுதியும் உள்ள இடத்தில் இறைவன் விளங்கித் தோன்றுகின்றான்.

தமக்கு வந்துற்ற நோயினைக் கண்டு பதறாமல் ஏற்று மகிழ்வுடன் அனுபவித்தல், பிற உயிர்களுக்கு எந்த வகையாலும் துன்பம் செய்யாதிருத்தல் ஆகியவை தவத்தின் அடையாளம்.

*உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற் குரு*

என்பது குறள். உற்றநோய் நோன்றல் மனத்தால் செய்யும் தவம். உயிர்க்குறுகண் செய்யாமை உடலால் செய்யும் தவம். அகமும் புறமும் ஒத்த தவமே சிறந்த தவம். எல்லாக் கதவு களையும் அடைத்தாலே பொருட் பாதுகாப்பு உண்டு. ஒரு கதவினை அடைத்துப் பிறிதொன்றை அடைக்காது விடின், பொருட் பாதுகாப்பு இல்லை. இஃது யாவரும் அறிந்த உண்மை. இதே போல் பொறிகள் ஐந்து புலன்கள் ஐந்து ஆகிய அனைத்தையும் அடைத்து ஒன்றியிருந்து உத்தமன் திருவடிகளை நினைந்தாலொழியத் தவம் கை கூடுவதில்லை.

துன்பம் உயிரைச் சுடுவதில்லை. உயிரைப் பற்றி யிருக்கின்ற குற்றத்தினையே சுடும். மருத்துவர் கட்டியினை அறுப்பர்; கையினை அறுப்பதில்லை. திருவண்ணாமலை ஆதீன முதல்வர் தவஞானச் செல்வர்மீது "அடியார் தினம் தினம் செய்த பிழை பரியாது அறுத்துச் சுடுவதெல்லாம்

அவர் பாசத்தையே" என்று அருட்டிரு குமாரசாமி முனிவர் பாடிய பாடல் உணரத்தக்கது. ஆதலால், துன்பத்திற்கு அஞ்சித் தவம் செய்ய முடியாது. துன்பம் பொறிகளின் வழி வந்தாலும் சரி, புலன்களின் வழி வந்தாலும் சரி, அல்லது வேறு எவ்வழி வந்தாலும் சரி, அந்தத் துன்பத்தினைத் தாங்கிக் கொண்டு தடுமாறாமல் நோற்பதே தவம். அங்ஙனம் தவம் செய்வார்மாட்டு, திருவருள் மேலோங்கி வெளிப்பட்டு நிற்கும். இதனையே அப்பரடிகள் "உறவுக்கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால், முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே" என்றார்.

உடலையும் உள்ளத்தையும் சில கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தித் தன்னை மேலான இயல்புடையவனாக மாற்றிக்கொள்ள முயல்வதே தவம். இத்தகு தவத்தைப் புரிந்திலனேயென்று எண்ணி ஏங்குகின்றார் மாணிக்க வாசகர்.

தவமே புரிந்திலன் தண்மல
 ரிட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை
 யேன்உனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி
 லேன்நின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி
 யேற்கெம் பரம்பரனே

என்பது திருவாசகம். களத்துமேட்டில் நெல்லைத் தூற்று பவர்கள் நெல்லின் மீதுள்ள கருணை காரணமாக நெல்லைத் தூற்றுவதில்லை. தம்முடைய பயன் கருதியே தூற்று கிறார்கள். அதுபோலத் தவம் செய்தால், செய்பவருக்குப் பெருமையே தவிர, தவத்திற்குப் பெருமையன்று. தவத்தினால் கடவுளுக்குப் பயனில்லை. மனிதனுக்கே பயன். "பொன்னால் பொன்னைப் பெற்றவருக்கே பயனுண்டு.

ஆனால் பொன்னைப் பெற்றவரால் பொன்னுக்கு யாது பயன்?" என்று விவரிப்பர் சிவப்பிரகாச சுவாமிகள். ஆதலால் திருவள்ளுவர், "தவம் செய்வார் தம் கருமம் செய்வார்" என்று கூறுகின்றார். தவம் செய்வதால், உயிர் துன்பத்தினின்றும் நீங்குகிறது. இன்ப அன்பில் திளைத்து மகிழ்கிறது.

சிலபொழுது தவம் செய்வோர் ஆரவாரத்திற்காகச் செய்வர். புதரும் புற்றும் மூடி மறைக்கும் வரையில் ஊண் உறக்கமின்றித் தவம் செய்வர். ஆயினும், "நான் தவம் செய்கிறேன்" என்ற உணர்வோடு செய்வர். அவர்களுடைய தவம் பயனற்றது. "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா" என்பது போலப் பயனற்றுப் போய்விடும். சிலர் தவத்தில் சிறிது வளர்ந்தவுடன் சித்துகள் விளையாடுவர். அதனாலும் தவம் அழியும்; அவம் பெருகும். தவத்திற்கு 'நான்' என்ற அகப்பற்றும், 'எனது' என்ற புறப்பற்றும் அறவே நீங்கவேண்டும். இவையிரண்டும் அழியாதவரையில் தவத்தினால் பயனில்லை. தொண்ணூற்று ஒன்பது கல் திறமையாக ஓடி நூறாவது கல்லில் விழுந்துவிட்டால் ஓடி வெற்றி பெற்றதாகக் கருதமுடியாது. புராணங்களில் வருகிற அசுரர்கள் அனைவருமே சிறந்த தவம் செய்தவர்கள். இராவணன், சூரபதுமன், இரணியன் முதலாயினோர் சிறந்த தவம் பயிற்றினும் 'நான்' என்னும் செருக்கினால் நட்டமடைந்தனர்; நடுக்குற்றனர்; தவத்தை இழந்தனர்; தண்டனைக்கு ஆளாயினர். ஆதலால் தவத்தில் பயன்,

*தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய*
*மன்னுயிர் எல்லாம் தொழும்*

என்று திருக்குறள் பேசுகிறது. தன்னுயிரை-கண்டதை இச்சித்துத் துன்பத்திற்கு ஆளாக்காமல் தன்னுரிமையாக்கிக் கொண்டவரை ஏனைய உயிர்கள் தொழும். தொழுதற்குக் காரணம் சார்பினாலே தானும் நலம் பெறலாம் என்பதேயாகும். தானே ஆற்றினில் நீந்த முடியாதவர் படகின்

துணைகொண்டு நீந்திக் கரை சேர்தலைப்போலத் தவத்திற் சிறந்தாரைப் புணையாகக் கொண்டு மற்றவரும் கரையேற லாம். அப்பரடிகளைப் புணையாகக் கொண்டு அப்பூதி யடிகள் உய்தி பெற்றமை உணரத்தக்கது. மேலும் தன்னுயிர் தானறப் பெற்றவர் என்பதற்கு 'நான் என்ற சுட்டுணர்வு அழிதல்' என்று பொருள் கொள்ளுதலும் சிறப்பாகும். நான் என்ற சுட்டுணர்வு அழிந்தவர்கள் உலகத்தை வாழ்விக்கும் உத்தமர்கள். அவர்களால் உலக உயிர்கள் இன்பநலம் பெறும். ஒரு படகின் வழி, பலர் கரையேறுதலைப்போல, ஒரு தவஞானத் தலைவரின் மூலம் கோடானு கோடி உயிர்கள் உய்தி பெறுகின்றன.

மனிதன் தன்னுடைய அகப்பற்று, புறப்பற்றுகளை ஒவ்வொன்றாக விட்டொழிக்க வேண்டும். அவற்றை விட்டொழிப்பது என்றால், முற்றிலும் விட்டு விலகுவதல்ல. தவத்தின் தொடக்கத்தில் இது இயலக்கூடியதுமன்று. ஆதலால் பொருள்களை வேணவா உணர்வுடனும், விகற்ப உணர்வுடனும் நோக்காதிருத்தல்; தேடாதிருத்தல் ஆகிய பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். பின்பு, தான் துய்க்கும் இன்பத்தை மற்றவர்களும் துய்க்கவேண்டும் என்று கருதவேண்டும். மற்றவர்கள் துய்த்து மகிழ்வதைப் பார்த்து மகிழப் பழகிக்கொள்ள வேண்டும். அதன் பின்பு பிறர் மகிழ்வுக்காகத் தன்னுடைய மகிழ்வை விட்டுக்கொடுக்கப் பழகுதல் வேண்டும். இத்தகு பழக்கம் வளரவும், உறுதி பெறவும் அடிப்படையான நம்பிக்கை ஒன்று தேவை. அதாவது எல்லாம் வல்ல இறைவன் எல்லா உயிர்களிடத்தும் தங்கியிருக்கிறான். அந்த உயிர்கள் மகிழும் பொழுது இறைவனும் மகிழ்கின்றான். அந்த உயிர்கள் அழும்பொழுது இறைவனும் அழுகின்றான் என்ற அறிவும் உணர்வும் தேவை. இத்தத்துவத்தினை விளக்க அன்றோ தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டில், தமிழ் வையை நதிக்கரையில் எம்பெருமான் முதுகில் விழுந்த அடி எல்லார் முதுகிலும்

விழுந்தது! அதனால் எல்லா உயிர்களிடத்தும் இறைவன் தங்கியிருக்கிறான் என்பது போந்த உண்மையன்றோ!

இந்த உலகில் இலர் பலராக இருக்கின்றனர். அதாவது பலர் ஏழையராக இருக்கின்றனர். உளர் சிலரேயாம். இக் கொடுமை ஏன், என்று திருக்குறள் ஆராய்கிறது. ஆராய்ந்து முடிவும் சொல்கிறது. தனக்கென முயலாவது, பிறருக்கென முயலுநர் இருப்பதால் உலகம் நிலைபெற்று நடந்து கொண்டிருக்கிறது என்று புறநானூறு கூறுகிறது.

*இல்லென்று இரப்போர்க்கு இயைவது கரத்தல்*
*வல்லா நெஞ்சம் நம்மினும் பொருளே*
*காதலர் காத்தல்*

என்று அகநானூறு கூறுகிறது. தவம் செய்பவர்கள் இறை வனின் தண்ணருளை வாங்கித் தருபவர்கள்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவர்கள்; மகவெனப் பல்லு யிரையும் ஒக்கப் பார்த்து ஒழுகுபவர்கள்; அகத்தே ஒத்த உரிமையுணர்வு உடையவர்கள். இத்தகு நலமுடையோர் பெருகினால், இலர் சிலராவர். உளர் பலராவர். இதனை,

*இலர்பல ராகிய காரணம் நோற்பார்*
*சிலர்பலர் நோலா தவர்*

என்ற திருக்குறளால் அறியலாம். இந்தக் குறளுக்கு வேறு வகையாலும் பொருள் கருதி மகிழலாம். அதாவது தவம் செய்தல் செல்வம்.

*செல்வ நெடுமாடத் தில்லைநகர் மன்னும்*
*செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்*

என்று திருஞானசம்பந்தர் ஓதுகின்றார். வறுமை என்பது, செல்வம் இன்மையன்று. எவ்வளவு இருப்பினும் "போதாது, போதாது" என்று மேலும் தேடுபவர்கள் உண்டு. அவர்களும்

வறியவர்களேயாம். அதனாலன்றோ "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" என்று சான்றோர் அறிவுறுத்தினர்.

தவம் செய்வோருக்கு நிறைநலம் மிக்க ஒழுக்கம் வேண்டும். சிலர் பழக்கத்தினால் புறத்தேயுள்ள ஐம் பூதங்கள்-அதாவது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் இவற்றில் உடலைப் பழக்கி அவற்றினாலாய துன்பத்தினில் வெற்றி பெறுவர். அதாவது நீரில் பலகால் தோய்தல், நிலத்தில் கிடத்தல், நெருப்பில் நடத்தல், விண்வழிச் செல்லுதல், வளியின் திசையினை மாற்றுதல் ஆகிய சாதனைகளில் வெற்றி பெறுவர். ஆயினும் அகத்துறுப்புகளில் ஒட்டியிருக்கும் ஆசை நீங்காது வாழ்வர். இவர்தம் எளிய நிலையினைப் பார்த்து அவர்தம்முள்ளே ஒன்றித்துக் கலந்து நிற்கும் ஐம்பூதங்கள் நகைக்குமாம் என்பதனை,

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்

என்றார் திருவள்ளுவர். தவத்திற்குப் பொதுவாக மக்க ளிடத்தில் நல்ல வரவேற்பு உண்டு. ஆதலால், முறையாக வாழும் திறனற்றவர்கள் உலகியல் வேட்கைகளை நிறை வேற்றிக் கொள்வதற்காகத் தவவேடத்தினை மேற்கொள்வர். இதனைத் திருவள்ளுவர் மிகவும் கடுமையாகக் கடிந்துரைக் கின்றார்.

பசு, புலித்தோலைப் போர்த்துக்கொண்டு மேய்தல் போன்றது, தவவேடம் பூண்டோர் பாமர மக்களை வஞ்சித்துக் காணிக்கை என்ற பெயரால் காசுகளைப் பறிப்பது. புதரில் மறைந்து நின்று ஒன்றுமறியாத புள்ளினை வீழ்த்துகிறான் வேடன். அதுபோலக் கயவன் தவவேடத்தில் மறைந்து ஒன்றுமறியாத பாமரமக்களைத் தன் வலையில் வீழ்த்துகின்றான் என்று திருவள்ளுவர் கண்டிக்கிறார். பற்றற்றார் போலக் காட்சியளித்து, பற்று நீங்காதவர்கள்

பாவம் செய்கிறார்கள். அப்பாவத்தால் பின்னை இரங்கிக் கவலைப்படுவதற்கு உரியராகின்றனர் என்பதை,

*பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று*
*ஏதம் பலவும் தரும்*

என்று திருக்குறள் கூறுகிறது. புறத்துறவு எளிதில் கை கூடக் கூடிய ஒன்று. அதாவது புறத்துறவு என்பது கோலத்தினைக் காட்டுவது. சில திங்கள் வாளா வாழ்ந்தாலே உடல், துறவுக் கோலத்தையடையும். அவர்கள் வலிய மழித்தலோ, அன்றி நீட்டலோ செய்ய வேண்டிய அவசியமில்லை. தாமேயே பேணுதலின்மையால் உரோமங்கள் உதிர்தலுமுண்டு. தாமே வழுக்கைத் தலை வீழ்தலை இன்றும் பார்க்கின்றோம். சிலபொழுது முறையாக நீக்குவன நீக்கித் தூய்மைப் படுத்தாமையின் காரணமாக நீளுதலையும் பார்க்கின்றோம். திருவள்ளுவர் உடற்பற்றுக் குறைந்து ஒழுக்கத்திற் சிறந்து விளங்கும் பொழுது தாமே நீளுதலையும் மறுக்கவில்லை. வலிய வேடம் கருதி முயற்சி மேற்கொண்டு மழித்தலையும் நீட்டலையும் மறுக்கின்றார். இதனை,

*மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின்*

என்பதனால் அறியலாம்.

விளக்கு எரிகிறது; சுடர்விட்டு எரிகிறது. ஆயினும் அதன் நடுவே ஒரு கறுப்பு உண்டு. அதுபோல, பொய்த் தவவேடம் பூண்டு, மனத்தில் கறுப்பு வைத்து வந்தான் என்று முத்தநாதன் வருகையைச் சேக்கிழார் வர்ணிக்கிறார்.

திருவள்ளுவர் இதனைக் காட்சியினாலே விளக்குகின்றார். குன்றிமணி நல்ல சிவப்பு நிறமுடையது; ஆயினும், அதன் மூக்கில் கறுப்பு இருக்கிறது. அதுபோலத் தவவேடத்தில் அகம் கறுத்த மனிதர்கள் வாழ்வதைத்

திருவள்ளுவர் நொந்து கண்டிக்கிறார். வடிவத்தால் செவ்விய தன்மையைத் திருவள்ளுவர் எதிர்பார்க்கவில்லை. உள்ளத்தி னாலேயே எதிர்பார்க்கிறார்.

அம்பின் வடிவம் நேரானதே ஆயினும் அதனால் விளையும் பயன் கொடிதே. யாழின் வடிவம் கோணலானது. ஆயினும் பயன் பலர்கேட்டு மகிழும் இசையமுது. ஆதலால், வேடத்தால் பயன் இல்லை. நெஞ்சால் துறந்து, தூயதவம் இயற்றுதலே உண்மையான தவம். தவம் செய்யும் இயல்பின ரல்லாதோர், நாடகத்தால் அடியார்போல் நடிப்பது நாட்டுக்குக் கேடு. மனிதகுலத்துக்குத் தீங்கு என்பது திருக்குறள் முடிவு. திருக்குறள் காட்டும் தவநெறி பெருகி வளர வேண்டும். இதுவே நம் பிரார்த்தனை!

## மனத் தூய்மை

மனத்தூய்மை, நல்லொழுக்கம், தவம் முதலியன ஒரு நாளில் பொருந்திவிடுவன அல்ல. பல்வேறு நல்லியல்புகளை ஏற்று, வாழ்க்கையிற் செயற்படுத்தி உறுதிப்படுத்திக் கொள் வதன் மூலமே அவை வாய்க்கும். கள்ளாமை என்ற நல்லொழுக்கத்தைத் திருவள்ளுவர் விரித்துரைக்கிறார். ஒழுக்கத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அல்லது வீழ்ச்சிக்கும், உள்ளமே அடிப்படை. உள்ளத்தில் தோன்றிய ஒன்று அது நல்லது ஆனாலும் சரி, கெட்டது ஆனாலும் சரி, உடனடியாகச் செயலுக்கு வராது போனாலும் காலப் போக்கில் செயற்பட்டு அதற்குரிய பயனைத் தந்தே தீரும். இதனை,

*உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்*
*கள்ளத்தாற் கள்வேம் எனல்*

என்று திருக்குறள் கூறுகிறது.

திருக்குறள் குற்றத்தினை மட்டும் கூறுவதில்லை; கடிவதில்லை; குற்றத்தின் காரணத்தையும் கண்டு கடிகிறது. மனிதனின் தேவைகள் எப்பொழுதும் குறைவாகவே இருக்க வேண்டும். தேவைகளைப் பெருக்கிக்கொள்வதால், வாழ்க்கை ஆடம்பரமாவது மட்டுமல்லாமல், ஆசையையும் தூண்டும். ஆசை இல்லாத ஒன்றைப் பெறத் தூண்டும். அப்பொழுது உள்ளம் களவை நாடும். ஆதலால் களவி னின்றும் விடுபட, தேவையைக் குறைக்கவேண்டும். தனது பொருளியல்புக்கேற்றவாறு அடக்கமாக, எளிமையாக வாழுதல் வேண்டும்.

> "அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கட்
> கன்றிய காத லவர்"

என்பது குறள்.

களவு கருதிய இன்பத்தையும் தருவதில்லை. மாறாக, நீங்காத் துன்பத்தையே தருகிறது. அதுமட்டுமா? களவில் ஈடுபட்ட நெஞ்சத்தினர் நேரிய முயற்சிகளில் ஈடுபடுதலும் தடைப்படுகிறது. ஆதலால், களவினால் ஒரோவழி ஆக்கம் வந்தாலும், அஃது அளவிறந்து ஆவதுபோல் ஆகிப் பின் கெடும். ஆகிக்கெடுவதால், இன்ப நைப்பாசைகளைத் தோற்று வித்து பின் அவற்றை நிறைவு செய்து கொள்ள முடியாத அவல நிலைமையையும், களவின் வழிவந்த துன்பங்களையும் ஒருசேர அனுபவிக்கும் நிலை ஏற்படுகிறது.

ஒருவர்க்குக் கொஞ்சம் பொருள் வருகிறது என்று வைத்துக் கொள்வோம். பொருள் எப்பொழுதும் தனித்து வராது. எனவே பொருளை நம்மிடத்துக்குக் கொண்டு வரும் இயல்புகள் என்னென்ன என்பதை ஆராயவேண்டும். பொருளைக் களவு, வஞ்சனை, சூது முதலிய இயல்புகள் கொண்டு வருவதும் உண்டு. இங்ஙனம் வந்துசேரும் பொருள்கள், செலவழிந்து விட்டால் பொருளுடன் வந்த இயல்புகள் போகா. அவற்றை அரிதில் முயன்றே நீக்கிக்

கொள்ளலாம். ஆனால் ஊக்கம், உழைப்பு, ஆற்றல் நிறைந்த முயற்சி ஆகியவற்றுடன் பொருள் வருமானால், பொருள் கழிந்தாலும் இந்த இயல்புகள் நம்மிடத்தே தங்கி நின்று மீண்டும் பொருளைக் கொண்டுவந்து சேர்க்கும். களவு வீழ்ச்சிக்கே வழி. இந்த வழியை நாடுபவர் பொருளினால் மட்டுமல்ல. அவர்களது உடல் வாழ்க்கையும்கூட ஒறுக்கப் படும். களவில் விளைவுகள் மட்டும் துன்பமல்ல. களவு செய்தலும் துன்பவினையேயாம். ஆனால் நேரிய வழியில் பொருளீட்டுதற்கு எளிய, இனிய வழிகள் பலப்பல உண்டு. அதனால்,

*அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல*
*மற்றைய தேற்றா தவர்"*

என்று கூறுகிறது குறள்.

வாழ்க்கையை இரண்டு உந்துசக்திகள் வழி நடத்திச் செல்லவேண்டும். அந்த இரண்டு சக்திகளும் வெவ்வேறாகத் தோற்றம் அளித்தாலும், தம்முள் ஒன்றுபட்டனவேயாகும். ஒன்றிலிருந்து ஒன்று தோன்றும்; தோற்றத்திலிருந்து மேலும் வளரும். ஒன்றையொன்று தழுவியே நிற்கும். இந்தச் சக்திகள் அறிவு என்றும், அனுபவம் என்றும் அழைக்கப்பெறும். அறிவில் அனுபவம் விளைகிறது. அனுபவத்தில் அறிவு விளைகிறது. இந்த இரண்டு சக்திகளையும் முறையாகப் பற்றி நெறியில் நின்று வாழ்பவர்கள் வாழ்க்கையின் வரம்புகளை அறிவார்கள். அவர்கள் நெஞ்சத்தில் அற உணர்வு நிலை பெற்றிருக்கும். இதேபோலக் களவுடையார் மாட்டு வஞ்சனை நிலைபெற்று நிற்கும்.

*அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்*
*களவறிந்தார் நெஞ்சிற் கரவு*

என்று திருக்குறள் கூறுகிறது.

கள்வர் வாழ்தலும் அரிது. களவினின்றும் ஒதுங்கிய வர்கள், தவம் செய்து பெறக்கூடிய புத்தேளுலகத்தையும் பெறுவர் என்று திருக்குறள் தெளிவுபடுத்துகிறது.

> *கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்*
> *தள்ளாது புத்தே ளுலகு*

என்பது குறள்.

மனிதர்கள் தனிநிலையில் குற்றங்களின் நீங்கி நலம் பெற்று இன்புறுதலுக்கு வாய்மையிற் சிறந்த ஒழுக்கம் இல்லை. தனி மனிதனை மனித சமுதாயத்தோடு இணைத்து எவ்வித இடையீடுமின்றி இன்ப நலம் செழிக்கப் பிணைத்து வைக்கும் பெருநெறி வாய்மை நெறியாகும். இன்றைய உலகியலில் “உண்மை”, “சத்தியம்” என்ற பெயர்களில் நிலவும் ஒழுக்கக் கருத்துகளைவிட எல்லாவகையாலும் சிறந்த கருத்துடையது “வாய்மை” என்பது. இதுவே வள்ளுவர் கூறும் ஒழுக்கமாகும். தீமை பயவாத சொல்லே வாய்மை என்பது திருக்குறள் முடிவு. இக்கருத்தினைத் திருவள்ளுவர் வலிமை யாகவே அறிவுறுத்துகிறார். உண்மை என்பதே சரியானது என்போருக்கு விளக்கம் சொல்வதுபோல,

> *வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்*
> *தீமை இலாத சொலல்*

என்று கூறுகிறார்.

எனவே, யாருக்கும் - யாதொன்றுக்கும்-எந்தக் காலத் திலும் எந்த வகையிலும் எந்த அளவிலும் தீமை பயவாத சொற்களே வாய்மையிற் சிறந்த சொற்கள் என்பதனை உணர்த்த “யாதொன்றும் தீமை இலாத சொலல்” என்று கூறுகின்றார்.

எனவே சொற்கள்வாய்மையுடையனவா அல்லனவா என்பதனை ஆராய்வதற்கு அவர் சொற்களுக்குரிய கருத்து கள் அல்லது செய்திகள் நிகழ்ந்தவையா? நிகழாதவையா

என்ற அடிப்படையை எடுத்துக் கொள்ளவில்லை திருவள்ளுவர். சொற்களின் ஒழுக்கத் தகுதியை ஆராய்வதற்கு அந்தச் சொற்களால் விளையும் பயனையே உரைகல்லாகக் கொள்கிறார். வாழ்க்கை சிறப்பதற்குத்தானே ஒழுக்கம்? அங்ஙனம் சிறக்கச் செய்யமுடியாத - பயனற்ற - நிகழ்ந்தவற்றைக் கூறி அல்லற்படுவதில் பயனென்ன?

ஆதலால், நிகழ்ந்தது கூறல் வாய்மையன்று. நிகழ்ந் ததைக் கூறலாம், நன்மை பயக்குமாயின். நிகழ்ந்தது கூறல் தீமை விளைக்குமாயின், கூறியது பொய்யேயாம் என்பது வள்ளுவத்தின் தெளிவான ஒழுக்கம். நிகழாதது அல்லது பொய் கூறுவதும்கூட, அதனால் நன்மை விளையுமாயின், வாய்மை என்றே கொள்ளப்பெறும்.

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்

என்பது குறள்.

சாக்ரட்டீசும் "நன்மைகளைச் சாதிக்க மருந்து போலப் பொய் கூறலாம்" என்றார். இங்ஙனம் பொய்ம்மையும் வாய்மையாதல் பெரும்பாலும் சமுதாயக் கூட்டு வாழ்க்கையில் அடிக்கடி நிகழும். இங்ஙனம் நிகழ்வதன் இன்றியமையாமை பழகுபவர்களிடத்திலுள்ள மனவலி- உணர்வு ஆகியவற்றைப் பொறுத்து அமைவதாகும். இதனை,

நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை

என்ற குறள் விளக்குகிறது. சிலருக்கு நல்லதை அப்படியே நல்லதாக எடுத்துக் கொள்ளும் சக்தியில்லை. அவர்களுக்குக் கவர்ச்சி தேவை; இனிய பூச்சு தேவை. எப்பொழுதும் முறையான நன்மை கவர்ச்சியாகக் காட்சி அளிக்காது. ஆனால் நெடிய- ஆழமான - மாறாத நல்லின்பத்தை நல்கும். இத்தகு நல்லின்பத்திற்கு அழைத்துச் செல்லப் பொய்ம்

மையும் வாய்மையாக அவசியம் கருதிக் கருதப்படுகிறது. ஆனாலும் பொய், பொய்யேதான்; வாய்மையாகி விடுவ தில்லை. நன்மை விளைந்தால் போதுமா? அவ்வளவு எளிமையாகவா வள்ளுவம் ஒழுக்கத்தைக் கூறும்? விளையும் நன்மைக்கு ஆழமான இயல்பு கூறுகிறது குறள். நன்மை "புரை தீர்ந்த நன்மை"யாக இருக்கவேண்டும். பெரும்பாலும் தனக்கு நன்மை அல்லது தன்னை மிகவும் நெருங்கிச் சார்ந்திருப் பவர்க்கு நன்மை என்ற மனப்போக்கே மக்களின் இயல்பு. ஆதலால் யாதொரு குற்றமும் இல்லாத நன்மை விளையும் பொழுதே பொய்ம்மையும் வாய்மையாகக் கருதப்பெறும்.

உலக வாழ்வினில் பகையும் பிணக்கும் சமுதாயத்தில் தோன்றிப் புரையோடாமல் தடுக்கும் நெறியே வாய்மை. வாய்மை சொல்லாக மட்டும் நின்று பொருள் உணர்த்தாமல் சொல்பவரின் ஒழுக்கத்தையும் காட்டுகிறது. "மெய்ம்மை" "உண்மை" என்ற சொற்களுக்கு இத்தகைய ஆற்றலில்லை. உள்ளதைக் கூறல் உண்மை. நிகழ்ந்ததைக் கூறல் மெய்ம்மை. உண்மை உள்ளத்தைப் பொருத்தது. மெய்ம்மை செயல்களை-சம்பவங்களைப் பொருத்தது. இவற்றால் விளையும் பயன்கள் மிகுதியும் சிறப்புடையனவாக அமையா. வாய்மையே மிகவும் சிறந்த ஒழுக்கம்.

பலர் வாயினால் இனிய சொற்களைப் பேசுவர். கையினால் இனியனவும் செய்வர், வடையின் வாசனையை எலிக்குக் காட்டிப் பிடிப்பதைப்போல மக்களைத் தம் வலையில் வீழ்த்திச் சுரண்டி அடக்கி ஆள! இதனை உணர்த்தவே "தன்நெஞ்சு அறிவது பொய்யற்க" என்று கூறுகிறது குறள். பிறருக்கு இனியனபோலத் தோற்றமளிக்க லாம். பலர் அதை நம்பவும் செய்யலாம். ஆனால் அதனால் பயனில்லை. பலர் நம்புதலின் காரணமாகவே பொய், வாய்மையாகிவிடாது. உள்ளத்தினாலும் பிறருக்குத் தீமை கருதாத ஒழுக்கத்தையே வாய்மை ஒழுக்கம் என்று வள்ளுவம்

வரையறுத்துக் கூறுகிறது. நெருப்பு மட்டுமா சுடுகிறது? நெருப்பு இருக்குமிடமும் சுடும். அதுபோலத் தீமை தங்கி யுள்ள நெஞ்சும் சுடும். உள்ளத்தாலே ஒழுகுதலே ஒழுக்கம். "உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலக"த்துக்கு நன்மை விளையும்; உலகத்தின் பல்லுயிர்களும் வாழும். ஆதலால் உள்ளத்தால் பொய்யாதொழுகுவோரின் பருவுடல் அழிந் தாலும் அவர்கள் உலகத்தவருடைய உள்ளங்களில் புகழுரு வத்துடன் உலவுவர். இதனை,

> *உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்*
> *உள்ளத்துள் எல்லாம் உளன்*

என்று கூறி விளக்குகிறது குறள்.

உள்ளத்தால், செயலால் நன்மை நாடும் வாய்மை ஒழுக்கம் மேற்கொண்டொழுகினாலே போதும். உடம்பினை வருத்தும் தவங்கள் செய்ய வேண்டா; ஆரவாரத் தன்மை யுடைய அறங்களைச் செய்ய வேண்டா. உடலின் தூய்மை தண்ணீரால் கழுவுவதின் மூலம் கிடைக்கிறது. இன்று கழுவினால் தூய்மையாக இருக்கும். ஆனாலும் நாளை தூய்மை குறையும். மீண்டும் கழுவித் தூய்மை செய்துகொள்ள வேண்டும்.

> *புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை*
> *வாய்மையாற் காணப் படும்*

என்பது குறள். உடல் தூய்மையைத் தொடர்ந்து கவனித்து அடிக்கடி கழுவித் தூய்மை செய்துகொண்டு, தனக்கும் பிறருக்கும் மகிழ்வைத் தரக்கூடிய வகையில் வாழ்வதைப் போல, வாய்மையால் அடிக்கடி நினைந்து நினைந்து மனத் தூய்மையைப் பேணிக் காப்பாற்றுதல் வேண்டும்.

புறத்தே கிடக்கும் இருளை நீக்கிக் காட்சி தருவது ஒளிவிளக்கு. விளக்கின் துணைகொண்டே பொருள்களைப் பகுத்துப் பார்ப்பர். சான்றோர், கையில் விளக்குக் கொண்டு

நிகழ்ச்சிகளை, சம்பவங்களை ஆராய மாட்டார்கள். அவர்கள் பொய்யா விளக்கை அகத்தில் ஏற்றி நன்மையே கருதுவர்; நினைப்பர்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

என்பது குறள். திருவள்ளுவருக்கு வாய்மை ஒழுக்கத்தில் ஏற்பட்ட அளவுகடந்த பற்றுதலின் காரணமாக, அவர் ஐயத்திற்கிடமின்றியும், உறுதியாகவும், தெளிவாகவும் வாய்மையை வலியுறுத்துகின்றார்.

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற

என்று அறுதியிட்டுக் கூறுகின்றார்.

மனித குலத்தை அலைக்கழிக்கும் கொடிய தீமைகளில் ஒன்று வெகுளுதல். அதாவது கோபப்படுதல். பலர் எளிதில் உணர்ச்சிக்கு ஆளாகின்றனர். அவ்வழி வெகுண்டு தமக்கும் பிறர்க்கும் தீங்கிழைக்கின்றனர். நொய்யரிசி உடன் வேகும்; அடிப்பிடிக்கும்; களியாகும்; பொலிவு காணாது; உண்ப வர்க்குச் சுவையும் நிறைவும் தராது. ஆனால் அரிசி அப்படியல்ல. நின்று வேகும்; முறையாகவும் வேகும்; சோறும் பொலிவு காணும்; உண்ணவும் இனிமையும் மனநிறைவும் தரும்.

அதுபோல, எளிதில் உணர்ச்சி வசப்படுகிறவர்கள் எளிதில் வெகுளிக்கும் ஆளாகின்றனர். தன்னைக் காத்துக் கொள்ள விரும்புகிறவர்கள், "சேர்ந்தாரைக் கொல்"லும் சினத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அப்பொழுதே அவரைச் சூழ்ந்துள்ள இனம் தொடர்ந்து சூழ்ந்து நிற்கும்.

சினத்தினால் நன்மை விளைவதில்லை; இன்பம் விளை வதில்லை. மாறாகக் கேடே விளைகிறது. கையால் நிலத்தை

ஓங்கி அறைந்தால் நிலத்திற்கு நோவில்லை; கைக்கே வலி, வலியோடு மட்டுமல்ல, கையொடிந்தாலும் ஒடியும். அது போல ஒருவர் சினத்தால் பிறருக்கு விளைவிக்கும் தீமையை விட அவர் பெறும் தீமையே அதிகம் என்பதனை,

*சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு*
*நிலத்தறைந்தான் கைபிழையா தற்று*

என்று கூறுகிறது.

ஆதலால் சினத்தினைத் துறந்து பெரிய துறவியாகச் சொல்கிறார் திருவள்ளுவர். தவத்திற் சிறந்தோர் பலர் சினத்தால் தம்மையும் தவத்தையும் இழந்த வரலாறுகள் ஏராளம் என்பதனை உணர்த்தி, வெகுளியிலிருந்து விலகச் சொல்கிறார்.

*இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்*
*துறந்தார் துறந்தார் துணை*

என்பது குறள். வெகுளாமல் இருக்க முடியவில்லையே என்ற குறையிருக்கலாம். பலர் வேண்டுமென்றே நமக்குத் தவறுகளையும், துன்பங்களையும் இழைத்துக் கோபத்தை மூட்டலாம். இதனைக் காரணம் காட்டிக் கோபத்தை நியாயப்படுத்தக் கூடாது. அதுபோன்ற சந்தர்ப்பங்களில்தான் கோபம் தம்மை வந்து பொருந்தாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்பதனை.

*இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்*
*புணரின் வெகுளாமை நன்று*

என்று கூறுகிறது, குறள்.

வெகுளியைத்தொடர்ந்து தோன்றும் தீயொழுக்கம், இன்னா செய்தல். பிற உயிர்களுக்குத் தீமை செய்யாதொழுகுதலே அறிவுடைமையாகும்; பேரறமுமாகும். இதனை,

*எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்*
*மாணாசெய் யாமை தலை*

என்று கூறுகிறது. எனைத்தானும்- எஞ்ஞான்றும்- யார்க்கும்- மனத்தானாம்-அவருடைய சொற்களின் அடுக்கு. அந்தச் சொற்கள் தரும் பொருள்கள் மிகவும் வலிமையுடையன. எந்த வொரு மனிதனும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவே விரும்புவான். நோயில்லாமல் இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறோமா? நோயைத் தடுப்பதற்குக் கம்பளி உறைகளோ, கவசங்களோ முற்றிலும் பயன்படா. பிறருக்கு நோய் செய்யாமல் இருக்க வேண்டும். பிறருக்கு நோய் செய்பவர்கள் இன்றோ நாளையோ நோய்க்கு ஆளாவது இயற்கை நியதியும்கூட. பிறர்க்கு நோய் செய்யாதே, நோய்க்கு ஆளாகாதே என்பதனை,

*நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்*
*நோயின்மை வேண்டு பவர்*

என்று கூறி விளக்குகிறது.

வெகுளாமையைத் தொடர்ந்து போற்றி ஒழுக வேண்டிய அறம் கொல்லாமை. வெகுளி காத்தாலே, கொல் லாமை ஒழுக்கம் தானே அமையும். ஒருக்கால் வெகுளி எல்லை கடந்தால், வெகுளியின் வழி கொல்லாமலாவது இரு என்று குறள் கூறுகிறது. "அறவினை யாதெனின் கொல்லாமை" என்று ஐயத்திற்கிடமின்றிக் கூறுகிறது. உயிர் களின் வளர்ச்சிக்கும், உய்தலுக்கும் கருவியாக அமைவது உயிர்க்குப் பருவுடலோடுள்ள தொடர்பேயாகும். இந்தத் தொடர்பை நீக்குதல் உயிர்களின் முன்னேற்றத்துக்கும் உய்தலுக்கும் தடை செய்தலாகும். இஃது அரசியல் வழியிலும் குற்றம்; அருளியல் வழியிலும் குற்றமாகும் என்பதனை உறுதிப்படுத்த, "அறவினை யாதெனிற் கொல்லாமை" என்றும், "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்றும்,

நல்லாறு எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி

என்றும், பல்லாற்றானும் கூறி, வலியுறுத்துகிறார். கொல்லா திருத்தலை மட்டும் திருவள்ளுவர் அறமாகக் கருதவில்லை. சமூக ரீதியாக-சமூகம் ஒருவரை உணவு முதலியன இல்லாமல் தாமே சாக விடுதலையும் கொலைக் குற்றமாகவே கருதுகிறார் என்பது வேறு எந்த நீதி நூலிலும் இல்லாத சிறப்பு.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

என்ற குறள் நினைந்து நினைந்து மகிழத்தக்கது. வளம் பல படைத்த உலகத்தில் கிடைக்கும் வளங்களைப் பகுத்துக் கொடுத்து, உண்டு, வாழ்வித்து, வாழ்தலே அறமாகும்; எல்லா நூல்களும் உணர்த்தும் அறமாகும். ஆதலால், களவு விடுத்து, வாய்மை ஏற்று, வெகுளி நீக்கி, இனியன செய்து, பகுத்துண்டு வாழ்தல் மனத் தூய்மையைப் பெறுதற்குரிய வழி. இங்ஙனம் குறள் கூறும் ஒழுக்க நெறிகள் நம்மிடை நிலவுமாயின் இன்பம் சூழும். இந்த அதிகாரங்கள் துறவற இயலில் இருந்தாலும் மனிதராகப் பிறந்த எல்லாருக்கும் உரியனவேயாம்.

## பேரின்பம்

**உ**யிர்களுக்கு இன்ப வேட்கை இயற்கையிலும் இயற்கை. உயிர்கள் இன்ப நலத்தில் நாட்டம் கொண்டே ஓயாது உழைக்கின்றன. சடப்பொருள்களாலாய உலகத்தின் நோக்கமும் உயிர்களுக்கு இன்பம் தருவதேயாம். இறைவன் ஐந்தொழில் நடத்துவதும், பெண்பால் உகந்தாடுவதும் உயிர்களுக்கு இன்பத்தைப் புணர்த்தும் நோக்கத்துடனேயாம்.

எல்லா உயிர்களும் இன்பத்தையே விரும்பி அலைந்தாலும் அவை பெறுவது என்னவோ துன்பமாகவே இருக்கிறது. இஃது ஏன்? கடவுளின் இலட்சியமும் உயிர்களுக்கு இன்பத்தைத் தருவது; இயற்கையின் இலட்சியமும் உலக உயிர்களுக்கு இன்பத்தைத் தருவது; மனிதப் பிறப்புகளில் கூட நெஞ்சத்தால். முகத்தால், மொழியால் உயிர்களுக்கு இன்பம் தருதலே இலட்சியமாகும். இங்ஙனம், எல்லாம் இன்பச் சூழலுக்கென அமைந்திருந்தும் துன்பம் ஏன் வருகிறது? எப்படி வருகிறது? இதனைத் திருக்குறள் ஆராய்ந்து வழி காட்டுகிறது. அறியாமையின் காரணமாக நன்றைத் தீதென்றும், தீயதை நன்றென்றும், இன்பத்தைத் துன்ப மென்றும், துன்பத்தை இன்பமென்றும் மயங்கி மாறுபட உணர்வதாலேயே துன்பம் விளைகிறது.

ஆமையை அவித்துண்ணும் ஒரு வீடு. அடுப்பில் உலைப்பானை ஏற்றி, விறகு வைத்துத் தீமூட்டி ஆமையை உலைப்பானையில் இடுகின்றனர். அடுப்பு எரிகிறது; தண்ணீரில் கிடந்து மரத்துப்போன ஆமைக்கு இளம் சூடு இன்பமாக இருக்கிறது. ஆமை உலைப்பானையில் மகிழ்ச்சிப் பெருக்கில் மகிழ்ந்து ஆடுகிறது. ஐயகோ! சில மணித் துளிகளில் தண்ணீர் கொதி நிலையாக மாறித் தாங்கொணா வெப்பத்தால் வெந்து அழியப்போகிறோம் என்று எண்ணிப் பார்க்க ஆமையால் முடியவில்லை. அதுபோல உயிர்களும் முறை பிறழ்ந்த மனப்போக்குகளாலேயே துன்பம் அடை கின்றன. இதனை,

> பொருளல்ல வற்றைப் பொருள்என் றுணரும்
> மருளானாம் மாணாப் பிறப்பு

என்றும் குறள் தெரிவிக்கின்றது.

பொருளும், பொருளினால் விளையும் பயனும் ஒரோவழி மாறுபடாமல் இருப்பதுண்டு. பல சமயங்களில் அவை தம்முள் மாறுபடும். அப்பொழுதெல்லாம் பொருள்

களைப் பயன் நோக்கியே கருத வேண்டும். பொருள் கருதி எடுத்துக் கொள்ளக்கூடாது. வேம்பு கசப்பானது. கரும்பு இனிப்பானது. கரும்பு உண்பது அதிகப்பட்டால் தீமை விளையலாம். வேம்போ குறையினும், மிகினும் தீமை தராது. உறவும் நட்பும் இனிமையானது. ஆனால் எந்த நட்பு இனிமையானது? குற்றங்கடிதலும், குணம் உவத்தலும் கலந்த நட்பே இனிய நட்பு. இத்தகு நட்புறவில் தீமை இல்லை. போலி இன்ப நைப்பாசைகள் கலந்த உறவு இன்பம் போல் தோற்றித் துன்பம் தரும். எது, என்றும்- எப்பொழுதும் துன்பங்கலவாத அழிவின்பத்தைத் தருமோ அதுவே பொருள். மற்றவையெல்லாம் பொருளல்ல என்பது கருத்து. இதனை வலியுறுத்தவே.

*எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு*

என்று குறள் கூறுகிறது.

துறவு மனப்பான்மை பல காரணங்களால் தோன்ற லாம். ஆனால் சிறந்த அனுபவ அறிவின் முதிர்ச்சியில் தோன்றுவதே சாலச்சிறந்த துறவு. துறவு என்றால் சந்நியாசம் என்றே பொருள்கொள்ளுதல் முறையன்று. அது துன்பத் தொடக்கினையுடைய பொருள்களின் நிலைமை அறிந்து உணர்ந்து அவற்றினின்று விலகுதலேயாம். மனையற வாழ்க்கை மேற்கொண்டோரில் மிகச் சிறந்த துறவு மனப் பான்மையுடையோர்களும் உண்டு. திருநீலகண்டர், இளை யாங்குடி மாறனார் ஆகிய அடியார்களின் வரலாறும், அண்ணல் காந்தியடிகளின் வரலாறும் எண்ணத்தக்கன; உணரத்தக்கன. உலகம் நிலையற்றது என்பது வரலாற்றுத் தத்துவ அறிஞர்களின் முடிபு. உலகம் நிலையற்றது என்றால் உலகம் அழியக்கூடியது என்பது பொருளன்று. உலகம் அழிவதில்லை. பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு எப்பொழுதோ ஒரு தடவை உலகத்தின் வடிவம் மாறலாம்;

தன்மை மாறலாம். அவ்வளவுதான். உயிர் உலகத்தோடுள்ள தொடர்பே நிலையற்றது. இத்தொடர்பு மாறுதலுக்குரியது; மாறும். ஆதலால் தொடர்பின் அமைப்புகள், கூறுபாடுகள் மாறுவதற்கு முன்பு, உரியவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே ஆன்றோர் கருத்து. இளமை, உடம்பு, செல்வம் முதலியவற்றோடு உயிர்களுக்குள்ள உறவு சீக்கிரத்தில் மாறுதலுக்கு ஆளாவது. சிலபொழுது அழிந்து மாறுபடும். இவற்றோடு உயிர்களுக்குள்ள தொடர்பே நிலையில்லாதது. பொருள்கள் நிலையில்லாதவையல்ல.

*நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்*
*புல்லறி வாண்மை கடை*

என்று வள்ளுவம் கூறுகிறது.

நிலையில்லாதனவற்றைக் கொண்டு நிலையாயின செய்தல் அறிவுடைமை. செல்வம் நிலையில்லாதது. ஆனால், செல்வத்தினைக் கொண்டு நிலையான பல அறங்களைச் செய்யலாம். செய்யலாம் என்று காலங்கடத்துவதாற் பய னில்லை. மனம் மண் வீட்டில் குடி புகுந்து கொள்ளும். பின் செய்ய மனம் வராது. அவா வெள்ளக் கடலுள் ஆழ்ந்து அழிவதைத் தவிர வேறு வழியில்லை. அதுபோன்றதே இளமையும். எப்பொழுதுமே காலம் மாதம், ஆண்டுக் கணக்கில் உருவம் திரண்டு ஓடிவிடுவதில்லை. நிமிடங்களாக, மணிகளாக ஒரு நாளாக அற்பமானவை போலக் காட்டி, ஆயுட் காலத்தை அரித்துச் சாப்பிடுவது கால நியதியின் கொள்கை. நாள்தோறும் கிழிக்கின்ற நாட் காட்டியை-காலண்டரை ஆண்டுத் தொடக்கத்தில் பார்த்தால் பல தாள்கள் அடங்கியிருப்பதால் பகுத்தும் உருத்தும் இருக்கும். நாள் ஆக ஆக ஒவ்வொரு தாளாகக் கிழிக்கப் பெற்றுக் கடைசியில் ஒரு தாளும் இல்லாமல் கிழிபட்டுப் போகிறது; உருவம் இளைத்து விடுகிறது. இது போன்றதுதான் மனிதனின் வாழ்நாள்களும். இன்று என்றும், நாளை என்றும் கழிந்து

கடைசியில் ஒன்றுமில்லாமல் பிணமாகும் நிலை ஏற்படுகிறது. ஆதலால் இந்த உணர்வைத் திருவள்ளுவர் எவ்வளவு எளிமையாக, ஆனால் உணரக்கூடிய வகையில் உணர்த்துகிறார்! இதனை,

நாள்என ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்

என்று குறள் கூறுகிறது. நாள்களை அவமே வீணாக்காது, பிறப்பின் பயனை அடைய முயலவேண்டும்.

"காற்றுள்ளபொழுதே தூற்றிக் கொள்" என்பது பழமொழி. இந்தப் பழமொழி இன்றைய உலகியலில் தவறான கருத்தில் வழங்கப்பெற்றாலும், இந்தப் பழமொழிக்குச் சிறந்த தத்துவப் பொருள்உண்டு. அதாவது உயிர் உடம்பொடு புணர்ந்து இயங்கும்பொழுதே அதற்கு இயக்கம் உண்டு; சிந்தனை உண்டு; செயல் உண்டு. உடம்பொடு உயிர் புணர்ந்து நிற்பதற்குச் சாட்சி, விடும் மூச்சுக் காற்றேயாம். அந்த மூச்சுக் காற்று இருக்கும்பொழுதே தீமையைத் தூற்றிவிட்டு, நன்மையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருள். ஆதலால் நிலைத்தல் நிலையாமை தெரிந்து, துன்பத் தொடக்குடைய பொருள்களைத் துறந்து, இன்பத்தினை யடைதல்வேண்டும். "ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த இன்ப அன்பினை" யடைய ஒரே வழி "யான்" என்ற அகப்பற்றும் "எனது" என்ற புறப்பற்றும் நீங்கு தலேயாம். இதனை.

யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்

என்ற குறளால் அறியலாம். அவா என்பது அரைக்கீரை போன்றது. அரைக்கீரை கிள்ளக் கிள்ளத் துளிர்க்கும். அதுபோல, அவா ஒன்றையொன்று தள்ளிக் கொண்டு அடர்ந்து எழுந்துவரும். "அவா வெள்ளக் கள்வனேனை"

என்பது மணிமொழி. அவாவே எல்லாத் துன்பங்களுக்கும், அத்துன்பங்களை நொந்து அனுபவிக்கும் பிறப்புகளுக்கும் காரணமாகும். இதனை,

> அவாவென்ப எல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும்
> தவாஅப் பிறப்பீனும் வித்து

என்ற குறளால் அறிக.

திருவள்ளுவர்,

> வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
> வேண்டாமை வேண்ட வரும்

என்று கூறுவது எண்ணத்தக்கது. ஏன்? செல்வத்தின் பயன் இன்பம். ஆனால் செல்வம் ஈட்டும் பொழுதும் ஈட்டிய செல்வத்தைப் பாதுகாக்கும் பொழுதும், கொடுக்கும் பொழுதும் துன்பமே தருகிறது. அதனால், "வேண்டாமை யன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை" என்று கூறுகிறார். பேரின்பப் பேற்றுக்குத் தூய்மையே அடிப்படை. அவா வின்மையின் விளைவே தூய்மை. அவா வெளிப்படையாக மட்டும் வேலை செய்யாது. வஞ்சனையாகவும் வேலை செய்யும். ஒன்றைக்காட்டிப் பிறிதொன்றைத் தருவதே வஞ்சனையாகும். வெண்ணெய் என்று கூறிச் சுண்ணாம்பைத் தருவதுபோல, அவாவும் போலிக் கவர்ச்சிகளால் மயக்கித் துன்பம் விளைவிக்கும் என்பதை,

> "அஞ்சுவ தோரும் அறனே; ஒருவனை
> வஞ்சிப்ப தோரும் அவா"

என்ற குறளால் அறியமுடிகிறது. துன்பமே கொடுமையானது. துன்பத்துள் துன்பம் எதுவாக இருக்க முடியும்? நிச்சயம் ஒரு துன்பமாக இருக்க முடியாது. காரணம், துன்பம் தோன்றும்; ஆனாலும் மாறுபடும். ஆனால் அவாவோ மாறாத் துன்பத்தைக் கொடுக்கும். இதனை,

*இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்*
*துன்பத்துள் துன்பம் கெடின்*

என்று கூறி விளக்குகிறது.

ஆசை கடல் போன்றது. கடலுக்குக்கூடக் கரையுண்டு. ஆசைக்கு ஏது எல்லை? ஆசை தகுதி பார்க்குமா? நீதி நியாயம் பார்க்குமா? இல்லை வெட்கந்தான் படுமா? அதற்கு ஒன்றுமில்லை. அது ஒரு பச்சை நிர்வாண தேவதை! அதைப் பூசிப்பவர்கள் அழிவார்கள்.

அதனாலன்றோ திருமூலரும்,

*ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்*
*ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்*

என்று கூறினார். திருவள்ளுவரும், அவா நீங்கியவுடனேயே மாறாத பேரின்பம் கிடைக்கும் என்பதனை,

*ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும்*

என்று குறிப்பிடுகிறார்.

திருவள்ளுவர், பிறவி நோயைக் கொடிய பகையாகக் கருதுகிறார். இந்நோய்க்குக் காரணமாயுள்ள காமம், வெகுளி, மயக்கங்களைச் சாடுகிறார். இவற்றின் பெயரும் கூடக் கெடவேண்டும் என்று கூறுகிறார்.

*காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்*
*நாமம் கெடக்கெடும் நோய்*

என்பதிலுள்ள உறுதி உணரத்தக்கது.

மழை நீருக்கு வண்ணமில்லை; மணமில்லை; ஆயினும் சார்பினால் அவற்றைப் பெறும். காற்றிற்கு மணமில்லை; சார்பினால் அதனைப் பெறும். உயிரும் இத்தகையதே. உயிர் யாதானும் ஒன்றைச் சார்ந்து நிற்கும் இயல்புடையது. உயிர்

இயல்பாக ஆணவம் என்ற அழுக்கைச் சார்ந்திருக்கிறது. இந்தச் சார்பின் காரணமாக உயிரின் அறிவு மயங்குகிறது; பேதைமை அடைகிறது. இதனை, உயிர் உணர்ந்து இந்தச் சார்பைக் கெடுத்து, தனக்குவமையில்லாதானாக விளங்கும் இறைவனோடு சார்பு ஏற்படுத்திக் கொண்டால், உயிர் அறிவு நலம் பெறுகிறது; வளர்கிறது. வாழ்கிறது; உய்தி பெறுகிறது. இதனை,

*சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்*
*சார்தரா சார்தரும் நோய்*

என்று தெளிவுபடுத்துகிறது. அதனால், பேதைமை நீங்க வேண்டுமா? பேதைமையின் காரணமாகச் சங்கிலித் தொடர்போல வரும் பிறவித் துன்பங்கள் ஒழிய வேண்டுமா? என்று ஆராய்வது அறிவுடைமை. இதனை ஆராய்ந்து பல் வேறு சிறப்புகள் அனைத்திலும், சிறந்த, 'சிறப்பு' என்றே பேருடைய செம்பொருளைக் காணுதல் வேண்டும்.

சில பொருள்கள் எதில் ஊறுகின்றனவோ அந்தப் பொருளின் தன்மையை-சுவையைப் பெறும். அது போல உயிர் எதை நினைக்கிறதோ அல்லது எண்ணுகிறதோ, அவ் வழியாக அது ஆகும். இதனையே இன்றைய உளநூலோர் "எண்ணியபடியே வாழ்க்கை" என்று கூறுகின்றனர். இதனை,

*பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்*
*செம்பொருள் காண்ப தறிவு*

என்ற குறளால் உணர்க.

செம்பொருள் காணும் முயற்சிக்கு ஐயம் ஒரு பெரிய தடை. அறியாமையைக்கூட மன்னிக்கலாம். ஆனால், ஐயத்தை அனுமதிக்க முடியாது. காரணம் இதுவோ, அதுவோ என்ற ஐயப்பாட்டிலேயே உழலச் செய்து உருக் குலைக்கிறது. எந்த ஒன்றிலும் துணிந்து இறங்க முடியாமல் தடுக்கிறது.

அறியாமை, பேதைமை இருந்தாலும் அனுபவத்தால் மாறும். ஆனால் ஐயமோ, அனுபவத்திற்கே தடை ஆதலால், பேரின்ப வாயில் நுழைவுக்கு முதலில் ஐயம் நீங்க வேண்டும். பின் தெளிவு தேவை.

ஐயம் நீங்கித் தெளிவு தோன்றின் பேரின்பம் எளிதில் கிடைக்கும் என்பதை வள்ளுவர் நயம்படக் கூறுகிறார். ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு, மண்ணுலகத்தைவிட விண்ணுலகமே பக்கத்திலிருப்பதாகக் கூறுகிறார்.

*ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்*
*வானம் நணிய துடைத்து*

என்பது குறள்.

உடலும், உயிரும் இயைந்து ஒன்றுபட்டு உலாவும் பொழுது தங்கியிருக்கும் இடத்திற்கே வீடு என்று பெயர். வீடு என்ற சொல் விடுதல் பொருள் உணர்த்தும் சொல்.

குடியிருக்கும் வீட்டுக்கு, வீடு என்று பெயர் வந்தது எப்படி? சிலருக்குப் பலகாலும் பயிலும் வீட்டில் படுத்தாலே தூக்கம்வரும். சிலருக்கு வீட்டைவிட்டு வெளியே இருப்பது அமைதியைத் தராது. அது மட்டுமின்றி, கடும் கோடை வெயில், வருத்தும் பனி, கொடிய விலங்குகளின் பகை ஆகியன தரும் துன்பத்திலிருந்து, விடுதலை தந்து-இன்பம் தருவதால் வீடு என்று பெயர் பெற்றது.

இத்தகைய ஒரு வீடு சொந்தத்தில் இல்லாதவர்கள் மிகவும் குறைப்படுகிறார்கள்; துன்பப்படுகிறார்கள். குடியிருக்க வீடுகூட இல்லையே என்று கவலைப்படுகிறார்கள். சொந்தத்தில் வீடு இல்லாதவர்கள் இயல்புக்கேற்ப வாடகை வீடுகளில் குடியிருக்கிறார்கள். வாடகை வீடுகளில் குடியிருப்பது வசதியாக இருப்பதில்லை; மேலும் துன்பமுமாம். வாடகைக்கு வீட்டைத் தந்திருக்கும் வீட்டின் சொந்தக்காரர்களுக்கு வாடகையைப் பற்றிக் கவலையே

யன்றி, வசிப்பவர் வசதியைப் பற்றிக் கவலையில்லை. அதனா லன்றோ, வாடகை வீடுகளில் குடியிருந்து அலுத்தவர்கள் எப்படியாவது சொந்த வீடு கட்டிக்கொள்ள முயற்சி செய்கிறார்கள்; கட்டி மகிழ்கிறார்கள்!

சில ஆண்டுகள் வாழ்ந்து விட்டுப் போகும் வீட்டுக்கே இந்த நிலையென்றால் அழியாத இன்பத்தைத் தரும் பேரின்ப வீட்டை என்னென்று புகழ்வது; வாழ்த்துவது!

உயிர் உடம்பில் தங்கியிருக்கிறது. உயிருக்கு இந்தக் குடியிருப்பு நிலைத்ததன்று. இந்த உயிர் முன்னே பல குடியிருப்புகளில் குடியிருந்து, குடியிருந்து களைத்து வீடுகளை மாற்றிக்கொண்டு வந்திருக்கிறது. உயிர் முன்னே குடியிருந்து காலி செய்த வீடுகள் பலப்பல என்ற கருத்தினை- 'எழு பிறப்பு' என்று சொல்லுவதன் மூலம் வள்ளுவம் விளக்குகிறது. இதனையே,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்

என்று மணிவாசகமும் பேசுகிறது. ஐயகோ! நினைத்தாலும் துன்பம் தரும் குடியிருப்புகள்! குடியிருப்புகளாவது தனியே வாழ்ந்த குடியிருப்புகளா? இல்லை! ஒட்டுக் குடித்தனங்கள்! உடன் குடியிருந்தவை ஐம்பூதங்கள்! அவை தம்முள் ஒன்றுக்கொன்று முரண்பாடு தோன்றும் பொழுது ஏற்படும் நிலைமையைச் சொல்ல வேண்டா. நோய்க்குக் காரணம் யாதோ? மருந்து இடுவது யாரோ? என்ற நிலை. இத்தகு துன்பம் தரும் குடியிருப்புகளை விட்டு விலகி, விடுதலை பெற்று நிரந்தரமாகக் குடியிருக்கக்கூடிய வீடு-இறைவன்

திருவடி-உயிர்க்குக் கிடைக்கவில்லையா? என்று திருவள்ளுவர் இரங்குகின்றார்.

> புக்கில் அமைந்தின்று கொல்லோ? உடம்பினுள்
> துச்சில் இருந்த உயிர்க்கு

என்பது குறள். இறைவன் திருவடியாகிய இன்பம் ஒன்றே உயிர்க்கு நிலையான இன்பம்; வாழ்வற வாழ்விக்கும் இன்பம்; ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்ப அன்பும் இதுவேயாம் என்பதே திருக்குறள் முடிவு.

## ஊழ்

வாழ்க்கைப் பண்ணையில் உயிர்கள் பக்குவப்படுத்தப் பெறுகின்றன. திருவள்ளுவர் உலகத்தின் முதலாகவும், பயனாகவும் சாட்சியாகவும் இருப்பவற்றைப் பாயிரத்தில் ஓதுகிறார். பின் மனிதன் மனையிலும், மனையின் நீங்கிய துறவிலும் செய்யும் கடமைகளை விரித்து ஓதிய திருவள்ளுவர், அச்செயல்களின் பயனாகிய ஊழை ஓரியலாக ஓதுகிறார்.

ஊழைத் தொடர்ந்து பொருட்பால் வருகிறது. அறத்துப்பாலில் பயின்ற வினைகளே ஊழாகவிளைந்து பொருட்பாலில் பயன் தருகிறது. பொருட்பாலில் திருவள்ளுவர், ஊழின் பயனாக விளையும் உலகத்தையும், அவற்றை வெற்றிகொள்ளும் வழியையும்- வழி வகைகளையுமே பேசுகிறார். அறத்துப் பாலில், ஊழுக்குக் காரணமாக அமையும் ஒழுக்கங்களைப் பேசுகிறார்.

உயிர், பொறி புலன்களால் செய்யும் செயல்; செயல்களின் விளைவாகிய ஊழ்; அவரவர் செயலின் பயனை-ஊழை அனுபவிக்க வேண்டுமென்ற நியதி; எல்லாவற்றையும்

ஆட்டுவிக்கும் இறைவன்; இந்த நான்கினையும் ஆராய்தலே தெளிவு.

ஊழ் வினையின் விளைவு. விளைந்து ஊட்டுதல் என்பதுபொருள். "ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்" என்பது சிலம்பு. பருவுடலுக்குக் கூழ் உணவு; நுண்ணுடலுடன் கூடிய உயிர்க்கு ஊழ் உணவு; உணவைத் தகுதி பார்த்து மருந்துபோல உண்ணின் உடலுக்குத் துன்பம் இல்லை. முறைகேடான உணவுகளை முறை தவறி, தேவையை மீறி உண்ணின் நீங்காத் துன்பம். எந்த உணவு இன்பத்தைத் தரவேண்டுமோ அதே உணவு துன்பத்தைத் தருகிறது. குற்றம் உணவின் மேலன்று; உடல்மீதும் அன்று. உணவின்மீது முறைதவறி வைக்கப் பெற்ற இச்சையே காரணமாகும்.

அதுபோல உயிர்க்குச் சிந்தனையும் செயலும் இன்பம் தரும்; உய்தியினைத் தரும். உயிருக்கு இயற்கை செயற்படுதலேயாம். அதனால் அன்றோ திருவள்ளுவரும் 'மடிசெய்து' என்றார். வினைசெய்தல் உயிர்களின் கடமை. வினை செய்தல் மூலமே உயிர்கள் அறிவும் தெளிவும் அழிவிலின்பமும் பெறுகின்றன. ஆயினும் இன்பத்திற்குரியனவாகிய வினைகளே துன்பங்களையும் விளைவித்தலைப் பார்க்கிறோம்; இன்பத்தையும் விளைவித்தலைப் பார்க்கிறோம். உயிர் இன்ப துன்பங்களால் சுழலும் சுழற்சியில் சிக்கி அலமருகிறது.

உண்மையில் வினைசெயல் உயிருக்கு நல்லதா? கெடுதலா? வினை செய்தலைத் தவிர்க்க முடியுமா? அப்படி முடிந்தால் வினை செய்தலிலிருந்து விலகுவது நல்லதா? நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் நம்முடைய படைப்புகளா? அல்லது கடவுளின் படைப்புகளா? அல்லது உயிருக்கும் இறைவனுக்கும் தொடர்பின்றி ஊழ் படைத்த படைப்புகளா? இந்த வினாக்களுக்குத் தெளிந்த விடைகளைக் கண்டு

கொள்ளாத வரையில் வாழ்க்கை மையலுறும்; கலங்கும்; நீடிய நல்லின்பங்கள் விளையா.

அன்புகூர்ந்து தெளிவாகச் சிந்தனை செய்யுங்கள்! திருக்குறள் உலகத்திலிருந்து சிந்தனை செய்யுங்கள்! திருவள்ளுவர் வழியில் சிந்தனை செய்யுங்கள்! வையத்தில் வாழ்வாங்கு வாழுங்கள்! இறைவன் அடி நினைத்து இன்புறுங்கள்!

வினை செய்தல் உயிரின் இயற்கை; கடமை; வினை செய்தலே உயிர் உய்தற்குரிய வழி. "எது எமைப் பணி கொளு மாறது கேட்போம்" என்று மணிமொழி பேசுகிறது. அப்பரடிகள் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்றார். ஆனால் எந்த வினையை எந்த அடிப்படையில், எந்த நோக்கத்தில் செய்வதென்பதே ஆய்வுக்குரியது.

தலையில் தண்ணீர்ப் பானையைத் தூக்கிக் கொண்டு ஒருவன் நடக்கிறான். பானை தானே ஆடி வீழ்வதில்லை; பானை ஆடவும் முடியாது. உடல் ஆட்டத்தினாலேயே பானை ஆடும். ஆனால் பானை ஆடி வீழ்ந்தது என்றே சொல்லுவான். காரணம் தன் உடல் ஆட்டத்தை மறைக்க வேண்டுமென்பதே. தண்ணீர் தூக்குதலான செயல் அவசிய மானது. தண்ணீர்ப் பானையும் ஆடி விழாது. உடல் ஆடாமல் நடை பயிலக் கற்றுக்கொண்டால் தண்ணீர் சுமத்தலாகிய செயல் இனிய முறையில் நிகழும். அதுபோல வினை செய்தல் இயற்கை. ஆனால் வினை செய்யும்பொழுது உள்ளத்தில் விருப்பு வெறுப்புகளாலாய கோணல் மாணல்கள் இருக்கக்கூடாது. செயல்களே ஊழாக வடிவம் பெற்று விடுவதில்லை. செயலுக்குரிய நோக்கமும், செயலால் விளையும் பயனும் பயனைக் கருதிய முறைமையும் ஊழின் தோற்றத்திற்குக் காரணங்களாகும்.

இறைவனைப் பூசித்தல் நற்செயலே. பூசை செய்த லாகிய செயலின் மூலம் நாம் இன்பமும் பெறலாம்;

துன்பமும் பெறலாம். இவ்விரண்டிலும் உயர்ந்த அழிவின் பத்தையும்- அதாவது பேரின்பத்தையும் பெறலாம். இறை வனை, செல்வங்களை வேண்டிப் பூசை செய்யின் செல்வ விருப்பம் நல்லூழாக- ஆகூழாகத் தோன்றிச் செல்வத்தைத் தரும்.

வாழ்க்கையின் விருப்பம் ஓர் அத்தியாயமாக நின்றுவிடுவதில்லை. வாழ்க்கையின் விருப்பம் பல அத்தியாயங்களைத் தொடரும்; ஏறும்; விகார உணர்ச்சி களால், பற்று-பாசங்களால் ஆகூழ் போகூழாக மாறிவிடுவதுண்டு. ஆகூழின் பயனாகிய செல்வத்தை அடைந்து அனுபவிக்கும்பொழுது, பற்றுவிடா உணர்ச்சியும், "எனது" என்ற இறுமாப்பு உணர்ச்சியும் இருத்தல் கூடாது.

மற்றவர்களுக்குத் தீங்கு செய்யக்கூடிய சக்திகளை வேண்டியும் பூசை செய்யலாம். இங்ஙனம் வேண்டிப் பெற்றவர்களே அசுரர்கள். தவத்தில் சுரர் என்றும், தன்மை யினால் அசுரர் என்றும் உணர்த்தவே அசுரர் என்றார். இத்தகைய பூசையால் விளைவது தீயூழ். எதுவும் கருதாமல், இறைவனையே கருதிப் பூசித்தல் வினைச்சார்பற்றது; இன்பம் தருவது.

உயிர்கள் வினை செய்தல் இயற்கை. வினை செய்தலே உய்தற்குரிய வழியாதலால் வினை செய்தலைத் தவிர்க்க முடியாது; தவிர்க்கவும் கூடாது. இறைவன் நன்றுடையான்; தீயதில்லான்; அவனுடைய படைப்புகள் இன்பம் விளைவிப் பனவாம். ஆதலால் நம்முடைய துன்பங்கலந்த இன்பங் களும்-துன்பங்களும் நம்முடைய படைப்புகளே-தவிர இறை வனுடைய படைப்புகளல்ல.

நம்முடைய தலைவிதியை நாமே எழுதிக்கொள் கிறோம். கடவுள் நியதி என்ற முறையமைப்பில் அவரவர் தாம் செய்த விளைவுகளுக்கேற்ப வினைப் பயனை

அனுபவிக்க வழி நடத்துகிறார். அதுவும் நம்மீதுள்ள கருணையினாலேயாம்.

பொருந்தா உணவை உண்டவர்கள் உண்டமையின் காரணமாக விளையும் துன்பத்தினை நீக்கிக் கொள்ள முயன்று வெளியெடுக்கும் வாந்தியைப்போல, அவரவர் செய்த வினைகளின் பயன்களை அவரவர்களே முயன்று அவரவர்களே அனுபவிக்க வேண்டுமென்பதே இயற்கையின் நியதி. இங்ஙனம், விருப்பு- வெறுப்புகளுடன் செய்யும் வினைகள் அனுபவத்துக்கு வராமல் போகா. அங்ஙனம் அனுபவத்துக்கு வரும் பொழுது "ஊழ்" என்று பெயர் பெறுகிறது.

ஆர்வம் நிறைந்த முயற்சி, தளராத நெஞ்சம், நிலை கலங்காத உள்ளம் ஆகியவை ஆக்கும் ஊழாகிய ஆகூழின் அடையாளம். மாறாக, சோம்பிய உள்ளம், நெஞ்சில் நிதமும் கவலை, ஏங்கி இளைத்தல் ஆகியவை போகூழின் அடையாளம் என்று திருவள்ளுவர் அடையாளம் காட்டுகிறார்.

> **ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்**
> **போகூழால் தோன்றும் மடி**

என்பது குறள்.

அறிந்திருக்கும், அறிவு வேலை செய்யாது. உணர் விருந்தும் உணர்வு கைகொடுக்காது. பேதைமைத் துறையில் அழைத்துச் செல்லும் இந்தச் சூழல், இழப்பு ஊழ் மேலோங்கி இருப்பதைக் காட்டுவது. அது போலவே, ஆகும் ஊழ் மேலோங்கியிருக்கும் காலத்தில் அறிவு பெருகும்; ஆள்வினை தோன்றும். இதனை,

> **பேதை படுக்கும் இழவூழ் அறிவகற்றும்**
> **ஆகலூழ் உற்றக் கடை**

என்று கூறி விளக்குகிறது, குறள்.

நுண்ணிய நூல்கள் பல கற்றாலும், கற்ற அளவுக்கு அறிவு மிகுந்து காணாமல் ஊழின்பாற்பட்ட குறை நலம் உடைய அறிவே மேம்பட்டு நிற்கும் என்று திருக்குறள் கூறுகிறது.

*நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்*
*உண்மை யறிவே மிகும்*

என்பது குறள். நூல் பல கற்றல் அறிவு பெறுதற்குரிய வழி; ஆயினும் கற்றதைச் சிந்தித்தலும் சிந்தனையில் தெளிவு பெறுதலும், துணிதலும் இயற்கையான ஊழொடு தொடர்புடைய உண்மை அறிவினாலேயே முடியும் என்பது திருக்குறள் முடிபு. ஆயினும் தன்னூழின் தரமறிந்து ஊழின் ஆற்றலை அடக்கக் கருதி அதனின்றும் விஞ்சியதாகக் கற்றலும் கேட்டலுமுடையவர் சிறந்து விளங்குவர் என்பது குறள் கூறும் கருத்து. இந்த உலகம், இருவேறு பெரும் பிரிவுகளாக இயங்குகிறது. ஒன்று பெருஞ் செல்வ முடையதாக விளங்கும் பிரிவு. பிறிதொன்று தெரிந்து தெளிந்த அறிவுடையவராக விளங்கும் பிரிவு. இந்த இரு பிரிவுகளும் தம்முள் மாறுபட்டே இருக்கின்றன. இஃது இயற்கையும்கூட. எங்ஙனம் இயற்கையாகும்? அறிவை விரும்புபவர்கள் அறிவுத் துறையிலேயே முயன்று முயன்று, ஈடுபாட்டுடன் உழைக்கின்றனர். இவர்கள் கையில் ஏதாவது கொஞ்சம் செல்வம் கிடைத்தால்கூட, அந்தச் செல்வத் தையும் அறிவுக்காகவே செலவழித்துவிடுவர். இவர்கள் செல் வத்தைப் பேணாக்கள்; அறிவையே பேணுவார்கள். இஃது ஒருவகை. செல்வத்தைப் பேணும் எண்ணமுடையவர்கள், செல்வத்தையே பேணுவார்கள். சிந்தனை, செயல், தயை அனைத்தையும் செல்வத்தின் காலடியில் வீழ்த்திவிடுவர். இவர்களிடத்தில் செல்வமிருக்குமே தவிர அறிவு இருக்காது. இதனை, திருவள்ளுவர்,

*இருவேறு உலகத்து இயற்கை திருவேறு*
*தெள்ளிய ராதலும் வேறு*

என்று கூறுகிறார். இந்த வேறுபாடு நீடிப்பதற்குக் காரணம் ஒவ்வொருவருக்கும் அவரவர் நினைப்பின்படி செயல்கள் தோன்றி, ஒவ்வொருவரிடத்தும் வளர்ந்து ஊழாக மாறுவதே யாம்.

மனிதனின் செயற்பாட்டுக்கு அடிப்படை அவனது சென்றகாலச் செயல்களின் விளைவாகிய ஊழேயாம். இழவூழ் வளர்ந்தமையின் காரணமாகத் தீமையைத் தீமை யென்றுணரச் செய்யாமல் பேதைமைப்படுத்தும். இதன் காரணமாக நல்லவையாக இருப்பவையும் கூடத் தீமையாக மாறும். நல்லூழ் இருக்குமாயின் தீமையும் நன்மையாக மாறும்.

*நல்லவை யெல்லாந் தீயவாந் தீயவும்*
*நல்லவாம் செல்வம் செயற்கு*

என்பது குறள்.

ஊழ், உயிரை ஒட்டியிருக்கின்ற தத்துவம். உயிர் கடந்த காலச் செயல்முறைகளுக்கு ஏற்பப் பயன் பெற்று அனுபவிக்கும் இந்த முறையும் மரபும் வழி வழிப்பட்டதாகும். ஊழின்பாற் பட்டதல்லாத ஒன்று நாம் உரிமை கொண்டாடினாலும், நம்மிடம் தங்கிப் பயன் தராது.

*பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்*
*சொரியினும் போகா தம*

என்று கூறி இதனை விளக்குகிறது, குறள்.

அடுக்கிய கோடி செல்வம் பெற்றிருப்பினும் இன்புற்று வாழத் தெரியாதவர்களும் நிறையப் பேருண்டு. ஏன் இந்தக் குறை? என்று திருக்குறள் ஆராய்கிறது. முடிவாக,

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது

என்று கூறுகிறது. இங்கு வகுத்தான் என்று குறிப்பிடுவது கடவுளையன்று. கடவுள் பொதுவான இயல்புடையவர். ஆதலால், அவர் யாரொருவருக்கும் வலியச் சென்று தீமை செய்யார். எந்தவோர் உயிருக்கும் தீமை நிகழ்வதற்கு உடன்படமாட்டார். ஒவ்வோர் உயிரும் சிந்தனையால், செயலால் செய்த செயல்களே பயன் தரும் வகையில், ஊழ் எனப் பெயர் பெற்று வருவது. இந்த ஊழினை உயிர்கள் அனுபவித்துக் கழித்துத் தாமே ஏற்றிக்கொண்ட சுமையினை இறக்கிக் கொள்வதற்கு, இறைவன் துணையாக இருக் கின்றான் என்பதே உண்மை. இஃதன்றி நம்முடைய இன்ப துன்பங்களுக்குக் கடவுளோ ஊழோ காரணம் என்று காட்டுவது நெறியுமன்று; முறையுமன்று. ஆதலால் வகுத்தான் என்பது நேரடியாக ஊழைக் குறிப்பிட்டாலும் அந்த ஊழினை உருவாக்கிக் கொண்ட மனிதனையே சாரும். இந்தக் குறளின் பொருளாவது; கோடானுகோடிப் பொருள் களைச் சேர்த்தாலும், ஊழின் வழியல்லது துய்த்து மகிழ முடியாது என்பதேயாகும். இந்தப் பிறப்பின் தொடக்க காலத்திலோ அல்லது முன்பிறப்பிலோ ஒருவன்தான் துய்த்து அனுபவித்து மகிழாமல், வயிற்றையும் வாயையும் கட்டி, செல்வத்தை விரும்பிச் சேர்த்திருப்பானாகில் அவனுடைய ஊழ் சேர்க்கும் ஊழாக உருவாகுமே தவிர, துய்த்து அனுபவிக்கும் ஊழாக வடிவம் கொள்ளாது என்பதே ஆகும். சிந்தனைச் செல்லுழிச் செயல் நிகழும். ஊழ் உருவாவதற்கு அடிப்படை சிந்தனையும் நோக்கங்களுமேயாம். செயல்கள் மட்டும் ஆகா.

நல்லூழ் இன்மையின் காரணமாக நஞ்சினும் கொடிய வறுமையினை அடைந்து துய்ப்பன – மகிழ்வன ஆகியவற்றை

இழந்தவர்கள். ஊழினை மாற்றி அமைத்துக்கொள்ளத் தன் முயற்சி மேற்கொள்ளாது தவத்தினை நாடித் துறவியாவர். அப்பொழுது ஊழ் வந்து ஊட்டாமலே கழியும். இம்முயற்சி ஒரோவழி நன்மையானாலும் ஆகலாம். ஆனாலும், ஊழினை மாற்றிக் கொள்ளும் முயற்சியே சிறப்புடையது.

மக்களில் பலர் இன்பம் என்றால் மகிழ்கின்றனர்; துன்பம் என்றால், நடுங்குகின்றனர்; புகழ் என்றால் விரும்பி ஏற்கின்றனர்; இகழ்ச்சியென்றால் மறுக்கின்றனர். இஃது ஏன்? ஊழ் முற்றுப்புள்ளி பெறாது சங்கிலித் தொடர்போல் தொடர்வதற்குக் காரணம், இன்பங் கண்டபொழுது மகிழ்தலும், துன்பங் கண்டபொழுது துவளுதலும் ஆகிய செயல்களினாலேயாம். நோய்க்கு உண்ணும் மருந்து சுவையால் இனிப்பாக இருந்தாலும் மருந்தேயாம். சுவை கருதி மருந்தை அதிகமாக உண்ணமாட்டார்கள். மருந்து கசந்தாலும் நோய் நீக்கம் கருதி உண்ணாமலிருக்க மாட்டார்கள். அதுபோல இன்ப துன்பங்களைத் தன் னுடைய செயல்களின் விளைவாகிய ஊழின் பயனே என்று கருதி, நொந்து நோகாமல், மகிழ்ந்து நெகிழாமல் மீண்டும் ஊழுக்கு உயிர் கொடுக்காமல் இரண்டையும் ஒப்பக் கருதி அனுபவிப்பதே ஊழினைக் கடக்கக்கூடிய ஒப்பற்ற வழி.

இதனையே திருவள்ளுவர்,

**நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்**
**அல்லற் படுவ தெவன்**

என்று கூறுகிறார்.

முடிவாகத் திருவள்ளுவர், "ஊழிற் பெருவலியாவுள?" என்றே கேட்கின்றார். ஊழினால் தமக்கு வந்துள்ள கேட்டினை மாற்றிக்கொள்ளப் பலருடனும் கூடிக் கலந்து பேசி, பல்லாற்றான் முயற்சி செய்தாலும் ஊழின் பயனை அனுபவிக்காமல் தப்பித்துக் கொள்ள முடியாது. இதனை,

*ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று*
*சூழினும் தான்முந் துறும்*

என்றார். அப்படியானால் ஊழினை வெற்றி பெறமுடியாதா, என்ற வினா எழும். ஊழினை வெற்றி பெற முடியும். வாழ்க்கையின் நோக்கமே ஊழினை வெற்றி பெறுவதுதானே!

ஊழினை வெற்றி பெறுவதற்காகச் சூழ்ந்து செய்யும் வினைகள் மீண்டும் மீண்டும் ஊழாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அது எப்படி? ஊழினை அடக்குவேன்; ஒடுக்குவேன்; துன்பத்தை வெற்றி பெற்று இன்பங் கொள் வேன் என்று கருதி முயன்றால், ஊழ் மீண்டும் வலிமை பெற்றுத் தொடர்கிறது. அங்ஙனம் அல்லாமல் "இது என்னுடைய கடமை; செய்கிறேன்; இதனால் ஆம் பயன்கள் பற்றிக் கவலையில்லை; பயன்கள் வந்தாலும் அவை எனக்குச் சொந்தமல்ல" என்று செய்தால், ஊழ் கழிகின்ற அளவில் நின்று கொள்கிறது; தொடர்வதில்லை. சிந்தனைப் போக்கு களாலும், மற்றும் நம்மைச் சூழ்ந்திருக்கும் சூழல்களாலும் முன்னமே அமைந்துள்ள ஊழின் வலியினை அறிந்து கொண்டு, அதனை மாற்றக்கூடிய அளவுக்குக் கடமைகளின் பரிணாமம் அமையவேண்டும். நெருப்பைத் தண்ணீர் அணைக்கும். உண்மையே!

ஆனாலும், நெருப்பினுடைய அளவும் ஊற்றப்பெறும் தண்ணீரின் அளவும் இயைபாக இருக்கவேண்டும். எரிகின்ற நெருப்பை ஒரு சொட்டுத் தண்ணீர் அணைக்க முடியுமா என்ன? தண்ணீர் அளவு கூடுதலாக வேண்டும். அது போலவே, முன்னைய ஊழின் வலிமையைக் கடப்பதற்கு ஏற்றவாறு முயற்சி அமையவேண்டும். கருங்கல்லை உடைக்கக் கையின் வலிமை போதாத பொழுது, கடப் பாறையின் வலிமையையும் துணையாகச் சேர்த்துக் கொள்ளு கிறோம். அதுபோல ஊழின் வலிமையை மாற்ற நம்முடைய முயற்சி மட்டும் போதாது. நம்மினும் வலிமையுடைய

மறந்தும் தவறு செய்யாத திருவருட்சார்பைத் துணையாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதே ஊழினை வெற்றி பெற முடியும். ஊழினை வெற்றி கொள்வதென்றால், ஊழின் வழியதாக வரும் இன்ப துன்பத்தால் தாக்கப் பெறாமல் அலைக்கழிக்கப் பெறாமல் அனுபவிப்பது என் பதேயாகும்.

யாரொருவரும் அவரவர் உண்ட உணவை அவரவரே செரிக்கச் செய்து கொள்ள வேண்டும். இதுவே நியதி. அது போலவே யாரொருவரும் தாம் தாம் சிந்தனையால், உணர்வால், செயல்களால் செய்த செயல்களின் பயன்களை அனுபவிக்கவேண்டும். இங்ஙனம் அனுபவிக்க வேண்டு மென்ற நியதிதான் ஊழ் ஆகும். ஊழ் மனிதர்களாலேயே தோற்றுவிக்கப்பெற்றது. மனிதன் சிந்தனையால், உணர்வால், செயலால் உயர்ந்து தன்னலப் பற்றின்றிக் கடமைகளைச் செய்யும்பொழுது ஊழ் கழிகிறது; உறுதியும் பயனும் விளைகிறது; அழிவில் இன்பம் தோன்றுகிறது; இதுவே திருக்குறள் உலகத்தின் கருத்து.

## குடிமை

ஒரு மனிதன் தான் வாழும் சமுதாயத்துக்கும் நாட்டிற்கும் ஏற்றவாறு ஒழுகும் இயல்பினைக் குடிமை என்று சிறப்பித்துக் கூறுவர். குடிமைப் பயிற்சி, குடிமைப் பண்பு (Citizenship) என்றெல்லாம் பேசப் பெறுவதும் இந்த இயல்பே யாகும். பழங்காலத்தில் நாடு, சிறிய அமைப்புகளேயாம். அன்று பெரும்பாலும் குல அடிப்படை சிறப்புற்றிருந்தது. இன்று நாடு என்ற அமைப்பு விரிந்தும், பரந்தும் விளங்கு கிறது. ஆதலால் குலம் என்ற அடிப்படை மறைந்து, நாடு என்ற பேரமைப்புத் தோன்றியுள்ளது. ஆனாலும், பாரதி, பாரத நாட்டு மக்களை 'பாரத ஜாதி' என்றே அழைத்தான்.

ஒரு மனிதனுடைய ஒழுக்கத்திற்கும், விருப்பத்திற்கும் காரணமாகக் குடி அமைந்து விளங்குகிறது. சொல்லும் செயலும் மாறுபடாத-செப்பமும், பழி பாவங்களுக்கு அஞ்சுதலும் இயல்பாகவே உயர்குடிப் பிறந்தார்களிடம் உண்டு. தாழ்வான குடியினருக்குக் கற்றுத் தந்தாலும் வருவதில்லை. இங்கு உயர்குடி என்பது பண்பில் உயர்ந்த குடியேயாம். பிறப்பாலும் செல்வத்தாலும் செயற்கையில் உயர்த்தப்பெற்ற குடியல்ல.

செப்பமும் நாணும் உயர்குடியின்கண் இயல்பாகவே உண்டு என்பதற்கு, சிலம்பில் வரும் பாண்டியன் நெடுஞ் செழியன் சிறப்பான சான்று. சிலம்பில் வரும் நெடுஞ் செழியன் தன் குற்றம் மட்டும் உணராமல், தன்னுடைய தென்னவன் குடிக்கே இழுக்கு வந்துவிட்டதே என்று ஏங்குகிறான். உயர்குடிப் பிறந்தார் ஒருவர் அந்த உயர்குடிப் பிறப்பின் சிறப்பியல்புகளை மேலும் வளர்க்கவே முயற்சி செய்வர். ஒருகால் அது இயலாது போனால், குறைக்காம லாவது இருக்க முயல்வர். அதன் காரணமாக ஒழுக்கம், வாய்மை, நாணம் ஆகிய ஒழுக்கங்களினின்றும் விலகார்; கீழிறங்கி வாரார்.

உயர்குடிப் பிறந்தார் இயல்பு என்ன? அவர் இனிய முகமுடையராக இருப்பர்; இனிய சொற்களையே பேசுவர்; யாரையும் இகழார்; நிறைய அள்ளிக் கொடுப்பர் என்பதை,

**நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்**
**வகைஎன்ப வாய்மைக் குடிக்கு**

என்ற குறளால் அறிக. இதன்கண் "இகழாமை" என்ற ஒழுக்கமே உணரத்தக்கது. நகையும் இன்சொல்லும் இருந்தாலும் இகழ்தல் இருக்குமாயின் கேடு. இன்று பலர் ஈதல் புரிகின்றனர். ஆயினும் அவர்கள் பாமரர், ஏழை, புத்தியில்லாதவர் என்று இகழ்ச்சியாகக் கருதியும் கூறியும்

வருகின்றனர். இது தவறு என்பதை வள்ளுவம் சிறப்பாக உணர்த்துகிறது.

பெற முடியாதவற்றைப் பெற முடியுமாயினும் உயர்குடிப் பிறந்தோர், புகழ் குன்றுதலுக்குரிய காரியங்களைச் செய்யார். புகழ் குன்றிய பிறகு, அடுக்கிய கோடி செல்வத்தினாலாய பயனில்லை.

அதனால் திருவள்ளுவர்,

*அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்*
*குன்றுவ செய்த லிலர்*

என்றார்.

உயர்குடிப் பிறந்தார்க்குச் செல்வமின்மை வறுமையன்று. மற்றவர்களுக்கு வழங்க முடியாத நிலைமையே அவர்களுக்கு நல்குரவு. வழங்க முடியாத வறுமை வந்துற்ற போதும், தம்முடைய வழங்குகின்ற பண்பினின்றும் உயர்குடிப் பிறந்தார் மாறுபடார்; தமிழ்ப் புலவருக்குத் தலை கொடுத்தான் குமணன்; செத்தும் கொடுத்தான் சீதக்காதி. இதனை,

*வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி*
*பண்பில் தலைப்பிரிதல் இன்று*

என்று குறள் பேசுகிறது.

நல்ல குலத்தில் பிறந்து வாழ்வோர் வறுமை முதலிய கேடுகளின் காரணமாக வஞ்சனை முதலிய கேடுகளைச் செய்யாமாட்டார்கள்; அவர்களுக்குச் செய்யவும் தெரியாது. இதனை,

*சலம்பற்றிச் சார்பில செய்யார்மா சற்ற*
*குலம்பற்றி வாழ்துமென் பார்*

என்கிறது குறள். ஒரு தனி மனிதனிடத்தில், தகுதியற்ற ஒழுக்கக் கேடுகளைப் பார்க்கிறோம். குறிப்பாக ஈகை, இரக்க வுணர்ச்சியற்றவனாக விளங்குகிறான். அவனை நாம் பார்த்த வுடன் நமக்கு அவன்மீதே சினம் ஏற்படுகிறது. ஆனால் திருவள்ளுவர் அவனை ஆராயவில்லை. அவனுடைய தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்த குலத் தினையே ஆராய்கின்றார்; நம்மையும் ஆராயச் சொல்லு கின்றார்.

பழங்காலத்தில் அரசன் ஒருவன் இருந்தான். அவன் வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்றான். ஆங்கு அவனுக்குத் தண்ணீர்த் தாகம் எடுத்தது. சுற்றிலும் தண்ணீர் கிடைக்கவில்லை. அவனுடைய அமைச்சர் முதலாயினோர் தண்ணீர் கிடைக்காமல் போனதால் சாலை ஓரத்தில் வெள்ளரிக்காய் போலக் காய்த்துக் கிடந்த ஒன்றைப் பறித்து அரசனுக்குக் கொடுக்க எண்ணினர். அமைச்சர் முதலாயி னோர் இங்ஙனம் பேசிக் கொண்டதைக் கேட்டுக் கொண்டிருந்த, பார்வையற்ற ஒருவன், அது வெள்ளரிக்காய் அல்ல என்று சொல்லித் தடுத்தான்.

“பிறவிலேயே பார்வையற்ற ஒருவனுக்கு இது வெள்ளக்காய் அல்லவென்று எப்படித் தெரியும்?” என்றனர் அமைச்சர் முதலாயினோர். அதற்கு அவன் “எனக்குக் கண்கள்தாம் குருடு; நான் கருத்திற் குருடன் அல்லன்” என்று கூறி, “இந்தக் காய் காய்த்துக் கிடக்குமிடம், பலரும் நடமாடும் பொதுவழி; இந்தக் காய் தின்னக்கூடியதாக இருக்குமானால், பலரும், பறித்துத் தின்றிருப்பார்கள். இது பயனற்றது என்பதனாலேயே வாளா கிடக்கிறது” என்று கூறினான்.

அரசன் பார்வையற்றவனான அவனுடைய நுண் ணறிவைப் பாராட்டி அவனுக்கு நாள்தோறும் ‘ஒருவேளை’ சோறு போட உத்தரவிட்டான். ஆனால் அவனோ, அந்த ஒருவேளைச் சோற்றில் மனநிறைவு கொள்ளவில்லை.

காரணம், சோறு பற்றாக்குறை யல்ல. நாடாளும் அரசன் உயர்குடிப் பிறப்பாளனாக இல்லாது இருக்கிறானே என்று தான் கவலையுற்றான்.

"அரசன் உயர்குடிப் பிறப்பாளனாக இருந்திருப்பின், இயற்கை அறிவினைக்கண்டு பெரிதும் பாராட்டிப் பொன்னும் பொருளும் நிறைய அள்ளிக் கொடுத்து என்னுடைய தரித்திரத்தை ஓட்டியிருப்பான். ஆனால், அரசனோ தரித்திரம் பிடித்தாற்போல் 'ஒருவேளைச் சோறு' என்று உத்தரவிட்டான். நான் இந்த அரசனைக் குற்றமாகக் கருதவில்லை. அவன் பிறந்த குடி ஆராய்வதற்குரியது" என்றான்.

*நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்*
*குலத்தின்கண் ஐயப் படும்*

என்ற குறள் இதனை எடுத்துக்காட்டுகிறது. மற்றை எல்லாத் தவறுகளும் எளிதில் மறைக்கப்பெறும்; மறக்கப் பெறும். ஆனாலும் ஒருவனும் ஒருத்தியும் கூடிநடத்தும் மக்கள் தோற்றத்திற்குக் காரணமாகிய மனையற வாழ்க்கையில் தோன்றும், தரக்குறைவுகள் சீக்கிரம் மறைவதில்லை; மறக்கப் பெறுவதும் இல்லை.

காரணம், அவர்களுடைய கூட்டு முயற்சியால் உருவாக்கப் பெற்ற தரக்குறைவான மக்கள் நாட்டில் நடமாடுகிற வரையில் அவர்களுடைய மனைவாழ்க்கை ஐயப் பாட்டிற்குரியதாக-இகழ்ச்சிக்குரியதாக விளங்கும். ஆதலால், மனைவாழ்க்கை நடத்துவோர் தம்முடைய வழித் தோன்றல் களின் நலம் கருதியும் தங்களுடைய புகழ் கருதியும் தரங் குறையாமல் இனிய நல்லுணர்வுகளோடு வாழ வேண்டும் என்பதை நினைவிற்கொள்க.

நிலத்தின் இயல்பை நிலத்தில் இட்ட வித்து முளைக்கும் நிலையிலேயே காட்டும். முளை செழுமையாக

வெளிப்படுமாயின் நிலம் செழுமையானது. அதுபோல உயர்குடிப் பிறந்தார் இயல்பு அவர் வழங்கும் சொற்களாலேயே அறியப்பெறும்.

காற்று, அது படர்ந்து வரும் வழியில், நிலத்தில் கிடந்த பொருள்களின் தன்மையை மணத்தால் காட்டும். காற்று படர்ந்து வந்த வழியில் கிடந்த பொருள்களின் இயல்பிற் கேற்றவாறு அமையும். அதுபோல் குடியிற் சிறந்தாருடைய மனத்தில் குடிப்பிறப்புற்குரிய உயர் பண்புகள் அமைந்து கிடப்பதை அவர்தம் வாய்ச்சொல் காட்டும். உயர்குடிப் பிறந்தாரின் வாய்ச்சொற்கள் கனிவுடையனவாக-பயன் தரத் தக்கனவாக இருக்கும். இதனை,

*நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்*
*குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்*

என்று குறள் ஓதுகிறது.

நலம் வேண்டும். அந்நலனையடைய வழி, நாணமுடையனாதலேயாம். நாணமுடைமை எல்லா நலனும் தரும். நாணம் என்பது உடலால் கூனிக் குறுகும் வெட்கமன்று. பழி பாவங்களுக்கு அஞ்சுதலே நாணமாகும். அது போல உயர்குடிச் சார்பும், பெருமையும் வேண்டுமெனில் பணிவு வேண்டும். எங்கே பணிதல்? தம்மினும் செல்வத்தில் அதிகாரத்தில் உயர்ந்தோர்க்கு எல்லாரும் பணிவர். அது பணிவா? இல்லை, நடிப்பு! திருவள்ளுவர் யார்க்குப் பணிய வேண்டும் என்கிறார். யாவரிடத்தும் பணிதலே சிறப்பு என்கிறார். இதனை,

**நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும்**
**குலம்வேண்டின்**
**வேண்டுக யார்க்கும் பணிவு**

என்றார். இதனையே "புரவலன் போலும் தோற்றம் உறழ்கொள இரவன் மாக்களின் பணிமொழி பயிற்றி" என்று அகம் பேசுகிறது.

உயர்குடிப் பிறந்தார் எதை இழந்தாலும் இழப்பர். தன்னுடைய குடியின் சிறப்புக்குன்ற-சிறப்புச் சிதைய விரும்ப மாட்டார்கள். உயர்குடிப் பிறந்தார் புகழ்பெறும் பொழுதும் கூட, முறையாகப் பேராண்மைச் செயல்களின் மூலமே புகழினைப் பெறுவர். சின்னஞ்சிறு செயல்களைச் சந்து பொந்துகளில் செய்து, புகழினைப் பெற, உயர்குடிப் பிறந்தார் கருதமாட்டார்கள். உயர்குடிப் பிறந்தார் பெருக்கத்தில் பணிவோடு இருப்பர். அவர்கள் அடக்கம் ஆழ்கடலினும் பெரிது. அவர்களே, இயற்கைக் கேடுகளினாலாவது, வேறு பிற காரணங்களினாலாவது வளங் குன்றுவார்களாயின் தம்முடைய பெருமையை-தம்முடைய குடிப்பிறப்பின் பெருமையை உயர்த்தியே பிடிப்பார்கள். ஒருபொழுதும் தாழ விடமாட்டார்கள். இதனை,

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு

என்று குறள் கூறுகிறது. சுருக்கத்து வேண்டும் உயர்வு என்றால், பணிதலுக்கு மாறான உயர்வு அல்ல; அகங்காரமும் அல்ல; ஏழையராகி இகழ்ச்சி சொல எளிதிற் போதலைத் தவிர்ப்பதே உயர்வு என்று கருதப்படுகிறது.

நம்முடைய தலையில், நமக்கு அழகும், பாதுகாப்பும் கொடுப்பதற்காக அழகிய ரோமங்கள் வளருகின்றன. இவை அடிக்கடி வீழ்தலும் உண்டு. அங்ஙனம் வீழ்ந்த ரோமங்களைக் கொண்டு, ஒன்றாக்கிப் பூண் முதலிய கட்டி, 'சவுரி' என்று பெயரிட்டு விலை வைத்து விற்பார்கள். அந்தச் 'சவுரி'க்குப் பூண்களும், பாதுகாப்பும், பெட்டிகளும் இருந்தாலும் அவை ஒரு முழுமாக இருப்பவை ஒன்றரை முழுமாக வளர்ந்து

விடுவதில்லை. ரோமங்கள் தலையில் இருக்கிறவரையில் அவற்றுக்கு வளர்ச்சி உண்டு; அவை கீழே வீழ்ந்து விட்டால் வளர்ச்சி இல்லை.

ஒரோ வழி, சேர்ந்த இடத்தின் காரணமாக 'சவுரி'க்கு மதிப்புக் கிடைக்கலாம். ஆனாலும், இயற்கைக்குள்ள மதிப்பு இல்லை. இந்த அழகான சாதாரணச் செய்தியை எவ்வளவு சிறப்பாக மானம் என்ற பேரொழுக்கத்தோடு சேர்க்கிறார் திருவள்ளுவர்! மாந்தரும் தம்முடைய மனித நிலையில், உயர்குடிப் பிறப்பு நிலையில் நின்று ஒழுகினால், மேலும் வளர்வர்; புகழினைப் பெறுவர். அங்ஙனமின்றி, தமது நிலையினின்றும் இழிந்து செயல்கள் செய்யின் தம்மையும் இழந்து, தமது குடிப்பிறப்பின் சிறப்பினையும் இழக்கின்றனர் என்பதை,

> *தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்*
> *நிலையின் இழிந்தக் கடை*

என்ற குறள் கூறுகிறது. குன்றனைய வாழ்க்கையையும் கூட, ஒரு குன்றிமணி அளவு குற்றம் கெடுத்துவிடும். மிகப்பெரிய மலையைச் சிற்றுளி உடைத்து நொறுக்கவில்லையா? உருத்தும் பருத்தும் உள்ள மரத்தினைக் கறையான் அரித்துத் தின்னவில்லையா? என்பதனை உணர்க.

பெருந்தன்மையும் குடிப்பிறப்பும் கெட்டவிடத்து வாழ்தல், "ஊன் ஓம்பும் வாழ்க்கை" என்று திருவள்ளுவர் நையாண்டி செய்கிறார்.

> *மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை*
> *பீடழிய வந்த விடத்து*

என்னும் குறளை நினைக. சாதாரண-ஒன்றுமறியாத கவரிமான் கூட மயிர் நீப்பின் வாழ்வுதில்லை. அது போல உயர்குடிப் பிறந்தோர் மானம் போயின் உயிர் வாழார்.

அதற்குப் பாண்டியன் நெடுஞ்செழியனும், சேரமான் கணைக்கால் இரும்பொறையும் சிறப்பான சான்றுகளாவர்.

உலகு புகழினை ஏத்துகிறது; ஒளிபடைத்த புகழினை ஏத்துகிறது. எத்தகைய ஒளியை? தமக்கு இழிவு வந்துழி, உயிரைக் கொடுக்கும் சான்றோரின் ஒளிபடைத்த புகழையே உலகு ஏத்துகிறது. இதனை,

இளிவரின் வாழாத மான முடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு

என்ற குறளால் அறிக.

நம்முடைய நாடு பாரத நாடு. நாமனைவரும் பாரத குலம். இந்தப் பாரத குலத்துக்கு ஏற்ற நாட்டொழுக்கங்களை நாம் சிறப்பாகப் பெற்று, சிறந்த குடிமைப் பண்புகளோடு, நாணமும், மானமும் போற்றி வாழவேண்டும் என்பதே திருக்குறள் கூறும் கருத்து.

## பெருமையும் சால்பும்

மனிதன் இவ்வுலக வாழ்க்கையில் பெறுதற்குரிய செவ்விகளை – குணங்களைப் பெரிதும் உடையனாகி அவற்றின் காரணமாக மற்றவர்களால் மதிக்கப்படுதல் பெருமை என்ற சிறப்பாகும். ஊன் உடம்பு எடுத்த பல வகை உயிரினங்களுக்குள்ளும் மனிதன் பிரித்துச் சுட்டியறியப் படுதலும் பேசப்படுதலும் அவனுடைய சாதனைகளைப் பொருத்தும் பெருமைகளைப் பொருத்துமேயாம். அங்ஙனம் வாழாதார் வாழ்வு மதிக்கப் பெறுவதில்லை. ஏன்? மனித வாழ்வாகவே கருதப்படுவதில்லை. பெருமை அரிய விலைகொடுத்துப் பெறக்கூடிய ஒன்றாகும். என்ன விலை? பொன்விலையா? இல்லை; இல்லை! சாதனையே விலை! செய்தற்கரிய சாதனைகளைச் சாதிக்க வேண்டும் என்ற

ஊக்கமிகுதியே பெருமைக்கு அடிப்படை. செயலும் சாதனையுமின்றி உண்டுடுத்து வாழ்வோம் எனக் கருதுதல் இகழ்ச்சி பொருந்திய வாழ்க்கை.

பெருமை, பிறர் கொடுக்க வருவதா? அல்லது கடைகளில்–சந்தைகளில் கொள்முதல் செய்யும் விலைச்சரக்கா? இல்லை! பெருமை, தானே முயன்று பெறக்கூடிய ஒன்று. மகளிர் மனம் மெல்லியது; கவர்ச்சிகளுக்கு ஆட்படக்கூடியது. அதுபோலவே, மற்றவர்களைத் தன் கவர்ச்சியால் தன் பால் ஈர்க்கக் கூடியது. ஆனால், இந்த மென்மையில் திண்மை ஒன்று வேண்டும். அதுதான் கற்பு. மென்மையும் கவர்ச்சியும் இழுக்குடையன அல்ல. ஒரு மனம் கொண்டு, ஒழுகுவோர், ஒழுக்கமெனும் கற்பும் இலட்சிய வேட்கையும் கொண்டு ஒழுகுவோர் பெருமையைப் பெறுவர். இதனை,

> ஒருமை மகளிரே போலப் பெருமையும்
> தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு

என்றார் வள்ளுவர்.

பெருமை சாதாரணச் செயல்களால் கிடைக்கக் கூடியதன்று. அதற்கு அதிக விலை கொடுக்கவேண்டும். சிலர் எளிய–சாதாரணக் காரியங்களைச் செய்து விட்டுக்கூடப் பெருமையை எதிர்பார்க்கின்றனர். ஏன்? சிலர் மாடிவீட்டில் பிறந்ததற்காகப் பெருமை கேட்கின்றனர். சிலர் உடுத்தியுள்ள உடைகளுக்கும் அணிகலன்களுக்கும் பெருமை கேட்கின்றனர். சிலர் கொண்டுள்ள கோலங்களுக்கும் பெருமை கேட்கின்றனர். சிலர் பெற்றுள்ள அதிகாரங்களுக்குப் பெருமை கேட்கின்றனர். ஏன்? சிலர் ஒன்றுமில்லாமலே பெருமையை எதிர்பார்க்கின்றனர்.

பெருமையென்பது கேட்டுப் பெறுவதும் அல்ல. கொடுத்துப் பெறுவதும் அல்ல. அது சாதனையில் பிறப்பது. பெருமையின் நாட்டமுடையோர் சோதனைகளை ஏற்பர்;

துன்பங்களை ஏற்பர்; மரணத்தையும் வலிந்து ஏற்றுக் கொள்வர். அவர்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள்-கடமைகள் அருமையானவை; ஒளியுடையவை. இதனை,

> *பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
> *அருமை யுடைய செயல்*

என்று கூறுகிறது குறள்.

இவ்வுலகில் நிறையக் கற்கள் உண்டு. எல்லாக் கற்களும் வைரக் கற்களாகுமா? வையத்தில் சோற்றுக்கும் துணிக்கும் அல்லாடும் கோடானுகோடி உயிர்கள் உண்டு; மனிதர்கள் உண்டு. எல்லாரும் உயிராகப் பிறந்தவர்கள்தாம். பிறப்பினால் ஒத்த நிலையினரேயாம். அதனாலேயே சிறப்புத்தன்மை பொருந்தியவர்கள் ஆக மாட்டார்கள்.

சிறப்புத் தன்மை என்பது, உருவாக்கிக் கொள்ளப் பெறுவது. இந்தச் சாதனையைச் செய்து கொள்ளும் பொறுப்பு அவரவர்களிடமே யிருக்கிறது. ஊனுடல் வயிற்றில் பசியிருப்பதைப்போல, உயிரியல் வாழ்க்கையில் புகழ்ப் பசியை அமைத்தான் இறைவன். ஆனால் பலருக்கு ஊனுடல் பசியே தெரிகிறது. வேளை தவறாது உண்கின்றனர். உயிர்ப் பசியாம் புகழ்ப் பசியைப் பலர் அறிவதில்லை; உணர்வ தில்லை. இப்பசியைத் தணிப்பதற்குரிய வேலையை-கடமை வேள்வியை-வேளை தவறாமல் செய்வதில்லை.

> *பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா*
> *செய்தொழில் வேற்றுமை யான்*

என்பது குறள்.

சிலர் சாதியால் உயர்ந்த வீட்டில் பிறந்து வாழ்வர்; சிலர் அடுக்கிய செல்வத்தால் உயர்ந்த மச்சு வீடுகளில் பிறந்து வாழ்வர். சிலர் தோற்றத்தால் உயர்ந்த கோலங்கள் கொண்டு. வாழ்வர். இவையெல்லாம் உண்மையிலேயே மேன்மையை-பெருமையைத் தரா. சிலர் எளிய குடிசையில் தோன்றி வாழ்

வர்; சேரியில் பிறந்து வாழ்வர்; தோற்றங்களும் இல்லாம லிருக்கலாம். ஆயினும், கொண்டொழுகும் நிலையால், அரிய சாதனையால், மேலானவர்களாக மதிக்கப்படுவர்.

அரிமர்த்தன பாண்டியன் அரசு நிலையால் மேலான வனே. ஆயினும், மாணிக்கவாசகரின் மேலாண்மையின் முன்னே ஈடுகொடுத்து நிற்க முடியவில்லை. பல்லவப் பேரரசன் அரசு நிலையால் மேலானவனே. ஆனால், அப்பரடிகளின் சீலத்தின் முன் அவனால் நிற்க முடியவில்லை. இதனை,

> மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
> கீழல்லார் கீழல் லவர்

என்ற குறளால் அறிக.

பெருமையுடையாருக்கும், அஃதில்லாதாருக்கும் வெளிப்படையான அடையாளம் ஒன்று உண்டு. இயற்கை யில் பெருமையுடையார் முற்றிய நெற்கதிர் தலைசாய்ந்து கிடப்பதைப் போல அடங்கிக் கிடப்பர். மரத்தின் உயிர் வாழ்க்கைக்கும்-பசுமைக்கும்-பயன்படும் தகுதிக்கும் உறுப் பாயமைந்துள்ள வேர், மண்ணில் மறைந்து கிடக்கும். அடுக்கிய சிறப்பினையுடைய மாளிகையினைத் தாங்கும் அடிக்கல் மண்ணில் மறைந்து கிடக்கும். இவை எவற்றையும் ஏற்றுக் கொள்ளும்.

அதுபோல, பெருமைக்குரியவர் எதையும் இகழார்; எவரையும் இகழார். ஆனால், சிறுமைக் குணமுடையவரோ தருக்கித் திரிவர்; கழனிகளில் பசையற்ற பதர் நிமிர்ந்து ஆடுவதைப்போல ஆடுவர்; தம்மினும் உயர்ந்தோரை-பெருமைக்கு உரியோரை அணுகி, அவர்தம் நெறியில் நின்று ஒழுகமாட்டார். இகழ்ச்சியும், அலட்சியமும், தருக்குதலும் தலைதடுமாறுதலும் சிறியோரின் இலக்கணம். இதனை,

*சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்*
*பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு*

என்ற குறளால் அறியலாம்.

சிறுமை தன்னையே பாராட்டிக்கொள்ளும், ஆம்; ஐயோ, பாவம்; வேறு யாரும் பாராட்ட இருந்தால்தானே! பெருமையுடையோரைப் பலர் பாராட்டுவார்கள். ஆயினும் அவர்கள் பெருமைப்படார்; தம் புகழ்கேட்க நாணுவர்; "அடியேன்" என்றும் "தாசன்" என்றும் பணிவுரை பகிர்ந்து நடப்பர்; என்றும் எப்பொழுதும் யார் மாட்டும் பணிவுடைய வராகவே இருப்பர். சிறுமையுடையார் தம்மைத் தாமே வியந்து, தம்மைத் தாமே ஒப்பனை செய்துகொண்டு, தம்மைத் தாமே புகழ்ந்துகொண்டு, ஒரோ வழி கூலி கொடுத்தும் புகழ்பெற்று, நிழற்படங்களும் எடுத்துக் கொள்வர்.

பெருமையென்பது, பிறர் போற்றித் தமக்கு அணியாக ஏற்றுக் கொள்ளுதலால், சிறப்படைகிறது; பெருமையாகிறது. சிறுமையுடையோரைப் பாராட்டி ஏற்று அணியக்கூடியது ஏதும் இல்லாததால் அணிந்து கொள்வாரும் இல்லை. இந்த ஏக்கத்தால் அவர்களே தம்மை அணிந்துகொள்வர். பித்தளையை விளக்கவேண்டும். தங்கத்தை விளக்க வேண்டிய அவசியமில்லை. பித்தளை தங்கமானால், புளியின் அவசியமும் கூடும். பெருமை கொண்டாடும் சிறுமை பித்தளை நிகர்த்தது; பெருமை சொக்கத் தங்கம் நிகர்ந்தது. இதனை,

*பணியுமாம் என்றும் பெருமை சிறுமை*
*அணியுமாம் தன்னை வியந்து*

*பெருமை பெருமித மின்மை சிறுமை*
*பெருமிதம் ஊர்ந்து விடல்*

என்னும் குறள்களால் அறிக.

பெருமை பெருமைக்குரியது. அது குணங்களையே பார்க்கும்; குற்றங்களை நாடாது; குற்றத்தினை மறைக்கும். சிறுமையோ குணங்களை நாடாது; குற்றங்களையே காணும்; குற்றங்களைத் தூற்றும்; பிறர் குற்றத்திலேயே குளிர்காயும். பெருமை புகழ்ச்சியால் புகழ்பெறும். இகழ்ச்சியால் சிறுமை, பெருமை பெற முயலும். உணர்வில் தோன்றுவனவெல்லாம் தோன்றிய உணர்வு நிலைகளையே பிரதிபலிக்கும். இதுவே நியதி. புகழுணர்வில் தோன்றுவனவெல்லாம் புகழே பெற்று விளங்கும்; இகழுணர்வில் தோன்றுவனவெல்லாம் இகழ்ச்சியே பெற்று விளங்கும்.

*அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்*
*குற்றமே கூறி விடும்*

என்பது குறள்.

"குற்றமே கூறிவிடும்" என்பதனால், குணங்களைக் கூற மாட்டார்கள் என்று உணர்த்தப்பெற்றது. பல குணங்களால் உயர்ந்து பெருகிய சிறப்பின் காரணவீணான வம்புகளுக்கு ஆளாகமாட்டார்கள். தம்முடைய அறச் செயல்களுக்குத் துணையாக இருப்போரைத் தாழ்ந்து துணையாக ஏற்றுக் கொள்வர். சான்றோருக்குப் பகைவர் இரார். ஒரோவழி இருந்தாலும் அந்தப் பகைவரை மனம் மாற்றித் துணை யாக்கிக் கொள்ளவே சான்றோர் முயற்சி செய்வர்.

*ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்*
*மாற்றாரை மாற்றும் படை*

என்பது குறள்.

சாதாரண மனிதர்கள் பெரிய மனிதர்களிடத்தில் தோற்பதைப் பெருமையாகக் கருதுவர். அதாவது சாதாரண மனிதர்கள் தம்மினும் வலியாரிடத்துத் தோல்வி கொள்வது இயற்கையே. அதைப்பெரிதெனக் கருதுதல் இழுக்காகும். சான்றோர் தமக்கு ஒப்பில்லாதாரிடத்தில் தோல்வி கிடைத்

தாலும் தோல்வியை ஏற்றுக்கொள்வர். அங்ஙனம் ஒப்புக் கொள்ளுதல்தான் சால்பினை உரைத்துக் காட்டும் ஒழுக்கமாகும். இதனை,

> *சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி*
> *துலையல்லார் கண்ணும் கொளல்*

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

தமக்கு இனியன செய்தார்க்குத் திரும்ப இனியன செய்தல் ஒருவகை வாணிகமேயாம். வாழ்க்கை நைப்பாசை களில் ஊறியோர் இனியன செய்தார்க்கு இனியன செய்வர். இஃது ஒன்றும் பாராட்டுக்குரியதல்ல. இன்னாதன செய்தார்க்கும் இனியன செய்தலே வாழ்க்கையின் சிறப்பும் பெருமையுமாகும். அங்ஙனம் செய்தலே சால்புடைமையின் பயன்.

> *இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்*
> *என்ன பயந்ததோ சால்பு*

என்பது குறள். வறுமை முதலியன சாதாரண மனிதரை அழிக்கும். ஆனால், சான்றோருக்கு வறுமை இழிவன்று. சான்றோர் தம்முடைய சால்பொழுக்கத்தில் உறுதியுடன் இருப்பாராகில் வறுமை, அழிவையோ இழிவையோ தராது. இதனை,

> *இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்*
> *திண்மையுண் டாகப் பெறின்*

என்பதால் அறியலாம். ஊழி பெயர்தல் முதலிய துன்பங்கள் வந்துற்றாலும், சான்றோர் தம் ஒழுக்கத்தினின்றும் மாறமாட் டார்கள்.

> *ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு*
> *ஆழி எனப்படு வார்*

என்பது குறள். இந்நிலவுலகம் நிலைபெற்றிருக்கிறது. கோடானுகோடி மக்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. அங்ஙனம், சுமந்து நிற்பது சான்றோரின் இயல்புகளைக் கண்டு மகிழ்ந்தேயாகும். சான்றோர் சால்பிற் குன்று வாராயின் நிலம் வறிதே மக்களைச் சுமக்காது.

*சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம்தான்*
*தாங்காது மன்னோ பொறை*

என்பது குறள்.

வள்ளுவர் உலகம் பெருமையுடைய உலகம்; பெருமைப்படுத்தும் உலகம். வள்ளுவத்தின் பெருமை சால்பில் தங்கி இருக்கிறது. சால்பு தன்னைத்தான் கொண் டொழுகுவதில் அமைந்து கிடக்கிறது. அங்கேயே இன்ப உலகமும் இருக்கிறது.

## பண்புடைமை

தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் ஆழமான, அகல மான உறவை ஏற்படுத்தி, அந்த உறவை என்றும் அகலாமல் பேணிப் பாதுகாக்கும் ஒழுக்கம் பண்பாடு. விளையும் நிலத்தினை விளைவதற்குரிய ஆற்றலைப் பெறுதற்குச் செய்யும் முயற்சியைப் பண்படுத்தல் என்று கூறுகிறோம். பண் படுத்தப்பெற்ற நிலம், உயர்நிலை பேணுதற்குரிய உணவினை வழங்குகிறது. அதுபோல, உயிர்க்குச் சிறந்த இன்ப நல்லுணர்வுகளைப் பண்படுத்தப் பெற்ற உள்ளம் வழங்கு கின்றது. பெருமை, சான்றான்மை முதலிய சிறப்பியல்புகள் அமையப்பெற்றும் பலரோடு ஒத்து இயைந்து வாழ முடியாது போனால் பயனென்ன?

பலர் கூடி இணைந்து வாழ்வதற்கே வையகம். இந்த இணைந்த கூட்டு வாழ்க்கைக்குப் பல சமயங்களில் பெருமை

யின் பேரால் முட்டுக்கட்டையிடுவோர் உளர். சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்கு எதிரான பெருமை பெருமையன்று; சிறுமையேயாம். பலரோடு பழகி அவர்தம் இயல்பறிந்து தம் நிலை வழுவாமல் அவர்தம் நிலையொடு ஒத்து ஒழுகிப் பழகும் இயல்பே பண்பாடு. "பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்" என்பது கலித்தொகை.

பண்புடைமையென்ற ஆன்ற ஒழுக்கத்தை எவ்வழியில் அடைதல் இயலும்? பெறுதற்குத் தனியே ஒரு முயற்சி தேவையில்லை. உயர்ந்தோர், தாழ்ந்தோர் பாராமல் யார் மாட்டும் எளியராகப் பழகும் இயல்பு அமைந்துவிட்டால், பண்புடைமையும் எளிதாக வந்து அமைந்துவிடும். எளிமையாகப் பழகினால் மட்டும் போதாது. பிறர் இயல்பறிந்து செவ்வி பார்த்து அதாவது சந்தர்ப்பம் சூழ்நிலை பார்த்து நடந்து கொள்ளவும் வேண்டும். இதனை,

*எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்*
*பண்புடைமை என்னும் வழக்கு*

என்று குறள் கூறுகிறது.

மக்கள் யாவருக்கும் உறுப்புகளாலாய ஒப்பு கிடைத்து விடுகிறது. உறுப்புகளால் ஒத்திருப்பதாலேயே ஒருவர் இன்னொரு மனிதரோடு ஒத்து விடுவதில்லை. பெருமையும் சிறுமையும் உறுப்புகளால் அமைந்து விடுவதில்லை. உறுப்புகளைப் பயன்படுத்தும் பண்பட்ட வழிகளாலேயே, சிறப்பு வந்து பொருந்துகிறது. பிணநிலையிலும் மக்கள் உறுப்புகள் உண்டு. அந்த நிலையில் அந்த உறுப்புகளை விரும்பி நேசிப்பார் யார்? யாரும் நேசிக்கமாட்டார்கள். மாறாக வெறுப்பர். மக்கள் தம்முள் ஒத்த நிலையினராதல், பண்பின் வழியிலேயே சாலும். வேறு எவ்வழியிலும் இயலாது. ஒருவர் மற்றவரை நோக்கித் தம்முடைய பண்பாட்டு நிலையினை உயர்த்திக் கொண்டாலே, ஒப்புடையவராகலாம். இதனை,

> உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
> பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு

என்று குறள் கூறுகிறது.

மனிதவாழ்க்கை மிகவும் அருமையானது. இதன் அருமையறிந்து பயன்படுத்துவோர் மிகச் சிலரேயாம். மனித உலகத்தை நடைமுறைப்படுத்தி நிலைபேறுடையதாகச் செய்யும் பேரியல்புகள் இரண்டு. ஒன்று நீதி; பிறிதொன்று அறம். நீதி உள்ளச் சார்புடையது; அறம் செயலின் பாற்பட்டது. இவ்விரண்டு இயல்புகளையும் வாழ்க்கையைப் பயனுடையதாக வாழ விரும்புவர்கள் அனைவரும் விரும்பி ஏற்றுப் போற்றுவர்.

இன்றைய உலகியலில் பலர் பயனடையவே விரும்புகிறார்கள். காதல், கணவன்- மனைவி வாழ்க்கை, நட்பு, உறவு முதலிய எல்லா இடங்களிலும் "உன்னால் எனக்கென்ன லாபம்?" என்ற கேள்வியே கேட்கப்படுகிறது. பயன்பட விரும்புவதில்லை. பயனடைதலைவிடப் பயன்படுதலே சிறப்புடைய வாழ்க்கை. நீதியும் அறமும் உடையோர் மற்றவர்கள் பயன் கொள்ளத்தக்க வகையில் வாழ்வர். இதனைப் "பயனுடையார்" என்று குறள் கூறுகிறது. பயனுடையார் பிறருக்கும் பயன்பட வாழ்வர். அவ்வழி தமக்கும் பயன்படுவர். இதனை,

> நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
> பண்புபா ராட்டு முலகு

என்று குறள் பேசுகிறது.

பலர் பழகுவர்; சிரித்து மகிழ்ந்து பேசிப் பழகுவர். ஆனால் பலரிடத்தில் இச்சிரிப்புக்கூட உள்ளத்தின் பொழிவாகிய மகிழ்ச்சியிலிருந்து மலர்ந்த சிரிப்பாக இருப்பதில்லை; செயற்கையாக இருக்கும். சிரிப்பதற்காகச் சிரிப்பதில்லை. வெளிப்படையாக இகழ்ந்து கூற ஆற்றலின்மையின் காரணமாக, சிரிப்பில் மறைமுகமாக இகழ்ந்து கூறுவர். குத்தலும்

கேலியுமாகப் பேசுவர். இது மிகவும் தவறான தீயொழுக்கம், அதனால் "நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி" என்று கூறுகிறது, குறள்.

சிலர், பகைமை காரணமாக இகழ்வர். அஃதும் நல்ல தல்ல. இகழ்தலால் இகழப்படுவாருக்கு எவ்வளவு இழப் புண்டோ, அதே அளவு இல்லை, அதைவிட அதிகமாகக்கூட இகழ்வாருக்கும் இழப்புண்டு. இகழப்படுவோர் இகழ்வாரி னின்றும் விலகிச் சென்றால் புகழ்ச்சியைப் பெறலாம். ஆனால் இகழ்வாருக்கு இகழ்தல் பழக்கமும் வழக்கமும் ஆகிவிடின், பெருமையுடையோரை உறவாகக் கொள்ளும் வாய்ப்பை இழந்து விடுகின்றனர். ஆதலால், பகையுள்ளும் பண்பு பாராட்டுதலே சிறப்பு.

பாராட்டுதலின் மூலம் பாராட்டப்படுபவர்கள் குற்றங் களின் நீங்கிச் சிறப்புறுவர். இஃது இயற்கை. பாராட்டும் பண்பின் மூலம் பாராட்டப்படுவோருக்கு மட்டுமே பயன் இல்லை. பாராட்டுவோருக்கும் உண்டு. பாராட்டுகின்ற குணம்-தெள்ளிய-வற்றாத நீர் ஊற்று உடைய சுனை போன்றது. பாராட்டும் குணம் மேலும் உயர்த்தும். அதனாலன்றோ, இறைவனும் "நந்தம்மை கோதாட்டி" ஆட்கொள்ளுகின்றான். இதனால் நமக்கு மட்டுமா பெருமை? இறைவனுக்கும் பொருள்சேர் புகழ் கிடைக்கிறது.

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு

என்பது குறள்.

சிலருக்குக் கூர்மையான புத்தியிருக்கும்; அறிவிருக்கும்; ஆற்றலும் இருக்கும். ஆயினும் மக்கட் பிறப்புக்குரிய ஒழுக்க இயல்புகளும், ஒத்ததறிந்து வாழும் இயல்பும் பெற்றுப் பண்புடையராக வாழாது போனால், மரம் போன்றவர்கள் என்று குறள் கண்டிக்கிறது. மக்கள் மீதுள்ள இரக்கவுணர்ச்சி

யால் ஒப்புக்காக "மரம் போல்வர்" என்று கூறுகிறது. உண்மையின் அவர்கள் மரம் போன்றவர்களும் அல்லர். மரமாவது பல்லுயிர் மகிழத் தன்னிழல் தருகிறது. உயிரியக்கத் துக்குத் தேவையான காற்றைத் தருகிறது.; காய்களை, கனிகளைத் தருகிறது; மருந்தாகவும் பயன்படுகிறது. திருக்குறளில் பிறிதோரிடத்தில் "மருந்தாகித் தப்பா மரம்" என்ற பாராட்டப்படுகிறது. ஆதலால், பண்பாடில்லாத வர்கள் மரத்தினும் மோசமானவர்கள் என்று கருதுதல் சிறப்பு. இதனை,

> அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண் பில்லா தவர்

என்று குறள் கூறுகிறது.

சிலர், ஒரு சிலரோடு ஒத்து உறுதுணையாக இருந்து வாழமாட்டார்கள். காரணம் கேட்பின் அவர் கோபக்காரர்; சிடுமுஞ்சிக்காரர்; அப்படி, இப்படி, என்றெல்லாம் கூறி "அவருக்கும் நமக்கும் ஒத்துவராது" என்பர். ஒத்துவராமைக் குரிய கீழ்மைக்குணம் இவரிடத்திலா? அல்லது மற்ற வரிடத்திலா? அல்லது இரண்டு பேரிடத்திலுமா? மற்ற வர்கள் தம்மோடு ஒத்துவரவேண்டும் என்று விரும்பு கிறார்களேயன்றி, தாம் மற்றவர்களோடு ஒத்துப்போக வேண்டுமென்று கருதுவதேயில்லை. சிலர் நட்புக் காட்ட மாட்டார்கள். நட்புக் காட்டாதது மட்டுமல்ல; பகைமை கொண்டு தீமையே செய்வர். அவர்கள் மாட்டும் பண்புடையவராகப் பழகுதலே உயர்ந்த சிறப்பு. அங்ஙனம் வாழ இயலாதவரைக் கடையராகவே அறிஞர் உலகம் கருதும். இதனை,

> நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
> பண்பாற்றா ராதல் கடை

என்று குறள் கூறுகிறது.

இந்த உலகியல் மகிழ்ச்சியின் பாற்பட்டது. மகிழ்ச்சிக் காகவே ஏற்பட்டது. இந்த மகிழ்ச்சியை ஒளியூட்டி வளர்க்கப் பகல் வருகிறது. ஆனால், பலர் பகலை இருள் நிறைந்த இரவாக்குகின்றனர். எப்படி? கதிரவன் ஒளிக்கதிர்க் கற்றையை வீசுகிறான். ஏன்? ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து, உணர்வால் உள்ளத்தால் கலந்து சிரித்துப் பேசி மகிழ்வதற்காகவேயாம். அங்ஙனம் வாழ்வோர் எத்தனை பேர்? பகையின் காரணமாக ஒருவரை ஒருவர் பார்த்தாலும் பாராதது போல ஒதுங்கிப் போவோரும் சிலர்; அதுவுமின்றிக் கடுகடுத்த முகத்துடன் உறுமி முறைத்துப் பார்த்துப் போவோரும் எத்தனையோ பேர்.

"முல்லைக் கொடியில் அரும்புகள் பூத்திருக்கின்றன! என்ன மகிழ்ச்சி! அதுபோல மனிதனுக்கு முத்துப்போன்ற பற்கள்! பற்கள் முறுக்கைக் கடித்துத் தின்னப் பயன்படலாம். தவறில்லை. ஆனால் பலர் பகை நினைந்து "நற நற"வென்று. தம் பற்களைக் கடிப்பதைப் பார்த்தால் கொடுமையாக இருக்கிறது. இத்தகையோருக்குக் கலந்து பழகும் பயனடையாமை காரணமாகப் பகலும் இருளாகிறது. இதனை,

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்

என்கிறது குறள்.

ஒரு குடம் நிறையப் பால்; குடித்து வளரக்கூடிய பால்; உணவும் மருந்துமாகப் பயன்படக்கூடிய பால். எனினும் அந்தக் குடத்துப் பாலில் மனிதனின் செயற்கையாகிய நஞ்சு ஒரு சொட்டுக் கலந்தால் என்னவாகும்? மகிழ்வுக்குப் பதில் மரணம்; இன்பத்துக்குப் பதில் துன்பம். செல்வம் மகிழ்ச்சி யின் சாதனம்; இன்பத்தின் ஊற்று. அதுவும் பெருஞ் செல்வ மாயின் எண்ணில் இன்பங்கள் கிடைக்கும். செல்வத்தின் இயல்பு எதுவாயினும், அச்செல்வம் பண்பாடற்றோரிடம்

சிக்குமாயின் அது இன்பத்தைத் தருவதில்லை. மாறாகத் துன்பத்தைத் தரும். இதனை,

> பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
> கலந்தீமை யால்திரிந் தற்று

என்ற குறளால் அறிக.

இந்த உலகத்தின் வரலாறு நெடிய வரலாறு; ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் வரலாறு. எண்ணில் அடங்காத பக்கங்களில்-எண்ணில் அடங்காத கற்பனைகள்-செய்திகள் ஆகியவற்றால் வரலாறு பெருகி வளர்ந்து வந்திருக்கிறது. இப்பொழுதும் வளர்ந்து கொண்டிருக்கிறது. இனிமேலும் வளரும்.

இந்த மனித குலத்தின் வரலாறு இடையீடின்றித் தொடர்வதற்கு எது அடிப்படை? பேரரசுகளா? போர்க் களங்களா? அறிவாற்றல்களா? இல்லை, இல்லை! இவை யனைத்தும் பல சமயங்களில் மனித உலகத்தை அழிக்கவே முயன்றன. அந்த அழிவிலிருந்து மனித உலகத்தைக் காப்பாற்றியது சான்றாண்மையின் முதிர்ந்த பண்பாடுகளே, பண்பாடு உடையவர்களேயாவர்.

இயேசு சிலுவையில் தொங்கிச் சிந்திய செந்நீர் பண்பாட்டின் சின்னம். செந்நீரால் சிலுவை கழுவப் பெறவில்லை. பாபிகளின் பாபம் கழுவப்பெற்றது. நபிகள் நாயகத்தின் புனித தியாகம் பாபத்தைக் கழுவி வரலாற்றுக்குப் புத்துயிர் ஊட்டியது. புத்தரின் போதனைகள் பண்பாட்டின் பொழிவு. அது உலகத்தைத் தொடர் சரித்திர மாக்கியது. ஆட்சி மேலாதிக்கத்தின் கொடிய இரும்புப் பிடியை உடைத்து, கொடிய நீற்றறையைக் குளிர்சாதன மாக்கிய அப்பரடிகளின் தண்கருணை, வரலாற்றை வளர்த்தது.

நம்முடைய தலைமுறையில் அண்ணல் காந்தியடிகள் பகையும் போரும் நீக்கிப் பண்பாட்டு வழியில் நம்மைச் செலுத்தினார். இத்தகு பண்புடையோர் இருப்பதனாலேயே இந்த உலகம் நிலைபெற்று இயங்கிக் கொண்டிருக்கிறது. இதனை, "உண்டாலம்ம இவ்வுலகம்" என்று புறநானூறு போற்றுகிறது.

நிலத்திற்குத் தனியே இயல்புண்டு. ஆயினும் அந்த இயல்புகள் ஏற்றம் பெறுதலும், பயன்படுதலும் மனித ஆற்றலின்பாற்பட்டது. உணர்விழந்த, செயலிழந்த மனிதர்கள் கையில் சிக்கிய நிலம் செழுமையானதாயினும் பயன்படாது. உணர்வும், செயலூக்கமும், திறனும் பெற்ற மனிதர்கள் கையில் பயனற்ற களர்நிலம் சிக்குமாயினும் வளங் கொழித்துப் பயன்படும். ஆக, வளமும் பயனும் நிலத்திலா? மனிதனின் உழைக்கும் தன்மையுள்ள கரங்களிலா? உழைக்கும் திறம்படைத்த கைகளிலேயே மனித உலகத்தின் உயிர் வாழ்க்கை தங்கியிருக்கிறது; வாழ்கிறது; "கைவருந்தி உழைக்கும் நீ தெய்வம்" என்றார் பாரதியார். இதுவும் பண்பாடு. இந்தப் பண்பாட்டின் அடிச்சுவட்டிலேயே உலகம் வளர்கிறது; வாழ்கிறது; நிலைபெற்று இயங்குகிறது. இத்தகு பண்பாளர்கள் எண்ணிக்கையில் சிலரேயாக இருக்கலாம். ஆயினும், இவர்களாலேயே உலகம் வாழ்கிறது. இவர்கள் இல்லையானால், உலகம் மண்ணோடு மண்ணாகப் போயிருக்கும். இதனை,

> பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
> மண்புக்கு மாய்வது மன்

என்ற திருக்குறளால் அறிக.

"ஒன்று பரம்பொருள், நாம் அதன் மக்கள் உலகின்பக் கேணி" என்ற வாழ்க்கையின் பண்பாட்டுச் சுருதியை நாம்

மறந்துவிடக் கூடாது. நற்குணங்களால் உள்ளத்தை வலிவூட்டிக் கொள்ளவேண்டும். பிறருக்கும் பயன்பட வாழ்தல் என்ற உயர்ந்த அற ஒழுக்கத்தில் ஒழுகவேண்டும். மறந்தும் பகைமை பாராட்டக் கூடாது. யாரையும் நினைப் பாலும், சொல்லாலும் இகழக்கூடாது. இத்தகு பண்பிற் சிறந்த வாழ்க்கையையே திருக்குறள் உலகம் காட்டுகிறது. திருக்குறளின் பண்பாட்டுலகத்தில் நாமனைவரும் வாழ வேண்டும்.

## பயனற்ற செல்வம்

உலகியல் வாழ்க்கையின் அமைப்பும் வளர்ச்சியும் செல்வத்திலேயாம். செல்வம் ஒரு சிறந்த கருவி. செல்வம் இன்பத்தின் ஊற்று; மகிழ்ச்சியின் அடிப்படை; அறத்தின் விளைநிலம். ஆயினும் தகுதியில்லாதார் கையில் செல்வம் சேருமாயின் துன்பத்தைத்தரும். செல்வமுடைமையைவிடச் செல்வமுடையாருடைய தகுதி, தரம், திறன் கவனத்துக் குரியன. செல்வத்தின் பயன், செல்வம் உடையானைப் பொறுத்து அமைவதேயாம்.

உயிர்கள் முழு நிறைத் தகுதியைப் பெற்று வளர்வதற்கே வாழ்க்கை. வாழ்க்கையில் உயிர்களுக்கு வழங்கப்பெற்ற உரிமை நுகர்தலும். அனுபவித்தலுமாகும். நுகர்ந்து அனுபவிப் பதன் வழி உயிர்களின் வேட்கை தணிகிறது. வேட்கை தணிந்துழி முழுநிறைவுடையன ஆகின்றன. உயிர்களின் நுகர்ச்சிப் பொருள்களைப் பெறுதற்கே செல்வம். செல் வத்தைப் பெற்றவன் அதன் பயனைத் துய்க்காமலும், அனுப விக்காமலும் இருப்பானாகில், அவன் இறந்தவனாவான். உயிருடலொடு கூடிய வாழ்க்கையின் இயல்பு நுகர்தல். அனுபவித்தல், மகிழ்தல், மகிழ்வித்தல், இன்புறுதல் இன்புறுத்தல் ஆகியனவாம். இவற்றைச் செய்யாதவர்களின்

வாழ்க்கை பயனற்றுப் போவதால் இறந்தவர்களாவர். பயனுடைய வாழ்க்கையே வாழ்க்கை, இதனையே குறள்,

*வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்*
*செத்தான் செயக்கிடந்த தில்*

என்று கூறி விளக்குகிறது.

திருவருளால் கிடைத்த பிறப்பே உயிர்க்கு மருந்து. ஆனால், இறைவன் விதித்த நெறிமுறைகளாகிய பத்திய வாழ்க்கையை மேற்கொள்ளத் தவறினால், மீண்டும் மீண்டும் செத்துப் பிறக்கும் அவலத்திற்கு ஆளாக நேரிடும். பொருள் சக்தி படைத்ததுதான். ஆனாலும் தனியே பொருள் ஒன்றும் சாதிக்காது. ஆனால், அதனைப் பெற்றவன் உலகத்தில் எதையும் சாதிப்பான். ஆயினும் பொருளுடைமை யினாலேயே எல்லாம் ஆகிவிடாது. பொருளைப் பயன் படுத்தும் வகையினாலேயே அமையும்.

வாழ்க்கையின் பயன் நோக்கியே பொருளை ஈட்டத்தொடங்குகின்றனர். ஆனால், பொருள் கையில் புழங்கத் தொடங்கியவுடன் பொருளின் பயனைவிடப் பொருளுக்கே முதன்மையான இடத்தைக் கொடுத்து, தாமும் துய்க்காமல் மற்றவர்களுக்கும் கொடுத்து மகிழாமல், பொருளை இவறிக் கூட்டிப் பாதுகாக்கத் தொடங்கி விடுகின்றனர். இதனால், மனிதன் பொருளின் பயனை இழப்பதோடு துன்பத்தில் சிக்கி, தன் ஆன்மாவைத் தானே தற்கொலை செய்து கொள்ளுகிறான். இதனால், பிறப்பு நீங்கக் கிடைத்த பிறப்பு மீண்டும் மயக்கத்தோடு கூடிய பிறப்பையே உண்டாக்குகிறது.

*பொருளான்ஆம் எல்லாம்என் றீயா திவறும்*
*மருளானாம் மாணாப் பிறப்பு*

என்ற குறள் இதனை விளக்குகிறது.

உலகியலில் செல்வத்துக்கும், ஆடம்பரத்துக்கும் மதிப்பு இருக்கிறது. வெறும் செல்வமுடைமைக்குத் தரப்பெறும் மதிப்பே சமுதாயத்தின் ஒழுக்கக் கேடுகளுக்கு அடிப்படை. ஆடவர் இம்மைக்கும் மறுமைக்கும் பெற்று மகிழக்கூடியது புகழேயாம். புகழுடையவர்கள் நிலத்திற்கு வளம் தருபவர்கள். பிறரை மகிழ்வுறுத்தலின் மூலம் வரும் புகழே சிறப்புடையது. இந்தப் புகழைப் பெறாதவர்கள் நிலத்திற்குச் சுமையாகிறார்கள் என்பது குறட்கருத்து.

> *ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்*
> *தோற்றம் நிலக்குப் பொறை*

என்பது குறள்.

மனிதன் பலரோடு கூடி வாழப் பிறந்தவன். அதுவே மனித ஒழுக்கம். துறவிகளும் தொண்டரொடு கூடி வாழவேண்டும். சிலர், யாரும் தம்மை அணுகவியலாதபடி ஒதுங்கியும், ஒதுக்கியும் வாழ்கின்றனர். அவர்களிடத்தில் யாதிருந்து என்ன பயன்? இங்ஙனம் தனி விலங்காக வாழ்பவர் என்ன சாதனையைச் செய்யப் போகிறார்? அவர் இறந்த பிறகு இந்த உலகத்தில் எஞ்சியிருப்பது என்ன? மரணத்திற்குப் பின் பொருளைப் பிறிதொருவர் உரிமை கொண்டாடி எடுத்துக்கொள்வர். உடம்பு மண்ணுக்கு உரிமையாகி விடுகிறது. இவருக்கு உரியதாகவுள்ள புகழை விட்டுச் செல்லவேண்டாமா? என்பது திருவள்ளுவர் கேள்வி.

> *எச்சம்என் றென்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்*
> *நச்சப் படாஅ தவன்*

என்பது குறள். எச்சம் என்றால், குற்றம் என்ற பொருளும் உண்டு. பலர் சூழத் தாம் வாழாமையைக் குற்றம் என்று எண்ணிப் பார்க்கின்றாரா? இல்லையா? குற்றத்தை எண்ணிப் பார்த்தலே குற்றத்தின் நீங்க வழி. ஆதலால், கொடுத்து மகிழ்ந்து பலர் சூழ வாழ்வதே வாழ்க்கை.

இந்நிலவுலகத்தில் நிறையச் செல்வமிருக்கிறது. ஆயினும், பலர் வறுமையால் வாடுகின்றனர். ஏன்? செல்வ வறுமையினால் அல்ல, சிலரிடம் உள்ள நற்குண வறுமை யினாலேயாம். செல்வம் அடுக்கிய கோடி பெற்றுள்ளவ ராயினும் செல்வத்தைப் பயனறிந்து பயன்படுத்துவதில்லை. உலகில் செல்வத்தைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களையும் தகுதியறிந்து பயன்படுத்துவோரே வைத்திருக்கிறார்கள்.

உதாரணமாக நாதஸ்வரம் வாசிக்கத் தெரிந்தவரே நாதஸ்வரம் வைத்திருக்கிறார். நாதஸ்வரம் வாசிக்கத் தெரியாதவர்கள் அதை வைத்திருக்க மாட்டார்கள். அப்படியே பெற்றிருந்தாலும் வாசிக்கத் தெரிந்தவர்களிடம் கொடுத்து வாசிக்கச் செய்து கேட்டு மகிழ்வர். ஆனால், செல்வத்தின் பயனைத் தெரியாமலே, செல்வத்தைப் பலர் வைத்திருக்கிறார்கள். செல்வத்தின் பயன், ஈதல்; மகிழ்வித்து மகிழ்தல்; துய்த்தல் ஆகியவையாம். இந்த வகைகளில் பயன்படாத செல்வம், அடுக்கிய கோடி இருப்பினும் அஃது இல்லாததாகவே கருதப்பெறும். இதனை,

*கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய*
*கோடியுண் டாயினும் இல்*

என்று குறள் கூறுகிறது.

செல்வத்தை ஈட்டுதல், பேணிக்காத்தல் ஆகியவை துன்பந்தரும் பணிகளேயாம். ஆயினும் இத்துன்பம் அனைத் தையும் இன்பமாக மாற்றக்கூடியது, தாம் துய்த்து இன்புறு தலும் பிறருக்குக் கொடுத்து மகிழ்வுறுத்தும் வழி இன்புறு தலும் ஆகும். ஈதலும், துய்த்தலும் இயற்றாதவர்கள் செல்வத்தில் பயனை இழக்கின்றனர். அதோடு இன்புறு தற்குக் காரணமாய செல்வம் நோயாகிச் செல்வமுடைய வனை அழிக்கும். செல்வத்தினைத் தகுதியறிந்து பயன்படுத் தாதவன் களவு, காவல்களால் அலைக்கழிக்கப்படுகின்றான்.

உடம்பு, உள்ளம் இரண்டையும் அழித்துக்கொள்கிறான். ஐயோ, பாவம்! இதனை,

*ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்*
*றீதல் இயல்பிலா தான்*

என்று கூறி விளக்குகிறது, குறள்.

உலகம் இன்பத்தின் வைப்பு. உயிர் இன்புறுதல் மூலமே அதன் வேட்கை தணிகிறது. அவ்வழிதான் உயிர் நிறைநலம் பெறுகிறது; இறைமைத் தன்மையை அடைகிறது. அதனாலன்றோ உயிர்க்கு இறைவன் நுண்ணிதில் இன்புறுதற் குரியனவாய கருவிகளாகிய பொறிகளையும் புலன்களையும் தந்ததோடன்றி இன்புறுதற்குரியனவாய பொருள்களையும் படைத்தருளினன்!

காதலின்பத்திற்கு உரிய பெண், இன்பத்தைத் தருபவள்; இன்பத்தைப் பெறுபவள். மிகச் சிறந்த நலன்கள் அனைத்தும் பெற்ற நங்கை ஒருத்தி தனியே வாழ்ந்து மூத்தாள் என்றால் என்ன பயன்? "தமியள் மூத்தற்று" என்ற சொற்றொடர் வினாவாகவும் விடையாகவும் இருக்கிறது. பெண் மணம் உடையவள். அது கொடியில் மலர்கிறது. கொடியின் மனம் பரப்பக் கொம்பு தேவை. நிறை நலம்பெற்ற நங்கை ஒருத்தி உரிய பருவத்தே கொழுநனாகிய தலைமகனைப் பெற்று மகிழ்தலும், மகிழ்வுறுத்தலுமில்லாமல் வறிதே மூப்பாளாயின் அவளுக்கும் பயனில்லை; மற்ற வர்க்கும் பயனில்லை. உலகத்தின் இடையறாத வழிவழி மரபும் தடைப்படுகிறது.

இத்தகு கொடுமை போன்றதே, வறுமையுடையாருக்கு வழங்கி அவர்தம் வறுமையை மாற்றாதவனின் செல்வம் என்று திருக்குறள் கூறுகிறது. ஈயாதவனது செல்வத்தால் உடையானுக்குப் பயனில்லை. மற்றையோருக்கும் பயனில்லை. ஏன்? அந்தச் செல்வத்திற்கும் பயனில்லாமற் போய்விடுகிறது. இதனை,

அற்றார்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று

என்ற குறள் எடுத்துக் கூறுகிறது.

மரம் நிழல் தருகிறது; கனிகளைத் தருகிறது. அருமை யாகச் சில நச்சு மரங்களும் உண்டு. நச்சு மரமும் பழுக்கும்; அது நடுவூருள் நம் வீட்டுக்கு அருகில் பழுத்துக் கனிகளை உதிர்க்கும். யார் போய் எடுப்பர்? கிளிகளாவது வந்து கொத்திப் பார்க்குமா? இல்லை! அப்படியே மீறி யாராவது ஆசையின் மிகுதியால் அறியாமையின் காரணமாகத் தின்று விட்டால், தின்றவன் உயிரைக் கொல்லும். அதுபோல நடுவூருள் நமது தெருவில் நமக்குப் பக்கத்திலேயே ஓங்கி உயர்ந்த ஒரு மாளிகையில், நஞ்சு மனத்தோடு வாழ்கிறான் ஒருவன். அவனிடத்தில் ஏராளமான செல்வமுண்டு. ஆயினும் நெஞ்சில் நஞ்சுடையான் கையில் அகப்பட்ட செல்வமாக இருப்பதால், அச்செல்வமுடையானை யாரும் விரும்பிச் சேர்வது இல்லை. தவறிப் போய் யாராவது சேர்ந்தாலும் அவன் அவர்தம் உயிரை உறிஞ்சிக் குடிப்பானே யன்றி, வாழ்விக்கமாட்டான். இதனை,

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று

என்று குறள் கூறுகிறது.

தண்ணீர் நமது வீட்டுக் குழாய்க்கு வரவேண்டும். ஆனால், தண்ணீர் வரும் குழாய் பாசி பிடித்ததாக இருக்கு மானால், தண்ணீரின் தூய்மை கெட்டு, பருகுவோரின் வாழ்க்கைக்கு உலை வைக்கிறது. அதுபோல, நமக்குச் செல்வம் தேவை. செல்வம் ஈட்டுவது மனிதனின் தலையாய கடமை. அதனை அறவழியிலேயே ஈட்டவேண்டும். ஆனால் செல்வம் அறத்தின் வழி வராது போனால், செல்வம் இன்பத்தைத் தருதற்கு மாறாகத் துன்பத்தைத் தருகிறது.

செல்வம் அறத்தின் வழி ஈட்டுவதென்றால் எப்படி? அறத்தின் வழி வரும் செல்வம், நிச்சயமாகத் தேவைக்கு மிஞ்சியதாக இருக்காது. தேவைக்கு மிஞ்சிய செல்வம் எதற்கு?

நமது உடலில் தேவைக்கு அதிகமான ரத்தம் ஊறினாலும் நோய்; தேவைக்குக் குறைவான ரத்தம் ஊறினாலும் நோய். இந்த இயற்கை நியதியை நாம் ஏன் பாடமாக எடுத்துக் கொள்ளக் கூடாது? பலருடைய தேவையை நிறைவு செய்யவேண்டிய செல்வம், அங்ஙனம் செய்யப்பெறாமல் பழியுடைய வழியில் தேவைக்கு மேல் குவிகிறது. உழைப்பிற்கேற்ற ஊதியம் தருதல்கூட இன்னும் உலகத்தில் மலரவில்லை. ஆளையும் நேரத்தையும் வைத்து ஊதியம் கொடுக்க நினைக்கிறார்களே தவிர, ஒருவன் உழைப்பைக் கொண்டு உருவாக்கிய செல்வத்தை மையமாக வைத்து ஊதியம் தர முன் வருவதில்லை. முறையான ஊதியம் தராது ஈட்டிய செல்வம் அறத்தின் வழி வந்த தில்லை.

செல்வத்தின் உற்பத்திக்கு - படைப்புக்கு அடிப்படை யாகவுள்ள உழைப்பாளிகளின் தேவையைப் பூர்த்தி செய் யாது குவியும் செல்வம், அறத்தின் வழி வந்த செல்வமல்ல. இச்செல்வ வாழ்க்கை மணற் பரப்பில் மாளிகை கட்டியதைப் போன்றது; பயனற்றது. செல்வம் அறத்தின் வழியே வரவேண்டும். ஈட்டிய பொருளை, தன்னுடைய வாயை வயிற்றைக் கட்டாமல் அனுபவிக்க வேண்டும். பலரோடும் அன்பு பாராட்டிக் கொடுத்து மகிழ்ந்து அனுபவிக்க வேண்டும். இங்ஙனம் அறத்தின் வழிப் பொருளீட்டித் தான் துய்த்து, பிறருக்குக் கொடுத்து மகிழ்ந்து அன்பு பாராட்டி மகிழாதவன் வைத்திருக்கும் செல்வம் பெயரளவிலேயே அவனுக்கு உரிமையுடையது. இச் செல்வத்திற்குரிய இவனுடைய உரிமையும் காலப்போக்கில் பறிக்கப்பெற்றுப்

பிறர் கொண்டு துய்ப்பர். உடைமையாம் உரிமையும் இழந்து இரக்கத்திற்குரியவராகின்றனர். இதனை,

> அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
> ஒண்பொருள் கொள்வார் பிறர்

என்று குறள் கூறுகிறது. இதில் "கொள்வார் பிறர்" என்ற சொற்றொடர் நிறைந்த பொருளுடையது; நினைந்து நினைந்து உணர்தற்குரியது. "கொள்வார்" என்றதால் கொடுக்காமலே வலியக் கொள்ளுதலும், "பிறர்" என்பதனால் உரிமையும் உறவுமுடையார் அல்லர் என்பதும் உணர்க.

செல்வம் சீருடையது. செல்வத்தினைக் கொடுத்து மகிழ்ந்து வாழ்வோருக்கும் ஒரோவழி வறுமை வருவதுண்டு. ஆயினும், அந்த வறுமையை நன்மனம் உடையவர் விரும்பி ஏற்றுக்கொள்வர். ஏன்? அவர் தம் உளம் நோக்க அது வறுமையுமல்ல. ஒன்றில் பற்றிருந்தாலல்லவோ, பற்றுடைய தொன்று இன்மை, வறுமையாகக் கருதப்பெறும்? செல்வத்தில் உள்ள பற்றைவிட்டுத் தாமே ஈத்து உவந்து மகிழும், செம்மனச் சான்றோர்களுக்குத் தேவையும் கூடப் பலவாகப் பெருகி நிற்காது. அவர்தம் உயிர் வாழ்க்கைக்குரிய தேவை, பிறர் மகிழ்தலாலேயே அமைந்து விடுவதும் உண்டு.

மேகம் கருவுயிர்த்து முட்டி மோதுகிறது. அது மழையாகப் பொழிந்து தன்னை வறிதாக்கிக் கொள்வதே சிறப்பு. அதுபோலப் பெற்ற செல்வத்தை வழங்கி, மகிழ்வித்து, மகிழ்ந்து எல்லாவற்றையும் இழப்பதையுங்கூடச் சிறப் பென்றே கருதுவர் சான்றோர். மேகம் மழை பொழிந்தவுடன் வறிதே காட்சியளிக்கிறது. மீண்டும் கருத் தாங்கி மழை பொழியும். அதுபோல கொடுத்து மகிழ்வுறும் வாழ்க்கை ஒரோவழி வறுமைப்பாட்டாலும் வறுமை நிலையானதல்ல. அவர்தம் வாழ்க்கையில் மீண்டும் செல்வம் செழிக்கும். இதனை,

*சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி*
*வறங்கூர்ந் தனைய துடைத்து*

என்று குறள் கூறுகிறது.

மாரிமழை பெய்யத் தவறின், உலகம் வளம் குன்றி வறுமையால் இடர்ப்படும். அதுபோலவே சீருடைச் செல்வர் கொடுப்பதொழித்தால் உலகம் வறுமையால் இடர்ப்படும். மாரி கொடுப்பதை மறந்தால் மீண்டும் மாரியாதலையும் தம்முடைய மாரி என்ற பெயரையும், புயல் சுமந்து வரும் இயல்பையும் இழக்க நேரிடும். அது போலவே சீருடைச் செல்வர் செல்வத்தைக் கொடுக்காவிடில், அந்த செல்வத்தை இழக்க நேரிடும் என்ற கருத்தும் இதன் பாலுளது. செல்வ மென்பது நன்று; நன்று தருவது. நன்று என்பது மகிழ்வித்தலும் மகிழ்தலுமாகும். அந்த இயல்பறிந்து வாழ்தலே திருக்குறள் உலக வாழ்க்கை.

## நாணுடைமை

திருக்குறள் ஒழுக்கத்தால் உயர்ந்த உலகத்தைக் காட்டு கிறது. திருக்குறள் மனிதனுக்குப் பல்வேறு உடைமைகளைத் தருகிறது. அந்த உடைமைகள் மனிதனுக்கு அனைத்தும் ஒன்றினை ஒன்று சார்ந்து, அணிக்கு அணியாக-அழகுக்கு அழகு செய்கிறது. அத்தகு அணிகளுள் நாணுடைமையும் ஒன்று. ஏன்? மனிதன் கொள்ளத்தக்க உடைமைகளில் இதுவே தலையாயது என்று கூறினாலும் தகும். மனிதன் வெட்கப்படுகிறான். எதற்கு? ஏழை என்பதைக் காட்டிக் கொள்ள வெட்கப்படுகிறான். இது அவசியமா? அவசிய மல்ல. ஒருவன் ஏழையாக இருப்பது அவனுக்கு வெட்கமல்ல. அவனைச் சார்ந்த சமுதாயத்திற்கே வெட்கம். ஆனால், உண்மையில் எதற்கு வெட்கப்படவேண்டும்? அறம் அல்லாதனவற்றை நினைக்கும் பொழுது, செய்ய முற்படும்

பொழுது நாணுதல் வேண்டும். இந்த நாணமும், உடலில் வெளிப்படுவதன்று; உள்ளத்தில் வெளிப்படுவது.

*கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்*
*நல்லவர் நாணுப் பிற*

என்பது குறள்.

மக்களுக்கெல்லாம் இன்றியமையாத் தேவை ஊண், உடை. இவை எல்லா மக்களுக்கும் வேண்டிய பொதுப்படையான தேவைகளே. இதில் எந்த மனிதருக்கும் வேற்றுமையில்லை. இந்தப் பொதுப்படையான தேவைக்ளைப் பெற்று வாழ்தல் மனிதனுக்குச் சிறப்பாகாது. நல்லன அல்லாதவற்றைக் காணும் பொழுது தோன்றும், நாணத்தைப் பெற்று வாழ்தலே சிறப்பாகும். இதனை,

*ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம வேறல்ல*
*நாணுடைமை மாந்தர் சிறப்பு*

என்கிறது குறள். ஊணும் உடையும் இனப்பெருக்கமும் மாந்தர்க்கெல்லாம் பொது என்று கருத இடமிருக்கிறது. 'எச்சம்' என்ற சொல்லுக்கு 'மக்கட்பேறு' என்று பொருள் கொள்ளலாம். ஆனால் "ஊணுடை அச்சம்" என்ற பாடமும் உண்டு. உணவினுடையது அச்சம் உலகத்து உயிர்க்கெல்லாம் வேறுபாடுடையன அல்ல. எனவே, உணவின் குறைபாடுகளுக்கு அஞ்சும் அச்சம் எல்லா உயிர்க்கும் ஒக்கும். மற்றும் தமது நெறிமுறை பிறழ்ந்து நிலைக்கு உள்ளஞ்சி நாணுதலே சிறப்புடைய மாந்தர்க்கு அழகு என்றும் சிந்திக்கலாம்.

உயிர் அருவப் பொருள்: உருவமற்றது. உருவமின்மையால் பொருளின் உண்மை பொய்யாகாது. உருவமற்ற பொருள்கள் ஏராளமானவை உலகத்தில் இருக்கின்றன. மனம், மின்சக்தி, காற்று ஆகியவை வடிவமற்றவையேயாம்.

இவற்றை இல்லையென்பார் உண்டோ? அல்லது இவற்றின் ஆற்றலை இயல்பைக் குறைத்து மதிப்பிடுவாருண்டோ?

இந்த உருவமற்ற பொருள்கள், உருவங்களோடு தொடர்பு கொள்ளும் பொழுது மணம் தருகிறது; காதல் விளைவிக்கிறது; ஒளி தருகிறது; இயக்குகிறது; மகிழ்வைத் தருகிறது; உடலுயிர் உறவை இணைக்கிறது. அதுபோலவே, உயிர் வடிவமற்றதாயினும் வடிவமாகிய பருவுடலுடன் தொடர்பு கொள்ளும்போது இயங்குகிறது.

உயிர் தங்கியிருந்து பயிலும் பருவுடலுக்கு உணவு தேவை. ஆதலால், உயிர்கள் உணவை நாடும். அதுபோல, நற்குணங்களைப் பெற்று ஆட்சி செய்யும் சால்பு நாணுடைமையை நாடும். நாணம் உடைமையின் வழியேதான் சால்பு விளங்க முடிகிறது. நாணத் தகுவனவற்றை நாணாது, ஒருகால் பழகிவிட்டாலும், நாணாமை உயிர்க்குப் பழக்கமாகி விடுகிறது. நம்முடைய உள்ளத்திற்கு இயல்பிலேயே நாணும் தன்மையுண்டு. பலர், அதை மரத்துப் போகச் செய்து விடுகின்றனர். ஊனினால் உடல் வாழ்க்கை; உடலால் உயிர் வாழ்க்கை; சால்பினால் உயர் வாழ்க்கை நாணுடைமையினால் சால்பு என்ற வாழ்க்கைமுறை எண்ணத்தக்கது. இதனை,

> ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்
> நன்மை குறித்தது சால்பு

என்று குறள் கூறுகிறது.

உலகில் ஏராளமான அணிகள் உண்டு. அணிகள் இருவகையின. ஒன்று புற அணியாம். பிறிதொன்று அக அணியாம். புற அணிகலன்கள் புல்லியரிடத்தும் உண்டு. ஏன்? விலங்குகளுக்கும் அணியலாம். புற அணிகலன்கள் புகழுடையன அல்ல. அவை இம்மையும் மறுமையும் தரா. அக அணிகலன்களே உயர்ந்தவை. அவற்றை முயன்று

அணிதலே சிறப்பு. அக அணிகலன்களை உடையோரே சான்றோர். அவற்றுள்ளும் நல்லன அல்லாதவற்றை நினைத் துழியும்கூட நாணும் இயல்புடைமையே சான்றோர்க்குச் சிறந்த அணி. இத்தகு சான்றோர் மதித்தற்குரியவர்கள். நாணுடைமை இல்லையேல், பீடுநடை பிணியாகும். சால்பின்றி-சால்புடையோர் போலக் காட்டிப் பீடுநடை நடத்தலால் வரும் துன்பம் அவராலும் மற்றவராலும் தாங்க முடியாமையாலேயே பிணி என்றார். இதனை,

**அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கஃ தின்றேல்**
**பிணியன்றோ பீடு நடை**

என்று குறள் கூறுகிறது.

சிலர், தம்பழி நாணுவர். ஆயினும் பிறர் பழிகண்டு மகிழ்வர். ஏன்? பிறர்பழி காண்பதிலும், பிறர் பழி எடுத்துக் கூறுவதிலும் ஆர்வமும் காட்டுவர். இது சீருடைச் செயலல்ல; உண்மையான நாணுடைமையும் ஆகாது. நாணுடைமைக்கு உரியதாக உலகம் கருதுவது தம்பழி, பிறர்பழி ஆகிய இரண்டையும் கண்டு நாணுபவரையேயாம். இன்றைய உலகியலிலோ, பிறர் பழியில் தம் புகழ் வளர்க்க் நினைக் கின்றனர். இந்த மனப்போக்கு புகழினைத் தராததோடு, காலப்போக்கில் பழியினையே தரும் என்பதறிக. இதனை,

**பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்**
**குறைபதி என்னும் உலகு**

என்று குறள் கூறுகிறது.

உணவுப் பொருள்களாகிய காய்களும், கனிகளும் விளைவித்தற்குக் காடும், கழனியும் கிடைத்து, அவற்றை உழுது, எரு இட்டு, வித்திட்டு, நீர்பாய்ச்சி வளர்ப்பதவசியம். இவையெல்லாம் எவ்வளவு அவசியமோ, அதைப்போல அதை விடக்கூடவே அக்கழனிக்கு வேலி அவசியம். காடு

களையும் கழனிகளையும் பெருக்கி, வேலிகள் இல்லாது போயின் பாடுபட்டு வளர்த்த பயிர்கள் அழியும்.

அதுபோலவே, பலர் பல்வேறு வகைப்பட்ட நல்ல குணங்களை அரிதில் முயன்று பெறுகின்றனர். ஆயினும் ஓரோவழி இழந்துவிடுகின்றனர். ஆதலால், சான்றோர் நாணம் என்ற வேலியை அமைத்துக் கொள்ளாது, உலகத்தைப் பெறவிரும்பார். நாணம் உடைமையே உயிர்க்குப் பாதுகாப்பு. பழியும் பாவமும் புரிந்து, உயிர்க்குத் துன்பம் விளைவிக்காமல் உயிர்க்குப் பாதுகாப்பளிப்பதால் நாணு டைமை வேலியாகும். ஞாலமும் நாணும் பெரும்பாலும் முரண்படா. அப்படி முரண்பாடு தோன்றின் சான்றோர் ஞாலத்திலிருந்து நாணையே பெறுவர். இதனை,

> நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
> பேணலர் மேலா யவர்

என்று குறள் கூறி விளக்குகிறது. இதனையே "பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்?" என்று புறநானூறு கூறுகிறது.

உயிர் உடலொடு கூடித் துய்த்து, மகிழ்ந்து வாழ்தல் இன்பமேயாம்; பெறுதற்கரிய சிறப்புமாம். எனினும், உயிர்க் குரிய சிறப்பியல்புகளை இழந்து அதன்பின் உயிர் வாழ்தல் சிறப்பன்று. ஆதலால், நாணுடைமையைக் காப்பாற்றுவதற்கு உயிரையும் விலையாகக் கொடுப்பர் சான்றோர். இதற்குச் சான்று, அரச நீதிக்காகத் தன் உயிர் கொடுத்த பாண்டியன் நெடுஞ்செழியன்! நாணை விலைகொடுத்து உயிர் வாழ விரும்பமாட்டார்கள் சான்றோர். உயிரினும் நாண் சிறந்த தாகும்: இதனை,

> நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
> நாண்துறவார் நாணாள் பவர்

என்ற குறள் விளக்குகிறது.

சிலர் நாணமாட்டார்கள். இவர்கள் கண்டாரும் கேட்டாரும் வெறுக்கத் தக்க செயல்களையே செய்வர். அறியாமையின் காரணமாகவோ, அல்லது ஆசையின் காரணமாகவோ, தாம் நாணுதற்குரிய செயல்களை நாணாமற் செய்வர். இவர்கள் தம் குற்றம் நோக்கி நாணா தொழியின், இவர்களை நோக்கி அறம் நாணும்; நாணுத லோடன்றி நீங்கும். நாணுடைமையும் அறமும் நீங்கிய வழி பொருளும் நீங்கும்; புகழும் நீங்கும்; இன்பமும் நீங்கும். இதனை,

*பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்*
*அறம்நாணத் தக்க துடைத்து*

என்று குறள் கூறுகிறது.

தாமே நாண வேண்டியது இயல்பு; ஒழுக்கமும் கூட. அஃதின்றி இவன் செயல் கண்டு பிறர் நாணிய வழியும் நாணாதிருப்பது இழிவுள் இழிவு என்பது கருத்து. நாணமற்ற வாழ்க்கையுடையோரை அறம் சேராது என்பது தெளிவான முடிவு. ஆதலால், தம்முடைய மனச்சான்று தவறு என்றும், செய்யாதே என்றும் இடித்துக் காட்டும் இடங்களில் மனிதன் விழிப்பாக இருந்து திருத்திக்கொள்ளவேண்டும்.

எல்லாருடைய மனச்சான்றிலும் நாணும் இயல்பும், அறத்தினை எடுத்துக் காட்டும் இயல்பும் உண்டு. இதனையே அண்ணல் காந்தியடிகள் "அந்த ராத்மா பேசுகிறது" என்று குறிப்பிட்டார். ஆதலால், நம்முடைய அடிமனம் ஆங்கு உறையும் நல்லுணர்வு, உயிர்க்கு உயிராக உறையும் இறைவன் எடுத்துக் காட்டும் அறத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தராத்மாவின் பேச்சைக் கேட்காமல் இருப்பவர்கள் வாழ்க்கையை இழக்கிறார்கள் என்பதனை நினைந்து நம்மை நாமே நகைத்தும், திருத்தியும் வாழ்க்கையில் வெற்றி கொள்ளவேண்டும்.

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று முன்னர்க் கூறியது குறள். அதுபோலவே நாணுடைமையும், உயிரினும் சிறந்தது என்று குறள் கூறுகிறது. இவ்விரண்டில் எது உயிரினும் மேலாயது? என்று திருவள்ளுவர் ஆராய்ந்து, ஒழுக்கத்திலும் நாணுடைமையே சிறந்தது என்று கூறுகின்றார். ஒழுக்கக்கேடு தவறுதான். ஆயினும் ஒரோவழி ஒழுக்கத்தில் தவறுகிறார்கள் மீண்டும் அந்த ஒழுக்கத்தில் முயன்றால், நிலைபெற முடியும்.

ஒழுக்கத்தில் எளியரானார் பலர் பின் ஒழுக்கத்தில் வளர்ந்து ஒழுக்கத்தில் உறுதிபெற்றுப் புகழ் பெற்றனர். திருநீலகண்ட நாயனாரும், அருணகிரிநாதரும் இதற்குச் சான்றாவர்.

நாணுடைமை தவறினால், மீண்டும் வளர்தல் அரிது. தீயனவற்றைக் கண்டு நாணும் இயல்பை நெஞ்சு மறந்துவிட்டால், நெஞ்சு கட்டுக்கோப்பும் காவலுமில்லாத திறந்த வீடாகிவிடுகிறது. அங்குப் பழியும் பாவமும் தன்னிச்சையாகப் புகுந்து ஆட்டம் போடத் தொடங்கிவிடுகிறது. ஆதலால், நாணும் இயல்பே நல்வாழ்க்கையின் வாயிற் கதவு. அந்தக் கதவு தீயனவற்றைக் காணும்பொழுது மூடா தொழியின், தீயனவற்றிற்கு ஆட்படும் ஆதலால், ஒழுக்கம் இழப்பினும் அவனுடைய குடிப்பிறப்பு ஒன்றினையே கெடுக்கும். நாணுடைமை இல்லையாயின் நலமனைத்தும் கெடும். இதனை,

> *குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்*
> *நாணின்மை நின்றக் கடை*

என்று கூறுகிறது குறள்.

சிலர், "கொள்கையே பெரிது, அக் கொள்கையை எப்படியும் எந்த வகையாலும் நிறைவேற்றிக் கொள்ளலாம்"

என்பர். அதற்காக நாணத்தைத் துறந்தும் கொள்கைக்காகப் போராடுவர். இதுவும் தவறு. கொள்கையைவிடக் கொள்கையைச் சாதித்துக் கொள்ளும் நெறியும் முறையும் தவறானவையாக இருக்கக்கூடாது. கொள்கைக்காக நாணத்தை இழந்துவிடக்கூடாது என்ற கருத்தும் இந்தக் குறளின் மூலம் பெறப்படுகிறது. இன்றைய சமுதாயப் பொது வாழ்க்கைத் துறைக்கு இந்த அறவுரை எவ்வளவு பயனுடையது என்பதை அன்புகூர்ந்து எண்ணிப் பாருங்கள்.

நாட்டில் ஆங்காங்கு நடைபெறும் பாவைக் கூத்தைப் பார்த்திருக்கிறோம். அரங்கிலாடும் பாவைகள் ஆட்டப் படுவதால் ஆடுமே தவிர, அவற்றுக்கு உயிர்ப்புமில்லை; உணர்வுமில்லை. அது போலவே நாணுடைமையை அகத் திலே கொண்டு வாழாதார் வாழ்க்கை மானுட வாழ்க்கையே யல்ல. அவர்களது வாழ்க்கையெல்லாம், ஆட்டபாட்டங்க ளெல்லாம் உயிரியக்க வாழ்க்கையல்ல. நாணாகிய உயிர் இல்லாதவரையில் அந்த உயிர் வாழ்க்கை, உயிர் வாழ்க்கை யாகவே கருதப்பெறமாட்டாது அவர்கள் மிரட்டுவதும், உருட்டுவதும் வெறும் பொம்மலாட்டங்கள். அதனால் உயிர்களுக்கு உறுதியுமில்லை; பயனுமில்லை. இதனை,

**"நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை**
**நாணால் உயிர்மருட்டி யற்று"**

என்று கூறிக் குறள் விளக்குகிறது.

ஆதலால், வாழ்க்கை என்ற மாளிகையில் உயிர் சிறக்க வேண்டுமாயின், நாணுடைமை என்ற வாயிற் கதவு திட்பமுடையதாக அமையவேண்டும். மாளிகையின் கதவு சிறப்புற அமையாது போனால், மாளிகையின் உள்ளே யிருக்கும் பொருள்களுக்கும் ஆபத்து. உள்ளே உயிருக்கும், உயிர் பெற்றிருக்கும் உயரிய குணங்களுக்கும் ஆபத்து. அது போலவே, உயிர் வாழ்க்கையில் மனம் என்னும் மாளிகையில்

நாணாகிய கதவு உறுதியுடையதாக அமையாது போனால், பெற்ற கல்வியும் பேணிய ஒழுக்கங்களும், செய்த தவமும் கெடும். தலைமகனாகிய உயிர் இன்பத்தை இழந்து துன்பத் திற்கு ஆட்படும். ஆதலால், மனச்சான்றை மதித்து அந்தராத் மாவின் குரலுக்கு மதிப்புக் கொடுத்து நாணுடைமையைப் பேணிப் பெருமையுடன் வாழ வழி நடத்துகிறது திருக்குறள் உலகம்.

## குடிப் பெருமை காத்தல்

மனிதன் தனித்துப் பிறந்தவனுமல்லன்; தனித்து வாழப் பிறந்தவனுமல்லன். தான் பிறந்து வாழும் குடியினருடன் கூடிக் கலந்து, மகிழ்ந்து, வாழ்வித்து வாழ்தலே சீலம் நிறைந்த வாழ்க்கை. தம்மைச் சார்ந்தோர் இளைத்துச் சாக, தாம் மகிழ்ந்து வாழ்தல் நாணத்தக்கதாகும். தாம் உண்டு மகிழ்வதைவிட, குடிசெயல் வகையில் மகிழ்வதும், உண்பதை விட. உண்பிக்க உண்பதுவுமே சிறப்பு; உயர்வு. இன்ப உணர்வு கலந்த சுவையும்கூட. அஃதாலன்றோ, ஒருவர்க்குக் குழந்தைப் பருவத்தில் தாயும், இளமைப் பருவத்தில் மனைவியும், முதுமைப் பருவத்தில் மகனும் உண்பிக்கும் பொறுப்பினை— கடமையினை ஏற்றுக் கொள்கிறார்கள்.

இது போக, வீட்டுச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும், திருக் கோயில் திருவிழாக்களிலும் பலர் கூடி விருந்துண்டு மகிழ்தலைக் காண்கின்றோம்; பலர் கூடி உண்பதென்பதே சிறப்பல்ல. உணர்வுடன் கூடிய உறவு கலந்து உண்பதே சிறப்பு. 'உறவு கலந்து உண்ணக் கண்டீர்' என்றார் தாயு மானாரும். ஒருவன் தன்னுடைய குடியை உயர்த்தும் பணியில் ஈடுபட்டு, குடி உயரும் வரையில் பசி நோக்காது பணியாற்றுவான். அங்ஙனம், ஆற்றுபவனே மனிதன்; பெருமைக்குரியவன், என்று குறள் பேசுகிறது.

*கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்*
*பெருமையின் பீடுடையது இல்*

என்பது குறள்.

குடி செயலுக்கு ஆள்வினையாற்றல் வேண்டும். ஆற்றலைப் பயனுறத் தக்கவகையில் இயக்க நிறைந்த அறிவும் தேவை. இவையிரண்டும் பெயரளவில் இல்லாமல் செயல் பட வேண்டும். சிலர் செயல்படுவர். ஆனால் இடையீடுகள் நிகழும். தொடர்ச்சியின்றி விட்டுவிட்டுச் செயல்படுகிற வர்களும் வீழ்ச்சியையே அடைவர். ஓயாது செயல்பட வேண்டும். ஒரு நொடிப்பொழுதும், ஓயாது தொடர்ந்து இடையீடின்றி ஒரு செயலைப் பிறிதொரு செயல் தொடரச் செயல்படவேண்டும். இதனை,

*ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்*
*நீள்வினையால் நீளும் குடி*

என்ற குறளால் அறியலாம்.

தாம் பிறந்த குடியை உயர்த்தும் பணியில் ஈடுபடும் பொழுது தெய்வம் வரிந்து கட்டுக்கொண்டு வந்து துணை நிற்கும் என்பது குறட் கருத்து. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய வாழ்க்கையைப் பற்றி ஆயிரம் ஆயிரம் கற்பனைகள்; கனவுகள். இந்த இலட்சியங்களை—இன்ப வாழ்க்கையை அடைய முடியாமல் அல்லற்படுகின்றனர். திருவள்ளுவர் இன்ப இலட்சியங்களை அடைந்து மகிழ, எளிய வழி ஒன்று காட்டுகின்றார். அதாவது, தன்னுடைய குடி தாழ்ந்து கெடாமல் உயர்ந்து விளங்கப் பணி செய்யும் ஒருவர்க்கு அவர் கருதிய கருத்தும் தானே முடியும்.

குடி செய்தலாகிய சமூக மேம்பாட்டிற்குரிய பணி களைச் செய்தல் உயர்ந்த திருத்தொண்டு. அதனாலன்றோ சிவஞானச் செல்வர்களாக விளங்கிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பசி நீக்குதல், நோய் நீக்குதல்,

திருமணங்கள் முடித்து வைத்தல் ஆகிய குடிசெயற் பணிகளைச் செய்தனர். இன்று சமூகப் பணி என்று கருதுவதற்கும் குடிசெயல் வகைக்கும் பெரிய வேறுபாடில்லை. சமுதாயப் பணிகளைச் செய்வதற்குச் சிறந்த சீலம் தேவை. சமூக மேம்பாட்டுக்குரிய பணிகளைச் செய்வதற்குச் சிறந்த சமூக ஒழுக்கக் கூறுகள் ஒருவனுக்குத் தேவை.

ஒழுக்க நெறிகள் இரு திறத்தன. ஒன்று தனது மேம்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளும் தனது ஒழுக்கங்கள். பிறிதொன்று பிறர் மேம்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளக் கூடிய சமூகத்துறைப் பழக்க வழக்கங்கள். பெரும்பாலோர் உடற்சார்புடைய தனது ஒழுக்கத்தில் வெற்றி பெற்று நின்று ஒழுகுவர். ஆயினும் சமூகத்துறைப் பழக்க வழக்கங்களில்—ஒழுக்கத்தில் அவர்களுக்கு நாட்டமிருக்காது. அதை அவர்கள் ஓர் ஒழுக்கமாகவே கருதுவதில்லை.

நம்முடைய நாட்டில் குடி வெறியும், காமவெறியும் மிகக் குறைவு. அடுதலும் கொல்லுதலும் கூடக் குறைவேயாம். ஆயினும் சமூக ஒழுக்கக் கேடுகளாகிய பிரிவினை, பேத உணர்ச்சி, 'எனது', 'உனது' என்ற வேறுபாடுகள், பொருளியல் ஏற்றத்தாழ்வுகள் மலிந்து கிடக்கின்றன. இதனால் நமது நாடு தனி மனித ஒழுக்கத்தில் ஓரளவு மனநிறைவு தரத்தக்கதாக இருக்கிறது என்பதையும், ஆனால் அதே காலத்தில் மனித குல ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குரிய பொருளியல் ஏற்றத் தாழ்வற்ற சமநிலைச் சமுதாய அமைப்பிற்குரிய சமூக ஒழுக்கத்துறையில் மிகவும் பின்தங்கியிருக்கிறது என்பதையும் உணர முடிகிறது.

பலரோடு கூடி நோதலும் தணிதலுமின்றி வாழ்வித்து வாழ்தலும், மகிழ்வித்து மகிழ்தலும் ஓர் ஒழுக்கமேயாகும். இந்த, சமூக ஒழுக்கத்தில் ஒரு மனிதன் தன்னை ஈடுபடுத்தி வளர்த்துக் கொள்ளவேண்டும். தன்னலம் ஒரு நஞ்சு. இந்த

நஞ்சினைத் தாங்கி, சமூகத்துக்குள் அடிவைக்கின்றவன் தன் வாழ்க்கையில் வெற்றி பெறுவதுமில்லை; தன்னலமும் நிறைவேறுவதில்லை: மாறாக சமூகத்துக்கும் கேடு செய்கிறான்.

உயிர், உடலின் நலனுக்காகப் பொறிகள் சுவைக்காமல் தன் நலனுக்காகச் சுவைக்குமானால், அது பொறிக்கும் கேடு; உயிருடலுக்கும் கேடு. அதுபோலத் தம்மைச் சார்ந்தோரின் நலனைக் கருதி உழைத்தல் சிறந்த ஒழுக்கமாகும். தம்மைச் சார்ந்தோர் மேம்பாட்டுக்கும் நல்வாழ்க்கைக்கும் உழைப்பதற்கு நல்லெண்ணம், நம்பிக்கை, பொறுத்தாற்றல், அடக்கம், எளிமை முதலிய பல்வேறு குணச்சிறப்புகள் தேவை. ஒருவர் சமூகத்தில் கலந்து பழகி, சமூக மேம்பாட்டுக்குரிய பணிகளைச் செய்து அதில் வெற்றியும் கண்டு சமூகம் இவரைத் தனது உடைமையாகக் கருதுகிற அளவுக்கு உயர்தல் என்பது ஒருகலை! இல்லை, அதுவே தெய்வீக வாழ்வு!

இத்தகைய வாழ்க்கையில் முன்னேற்றத்துக்கு இடையூறாக இருக்கின்ற சமூக ஒழுக்கக் குறைகள், குற்றங்கள் இல்லாதவனாக நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்; பண்படுத்திக் கொள்ளவேண்டும். இங்ஙனம் வாழக் கற்றுக்கொண்டவர்களை உலகமே சுற்றமாகச் சுற்றும். இதனை,

**குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாச் சுற்றும் உலகு**

என்று திருக்குறள் கூறுகிறது.

உலகத்தின் சிறப்புகள் நல்லாண்மையின் படைப்புகளேயாம். அதனாலன்றோ, புறநானூற்றுக் கவிஞர்,

**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே**

என்று கூறினார்.

நல்லெண்ணம் என்பது பருவுடல் அமைப்பால் மதிப்பீடு செய்யக்கூடியது அல்ல. நல்லாண்மை என்பது ஆள்வினையுடையவராக இருத்தல்; பொருள் செய்யும் துறையில் வெற்றி பெறுதல்; தம்மைச் சார்ந்தோரின் வாழ்க்கையை வளமுறப் பேணிப் பாதுகாத்தல்; தம்முடைய குடியினரையும், சுற்றத்தினரையும் தமதெனப் பிறப்பின் சார்பாலும், உறவினாலும் மட்டுமல்லாமல் உணர்வு பூர்வமாகத் தமதாக்கிக் கொள்ளுதல் சிறப்பினும் சிறப்பு. அதுவே நல்லாண்மை.

பலரோடு கூடி வாழப் பிறந்த மனிதன் சமூகக் கடமைகளை, ஒருவரையொருவர் காக்கும் பணியை, ஒருவரையொருவர் சாட்டுதல் சொல்லித் தட்டிக் கழிக்கக் கூடாது; எண்ணிக்கையைக் காட்டியும் பணியின் பொறுப் பினைப் பங்கு போடக்கூடாது. "அவர் தரவில்லையே, அவர் செய்யவில்லையே, எனக்கு மட்டும் என்ன வந்தது?" என்றெல்லாம் ஒப்பிட்டுக் கூறுதல் சமூக ஒழுக்கமன்று. இந்த மனப்போக்கு நல்லாண்மையின் பாற்பட்டதுமன்று. சமூக மேம்பாட்டுக்கும் துணை செய்யாது. ஏன்? காலப்போக்கில் தனிமனித மேம்பாடும் தடைபடும்.

ஒரு போர்க் களத்தில் பலநூறு ஆயிரம் போர்வீரர்கள் போர் செய்தாலும் அந்த வீரர்கள் அனைவரும் போரினால் வரும் விழுப்புண்கள் அனைத்தையும் தாங்கிக்கொள் வதில்லை. மிகவும் வலிமையும் வீரமும் உடைய வீரனே தாங்கிக் கொள்கின்றான். அதுபோல சமூகத்திற்குள்ளும் பலர் இருந்தாலும் சமூகத்தின் பொறுப்புகளை ஏற்று, தாங்கி, பொறுத்துச் செயலாற்றுபவன் கண்ணேயே கடமை வந்து அமையும். அவர்கள் குடியின் பொறுப்புகளைத் தாங்குதல் கடமை.

குடிசெயல்—சமூக மேம்பாட்டுக்குரிய பணிகளைச் செய்தல் எளியதொன்றன்று; கடினமானது; காலங்கருதிச்

செய்யவேண்டியது. குடி செயல் பணிகளுக்குப் பருவம் கிடையாது; நாள் பார்க்கக்கூடாது. 'இன்று', 'நாளை' என்று நாள் பார்ப்பவர்கள் நாளைத் தள்ளுவார்களே தவிர, நல்ல காரியங்களைச் செய்யமாட்டார்கள்.

நம்முடைய சமூகத்தில் நாள் பார்க்கும் கெட்டபழக்கம் நிலைத்திருக்கிறது. "நாள் உதவி செய்வது போல், நல்லவன் உதவி செய்ய மாட்டான்" என்று சமாதானம் சொல் கிறார்கள். இந்தப் பழமொழி நாள் பார்ப்பவர்களுக்குச் சாதகமானதல்ல. இங்கு நாள் நாழிகையைப் பொறுத்தது தான்.

ஆம்! அறிவு, செல்வம், சீலம், புகழ் அனைத்தையும் நாம் நாள் என்ற களத்தில் நின்றுதானே ஈட்டுகிறோம்? இந்த நாளைச் சார்ந்ததுதானே எழுச்சியுடைய இளமை! இஃதில்லாதது முதுமை! இளமை துணை செய்வதுபோல் முதுமை செய்ய முடியுமா?

ஆதலால் நாள் பார்த்தல் என்பது நாளைக் கச்சிதமாகக் கணக்கிட்டுப் பயன்படுத்தல் என்றே பொருள் கொள்ள வேண்டும். அப்படியின்றி நாளை 'நல்ல நாள்' 'கெட்ட நாள்' என்று பகுத்துப் பார்க்கக் கூடாது. நாள் நம்மைக் கெடுத்து விடுவதில்லை; நாளை நாம் கெடுத்து விடுகிறோம். அதனால் நாள் கெட்டது அல்ல; நாமே கெட்டவர்கள். அதனாலன்றோ திருஞானசம்பந்தர்.

> ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
> வெள்ளி சனி பாம்பு இரண்டுமுடனே
> ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
> அடியாரவர்க்கு மிகவே

என்று அருளிச் செய்தார்! திருள்ளுவரும் குடிசெயலுக்குப் பருவம் பார்த்தல் தவறென்று கூறுகின்றார்.

உயிரினைச் சார்ந்த உள்ளம் 'குபுகுபு' என்ற சுறுசுறுப்புக்குரியது. கிளர்ச்சிகள் நிறைந்தது. சோம்பலும், அலுப்பும், சலிப்பும் மனிதனின் செயற்கையேயாம். சிலர் பொருள் செய்கிறார்கள். சிலர் புகழ் செய்கிறார்கள். சிலர் சோம்பலையும் முயன்று செய்கிறார்கள்! ஐயோ, பாவம்! இதனைத் திருவள்ளுவர் 'மடி செய்து' என்று நகைத்துப் பேசுகிறார். சோம்பலைச் செய்வான் சுற்றத்தைப் பேண மாட்டான். அதனால் குடி செய்தலும் ஆகா.

சிலர் எடுத்ததற்கெல்லாம் மானம் போகிறது என்பர். ஆனால் அவர்களையே மானம் எங்கிருக்கிறது என்று கேட்டால் சொல்லத் தெரியாது. அவர்களில் பெரும் பாலோருக்கு மானம், வேட்டியில் தானிருக்கிறது. ஒருசிலர் தவறுகளைக் கண்டபோது இடித்துக் கடிந்து சொல்வதில்கூட மானம் போய்விடுவதாகக் கருதுகிறார்கள். நாடாளும் அரசனுக்கே இடித்துச் சொல்லும் இணையற்ற நட்புக்குழாம் தேவையென்பது வள்ளுவர் கருத்து. ஆதலால் மானம் என்பது ஒருவர் தனிப்பட்ட முறையில் நம்மை விருப்பு வெறுப்புகளின் காரணமாக மதப்பதிலோ அவமதிப்பதிலோ இல்லை.

உண்மையில் மானம் நம்முடைய வினையின்கண் தங்கிக் கிடக்கிறது. நம்முடைய வினையின் மாட்சி, பயன் ஆகியன பற்றித் தொடர்பாகப் பிறர் மதிக்கும் மதிப்பீடுகளே நமக்கு மானமாகும்.

நம்முடைய நல்லாண்மையின் காரணமாக நாமும், நம்முடைய குடியினரும் ஆகிய அனைவரும் வளத்துடன் கூடி வாழ்வோமாயின் ஆங்கு மானமிருப்பதாகக் கருத்து. நம்மைச் சுற்றி வறுமை காணப்படுமாயின், நம்முடைய குடியினர் வறுமையால் வாட்டமுறுவாராயின் ஆங்கு நல்லாண்மையுமில்லை; மானமுமில்லை. சூழ்ந்திருப்போரின்

வறுமை அங்கு வாழ்வோரின் மானத்தைப் பறை சாற்றிக் கப்பலேற்றிக் கொண்டிருக்கும்.

ஆனால் இன்றோ கொடுமை! ஒரே குடியைச் சார்ந்த ஒருவன் வளத்துடன் வாழ்கிறான்; பிறிதொருவனோ வறுமை யில் வாடுகிறான். அவனுடைய வறுமையை இழித்துப் பேசி, தன்னுடைய மானத்தைத் தானே விலை கூறுகிறான். பெருமை, சிறுமை, மதிப்பு, மதிப்பில்லாமை ஆகியவை தொடர்புடைய மான உணர்ச்சிகள்கூட, குடி செய்வானுக்கு இருக்கக்கூடாது என்பது வள்ளுவர் கருத்து.

பிறப்பால், சார்பால், அந்நியனாக இருப்பவர்களிடத் திலேயே மானம் கருதுதல் வேண்டும். அது போல, தன்னொழுக்கத்திலேயே மானம் போற்றுதல் வேண்டும். அதனை விட்டுவிட்டு, நம்மைச் சார்ந்த ஒருவர் மதிக்கத் தவறிவிட்டமையைப் பெரிய மான உணர்ச்சியைக் கருதக் கூடாது. இதனை, வள்ளுவப் பெருந்தகை,

*குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து*
*மானம் கருதக் கெடும்*

என்று எவ்வளவு அழகாகக் கூறுகிறார்!

தாம் பிறந்த குடியினுடைய—குடும்பத்தினுடைய குற்றங்களை மறைக்கின்ற இனிய பணியைச் செய்பவர்கள் துன்பங்களை அடையலாம். அவர்தம் வாழ்க்கை இன்பத் திற்கு மாறாகத் துன்பத்திலேயே சுழன்று அல்லற்படலாம். அதுவும் போரில் விழுப்புண் படுதலைப் போல பயனுடை யதே என்று திருவள்ளுவர் கூறுகிறார். ஆதலால், இழப்பு களையும் துன்பங்களையும் காட்டி ஒருவர், குடிசெயலி லிருந்து விலகக்கூடாது. பொதுவாக அறியாமை, பொருளற்ற வறுமை, நோய் இவற்றினால் வரும் துன்பமே துன்பமெனக் கொள்ளத்தக்கன. மாறாக ஓயாத உழைப்பு, உதவுதலால் வந்த

துன்பம் ஆகியன துன்பமேயல்ல. அவற்றினும் சிறந்த இன்பம் வேறு இல்லை. இதனை,

*இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்*
*குற்றம் மறைப்பான் உடம்பு*

என்று திருக்குறள் பேசுகிறது.

ஒரு குடியில் ஒருவரோ, இருவரோ நல்லாண்மை யுடையவராக இருத்தல் போதாது. ஏதோ ஒரு துன்பம் தோன்றி அந்த ஒருவனும் வீழ்வானானால், அடுத்து அந்தக் குடியைத் தாங்கி நிற்பாரில்லாது போனால், அந்தக் குடி கெடும். ஆதலால், குடியினைச் சார்ந்த பலரும் நல்லாண்மை யுடையவராகக் குடிசெயற் பாங்குடையவராக வளர வேண்டும்.

ஒரு மனிதனுக்குத் தன்னுடைய குடிசெயல் பணியில் ஈடுபடுதலும் அந்தப் பணியை இடையீடின்றி முடித்தலும் பெருமைக்குரியது என்பதையும், ஆன்ற அறிவும், ஆள் வினையும் உடையோரால் குடி உயர்ந்து விளங்கும் என்பதையும், குடி செய்வார்க்குத் தெய்வம் துணை செய்யும் என்பதையும், குடியைத் தாழாது காப்பாற்றுவோனுடைய கருத்துகள் தாமே முடியும் என்பதையும், குடியோடு கூடித் தழுவி வாழுதற்குரிய சிறந்த குண நலன்கள் பெற்றவனை, மற்றவர்கள் சுற்றமாகச் சூழ்வார்கள் என்பதையும், குடி செய்வார்க்கு இல்லை பருவம், மடி, மானம் என்பதனையும் தேறத் தெளிந்தோம்.

நம்முடைய குடி, தமிழ்க்குடி; திருவள்ளுவர் பிறந்து வாழ்ந்த குடி. தம்முடைய குடியினை நாம் ஆக்க வேண்டும் என்ற உணர்வு நலம் நம்மை உந்திச் செலுத்துவதாக.

# வேளாண்மை

உலகில் இன்னமும் பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடுகின்றார்கள். வறுமையில் வாடி ஏக்கமுற்று வாழ்ந்தும் வாழாதவராக இருப்பவர்களைப் பார்த்து, நிலமகளாகிய அன்னை எள்ளி நகைக்கின்றாள். உண்டு உடுத்து மகிழும் பொருட்செல்வத்துக்கு நிலமே அடிப்படை.

இந்த நிலம் தன்னை அணுகிக் கைவினையால் முயன்று நிற்போரை ஒன்றுக்குப் பத்தாக அள்ளிக் கொடுத்து வாழ்விக்கும் இயல்புடையது. ஆயினும் பலர் கைவினை கொண்டு நிலத்தையணுகிப் பெறுவன பெறாமல் கைகளை விரித்து ஏங்கி, தராதார்மாட்டு நின்று இரந்து கேட்டு இழிநிலை எய்துகின்றனர். இது கொல்லைப்புறத்தில் கோபுரமனைய செல்வமிருக்கக் கண்டும் காணாமல் கொல்லும் வறுமையில் வாடுவது ஒத்தது. இதனை,

***இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்***
***நிலமென்னும் நல்லாள் நகும்***

என்று ஓதுகிறார், திருவள்ளுவர்.

உலகில் பல்வேறு தொழில்கள் உண்டு. ஆயினும் உழவுத் தொழிலே தலையாய தொழில். மற்றத் தொழில்கள் வழி கிடைப்பன இல்லாமலும் வாழமுடியும். ஆனால், உணவின்றி வாழமுடியாது. "உண்டி முதற்றே உலகு" என்றும் கூறுகிறார்கள். ஆதலால்,

***சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம், அதனால்***
***உழந்தும் உழவே தலை***

என்றார் திருவள்ளுவர். மேலும் பல்வேறு தொழிலுடை யாரையும், மற்றும் எல்லாரையும் தாங்கி நிற்கும் பெருங்குடி, உழவர் பெருங்குடியேயாகும்.

*உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது*
*எழுவாரை யெல்லாம் பொறுத்து*

என்பது குறள். மிகப்பெரிய மணிநெடுந்தேராக இருந்தாலும் அந்தத் தேரின் இனிய செலவுக்கு அச்சாணி தேவை. அதுபோல மாடமாளிகை, கூட கோபுரங்கள் மற்றும் பல்வேறு வகையான மேம்பட்ட உலகாயினும் உழவுத் தொழிலாகிய அச்சாணி இந்த உலகத்திற்கு இன்றியமை யாதது.

தம்முடையதேவைகளைத் தாமே உழுது உற்பத்தி செய்து உண்டு வாழ்வோர், பிறரைத் தொழவேண்டிய அவசியம் இல்லாதவர்கள். அவர்களுக்கு இச்சை முகம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. உழவர் வாழ்க்கை தன்மானம் நிறைந்த தகவுடைய வாழ்க்கையாகிறது. ஆனால், இன்றோ உழவனுக்கும் நிலத்தின் உரிமைக்கும் நீண்ட இடைவெளியிருப்பதால், உழவனின் வாழ்க்கை இத்தகு சிறப்புடையதாக இல்லை. எனினும், உரிமையுடை யோனுக்கும் உணவு தேவையாதலால், இவனது மானம் ஓரளவு காப்பாற்றப்படுகிறது. அதுவும் பெரிய அளவு நில உரிமை குவிந்துள்ள இடத்தில் இயலாமற் போகிற நிலைமையை எண்ணி வருந்த வேண்டியதிருக்கிறது.

ஆனாலும் விடுதலைக்குப் பிறகு நம்முடைய நாட்டுச் சுதந்திர அரசு உழவர் பெருங்குடியின் வாழ்க்கை நிலைத்து நின்று உயரப் பல்வேறு புதிய சட்டங்களைச் செய்தது. அதன்வழி ஓரளவு முன்னேற்றம் காணப்பெற்றிருக்கிறது. உழவுத்தொழில் சுதந்திரமான—தகுதியுடைய தொழில். ஆனால், மற்ற வாழ்க்கைத் துறைகளோ அப்படியல்ல. தொழு தலும் பின்செல்லலும் பிறதொழில்களோடு இணைப்புடை யன. இதனை,

*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்*

என்ற குறள் ஓதுகிறது. இளங்கோவடிகளும் "வீழ்குடி உழவர்" என்று உழவர் பெருங்குடியை உயர்த்தினார்.

நாட்டை ஆளும் அரசின் குடை தாழாது, பேரரசு களையும் தன்னுள் அடக்கிக் காட்டும் ஆற்றல் உழவுத் தொழிலுக்கே உண்டு. கழனிகளில் கிடக்கும் கதிர்களின் நிழலே, அரசுக் குடையின் நிழலுக்கு அரண் செய்கிறது. கதிர்கள் நிழலே கொற்றவன் குடைக்கும் ஆண்மையும், தண்ணளியும், கொடையும் வழங்குகின்ற பெருமையுடைய தாகும். அதனாலன்றோ, புறநானூறு.

*பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை*
*ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே*

என்று கூறிற்று!

*இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்*
*உழவிடை விளைப்போர்*

என்றார் இளங்கோவடிகளும்.

இன்று நம்முடைய நாட்டைப் பற்றி வருத்தும் துன்பமும், உணவுப் பற்றாக்குறையேயாகும். இந்த உணவுப் பற்றாக்குறை காரணமாக நம்முடைய மக்கள் அல்லற் படுகின்றனர். வெளிநாட்டில் உணவுப் பொருளை வாங்குவதன் மூலம், நமது அந்நியச் செலாவணி முடைப்படுகிறது. ஆதலால், இன்று நம்முடைய தாய் நாட்டுக்குச் செய்யும் உயர்ந்த பணி, உணவு உற்பத்தியைப் பெருக்குதலேயாகும். இன்று நமது தாய்நாட்டின் வலிமை, உணவு உற்பத்தியிலேயே இருக்கிறது என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

தம் கைகளால் தாமே உழுது உண்டு, வாழ்க்கை நெறியினை மேற்கொண்டோர் சிறந்த வேளாண்குடி மரபினர். அவர்கள் இல்லையென்று இரப்பவர்களுக்கு உள்ளதை 'இல்லை'யென்று ஒளிக்காது வழங்கும் இயல்பினர். உழவுத் தொழில் மூலம் வரும் செல்வம் மீண்டும் மீண்டும் தொடர்ந்து வரும் செல்வம். மற்றச் செல்வங்களை அப்படி உறுதியாகச் சொல்லமுடியாது. ஆதலால், பெரும்பாலும் உழவர் குடிப் பரம்பரையினராக வந்த வேளாளர் பெருங்குடி மக்கள் வரையாது வழங்குவர்; விருந்தோம்புவர்; உண்பித்து உண்பர். திருஞான சம்பந்தரும் "இரப்போர்க்குக் கரப்பிலார்" என்று உழவர் பெருங்குடியை வாழ்த்துகிறார்.

உழவுத் தொழிலுடையோர், உழவுத் தொழிலை மறந்துவிடுவாராயின் உலகம் நிலைதடுமாறும். மக்கள் சமுதாயம் உண்ண உணவின்றி அல்லற்பட நேரிடும். ஏன்? முற்றத்துறந்த முனிவர்களேயானாலும் அவர்தம் வாழ்க்கையும் அல்லற்படும். துறவிகளும் தாம் கொண்ட ஒழுக்கத்தில் நிலைநிற்றல் அரிது. இதனை,

> *உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்*
> *விட்டேம்என் பார்க்கும் நிலை*

என்ற குறளால் அறியலாம்.

ஆக, சுற்றிச் சூழ்ந்திருக்கும் சுற்றத்தாரையும், நாடிவரும் விருந்தினரையும், நாடு காக்கும் அரசையும் அருளறம்பூண்ட துறவிகளையும் காப்பாற்றும் உயர்வு நலம் சிறந்த தொழில் உழவுத் தொழிலேயாம்.

திருவள்ளுவர் வழிவழி வேளாண்மைத் தொழில் சிறந்த தமிழ்க் குடியில் பிறந்தமையால் உழவுத் தொழில் நுட்பத்தையும் பேசுகிறார். நிலத்தை நல்ல இளகிய ஈரப் பதத்தில் ஆழமாக உழவேண்டும். அங்ஙனம் குறைந்தது நான்கு

தடவையாவது உழ வேண்டும். ஓர் உழவுக்கும் பிறிதோர் உழவுக்குமிடையில் நனைதலும், உழுதலும், காய்தலும் நிலத்திற்கு நல்லது. உழுத புழுதி காயவேண்டும்.

நிலத்தில் ஈரமும், காற்றும் கலந்திருப்பதன் காரணமாக 'மாய்ச்சர்' என்ற பொருள், கதிரவன் ஒளியால் காய்தலின் மூலம் எடை குறையும். அங்ஙனம், ஒரு பலம் புழுதி, கால் பலம் புழுதியாகக் குறைகிற அளவு காய வேண்டும் என்று கூறுகிறார். இங்ஙனம் உழுது புழுதியெடுத்து அந்தப் புழுதியைக் காயப் போட்டு வேளாண்மை செய்தால், பிடி எருவும் போடாமல் நன்றாக விளைவிக்கலாம். பணைத்து வளர்ந்து அதிகப் பயனைத் தரும். இதனை,

> தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
> வேண்டாது சாலப் படும்

என்று குறள் கூறுகிறது.

திருவள்ளுவர் நல்ல உளவியல் வல்லுநர். நம்முடைய உளத்தின் இயல்பு, ஒருசேரப் பல கடமைகளை எடுத்துக் கூறினால் கடமைகளின் சுமை கருதிச் செயற்படத் தயங்கும். அதற்கு மாறாக ஒன்றன்பின் ஒன்றாக முன் சொன்ன கடமையில் உளம் சென்று பற்றிச் செயற்பட்டு நிற்கும் பொழுது, ஊக்கமும் மகிழ்ச்சியும் உளத்திடை இருக்குமாதலால், பிறிதொரு கடமையை எடுத்துக் கூறினால் எளிதில் ஏற்றுச் செய்யும் இயல்பு உள்ளத்தின் பாங்காகும். அங்ஙனம் கூறும்பொழுது, உணர்த்தும் ஒவ்வொரு கடமையினையும் உயர்த்திக் கூறுதல் உள்ளத்தின்கண் ஊக்கக் கிளர்ச்சியும் எழுச்சியும் தோன்றவேயாகும். முன் ஒன்றினைப் பெரிதுபடுத்தி, பின்னை அதனினும் இது நன்றென்று கூறுதல் மேன்மேலும் உயிரினை—உள்ளத்தினை உந்திச் செலுத்தும். இந்த வகையில் உழவுத்தொழிலின் நுட்பத்தினை,

*ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்*
*நீரினும் நன்றதன் காப்பு*

என்றோதுகிறார்.

உழுதலினும் சிறப்பு எருவிடுதல்; அதனினும் சிறப்பு களையெடுத்தல்; அதனினும் சிறப்பு நீர் பாய்ச்சுதல், அதனினும் சிறப்பு விலங்குகளாலும் பூச்சிகளாலும் அழிவு வராமல் பாதுகாப்பது என்று எடுத்தோதும் நுட்பத்திறன் எண்ணி மகிழத்தக்கது. எரு இடுதல் மிக மிக அவசியமான ஒன்று. அதிலும் இயற்கை உரமிடுதலே சிறப்பு. பசுந்தழை உரமும், சாணம் குப்பைகளால் தயார் செய்யப்பெற்ற 'கம்போஸ்ட்' உரமும், நிலத்திற்கு மிகவும் ஏற்ற உரம். இத்தகைய உரங்கள் நிலத்திற்குப் பூசாரம் தருகிறது. அதே நேரத்தில் ஒருசேரப் பயிரர்களுக்கும் ஊட்டச்சத்து கொடுக்கிறது. ஆதலால், இயற்கை எரு இடுதலே சிறப்பு.

இயற்கை உரமிடுவதில் கொஞ்சம் குறைவாக உரமிட்டு விட்டாலும் கூடக் கேடு ஒன்றுமில்லை. ஆனால் அமோனியம் சல்பேட்ட, யூரியா போன்ற நவீன உரங்கள் இவ்வளவு சிறந்த பயன்களைத் தருவதில்லை. இந்த நவீன உரங்கள் பயிர்ச் செடிக்கு ஊட்டம் தருவதில்லை.

நிலத்தில் ஏற்கெனவே இருக்கின்ற உரத்தை—பயிர்ச் செடிகள் எடுத்துக் கொள்ள முடியாத நிலைமையில் இருப்பதை, பயிர்ச் செடிகள் எடுத்துக் கொள்ளும் வகையில் மாற்றித்தரும் வேலையைத்தான் இந்த நவீன உரங்கள் செய்கின்றன.

இதை விவசாய வல்லுநர்கள் "கிரியா ஊக்கி" என்றே சொல்லுகின்றனர். ஆதலால் நவீன உரங்களால் நிலத்திற்கும் ஊட்டமில்லை; பயிருக்கும் ஊட்டமில்லை. மாறாக நிலத்தில் உரமேயில்லாதபோது. நவீன உரத்தையிட்டால் பயிர் வளராமல் கருகிப் போகிறது.

ஆயினும், அவளையுடையவன் நாள்தோறும் அவளை அணுகிக் கண்களால் நோக்கிப் பழகித் தன்னுடைய கைகளால் அவளை ஒப்பனை செய்யத் தவறின் அவளுக்கும் பொல்லாத கோபம் வந்துவிடும். அவள் அகத்தே ஊடி விடுவாள்; அதாவது மாறுபாடு கொள்வாள்.

காதலனுக்கெனக் காத்திருக்கும் காதலியை ஏவலாள் போய் நிறைவு செய்ய முடியுமா? ஏவலாளனைக் கண்ட காதலியிடத்தில்தான் எழில் நகை அரும்புமா? அல்லது ஏவலாளன் மூலம்தான் நன்கலம் பெற முடியுமா? அதுபோன்றதே நில உரிமையாளனுக்கும், நிலத்திற்குமுள்ள உறவு என்கிறார் திருவள்ளுவர்.

இதனால் நிலம்; உழுவோனிடத்திலேயே இருக்க வேண்டும். உழுவோனுக்குரிய நில உரிமையே நியாயமானது; இன்பமானது; வளம்பல படைத்துத் தருவது என்று வள்ளுவம் கூறுகிறது.

இன்றோ, நமது நாட்டில் நில உரிமைக்கும் உழவுக்கும் பல இடங்களில் உறவில்லை. 'மெரினா' கடற் கரையில் உலாவி மகிழ்வோர் தஞ்சைத் தரணியில் நிலம் பெற்றிருக் கின்றனர்.

நிலம் என்னும் நல்லாள் எப்படி வளர்வாள்? அவளைப் பார்ப்பார் யார்? அவள் வயிற்றுப் பசிக்கு உரமிடுவார் யார்? அவள் திருமேனியைத் தண்ணீரில் நனைத்துக் குளிப்பாட்டுவார் யார்? களையாகிய நோய் கண்டபோது களைவது யார்? இத்தனை அவலங்களுக் கிடையேயும் நிலமென்னும் நல்லாள் செந்நெல் கொழிக்க வேண்டும்; செங்கரும்பு தரவேண்டும் என்று கேட்டால் தருவாளா?

ஏதும் செய்யாது இன்பத்திற்கு மட்டும் காதலியிடத்தில் உரிமை கொண்டாடக் காதலனுக்கு ஏது உரிமை? நிலமென்னும் நல்லாளை நாடாமல், அவளை உழுது

ஆயினும், அவளையுடையவன் நாள்தோறும் அவளை அணுகிக் கண்களால் நோக்கிப் பழகித் தன்னுடைய கைகளால் அவளை ஒப்பனை செய்யத் தவறின் அவளுக்கும் பொல்லாத கோபம் வந்துவிடும். அவள் அகத்தே ஊடி விடுவாள்; அதாவது மாறுபாடு கொள்வாள்.

காதலனுக்கெனக் காத்திருக்கும் காதலியை ஏவலாள் போய் நிறைவு செய்ய முடியுமா? ஏவலாளனைக் கண்ட காதலியிடத்தில்தான் எழில் நகை அரும்புமா? அல்லது ஏவலாளன் மூலம்தான் நன்கலம் பெற முடியுமா? அதுபோன்றதே நில உரிமையாளனுக்கும், நிலத்திற்குமுள்ள உறவு என்கிறார் திருவள்ளுவர்.

இதனால் நிலம்; உழுவோனிடத்திலேயே இருக்க வேண்டும். உழுவோனுக்குரிய நில உரிமையே நியாயமானது; இன்பமானது; வளம்பல படைத்துத் தருவது என்று வள்ளுவம் கூறுகிறது.

இன்றோ, நமது நாட்டில் நில உரிமைக்கும் உழவுக்கும் பல இடங்களில் உறவில்லை. 'மெரினா' கடற் கரையில் உலாவி மகிழ்வோர் தஞ்சைத் தரணியில் நிலம் பெற்றிருக் கின்றனர்.

நிலம் என்னும் நல்லாள் எப்படி வளர்வாள்? அவளைப் பார்ப்பார் யார்? அவள் வயிற்றுப் பசிக்கு உரமிடுவார் யார்? அவள் திருமேனியைத் தண்ணீரில் நனைத்துக் குளிப்பாட்டுவார் யார்? களையாகிய நோய் கண்டபோது களைவது யார்? இத்தனை அவலங்களுக் கிடையேயும் நிலமென்னும் நல்லாள் செந்நெல் கொழிக்க வேண்டும்; செங்கரும்பு தரவேண்டும் என்று கேட்டால் தருவாளா?

ஏதும் செய்யாது இன்பத்திற்கு மட்டும் காதலியிடத்தில் உரிமை கொண்டாடக் காதலனுக்கு ஏது உரிமை? நிலமென்னும் நல்லாளை நாடாமல், அவளை உழுது

பண்படுத்தி உவகை தராமல்—உற்ற பசிக்கு உர மென்னும் சோறிடாமல்—உற்ற தண்ணீர் வேட்கைக்குத் தண்ணீர் தராமல்—நோய்க்கு மருந்திடாமல் நில மென்னும் நல்லா ளிடத்தில் பயன்காண முடியாது.

ஆதலால். எழுமின்! கதிரவன் எழுவதற்கு முன் எழுமின்! நிலமென்னும் நல்லாளைக் கையில் ஏருடன், தலையில் எருவுடன் ஓடிச் சென்று காண்மின்! உறவு கொண்மின்! உழுமின்! நீவிர் வாழலாம்! உலகமும் வாழும்!

## வறுமையின் கொடுமை

உயிர்கள் நுகரும் இயல்பின. நுகர்ந்து அனுபவித்தல் உயிர்களின் பிறப்புரிமை. உயிர்கள் பூரண வளர்ச்சி பெறாத நிலையில் உடல் தேவைகளையே நுகரும். வளர்ச்சி பெற்ற நிலையில் திருவருளையும் சுவைத்து நுகரும்.

உயிர் உடலிடைத் தங்கிப் பயிலும் வாழ்க்கைக்கு நுகரும் பொருள்கள் தேவை. அவை யாதொன்றும் இல்லாது அல்லற்படுவது வறுமையாகும். வறுமை, இன்பத்திற்கும் கடவுளுக்கும் கொடிய பகையாகும்.

மாணிக்கவாசகர் வறுமையைத் "தொல்விடம்" என்றார். வறுமையைப் போல் உலகில் கொடியது வறுமையேயாம் என்பது திருவள்ளுவர் முடிபு.

> இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
> இன்மையே இன்னா தது

என்பது குறள்.

வறுமை என்பது என்ன? வாழ்க்கையின் தேவைகள் பல திறத்தன. ஆனாலும், அவசியம்—அவசியமின்மையைக் கருதாமல் பலர் நிறைய ஆசைப்படுவார்கள். அவசிய

மில்லாதவற்றைக் கருதி அவை கிடைக்காத போது அதையும் வறுமை என்று கருதி அல்லற் படுவார்கள்.

சில ஆசைகள் தனித்து வருவன அல்ல. அவற்றுக்குப் பல தோழமைகள் உண்டு. அலையின் பின் அலை மோதும் வெள்ளத்தை ஆசைக்கு உவமிப்பார் மாணிக்கவாசகர். ஆக, வறுமையின் மறுபெயர் ஆசை என்றும் சொல்லலாம்.

ஆசையினால் வரும் வறுமை குடியின் உறவையும் கெடுக்கும்; குடியையும் கெடுக்கும்; அழகையும் கெடுக்கும்; வலிமையையும் கெடுக்கும்; புகழையும் கெடுக்கும். இதனை,

*தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக*
*நல்குரவு என்னும் நசை*

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

வறுமைத் துன்பத்தால் உறக்கமும் வாராது. நெருப்பி னுள்ளும் கிடந்து தூங்கலாம், ஆனால் வறுமையில் தூங்க முடியாது என்று கூறிகிறார் திருவள்ளுவர். நெருப்பு உடம்பை மட்டும் சுடும். வறுமையோ உயிரையும் உயிருணர்வையும் சுடும். ஆதலால் வறுமைத் துன்பத்தில் கண்ணை மூடவும் முடியாது என்கிறார் திருவள்ளுவர். இதனை,

*நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்*
*'யாதொன்றும் கண்பாடு அரிது*

என்கிறார்.

நேற்று மகிழ்ந்த ஒன்றினை மீண்டும் அடைந்து மகிழ விரும்புவார்கள். ஆனால் வறுமையோ வாட்டுகிறது. அதை மீண்டும் யார் விரும்புவார்? வறுமையில் வாடுகிறவர்கள் வறுமையின் வழிச் சுவட்டைப் பார்த்தாலும் அஞ்சுவர். இதனை,

*இன்றும் வருவது கொல்லோ நெருநலும்*
*கொன்றது போலும் நிரப்பு*

என்று கூறுகின்றார்.

வறுமை தனித்து வரும் துன்பமல்ல. வறுமைக்கு நிறையப் பரிவாரங்கள் உண்டு. வறுமை தன்னுடைய பரிவாரங்களுடன் வந்து ஆக்கிரமித்து அழித்து நரகத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவடும். வறுமையைத் தொடர்ந்து கவலை வரும். கவலையைத் தொடர்ந்து சோம்பல் வரும். பின் நோய்! இப்படி ஒன்றன்பின் ஒன்றாகத் தொடரும் வறுமையின் நுழைவாயிலை அடைந்தால் மற்றத் துன்பங்கள் அனைத்தும் வந்து விளையும். இதனை,

*நல்குர வென்னும் இடும்பையுள் பல்குறைத்*
*துன்பங்கள் சென்று படும்*

என்கிறார்.

வறுமை, பரம்பரையாக வந்த பண்பாட்டையும் கெடுக்கும். நல்ல குடியில் பிறந்தோர் எப்பொழுதும் சோர்வின்றி இருப்பார்; நல்ல சொற்களையே பேசுவர்; ஆயினும் வறுமை வந்துற்றபோது சோர்வடைவர். தகாத சொற்களைப் பேசுவர். இதனை,

*இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த*
*சொற்பிறக்கும் சோர்வு தரும்*

என்று கூறுகிறார்.

கற்றுணர்ந்து மெய்ப்பொருள் கண்டாராயினும் அவர் வறுமையினராயின், அக்கல்வி பயன்படாது. சிறந்த மெய்ப் பொருளை நன்றாக உணர்ந்து கூறினாலும் பயன்படாது. கேட்பவர்கள் கேட்கமாட்டார்கள். இவர்தம் சொற்களைக் கேட்பவர்கள், இவர்தம் குறையைக் கேட்டு, அக்குறையை நிறைவு செய்ய வேண்டியதிருக்குமே என்று கருதி இவரைக்

கண்டாலே ஒதுங்கி ஒளிந்து விடுவார்கள். அப்படியே கேட்டாலும் அவர்கள் நன்குணர்ந்து சொன்னாலும் பரிவோடு கூறினாலும் அதைப் பிழைப்புக்கு வழியென்றே கருதுவர். ஆதலால், வறுமையாளரின் கல்வி பயன்படாது. அவர்தம் சொல்லும் பயன்படாது. கல்லாதவர்களாக இருந்தாலும் "வெள்ளையப்பன்" இருக்குமானால் அவர்தம் சொற்கள் மிகச் சிறந்த கல்வி கேள்வி ஆயதாக நாட்டு மக்கள் கருதுவார்கள். ஆதலால், கல்வியும் கருத்தும் பயன்பட வேண்டுமானாலும் வறுமையைத் தொலைக்க வேண்டும். ஆனால் இன்றோ, கல்வியும் கருத்தும் வாணிகமாக்கப்பெற்று வருகின்றன. அதனால்தான் நாட்டில் நாள்தோறும் எண்ணற்ற மேடைகளில் சொல்லப்படும் சொற்கள் பயன் தராமல் போகின்றன போலும்! இதனை,

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்

என்றார்.

வறுமை அன்புணர்ச்சிகளைத் தொட்டுத் தூண்டாது. ஒரோவழி தூண்டப் பெற்றாலும் அந்த அன்பு செயல்பட வழியில்லை. வறுமையின் காரணமாகப் பயன்படாத அன்பினை ஏற்றுக் கொள்பவர் யார்? காரியமற்ற அன்பு, விசுவாசம், உண்மை ஆகியன அனைத்தும் பயனற்றவையே யாம். வறுமை அன்பைத் தடை செய்தலோடு, அறத் தினையும் தடை செய்யும். வறுமை அறத்தோடு இயை பில்லாதது; சார்பில்லாதது. வறுமையாளன் வாழ்க்கை பெரும்பாடாகிவிடும். ஆதலால் நாட்டில் வறுமையை வைத்துக்கொண்டு—அன்பு வளரவேண்டும்; அறம் வளர வேண்டும்; ஒழுக்கம் வளர வேண்டும் என்றெல்லாம் வாடாத வயிற்றினையுடையோர் அணி, பிரச்சாரம் செய்வது வேடிக்கையாக இருக்கிறது. அவர்கள் சமாதானம் கூறுகிறார்கள், "வறுமையில் செம்மை" என்று! அவர்கள் கூற்றுப்படியே வறுமையில் செம்மையாக இருக்கலாம். அது

கோடியில் ஒருவருக்கே சாலும். அது பொது விதியல்ல. மேலும் பழமொழியின் நுண்பொருள், "வறுமை நிலையில் வாடாமல் செல்வம் காண முயற்சி செய்க" என்பதேயாகும். அன்பிற்கும் அறத்திற்கும் துணை செய்யாத வறுமையுடைய ஒருவனை சமூகம் உறவு கொண்டாடாது. பிறப்பினால் உறவினராயினும் அது அவர்களுக்கு நினைவிருக்காது; மறந்து விடுவார்கள். வறியன் எடுத்துக் கூறினாலும் "அப்படியா?" என்று பார்த்தும் பாராமலும் கேட்பார்கள். மற்றவர்கள் மட்டுமா? ஏன், ஈன்ற தாயின் கதி என்ன? உலகில் தாயன்பே தலையன்பு. ஈரைந்து திங்கள் சுமந்து, ஈன்று புறந்தந்து, எடுத்து மகிழ்ந்து விளையாடி, பாலூட்டிச் சீராட்டி, நோய்க்குத் தானே மருந்துண்டு வளர்த்த தாயாயினும் வளர்ந்துவிட்ட போது, வறுமையில் வாடுவானாகில் மகவெனப் பார்க்க மாட்டாள். அந்தப் பரிவும் பாசமும் பறந்தோடிப் போகும். அந்நியனைப்போல் பார்ப்பாள். என்னே! வறுமையின் கொடுமை! ஐயாகோ பரிதாபம்! குழைந்த தாயன்பையும் கொலை செய்யும் வறுமையின் கொடுமை சொல்லுந் தரத்ததன்று. நாட்டையும் வீட்டையும் கெடுக்கும் வறுமையை எதிர்த்துப் போராட வேண்டும்.

உடலிடைத் தங்கி வாழும் உயிர்கள் தாம் துய்த்தலுக் குரிய பொருள்களைப் பெறாதபோது முற்றத் துறந்துவிடுதல் நல்லது. அங்ஙனம் துறவாமல் வாழ்தல் பிறர் வீட்டுப் பானையிலிருக்கும் உப்புக்கும் கூழுக்கும் பகையாகி, அவ்வழி அந்த இல்லில் வாழுவோரையும் பட்டினி போட்டுச் சாகடிப்பதாக முடியும். வறுமை வந்துற்றும், மானத்திற்கு இடையூறு வாராதிருப்பதால் மானம் போற்றும் அடிப் படையில் துறந்து விடுதல் நல்லது. வறுமை வந்துற்ற பொழுதே ஓரளவு துறவு வந்துவிட்டது. காரணம் சுற்றத்தார்கள் இவரைத் துறந்து வெளியேறி விட்டனர். இங்குத் துறவு என்று குறிப்பிடுவது தன்னுடைய இச்சைகளைத் துறத்தலேயாகும். இச்சைகளையும் ஒன்றன் பின் ஒன்றாகத் துறத்தலோ அல்லது ஒன்றினைத் துறந்து

ஒன்றினை அனுபவித்தலோ இரண்டும் கெட்ட நிலையை உருவாக்கும். இஃது எரிந்த வைக்கோற்போரில் ஒரு பகுதியை அணைத்து விட்டோம் என்று கூறி அமைதி கொண்டது போலாகும். முற்றிலும் இச்சையை ஒடுக்குதலே துவரத் துறத்தல் ஆகும் என்கிறார் வள்ளுவர். இத்தகு துறவு நெறி நடைமுறையில் இந்த வையகத்தில் இல்லை. ஒருக்கால் மக்கள் பயிலாத பெருமலைக் காடுகளுக்குள் இருக்கலாம். இருப்பர் என்றே நம்புகின்றோம்.

மானுடராய்ப் பிறந்தோர் முயன்று உழைத்து உறுபொருள் ஈட்டி, பெறுவன பெற்றுத் துய்த்து மகிழ வேண்டும். இஃது இல்லாதார் இச்சைகளைத் துறந்து விடுதல் வேண்டும். இதில் ஏதொன்றும் செய்யாது செய்யத் துணிவில்லாது அல்லற்படுவோர் அதிசயப் பிறவிகள். அவர்தம் இச்சையோ, வெறிபிடித்துத் தூண்டுகிறது. அதனால் அடுத்த வீட்டு உப்புக்கும் காடிக்கும் கூற்றாகின் றார்கள். இங்கு அடுத்த வீட்டு நுகர்பொருளை உப்பென்றும் காடியென்றும் வள்ளுவர் ஏன் சொன்னார்? தரத்தில் உயர்ந்த நுகர்பொருள்கள் கோட்டைகள் போல் உயர்ந்த மாளிகைகளிலேயே! ஆங்கு இந்த அப்பாவி எப்படிச் செல்ல முடியும்? உப்பு கூழும் குடிசைகளின் சொத்து. ஆங்கு எளிதில் செல்லமுடியும். மாளிகை கட்டி வாழ்பவன் மன இரக்கத்தின் மரணப்படுக்கையிலேயே கட்டி வாழ்கிறான். குடிசையில் வாழ்பவன் குடிசையில் தங்கியுள்ள குளிர் நிழலைப்போல் ஈர நெஞ்சினன்; இரக்க உணர்வினன்; இல்லையென்று சொல்லாது ஒரே வேளைக்குரிய உப்பையும் கூழையும் கூடக் கொடுத்து விடுவான். அவனுக்கு இவறிக்கூட்டி வட்டிக் கணக்கிட்டும் பழக்கமில்லை. ஆதலால் போலும் உப்புக்கும் காடிக்கும் கூற்று என்றார்! துறத்தலாவது பொறிகளின் இச்சையை மட்டும் அடக்குதலல்ல. புலன்களின் இச்சை யையும் அடக்குதல். "புலனழுக்கற்ற அந்தணாளன்" என்று புறநானூறு பேசும். திருக்கோயில் மதிற்சுவர் இடைவெளி

களுக்கிடையில் செடிகள் முளைப்பதுண்டு. திருக்கோயிலைப் பாதுகாக்க இந்தச் செடிகளை அப்புறப்படுத்த வேண்டும். சிலர் இந்தச் செடிகளை வேரொடு வெட்டாமல் மதிலுக்கு வெளியில் தெரிகின்ற பகுதியை மட்டும் வெட்டிவிடுவர். இடைவெளிகளுக்கிடையில் வேர் எஞ்சி நிற்கும். செடியின் உயிருக்கும் வெளிச்செல்லுதல் தடைப்பட்டமையின் காரண மாக உள்ளேயே முன்னையிலும் ஊக்கமாகப் பருத்து வளர்ந்து மதிலுக்கே கேடு செய்யும். அதுபோல மனத்தில் தோன்றும் இச்சை, புலன்களில் பரவி, பொறிகள் வாயிலாக வெளிப்படுகின்றது. பொறிகளின் இச்சையை மாற்றினால் புலன்களில் தங்கிவிடும். ஒருசேர புலன்களிலும், பொறி களிலும் இச்சையில்லாமல் இருப்பது சிறப்பு. புலன்களில் இச்சையின்றி ஒரோவழி பொறிகளில் இச்சையிருக்கலாம். இது தவறேயாயினும் கேடில்லை. காலப்போக்கில் மாறும். பொறிகளில் இச்சையின்மை காட்டிப் புலன்களில் இச்சை தாங்கி வாழ்தல் பெருங்கேடு. வெளியறியா மரப்பொந்தில் விழுந்த நெருப்புப் போன்றது. எரிவது வெளியே தெரியாது. ஆனால் உள்ளே எரித்து அழிக்கும். உப்பு இனிமை என்றும் பொருள்படும். காடி, நடுவு நிலை என்றும் பொருள்படும். நுகரும் பொருள் இல்லாதார் முயன்று பெற முடியாதார் துறத்தலுக்கும் துணியாராயின், அவர் தம் இனிமைப் பண்பும் அவர்தம் நடுவு நிலையும் கெடும். தாமே வளர்த்துக் கொண்ட இனிய பண்பையும் நடுவு நிலைமையையும் இழந்து பொருளோடு கூடிய நல்குரவோடு, உயிர்ச் சார்பான குணத்தின் வறுமையும் ஏற்றுக்கொள்வது தற்கொலைக்கு ஒப்பு. அதனால் கூற்று என்றார்.

வறுமை மிகமிகக் கொடியது. வறுமை பசியினால் வருத்துகின்றது; ஊக்கத்தைக் கெடுக்கின்றது; இனிய பண்புகளைக் கெடுக்கின்றது; கருணையிற் சிறந்த கடவுளி னின்றும் விலக்குகின்றது. திருவள்ளுவருக்கு வறுமையின் மீது ஏராளமான கோபம். அதனால் 'இன்மை' என்ற பெயர்

சூட்டிக்கொண்டு வருகின்ற பாவி என்றே அழைக்கின்றார். வறுமை இந்த உலகில் துய்த்து மகிழும் இன்பத்தையும் கெடுக்கிறது. சரி, பரவாயில்லை! அடுத்த உலகமாகிய அமரர் உலகத்திலாவது இடம் கிடைக்குமா என்று கேட்டால் அதுவும் கிடைக்காது. அந்த உலகத்தினைப் பெற அருளை, அறத்தினை, தூய்மையினை விலையாகத் தர வேண்டும். இந்த மூன்றையும்தான் வறுமை கெடுத்து விடுகிறதே! ஆதலால் அந்த உலகமும் இல்லை. வறுமையின் காரண மாகத் துறந்தால் துறவின் மூலம் வறுமையை மாற்றிக் கொள்ளவே முயலுவர். இத்தகு மனப்போக்கினாலேயே துறவுநிலை இடங்களிலும் பொருட்சார்பு மிகுந்தன போலும்! வறுமையின் காரணமாகத் துறக்காமல், வறுமையின் கொடுமை நிலை அறிந்து துய்ப்பனவற்றிற்கும் எல்லை யின்மை அறிந்து எண்ணித்தொலையாத கடல் அலைகள் போல் எற்றிஎற்றி வந்துறும் ஆசை அலைகளின் அவலநிலை அறிந்து வறுமையை மாற்றிக் கொள்ளும் நோக்கின்றி, சிந்தை நிறைவு பெறும் நோக்கத்தோடு துறக்கும் துறவு சீலம் நிறைந்த துறவு. இத்துறவு நிலை ஓட்டையும், செம்பொன்னையும் ஒக்கவே பார்க்கும் உணர்வினைத் தரும்; நோதலும் தணிதலும் இல்லை. இத்துறவினையுடையார் பிறர் மகிழ மகிழ்வர். இந்தப் பேரறம் செய்வதால் அவ்வுலகம் கிடைக்கும். ஆதலால் துய்த்து மகிழ்ந்து தெவிட்டிய நிலையில் திருவருளை நாடுதல் முறையான வாழ்க்கை; இயற்கைப் பரிணாம வளர்ச்சியும் கூட! முறையாக உழைத்து, நிறை பொருள் குவித்து, துய்ப்பித்தும், துய்த்தும், மிகிழ்வித்தும், மிகிழ்ந்தும் வாழ்தல் மாந்தர் கடமை. வறுமை இயற்கை அன்று; ;செயற்கையே. மனிதனின் சுயநலமும் சோம்பலும் படைத்ததே வறுமை. எழுக! தளராது முயற்சி செய்க! வறுமையினை வையகத்தை விட்டு விலக்குக! வாழ்வாங்கு வாழ்க! இதுவே வள்ளுவத்தின் வழி!

# இழிசெயல்கள்

உழைத்து உறுபொருள் ஈட்டி மகிழ்ந்து வாழ்தலே இயற்கை. ஒரோவழி தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளில் பிறரிடம் இரந்தும் வாழ வேண்டிய அவசியம் ஏற்படலாம். இயற்கையின் கொடுமைகளாலோ அல்லது சமுதாயக் கேடுகளாலோ இரந்து வாழும் அவசியம் ஏற்படலாம். அல்லது வாழ்ந்து முடிப்பதற்கு இரந்து கேட்காமல் வாழ்க்கையைத் தொடங்குதற்குரிய மூல முதற்பொருளை இரந்து கேட்கலாம். இரக்கின்றவன் சூழ்நிலை, இரக்கப்படு வோன் பண்பு ஆகியன கருதி இரத்தல், ஈதல் ஆதலும் உண்டு. இந்த மாதிரி இடத்தில் வெட்கப்படாமல், கூச்சப்படாமல், அவசியம் ஏற்பட்டால் இரந்திடுக என்கிறார் வள்ளுவர்.

*இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்*
*அவர்பழி தம்பழி யன்று*

என்பது குறள். இரந்து கேட்டவன் நிலையினைக் கருதி பொருளைப் போற்றுதலினும், அவனைப் போற்றுதல் உயரிய அறம் என்று கருதும் இயல்பில்லாதவர்கள் இல்லையென்று உள்ளதையும் கரந்து கூறிடுவர். கரவாது ஈயும் இயல்புடையோர் அருமை என்பதால் 'காணின்' என்றார். தானே வறியனாகாமல் வறியனாக்கப்பட்ட ஒருவன் பொருள் பெற்ற ஒருவனிடத்தில் இரந்து கேட்கும் பொழுது, அவன் கொடுக்காமல் உள்ளதையும் இல்லையென்று மறைப் பானானால் அதனால் வரும் பழி இரப்பவனுக்கில்லை; இரக்கப்படுவோனுக்கேயாம். இதனை, அப்பரடிகள் 'கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்' என்றார்.

இரந்த பொருள்கள் யாதொரு துன்பமும் கொடாமல் கிடைக்குமாயின், ஒருவருக்கு இரத்தலும் இன்பம் என்பது

வள்ளுவத்தின் கருத்து. கரந்து வாழாதார் மாட்டு இரந்து வாழ்தலும் ஓர் அழகேயாம்.

> கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று
> இரப்புமோர் ஏஎர் உடைத்து

என்பது குறள்.

"முன் நின்று இரப்பும் ஓர் ஏர் உடைத்து" என்றார். முன் நின்ற அளவிலேயே வாய் திறந்து இரந்து கேட்கும் இழிவு வாரா முன்னமே, குறிப்புணர்ந்து கொடுத்தலின் 'இரத்தலும் அழகு' என்றார்.

உள்ளத்தைக் கரந்து வாழும் இயல்பினைக் கனவிலும் கருதார்மாட்டு இரத்தலும் ஈதலே போலும். இரப்பவரைக் கண்டால், உள்ளோர் பலர் எள்ளி நகைப்பர்; இகழ்ந்து பேசுவர். சிறப்புடை மரபில் வந்தோர் இரப்போரைக் கண்டால் ஏற்றுப் போற்றி முகமன் கூறுவர்; இன்ப உரைகள் கூறித் தேற்றிடுவர்; ஏழ்மையில் நைந்த உள்ளத்தைத் தமது தூய அன்பினால் ஒற்றடம் கொடுத்து உருத்தேற்றுவர்.

> புரவலன் போலும் தோற்றம் உறழ்கொள
> இரவன் மாக்களின் பணிமொழி பயிற்றி

என்று அகம் பேசுகிறது. இங்ஙனம் மதித்து வழங்கும் மனப்பாங்கு உடையவர்களை இரப்போர் காண்பாராயின் மகிழ்வர். உள்ளத்தில் தங்கிய உவகையில் களிப்பர். பொருட்செல்வம் மட்டுமின்றி ஆரா இன்பத்தினையே அனுபவித்தலால் 'உள்ளுள் உவப்பதுடைத்து' என்றார்.

> இகழ்ந்தெள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
> உள்ளுள் உவப்ப துடைத்து

என்பது குறள்.

மானிட சாதியின் இம்மைக் குறிக்கோள் புகழுடையராக வாழ்தலேயாம். புகழ் பலவாறாகப் பலவகைகளில்

வரலாம். ஆயினும் இரப்பார்க் கொன்றீவார் புகழே, புகழெனத் தக்கது. இந்தப் புகழை நம்மிடம் கொண்டுவந்து சேர்ப்போர், இரப்போரேயாம். இத்தகு இரப்போரில்லை யாயின் ஒருவருக்கு ஏது புகழ்? ஒருவன் இரந்து கேட்பதோ, சில நாளில் சம்பாதித்த பொருள். ஆனால் அவன் திரும்பத் தருவதோ உலகளாவி நிலைத்திருக்கும் புகழ். இரப்பவன் கேட்டுப் பெறுவதோ இந்த உலகில் அழித்தால் அழியக்கூடிய பொருள். ஆனால் அவன் திரும்பத் தருவதோ அழிவில்லாத அருட்பேறு. இந்த உலகியல் வாழ்க்கை உணர்ச்சியும், சுவையும் நிறைந்ததாக இருக்க வேண்டும். வற்றி வறண்ட வெறிச்சோடிப் போன பாலைவனமாக்க காட்சியளிக்கக் கூடாது. இந்த வாழ்க்கையின் சிறந்த சீலம், கொண்டும் கொடுத்தும் மகிழ்ந்து வாழ்தலேயாகும். கொடுப்பதற்கு வாங்குவோரில்லையானால் வாழ்க்கை உயிர் வாழ்க்கையா? அது மரப்பாவை வாழ்க்கையாகும்.

*இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்*
*மரப்பாவை சென்றுவந் தற்று*

என்பது குறள்.

திருவள்ளுவர் மனிதனைப் பார்த்து 'இரவற்க' என்றார். ஆயினும் இயற்கையால் விளைந்த கேடுகளாலும், சமுதாய மாறுபாடுகளாலும் ஒரோவழி இரக்கவேண்டின் "கரவாதவ னிடத்தில் இரக்க" என்றார். ஆயினும் இரக்கப்பட்டோன் கொடாத வழி கோபப்பட வேண்டாம் என்றும் கூறுகிறார். இரத்தற் குரிய அவலநிலை வந்தது, முன்னை ஒழுக்கக் கேடுகளாலேயேயாம். நேற்றைய தனது முறையற்ற வாழ்க் கைக்கு இன்றைய வறுமை சாட்சி. கண்முன்னே நேற்றையத் தவறுகளைக் கண்டு அனுபவிக்கும் பொழுதும் மீண்டும் வெகுண்டு தவறு செய்தல், மீளவும் துன்பத்திற்கே ஆளாக்கும். ஆதலால், கொடுக்காதவன் மாட்டுச் சினந்து கொள்ளுதல், அவனைத் தாக்குவதைவிட, உன்னையே வலிமையுடன்

திருப்பித் தாக்கும். அந்தத் தாக்குதலை உன்னால் தாங்க முடியாது என்பது குறிப்பு. மேலும் செல்வம் சுழன்று வருவதொன்றேயாம். நேற்று செல்வம் உடையவனாக இருந்த ஒருவன் இன்றைக்கு இரப்பவனாகின்றான். செல்வமுடை யவனாக இருந்த ஒருவன், அந்தச் செல்வத்தைப் பெற்றிருந்த பொழுது கொடுத்தும் மகிழ்ந்தும் வாழ்ந்து இருப்பானாகில், அவன் செல்வத்தை இழந்தாலும் அவன் நலன்கருதி முன்பு பயனடைந்தோர் பாராட்டிப் பாதுகாப்பார்கள். அப்படி யின்றிச் செல்வத்தை வைத்து இழந்திருப்பானாகில் அவனைத் தேடுவாரில்லை. இத்தகையவனுடைய வறுமை யும் இரவும் பயன் தராது. இதனைச் செல்வமுடையோன் அறிந்து உணர்ந்து அவனாகத் தராதபொழுது, அவனைச் சினந்ததால்தான் என்ன பயன்? தானே உணரும் சக்தி யில்லாதவனிடத்தில் சினப்பதனால் பயனில்லை. ஆதலால் இரத்தலையும் கூடப் பற்றற்றே செய்யவேண்டும் என்பது வள்ளுவர் குறிப்பு. இதனை,

> *இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை*
> *தானேயும் சாலும் கரி*

என்றோதுகின்றார் திருவள்ளுவர்.

விதி வகுத்து இரக்கச் சொன்னாலும் திருவள்ளவருக்கு இறுதி இலட்சியம் இரந்து வாழ்கின்ற மக்களில்லாத— எல்லாரும் எல்லாச் செல்வங்களும் பெற்று வாழ்கின்ற ஒப்பற்ற சமநிலைச் சமுதாயம் காண்பதேயாகும். கடைசி மனிதன் இரவாமல் வாழுதற்குரிய பெருஞ்செல்வம் பெறுகிற வரையில் மேலேயிருப்பவர்கள் கொடுத்து அழைத்துவரக் கடமைப்பட்டிருப்பதால் அந்தக் கடமையை நிறைவேற்றுகிற காலக்கட்டம் வரையிலேயே இரப்பையும் உட்படுத்திப் பேசினார்.

தன் மதிப்பையும் இன்பத்தையும் ஒருசேர இழக்க வைக்கும் இரத்தல் அஞ்சுதற்குரியது. இரந்து இனிய

சுவையொடு கூடிய உணவை உண்ணல் சிறப்பன்று. மாறாக நெறியுடன் கூடிய முயற்சியின் பயனாகக் கிடைத்த, மோரொடும் கலக்கப்பெறாத சுவையில்லாத நீரிலேயே கலக்கப்பெற்ற கூழாயினும் உண்ணற்கு இனிது; உடலுக்கும் இனிது; புகழுக்கும் அரண் செய்யும். இதனை,

*தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது*
*உண்ணலின் ஊங்கினிய தில்*

என்றார் திருவள்ளுவர்.

முயற்சியால் பொருளீட்டி வாழும் வாழ்க்கை பாக்கிய வாழ்க்கை. அப்படியின்றி இரந்து வாழ்தல் இழிவான வாழ்க்கையேயாம். கரவாது மகிழ்ச்சியுடன் கொடுப்போரிடத்தில் இரந்தாலும் தன் மதிப்பு அழிவதில்லையே தவிர உயர்வதில்லை. ஆதலால் யார் மாட்டும் இரவாதிருத்தலே, இரந்து கோடி செல்வம் பெறுதலினும் கோடி நன்றாம்.

*கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்*
*இரவாமை கோடி யுறும்*

என்பது குறள்.

வறுமையென்னும் கடலை, வலிய முயற்சியினாலேயே கடக்கலாம். மாறாகப் பாதுகாப்பும் உத்தரவாதமுமில்லாத இரவு என்ற தோணியைக் கொண்டு கடக்கக் கருதினால் கரையேற முடியாது. மாறாகக் கரவு வன்பாறை தாக்கினால் வலிமையற்ற இரவுத் தோணி உடைந்து போகும். திருவள்ளுவர் நம்மையெல்லாம் இரந்து கேட்கிறார்; கெஞ்சிக் கேட்கிறார்.

அவருக்காக யாதொன்றும் கேட்கவில்லை; நமக்காகக் கேட்கிறார்! என்ன அவர் இரந்து கேட்பது? அதுவும் யாரை இரந்து கேட்கிறார்? இருப்பவரிடமா இரந்து கேட்கிறார்? இல்லை; இரப்பவரிடம் இரந்து கேட்கிறார்! அப்படியென்ன

கேட்கிறார்? “இரக்க வேண்டிய அவசியம் வந்தால், தயவு செய்து உள்ளதைக் கரப்போரிடத்தில் சென்று இரக்கா தீர்கள்!” என்று இரந்து கேட்கிறார்.

கரந்தும், கடுஞ்சினத்தோடும், உவகையின்றியும், தீராத் துன்பமாகக் கருதி, ஒரோவழி கொடுப்போர் கொடுத்தாலும், அப்பொருளால் உடலுக்கு உணவு ஊட்டிய வழி, மானம் மரியாதை கொஞ்சம் உடையவராக இருப்பின் அந்த உடம்பும் நில்லாது. உண்ட வழியும் சுருங்கிவிடும். கொஞ்சம் கூட மானமில்லாதவர்களுக்குக் கவலையில்லை.

*இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்*
*கரப்பார் இரவன்மின் என்று*

என்பது குறள்.

திருவள்ளுவருக்கு நெஞ்சு உருகுகிறது. பலர் வறுமையின் கொடுமையால் இல்லையென்று கூறுபவர் களிடம் சென்று இரந்து நிற்கும் கொடுமையை நினைந்து நெஞ்சு உருகுகின்றார். திருவள்ளுவருக்கு இங்ஙனம் இரப் போர்மாட்டு ஓர் இரக்க உணர்ச்சி பிறக்கிறது

ஆனால் இர்ப்பவர்களுக்குக் கொடுக்காமல் கரந்து வாழும் மனிதர்களை நோக்கி இரக்க உணர்ச்சியும், உள்ள உருக்கமும் எங்கோ ஓடிவிடுகிறது. மனச்சான்று படைத்தோர் இரக்க நேரிடின் தம் விதியினை நொந்து உருகி வேறு வழியின்றியே இரப்பர். மனச்சான்று இல்லாதவரோ இரத்தலையே பிழைப்பாகக் கொள்பவர்.

அவருக்கு உயிர் உருகா; ஊனும் உருகா. காரணம் மானம் மரியாதைகளைவிட்ட பிணம். கரப்பவர் கரந்தாலும், அவர்தம் உள்நெஞ்சு கரக்கும் நிலைகண்டு இரங்கும்; உருகும். ஆனாலும் பொருட்பிடிப்பு அந்த உருக்கத்தை மூடி மறைத்து விடுகிறது.

ஒருவன் பல்லாற்றாலும் முயன்று நல்லூழ் இன்மையின் காரணத்தால் தோற்றுவிட்டால் இரந்து, இழந்த வாழ்க்கையை எடுக்க எண்ணுகிறான். கரவாது உவந்து வழங்குபவன் என்று கருதிச் சென்று இரக்கின்றான். இரத்தற் குரிய சொல்பிறந்தபோதே பழகிய மானத்தில் தங்கியிருந்த உயிர்நிலை பிரிகிறது.

யார் எதிரில் நின்று இரந்தானோ, அவன் நிலைமை யறிந்து கொடுக்கவில்லை. இரத்தற்சொல் வெளிப்பட்டது. இரத்தற்சொல் வெளிப்பட்டவுடன் இழிவந்த உயிர் பிரிந்தது.

எதிரில் நின்றவனோ கரக்கின்றான்; தன் பொருளையும் கரக்கின்றான்; தன்னையும் கரக்கின்றான். இரப்பவரிடத்தில் ஒளித்துக் கொள்ளலாம். கரப்பவர் தங்கட் கெல்லாம் கடு நரகங்கள் வைத்திருக்கின்றானே பெருமான், அவன் முன்னேயும் இவன் ஒளிய முடியுமா? முடியாது. இதனை,

> கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்
> சொல்லாடப் போஒம் உயிர்

என்று குறள் கூறுகிறது.

மலையை எடுத்து ரோமத்தால் கட்டலாம், கடுகில் ஏழுகடலை அடைத்தலும் கூடும். ஆனால் வறுமையை இரந்து மாற்றுவது என்றும் முடியாது; எப்பொழுதும் முடியாது. வறுமை தீர்தலுக்குரிய ஒரே வழி நன்முயற்சி யுடன்கூடிய உழைப்பேயாகும்.

ஆதலால் மிகச் சிறந்த அறமாகிய பசுவினைப் பேணு தலுக்குக்கூடத் தண்ணீரை இரந்து கேட்கக் கூடாது. பசுவினைப் பாதுகாப்பது பேரறம். அதுவும் உயிர்போகும் தருணத்தில் கிடக்கும் பசுவுக்குத் தண்ணீர் வழங்குதல் தலையாய கடமை; அறமும்கூட

கேட்கப்படுவதோ தண்ணீர். காசுஇன்றி எளிமையில் கிடைக்கக்கூடியது. ஆயினும் தண்ணீர் இரந்து கேட்ட அளவில் நாவிற்கு இழிவு வந்தே சேரும். அதற்குமாறாகக் கிணற்றினைத் தேடித் தண்ணீர் இறைத்துக் கொண்டுவந்து பசுவக்குத் தருவதே அறம்; அதோடு புகழுமாம். இதனை,

*ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு*
*இரவின் இளிவந்தது இல்*

என்று கூறுகிறார். நுகர்தற்குரியன பெறாதபொழுதும், இரவாமலிருத்தல் இந்த உலக முழுவதும் அடங்கிய பெருமையுடையதாகும்.

திருவள்ளுவருக்கு இரந்து வாழும் உயிர் வாழ்க்கையைக் கண்டால் கடும் சினம் உண்டாகிறது. குமுறிய உள்ளத்தோடு புரட்சிக்குரல் கொடுக்கிறார்.

*இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான்*

என்று பேசுகின்றார். "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்" என்ற உண்மையினால், கடவுள் மனித உலகத்துக்கு இரத்தலை ஒரு தொழிலாக அமைக்க வில்லை என்பது பெறப்படுகிறது. ஒரு நியதி கடவுள் நியதி. பிறிதொரு நியதி கடவுள் நியதியினைச் சார்ந்த, ஆனால் இந்த உலகிடை நிலவும் அரசியல் நியதி. கடவுள் நியதியும், அரசியல் நியதியும் இலட்சியத்தால் ஒன்றேயாம். ஆயினும் முறைகளால் மாறு படுகிறது. அரசியல் நியதியை அருட்சார்பின்றி, ஆணவச் சார்புடையோர் இயற்றி இயக்குவாராயின் ஆங்குச் சமநிலை கெடும். தன்னலச் சார்புடையோர் அந்த முத்திரையுடன் சுரண்டுவர்; பொருள் குவிப்பர்; செல்வராவர். அம்முத்திரை கிடைக்கப் பெறாதார் ஏழை களாகி இரக்கும் நிலையினை எய்துவர். இந்த நிலையில் இரக்கும் நிலையடைந்தோர்

முயற்சியில் தாழ்ந்தவர்களல்லர். உழைக்காதவர்களுமல்லர். நேரிய முயற்சியும், கடுமையான உழைப்பும் உடையவர்களே யாம். உழைப்பாளிகள் இரக்கும் நிலையடைந்தது சமுதாயச் சீர்கேட்டினாலேயாம். அந்தச் சீர்கேட்டைத் தடுத்து நிறுத்துவது அரசின் கடமை. இன்றைய மக்கள் சமுதாயத்திலும் உழைப்பவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். உழைக்காதவர்களில் பலர் உல்லாச வாழ்க்கையில் இருக்கிறார்கள். எனவே, இரந்து வாழ்கின்ற நிலைமைக்கும் காரணமான அரசு கெடுக! என்கிறார்.

"கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக" என்றார் வள்ளலாரும். இங்கு 'இயற்றியான்' என்பது கடவுளைச் சாராது. ஆதலால். நாம் நம்முடைய நாட்டு மக்களை வறுமைக் கடலினின்றும் கரையேற்ற, நெறிவழிப்பட்ட முயற்சிகளை மேற் கொள்ளவேண்டும். பிறரிடம் இரந்து நம் வறுமை போகாது.

## கயமை

திருக்குறள் ஓர் ஒப்பற்ற முழுமுதல் அறநூல். திருவள்ளுவர் மனிதர்களைக் கெட்டவர்களென்று கருதியோ, அல்லது கெட்டவர்களாக ஆக்கியோ எளிதில் ஒதுக்குபவர் அல்லர். அவர் தம் நூல்வழி மிகவும் சாதாரண சராசரிக்கும் கீழ்ப்பட்ட மனிதனை வளர்க்கவே தமது திருக்குறள் மூலம் முயற்சி செய்கின்றார்; கற்பிக்கின்றார்; சொல்லித் தருகின்றார்; வழி நடத்துகின்றார்; ஊக்கமூட்டுகின்றார்; துணை சேர்க்கின்றார்; தீயன பிரித்து ஒதுக்கிக் காட்டுகின்றார்; சில இடங்களில் குறிப்பால் உணர்த்தினார்; பல இடங்களில் வெளிப்படையாக எடுத்தோதினார்.

இத்தனையாலும் தேராத மனிதரை ஒதுக்குகிறார்; ஒதுக்கித் தள்ளுகிறார்; நம்மையும் ஒதுக்கச் சொல்லுகிறார்; ஒதுங்கவும் சொல்லுகிறார். மனிதனை வளர்த்து வளர்த்துத் தேற்றித் தேற்றிக் கொண்டு வந்த வள்ளுவர் ஒன்றாலும் இயலாத பயனற்ற கீழ் மக்களைத் தள்ளி மூடும் அதிகாரமே 'கயமை' யாகும்.

விலங்குகளில் சாதி பிரிக்கிறோம்; காய்கறிகளில் சாதி பிரிக்கிறோம். ஆனால் நாம் மனிதரில் சாதி பிரிப்பதில்லை. சாதி பிரிப்பதில்லையா? இன்றுதான் ஏராளமான சாதிப் பிரிவுகள் இருக்கின்றனவே என்று கருதுகின்றீர்களா? இன்று பிரித்துள்ள சாதிமுறை பிறப்பினாலும் ஆதிக்கத்தினாலும் ஏற்பட்டவையாகும். ஒரோ வழி தொழிலின்பாலும் பட்டவை. ஆனாலும், திருவள்ளுவர் இனம் பிரித்துக் காட்டுவது பிறப்பினாலுமல்ல; தொழிலாலுமல்ல. மேன் 'மக்கள், கீழ்மக்கள் என்று பிரிக்கிறார். இந்தப் பிரிவு குணத் ]ன்பாற்பட்டது. பலர் மக்கள் போலவே நடமாடுகிறார்கள். ஆனால் அவர்கள் உருவத்தினாலேயே மக்கள். ஆனாலும் நணங்கள் மக்கட் சாதிக்குரியன அல்ல. "மக்களே போல்வர்" என்ற சொற்றொடரில் உள்ள தேற்றேகாரத்தில் வேதனை நிறைந்த நகைச் சுவை மண்டிக் கிடக்கிறது.

நன்மக்கள் நாள்தோறும் தமது தகுதியினை, சீலத் தினை, குடிச்சிறப்பினை இழந்துவிடக்கூடாதே என்று எண்ணிக் கவலைப்படுவர். ஆனால் கீழ்மக்களோ கவலை யில்லாத மகாராஜாக்கள்! அவர்களுக்குப் பழி, பாவமில்லை; சீலம், நோன்பு இல்லை; குடிச்சிறப்பும் இல்லை! எதைக் காப்பாற்றிக் கொள்ளக் கவலைப்பட வேண்டும்? என்று பரிகாசமாக—ஆனாலும் வேதனை நிறைந்த உள்ளுணர்வுடன் திருவள்ளுவர் பேசுகின்றார்.

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர்

என்பது குறள்.

தேவர்கள் பதவியால் உயர்ந்தவர்கள். ஆயினும், அவர்கள் போட்டுக்கொண்ட சண்டைகள் எண்ணிலடங் காதவை. அவர்கள் உயர்ந்தோர் என்று கருதித் தாம் விரும்பிய படியெல்லாம் செயல்படுகின்றனர். இதன் விளைவே தக்கன் வரலாறு. தேவர்களின் தலைமைப் பதவியாகிய இந்திரப் பதவிக்கு அடிக்கடி சண்டை நடந்தவற்றைப் புராணங்கள் பேசுகின்றன. தேவர்களையும் கயவர்களையும் திருவள்ளுவர் ஒரு தன்மையர் என்றே பேசுகின்றார். ஒரே ஒரு வேற்றுமை. தேவர்கள் பதவியிலமர்ந்து செய்கிறார்கள். கயவர்கள் பதவியில் இல்லாமற் செய்கிறார்கள். கயவர்கள் தாம் விரும்பிய வற்றையே செய்வார்கள். மற்றவர்கள் நிலை கண்டு யார் ஒருவருக்கும் துன்பம் தராது ஒழுகும் இயல்பு கயவருக்கு இல்லை. ஏன்? பழகியவர்களுக்கும் நீங்காத் துன்பம் கொடுப்பர்.

தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்

என்பது குறள்.

கயவர் தம்மையொத்த கயவர்களைக் காணின் மகிழ்ந்து கூடி உலாவுவர்; சமுதாயக் கேடுகளைச் செய்யத் துணை கிடைத்ததே என்று துள்ளி மிகிழ்வர். அது மட்டுமா? கயமைத்தனத்தில் போட்டி போடுவர். அதிகக் கீழ்த்தனமான காரியங்களைச் செய்து நானே வெற்றி பெற்றேனென்று செம்மாப்பர்.

*அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்*
*மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்*

என்பது குறள். வலியிலும், பிறதுறைகளிலும் தம்மின் கீழ்ப் பட்டவரைப் பார்த்தாலும் அவரின் நான் உயர்ந்தே னென்றும் செம்மாக்கும். எப்பொழுதும் மேல் நோக்கி ஒப்பெடுக்க வேண்டுமேயன்றி, கீழ்நோக்கி ஒப்பு நோக்கக் கூடாது. அதனாலன்றோ, மண்ணில் முளைக்கும் முளையும் வானோக்கி முளை விடுகின்றது.

கீழ் மக்கள் படாடோபமாக அரட்டி உருட்டினாலும் அச்சத்திலும் சிறந்தவர்கள். கீழ்மக்கள் அடங்கி நடப்பதோ அல்லது அதட்டி நடப்பதோ நடிப்பேயாகும். அவர்களுக்கு இயல்பாக அடக்கமு மில்லை; ஆண்மையுமில்லை. அவர்கள் அடி உதைக்கு அஞ்சுவார்கள். அல்லது தனக்குக் கிடைக்கக் கூடிய இலாபம் போய்விடுமோ என்றும் அஞ்சுவார்ககள். கீழ் மக்கள் எப்பொழுதாவது அடங்கி நடந்தால், அதுமற்ற வருக்கு அச்சத்தைத்தரும் என்றும் கொள்ளலாம், எந்தக் காரியத்தை முடித்துக் கொள்ளக் கருதி இந்த நாடகத்தைத் தொடங்கியிருக்கின்றாரோ என்று! இதனை,

***அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்***
***அவாஉண்டேல் உண்டாம் சிறிது***

என்றார். 'அச்சம் கீழ்களது ஆசாரம்' என்றால் சான்றோருக்கு அச்சம் வேண்டாவோ? அஞ்சுவது அஞ்சல் சான்றோர் கொள்கை. அதாவது பழி பாவங்களுக்கு அஞ்ச வேண்டும். கீழ்மக்களுக்கோ பழி பாவம் பால் பாயசம்! அவர்கள் அஞ்சுவதெல்லாம் அடிக்கும் உதைக்குமேயாம்.

கீழ்மக்களோடு உறவு வைத்துக்கொள்ளக்கூடாது. ஒரோ வழி தவிர்க்க முடியாத நிலைமையால் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படின் அளவோடு

வைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையைச் சார்ந்த ரகசியங்களை அவர்களிடத்தில் சொல்லிவிடக்கூடாது. அவர்களுக்குக் கிடைத்த செய்தியை அவர்கள் தாமே தெருத் தெருவாகச் சென்று, பறைசாற்றிப் பல கேடுகளை விளை விப்பர். கயமைத்தன முடையவர்களின் காதும், வாயும் சமூகக் கலகங்களின் நுழைவாயில்களாகும். ஆதலால் அவரிடத்தில் அதைச் சொல்வதற்குப் பயப்படவேண்டும். அதுபோலவே அவருடைய வாய்ச் சொல்லை மதித்து ஏற்காமல் தள்ளிவிடவேண்டும். இதனை,

*அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட*
*மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்*

என்றார் திருவள்ளுவர்.

கயமைத்தனம் நாட்டின் நல்லூழ் இன்மையில் காரணத்தினால் எந்த இடத்திலிருக்கும் அல்லது இருக்க முடியாது என்று சொல்லமுடியாவண்ணம் நிலவும். கயவர் களுக்குப் பெரும்பாலும் தமது வரவிலேயே நாட்டம். மற்றவர்களைப்பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். பெற்றுக் கொண்டதற்குத் திரும்பப் பணமாகவோ அல்லது உழைப் பாகவோ அன்றி நன்றி கடப்பாடாகவோ, ஈடாகத் திருப்பித் தரமாட்டார்கள். தரவேண்டுமென்ற எண்ணங்கூடவராது. மாறாக "இன்னும் கொடுக்கவில்லையே, என்ன பிரமாத மாகச் செய்து விட்டார்கள்?" என்று அங்கலாய்ப்பர்.

கயமைத்தனம் உடையவர்கள் பெரும்பொருளை யுடையவரா யிருப்பின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்க மாட்டார். கயமைத்தனமுடையவர்களுக்கு, மற்றவர்களுக்குப் பசியும் கவலையும் உண்டு என்பதே தெரியாது. அவர்கள் இயல்பாகக் கொடுக்கமாட்டார்கள். யாரொருவர் கையை வளைத்து மடக்கி மேல் வாய்க் குறட்டில் ஓங்கிக் குத்தி

உடைக்கின்றாரோ அவருக்கே கொடுப்பர். மற்றபடி வாட்ட முற்ற மக்களுக்கு ஈரக் கையைக் கூட உதறமாட்டார். அதாவது தன்னை வருத்துவோருக்கு அச்சம் நோக்கிக் கொடுப்பார்களே தவிர, 'ஈதல் அறம்' என்ற நெறிக்கு இவர்கள் வெகுதூரம்.

அறத்தின் அடிப்படையில் கொடுத்தால் சிறிது கொடுத்தாலும் போதும்; வாங்குகிறவர்களும் மன நிறைவு அடைவார்கள். வருத்தத்திற்கு அஞ்சிக் கொடுத்தால் மேலும் மேலும் வருத்திப் பெற முயலுவர். வருத்துபவர்களுக்குப் பணம் கொடுத்துப் பழகுவது வறண்ட பாலைவனத்தில் நடப்பதோடொத்த துன்பத்தைத் தரும். இங்ஙனம் செல்வம் சேர்ந்து கயமைத்தன உணர்ச்சி பெருகி வளர்வதே பலாத்காரப் புரட்சிக்கு வித்திடுகிறது.

*ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்*
*கூன்கைய ரல்லா தவர்க்கு*

என்று இதனைக் குறள் கூறுகிறது.

சான்றோர் சொல்லப் பயன்படுவர்; நல்ல மனமுடைய வர்கள் சொன்னதைச் செய்வர்; சொன்ன அளவிலேயே அறத்தினைச் செய்வர்; உதவி செய்து உவப்பர்; எடுத்துக் காட்டிய கடமைகளைச் செய்வர். ஆனால் கீழ்மைத் தனமுடையவர்களோ சொன்னால் செய்யமாட்டார்கள். அவர்கள் கடமை தவறுதலுக்கு அஞ்சிப் பயப்படுவதில்லை. காரியக் கேட்டுக்கும் அஞ்சிப் பயப்படுவதில்லை. மற்றவர் வருத்தம் பார்த்தும் அஞ்சமாட்டார்கள். அவர்கள் அஞ்சுவ தெல்லாம் அடிக்கும் உதைக்கும் தானே! ஆதலால் கீழ்க் குணம் உடையவர்களை நையப்புடைத்தாலே சொன்னதைக் கேட்பார்கள்; சொன்னதைச் செய்வார்கள்.

நல்ல கனிந்த மாம்பழத்தை மெதுவாகத் தொட்டாலே சாறு கிடைக்கும். ஆனால் கரும்பையோ, உருவம் தெரியாமல் நசுக்கியே சாறெடுக்க வேண்டும். கீழ்மக்களிடத்தில் உதவி பெறுவதாயினும் சரி, அல்லது வேலை வாங்குவதாயினும் சரி நையப்புடைத்தாலே செய்வர். இவர்களை நோக்கிப் பிறந்த பழமொழிகளே "அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டான்"; "அடியாத மாடு படியாது" என்பனவாகும்.

> *சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்*
> *கொல்லப் பயன்படும் கீழ்*

என்பது குறள்.

கயமைத்தனமுடையவர்களுக்கு அழுக்காறு நிறைய உண்டு. நிறைய உண்டு என்பதைவிட அழுக்காற்றினாலேயே உருவமும் உணர்வும் படைத்தவர்கள் என்று கூறுவது பொருந்தும். இவர்களுடைய அழுக்காறு மிகவும் மோசமானது. பிறர் உண்டு உடுத்து வாழ்வதைக் கண்டாலே இவர்களுக்குப் பிடிக்காது. இவர்கள் பிறர் உண்டு உடுத்து மகிழ்வதைப் பார்த்துக் குறை சொல்லுவர். கீழ்மக்கள் குறை சொல்ல, குற்றங்கள் இருக்க வேண்மென்று அவசியமில்லை. குற்றங்கள் இல்லையானாலும் இவர்கள் துருவிக் கண்டு பிடித்து விடுவார்கள். இல்லையெனில் கற்பித்துவிடுவார்கள். "ஆ, பூ, அவர்தானே! நமக்குத் தெரியாதாக்கும். அவர் அதிலே கொள்ளையடித்துத்தானே வைத்திருக்கிறார்," என்று சுலபமாகச் சொல்லி விடுவார்கள். இதனை,

> *உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்*
> *வடுக்காண வற்றாகும் கீழ்*

என்று குறள் கூறுகிறது.

'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின்' என்பது பார்த்த அளவானே அழுக்காறடைவர்; அலர் தூற்றுவர் என்ற

ஆழ்ந்த கருத்தமைந்திருக்கிறது. ஆதலால், கயவர்கள் காண உண்ணலையும் உடுத்தலையும் ஊர்திகளில் செல்லலையும் தவிர்ப்பது நல்லது. அதனால் தான் போலும், 'கண்ணேறு படுகிறது' என்று நமது நாட்டுத் தாய்மார்கள் சொல்லு கிறார்கள். இதுவும் உண்மையேயாம். அன்று உண்ணல் உடுத்தல் முதலிய வாழ்க்கையில் அழுக்காறு ஏற்பட்டது. இன்று பதவி, செல்வாக்கு, புகழ் ஆகிய துறைகளிலும் மிகவும் அதிகமாகவே அழுக்காறு ஏற்படுகிறது. அதன் காரணமாக நாள்தோறும் நாட்டில் பிறர்பழி தூற்றும் மேடைகள் பெருகி வருகின்றன.

குற்றமே கண்டு கூறிப் பழகினால், குணம் காணும் பழக்கமும் வராது; குணங்களும் வளராது. ஆதலால் பொது வாழ்க்கையிலும் கூட அழுக்காற்றின் வழிப்பட்ட கண்ணேறு படாமல் அடக்கமாக, எளிமையாக, தம்மைப் புகழ் வந்து அடையாமல் தற்காத்துக் கொள்ளச் செய்வது நெடிய பயனைத் தரும்.

கயவர் தம்மொடு பழகினார்க்கு ஏதாவது கேடுவந்த பொழுது, அந்தக் கேட்டினால் அவர்களுக்கு இறுதி நேரிடும் வண்ணம் விரைந்து எற்றித் தள்ளி விடுவர். அப்படிச் செய்யத் தவறினாலும் உற்றஇடத்து உதவி செய்யாது நீங்கிவிடுவர். ஆதலால் தோற்றத்தால், பேச்சால் கயவர் நல்லவர் போலவும் வலியவர் போலவும் காணப் பெற்றாலும் அவர்களுடன் பழகி உறவு கொள்ளுதல் ஒருபொழுதும் உதவிசெய்யாது. உதவிசெய்வதற்குப்பதில் கேட்டினை இரட்டிப்பாகவும் விரைவாகவும் கொண்டுவந்தாலும் வரலாம். இதனை,

*எற்றிற் குரியர் கயவர்ஒன் றுற்றக்கால்*
*விற்றற் குரியர் விரைந்து*

என்று கூறுகிறது குறள்.

மேலும் கயவர் தோற்றத்தால் ஆண்மையுடையரா யிருப்பர். அரிச்சந்திரனைப் போல் நடிப்பர்; வையத்தை வாயால் அளப்பர்; 'உயிரெல்லாம் உறவுடையோர் பாசத்திற்கே' என்றே பசப்புவர். ஆனால், அவர்களுக்கு யாதாவதொரு துன்பம் வந்துற்றால் விரைந்து ஓடுவர்! எங்கு? தம்மையே விலை பேச. ஐயோ, பாவம்! தம்மையும் விலை பேசுவர்; தம்மை நம்பிப் பழகிய நண்பர்களின் மானத்தையும் விலை பேசுவர்; பழகினோர் உயிரைக்கூட விலை பேசி விடுவர். நிலமகள் இத்தகு கயவர்களைத் தாங்கிக் கிடப்பது பொறையுடைமை நோக்கிப் போலும். மறந்தும் கயமைத் தனத்திற்கு ஆளாகக் கூடாது. கயவர்களையோ மறந்தும் நிழலுக்குக்கூட உறவு வைத்துக் கொள்ளக்கூடாது. இது வாழ்வாங்கு வாழ்ந்து வெற்றிபெற வள்ளுவம் கட்டித் தந்த அரண்.

## ஒப்புரவு நெறி

**வா**ழ்க்கை குறிக்கோள் உடையது. அக்குறிக்கோள் எது? தாம் வாழ்வதா? தாம் வாழ்தல் என்பது தவிர்க்க இயலாதது. ஆயினும் தாம் வாழ்தல் என்பது சாதனம். ஆதலால், தாம் வாழ்தல் என்பது எளிய ஒன்று. இயற்கையேகூட வாழ்வித்து விடும். நல்ல சமூக அமைப்பும் அரசும் தோன்றி விட்டால் தாம் வாழ்தல் என்பது எளிது. இன்று சமூக அமைப்பு நன்றாக இல்லை. அரசுகள் நன்றாக இல்லை. ஆதலால், தாம் வாழ்தலுக்குக் கூட இன்று உடனடியாக நல்லதோர் சமூக அமைப்புக் காண்பதைக் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். நன்மை நல்கும் அரசு கண்டாக வேண்டும்.

தாம் வாழ்தலை—சமூக உணர்வின்றித் தாம் வாழ் தலை வாழ்தல் என்று யாரும் ஒப்பார். இது பிழைப்பு ஆகும். பாரதி, "சீச்சீ நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு" என்று பேசுவான். தாம் வாழ்தலுக்கு ஒன்றும் ஒப்பரிய அறிவும், அறிவறிந்த ஆள்வினையும் வேண்டாம். அப்படியானால் குறிக்கோள் எது? குறிக்கோள் என்பது பயனுற வாழ்தல்; பிறர் பயனுற வாழ்தல்! தனக்கென முயலுதல் விலங்கியல் குணம்! பிறர்க்கென முயலுதல் மனிதவியற் பண்பு.

உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!
(புறம் 182)

என்பது புறநானூறு. சங்க காலத்தில் பொருள் தேடும் முயற்சி இருந்தது. ஏன்? அகநானூற்றுத் தலைவி பேசுகிறாள்.

இல்லென் றிரப்போர்க்கு இயைவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப
நம்மினும் பொருளே காதலர் காதல்

என்பன அந்த அகநானூற்றுப் பாடலடிகளாகும். இதுவே பண்பு; மானுடப் பண்பு. மானுடத்தின் குறிக்கோள்! பிறர் பயனுற வாழ்தலே தவம், நோன்பு என்று இலக்கியங்கள் பாராட்டுகின்றன. 'பெறுவதைவிடக் கூடுதலாகக் கொடு" (Do more than get; give) என்றார் விராய் ப்ரௌன்லோ.

இந்த நியதி தாவரங்களிடையிலும் விலங்குகளிடையிலும் விளக்கமாக அமைந்துள்ளது. இன்றுள்ளதைப் போல உலக மக்கள் தொகை ஒரு மடங்கு கூடினாலும் இந்த உலகத்தில் உண்டு மகிழ்ந்து வாழப் பொருள்கள் உண்டு. ஆயினும் தனிமனிதனின் பேராசைக்கு இரை போட முடியவில்லை. அந்தோ, பரிதாபம்!

இந்த உலகில் பலர் வறுமையில் கிடந்து உழல்கின்றனர்! ஏன்? பிறர் நலத்துக்கென உழைப்பவர்களின் எண்ணிக்கை சிலவாகப் போனதே காரணம்.

*இலர்பல ராகிய காரணம் நோற்பார்*
*சிலர்பலர் நோலா தவர்*

என்பது குறள். காலப்போக்கில் நாகரிக வளர்ச்சியில் உயிர்க் குலம் பயனுறச் செய்யும் பணிகள் பல அரசின் கடமையாகி, அரசு அப்பணிகளை நிறைவேற்றும் நெறிமுறைகளைக் காண்கின்றன. அரசின் கடைமைகள் மக்கள் நலமுற வாழ்வதற்குரிய பணிகளைச் செய்வது தான்! அரசுப் பணி மனைகளில் பணி செய்பவர்கள் அறநெறி வழியில் சிந்தித்துத் தொண்டு செய்பவர்கள் தாம்! பிறர் வாழப் பணி செய்யும் நோன்மை நோற்பவர்கள் தாம்!

ஒரு காலத்தில ஊதியமில்லாமல் சமூக அடிப்படையில்—பண்பாட்டு அடிப்படையில் செய்த பணிகள் அவை! ஆனால், இன்று பல நூறாயிரம் பேர் கைநிறைய ஊதியம் வாங்கிக் கொண்டு அப்பணிகளைச் செய்கின்றனர்! ஆயினும், கணக்கு கழிக்கப் பெறுகிறதே தவிர, நோன்பு நோற்கவில்லை! அப்பணிகள் தரம் இழந்துவிட்டன. அவர்க்ள் மக்களுக்குச் செய்வதைச் சலுகையாகக் கருது கிறார்கள். சில சமயங்களில் சலுகைக்குரிய அன்பளிப்பு

களும் கேட்டுப் பெறுகிறார்கள். இஃதன்று வாழ்க்கை! இஃதன்று மக்கள் நலங்கருதி இயற்றும் வாழ்க்கை!

வாழ்க்கை, தொண்டைக் குறிக்கோளாக உடையது; தொண்டைப் பயனாகவுடைது. இக்குறிக்கோளைத் திருக்குறள் "ஒப்புரவு" என்று கூறுகிறது. எந்த ஒரு செயலும், செயலளவில் தரும் பயனைவிடச் செயல் செய்யும் மனப் பாங்கு—உணர்வு ஆகியவற்றின் அடிப்படையிலேயே பயனை நிர்ணயிருக்கின்றது; தரத்தைக் காட்டுகின்றது. ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் மட்டும் போதாது. உதவிசெய்தல் எதற்காக? தற்காப்புக்காகவும் இலாபத்துக்காகவும் கூட உதவி செய்யலாமே! சொல்லப் போனால் இத்தகைய உதவிகள் ஒருவகையில் வாணிகம் போலத்தான்! அதே உதவியைக் கடப்பாட்டுணர்வுடன் உதவி பெறுபவரை உறவுப் பாங்கில் எண்ணி உரிமை யுடையவராக நினைந்து செய்தற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவாகும்.

ஒப்புரவில், பெறுபவர் அந்நியரல்லர்; உறவினர்; கடமையும் உரிமையுமுடையவர். ஒப்புரவு நெறி சார்ந்த வாழ்க்கையில் வள்ளல்கள் இல்லை! கொடுப்பவரும் இல்லை! வாங்குபவரும் இல்லை! ஒப்புரவு நெறி வாழ்க்கை யில் உடைமைச் சார்பு இறுக்கமான தனியுடைமையாக இல்லாமல் அறநெறி சார்ந்த குறிக்கோளுடைய உடைமை யாக அமையும்.

ஒப்புரவில், ஈதல்—ஏற்றல் வழி அமையும் புரவலர்—இரவலர் உறவு இல்லை. ஒப்புரவு நெறி சார்ந்த வாழ்க்கை உரிமையும் கடமையும் உடைய வாழ்வு முறையாக அமைவதால் கடமைகள், உரிமைகளை வழங்குகின்றன.

ஊருணி, தேவைப்படுவோர் அனைவரும் தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு உரிமையுடையது. அதைத் தடுப்பார் யாருமில்லை. ஊருணி, தண்ணீர் எடுத்து அனுபவிக்கப் படுவது. பழுத்த பயன் மரத்தின் கனிகளை அனைவரும் எடுத்து அனுபவிக்கலாம். பயன் மரம் பழங்களைத் தருவது. உரிமை எல்லைகளைக் கவனத்தில்கொண்டதல்ல. மருந்து மரம் உதவிசெய்தலில் தன்னை மறந்த நிலையில் பயன்பாட்டு நிலை ஒன்றேகாணப் பெறுகிறது. நோயுடை யார் எல்லாரும் பயன்படுத்தலாம். ஒப்புரவை விளக்கப் பயன்படுத்தியுள்ள இந்த உவமைகள் இன்றும் எடுத்தும், பறித்தும், வெட்டியும் பயன்படுத்துவனவாகவே அமைந் துள்ளன. ஆயினும், ஊருணி, பயன் மரம், மருந்து மரம் ஆகியன மனிதர்கள் தம் படைப்பாற்றலைக் கொண்டு படைத்தவை என்பதை நிறைவிற்கொள்க!

ஊருணியை அகழ்ந்தவன் மனிதன்! அந்த ஊருணியில் தண்ணீரைக் கொணர்ந்து தேக்கியது யார்? மனிதர்தாம்: ஊருணியை அமைத்துத் தேக்கும் கடமை பொறுப்புணர் வுடன்—கூட்டுப் பொறுப்புடன் செய்யப் பெற்றால்தான் ஊருணியில் தண்ணீர் நிறையும். பலரும் எடுத்துக் குடிக்கலாம். பயன்தரு மரங்களை வளர்த்தால்தான் கனிகள் கிடைக்கும். தின்று அனுபவிக்கலாம். இங்கும் மனிதனின் படைப்பைத் தொடர்ந்துதான் நுகர்வு வருகிறது. ஒப்புரவு வருகிறது. மருந்து மரங்களையும் நட்டு வளர்த்தால்தான் மருந்து மரத்துப் பட்டையைச் சீவிப் பயன்படுத்தலாம்; பயன்படுத்த முடியும். ஆதலால், ஒப்புரவாண்மையுடன் வாழ முதல் தேவை உழைப்பு! கூட்டு உழைப்பு! பொருள்களைப் படைக்கும் கடமைகள் நிகழாத வழியில் ஒப்புரவு வாழ்வு மலராது. கடமைகள் இயற்றப்பெறாமல் ஒப்புரவு தோன்றாது. ஒரோவழி தோன்றினாலும் நிலைத்து நில்லாது. கடமை களில்—பொருள் செய்தலில் ஒவ்வொருவரும் கூட்டு

உழைப்பில் ஈடுபட்டால்தான் ஒப்புரவு நெறி தோன்றும்; வளரும்; நிலைத்து நிற்கும்.

ஒப்புரவு நெறியில் இறுக்கமான தனியுடைமை உணர்வு இல்லை என்பதே சிறப்பு. அதேபோழ்து உரிய கடமைகளைப் பொறுப்புணர்வுடன் செய்யாது உரிமைகளை அனுபவிக்க ஆசைப்படவோ அனுபவிக்கவோ கூடாது. இன்று சோவியத் அடைந்துள்ள தீய அனுபவங்களையும் நமது நாட்டு மக்களின் வாழ்க்கை முறையில் அடைந்து வந்துள்ள தீமைகளையும் எண்ணுக. எழுத்தறிவில்லாதார் 77 சதவிகிதம்! வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் 58.9 சதவிகிதம். பல நூறாயிரம் பேர் வேலையில்லாமல் தவிப்பு! முடிவாக விளைந்த தீமை பணத்தின் மதிப்பு வீழ்ச்சி!

வாழும் நாள்கள் சில! ஏன் குற்றங்களைச் சுமந்து கொண்டு சோம்பித் திரிந்து வாழ்தல் வேண்டும்? வாய்ப்பேச்சு சோறு போடுமா? படைப்புப் பல படைப் போம்! கூடித் தொழில் செய்வோம்! கூடி உண்போம்! கூடி வாழ்வோம்! எல்லாருக்கும் எல்லாம் என்ற திசைநோக்கி நகர்த்துவோம்! புவியை நடத்துவோம்! பொதுவில் நடத்துவோம்! இதுவே மனித குலத்தின் நல்வாழ்வுக்குரிய ஒப்புரவு நெறி..

தமிழ்மாமுனிவர்
தவத்திரு

# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

திருக்குறள்
இலக்கியம்
சமயம்
சமுதாயம்
பொது